# குங்குமம்

## விரைவில்...

### நாஞ்சில் நாடன்

எழுதும்

# கைம்மண் அளவு...

கற்றதும்
கல்லாததும்
பேசும்
உணர்வுத்
தொடர்



# கைம்மண் அளவு...!

'கற்றது கைம்மண்ணளவு, கல்லாதது உலகளவு' என்பது ஔவையாரின் வாசகம். ஔவையை 'அவ்வை' என்றும் எழுதுகிறார்கள். எழுதலாம், தவறில்லை; இலக்கண அனுமதி இருக்கிறது. அமெரிக்காவின் காங்கிரஸ் நூலகத்தில் தமிழிலும், ஆங்கிலத்திலும் பொறிக்கப்பட்டிருக்கும் சொற்றொடர் இது. இங்கு 'காங்கிரஸ்' என்பது அரசியல் கட்சியல்ல; நாடாளும் அவை.

ஔவையின் கூற்றின் பொருள் தெள்ளத் தெளிவு. நாம் கற்றது கைப்பிடி மண் அளவுதான்; கல்லாமல் விட்டதோ உலகத்து மண் அளவு. இஃதோர் தன்னடக்கத்துடன் ஆன பெருமிதம். எதனால் பெருமிதம் எனில், தன்னை அறிந்ததின் கர்வம். ஆனால் நாட்டில் பலர் 'கற்றது உலகளவு' என்றும் கல்லாதது 'நகத்து மண் அளவே' என்றும் செம்மாந்து, மார் நிமிர்த்து, தோள் குலுக்கி இறுமாந்து நடக்கிறார்கள். கதிர் முற்றிய செஞ்சாலி தலை சாய்ந்து கிடக்கும்; பால் பிடிக்காத, சாவியாகப் போகிற நெல், வளையாமல் நிமிர்ந்து நிற்கும்.


**நாஞ்சில் நாடன்**

ஓவியம்: மருது


கற்பனையும் இனிமையும்
கல்வி கரையில
கற்பவர் நாள் சில



**கற்பது என்பது பாடப் புத்தகம் வாசிப்பது மட்டும் அல்ல. புத்தகங்களுக்கு வெளியே, சொந்த அனுபவங்கள் மூலமாகவும், அனுபவம் உடையோர் பகிர்ந்து கொள்வதாலும் நாம் பெறுவதும் கல்விதான்.**

வாசிக்க வாசிக்க நாம் ஒன்றுமே படிக்கவில்லையே என்று உணருகிறோம். 'கல்வி கரையில, கற்பவர் நாள் சில' என்பது நாலடியார். கல்வி என்பது கரையற்றது; ஆனால் கற்பவர் நாளோ, சில என கணக்கிடப்பட்டது. 'கைப்பொருள் கொடுத்தும் கற்க, கற்றபின் கண்ணும் ஆகும்' என்கிறது சீவக சிந்தாமணி. 'கைப்பொருள் கொடுத்தும் கற்க வேண்டும், கற்றபின் அதுவே கண்ணும் ஆகிவிடும்' என்பது பொருள். இன்று கைப்பொருள் என்ன? குடும்பச் சொத்து, ஊதியத்தில் கடன், வங்கிக்கடன் வாங்கிக் கற்க வேண்டியதிருக்கிறது. அன்று விலையில்லாமல் இருந்த கல்வி விலை மதிப்பில்லாமல் இருந்தது; இன்று கல்வித் தந்தைகள் பெருகிப் போன நிலையில், அவர்கள் கல்வி கற்பவனின் உள்ளாடையையும் உருவிக் கொண்டு விடுகிறார்கள்.

'உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும், பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே' என்பது புறநானூறு. 'உற்றாரை யான் வேண்டேன், ஊர் வேண்டேன், பேர் வேண்டேன், கற்றாரை யான் வேண்டேன், கற்பனவும் இனி அமையும்' எனும் மாணிக்கவாசகர் பாடலில், 'கற்பனவும் இனி அமையும்' என்பதற்கு, 'இதுவரை கற்றது போதாது, இனிமேல்தான் கற்பது அமையும்' என்று இந்த சந்தர்ப்பத்தில் பொருள் கொள்ளலாம்.

கற்பது என்பது பாடப் புத்தகம் வாசிப்பது மட்டும் அல்ல. கேட்டுத் தெரிந்து கொள்வதும், பாடப் புத்தகங்களுக்கு வெளியே வாசிப்பதும் கல்விதான். எனவேதான் 'கல்வி கேள்வி' என்று கேள்வியைக் கல்விக்கு அடுத்து வைத்தனர். 'கற்றலின் கேட்டல் நன்று' என்பார்கள். கம்பனை நான் எழுத்தெண்ணிக் கற்கவில்லை, பாடம் கேட்டேன். 'தனக்குக் கற்க வாய்ப்பற்றுப் போயி

ருந்தாலும், கற்றவரைச் சேர்ந்து ஒழுகினால் நல்லறிவு தினமும் கிடைக்கப் பெறுவார்கள்' என்கிறது நாலடியார். பாடப் புத்தகங்களுக்கு வெளியே, சொந்த அனுபவங்கள் மூலமாகவும், அனுபவம் உடையோர் பகிர்ந்து கொள்வதாலும் நாம் பெறுவதும் கல்விதான்.

மஞ்சணாத்தி என்றொரு மரம் சின்னஞ்சிறு வயதில் எனக்கு அறிமுகம் ஆனது. அந்த மரம் பற்றிப் பாடப் புத்தகங்களின் மூலம் எதுவும் அறிந்ததில்லை. ஒருவேளை தாவரவியல் பட்டப் படிப்பினர் அறிந்திருக்கலாம். பேரகராதி பார்த்தால் மஞ்சணாத்தி, மஞ்சணாற்றி, மஞ்சணாறி எனும் தாவரங்கள் தென்படுகின்றன. செடி வகை என்றும், கொடி வகை என்றும் பொருள் தருகிறார்கள். நானறிந்த மஞ்சணாத்தி இரண்டாள், மூன்றாள் உயரம் வளரும் சிறு மரம். கிளையை ஒடித்தால் மஞ்சளை முறித்தது போலிருக்கும். மஞ்சணுணா என்றும் ஒரு சொல்லுண்டு பேரகராதியில். மஞ்சள் + நுணா = மஞ்சணுணா. அதுவும் மஞ்சணாத்திதான். மஞ்சணாத்திக்கு வாசமான வெள்ளைப் பூக்கள், முல்லையின் அளவில் பூப்பது. பறித்துச் சூடுவது இல்லை. காய்த்துப் பழுக்கும். கரிய நிறக் கனிகள். மைனாக்கள் விரும்பி உண்ணும். மஞ்சணாத்தி பழுத்தால் மஞ்சள் மூக்கு மைனாக்களின் கொண்டாட்ட சிலம்பல் கேட்கலாம்.

தமிழ் இலக்கியங்கள் பேசும் நுணா எனும் மரமும் மஞ்சணாத்தியும் ஒன்று என எனது அறுபதாவது வயதில்தான் அறிந்துகொண்டேன், மஞ்சணுணா எனும் சொல் தந்த தூண்டுதலால்! நுணா எனும் சொல்லுக்குப் பேரகராதி 'மஞ்சணாத்தி மரம்' எனப் பொருள் தருகிறது. மஞ்சணாத்தி பற்றி சங்க இலக்கியத்தில் பேச்சில்லை. ஆனால் சிறுபாணாற்றுப்படையும், ஐங்குறுநூறும், நுணவம் என்று நுணா மரம் பேசுகிறது. ஈராயிரம் ஆண்டுகளாக, ஏன் அதற்கும் பல்லாயிரம் ஆண்டுகள் முன்பாக, நம்முடன்

## மொழி என்பது...

**உலகில் கற்றுக்கொள்ள மிகக் கடினமான மொழி Basque. ஸ்பெயின் மற்றும் பிரான்சின் சில பகுதிகளில் பேசப்படும் இம்மொழி வேறு எந்த மொழியோடும் தொடர்பில்லாதது. வார்த்தைக் கட்டமைப்புகள் மிக மிகச் சிக்கலானவை.**

வாழ்ந்து வரும் மரம். இன்றும் அதன் கொப்புகளை ஒடித்து, இலைகளைக் காம்புடன் ஆய்ந்து, பல நிற மாலைகளில் பச்சை நிறத்துக்குப் பயன்படுத்துகிறார்கள்.

ஐந்தாண்டுகளுக்கு முன்பு ஜெயமோகன், மரபின் மைந்தன் முத்தையா, 'கல்கி' சந்திரமௌலி, உயர் நீதிமன்ற வழக்குரைஞர் – இலக்கியச் சொற்பொழிவாளர் தா.இராமலிங்கம், இளம் படைப்பாளி கனக தூரிகா ஆகியோருடன், மலேசிய அமைச்சர் டத்தோ சரவணன் அழைப்பின் பேரில் மலேசியா சென்றிருந்தோம். அவருடைய பாராளுமன்றத் தொகுதியில், சீனர்கள் அதிகம் வாழும் பகுதியில் அமைச்சருடன் கலந்துரையாடும் கூட்டம் நடந்தது. நான் காலாறச் சற்று நடந்தபோது, நம்மூர் நுணா போன்ற மரம் ஒன்று பார்த்தேன். அருகில் நின்று புகைப்படம் எடுத்துக்கொண்டேன். மஞ்சணாத்தியின் இன்னொரு வகை. இன்னொரு வகை என்று நான் கூறுவது எலுமிச்சை, நாரத்தை குடும்பம் போல. பூக்களும் காயும் நுணாவை ஒத்திருந்தன. பெயர் கேட்டபோது சீனர் ஒருவர் சொன்னார் 'நோனி' என்று. நுணா–நோனி எனும் இரு தொல்மொழிச் சொற்களின் அமைப்பை மொழியியலாளர் ஆராயலாம். சென்னையில் அமுதன் எனும் எழுத்தாளர் 'வெண் நோனி கஷாயம்' ஒன்று விற்பனை செய்கிறார்... இளமையும், உடல்நலமும், மேனி அழகும் பெற உதவும் என்று!

இந்த போதத்தில் சொல்கிறேன், கற்றது கைம்மண்ணளவு என்று. ஔவை கற்றதே கைம்மண்ணளவு எனில், அற்பமான யாம் எதைக் கிள்ளி உம்மிடத்து விளம்ப என்பது எம் கவலை!

காய்கறிகள் பற்றிய அறிவு, பள்ளியில் பயிலும் பாலர்க்கு Name any five vegetables எனும் கேள்வியில் முடிந்து போகிறது. அதுவும் அவர்கள் கற்கும் காய்கறிகள் காலிஃப்ளவர், கேரட், கேபேஜ், பொட்டேட்டோ, பீன்ஸ், பீட்ரூட் என்பவையே! பல்லாயிரம் ஆண்டுகளாய் நம் மூதாதையர் உண்ட பாகல், வழுதுணை, வெள்ளரி, பீர்க்கன், மாங்காய், பலாக்காய் அல்ல. Birds என்றும் Animals என்றும் Trees என்றும் பாடப் புத்தகங்கள்

## மொழி என்பது...

**ஆங்கிலத்தைப் போலவே இருக்கும் மொழியாகக் கருதப்படுவது ஜெர்மன். பிரெஞ்சு மொழியும் ரஷ்ய மொழியும்கூட கிட்டத்தட்ட இணையாக உள்ளன.**

தரும் கல்வி சொற்பமானது. பூவரசு, புங்கன், கொன்றை, வாகை, நொச்சி, தாழை, தெங்கு, பனை, கமுகு என அவர்கள் அறிய மாட்டார்கள். வளர்ந்து பெரியவர் ஆன பின்னரும் அறிய மாட்டார்கள்.

எங்கோ முணுமுணுப்பது கேட்கிறது என் செவிகட்கு! தெரிந்து என்ன ஆகப் போகிறது?

பல கோடிகளில் சம்பளம் வாங்கும், நமக்கு கேளிக்கை காட்டும் எல்லா நடிகர்களையும் தெரிந்து வைத்துக் கொண்டு ஆகப் போவதென்ன? கூலிக்காக ஆடை குறைத்தும் உறுப்புகளின் கண்காட்சி நடத்தியும் திரியும் நடிகைகள் பயோடேட்டா தெரிந்து ஆகப் போவதென்ன?

ஒரு முறை தூதஞ்சல் அனுப்பப் போயிருந்தேன். எனது தபால்களை, தூதஞ்சல்களை நானே சேர்ப்பது வழக்கம். எனக்கு முன்னால் இளைஞர் ஒருவர் நின்றிருந்தார். மிக அருகில் புகழ்பெற்ற தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றிருந்தது. அதில் பயிலும் மாணவனாக இருத்தல் வேண்டும். தூதஞ்சல் பதியும் பெண்ணிடம் சொன்னார் – “ஸ்பீடு போஸ்ட் அனுப்பணும்” என்று!

அந்தப் பெண் சொன்னாள், “இங்க கூரியர்தான் அனுப்பலாம்”

அந்த இளைஞர் சொன்னார், “ஸ்பீடு போஸ்ட்தான் அனுப்பச் சொல்லி இருக்காங்க!”

## மொழி என்பது...

**உலகிலேயே அதிக மொழிகள் பேசப்படுவது பாப்புவா நியூகினியா நாட்டில்தான். 830 மொழிகள் பேசப்படுகின்றன. ஆசிய நாடுகளில்தான் அதிக மொழிகள் பேசப்படுகின்றன. 2200 மொழிகள். தென் ஆப்ரிக்கா நாட்டுக்குத்தான் அலுவல் மொழிகள் அதிகம். 11 மொழிகள்.**

அவருக்குப் புரியவில்லை, ஸ்பீடு போஸ்ட் அனுப்ப அஞ்சல் நிலையம் போக வேண்டும் என. இதன் மூலம் நான் எதையும் நிறுவ முனையவில்லை.

1972ல் வேலை தேடி பம்பாய் போனவன், தொழிற்சாலை ஒன்றில் வேலைக்கு அமர்ந்தேன். தொழிற்சாலை மேலாளர் அறையில் தொலைபேசி மணி அடித்தது. அவர் பணிக்கூடத்தில் நின்றிருந்தார். ஓடிப்போய் எடுத்தேன். மேலாளரைக் கேட்டார்கள். “இருங்க, கூப்பிடுகிறேன்” என்று சொல்லி, போன் ரிசீவரை அதன் தொட்டிலில் கிடத்தி விட்டு அவரைக் கூப்பிடப் போனேன். கணிதத்தில் பட்ட மேற்படிப்புப் படித்த எனக்குத் தெரிந்திருக்க

## மொழி என்பது...

**ஒரு மனிதன் புரிந்து கொள்ளக் கூடிய மொழியில் அவனிடம் பேசினால், அது அவன் மூளைக்குச் செல்லும். அதையே அவன் தாய்மொழியில் பேசினால், நேரடியாக இதயத்துக்குச் செல்லும்!**

*– நெல்சன் மண்டேலா*

**(பிப்ரவரி 21ம் தேதி உலக தாய் மொழி தினம். எனவே, மொழிகள் பற்றிய குறிப்புகள் இந்த இதழெங்கும் தூவப்பட்டுள்ளன.)**

வில்லை, பேசி முடித்த பின்தான் ரிசீவரைத் தொட்டிலில் கிடத்த வேண்டும் என. அன்றெனக்குத் தோன்றியது, 'கற்றது கைம்மண் அளவு' என்று.

நாற்பதாண்டுக் காலம் எழுதி வருபவன் நான். முப்பது நூல்களுக்கும் மேலாக எழுதி இருக்கிறேன். அரிச்சுவடி வகுப்பிலிருந்து ஔவையின் 'ஆத்திச்சூடி' பயின்றவன். ஆத்திச்சூடி பற்றி, 'அஃகம் சுருக்கேல்' என்று நீண்ட கட்டுரையும் 'உயிர் எழுத்து'வில் எழுதியவன். ஆத்திச்சூடி பற்றி அண்மையில் சென்னைப் புத்தகக் கண்காட்சியில் எனது நண்பர் – பேராசிரியர் – 'லயம்' சிற்றிதழ் நடத்திய முனைவர் கால சுப்ரமணியம் சொன்னார், "நாஞ்சில், இனிமேல் 'ஆத்திசூடி' என்று எழுதுங்கள்" என. எனக்கு அப்போதுதான் விளங்கியது. இது நாள்வரை நான் 'ஆத்திச்சூடி' என்றே எழுதி வந்திருக்கிறேன் என. என்ன வேறுபாடு என்று கேட்பீர்கள்! வித்தியாசம் இருக்கிறது. கைம்மண் அளவே கற்றது என்பதனால் நாளும் கற்றுக் கொண்டே இருக்கிறோம்.

பம்பாயில் பணிபுரிந்த எனது இளம்பருவத்து ஆண்டுகளில், வளைகுடா நாடுகளுக்கு கூலி வேலைக்குப் போகும் பீகாரி, உ.பி பையாக்கள் பற்றி அமங்கலமான ஜோக் ஒன்று சொல்வார்கள். வேலைக்குப் போனவர்களுக்கு அனுமதிக்கப்பட்டிருந்த தங்குமிடத்தில் இருந்த குளிப்பறை–கழிப்பறை பார்த்து ஒருவன் கூவினானாம்,

"அரே பாய்! யஹாங் தோ நல்லி ஹை அவுர் கூவா பி ஹை" என்று.

பொருளாவது, 'சகோதரா, இங்கே தண்ணீருக்குக் குழாயும் இருக்கிறது, மொண்டு ஊற்றக் கிணறும் இருக்கிறது' என்று. கிணறு என்று அவன் குறிப்பிட்டது, வெஸ்டர்ன் குளோசட்.

அன்றே எனக்கு சிரிப்பு வரவில்லை.

**(கற்கலாம்...)**

# கைம்மண் அளவு...

சாகித்ய அகாதமியின் பொன்விழா நிகழ்வாக, பனாரஸ் இந்து பல்கலைக்கழகமும், மத்திய அரசின் பண்பாட்டுத் துறையும் இணைந்து நடத்திய மூன்று நாள் கருத்தரங்கிற்காக வாரணாசி போயிருந்தேன். வாரணாசி, பனாரஸ், காசி... யாவும் ஒன்றுதான். மெட்ராஸ், மதராஸ், சென்னை யாவும் ஒன்று என்பதைப் போல! 'மொழிக்கு ஒருவர்' என இந்தியப் பட்டியல் மொழிகள் அனைத்திலிருந்தும் படைப்பிலக்கியவாதிகள் தங்களின் ஆக்கம் ஒன்றினை வாசிக்க வேண்டும். கவிதையோ, கதையோ... இருபது நிமிடங்களுக்கு மிகாமல், இந்தியில் அல்லது ஆங்கிலத்தில்.

படைப்பாளிகளாயும், சிறப்பு அழைப்பாளர்களாயும், அமர்வுத் தலைவர்களாயும் பெரும்பாலும் பல மொழிப் பேராசிரியர்களே! அவர்களே மேடையையும் அரங்கையும் நிறைத்திருந்தார்கள். அவர்களே கவிஞர், கதாசிரியர், அறிஞர், ஆய்வாளர்.

நாஞ்சில் நாடன்

ஓவியம்: மருது



கடுங்குளிர் காலம். கிறிஸ்துமஸ் விடுமுறைகளை ஒட்டியே பொன்விழா கொண்டாட வேண்டும் என்று அரசுத்துறை நிர்ப்பந்தம் இருந்திருக்கும் போல. கருத்தரங்கு நாட்கள் டிசம்பர் 25, 26, 27. மெர்க்குரி 7°C காட்டியதால் அனைவருமே சட்டைக்குள் ஸ்வெட்டர், சட்டைக்கு மேலேயும் ஸ்வெட்டர், கோட்டு, கழுத்தைச் சுற்றி மப்ளர், சால்வை, தலைக்கு குல்லாய் என்று காட்சி அளித்தனர். பெரும்பாலானோருக்கு குல்லாய்க்கு வெளியே ஷெண்டி எனப்பட்ட சிறு குடுமி முனையில் முடிச்சுடன் நீட்டிக் கொண்டிருந்தது. அப் பனி மனிதர்களுக்கு இடையே, வெறும் கையில்லாத ஸ்வெட்டர் மட்டும் அணிந்த நான் நடுங்கிக் கொண்டிருந்தேன்.

பல ஆண்டுகள் முன்பு இது போன்றதொரு கடுங்குளிர் காலத்தில் டெல்லிக்குப் போன ராஜபாளையத்து எழுத்தாளர்கள் பன்மொழிப்புலவர் மு.கு.ஜகன்னாத ராஜா, குறிஞ்சிச் செல்வர் கொ.மா.கோதண்டம், பஞ்சாலைத் தொழிலாளியும் திடகாத்திரமானவரும் ஆன கொ.ச.பலராமன் ஆகிய மூவரில், அசட்டுத் துணிச்சலில் குளிராடைகள் இல்லாமல் ஊர் சுற்றிய பலசாலி கொ.ச.பலராமன் ஊர் திரும்பிய சில நாட்களில் குளிரின் தாக்குதலால் இறந்து போன செய்தி நினைவுக்கு வந்து அச்சுறுத்தியது. ஊர் திரும்பிய நானும் இருபத்தெட்டு நாட்கள் இருமினேன் என்பது கிளைக்கதை.

நான் வாழும் கோவையின் கோவைப்புதூர் பகுதியில் தட்பம் 23°C இருக்கும்போதே, அதை ‘கோவையின் சுவிட்சர்லாந்து’ என்று கொண்டாடுகிறார்கள். நமக்கு அப்படித்தானே சொல்லிப்



‘தமிழர் என்றோரு இனமுண்டு’ என்றும் ‘தனியே அவர்க்கோரு குணமுண்டு’ என்றும் முழங்கினார்கள்,

பழக்கம் – காலா காந்தி, தென்னாட்டு பெர்னார்ட் ஷா, வாழும் தொல்காப்பியர் என்று...

காசி விசுவநாதரின் தட்டகத்தில் – தட்டகம் எனில் ஆட்சி செல்லும் பிரதேசம் என்று பொருள் – இருப்பதால் உடம்புக்கு வெப்பமூட்டும் பானம் எதுவும் பருகலாகாது எனும் விரதத்தில் இருந்தேன் நான். மதுவில்,

மாமிசத்தில் இது போன்ற சூழலுக்
குப் பொருந்தாத விரதங்கள் மேற்
கொண்டு அல்லற்பட்டதுண்டு
என் முன் அனுபவங்களில்.

படைப்பரங்கில் தமிழ்,
மலையாளம், கன்னடம், களி
தெலுங்கு, கொங்கணி, சிங்க
மராத்தி, ஒடியா, சோனார் வங்
காளி, மணிப்பூரி, அஸ்ஸாமி,
காக்பரோக், சந்தாலி, டோக்ரி,
மைதிலி, நேபாளி, கஷ்மீரி, பிகாரி,



போன தலைமுறைப்
புலவர்கள். அந்தத் தனிக்குணம்
என்ன என்று அறியும்
ஆர்வம் மீதூறுகிறது!

ராஜஸ்தானி, பஞ்சாபி, சிந்தி,
குஜராத்தி, உருது, சமஸ்கிருதம்,
ஆங்கிலம் முதலாய மொழிகளின்
எழுத்தாளர்கள். இவருள் நானும்,
மலையாளக் கவிஞர் அனிதா தம்
பியும், மற்றும் வங்காளி, மராத்தி,
அஸ்ஸாமி, மணிப்பூரி எழுத்தா
ளர்களும் நீங்கலாக மற்ற எல்
லோரும் இந்தியில் உரையாற்றி
னார்கள். எங்களுக்கோ ஆங்கிலம்
தவிர வேறு போக்கில்லை.

பெரும்பாலான மொழிகளின்
பேராசிரியப் பெருந்தகைகள்
விட்ட ஆய்வுக் கொடுங்காற்று
மூச்சுக்களால், ஆய்வு சீரணமா
காத அபான வாயுக்களால், மூச்சு
முட்டிக் கிடந்தது அரங்கு. கவிச்
சாயம் வெளிறிய கவிதைகள்,
உரைநடை போல் ஒலித்தன.
படைப்பூக்கம் அற்ற தட்டையான
சிறுகதைகள், தினசரிகளின் வார
இணைப்பு சிறுகதைகள் போல்
தொனித்தன. திருவிழா கடைத்
தெருவில் விளம்பர நோட்டீசுகள்
குப்பை போல இறைந்து கிடப்பது
ஞாபகம் வந்தது. விமானப் பய
ணம், மூன்று நட்சத்திர விடுதி,
விலையுயர்ந்த சொகுசு உணவு
கள். ஆனால், இந்திய இலக்கியத்
தைப் பிரதிநிதிப்படுத்துபவை,
வளமும் மழையும் குன்றி பாறிப்
போன பயிரென வெளிறிக் கிடந்
தன. எனினும் அவ்வவ் மொழி
களின் அதிகார சங்கு நெரிப்பு
தாண்டியும் இந்திய இலக்கியம்
உயிர்ப்புடன் இருப்பது நற்பேறு.

பனாரஸ் இந்து பல்கலைக்கழ
கத்தின் மொழித்துறைப் பேராசி
ரியர்களாலும் ஆய்வு மாண
வர்களாலும் நிறைந்திருந்த
அரங்கில், தெரிந்த முகம் ஏதும்
தென்படுமோ எனத் துழாவித்
துழாவிப் பார்த்தேன். பகை
இனம் என்றாலும் கூட, பனாரஸ்
இந்துப் பல்கலைக்கழகத்துத்

தமிழ்ப் பேராசிரியர் ஒருவராவது தென்பட மாட்டாரா என்று தேடினேன். அருகே அமர்ந்திருந்த தெலுங்குப் பேராசிரியரிடம் கேட்டபோது, ''இருந்தார்கள்... ஆனால் இல்லை'' என்றார் தமிழ் சினிமா வசனம் போல.

தொன்மையான, சிறப்பு வாய்ந்த அந்தப் பல்கலைக்கழகத்தில், வளமான தெலுங்கு மொழிக்கென ஒரு துறையும் ஆய்வு மாணவரும் இருந்தபோது, செம்மொழித் தமிழுக்கு என ஒரு நாற்காலி கூட இல்லை. இது நமது தமிழ் வாழ்ந்த நலம். நாடு திரும்பி வந்து விசாரித்தபோது சொன்னார்கள்... ''முன்பு இருவர் இருந்தனர். அவருள் ஒருவர் ஓய்வு பெற்று விட்டார்; மற்றவர் வேறு வேலை கிடைத்துப் போய் விட்டார்'' என்று.

நமது அரசுகளுக்கோ நகராட்சி மன்றத்துச் சுவர்களில் 'தமிழ் வாழ்க' என்று எழுதினால் போதும். நூற்றுக்கணக்கான இளைஞர்கள் தமிழில் எம்.ஏ., எம்.ஃபில்., பிஎச்.டி. பயின்று, இலக்கியத்திலும் மொழியியலிலும் ஆய்வுகள் மேற்கொண்டு, காருண்யம் மிக்க கல்வித் தந்தையரின் கலைக்கல்லூரிகளில் மாதம் எட்டாயிரமும், பத்தாயிரமும் வாங்கி அலைக்கழியும்போது, வட மாநிலப் புகழ்பெற்ற பல்கலைக்கழகத்து இருக்கைகள் தூசி படிந்து கிடக்கின்றன. நமக்கு உறைத்து என்ன பயன்? நாடாள்பவருக்கும், பல்கலைக்கழக வேந்தர்களுக்கும், துணை வேந்தர்களுக்கும், தமிழாய்வு நிறுவனங்களின் இயக்குனர்களுக்கும் யார் போய்ச் சொல்ல வல்லார்கள் இனியே!

நான் கலந்து கொண்ட பன்மொழி எழுத்தாளர் சந்திப்பு துவக்கப்பெற்ற அதே நாளில், அதே வளாகத்தின் அடுத்த கட்டிடத்தில், பிரதமர் நரேந்திர மோடி வேறோர் துவக்க விழாவுக்கு வந்திருந்தார். கெடுபிடிகளுக்குக் கேட்பானேன்? செல்போன் என்ன, புத்தகங்களுக்குக் கூட

### கலீல் ஜிப்ரான் கவிதைகள்



ஒருவருக்கொருவர்
அன்பு காட்டுங்கள்
இருவரும் அதனுள்
ஒன்றிவிடாதீர்கள்
இருவர் உள்ளத்தின்
கரைகளுக்கிடையே
விளையாடும் அலைபோல்
அன்பும் ஆடட்டும்

அனுமதியில்லை. புத்தகம் என்பதும் பயங்கரமானதோர் ஆயுதம் தானே! எதிர்காலத்தில் இந்திய மாநிலப் பேரவை உறுப்பினர் கூட தோட்டா துளைக்காத கார், குண்டு துளைக்காத சட்டை, மோப்ப நாய்கள், வெடிமருந்து வல்லுநர்கள், சிறப்பு மருத்துவர் குழாம் இல்லாமல் வீட்டை விட்டு வெளியில் இறங்க முடியாத நிலை வரலாம். இந்திய மக்களாட்சியின் மாபெரும் வெற்றி அதுவாக இருக்கும்!

எனது நற்பேறு, மொத்த அரங்கிலும் அறிந்த முகம் ஒன்றெனக்குக் கிடைத்தது. அவர், மலையாளக் கவிஞர் அனிதா தம்பி. சில ஆண்டுகளுக்கு முன்பு, ஊட்டியில், மஞ்சனகொரே சிற்றூரில், ஸ்ரீநாராயண குருகுலத்தில் ஜெயமோகன் ஒருங்கிணைத்த தமிழ்–மலையாளப் படைப்பாளிகள் முகாமில், திருவாளர்கள் டி.பி.ராஜீவன், கல்பற்றா நாராயணன், காதர் ஆகியோருடன் கலந்துகொண்ட முன்னணி மலையாளக் கவிஞர் அவர்.

பனாரஸ் இந்து பல்கலைக்கழகத்தின் காட்சிக் கலைகளுக்கான துறையின் அரங்கில் நடந்தது நான் மேற்சொன்ன சந்திப்பு. கடைசி அமர்வின் கடைசி எழுத்தாளனின் உரை எனது. ஆங்கில அகர வரிசைப்படி தமிழ், தெலுங்கு, உருது. தெலுங்கு, உருது

### கலீல் ஜிப்ரான் கவிதைகள்



அன்பு
வயப்படுத்தாது
தானும் வயப்படாது
ஏனென்றால்
அன்பென்பது
ஓர் நிலை
கைப்பற்றும் பொருளன்று

எழுத்தாளர்கள் தங்கள் பயணச்சீட்டு நேரங்களைக் கணக்குக் காட்டி, முன்கூறாகத் தமது நேரங்களை மாற்றிக் கொண்டார்கள். நமக்கு அந்த சாமர்த்தியமும் போதாது.

பரிசளிப்பு விழாக்களிலும், கருத்தரங்க, கவியரங்க மேடைகளிலும், கடைசியாக வருபவர்களில் தமிழன் இருப்பான். சாகித்ய அகாதமி நிர்வாகிகளிடம் முன்பொரு முறை சொன்னேன் நான், “இந்த வரிசையைக் குலுக்கல் முறையில் தீர்மானிக்கலாமே” என்று. தமிழன் சொன்னால் இந்திய அரங்கில் எடுபடுமா என்ன? பந்தியிலேயே இடம் இல்லை என்றார்களாம், கிழிந்த இலையே

போதும் என்றானாம்!

என் கதையை ஆங்கிலத்தில் மொழிய எழுந்தபோது, பெரும்பாலும் அரங்கு காலியாக இருந்தது. முன்தின இரவே பஞ்சப்படி–பயணப்படி பெற்றுக் கொண்டவர்கள் அவசரப்பணிகள் நிமித்தமும் ஆலய தரிசனங்களுக்காகவும் அகன்று கொண்டிருந்தனர். எனது அறைத் தோழராக இருந்த கொங்கணி எழுத்தாளப் பேராசிரியர் பிரகாஷ் பாரிக்கர், மும்பை வழியாக பனாஜிக்கு விமானம் பிடிக்கப் புறப்பட்டுப் போயிருந்தார்.

இந்த இடத்தில் ஒரு தகவல்... கொங்கணி என்பது கோவாவில் பேசப்படும் மொழி. இந்த மொழிக்கு வரி வடிவம் இல்லை. தேவநாகரி லிபியில் எழுதுகிறார்கள்; அல்லது கன்னட லிபியில். மற்றபடி 'கொக்கென்று நினைத்தாயோ கொங்கணவா?' என்ற பழமொழிக்கும் கொங்கணி மொழிக்கும் சம்பந்தமில்லை. பக்கத்து அறைக்காரர்களாக இருந்த தெலுங்குக் கவிஞர், பேராசிரியர் யாகூப்; கன்னடக் கவிஞர், பேராசிரியர் லக்குரு ஆனந்த் இருவருமே புலம் பெயர்ந்து விட்டார்கள். ஒரு ஆன்ம பலத்துக்காக, மலையாளக் கவிஞர் அனிதா தம்பி எனக்காகக் காத்திருந்தார்.

இந்த எழுத்தாளர் சந்திப்பில் கலந்து கொண்டதன் மூலம் எனக்குள்ளிருந்த வினாக்களின் எண்ணிக்கை பல்கிப் பெருகியது. எவர் மீதும் பகையின்றிக் காழ்ப்பின்றிக் கசப்பும் இன்றி உங்களுக்கு அவற்றில் ஒன்றைப் பகிர்ந்து அளிக்கிறேன்.

இன்றைய தேதியில் இந்திய மக்கட்தொகையில் வங்காளி, மராத்தி, தெலுங்கு, கன்னடம், மலையாளம், தமிழ், கொங்கணி, ஒடியா, குஜராத்தி, ராஜஸ்தானி, சிந்தி, அஸ்ஸாமி, மணிப்பூரி, நேபாளி, மைதிலி, டோக்ரி, போஜ்புரி, சந்தாலி, சமஸ்கிருதம், உருது, பஞ்சாபி, கஷ்மீரி, இன்ன பிற மொழி பேசுபவர் மக்கட்தொகை என்ன? இந்தி மட்டும் பேசுபவர் மக்கட்தொகை என்ன? ஏதோ ஒரு ஒத்து தீர்ப்புக்கு அல்லது கட்டப்பஞ்சாயத்துக்கு வந்த பல மொழியினரும் இந்தியிலும், வர முடியாதவர் ஆங்கிலத்திலும் பரிமாறிக் கொள்ளும் முரண் எனக்குக் கவலை அளிக்கிறது. இந்தியோ, ஆங்கிலமோ அறியாத, திறன் மிக்க ஒரு மொழியின் படைப்பாளியின் கதி என்ன?

வாழ்க்கைச்சூழல், எனக்கு உத்தேசமான இந்தியும், ஓரளவு ஆங்கிலமும் கற்றுத் தந்தது. தெரியாதவர் வாய்ப்பு மறுக்கப் பெற்றவர்தானே! இதுதான் மதச்சார்பற்ற சமத்துவ மக்களாட்சிக் குடியரசின் மொழிச் சமூக நீதியா? அறுபது ஆண்டுகளுக்கும் முன்பு,

அன்றைய இந்தியப் பிரதமர், அனைத்து இந்திய மொழிகளிலும் இலக்கியத்தை வளர்த்தெடுக்க அமைத்த சாகித்ய அகாதமியின் கனவு இப்படித்தான் மெய்ப் படுமா?

உலகமெங்கும் பத்து கோடி மக்களின் தாய்மொழி, தமிழ்நாட்டில் மட்டும் ஏழரை கோடி மக்களின் மொழி, அதன் எழுத்தாளர் அகில இந்திய அரங்கில், பத்தாயிரம் மைல்கள் தாண்டிய அயல்மொழியில் உரையாற்றும் அவலம். மிக அவமானமாக இருந்தது எனக்கு. தமிழ் மொழிக்கு என ஓர் நாடு உருவாக இருந்த கனவும் நமது துரோகத்தால் நிர்மூலமாயிற்று. தமிழ் அர்த்தமாகாத, ஆங்கிலமும் அர்த்தமாகாத அவையில் என் கதை உரைக்கப் பெற்றால் என்ன? வாசிக்கப்படாமற் போயினும் என்ன?

இந்தச் சூழலில், தமிழின் சிறந்த படைப்புகள், பிற இந்திய மொழிகளிலும் அயல்மொழிகளிலும் அறிமுகமற்றுக் கிடப்பதன் சோகம் என்னுள் கவிந்தது. ‘மொழியாக்கம் செய்யப்பட்டு சென்று சேருவனவும், மொழியின் இரண்டாந்தர, மூன்றாந்தர ஆக்கங்களே பெரும்பாலும்’ எனும் உண்மை வலித்தது. ஆங்கிலம் வழி, பிற இந்திய மொழிகளின் வழி, வெளியுலகுக்கு, படைப்பாளர்களின் முகவர்களின் மூலம் சென்று சேரும் இரண்டாந்தர, மூன்றாந்தர தமிழ்ப்படைப்புகள் எம் மொழிக்குக் கொண்டு வந்து சேர்க்கும் தரச் சான்றிதழ்கள் மேலும் நம்மைச் சோர்வடையச் செய்கின்றன.

‘தமிழர் என்றொரு இனமுண்டு’ என்றும் ‘தனியே அவர்க்கொரு குணமுண்டு’ என்றும் முழங்கினார்கள், போன தலைமுறைப் புலவர்கள். அந்தத் தனிக் குணம் என்ன என்று அறியும் ஆர்வம் மீதுறுகிறது!

(கற்கலாம்...)

### கலீல் ஜிப்ரான் கவிதைகள்



ஒருவரின் கோப்பையில்
இருவரும் அருந்தாதீர்கள்
அவரவர் கோப்பையில்
அவரவர் அருந்துங்கள்
ஒரே தட்டிலிருக்கும்
ஒரே உணவை
இருவரும் உண்ணாதீர்கள்
அவரவர் உணவை
அவரவர் தேவைபோல்
அவரவர் உண்ணுங்கள்

# கைம்மண் அளவு...

காசிக்கு கருத்தரங்குக்குப் போன கதை சொன்னேன். அங்கு நான் கற்றுக்கொண்டதைச் சொல்ல வேண்டாமா? 2014 டிசம்பர் 24ம் நாள் மாலை வாரணாசி வானூர்தித் தளத்தில் இறங்கும்போது மாலை 6 மணி. அப்போது அறிவித்தார்கள் – ‘‘வாரணாசிக்கு வருக! நீங்கள் நற்பேறு செய்தவர்கள்! காலநிலை வெகு வசீகரமாக இருக்கிறது. தற்போதைய தட்பம் 8°C மட்டுமே!’’

**நாஞ்சில் நாடன்**

ஓவியம்: **மருது**



23°C குளிரிலேயே ஸ்வெட்டர் அணிந்து நடப்போரைக் கண்டிருக்கிறேன். 36°C வெப்பத்தில் கோட் அணிந்து செல்வோரையும். அது தனிநபர் உரிமை, நாம் குறுக்கிட இயலாது. எதிர்காலத்தில், அடிப்படைவாதிகள், இந்தியரின் பாரம்பரிய உடை வேட்டியும் சட்டையும் தோள்துண்டும்தான், அவற்றையே அணிதல் வேண்டும் என்று போராட்டம் நடத்தும் போது அதனை எதிர்கொள்ளலாம்.

டில்லியில் நவம்பர், ஜனவரி, பிப்ரவரி மாதங்களின் குளிர் எனக்கு அறிமுகம் உண்டு. டிசம்பர் குளிர் அனுபவம் இல்லை. டில்லியில் இருந்து மேலும் கிழக்கு நோக்கி, 570 கி.மீ வாரணாசி.

கோயம்புத்தூரில் இருந்து முற்பகல் 11.30க்குப் புறப்பட்ட விமானம், இடை நில்லாப் பேருந்து. டில்லி சேர்ந்தபோது மதியம் 2.30 மணி. 14°C குளிர் சற்று விதிர்ப்படையச் செய்தது. சக்தி குழுமங்களின் டில்லி பொது மேலாளரும் டில்லி தமிழ்ச்சங்க முன்னாள் செயலாளருமான சக்தி பெருமாள் என்னுடன் பயணம் செய்தார். வாரணாசிக்குச் செல்லும் விமானம் இன்னொரு கட்டிடத்தில். என்னையவர் வழி நடத்தி, விமான தளத்து அடுத்த பகுதியில் விட்டுச் சென்றார்.

விமான தளத்தில் குளிர் தெரியவில்லை. பைக்குள் இருந்த ஸ்வெட்டரையும் நான் எடுக்கவில்லை. ஒருவேளை வெப்பமூட்டி இருப்பார்கள் போலும். இப்போதெல்லாம் விமானப் பயணங்களில் தண்ணீர் மட்டும் விலையில்லாமல் தருகிறார்கள். எதிர்வரும் நாட்களில் அதற்கும் முப்பது ரூபாய் வாங்கலாம். டாய்லெட் பயன்படுத்த இருபது ரூபாய் வசூலிக்க, வாசலில் ஒருவர் நிற்கலாம்.

மதிய உணவு நேரம் என்றாலும் டில்லியில் இரண்டு மணி நேரம் பயணங்களுக்கு இடையே இருந்தது. அங்கே பார்த்துக் கொள்ளலாம் என்று நினைத்திருந்தேன். பத்மநாப சாமிக்குப் பால் பாயசம், நமக்கு மனப் பாயசம். கால் நூற்றாண்டாக சர்க்கரை நோயாளி என்பதால், பயணங்களின் போது சில முன்னெச்சரிக்கைகள் உண்டு. அதுபற்றி அச்சமில்லை. விமானத்தில் உணவுப்பண்டங்களின் விலை எனக்கு ஒவ்வாமல் இருந்தது. அதற்கு மாற்றுச்சொல், மயானக்கொள்ளை. விமான தளத்தில் விலை கேட்டபோது அது சர்வத்திர கொள்ளையாக இருந்தது. அதற்கு மாற்றுச்சொல் வழிப்பறி. ஒரு பஞ்சாபி சமோசா அறுபது பணம். ஒன்று கேட்டால் இரண்டுதான் தருவோம் என்றார்கள். இணையைப் பிரிந்தால் சமோசா உயிர் நீக்கும் போலும். காப்பி நூற்று இருபது பணம். மத்

## ஒரு பஞ்சாபி சமோசா அறுபது பணம். ஒன்று கேட்டால் இரண்டுதான் தருவோம் என்றார்கள். இணையைப் பிரிந்தால் சமோசா உயிர் நீக்கும் போலும்!



திய அரசின் சேவை வரிகள் தனி. ‘அவன் தம்பி அங்கதன்’ என்றொரு சொலவம் நினைவு வந்தது. இவற்றுக்கெல்லாம் வவுச்சர் போட்டால் சாகித்ய அகாதமி ஒப்புக்கொள்வார்களோ என்னவோ!

வாரணாசியில் மஞ்சு மூட்டம் வானின்று இழிந்து தங்கி இருந்தது. எங்களுக்குப் பதிவு செய்யப்பட்டிருந்த மூன்று நட்சத்திர விடுதி, விமான தளத்தில் இருந்து 33 கி.மீ. வெளியே வாடகைக் கார் ஓட்டுநர்கள் மொய்த்து நின்றனர். எப்போதும் ஆட்டோ, வாடகைக் கார் என ரயில் நிலையம் அல்லது பேருந்து நிலையங்களில் பிடிக்கும்போது, முகம் பார்த்துக்கொள்வது வழக்கம். அடுத்தது காட்டும் ஆடி போல் அகம் கடுத்தது காட்டும் முகம். நூற்றுக்கு எண்பது அனுமானங்கள் பொய்த்ததில்லை.

நல்ல உயரமாக, இளைஞனாக, முக வசீகரத்துடன், எளிமையாக, மிகச் சாதாரணமான ஆடைகளுடன் இருந்தவனிடம் ஓட்டலின் பெயர் சொன்னேன்.

“ஆயியே பாய் சாப்... பைட்டியே!” என்றான். எனது 18 ஆண்டு கால பம்பாய் வாழ்க்கையும் வட மாநில தொழிற்பயணங்களும் போதுமான இந்தி மொழி அறிவைத் தந்திருந்தன. ‘யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல்’ என்று என்னாலும் சொல்ல இயலும்.

“கியா லேய்ங்கே பையா?” என்றேன்.

“ஆட் சௌ ருப்யா தே தீஜியே சாப்” என்றான்.

“ஏக் கீ பாத்... சாடே சாத் சௌ” என்றேன் உத்தேசமாக.

“பைட்டியே!” என்றான்.

எண்ணூறு கேட்டு எழுநூற்றைம்பதுக்குப் படிந்தது பேரம். நம்மூர் பெரும்பாலான அனுபவங்கள் எனக்கு வேறு விதமாகவே இருக்கின்றன. எரிச்சல் பணத்தில் மட்டுமல்ல. அலட்சியம், எடுத்தெறிந்து பேசும் ஆணவம், கொலஸ்ட்ரால்... கோவை உக்

கடம் பேருந்து நிலையத்தில் இருந்து நான் புதிதாய்க் குடி பெயர்ந்திருக்கும் கோவைப்புதூர் இடத்துக்கு 8 கிலோமீட்டர். ‘மக்கள் ஆட்டோ’ சேவையைப் பயன்படுத்தினால் நூற்றைந்து பணம், அதிகாலை ஐந்தரை மணிக்கு. மிக அண்மையில், காலை 6 மணிக்கு உக்கடத்தில் இறங்கினேன். நான்கு ஆட்டோ ஓட்டுனர்களிடம் விசாரித்தேன். 400 பணம் கேட்டார்கள். பிறகென்ன, பேருந்து பிடித்து வீட்டிற்கு வந்தேன்.

அவன் பெயர் அனுஜ் மிஸ்ரா. பம்பாய் இந்தியில் பேசிக்கொண்டே வந்தேன். வாரணாசி இந்தியில் அவன் பதில் சொல்லிக்கொண்டே பொறுப்பாக வண்டி ஓட்டினான். அவன் சொன்ன தகவல்கள் சுருக்கமாக - இருபது வயதாகிறது. ஐந்தாண்டுகளாகக் கார் ஓட்டுகிறான். உரிமம் எடுத்து இரண்டு ஆண்டுகளே ஆகின்றன. பெற்றோர் காசியில் இருந்து 85 கி.மீ தூரத்தில் சிறு கிராமத்து விவசாயிகள். அண்ணன் ஆட்டோ ஓட்டுகிறான். தாமசம் தாய்மாமன் வீட்டில்.

இன்முகத்துடன் இணக்கமாகப் பேசிக்கொண்டு வந்தான். வடநாட்டில் லஸ்ஸி நன்றாக இருக்கும். எனக்கும் இரண்டு சமோசாக்கள் அச்சு முறிந்து விட்டிருந்தன.

“ஒரு லஸ்ஸி குடிப்போம், அனுஜ். நல்ல கடையாகப் பார்த்து நிறுத்து” என்றேன். அந்தக் குளிருக்கு அந்த நேரத்துக்கான பானம் வேறு. ஆனால், என் தேர்வு லஸ்ஸி. சூழல் அழுக்காகவே இருந்தது. வடநாட்டில் சுத்தம் பார்த்தால், பட்டினி பரம ஔடதம்.

“சாப், கார்லே இருங்க... நான் போய் வாங்கி வருகிறேன்” என்



**சுமதிஸ்ரீ**

**எ**ங்கெல்லாம் பெண்கள் இழிவுபடுத்தப்படுகிறார்களோ, அங்கெல்லாம் தன்னுடைய எதிர்ப்பை பதிவு செய்வதுதான் பெண்ணுரிமை. தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில், ஒரு நடிகை பல் டாக்டரிடம் ‘பல் கூசுகிறது’ என்றாள். அதற்கு டாக்டர், ‘உனக்கு அங்கேயாவது கூச்சம் இருக்கட்டும்’ எனச் சொல்ல, அதற்கு கைதட்டி ரசித்த பலரும் பெண்கள்தான். நம்மை இழிவு செய்பவர்களைக் கண்டு கோபம்கொள்வதும், எதிர்ப்பை பதிவு செய்வதும்தான் பெண்ணுரிமை!



நான் வண்டியை நிறுத்தி. எமக்கது சீலம் அல்ல. இறங்கிப் போனேன், குளிரை சட்டை செய்யாமல், ஸ்வெட்டர் கிடந்த தைரியத்தில். புத்தம் புது வாயகன்ற கிண்ணம் போன்ற மண் சட்டி நிறைய, மலாய் தளும்பியபடி, சுமார் 360 மி.லி அளவில் தணுப்பான, இனிப்பான, வாசமான லஸ்ஸி. சர்க்கரை வியாதிக்காரன் அல்லவா என்பீர்கள். பயணங்களில் அதை நான் பெரிதாகப் பொருட்படுத்துவது இல்லை. மேலும், நோயைச் செல்லம் கொஞ்சும் வழக்கமும் இல்லை.

பாலாவின் ‘நான் கடவுள்’ படப்பிடிப்பின் போது, ஜெயமோகனும், சுகாவும் ஒரு மாதத்திற்கும் மேல் காசியில் இருந்தனர். ஒரு நாள் மாலை காசி மாநகரின் இடுக்குத் தெருவில் நடந்தவாறு சுகா கூப்பிட்டார். “சமோசா, பஜ்ஜியா, லால்பேடா, லஸ்ஸி எல்லாம் நல்லாருக்கும். சாப்பிடுங்கோ!” என்றேன்.

‘‘முழுக்கையையும் பாத்திரத்துக்கு உள்ளே விட்டுக் கிண்டு காணுகோ சித்தப்பா’’ என்றார் சுகா.

“நம்மூர்லே இட்லி மாவு மாத்திரம் எப்பிடிக் கிண்டுகானுவோ? புரோட்டாவுக்கு எப்பிடி மாவு பெசையரானுவோ? சும்மா வாங்கித் திண்ணுங்கோ” என்றேன்.

வாயைத் துடைத்து, சட்டியை வீசிப்போட்டு உடைத்தபடி வந்த அனுஜிடம் சொன்னேன், “மஜா ஆயா பையா’’ என்று. பயணத்தைத் தொடர்ந்தபோது கேட்டேன். “ஏன் டாக்சி ஓட்ட வந்திட்டே பையா? படிப்பு வரலியா?”

“பனாரஸ் இந்து யூனிவர்சிட்டியிலே பி.ஏ எகனாமிக்ஸ் இரண்டாமாண்டு படிக்கிறேன், சாப்’’ என்றான்.



## குட்டி ரேவதி

**பெ**ண்களுக்கு பாதுகாப்பானது என்று நம்பிய வீடுகளில், குடும்பங்களில் கூட வன்முறை நடப்பது அம்பலமாகியுள்ளது. பெண்கள் பெற்று வரும் ஆளுமையை ஆண்களால் தாங்கிக்கொள்ள முடியாமல்தான் சொல்லிலும், செயலிலும் வன்முறை நிறைந்தவர்களாக ஆகிவிட்டனர். பெரியார் பெண்ணுரிமைக்காகக் களமிறங்கிய மண்ணில்தான் ஆண்கள் பெண்களுக்கு எதிரான



பாலியல் முறைகேடுகளையும் வார்த்தைகளையும் எளிதாகப் பேசி விட்டுத் தப்பிக்க முடிகிறது.

ஆச்சரியமாக இருந்தது எனக்கு. "அப்ப, டாக்சி எப்பிடி?"

"இப்போ விடுமுறைதானே!" என்றான்.

மகிழ்ச்சியாகவும், பெருமித மாகவும் இருந்தது. அனுஜ் மேல் ஒரு மரியாதை ஏறியது. காசியில் நானிருந்த நான்கு நாட்களிலும், குளிர்காலம் என்பதால் அரை நாள்தான் நிகழ்ச்சிகள். எழுத்தாளர் சந்திப்பு நேரம் போக, எனது பிற பயணங்களுக்கு அனுஜ் உதவியாக இருந்தான். திரும்புகாலில், பல்க லைக்கழக வளாகத்தில் இருந்தே விமான தளத்துக்கு கொண்டு விடச் சொன்னேன். மறக்காமல் மறுபடியும் லஸ்ஸி. வீட்டுக்கு வாங்கிக் கொண்டு வர அவன் தேர்வு செய்த கடையில் லால் பேடா, சிக்கி என வாங்க உதவி செய்தான்.

கேட்கக் கூடாது என்ற முடி வில் இருந்தவன் கேட்டேன், "தின மும் என்ன வருமானம் கிடைக் கும்?"

தயங்காமல் சொன்னான், "நூறு ரூபாய் கிடைக்கும்" என்று. "சாரநாத் தொடங்கி 170 கி.மீ தொலைவில் இருக்கும் அலகா பாத் வரைக்கும் ஓட்டுகிறேன்" என்றான்.

நம்மூர் சிக்னலில் பச்சை விழும் முன்பே காதுகள் செவிடுபட ஒலிப்பான் அடிப்பவர்கள் காசியின் தெருக்களில் வண்டி ஓட்டிப் பழக வேண்டும். பசு மாடு கள் யாவுமே காமதேனுக்கள், காளை மாடுகள் எல்லாமே நஞ் சுண்ட கண்டனின் இடப வாக னங்கள். ஒன்றுமே செய்வதற் கில்லை. அவற்றை முட்டிக் கொண்டு நடமாடும் துறவிகளும், யாத்ரீகர்களும், உள்ளூர்வாசி களும். ஊடு பயிராக சைக்கிள் ரிக்ஷா, ஆட்டோ ரிக்ஷா, பல்லின இருசக்கர வாகனங்கள், கார், அடர்நிறங்களின் ஜிகினாத் துணி களால் பொதியப்பட்ட செத்த பிணங்களை டாப்பில் கட்டி அரிச் சந்திரா காட் விரையும் டாக்ஸி கள். காரில் சைக்கிள் ரிக்ஷா உர சிக் காயப்படுத்தினால் எவரும் கதவைத் திறந்து வந்து கத்த வில்லை. இருசக்கர வாகனங் களின் இருபக்க ஆடிகளும் நம் மூரில் வெளிப்பக்கமாக நீண்டிருக்கும். காசியில் உட்பக்க மாகத் திருப்பி விட்டிருந்தார்கள். காசியில் கருடன் பறக்காது, பல்லி பேசாது, பூ மணக்காது, எரியும் பிணம் நாறாது என்பது போல் போக்குவரத்து இரைச்சலில் காதும் கேட்காது. இந்த நெரி சலிலும் அனுஜ் திறமையாகக் காரோட்டினான்.

விமான தளத்தில் காத்திருந்த போது அனுஜ் பற்றி சிந்தித்தவாறி ருந்தேன். அவன் விடுமுறை நாட் களில் வாடகைக் கார் ஓட்டுகிறான். நான் செங்கல் சுமக்க, புன்னைக்

காய் அடித்துப் பொறுக்க, வாசறுமிண்டான் பயிரின் அடிக்கட்டைத் தாள்களைப் பொறுக்கிச் சுமக்க, சூடடிக்கப் போனேன்.

விதி என்பது வலியது. ஆனால் ஆள்வினை உடையவன் விதியையும் வெற்றிகொண்டுவிடுவான். கண்ணதாசனின் கவிதை வரி ஒன்றும் ஓடியது மனதில்.

'விதி எனும் ஒன்றை நீ
வெல்வதும் உண்டு காண் –
வெல்வதுன்
விதி என வேதன் விதித்தலால்'

என்று. எனினும் திருக்குறள் மேற்சென்றும் உரைக்கிறது.

'ஊழையும் உப்பக்கம் காண்பர்
உலைவின்றித்
தாழாது உஞற்று பவர்' என்று.

சோர்வும் மடியும் இன்றி முயற்சி செய்பவர், விதியைக் கூட பின்னுக்குத் தள்ளி முன்னடப்பார்கள்.

விபத்தும் நோயும் வெடிகுண்டும் போரும் மனிதரைத் தோற்கடித்து விடுகின்றன பல சமயங்களில். இன்றைய விஞ்ஞான வளர்ச்சியிலும் பன்னாட்டுச் சதியிலும் அவை தவிர்க்க முடியாதவை என்று ஆகிவிட்டன.

'நெருநல் உளன் ஒருவன் இன்
றில்லை என்னும்
பெருமையுடைத்து இவ்வுலகு'

என்ற குறள் பிறிதோர் பொருளிலும் மெய்ப்படுகிறது. எனினும் முயற்சி உடையவரை வாழ்க்கை தோற்கடித்து விடாது.



**எம்.டி.முத்துக்குமாரசாமி**

**த**ன்னுடல் பிறரின் துய்ப்பிற்கும் உயிர்ப்பெருக்கத்திற்கும் மட்டுமானதல்ல என்பதை நிறுவவே பெண்கள் பல நூற்றாண்டுகள் போராட வேண்டியிருந்தது. பெண்ணடிமைத்தனத்தின் அடிப்படைகள் பொருளாதாரமும் ஆண் மையப் பண்பாடும் என்பது இன்னும் பரவலாக அறியப்படாமலிருப்பது துரதிருஷ்டவசமானது!



பிப்ரவரி 12ம் நாள், கோவையின் குமரகுரு தொழில்நுட்பக் கல்லூரியின் மூன்று நாட்கள் 'யுகம்' சந்திப்பின் துவக்க விழாவில், நானும் கார்ட்டூனிஸ்ட் மதனும் மேடையில் இருந்தபோது, கேள்வி நேரத்தின் போது என்னிடம் ஒரு கேள்வி கேட்டார் ஒரு மாணவர், "எங்களுக்காக ஒரு சொற்றொடர் சொல்லுங்கள்" என்று. நான் சொன்னேன், "உங்களை, உங்களைத் தவிர, வேறெவராலும் தோற்கடிக்க இயலாது" என்று.

**(கற்கலாம்...)**

# கைம்மண் அளவு...!

முப்படையிலும் எமக்கு நண்பர் உண்டு. அவர்கள் முப்படைத் தளபதிகளாக இருத்தல் வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. நண்பர்களை வாசகர் என்றழைக்கும் இறுமாப்பு இல்லை எனக்கு. முப்படைகளிலும் நண்பர்களை வைத்திருப்பவன் தாகத்துடன் இருக்க மாட்டான்.

தாகம் தீர்க்கும் நண்பர்களை விடவும் எனக்கு நாலாவித உதவிகள் செய்யும் நண்பர் ஒருவர் உண்டு. விருதுநகர் பக்கம் ஆவல்சூரன்பட்டி அவர் ஊர். இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை தொலைபேசியில் அழைப்பார். "சார்! இன்று கேன்டீன் வர்றீங்களா?" என்பார். என்றால் அது தாகம் தீர்க்கும் பானம் ஏதும் வாங்க அல்ல. இரண்டு மாதங்களுக்குத் தேவையான துவைக்கிற சோப்பு, குளிக்கிற சோப்பு, பாத்திரம் தேய்க்கிற சோப்பு, தேயிலைத்தூள், காபித்தூள், பற்பசை, கொசு துரத்தி, ஊதுபத்தி, பிஸ்கோத்துகள் முதலாய பொருட்கள் வாங்க. நான் பட்டியல் கொடுப்பேன்,

**நாஞ்சில் நாடன்**

ஓவியம்: மருது





அவர் கணக்கில் வாங்கி வந்து பணம் பெற்றுக் கொள்வார். ஆயிரம் பணத்துக்கு பொருட்கள் வாங்கினால், நானூறு பணம் ஆதாயம் இருக்கும்.

'இது தவறில்லையா' எனக் கேட்பீர்கள்! தவறுதான், ஆனால் யோக்கியனாக வாழ ஒரு வழி சொல்லுங்கள் ஐயா, இந்தியத் திருநாட்டில்! அயோக்கியர்கள் பல்லக்குப் பயணத்திலும், யோக்கியர்கள் பாத பலத்திலும் போவதை எவரால் சீர்திருத்த இயலும்? காலை ஏழு மணிக்கு வீட்டை விட்டுப் புறப்பட்டு, இரண்டு பேருந்துகள் மாறி, கேன்டீன் வாசலை அடைய வேண்டும்; திரும்புகாலில் ரயில் நிலையத்துக்கு எதிரே இருக்கும் பேருந்து நிறுத்தத்தில் ஏற்றி அனுப்புவார்.

நானிருக்கும் பகுதிக்கு, காந்திபுரத்தில் புறப்பட்டு, ரயில் நிலையம், அரசு மருத்துவமனை, நகர்மன்றம், வைசியாள் வீதி, செட்டி வீதி, செல்வபுரம், தெலுங்கு பாளையம் பிரிவு, கங்கையிற் புனிதமான – இன்று பாழ்பட்டுக் கிடக்கும் நொய்யல் நதி தாண்டி பேரூர் எனும் சிவத்தலம், செட்டி பாளையம், ஆறுமுகக் கவுண்டனூர், ராமர் செட்டிபாளையம், சுண்டக்காமுத்தூர் வழியாகச் செல்லும் பேருந்து. பயண நேரம், பயணியின் முற்பிறவிப் பயன் போல 45 நிமிடம் முதல் 75 நிமிடம் வரை. பயணச்சீட்டு 17 பணம் அல்லது 12 பணம் அல்லது 9 பணம். ஏன் அப்படி என்பீர்கள்! பேருந்துகளின் ஓட்டை உடைசல் தரம் தேர்ந்து பயணக் கட்டணம் நிர்ணயம் செய்வார் போலும்!

ரயில் நிலையத்திலிருந்து பேருந்து பிடித்தேன். காலை மணி பத்தே கால் இருக்கும். நகர்மன்ற நிறுத்தம் தாண்டி, வைசியாள் வீதி முதல் நிறுத்தத்தில் ஒரு பள்ளி மாணவன் ஏறி, காலியாகக் கிடந்த எனது பக்கத்து இருக்கையில் அமர்ந்தான். வைசியாள் வீதியைக் கடக்கும்போது எனது பயணத்திசையின் வலதுகைப் பக்கம், இரண்டு பன்னீர் மரங்கள் வாசலில் காவல் தெய்வங்களாக நிற்கும் பழங்கால வீடொன்று உண்டு. தரிசனப்படும் அந்த வீடு 'சிவக்கவிமணி சி.கே.எஸ்' என்றழைக்கப்படும் சி.கே.சுப்ரமணிய முதலியார் வாழ்ந்த வீடு. இன்று சந்ததியினர் வாழ்கிறார்கள். அவர் பெரியபுராணத்துக்கு உரை எழுதிய பெரியார், சைவப் பேரறிஞர். கோயம்புத்தூர் சிறையில் செக்கிழுத்து வாடி, நோயுற்று குற்றுயிராய்ச் சிறை மீண்ட கப்பலோட்டிய தமிழன் – ஒட்டப்பிடாரம் வ.உ.சிதம்பரம் பிள்ளையை அழைத்து வந்து பண்டுவம் பார்த்து அனுப்பி வைத்

தவர். எனக்கு மாதத்தில் இருபது நாட்கள் சி.கே.எஸ். முதலியாரை நினைக்கும் பேற்றை அந்த வீடு வழங்கும். 'வ.உ.சி.யை நினைக்க மாட்டீர்களா?' என்பீர்கள்! எனது வாழ்விடமே வ.உ.சி. நகர்தான்.

எனது பேருந்து சிவக்கவிமணி வீட்டைக் கடந்ததும், பக்கத்தில் வந்தமர்ந்த பையனைக் கவனித்தேன். அரை மூட்டை சிமென்ட் அளவிலான பள்ளிப் பையை மடியில் வைத்திருந்தான். நைந்து, அழுக்கேறி, தையல் பிரிந்து, நிறம் தீர்மானிக்க முடியாமல் சீருடை அணிந்திருந்தான். காலையில் குளித்து, எண்ணெய் தடவி, படிய வாரி, நெற்றியில் சந்தனம் தீற்றி... 'கறுப்பானாலும் களையான முகம்' என்று எழுதுவதில் எனக்கு விரோதம் உண்டு. கறுப்புக்கு இறக்கம் தந்து பேசுவது தமிழனுக்கும் வழக்கமாகி விட்டது.

நான் உன்னிப்பதை உணர்ந்து அவன் திரும்பிப் பார்த்தான். சிரித்தேன், சிரித்தான்.

"எங்கப்பா பள்ளி?" என்றேன்.

''உக்கடம் மாநகராட்சிப் பள்ளி'' என்றான்.

அவன் செல்வபுரம், தெலுங்கு பாளையம் பிரிவு அல்லது பேரூர் பள்ளிகளில் ஒன்றில் பயிலுபவனாக இருப்பான் என எண்ணியது பிழையாயிற்று.

''அப்ப எதுக்குப்பா எதிர்த்திசையிலே போறே?''

"லேட்டாயிடுச்சுங்க... கேட் மூடிட்டாங்க... வீட்டுக்குப் போறேன்!"

'இதென்ன வன்முறை' என்று தோன்றிற்று. வன்முறை என்பது பிரம்பெடுத்துப் புரட்டி எடுப்பது மட்டுமே அல்ல. ஒன்பதரைக்குப் பள்ளி இறுதி மணி. பத்து மணிக்கு வாசல் அடைத்து விடுவார்களாம். அவனைப் பார்த்துக் கேட்டேன்...

"ஏந்தம்பி? இந்த வருஷம் எத்தனாவது தரம் வீட்டுக்குப் போறே?"



**கல்வியை மறுப்பது பெரும் பாவம். அது இனம், மதம், வாழ்க்கைத் தரம் எனும் வரையறைகளுக்குள் நின்று வழங்கப் பெறும் நியாயம் அல்ல எப்போதும்.**

"மூணாவது முறைங்க..."

"கொஞ்சம் முன்னால புறப்படலாம் இல்லையா? பஸ் லேட்டானா கூட அரைமணி நேரமா லேட்டாகும்? எந்த ஊர்லேருந்து வாரப்பா?"

''ராமர் செட்டிப்பாளையம்ங்க...''

அது என் வழித்தடமும் கூட. ராமர் செட்டிப்பாளையத்தில் இருந்து உக்கடம் உத்தேசமாய் ஒன்பது கிலோ மீட்டர் இருக்கும். என்ன போக்குவரத்து நெரிசல் இருந்தாலும் முப்பது நிமிடங்களுக்கு மேல் ஆகாது.

"ஏந்தம்பி, S17, S14, S25, 9, 9A, 160னு எத்தனை பஸ் இருக்கு... அரை மணி நேரமாவா பஸ் கிடைக்கல?"

"பஸ் ஆக்சில் உடைஞ்சு போச்சுங்க..."

"வேற பஸ்லே ஏத்தி அனுப்புவாங்களே? ஆக்சில் மாத்தற வரைக்கும் அதே பஸ்லயா உக்காந்திருந்தே?"

பையனின் முகம் பார்த்தால் பக்குவப்பட்ட பொய்யனாகத் தெரியவில்லை. எனக்கோ மற்றெவருக்குமோ சொல்லக் கூடாத வேறு காரணம் இருக்கலாம். கோவைப் புதூரில் மூன்று, நான்கு தனியார் மெட்ரிகுலேஷன் பள்ளிகள் உண்டு. பேரூரில் உண்டு. தெலுங்குபாளையம் பிரிவில் உண்டு. செல்வபுரத்தில் உண்டு. ஒன்பது கிலோ மீட்டர் பேருந்துப் பயணம் செய்து உக்கடம் மாநகராட்சிப் பள்ளிக்கு வருகிறான் என்றால், அது ஊட்டி, கொடைக்கானல், ஏற்காடு கான்வென்ட் போல கல்வித்தரத்தின் உச்சப் பள்ளி என்பதால் அல்ல. அடிப்படைக் காரணம் சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

பெற்றோர் தொழிற்சாலைக் கூலிகளாக, கட்டுமானக் கூலிகளாக, தோட்டக்கூலிகளாக இருக்கலாம். சந்தையில் சில்லறைக் காய்கறி வியாபாரம் செய்பவராக இருக்கலாம். என்ன வளம் இல்லை இந்தத் திருநாட்டில்? ஏன் கையை ஏந்த வேண்டும் உயிர் வாழ? தாமதத்திற்கு அவசரமான காரணங்கள், தவிர்க்க முடியாத ஏதோ ஒரு நிகழ்வு இருக்கலாம். பேருந்தும் கூடப் பிரச்னையாகி விட்டிருக்கலாம்...

ஆயிரம் பேர் படிக்கும் பள்ளியில் தினமும் ஐம்பது பேர் தாமதமாக வர மாட்டார்களா? அவர்களை வீட்டுக்கு அனுப்புவது தான் படிப்பினை அல்லது தண்டனை என்று நிர்வாகம் நினைத்திருக்கலாம்... 'கால வரையறை, ஒழுங்குமுறை இன்றிப் பள்ளியை ஆடு, மாடு மேயும் மைதானமாக எந்நேரமும் திறந்துவிட முடியுமா' என்றும் தோன்றி இருக்கலாம்! எனக்கானால் பொருக்காடிப் போன எனது பழைய புண்ணை

ரத்தம் கசியப் பிய்த்து எறிவது போலிருந்தது.

தொழுவத்துச் சாணத்தை தோளிலும் முதுகிலும் மாட்டு மூத்திரம் சொட்ட உரக்குண்டுக்குச் சுமந்து, சாணி - மூத்திரம் என ஊறிக் கிடக்கும் எருமை மாடுகளை ஆற்றுக்குப் பத்தி, தண்ணீரில் கிடக்கப் போட்டு, சாணிப் பொருக்கு போக தேய்த்துக் குளிப்பாட்டி, நானும் குளித்து, வீட்டுக்கு வந்து, கைவசம் இருந்த ஒரேயொரு பள்ளி ஆடை அணிந்து, பழையது குடித்து, ஒன்றரைக் கிலோமீட்டர் தூரம் இருக்கும் பள்ளிக்கு ஓடி எத்துமுன் அங்கே தொழுகை முடிந்திருக்கும். இறைவனும் இளைப்பாறப் போயிருப்பார்.

2015 ஜனவரி மாதம் சென்னைப் புத்தகக் கண்காட்சியில், 'கவர்னரின் ஹெலிகாப்டர்' என்றொரு சிறுகதைத் தொகுப்பொன்று வாங்கினேன். திருவண்ணாமலை எஸ்.கே.பி.கருணா எழுதியது. அதில் 'கெட்ட குமாரன் கதை' என்றொரு சிறுகதை. அதன் தொடக்கம், 'எங்கள் பள்ளிக்குள் நுழைய மொத்தம் முப்பத்தேழு வழிகள் இருக்கின்றன' என்று இருக்கும். திருட்டுத்தனமாக நுழையத்தான். எங்கள் பள்ளிக்கோ காற்றுப் போல நுழையலாம் எங்கிருந்தும். என்றாலும் அசெம்பிளி முடிந்த பின், தலைமை




மாதங்களில் மார்ச் மாதத்தை ஐடியா மாதம் என்கிறார்கள். விதவித ஜாலி ஐடியாக்கள் இப்போதுதான் பிறக்குமாம். வினோதமாக தினங்கள் கொண்டாடும் ஐடியாவையும் சேர்த்துத்தான். இந்த வாரம் அப்படி என்ன அப்பாடக்கர் தினங்கள்? இதோ...

**மார்ச் 14**

## உருளைக்கிழங்கு சிப்ஸ் தினம்

“இந்த உருளைக்கிழங்கு வறுவல் வேகவே இல்ல. இன்னும் மெல்லிசா கட் பண்ணி செய்ங்க” - அயர்லாந்தைச் சேர்ந்த ஒரு ஹோட்டல் கஸ்டமர் இப்படி புகார் சொன்னபோது பிறந்ததுதான் உருளைக்கிழங்கு சிப்ஸாம். ஜார்ஜ் க்ரம் எனும் சமையல்காரர் இதில் டென்ஷன் ஆகி, மெல்லிசா ஒரு கோடு போல உருளைக்கிழங்கை



சீவிப் பொரித்த நாள் 1853 மார்ச் 14 என்கிறார்கள். இன்று, நண்பர்களோடு சேர்ந்து சிப்ஸ் (மட்டும்) சாப்பிட்டு கொண்டாடலாம்!

ஆசிரியரிடம் மூன்று பிரம்படி வாங்கி, வகுப்புக்கு வெளியே நிற்க வேண்டும். வெளியே கதவோரம் நின்றவாறே வகுப்பைக் கவனிக்கும்படி வகுப்பாசிரியர் பணிப்பார். பாடத்தில் கேள்வியும் கேட்பார்கள். அந்தப் பக்கமாய் உலாத்தும் தலைமை ஆசிரியர், “சரிடா! போய் வகுப்பில் ஒக்காரு'' என்பார். வாரத்தில் இரண்டு நாட்களாவது எனக்கு நடக்கும் இது. ஆனால், ஒரு போதும் வீட்டுக்குத் திரும்பிப் போகச் சொன்னதில்லை. வருகைப் பதிவேட்டில் ஆப்சென்ட் மார்க் செய்ய மாட்டார்கள். ஒரு பீரியட் கடந்து பள்ளிக்குப் போனால் அரை நாள் மார்க் செய்வார்கள்.

பையனிடம் கேட்டேன்... “ஏம்பா! அரைநாள் அட்டெண்டன்ஸ் போட்டு வகுப்புக்கு அனுப்ப மாட்டார்களா?”

“அப்படி எல்லாம் செய்ய மாட்டாங்க சார்'' என்றான்.

இதென்ன கொடுமை? ஒரு வேளை அஃதோர் அதிகப்படி வேலைப்பளு என்று நினைப்பார்களோ! அல்லது சட்டம் அவ்வாறு இருக்கலாம்! ஏன் சட்டமும் நியாயமும் முரண்படுகின்றன பல சந்தர்ப்பங்களில்?

ஒருவேளை மதிய உணவை அவன் பள்ளியில் சத்துணவு வாங்கித் தின்பவனாக இருக்கலாம். வீட்டுக்குப் போய் பட்டினிதானே கிடப்பான்? சரி, தாமதமாக வருவது தவறேதான். வருகைக்குப் பதிவு வேண்டாம். அவனை வகுப்பில் அமர்ந்து பாடத்தைக் கவனிக்க விடலாம் இல்லையா?

“ஏம்பா! கேட் சாத்தின பிறகு, ஆசிரியர்கள் தாமதமா வந்தா வீட்டுக்கு அனுப்பி விடுவார்களா?”

''அதெப்படீங்க?'' என்று சிரித்தான்.

அவர்களுக்கு பர்மிஷன் பெற்றுக்கொள்ள ஆயிரம் காரணங்கள் இருக்கும். ஒன்பதாவது படிக்கும் ஏழை மாணவனுக்கு அந்தச் சலுகையை வழங்க இயலுமா என்ன?

“வீட்டுக்குப் போயி என்ன பண்ணுவே?”

''சும்மாதான் இருப்பேன்... அக்கா பெண்கள் பள்ளியிலே பிளஸ் 2. நாலரை மணிக்கு வந்து டீ வச்சுத் தருவா...”

கல்வியை மறுப்பது பெரும் பாவம். அது இனம், மதம், வாழ்க்கைத் தரம் எனும் வரையறைகளுக்குள் நின்று வழங்கப் பெறும் நியாயம் அல்ல எப்போதும்.

எனது ஆச்சரியம், அவன் பள்ளியைச் சூழ்ந்திருக்கும் எந்தத் தியேட்டருக்கும் சினிமாவுக்குப் போகவில்லை என்பது. சினிமா என்ன விலையில்லாமலா காட்டுகிறார்கள்?

மாதா, பிதா, குரு, தெய்வம் என்பது நமது மரபு. அம்மைக்கும்,

அப்பனுக்கும் அடுத்த இடம் ஆசிரியனுக்கு.

‘தெளிவு குருவின் திருமேனி காண்டல்

தெளிவு குருவின் திருநாமம் செப்பல்

தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்

தெளிவு குரு உருச் சிந்தித்தல் தானே’

என்பது திருமந்திரம். ஆனால், குருக்கள்மார் தெளிவாகத் தாமதமாக வரும் ஏழை மாணாக்கருக்கு வாசல் சாத்துகிறார்கள்.

நமது கல்வி அதிகாரிகள், விருந்து உபசாரத்துக்காக முன்னறிவிப்புக் கொடுக்காமல், அரசாங்க வாகனம் பயன்படுத்தாமல், மக்களோடு மக்களாக நடந்தோ, பேருந்திலோ போய் இறங்கி, மாநகராட்சி, நகராட்சி, அரசுப் பள்ளி வாசல்களில் நின்று இதனைக் கவனிக்க வேண்டும். தினமும் எத்தனை பேர் வீட்டுக்கு அனுப்பப்படுகிறார்கள் என்றும், அவர்கள் தாமதமாகப் பள்ளிக்கு வரும் காரணம் பற்றியும் விசாரித்துத் தெரிந்துகொள்ள வேண்டும். அவர்களே எத்தனை மணிக்கு அலுவலகம் வருகிறார்கள் என்பதை அம்மையப்பனே அறிவார்!

தனியார் மெட்ரிகுலேஷன் பள்ளி மாணவர் பற்றி இங்கு பேசுவது பொருளற்றது. அவர்கள் பள்ளி வாகனங்களில், வேன்களில், ஆட்டோக்களில், பெற்றோர் வாகனங்களில் என நேரத்தில் வந்து விடுவார்கள். நகரப் பேருந்தை நம்பி இருக்கும் எளிய இளைய தலைமுறை பற்றி நான் கவலை கொள்கிறேன். அவர்கள் இந்த சமூகத்தின் விதை நெல்.

தலைமை ஆசிரியர்களுக்கு அந்தக் கவலை ஏன்? அவர்களின் பிள்ளைகள் பெரும்பாலும் தனியார் மெட்ரிகுலேஷன் பள்ளிகளில்தானே பயில்கிறார்கள்?

**(கற்கலாம்...)**




## மார்ச் 15
# தவறுகளுக்காக வருந்தும் தினம்

ரோம் நாட்டின் பெரும் தலைவராக உயர்ந்தாலும் காலப்போக்கில் சர்வாதிகாரியாகவே மாறியவர் ஜூலியஸ் சீஸர். நகரமெங்கும் சீஸர் சிலை... நாணயங்களில் அவர் தலை... என சின்னச் சின்ன விஷயங்களில் கடுப்பாகி, அவர் ஆதரவாளர்களே அவரை வெட்டிக் கொன்ற தினம் இது. இந்த நாளில் நாமும் நம் முந்தைய தவறுகளுக்காக வருந்த வேண்டும்... திருந்த வேண்டும்!



# கைம்மண் அளவு

ஆங்கில இலக்கியப் பரப்பில் தவிர்க்க இயலாத ஆளுமை, ஜேம்ஸ் ஜாய்ஸ் என்று பரவலாக அறியப்பட்ட ஜேம்ஸ் அகஸ்டின் அலோஷியஸ் ஜாய்ஸ். நமது புதுமைப்பித்தன் இவரை, 'ஆங் கில இலக்கியத்தின் கடைசிக் கொழுந்து' என்றார். அப்படி எவரையும் அறுதியிட்டுச் சொல்லவியலாது. அது, 'பாரதிக்குப் பின் தமிழன்னை கருத்தடை செய்து கொண்டாள்' என்று சொல்வதற்கு ஒப்பானதாம்.

1882ல் பிறந்து 1941ல் மறைந்த ஜேம்ஸ் ஜாய்ஸ் முதலில் எழுதி வெளியிட்டது 'சேம்பர் மியூசிக்' எனும் கவிதைத் தொகுப்பு. அவரது முதல் சிறுகதைத் தொகுப்பு 22 பதிப் பாளர்களால் நிராகரிக்கப்பட்டு, 1912ல் 'டப்ளினர்ஸ்' எனும் தலைப்பில் அச்சானது. டப்ளினர்ஸ் என்றால் டப்ளின் நகரைச் சார்ந்தவர்கள் என்று பொருள். டப்ளின் நகரம் அயர்லாந்தில் இருப்பது. அயர்லாந்தோ யு.கே.யினுள் அடக்கம். டப்ளினர்ஸ் அச்சானாலும், அந்தச் சிறுகதைத் தொகுப்பு அவதூறானது, மரியாதை குறைந்தது, மதிப்புக்

**நாஞ்சில் நாடன்**

ஓவியம்: **மருது**



கேடானது (Libellous, Indecent and Blasphemous) என்று கருதிய அதன் பதிப்பாளர், அச்சிடப்பட்ட ஆயிரம் பிரதிகளையும் அழித்தார். டப்ளின் நகரைச் சார்ந்த செல்வந்தர் ஒருவர், ஆயிரம் படிகளையும் தாமே விலைக்கு வாங்கி, நகரத்துச் சந்தியில் போட்டுக் கொளுத்தினார் என்றும் பாடபேதம் உண்டு. நற்பேற்றின் காரணமாய் ஒரேயொரு படி மட்டும் தப்பிப் பிழைத்தது. பிறகு 1914ல் 'டப்ளினர்ஸ்' மீண்டும் பதிப்பித்து வெளியிடப்பட்டது.

ஜேம்ஸ் ஜாய்ஸ் 1916ல், 'A Portrait of the Artist as a Young Man' என்ற நாவலையும், 1918ல் 'Exiles' எனும் நாடகத்தையும் வெளியிட்டார்.

1922ல் ஜேம்ஸ் ஜாய்ஸின் 'யுலிசெஸ்' எனும் மகத்தான நாவல் வெளியாயிற்று. அத்துடன் ஜாய்ஸின் நெருக்கடி தீரவில்லை. 1922 அக்டோபரில் அமெரிக்காவுக்கு அனுப்பப்பட்ட 'யுலிசெஸ்' நாவலின் 500 படிகள் நியூயார்க் தபால் இலாகாவினால் பறிமுதல் செய்யப்பட்டது. 1923 ஜனவரியில் அனுப்பப்பட்ட 500 படிகள், ஃபாக்ஸ்டோன் சுங்க இலாகாவினால் பறிமுதல் செய்யப்பட்டது.

'யுலிசெஸ்' நாவலுக்கு எதிரான வழக்கை விசாரித்த அமெரிக்கத் தலைமை நீதிமன்ற நீதிபதி ஜான் எம்.ஊல்சே, 1933ல் வழக்கைத் தள்ளுபடி செய்தார். அந்த நீதிபதியின் தீர்ப்பு, 'யுலிசெஸ்' நாவல் பற்றிய அற்புதமானதோர் இலக்கியத் திறனாய்வு. அந்தத் தீர்ப்பையே முன்னுரையாகக் கொண்ட பதிப்பின் பிரதியொன்றினை, பம்பாயில் நான் வாழ்ந்த காலத்தில், நடைபாதை புத்தகக் கடையில் பத்து ரூபாய்க்கு வாங்கினேன். 1984ல் நவி மும்பையில் நெரூலில் இருந்த என் வீட்டுக்கு வந்த கோணங்கி, அந்தப் புத்தகத்தைக்

## கவிதைக்கு ஒரு தினம்

**மார்ச் 21ம் தேதி உலக கவிதை தினமாகக் கொண்டாடப்படுகிறது. இதைக் கொண்டாட பழநிபாரதியின் 'உன் மீதமர்ந்த பறவை' கவிதைத் தொகுப்பிலிருந்து சில கவிதைகள் இந்த இதழெங்கும்...**

உன்னைப் பார்த்த
இரவை விட
அழகானது
உனக்குள் பார்த்த இரவு



> **என் மொழி, என் தத்துவம், என் கொள்கை, என் மதம், என் இசை, என் மரபு, என் உணவு தாண்டிய மற்றெல்லாம் எனக்குப் பகை என்றால் அதை என்னென்பது?**



கேட்டு வாங்கிப் போனார்.

பம்பாயில் நான் காலூன்றக் காரணமாக இருந்த அந்தேரி எஸ்.நடராஜ ஐயர், 1985ம் ஆண்டு கனடா சென்றபோது பெங்குயின் பதிப்பு ஒன்றை வாங்கி எனக்குப் பரிசளித்தார். அது இன்றும் என் சேமிப்பில் உண்டு. 'டப்ளினர்ஸ்' என்னிடம் இருப்பது 1968ம் ஆண்டின் ஜோனதன் கேப் பதிப்பு.

ஜேம்ஸ் ஜாய்ஸின் படைப்புகள், வழிமறித்த பெரும் பாறைகளையும் சட்ட நெருக்கடிகளையும் கசப்பான முரண்களையும் தப்பான புரிதல்களையும் கடந்து நீடு வாழ்கின்றன. டி.எச்.லாரன்ஸின் 'Sons and Lovers' நாவலும் ஆபாசம் எனும் பெயரில் கடும் எதிர்ப்பை எதிர்கொண்டது. இவை போல் எத்தனையோ சொல்லலாம்.

எதற்கு இத்தனை எழுதினேன் எனில், ஆபாசம் என்றும் மத விரோதம் என்றும் கருதப்பட்ட படைப்புகள் பலவும் காலம் தாண்டி பாராட்டப்படுகின்றன. சொல்லாமலேயே ஒன்று விளங்கும்... காலம் தாண்டி வாழ்வதற்குப் படைப்பும் மகத்தானதாக இருக்க வேண்டும். அதை வாசகர்களே தீர்மானிக்கிறார்கள்; அரசியல் செல்வாக்கும் முகவர்களும் அல்ல.

அந்தக் காலத்தில் ஒரு புத்தகம் எழுதி அதை அரங்கேற்றுவது என்பது சாதாரண காரியம் அல்ல. சொந்தக் காசு போட்டு புத்தகம் அச்சடித்து, சினிமா நடிகரைக் கொண்டு வெளியிட்டு விட முடியாது. 'விநோத ரசமஞ்சரி' எனும் நூலொன்று, அட்டாவதானம் வீராசாமி செட்டியார் எழுதியது. அதில், 'கம்பர் ராமாயணம் பாடி அரங்கேற்றியது' என்று எண்பது பக்கக் கட்டுரையொன்று உண்டு. ஆறு காண்டங்களில், 118 படலங்களில், 10 ஆயிரத்து 368 பாடல்களில் கம்பர் எழுதிய ராமாவதாரம் அரங்கேற அவர் பட்ட பாடு, தாளம் படாது; தறியும் படாது.

என்றாலும் அரங்கேறியது, காலம் கடந்து வாழ்கிறது; வாழும்.

காலந்தோறும் கலைஞன் எதிர்கொள்ளும் சவால் இது!

இந்தியாவின் ஒப்பற்ற, உலகப் புகழ்பெற்ற ஓவியர் எம்.எஃப். ஹுசைன் தீட்டிய பாரத மாதா சித்திரத்துக்காகவும், கடவுளர் சித்திரங்களுக்காகவும் வெகுவாக இந்தியாவில் தூற்றப்பட்டு வெளிநாட்டில் தஞ்சமடைந்தார். அவருக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கினை உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்த தீர்ப்பில், 'இந்தியத் திருநாட்டின் மாட்சிமை பெற்ற குடிமகன்' என்று ஹுசைனைப் பாராட்டியது. 'Midnight Children' எழுதிய சல்மான் ருஷ்டி பின்னர் 'Satanic Verses' எழுதிய போது அடைந்த வசையும் இங்கு நினைவு கூரத்தக்கது. மிக அண்மையில் கவிஞர் ஹெச்.ஜி.ரசூல் எழுதிய கவிதை ஒன்றுக்காக அவருக்கு ஏற்படுத்தப்பட்ட நெருக்கடிகளையும் நாமறிவோம். இவற்றிற்கெல்லாம் மதம், இனம் என்று ஓரம் சாய்ந்து எடுக்கப்பட்ட முடிவுகள் காரணம். படைப்பின் குரலை ஒடுக்க நடந்த முயற்சிகள். அது ஒரு வகை எதிர்ப்பு.

ஆனால் ஒரு சார்புடைய எழுத்தாளர்களே, மறுசார்புடைய எழுத்துக்களை முடக்க நினைத்த காரியங்களும் நடந்தன நம்மிடையே. வேறொரு சந்தர்ப்பத்தில் இந்தப் போக்கை, 'தன் படை வெட்டிச் சாதல்' என்று எழுதினேன். முன்பொரு காலத்தில் 'பிள்ளை கெடுத்தாள் விளை' என்றொரு சிறுகதை எழுதினார், தமிழின் உன்னதப் படைப்பாளிகளில் ஒருவரான சுந்தர ராமசாமி. அந்தக் கதைக்கு எதிராகத் தமிழ்ப் படைப்பாளிகளில் ஒரு சாரார் கொதித்து எழுந்து வீசிய அவதூறுகள் அனந்தம்.

இந்திப் படம் ஒன்றில் அமிதாப் பச்சன் சொந்தக்குரலில் பாடிய பாடல் ஒன்றுண்டு. 'மேரே ஆங்கண் மே தேரா கியா காம் ஹை' என்று. பாடல் வரியின் பொருள், 'எனது முற்றத்தில் உனக்கென்ன வேலை' என்பது. அவர்கள் கேட்ட கேள்வியும் அதுதான்.

எனது சொந்த அனுபவம் ஒன்றுண்டு. சக எழுத்தாளர் சி.ஆர். ரவீந்திரன் கொணர்ந்த 'ஆல்' எனும் சிற்றிதழில் ஆகஸ்ட் 1992ல் 'ஊதுபத்தி' என்றொரு சிறுகதை எழுதினேன். கோவை விஜயா பதிப்பகம் வெளியிட்ட 'பேய்க் கொட்டு' என்ற என் சிறுகதைத் தொகுப்பில் அக்கதை இடம் பெற்றது. அந்தத் தொகுப்பை, மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகம் பாடமாக்கியது. 'ஊதுபத்தி' கதையைக் காரணம் காட்டி, அந்தத் தொகுப்பைப் பாடமாக்கக் கூடாது என்று ஆளுநர், முதலமைச்சர், கல்வியமைச்சர்,

கல்வித்துறை செயலாளர், பல்கலைக்கழகத் துணைவேந்தர் என்று கடிதங்கள் போயின. ஒரு சார்புடைய எழுத்தாளர்கள் கண்டனக் கூட்டம் நடத்தினர். சிற்றிதழ் ஒன்று, ‘தனது வெள்ளாள சாதி வெறியை நாஞ்சில் நாடன் மீண்டும் நிறுவுகிறார்’ என்று கட்டுரை வெளியிட்டது. அந்தக் காலத்தில், தொண்டர் குழாம் சூழ வலம் வந்து தமிழகமெங்கும் இலக்கியச் சொற்பொழிவாற்றிய பின் நவீனத்துவ விமர்சகர் அதையே வழிமொழிந்தார், வெகு உற்சாகமாக; கதையை வாசிக்காமலேயே!

ஒரு எழுத்தாளனின் கருத்துரிமை பேணப்பட்ட விதம் இது. புதுமைப்பித்தன் எனும் முன்னோடி சிறுகதை எழுத்தாளனின் கதையொன்றைப் பாடமாக வைக்கக்கூடாது என்று சமகால எழுத்தாளர்களே சமீபத்தில் வழக்குத் தொடுத்தார்கள்.

தமிழ் இதழில் எழுதப்பட்ட கட்டுரைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, அது அச்சிட்ட தாள்களில் நரகலைத் துடைத்து அந்த இதழுக்கே அனுப்பிய மாற்று அணி எழுத்தாளர்கள் இருந்தார்கள். ஐயம் இருந்தால், அந்த இதழுக்கு ஆசிரியராக இருந்த வாஸந்தியைக் கேட்டுப் பார்க்கலாம்.

சென்ற நாடாளுமன்றப் பொதுத் தேர்தலின்போது, திறமையான இளம் படைப்பாளி

## கவிதைக்கு ஒரு தினம்

மரம்
வானம்
கூடு
இரை
எதுவும் ஒரு பொருட்டில்லை
அதைவிடவும் முக்கியம்
தனிமையின் சுதந்திரமென
பறந்துகொண்டிருக்கிறது
ஒரு பறவை
அதன்
ஒரு சிறகு நீ
ஒரு சிறகு நான்

ஜோ.டி.குரூஸ் பாரதீய ஜனதா கட்சியை ஆதரித்தார். ‘ஆழி சூழ் உலகு’ எனும் அற்புதமான நாவலைப் படைத்து அளித்தவர். அவரது ‘கொற்கை’ நாவலுக்கு மத்திய அரசின் மதிப்புறு சாகித்ய அகாதமி விருதும் வழங்கப் பெற்றது. அவர் தொல்குடிப் பரதவர். பாரம்பரிய கத்தோலிக்கக் கிறிஸ்தவர். தனது மக்கள் அறுநூறுக்கும் மேற்பட்டவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கொல்லப்பட்டதைக் காலங்காலமாக கவனித்து வருபவர். கையாலாகாத அரசுகளின் கள்ள மௌனங்களைக்

கண்டு வருந்தி நின்றவர். கன்னியாகுமரி மாவட்டத் தொகுதிகளின் சீரமைப்பின்போது மீனவர்களுக்கு எதிரான அநீதியை அறிந்தவர். அவரது அரசியல் நிலைப்பாட்டுக்கு ஏதேனும் ஒன்று காரணமாக இருக்கலாம். ஆனால், அது 'கர்த்தராலேயே மன்னிக்கக்கூடாத பெரும் பாவம்' என்றனர் சக படைப்பாளிகள். அவருக்கு வழங்கப்பட்ட சாகித்ய அகாதமி விருதினைப் பறிமுதல் செய்ய வேண்டும் என்றார்கள். அவருக்கு எதிராக அறிக்கை தயாரித்து, கையெழுத்து கேட்டார்கள். கையெழுத்துப் போடாதவர் எல்லாம் 'இந்துத்துவா' என்றனர். எனக்கு அதில் கசப்பான அனுபவம் உண்டு.

நம் மொழிக்குள் அரசியல் கட்சிகளின் உறுப்பினராக உள்ள எழுத்தாளர்கள் உண்டு; ஆதரிக்கும் படைப்பாளிகள் உண்டு. அது அந்தப் படைப்பாளியின் கருத்துரிமை; செயல்பாட்டு உரிமை. அவர் நிலைப்பாட்டிற்கு அவருக்கான காரணங்கள் இருக்கும். அதற்காக எவரும் கூடி நின்று, அந்த எழுத்தாளருக்கு எதிராக அறிக்கை வெளியிடவில்லை; அவதூறு பேசவில்லை. பிறகேன் ஒரு சில எழுத்தாளர்களுக்கு எதிராக மட்டும் சக எழுத்தாளர்களின் தனித்தேர்வு செய்த எதிர்ப்பு? கருத்துச் சுதந்திரம், செயல்பாட்டுச் சுதந்திரம், வெளிப்பாட்டுச் சுதந்திரம் என்பது எல்லோருக்கும் சமமானதோ, பொதுவானதோ இல்லையா?

ஈழத்து இனப் படுகொலைக்கு கண் மூடி, வாய் பொத்தி நின்ற அரசியல் கட்சிகளை ஆதரிக்கும் எழுத்தாளர்கள் இல்லையா நம்மிடம்? தமது கட்சித் தலைமைகளை அவர்களால் வெளிப்படையாக விமர்சிக்க முடிந்ததா? அது அவர்களுடைய கருத்துச் சுதந்திரம்.

பெருமாள் முருகனுக்கு 'மாதொரு பாகன்' பற்றிய எதிர்ப்பு வந்தபோது, ஏழு பருவ இதழ்கள், செய்தி இதழ்களில் அவருக்கு ஆதரவான கருத்தைப் பதிவு செய்தேன். ஒரு எழுத்தாளனாக அது என் தார்மீகக் கடமை. என்னிடம் ஆதரவு கேட்டவர்கள் எல்லோரிடமும் நான் திருப்பிக் கேட்டேன்... 'கருத்துரிமை என்பது ஒரு சாராருக்கு மட்டும்தானா' என்று. இந்தக் கருணையை ஏன் சென்ற ஆண்டு ஜோ.டி.குரூஸின் தலைக்கு விலை வைத்தபோது காட்டவில்லை? உடனே கோத்ரா என்பார்கள்! கோத்ராவுக்கு ஜோ.டி.குரூஸ் பொறுப்பேற்க வேண்டும் என்றால், ஈழத்து இனப் படுகொலைக்கு வாளாவிருந்த அரசியல் கட்சிகளின் அரவணைப்பில் நிற்கும் எழுத்தாளர்கள் பொறுப்பேற்பார்களா?

பேச்சு சுதந்திரம், எழுத்துச்

சுதந்திரம், கருத்துச் சுதந்திரம் என்பது எந்த குறிப்பிட்ட சாரார்க்கும் தாத்தன், பாட்டன், அம்மாச்சன், அப்பன் சொத்தா? மற்றவர்க்கும் உரிமையானதில்லையா? உலகம் முழுக்க ஒரே மொழியா, ஒரே தத்துவமா, ஒரே கொள்கையா, ஒரே மதமா, ஒரே இசையா, ஒரே பண்பாடா, ஒரே உணவா? அவரவர் கருத்தைச் சொல்ல அவரவர்க்கு உரிமை இல்லையா? என் மொழி, என் தத்துவம், என் கொள்கை, என் மதம், என் இசை, என் மரபு, என் உணவு தாண்டிய மற்றெல்லாம் எனக்குப் பகை என்றால் அதை என்னென்பது?

தனது வாழ்நாள் முழுவதும் காசி விஸ்வநாதர் ஆலயத்தின் ஆஸ்தான வித்வானாக இருந்தார் உலகப் புகழ்வாய்ந்த ஷெனாய் வாத்திய மேதை உஸ்தாத் பிஸ்மில்லா கான். திருவரங்கம் ஆலயத்தின் ஆஸ்தான வித்வானாக இருந்தார் புகழ்பெற்ற நாதசுர இசைமேதை ஷேக் சின்ன மௌலானா. வாழ்நாள் எல்லாம் ராமனைப் பாடினார் தியாகைய்யர். ஹாஜி அலியைப் பாடினார் பாகிஸ்தானி சூஃபி இசை மேதை உஸ்தாத் ஃபத்தே அலி கான். அவர்கள் எல்லாம் எனக்கு இஸ்லாமியர்களோ, இந்துக்களோ அல்ல... இசை மரபின் கடவுளர்கள்.

ஈதொன்றும் எழுத்தாளன் கருத்தை எதிர்க்கிறவர்களுக்கு அர்த்தமாகாது. தன் குஞ்சு மட்டுமே பொன் குஞ்சு என்று தற்சாய்வுக் கருத்துச் சுதந்திரம் கோருகிறவர்களுக்கும் பொருளாகாது.




மார்ஃபஸ் என்ற பெயரில், இறகுகள் கொண்ட கிரேக்கக் கடவுள் உண்டு. அவர் கனவுகளின் கடவுள். அவரை நான் பிரார்த்திக்கிறேன் – எமது படைப்பாளிகளுக்குப் பாரபட்சம் இல்லாத கருத்துச் சுதந்திரமும், படைப்புரிமையும், நேர்மையான பொறுப்பும் அருளும் ஐயா!

மார்ஃபஸ் என்ற பெயர் சிலருக்கு வேறு ஏதோ ஒன்றை நினைவுபடுத்தலாம், யாமதற்குப் பொறுப்பில்லை பராபரமே!

**(கற்கலாம்...)**

# கைம்மண் அளவு

பேருந்து நிறுத்தங்களில் காத்திருப்பது எமக்கு சீலம். அரை நூற்றாண்டாக – அதாவது 18,250 நாட்களில் – தினமும் போகவும் வரவும் என ஒரு மணிக்கூறு காத்திருப்பில் கழிகிறது என்றால், இது வரைக்குமான காத்திருப்பில் 760 நாட்கள் கழிந்திருக்கும். எல்லாம் சராசரிக் கணக்குதான். நாமும் சராசரி மாந்தர் தானே! ஈராண்டுக்கும் மேலாக வாழ்நாளில் பேருந்துக் காத்திருப்பில் பாழாய்க் கழிந்ததே என ஏங்கலாம்.

யோசித்துப் பார்த்தால், எனக்கு அது இழப்பில்லை. ஒவ்வொரு பேருந்து நிறுத்தமும் எனக்குப் பல்கலைக் கழக வகுப்பறைதான். பாரத தேசம் முழுவதும் – சில மாநிலங்கள் தவிர – பல பேருந்து நிறுத்தங்களில், நிலையங்களில் காத்திருந்திருக்கிறேன். சில பேருந்து நிறுத்த அனுபவங்கள் சிறுகதைகளாகவும் ஆகியுள்ளன.

## நாஞ்சில் நாடன்

ஓவியம்: மருது


`நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்
அல்லது செய்தல் ஓம்புமின்'

தாழ்தள சொகுசுப் பேருந்து ஒன்றின் பின் கதவில், கைப்பிடிக் கம்பிக்கு இணைக்கோணத்தில் ஒட்டப்பட்டிருந்த வாசகம் 'படியில் பயணம் செய்' என்றிருப்பதை வாசித்துத் திடுக்கிட்டேன். உற்றுப் பார்த்ததில் புரிந்தது 'படியில் பயணம் செய்யாதீர்' எனும் வாசகத்தின் 'யாதீர்' எனும் பகுதியைத் துல்லியமாகத் துண்டித்துக் கிழித்திருந்தார்கள். யார் செய்திருக்கக் கூடும்? நான் பார்ப்பதைக் கவனித்த நடத்துனர் சிரித்தார் என்னைப் பார்த்து! உண்மையில் அவர் சிரித்தது என்னைப் பார்த்து அல்ல என்பதை உணர முடிந்தது.

இதை எழுதும் இன்றைய தினம், நட்ட நடு மதியம், பசியுடன், வைசியாள் வீதி பேருந்து நிறுத்தத்தில் நின்று கிடந்தேன். ஒரு கையில் கோவை விஜயா பதிப்பகப் பை. அதனுள் சில பருவ இதழ்கள். பழைய புத்தகக் கடையில் வாங்கிய அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பதிப்பான 'திருவாசகம்'. 1964ம் ஆண்டின் நீ.கந்தசாமிப் பிள்ளை பதிப்பு. கனமான புத்தகம். 'மா வடு வகிர் அன்ன கண்ணி பங்கா' எனும் உவமைக்கே நான் கொடுத்த பைசா வசூல். 'மா வடுவை வகிர்ந்தது போன்ற கண்களை உடைய உமையை உடலில் பாதியாகக் கொண்டவனே' என்பது பொருள். அதாவது உமையொரு பாகன், மாதொரு பாகன், மங்கை பாகன்... மா வடுவைப் பிளந்தது போன்ற கண்கள் என்பது சிறப்பு.

இன்னொரு கையில் தேங்காய், வெங்காயம், வாழைப்பழம், மலிந்து கிடந்த இரு கூறு தக்காளி... நான் காத்திருந்த நிறுத்

## அர்த்த சாஸ்திர அறிவுரைகள்

தலை சிறந்த வாழ்க்கை நெறிகளை எல்லாம் அந்தக் காலத்திலேயே நம் முன்னோர்கள் சொல்லிவிட்டார்கள். சாணக்கியர் தன் அர்த்த சாஸ்திரத்தில் தந்திருக்கும் அப்படிப்பட்ட சூட்சுமங்களை தொழிலதிபர் நல்லி குப்புசாமி செட்டியாரே தொகுத்திருக்கிறார். அவரின் 'அர்த்த சாஸ்திர அறிவுரைகள்' எனும் நூலிலிருந்து சில துளிகள் இந்த இதழெங்கும்...

செயலில் வெற்றி பெற்ற பிறகே அதை வெளியே சொல்ல வேண்டும்!





**சென்றடைந்த பின் சன்னலோரப் பயணியோ, நடத்துனரோ எழுப்பி விடுவார்கள். எழுப்பி விட்டிருக்க வேண்டும்; சட்டைப் பை பணமும் பத்திரமாக இருந்திருக்க வேண்டும்.**

தத்தில், உக்கடம் நிலையத்திலிருந்து வந்தவர்கள், பெரிய கடை வீதியிலிருந்து வந்தவர்கள், ஒப்பணக்காரத் தெருவிலிருந்து வந்தவர்கள், பள்ளி – கல்லூரி மாணவர் ஏராளம். வழக்கமாக இந்த நேரத்தில் எழுபருவப் பெண்டிரின் கூட்டம் அதிகமாக இருக்கும். வேனில் காலம் தொடங்கி விட்டது. பரபரப்பான வீதியின் தூசி, புகை, இரைச்சல்...

நிழலுக்காக உப்புக் கடையோரம் ஒதுங்கினேன். பேருந்து வரும் திசையைக் கவனிக்கும்போது, கண்ணில்பட்ட மாதர் கூட்டத்தில் ஒரு இளம்பெண் நின்றிருந்தாள். சாரி உடுத்தி இருந்தாள். பொட்டிருந்தது, பூவிருந்தது, வகிட்டுச் செந்தூரம் இருந்தது. மஞ்சள் சரடு இருந்தது. காலில் மெட்டியும் இருந்தது. இடது தோள்பக்கம் மார்க்கச்சையின் கறுப்பு நிறப் பட்டி தாராளமாக வெளியே தெரிந்தது. சில நிமிடங்களில் அவள் பக்கத்தில் பர்தா அணிந்த கல்லூரி மாணவி ஒருத்தி வந்து நின்றாள். அனிச்சையாகப் பக்கலில் திரும்பிப் பார்த்தாள். மிகுந்த சுதந்திரத்துடன், அந்த இளம்பெண்ணின் தோளில் கை வைத்து, இரு விரல்களால் கறுப்புப் பட்டையை உள்ளே திணித்தாள். சாரி அணிந்திருந்த பெண் சரிந்து பார்த்துச் சிரித்தாள்.

யாரோ இளக்காரமாய்ச் சிரிப்பது கேட்கிறது. 'உம்ம வயசென்ன வே? மரியாதை என்ன வே? கதம்பைத் தைலம் இறக்கப்பட்ட காலம் வந்தாச்சு? பொம்ப

ளைகளுக்கு பிராவைப் பாத்துக்கிட்டு நிக்கேரா?' என்று. பார்த்து நின்ற பருவம் பாய்ந்தோடிப் போய், இப்போது காட்சிப்படுகிற காலம்.

நான் வியந்து நின்றது, அந்தக் கல்லூரி மாணவியின் தன்னூக்கம் மிகுந்த செயல்பாடு. சொல்ல வருவது, இதுதான் இந்திய மரபு, பண்பாடு. இதை இனமோ, மதமோ, மொழியோ, பிரதேசமோ திரிக்க இயலாது. அவ்விரு பெண்களுக்கும் இடையே முன்பின் அறிமுகம் இல்லை, உறவில்லை, நட்பில்லை, ஒத்த இனமில்லை, மதமில்லை. எவர் வந்து இடைபுகுந்து அழித்துவிட இயலும் இந்த சகோதர உணர்வை?

'உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே

இடுக்கண் களைவதாம் நட்பு'

எனும் திருவள்ளுவரின் நட்பு இலக்கணமும் தாண்டிய மனித நேய நிலை இது! எந்த மதவாத சக்தியும் இந்த நேயத்தைப் பிளக்க முடியாது என்று எனக்குத் தோன்றியது.

சில ஆண்டுகள் முன்பு, எனது அலுவலகம் கோவை ராம் நகரில் காளிங்கராயன் வீதியில் இயங்கி வந்தது. ஒரு சனிக்கிழமை, வேலை முடிந்து வீட்டுக்குப் போக, பார்க் கேட் நிறுத்தத்தில் நின்றிருந்தேன். டிசம்பர் மாதம், தணுத்த காற்று வீசியது. சாயும் சூரியனின் கனகக் கதிர்கள் இறங்கி இருந்தன. சிங்காநல்லூர் தாண்டிப் போகும் எனது பேருந்தின் வருகை பார்த்திருந்தேன். அந்த வழியாகவே சூலூர், சோமனூர், சுல்தான்பேட்டை, செஞ்சேரிமலை, கரடி வாவி, சின்னக்குயிலி, பல்லடம், திருப்பூர் வண்டிகள் போகும்.

நிறுத்தத்தில் நாலைந்து பேர் மட்டுமே! என்னருகே எழுபது வயது மதிக்கத் தகுந்த பெரியவர் ஒருவர் நின்றிருந்தார். கொங்கு மண்டல பாரம்பரிய உடையான வெள்ளை வேட்டி, வெள்ளை அரைக்கைச் சட்டை, வெள்ளைத் தோள் துண்டு. அடுத்தும் ஒரு சொற்றொடர் எழுதலாம். பெருமாள் முருகன் அனுபவம் எமக்கெல்லாம் ஒரு எச்சரிக்கை.

திருப்பூர் பேருந்து ஒன்று வந்து நிற்பது போல நின்றது. பெரியவர் சற்று தள்ளாட்டத்துடன் ஏறப் போனார். பேருந்துக்குப்



பொறுமை இல்லை; வேகமெடுத்துப் போனது. அடுத்து வந்த திருப்பூர் வண்டியும் அவ்விதமே! கவலையாக இருந்தது எனக்கு, ஏற முயன்று படியில் தடுக்கி அடிபட்டு விழுந்து விடுவாரோ என! எப்போ வண்டி பிடித்து, எப்போ போய்ச் சேருவார் இவர்?

சட்டைப் பையில் இருந்து கை நிறைய 500 ரூபாய் தாள்களை எடுத்துக் காட்டினார். “ஒரு கட்டிங் அடிச்சிட்டு வாறீங்களா தம்பி? காசு தரேன்... என்னை பஸ்சிலே ஏத்தி விட்டுருங்க... திருப்பூர் பழைய பஸ் ஸ்டாண்ட்ல எறங்கி, தோட்டத்துப் பேரு சொன்னா எந்த ஆட்டோக்காரனும் கொண்டு விட்டிருவான்...”

மேலும் இரண்டு பேருந்துகள் பாய்ந்து போயின. நான் கை காட்டி, பேருந்து நின்றாலும் அவரால் ஏற இயலவில்லை. அல்லது நடத்துனருக்கு நிற்கப் பொறுதி இல்லை. இந்தக் குழப்பங்களில் நான் காத்து நின்ற ஒண்டிப்புதூர் வண்டி கடந்து போயிற்று. இனி, சற்று நேரம் பொறுத்தால் ஏதாகிலும் ஒன்று வரும். கண்மணி குணசேகரனின் மொழியைப் பயன்படுத்தினால், ‘இட்டுக்கினும் போ முடியாது; விட்டுக்கினும் போ முடியாது...’

அடர் மழை போல் இருள் இறங்கிக் கொண்டிருந்தது. பெரியவர் உடலிலும் பதற்றம் ஏறிக் கொண்டிருந்தது. நடத்துனர் தரப்பிலும் நியாயங்கள் இருக்கும். இவரை ஏற்றிக் கொண்டு போனால், இறங்க வேண்டிய நிறுத்தம் தாண்டியும் உறங்கலாம், வாந்தி எடுக்கலாம், பக்கத்து இருக்கைக்காரனிடம் அலம்பல் – சலம்பல் செய்யலாம்!

“எதுக்குங்க இப்பிடிக் குடிக்கணும்?” என்றேன்.

‘‘அளவாத்தான் குடிப்பேனுங்க... ஊத்தி வுட்டுட்டானுங்க...”

“தெரிஞ்சு எதுக்குங்க அப்பிடிச் செய்யணும்?”

“தெரிஞ்சவனுகதான் கவுத்து வுட்றுவானுங்க தம்பி!”

விபரமாகத்தான் பேசினார். ஊருக்கு எல்லாம் பலன் சொல்லும் பல்லி, தான் போய் விழும் கழுநீர்ப் பானையில். இவர்களால்தானே மரியாதைக்குரிய ரோல் மாடல் குடிகாரர்களுக்கும் சமூகத்தில் அவப்பெயர் என்று தோன்றியது.

எனக்கென அடுத்து வரும்

**அர்த்த சாஸ்திர அறிவுரைகள்**

பணி செய்யாதவன் குருடனுக்குச் சமம்!



வண்டியை விட்டுவிடக்கூடாது என்ற சங்கல்பத்தில் நின்றேன். வேறு எனக்கு மார்க்கமும் இல்லை. நாமென்ன உலகத்தை உய்விக்கும் திரு அவதாரமா? எத்தனை பேர் இல்லை நாட்டில் – திராவிட இனக்காவலர், இந்திய இனக்காவலர், மனிதகுலக் காவலர் என? முதலில் ஒரு ஆகக் காகக் கையைப் பிடித்திருந்த பெரியவர், பிறகு கரடிப் பிடியாகப் பிடித்திருந்தார். சஞ்சலமாக இருந்தது. திருப்பூர் வண்டி ஒன்று முக்குத் திரும்பியது. மண்டைக்குள் மெல்லிய மின்னதிர்வு.

கை காட்ட... பேருந்து நின்றது.

“வாங்கய்யா... ஏறுங்க...” என்றேன்.

“நீங்களும் திருப்பூர் வறீங்களா தம்பி?” என்றார்.

“அந்தப் பஞ்சாயத்தைப் பிறகு பார்க்கலாம்... நீங்க ஏறுங்க முதவில்” என்றேன்.

“பெரியவரைச் சற்று ஏந்தலாகக் கைபிடித்து ஏற்றிப் பேருந்தினுள் நடத்திப் போனேன். மூன்று பேர் அமரும் இருக்கையில் சன்னலோரத்தில் ஒருவரே இருந்தார். பெரியவரை நடுவில் அமர்த்தி நானும் உட்கார்ந்தேன். அவரது உடல்மொழியில் வெகுவான தன்னம்பிக்கை தெரிந்தது. தோரணையாக சட்டைப் பையில் கைவிட்டு ஐந்நூறு ரூபாய் தாளெடுத்து நீட்டி, “இரண்டு திருப்பூர்” என்றார். நான் மறுக்கவில்லை. ஒரு சிங்காநல்லூர் கேட்டால் நடத்துனர் முறைப்பார் என்பது முன்னனுபவம். சிறிய முணுமுணுப்புடன் இரண்டு பயணச் சீட்டுகளும் மீதிப் பணமும் கொடுத்தார். பெரியவர் அதைப் பத்திரப்படுத்திக்கொண்டார்.

பேருந்து ராமநாதபுரம் சிக்னல் தாண்டி ஓடிக் கொண்டிருந்தது. பெரியவர் நிலைத்த போதையில் உறங்க யத்தனித்து சன்னலோர இருக்கைத் தோழர் தோளில் சரிந்தார். இப்போது என் பங்குக்கான முறைப்பு வாங்கிக்கொண்டேன்.

சிங்காநல்லூர் கரும்புக்கடை நிறுத்தத்தில் ஆளேற்றிக்கொள்ள பேருந்து நின்றது. பனம்பழம் போல் தோளில் சுமந்து வந்த பெரியவர் தலையைச் சற்று நகர்த்தி விட்டு இறங்கி நடந்தேன்.

**அர்த்த சாஸ்திர அறிவுரைகள்**

**பணிவானவன் தன்னைச் சார்ந்தவர்களால் கூட அவமதிக்கப் படுகிறான்!**



எங்கள் அப்பா அடிக்கடி சொல்லும் வாசகம் ஒன்றுண்டு. 'செட்டியார் கப்பலுக்குச் செந்தூரரான் துணை' என்று. இனி திருப்பூர் சென்றடைந்த பின் சன்னலோரப் பயணியோ, நடத்துனரோ எழுப்பி விடுவார்கள். எழுப்பி விட்டிருக்க வேண்டும்; சட்டைப்பை பணமும் பத்திரமாக இருந்திருக்க வேண்டும்.

அண்மையில், வீட்டிலிருந்து இறங்கி நடந்து, பேருந்து நிறுத்தம் அடைந்து, வந்த வண்டியில் ஏறினேன், காந்திபுரத்துக்கு. வழக்கத்திற்கு எதிராக, உட்கார இடம் இல்லை. "திருவாதிரைக் கூட்டம், பேரூரில் இறங்கி விடுவார்கள்" என்றார் சக பயணி. சற்று உள்ளே நகர்ந்து, கூரையோடு பிணைத்திருந்த கம்பியைப் பற்றினேன். கையில் பிசுபிசுவென ஏதோ ஒட்டியது. கிரீசாக இருக்கும் என்று எண்ணி, கையை எடுத்துப் பார்த்தேன். கிரீஸ் இல்லை. சற்று மூக்குக்கு அருகில் கொண்டு போனேன்... ஆகா! நவ இந்தியாவின் யுவ மாந்தர் எவரோ சுவைத்து அலுத்த சூயிங்கம்.

நம்மூரில் பழவண்டிக்காரனோ, கீரைக்காரியோ சூயிங்கம் மெல்லுவதில்லை. எவரோ கல்லூரி மாணவர் அல்லது பணிக்குப் போகும் இளைஞர். எத்தனை அறிவுக்கூர்மை இருக்க வேண்டும், அங்கே கொண்டு போய் ஒட்டி வைக்க? இத்தனை அறிவாக இருக்கும் இளைஞர்களைக் கொண்ட தேசத்தை எவர் புறங்காண இயலும்?

### அர்த்த சாஸ்திர அறிவுரைகள்



ரகசியங்களைக் கீழ்த்தரமான மனிதர்களிடம் பகிர்ந்து கொள்ளாதீர்கள்!

புறநானூற்றுப் புலவர் ஒருவர், 'நரி வெரூஉத் தலையர்' எனும் பெயரில் உண்டு. 'நரி பார்த்தால் அச்சப்படும் தலையர்' என்று பொருள். சங்க இலக்கியங்கள் பத்துப்பாட்டு, எட்டுத்தொகையினுள் அவர் பெயரில் காணக் கிடைக்கும் பாடல்கள் குறுந்தொகையில் இரண்டு, புறநானூற்றில் இரண்டு என நான்கு மட்டுமே! அவற்றுள் 'பல்சான்றீரே பல்சான்றீரே' எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடலில் இரு வரிகள்:

**'நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்**
**அல்லது செய்தல் ஓம்புமின்'**

'நல்ல செயல்களைச் செய்ய இயலாது போனாலும், நல்லது அல்லாத செயல்களைச் செய்யாது ஒழுகுங்கள்' என்று பொருள் கொள்ளலாம்.

**(கற்போம்...)**

# கைம்மண் அளவு

காலியாகக் கிடக்கும் அனைத்துச் சுற்றுச்சுவர்களிலும் பன்னிற எழுத்துக்களில் வரைந்து வைக்கிறார்கள்; ‘வாழ்த்த வயதில்லை, எனவே வணங்குகிறோம்!’ பெரியய்யா, பெரியாயி, தாத்தன் என்று முதற்சொல்லை எழுதிக்கொள்கிறார்கள். அதைக்கூட அறியாமை என்று அறிந்துகொள்ள முடிகிறது. அவர்களில் பதின்பருவ வாரிசுகளைக் கூட ‘வாழ்த்த வயதில்லை, ஆகவே வணங்குகிறோம்’ என்கிறார்களே! இதையெல்லாம் தன்னடக்கமாக எடுத்துக்கொண்டு தாண்டியும் போய் விடலாம்தான். ஆனால் இவர்களுக்குத் தமிழ் மரபு தெரியவில்லையே என்று நமக்கு மூலக்கடுப்பு வருகிறது. வாழ்த்த வயதில்லாமல் வணங் கப் பெறும் தலைவர்களோ, சுவரொட்டி வண்ணங்களில் சிரிப்புக்களை செலவின்றி சிந்தி, தம்மைத் தமிழ் வளர்ப்பவராயும் பாவித்துக்கொள் கிறார்கள்.

நமக்கு எழும் கேள்வி, வாழ்த்த வயதில்லை எனும்போது, எதனால் ‘தமிழ் வாழ்க’ என்றும், ‘தலைவர் வாழ்க’ என்றும் விலா வலிக்க, விண் முட்டக் குரல் எழுப்புகிறார்கள்? தமிழை விடவும் தாம் வயதில் மூத்தவர் என்பதாலா?

**நாஞ்சில் நாடன்**

ஓவியம்: **மருது**


வாழ்க்கை
வாழ்க்கை
வாழ்க்கை
வாழ்க்கை
வாழ்க்கை

‘வாழ்க’ என்று சொல்வது வாழ்த்துவதுதான். ‘வாழ்க’ எனும் சொல், மரியாதையுடன் ஏவும் சொல். வியங்கோள் வினைமுற்று என்கிறது தமிழ் இலக்கணம். அதுவும் அர்த்தமாகவில்லை என்றால் எட்டாம் வகுப்புத் தமிழ் வகுப்பில் போய் அமரலாம்.

1882ல் பிறந்த மகாகவி சுப்ரமணிய பாரதி, மகாத்மா காந்திக்கு வயதில் மூத்தவரில்லை. பிறகு எங்ஙனம் ‘வாழ்க நீ எம்மான்’ என்று மகாத்மா காந்தி பஞ்சகம் பாடினார்,

***‘வாழ்க நீ! எம்மான், இந்த வையத்து நாட்டில் எல்லாம்***

***தாழ்வுற்று வறுமை மிஞ்சி விடுதலை, தவறிக் கெட்டுப்***

***பாழ்பட்டு நின்றதாம் ஓர் பாரத தேசம் தன்னை***

***வாழ்விக்க வந்த காந்தி மகாத்மா! நீ வாழ்க! வாழ்க!’*** - என்று?

ஒன்று தெரிகிறது, பாரத தேசம் ஏதோ இன்று புதியதாகப் பாழ்பட்டுப் போய் விடவில்லை. அன்றே பாழ்பட்டுத்தான் நின்றிருக்கிறது!

எட்டாம் நூற்றாண்டு மாணிக்க வாசகன், சிவபெருமானைவிட வயதில் மூத்தவரா? பிறகு ஏன் சகோதரர்களே,

‘நமச்சிவாய வாழ்க! நாதன் தாள் வாழ்க! இமைப் பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க!’ என்றெல்லாம் வாழ்த்துகிறார்.

எனவே அனைத்துக் கட்சித் தொண்டர்களே! உங்கள் தலைவர்களின் பிறந்த நாள், திருமண நாள் விழாக்களில் மனப்பூர்வமாக அவர்களை ‘வாழ்க’ என்றே வாழ்த்துங்கள். ஒன்றும் குறைந்து போகாது. அவர்கள் சீரும் சிறப்பும் பெற்றுத் தம் குடி பல்கிப் பெருகி பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு வாழ்ந்தால்தானே, தொண்டர்கள் தம்குடி பல்கிப் பெருகி வாழ முடியும்?

தொண்டர்கள் வாழ்ந்தால்தானே, ‘தொல்குடித்’ தமி



ழினம் வாழ இயலும்! வேண்டுமானால் சர்வ அங்கமும் நிலத்தில் தோய வணங்கவும் செய்யுங்கள்! எட்டு அங்கமும் நிலத்தில் கவிழ்ந்து கிடக்கும் உங்கள் முதுகின் மேல் உங்கள் தலைவர்களைக் கால் பதித்து நடந்து போகச் செய்யுங்கள். உங்கள் முதுகில் வியர்வை பொங்கி உப்புப் படிந்திருந்தால், அவர் செருப்புப் போட்டே நடக்கலாம்.

மண் சோறு உண்ணுங்கள்! தலை மயிர் மழித்துக்கொள்ளுங்கள்! 'வாழ்க' கோஷத்துடன் தீக்குளித்துச் சாகவும் செய்யலாம். பெண்டு பிள்ளைகளைக் கட்சி காப்பாற்றும்! பாண்டிய மன்னனின் ஆபத்துதவிகள் போல, தன் தலை வெட்டித் தாம்பாளத்தில் வைத்து நீட்டுங்கள்! ஆனால் 'வாழ்த்த வயதில்லை' என்று மட்டும் சுவரொட்டி அடிக்காதீர்கள்!

**கடவுளும் கைவிட்டு விட்டாரா இந்த தேசத்தை? பலரும் சொல்கிறார்கள், கடவுள் மீது நம்பிக்கை வைப்பதன்றி உமக்குப் போம் வழி என்ன? ஆனால் கடவுள் என்பவர் யாருடைய கடவுள்?**

'வாழ்க' எனும் சொல்லோ, 'வணக்கம்' எனும் சொல்லோ, கால் குப்பி மது, கோழி பிரியாணி, ஐந்நூறு பணம் என்பதற்கான கூப்பாட்டுச் சொல் அல்ல. குற்ற உணர்ச்சியுடனும், தாழ்வு மனப்பான்மையுடனும் கூலிக்கு வினையாற்றுவதல்ல. ஆழ்ந்த அன்புடன், உள்ளம் கசிந்து, நன்றி ததும்பி வழிந்து, மனப்பூர்வமாக வாழ்த்தினால் அதற்கு நற்பயன்கள் உண்டு.

பழங்காலத்தில் எப்படி பிறந்த நாள், பண்டிகை நாள் வாழ்த்துச் சொல்லிக் கொண்டார்கள் என்று தெரியவில்லை. சிற்றரசர்கள், பாளையப்பட்டுக்காரர்கள், ஜமீன்தார்கள் பிறந்த நாள் மங்கலம் கொண்டாடி இருக்கலாம். அவர்களை முதன்மைக் குடிமக்கள் அரும்பொருட்கள் அளித்து களி கண்டிருக்கலாம். என்ன விதமான பரிசுப் பொருட்கள் கொண்டு போய்க் கொடுத்திருப்பார்கள்? எத்தனை வயதோ அத்தனை பொற்காசுகள்? வைரத்தால் ஆன ஆரம்? சந்தனத்தாலான ஆறடி உயர யானை? பெரும் யானைத் தந்தங்கள் கால்களாய் அமைந்த சப்ர மஞ்சக் கட்டில்கள்? நாம் எதைக் கண்டோம்? சேரன் செங்குட்டுவனைக் காண கப்பம் சுமந்து வந்த மன்னர்கள் கொணர்ந்த பட்டியல் தருகிறார் இளங்கோவடிகள், வெளிப்படையாக.

யானையின் வெண் தந்தங்கள், அகிற் கட்டைக் குவியல், கவரிமான் மயிரினால் ஆன சாமரம், தேன்குடங்கள், சந்தனக் கட்டை, சிந்தூரக் கட்டி, நீலக்கற்கள், கஸ்தூரி, ஏலக்கொடி, மிளகுக்கொடி, கூவைக் கிழங்குகள், அவலைக் கிழங்குகள், தேங்காய்கள், மாம்பழங்கள், பச்சிலை மாலை, பலாப்பழங்கள், பூண்டு, கரும்பு, பூங்கொடிகள், வாழைக்குலைகள், சிங்கம், புலி, யானை, குரங்கு - இவற்றின் குட்டிகள், வருடை மான், காட்டு மான், கஸ்தூரிக் குட்டிகள், கீரிகள், ஆண் மயில்கள், புனுகு, புனுகுப் பூனைக் குட்டிகள், காட்டுக் கோழி, கிளிகள்... இன்று இவற்

றைக் கொண்டு மன்னர்களைக் காணப் போனால், வாசல் கதவைக் கூடத் திறக்க மாட்டார்கள். பிற கெங்கே வாழ்த்துச் சொல்வது!

போன தலைமுறை சாதாரண மக்களுக்கு தமது சொந்தப் பிறந்த நாளே தெரியாது. பிறகெப்படி மற்றவருக்குத் தெரியும்? அஞ்சல்துறை அறிமுகம் ஆன காலத்துக்குப் பிறகுதானே, வாழ்த்து அட்டைகளே அச்சாகி இருக்க வேண்டும்? பொங்கல் வாழ்த்து, தீபாவளி வாழ்த்து, கிறிஸ்துமஸ் வாழ்த்து, திருமண வாழ்த்து என... என் பள்ளி நாட்களில், கல்லூரி நாட்களில் வாழ்த்து அட்டைகள் வாங்கத் திரியும், வந்ததைக் காட்டி மகிழும் தோழர்கள் உண்டு. கையில் காசில்லாதவன் எங்கே கடைத் தெருவுக்குப் போவது?

இன்று பெரும்பாலும் வாழ்த்து அட்டைகள் நின்றுவிட்டன. தபால் ஊழியருக்கும் சுமை குறைவு. மரங்களும் தப்பித்தன. எல்லாம் குறுஞ்செய்தி மயம். எதிர்காலத்தில் ஈதருக்கு அடுத்தபடியாகக் ககன வெளி எல்லாம் குறுஞ்செய்திகள் செறிந்திருக்கும். அதிலும் வியாபாரம் ஆகும் எனத் தெரிந்த நிறுவனங்கள் பண்டிகை நாட்களில் செய்திக்கு கட்டணம் உயர்த்தினர். நம்ம ஆட்கள் எவ்வளவு அறிவாளிகள்! பண்டிகைக்கு இரு தினங்கள் முன்பே வாழ்த்துச் செய்தி அனுப்புகிறார்கள். எதற்கு வாழ்த்துக்கு பணம் பாழ்ச்செலவு? இப்படிப் போகிறது விலைமதிப்பில்லா வாழ்த்தின் வரிசை!

நொந்து சபிப்பது பலிக்குமானால், வாழ்த்துவதில் நன்மை விளையாதா? கொடுங்கோன்மை அதிகாரத்துத் திருக்குறள் பேசுகிறது: ‘அல்லல்பட்டு ஆற்றாது அழுதகண்ணீர் அன்றே செல்வத்தைத் தேய்க்கும் படை’

இது அரசர்க்குக் கூறியது என்று ஒதுங்கிப் போக வேண்டாம். ‘ஒருவன் அல்லற்பட்டு, ஆற்றமாட்டாமல் அழுத கண்ணீர், அவன் அல்லற்படுவதற்குக் காரணமாக இருந்தவரின் செல்வத்தை அழிக்கும் ஆயுதம்’.

என்ன அலுப்பு நமக்கு என்றால், மேடை தோறும் திருவள்ளுவர் பேர் பாடும் இனம் கூடத் திருக்குறளை நம்புவதில்லை என்பதுதான். ஆற்றாது அழுத கண்ணீர் சகல சம்பத்துக்களையும் தேய்த்து இல்லாமல் ஆக்கும் வலுவான ஆயுதம் என்றால், அது பலிக்கும் என்றால், வாழ்த்துவது பொருளற்றுப் போகுமா? எனவே, வாழ்க, வாழ்த்து எனும் சொற்களை வெறும் சடங்கு - சம்பிரதாயமாகக் கொள்ளாமல், அந்தச் சொற்கள் மந்திரம் என்றும், அதற்கென ஆற்றல் உண்டு என்றும் எண்ணி, உலகம் வாழ்த்தும்படியாக நடந்துகொள்ள வேண்டும். பிறர் வயிறு எரிந்து தூற்றும்படியாக நடந்து கொள்ளக்கூடாது என்பதை

மனம் கொளல் வேண்டும்.

தி.ஜானகிராமன் தமிழின் சாலச்சிறந்த படைப்பாளுமை. 1921ல் பிறந்து 1983ல் காலமானார். நாவல்களும், சிறுகதைகளும் தமிழுக்கு அவரது ஒப்பற்ற கொடை. 'பரதேசி வந்தான்' என்பது அவரது சிறந்த சிறுகதைகளில் ஒன்று. வாசித்துப் பாருங்கள், அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீரின் அர்த்தம் புரியும்.

எங்களூரில் ஒரு விதவைக் கிழவி. மக்கள் இல்லை. வாசம் கூரை வீட்டில். சன்னஞ்சன்னமாக முருங்கைக்காய் விற்று, முட்டை விற்று, நெற்றுத் தேங்காய் விற்று, தென்னை ஈர்க்கு வாரியல் விற்று சேர்த்த பணம் ஆயிரம். தனது கடைசிக் காலச் செலவுகளுக்காக. அப்போது ஆயிரம் ரூபாய் பெரும் பணம். பவுன் - அதாவது எட்டு கிராம் தங்கம் அறுபது ரூபாய்க்கு விற்ற காலம். திருட்டுக்கு அஞ்சி, பாதுகாப்பாக இருக்கும் என்று கருதி, ஊர்ப் பண்ணையாரிடம் கொடுத்து வைத்திருந்தாள்.

ஏழெட்டு ஆண்டுகள் சென்று, ஏதோவொரு அவசரத்தின் போது, பணம்

# ஏப்ரீல்!



யாரையாவது ஏமாற்றி, பல்பு கொடுத்து, அவர் வாழ்வை ஒளிமயமாக்குவதே ஏப்ரல் ஒன்றாம் தேதியின் பாரம்பரியம். உலகம் முழுவதுமுள்ள பெரும் நிறுவனங்களே இந்த நாளில் டுபாக்கூர் தகவல்களை வெளியிட்டு, பிற்பாடு 'பிம்பிலிக்கா பிலாபி' சொல்வதுண்டு. அப்படி இதுவரை தரப்பட்ட மாஸ் அல்வாக்கள் வரிசை இந்த இதழெங்கும்...

## லைன் ரிங்கர்

க்யூலஸ் எனும் செல்போன் கடந்தாண்டு அறிமுகப்படுத்திய செல்போன் ஆப் இது. 'க்யூவில் நிற்கும்போது உங்களுக்கு முன் இருப்பவர்களின் செல் நம்பரை இதுவே ட்ராக் பண்ணி, அவர்களுக்கு 'அம்மா சீரியஸ், கேஸ்காரர் வந்திருக்கார்' என அவசர மெஸேஜ்களை அனுப்பும். இதனால், க்யூ சீக்கிரமே கலைய, நீங்கள் முதலில் போவீர்கள்' என பூ சுற்றினார்கள் ஏமாற்றியவர்கள்.

ஏன்யா எங்களையெல்லாம் பார்த்தா எப்படித் தெரியுது?



திருப்பிக் கேட்டாள்.

''பணமா? ஏது? உங்கிட்ட நான் கடன் வாங்கினேனா? கௌவிக்குப் பித்துப் பிடிச்சுப் போச்சா?'' என்று அதட்டி ஓட்டி விட்டார்.

கிழவி நடுத்தெருவில் நின்று மண்வாரிப் போட்டுத் தூற்றிச் சாப மிட்ட காட்சிக்கு நான் சாட்சியாக நின்றபோது எனக்குப் பதினோரு வயது. அதன்பின் பண்ணையார் குடும்பத்தில் நடந்தது, தி.ஜானகி ராமனின் 'பரதேசி வந்தான்' கதையை நினைவுபடுத்தும். தற்செயல் என்பார்கள் இறை மறுப்பாளர்கள். இருக்கலாம். என்றாலும் ஊர் பேசியது, 'அறுதலிக் கௌவிக்க வயத்தெரிச்சல் சும்மா விடுமா?' என்று. படித்தவன் வஞ்சனையும் சூதும் செய்தால் 'ஐயோ என்று போவான்' என்றார் பாரதி.

மணற் கொள்ளை, மயானக் கொள்ளை, மலைக் கொள்ளை, மருத்துவக் கொள்ளை, மக்கள் வரிப்பணக் கொள்ளை, மின்சாரக் கொள்ளை, தாதுக் கொள்ளை, தண்ணீர்க் கொள்ளை, பால் கொள்ளை, பகற் கொள்ளை, வாங்கினால் கொள்ளை, விற்றால் கொள்ளை, ஆயுதக் கொள்ளை, பாலக் கொள்ளை, படித்துறைக் கொள்ளை, பேருந்துக் கொள்ளை, கல்விக் கொள்ளை, கல்குவாரிக் கொள்ளை, கண்டும் கொள்ளை, காணாமலும் கொள்ளை... தனி அகராதி தொகுக்கலாம் போலிருக்கிறது!

சட்டம் கேட்கிறதா சான்றோரே! மக்கள் மறந்து விடுகிறார்களே மன் பதையே! ஏழை மக்கள், வாக்காளன், குடிமகன் என்ன செய்துவிட இயலும் இவர்களை? கடவுளும் கைவிட்டு விட்டாரா இந்த தேசத்தை? பலரும் சொல்கிறார்கள், கடவுள் மீது நம்பிக்கை வைப்பதன்றி உமக்குப் போம் வழி என்ன? ஆனால் கடவுள் என்பவர் யாருடைய கடவுள்? கேரளத்து நாராயண குரு கேட்டது போல, 'அவர் நம்பூதிரிகளின் சிவனா அல்லது ஈழவர்களின் சிவனா?' தங்கத்தேர் இழுப்பவர், மணி மண்டபங்கள் பணி செய்து கொடுப்பவர், தங்க அங்கியும் வைர மணி முடியும் அணிவிப்பவரின் கடவுளா? அல்லது நான்கு மணி நேரம் வரிசையில் நிற்பவரின் கடவுளா? அன்னதானம் வாங்கிப் பசியாறுபவரின் கடவுளா?

'அரசியல் பிழைத்தவர்க்கு அறமே கூற்றுவன் ஆவான்' என்கிறாரே இளங்கோவடிகள்? 'கெடுப்பார் இல்லாமலேயே கெட்டுப் போவார்கள்' என்கிறாரே கம்பன்? 'அழக் கொண்ட எல்லாம் அழப் போம்' என்கிறாரே வள்ளுவர்!

இறைவன் கூடக் கேட்க மாட்டான் என்று அச்சமற்றுப் போய் விட்டால் எப்படி உய்யும் உலகு ஐயா? நல்லவர், பெரியவர், நீதிமான்கள், சான்றோரும், பாரதியின் பாஞ்சாலி சபதத்தில் பீஷ்மாச்

# ஏப்ரீல்!

## சாப்பிடக் கூடிய பீட்சா பாக்ஸ்



'உலகில் முதல்முறையாக அறிமுகப்படுத்துகிறோம்... சாப்பிடக் கூடிய பீட்சா பாக்ஸ். பீட்ஸாவோடு அது வந்த பெட்டியையும் சாப்பிடலாம்' - இப்படிச் சொன்னது யார்? நம்ம டாமினோஸ்தான். அதுவும் இங்கிலாந்தில். 'குப்பை இல்லாத நகரத்துக்கு இது நல்ல ஐடியா' என்றெல்லாம் பசுமை பரந்தாமன்கள் பாராட்டு விழா நடத்திய பிறகு, இவர்கள் கொடுத்ததற்குப் பெயர்தான் மெகா அல்வா.



சார்யன் சொல்வது போல, 'தீங்கு தடுக்கும் திறன் இலேன்' என்று ஓய்ந்து போனால் எங்ஙனம் ஐயா ஆளும் அருள்?

ஏதோ சாபம் கொடுக்கிறேன் என்று எண்ணக்கூடாது நீங்கள். வேறு என்ன செய்யலாம் இந்தப் பாவிகளை? திருவள்ளுவரே சாபம் கொடுக்கிறார், 'பரந்து கெடுக உலகு இயற்றியான்' என்று. கடவுளாலேயே அழிக்க முடியாதவர்களா சமூக விரோதிகள்? திரு.வி.க. பாடினார்: 'பாவி பிறந்தனன், பாவி வளர்ந்தனன், பாவ வினை மேவிய வாழ்வினன், மீக்கூர்ந்து பாவம் விளைந்தது' என்று.

எனில் யாரை நம்புவோம் யாம்? எவர் முகம் பார்த்து நிற்போம்? எவரிடம் சென்று முறையிடுவோம்? கடவுள்களே தோற்றுப் போவார்களேயானால் யாரைச் சரணடைவோம் தேச முத்துமாரி? எப்போது வந்து பிறப்பார்கள் தீவினை வேரறுக்க இந்த மண்ணில் இறைவர் அத்தனை பேரும்? அல்லது ஏற்கனவே பிறந்து சாக்காலமும் ஆகிவிட்டதா? எப்போ வருவாரோ மறுபடியும்? வருவாரோ மாட்டாரோ? வாராதிருப்பாரோ?

காத்திருங்கள் ஐயா, அவர் வரவு பார்த்து! நம் சார்பாகச் சிறு மணல் எடுத்துப் போடவும் தயாரில்லை நாம். எனவே காத்திருப்பு அன்றி வேறு வழியென்ன, காலம் முழுக்க? தீமையைக் கருவறுக்க, ஊழலைப் பொசுக்க, துரோகத்தை விடம் ஊட்டி மாய்க்க, எரிந்து கொண்டிருக்கும் கும்பித் தீ குளிர்விக்க, அவன் வரவு காத்திருப்பதை விடுத்து, உமக்கு மாற்று வழியென்ன காண்?

**(கற்போம்...)**

# கைம்மண் அளவு

சில ஊர்களின் பெயர்கள் படும் பாடு, தாளம் படுமோ தறி படுமோ என்றிருக்கிறது. முன்னூறு ஆண்டுகளுக்கு முன்பு இந்தியாவுக்கு வந்த ஐரோப்பியர்களுக்கு நம்மூர் பெயர்கள் நாவில் வழங்கவில்லை. எனவே, அவர்களின் நாத்திறன் பொருந்தும்படி உச்சரித்தனர். தூத்துக்குடியை 'டுட்டுக்கோரின்' என்றும், திருவல்லிக்கேணியை 'டிரிப்ளிகேன்' என்றும், கோழிக்கோடைக் 'காலிகட்' என்றும், வதோதராவை 'பரோடா' என்றும், வாரணாசியை 'பனாரஸ்' என்றும், தஞ்சாவூரை 'டாஞ்சூர்' என்றும், பனாஜியைப் 'பஞ்சிம்' என்றும், ஆலப்புழையை 'அலப்பி' என்றும்... மேற்கொண்டும் ஆயிரம் சொல்லலாம்.

இன்று 'மும்பை' என வழங்கப்பெறும் பெருநகரின் பெயர் அடைந்த அல்லல் - பாம்பே, பம்பாய், மும்பாய், பம்பை, கடைசியாக மும்பை. ஆங்கிலேயரை அறுத்து விட்டு அறுபத்தைந்து ஆண்டுகள் ஆன பின்பும் நம் இனமானத் தமிழர் 'டிரிப்ளிகேன்' என்கிறார்கள்! என்ன அற்புதமான பெயர் அல்லிக்கேணி!

**நாஞ்சில் நாடன்**

ஓவியம்: **மருது**



திரு எனும் சிறப்பு அடைமொழி பெற்று, திரு அல்லிக்கேணி. இலக்கணப்படி புணர்ந்து திருவல்லிக்கேணி. இன்றும் டிரிப்ளிகேன் என்கிறார்களே பெரும் பாவிகள்!

பாரம்பரியமான ஊர் சிராப்பள்ளி. அந்தச் சொல்லுக்கு வரலாறு உண்டு. திரு என்பது சிறப்பு முன்னொட்டு. அரங்கம் என்பது திருவரங்கம் ஆனது போல, அண்ணாமலை, திருவண்ணாமலை ஆனது போல, செந்தூர் திருச்செந்தூர் ஆனது போல, முதுகுன்றம் திருமுதுகுன்றம் ஆனது போல, சிராப்பள்ளி என்பதும் திருச்சிராப்பள்ளி ஆயிற்று. அது வரைக்கும் சரி! ஐரோப்பியர், அவர் வசதிக்குத் 'திருச்சி' என்று புழங்கினார்கள். அவர்களுக்கு என்ன போச்சு? அவர் சென்று சேர்ந்த பின்பும் நமக்கு இன்றும் ஏன் திருச்சி? சிராப்பள்ளிக்கும் திருச்சிக்கும் என்ன தொடர்பு? பூரணம் வைத்த இலைப்பணியாரத்துக்கும், பீட்சாவுக்கும் உள்ள பந்தமா? எந்தத் தமிழ் அமைப்பும் இது பற்றிக் கவல்கிறதா?

ஐந்நூறு ஆண்டுகள் முன்பு கிருஷ்ண தேவ ராயர் காலத்தில், தெலுங்கைத் தாய்மொழியாகக் கொண்ட ராஜுக்கள் குடி அமர்ந்த இடம், ராஜுக்களின் பாளையம், ராஜபாளையம். ராஜாஜியை இராசாசி என்று எழுதிய மரபின்படி, ராஜபாளையத்தை இராசபாளையம் என்றார்கள் தமிழர்கள். சமீபத்தில் தெரிந்து கொண்டேன், தஞ்சாவூரைத் தஞ்சை என்பது போல், திருவண்ணாமலையை வண்ணை என்பது போல, ராஜபாளையத்தை ரஜகை என்கிறார்கள் என. வாழ்க, குறுஞ்செய்தி அனுப்ப வசதியாக இருக்கும். மொழியை வேறு எப்படித்தான் வளர்ப்பது? ஆனால் பூனையைப் பார்த்து புலி சூடு போட்டுக்கொண்ட கதையாகவும் இருக்கும்!

அற்புதமான தமிழ்ப்பெயர்கள் உண்டு நமது அம்மன்களுக்கு. இன்பத்தேன் வந்து பாயும் காதினிலே! திருப்பாதிரிப்புலியூரில் பெரிய நாயகி அம்மை, திருமயானத்தில் வாடாமுலையம்மன், வைத்தீசுவரன் கோயிலில் தையல் நாயகி, திருப்புகலூரில் கருந்தார் குழலி, திருநல்லூரில் திருமலை சொக்கி, திருமுருகன் பூண்டியில் முயங்கு பூண் வல்லியம்மை, பொன்னமராவதியில் ஆவுடை நாயகி, குடுமியான் மலையில் திரு காம கோட்டத்து அறுவடை மழை மங்கை நாச்சியார்... மாதிரிக்குச் சில சொன்னேன். அந்தந்த ஊர்களில் போய் விசாரியுங்கள்... வேறு அவர்கள் என்ன பெயரில் வழங்கப் பெறுகிறார்கள் என! எவர் நிலத்தை எவர் பட்டா போட்டுக்கொள்வது ஐயா?

கடவுள்களை விடுங்கள்,

ப்ளம், செர்ரி, ஸ்ட்ராபெரி என்பன மாற்றுப்பெயர் பெறவில்லை நம்முன். ஆனால், நம்மூர்க் காய்கறிகள் மாற்றுப்பெயர் பெற்று நமக்குக் கற்பிக்கின்றன புதுப்புது சொற்களை, மேலோட்டமான பொருளுடன்!



நான்கு வேதங்களும் ஆறு சாத்திரங்களும், பதினெட்டுப் புராணங்களும் தீர்மானித்த சங்கதி அது. இன்று நம் சக்திக்கும் அப்பாலே நிற்பது! ஆனால், எளிமையான நமது கத்தரிக்காய் படும்பாடு விசித்திரமானது. இரணியலில், தொலித்த சின்னத் தேங்காய் பருமனில் வாடாமல்லி நீலமும் வெண்மையுமாய் மிடைந்து விளையும். கோவில்பட்டியில், முட்டை வடிவமும் சுத்த வெள்ளையுமாக. சிறுமலையில் சின்னதாய் சற்று நீண்டு பச்சை வரியோடியது. கொங்கு மண்டலத்தில் முட்டை வடிவத்தில் கருநீல வரியோடியது. நீலம் இல்லாவிட்டால் அது கத்தரிக்காய் என்று நம்பவே மாட்டார்கள். பெரிய முட்டை வடிவத்தில் வெள்ளையில் பச்சை திட்டுத் திட்டாகப் படர்ந்த இனம் ஒன்றுண்டு. காரக்காய் என்பார்கள் அந்தக் கத்தரியை, அதன் காரல் தன்மைக்காக. இப்போது காண்பதற்கே இல்லை.

உடலெங்கும் இலையெங்கும் காம்பெங்கும் முள் பூத்து, பெரிய சுண்டைக்காய் போல, பச்சை வரியோடி, வெண்மை இடையிடையே பரவி, ஆற்றங்கரை, குளத்தங்கரை எனக் காணக் கிடைக்கும் ஒன்று. அதனைக் கண்டங்கத்திரி என்பார்கள். கொடுங்கசப்பு எனினும் அதன் மருத்துவப் பயன் கருதி, புளிக் குழம்பு வைத்துச் சாப்பிடுவார்கள். அதன் வேரும் இலையும் மருந்துப் பொருட்கள். கிளிப் பச்சை நிறத்தில் சாண் நீளத்தில்,

ஓரங்குல விட்டத்தில் காய்ப்பது வழுதுணங்காய். சுத்த நீலத்திலும் அதன் ஒரு வகையுண்டு. முழுத் தேங்காய் அளவில் கருநீல நிறத்தில் ஒரு கத்தரிக்காய் காய்க்கிறது வட நாட்டில்.

எல்லாமே கத்தரிதான். பெண்கள் நிற வேற்றுமை குறிக்க கத்தரிப்பூ நிறம், வாடாமல்லி நிறம் என்பார்கள். சங்க இலக்கியத்தில் 'க'வுக்குப் பிறகு 'த்' பயன்படுத்தப்பட்ட சொல்லேதும் எனக்குத் தட்டுப்படவில்லை. பிறகெங்கே கத்தரி இருக்கும்? ஆனால் மாற்றாக 'வழுதுணை' இருக்கிறது.

அகநானூற்றில் 227வது பாடல்

***'நுதல் பசந்தன்றே; தோள் சாயினவே;***

***திதலை அல்குல் வரியும் வாடின;***

***என் ஆகுவள் கொல் இவள்?'***

என்று தொடரும் பாடல். நெற்றி பசலை படர்ந்து வெளிறிவிட்டது. தோள்கள் மெலிந்து போயின. தேமல் படர்ந்த அல்குல் வரியும் வாடிப் போயின! ஆகவே,'இவள் என்ன ஆவாளோ என்று கண்ணீர் மல்க நீ வருந்தாதே' என்று தலைவனைப் பிரிந்து வாழும் தலைவி, தனது தோழிக்குச் சொல்லும் பாவம். அந்தப் பாடலில், பெண் யானை மிதித்ததால் வழுதுணங்காய் போன்ற தழும்பை உடைய, தூங்கல் ஓரியாரால் பாடப் பெற்ற மன்னனைப் பற்றிக் குறிப்பிடும் போது வழுதுணங்காய் போன்ற காயம் பெற்றவன் என்ற தகவல் வருகிறது.

**'வரகரிசிச் சோறும் வழுதுணங் காய் வாட்டும்**

**முரமுரன வேப் புளித்த மோரும்'**

என்றொரு பிற்காலப் பாடலும் உண்டு.

'காதலாம் கத்தரிக்காயாம்' என்றொரு நூற்றாண்டுப் பழைய வழக்கும் உண்டு தமிழரிடத்தில். இந்தக் கத்தரியை வடமொழிகள் 'பெய்ங்கன்' என்கின்றன. 'வாங்கி பாத்' என்றொரு சித்ரான்னம் உண்டு. 'ரசவாங்கி' எனும் பதார்த்தமும் பெய்ங்கன் எனும் சொல்லில் பிறந்த 'வாங்கி' எனும் சொல்லின் பிரயோகமாக இருக்கலாம். கத்தரியைச் சுட்டுக் கடைந்து செய்யப்படுவதால் 'பெய்ங்கன் பர்த்தா'. பெய்ங்கன் வாடி என்றொரு ஊர்ப்பெயரே உண்டு மராத்திய மாநிலத்தில்.

ஔவை மூதாட்டி 'சாதி இரண்டொழிய வேறில்லை' என்றாள். என்னைக் கேட்டால், அது 'கத்தரிக்காய் தின்பவர், கத்தரிக்காய் தின்னாதவர் என இரண்டு' என்பேன். கத்தரியை ஆங்கிலத்தில் Brinjal என்பர். பாஸ்டன் நகரில், நண்பர் 'படிகள்' ரவிஷங்கர் ஓரடி நீளமுள்ள கத்தரிக்காய் சாண்ட்விச் வாங்கித் தந்தார். கத்தரிக்காய் பஜ்ஜிக்கு

நறுக்குவதைப் போன்று, சற்று கனமாக நறுக்கப்பட்டு வாட்டப் பட்ட கத்தரிக்காய் வைத்த சாண்ட்விச். எனவே அமெரிக்காவிலும் கத்தரிக்காய் ஒரு உணவுதான்.

இத்தனை இருந்தும், கத்தரியின் ஒரு இனம் முட்டை வடிவத்தில் இருப்பதால், எவனோ ஒரு பண்டிதன் அதை Egg Plant என்றான். இப்போது நமது லட்சக்கணக்கான தமிழ்ப் பள்ளி மாணவர் Egg Plant என்று சொல்லித் திரிகிறார்கள் கத்தரியை. இந்தக் கொடுமைக்கு எங்கு போய்ப் பரிகாரம் செய்வது? இது ஒரு எளிய சமாச்சாரம்தானே! இதற்குப் போய் இத்தனையா என்பீர்கள்! எளிய விஷயங்களே வலிய காரியங்கள் ஆகின்றன.

இதுபோன்றே வெண்டை என்றொரு அற்புதமான காய். இந்தியில் ‘பெண்டி’ என்பார்கள். பெண்களின் கைவிரல் போலத் தோற்றம் காட்டுகிறதாம் வெண்டை. ஆகவே ஒரு அறிவாளி அதற்கு Ladies Finger எனப் பெயர் சூட்டினான். ஆங்கிலம் வழி பயிலும் அத்தனை பேரும் லேடீஸ் ஃபிங்கர் என்கிறார்கள். என் கவலை, வாழைப் பூவுக்கு எதுவும் பெயர் வைத்து விடுவார்களோ என்பது! தமிழ் சினிமாப் பாட்டு வேறு நினைவு வந்து நம்மைப் படுத்துகிறது.



## தண்ணீர் பட்ட பாடு!

**எதிர்வருகிற கோடை, நிரம்பாத அணைகள், ஏமாற்றுகிற பருவ மழை, வற்றிப்போன நிலத்தடி நீர் என எல்லோரும் தண்ணீரைப் பற்றி அதிகமாகவே கவலைப்படுகிற நேரம் இது. சுற்றுச்சூழலின் கெட்டிக்காரர்களிடம் கேட்டுப் பார்த்தால், அவர்கள் சொல்கிற நிஜங்கள் இந்த இதழெங்கும் அணிவகுப்பு...**

**‘பாடம்’ நாராயணன்**

“இது முதலாளித்துவத்தின் பொற்காலம். தனி மனிதர், குடும்பம், அரசு... எல்லாவற்றையும் நுகர்வு பயங்கரவாதத்தில் கொண்டு போய் தள்ளிவிட்டது சந்தைப் பொருளாதாரம். பூச்சிமருந்து, நகர மாசு, சாக்கடை என நிலத்தடி நீருக்கு பங்கம் வந்துவிட்டது. எல்லா இயற்கை வளங்களும் நாசமாகிவிட்டன. பேராசையால் நாம் இந்தத் தலைமுறையையும் கெடுத்துக் கொண்டு, அடுத்த தலைமுறைக்கும் கேடு செய்துவிட்டோம். இது ஒருவழிப்பாதை என்பதை மறக்க வேண்டாம். உடனடித் தேவை, பொறுப்பான நுகர்வோராக மாறுவதுதான்!”



வேறு எங்கோ எழுதினேன், பாரம்பரியமான நம் கருநாகம் King cobra என்று ஆங்கிலத்துக்குப் போய், அங்கிருந்து நமக்கு ராஜ நாகமாகத் திரும்பி வந்தது என்று.

முருங்கைக்காய் உங்களுக்குத் தெரியும். தமிழ் சினிமா பார்ப்பவர்களுக்குத் தெரியாமலா இருக்கும்? முருங்கைக்காய் இலங்கையில் இருந்து இந்தியாவுக்கு இறக்குமதி ஆயிற்று என்பார்கள் பல்கலைக்கழகத்துத் தமிழ்ப் பேரறிஞர்கள். அது எனக்குத் தெரியாது. ஆனால் அகநானூறில் முருங்கை பற்றி நான்கு பாடல்களில் பேச்சு உண்டு.

அகநானூற்றின் முதற்பாட்டு, மாமூலனார் பாடியது. 'நாரில் முருங்கை' என்கிறது. அதாவது 'பலமில்லாத மரம்' எனும் பொருளில். முருங்கை மரத்தின் வெண்மையான பூக்கள், கடுங்காற்றில் அகப்பட்டுக் கடல் அலைகளின் நீர்த்துளிகள் சிதறுவன போல உதிர்கின்றன என்கிறது பாடல்.

இரண்டாவது பாடல் சீத்தலைச் சாத்தன் பாடியது. 'நெடுங்கால் முருங்கை வெண்பூத்தா அய்' என்கிறது. 'சூரிய வெப்பத்தால் வெடித்த தரையில் வெடிப்பை மறைத்தவாறு முருங்கைப் பூக்கள் உதிர்ந்து கிடக்கும்' என்பது தகவல். மூன்றாவது பாடலும் மாமூலனார் பாடலே! 'புன்கால் முருங்கை ஊழ்கழி பன்மலர்' என்கிறது அது. 'பலம் இல்லாத அடிப்பகுதியைக் கொண்ட முருங்கை மரத்தின் மலர்கள், ஆலங்கட்டி மழை போல் உதிர்ந்து கிடக்கும்' என்பது தகவல். நான்காவது பாடல், கடியலூர் உருத்திரங்கண்ணனார் பாடிய, 'முருங்கை மேய்ந்த பெருங்கை யானை' என்னும் பாடல். 'நீண்ட தும்பிக்கையை உடைய யானை, முருங்கை மரத்தையே மேய்ந்தது' என்பது பொருள். 'காக்கை உகக்கும் பிணம்' என்பது போல இது.

இங்ஙனம் சங்க இலக்கியப் பாடல் பெற்ற முருங்கைக்காயின் சமகாலப் பெயர் என்ன தெரியுமா? Drum stick. செம்மொழித் தமிழ் இங்கு இவ்விதம் வாழ்கிறது. சரி, நாயன்மாரே! முருங்கைக்காய் Drum stick என்றால், முருங்கைப் பூ, முருங்கைக் கீரை, முருங்கைப் பட்டை, முருங்கைப் பிசினுக்கு என்ன பெயர்? இது ஐரோப்பியனுக்குத் தெரியாது அல்லவா? கத்தரிப் பூ, கத்தரிப் பிஞ்சு, கத்தரிப்பழம், கத்தரிக்காய் வத்தல் ஆகியவற்றுக்கு என்ன பெயர் அவர் அகராதியில்?

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு, இறையருளால் ஒரு துண்டு ஆப்பிள் கீற்று கிடைத்தது எனக்கு. அது நம் நாட்டுப்பழம் இல்லை என்றாலும் எல்லோரும் ஆப்பிள் என்றே வழங்குகிறோம். அது

போன்றே ப்ளம், செர்ரி, ஸ்ட்ரா பெரி என்பன மாற்றுப்பெயர் பெறவில்லை நம்முள். ஆனால், நம்மூர்க் காய்கறிகள் மாற்றுப் பெயர் பெற்று நமக்குக் கற்பிக்கின்றன புதுப்புது சொற்களை, மேலோட்டமான பொருளுடன்.

கவிஞர் விக்கிரமாதித்தன் விசனப்பட்டது போல,‘அருவி எனும் அழகு தமிழ்ச் சொல்லிருக்க, நீர் வீழ்ச்சி என்பதுதானே நமது புத்தி’. நீர் வீழ்ச்சை எனில் மலையாளம் ஜலதோஷத்தைக் குறிக்கும். ஆங்கிலேயருக்கு Water Falls, அருவிக்கான சொல். அங்கிருந்து தமிழுக்கு மொழி பெயர்ப்பு ஆகிறது, நீர் வீழ்ச்சி என. தாத்தா பெயர் பெரிய கருப்பன் எனில் அதை Big Black என மாற்றுவார்கள் போலும்.

தாமரை எனும் சொல்லுக்கு கம்பன் வகைக்காக கமலம், வனசம், நளினம், முளரி, கஞ்சம், அரவிந்தம், பத்மம் எனும் சொற்களைப் பயன்படுத்துகிறான். நம் குழந்தைகள் Lotus என்கின்றன. இதுவே என் ஆவலாதி!

ஔவையார் எழுதிய மூதுரை என்றோர் நூலுண்டு. அதில் ஒரு பாடல்:

***‘கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி***
***தானும் அதுவாகப் பாவித்து - தானும் தன்***
***பொல்லாச் சிறகை விரித்தாடினால் போலுமே***
***கல்லாதவன் கற்ற கவி’***

என்று பேசும்.

தமிழின் பல சொற்களும் கல்லாதவன் கற்ற கவிதை போல ஆகிக் கொண்டிருக்கின்றன.

**(கற்போம்...)**




**டாக்டர் சிவராமன்**

**த**ண்ணீரை வணிகப் பொருள் என நம்ப வைத்ததில் பன்னாட்டு நிறுவனங்களின் சதி இருக்கிறது. மேலை நாடுகளில் எல்லா பெரு நகரங்களும் பெரிய நீர்நிலைகளை காப்பாற்றி வைத்திருக்கின்றன. இங்கே இருக்கிற அந்நிய நாட்டு கார் நிறுவனங்கள் ஒரு காரைத் தயாரிக்க மூன்று லட்சம் லிட்டர் தண்ணீரை செலவு செய்கின்றன. அதைப் பற்றி நமக்குக் கவலையில்லை. நியூட்ரினோவிற்காக பகைமைகளை விட்டுத் தர தயாராகி விட்டோம். நீர் ஆதாரங்களின் அழிவு நமக்கான பெரும் இடர்! இதை உணரா விட்டால் நமக்கு எப்படி தண்ணீர் கிடைக்கும்?



# கைம்மண் அளவு

அரிச்சந்திரன், சந்திரமதி, லோகிதாசன் தொடர்புடைய மயான காண்டத்து கட்டத்தை இந்தியில் ‘ஹரீஷ்சந்திர காட்’ என்கிறார்கள். ‘ஹரீஷ் சந்த்ர’ எனும் பெயர்ச்சொல் தமிழில் தொல்காப்பியர் அனுமதித்த தற்பவம் எனும் இலக்கணப்படி ‘அரிச் சந்திரன்’ ஆயிற்று. கட்டம் என்றால் கோடு என்றும் காட்சி என்றும் சாதாரணமாகப் பொருள் கொள்கிறோம். ஆனால், காட் எனும் வடமொழிச் சொல் தமிழாகிக் கட்டம் என்று வருவதாக உரைக்கிறார் பேராசிரியர் அருளி, அவரது ‘அயற்சொல் அகராதி’ எனும் நூலில். கட்டம் என்றால் இங்கு துறை அல்லது துறைமுகம் என்று பொருள். ‘ஆற்றில் கிடந்தும் துறையறிய மாட்டேனை’ என்கிறார் ஆழ்வார்.

**நாஞ்சில் நாடன்**

ஓவியம்: **மருது**


15
after Doré

வாரணாசி எனப்படும் காசியில், கங்கைக்கரையில் எண்ணற்ற காட்... அதாவது, கட்டங்கள் உள்ளன. அவை நீராடும் துறைகள், படகுப் போக்குவரத்து நடக்கும் துறைகள். முன்பு சொன்னது போல், சென்ற ஆண்டின் கிறிஸ்து பிறப்பை ஒட்டி நான்கு நாட்கள் காசியில் இருந்தேன். தினமும் காலையும் மாலையும் கங்கைக் கரைக்குச் சென்றேன். 'மா கங்கா'வுக்கு 'ஆர்த்தி' நடக்கும் இடம், தசாஸ்வமேத காட். தற்போது, பாபு ராஜேந்திர பிரசாத் காட். நாம் அம்மா, அம்மே, அம்மை என்றெல்லாம் சொல்வதை வட நாட்டவர் மா, மாதா, மம்மா, மாயி, மையா என்கின்றனர். கங்கை அம்மனை கங்கா மா, கங்கா மாயி, கங்கா மையா என்று அழைக்கிறார்கள். ஆடைக்கும் கோடைக்கும் வாடைக்கும் நடக்கிறது தினமும் மாலையில் கங்கா ஆர்த்தி. குளிர்காலங்களில் சற்று முன்னதாக. இறை நம்பிக்கை உளதோ இலதோ, கங்கா மையாவுக்கு நடக்கும் ஆர்த்தியைக் காண்பது, தேர்ந்த கலை நிகழ்ச்சியைக் காண்பதை ஒத்தது. ஒளியும் ஒலியும் தூப தீபங்களும் நடன அசைவுகளும் முத்திரைகளும் கொண்ட கலை நிகழ்ச்சி. நதியைத் தாயாக வணங்குவதும் முட்டாள்தனம் என்று மேதைகள் எவரும் கூறக்கூடும். எனில், நானோர் அடி முட்டாளாக இருக்கவே விரும்புவேன்.

குளிர்காலம் என்பதால், கங்கா ஆர்த்தியைக் காணச் சென்றபோது, நேரத்தே தொடங்கி விட்டார்கள். கூட்ட நெரிசல் இருந்ததால் குளிர் தெரியவில்லை. சற்று முன்பாக சுடச்சுட தின்ற கச்சோரி உடம்பைக் கரம் செய்தது. அன்று காலைதான் கௌடவ்லியா சதுக்கத்தின் சமீபத்தில் இருந்த நாட்டுக்கோட்டை செட்டியார்கள் சத்திரத்துப் பொறுப்பாளர் பனையப்ப அண்ணன் உதவியால் கங்கை நீரை என் கரங்களால் காசி விசுவநாதருக்கு அபிஷேகம் செய்து கைகளால் சிவலிங்கத்தைத் தொட்டு வணங்கினேன். எனது அப்பன், பாட்டனுக்கு வாய்த்திராத பேறு அது. இதற்கு மேலும் சில வரிகள் எழுத ஆசைதான். ஆனால், என்னைக் கொண்டு போய் ஆர்.எஸ்.எஸ் கூடாரத்தில் தள்ளி, வெளிக்கதவைப் பூட்டி சாவியையும் தொலைத்து விடுவார்கள் முற்போக்கு முகாம் தோழர்கள்.

எட்டு டிகிரி குளிரிலும் ஒருவித பரவசத்தில் இருந்தபோது அண்ணா சௌந்தர் வல்லத்தரசு அவர்களுடன் பேசினேன்.

''ராத்திரி பன்னிரண்டு மணிக்கு, 'அரிச்சந்திரா காட்'டுக்குப் போயி கங்கையைப் பார்த்துக்கிட்டு கொஞ்ச நேரம் சும்மா உக்காருங்க!'' என்றார்.

''அண்ணா, எட்டு டிகிரி பனி.

மனித வாழ்க்கை என்பது
இவ்வளவுதானா
இறுதியில்? எதற்கு வாரிக்
கோரிக் குவிக்கிறார்கள்
ஆயிரமாயிரம் கோடிகள்?
‘காதற்ற ஊசியும் வாராது
காண் கடை வழிக்கே!’
என்றார்
பட்டினத்துப் பிள்ளை.



சப்த சுரங்களும் பேசுது பல்லு. காசியிலே வெப்ப பானம் எதுவும் பாவிப்பதில்லைங்கிற முடிவிலே இருக்கேன்!’’

‘‘ஒண்ணும் ஆகாதுங்க... காதை மறைச்சு மப்ளர் கெட்டுங்க. ஸ்வெட்டர் வச்சிருப்பீங்கதான? பெறகென்ன?’’

மப்ளருக்கும் ஒற்றை ஸ்வெட்டருக்கும் அடங்கும் சாதிக் குளிரல்ல. சொந்த ரத்தம் சுண்டிக் கொண்டிருப்பதும் அறிவேன். எனினும் சொன்ன சொல் தட்ட முடியாதவர்களில் ஒருவர் சௌந்தர் அண்ணா. தங்கியிருந்த விடுதியில் இருந்து அரிச்சந்திரா காட் நடந்து போகும் தூரம்தான். அறை நண்பரான கொங்கணி மொழி எழுத்தாளர், சாகித்ய அகாதமி விருது பெற்ற கோவாக்காரர், பேராசிரியர் பாரிக்கர் சொன்னார்கள், ‘‘இரவு உணவுக்குப் பிறகு போவோம்’’ என்று. இரவு பதினோரு மணிக்கு மேல் மிதி ரிக்‌ஷா வண்டி கிடைத்தது. மேட்டில் இறங்கி நடந்து கங்கைக்கரை அடைந்தோம்.

எட்டு, பத்துப் பேர் எரிந்து கொண்டிருந்தனர். சற்று உயரமாக இருந்த மேடையில் நாலைந்து பேர் அமர்ந்து புகைத்துக் கொண்டிருந்தனர். கஞ்சா புகையாக இருக்கலாம். எரியும் சடலங்களின் சிதையைச் சீர்பார்த்துக் கொண்டிருந்தனர் ஓரிருவர். ஒரு சிதையின் இரு கால்களும் எரி நெருப்புக்கு வெளியே நீட்டிக் கொண்டிருந்தன. பின்னர் கங்கையின் மச்சங்களுக்கு விருந்தாகும் போலும். பாரிக்கரும் நானும் போய் அமர்ந்துகொண்டோம். எரியும் சிதைக் கணப்புக்களால் குளிர் உணரப்படவில்லை. ஒருவர் Camp Fireக்கு

முன்னால் அமர்ந்திருப்பதைப் போலத் தெரிந்தார். கீழ்த்தட்டில் தீக்கங்கும் மேல்தட்டில் சாய் கெட்டிலுமாக கட்டன் சாயா விற்று வந்தார் ஒருவர்.

ஊரில் சுடுகாட்டில் பிணமொன்று எரிந்தால் சுற்று வட்டாரம் நாற்றம் உணரும். எட்டு, பத்து பிணம் எரிந்தால் எவ்வளவு நாற்றம் வரவேண்டும்? நாற்றத்தை நாசி அறியவில்லை. காசி பற்றிய நம்பிக்கைகளில் ஒன்று அது. நம்மூர் பரோட்டாக்கடை அடுப்புத் தீ போல, எந்நேரமும் பத்துப் பன்னிரண்டு எரியும் போலும்! அடுத்தடுத்த நாட்களில் வாடகைக் கார்களின் டாப்பில், வண்ண ஜிகினாத் துணிகளில் பொதியப்பட்ட பிணங்கள் கட்டப்பட்டு, அரிச்சந்திரா காட்டுக்கு விரைவதைக் கண்ணுற்றேன். சடங்குகளைச் செய்யவும், எரிக்கவும், சாம்பலைக் கங்கையில் தள்ளவும் காசு கொடுத்துவிட்டு, கையோடு தலை முண்டிதம் செய்து கொண்டு, அழுக்கான கங்கையில் ஒரு முங்கு போட்டுவிட்டு ஊருக்குப் புறப்பட்டுப் போய் விடுவார்களாக இருக்கும். பிணம் எரிப்பவர்கள் எரிந்தும் எரியாமலும் கங்கையில் இழுத்துத் தள்ளி விடுவார்களாக இருக்கும்.

மிக அசுத்தமாகக் கிடந்தது கங்கை அந்தக் கட்டத்தில். பாரிக்கர் சொன்னார், ''கியா ஜிந்தகி ஹை சாப்!'' என்று. எனக்குள்ளும் பற்றிப் படர்ந்தது அந்த விரக்தி. மனித வாழ்க்கை என்பது இவ்வளவுதானா இறுதியில்? எதற்கு வாரிக் கோரிக் குவிக்கிறார்கள் ஆயிரமாயிரம் கோடிகள்? 'காதற்ற ஊசியும் வாராது காண் கடைவழிக்கே!' என்றார் பட்டினத்துப் பிள்ளை.

சைவத் திருமுறைகள் பன்னிரண்டில், பத்தாம் திருமுறையான திருமந்திரத்தில், 1,500 ஆண்டுகளுக்கு முன்பே சொன்னார் திருமூலர். 318வது திருமந்திரம் சொல்கிறது: 'ஊரெலாம் கூடி ஒலிக்க அழுதிட்டு, பேரினை நீக்கிப் பிணம் என்று பேரிட்டு, சூரை அங்காட்டிடைக் கொண்டு போய்ச் சுட்டிட்டு நீரினில் மூழ்கி நினைப்பு ஒழிந்தாரே!'

ஊரெல்லாம் கூடி, 'ஏ! என்னப் பெத்த ராசா, என்னை விட்டுட்டுப் போயிட்டியே' என்று சத்தம் போட்டு அழுவார்கள். அகர வரிசை, ககர வரிசை என்று பார்த்துத் தேர்ந்து, சுத்த தமிழ்ப் பெயராக, தாம் நம்பிய சாமியின் பெயராக, தலைவர்களின் பெயராக, சினிமா நடிகர் நடிகையின் பெயராக வைத்ததை எல்லாம் மறந்து 'பிணம்' என்று பெயர் வைப்பார்கள். சுடுகாட்டில் கொண்டு போய் எரிப்பார்கள். பின்பு நீரினில் ஒரு முங்கு போட்டு, அந்த நினைப்பை ஒழித்து விடுவார்கள்! கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரம் பிள்ளை எங்கே? மாவீரன் செண்பகராமன் எங்கே? தசாவதானி செய்குத்தம்பிப் பாவலர்

எங்கே? மகாமகோபாத்யாய உ.வே. சாமிநாதய்யர் எங்கே? கால்டு வெல்லும் போப்பும் எங்கே? மஸ்தான் சாகிபு எங்கே?

எத்தனையோ இழவுகளுக்குப் போயிருக்கிறேன். பல ஊர் சுடுகாடுகளைப் பார்த்திருக்கிறேன். சுடு காட்டு வழியில் இரவென்றும் பகலென்றும் பாராமல் அலைந்திருக்கிறேன். ஆனால் நள்ளிரவில், கடுங்குளிரில் கங்கையின் சாந்நித்தியத்தில், எரிந்து கொண்டிருக்கும் சடலங்களை, வந்துகொண்டு இருக்கும் பிணங்களை, கங்கைக்குள் சென்றுகொண்டே இருக்கும் எச்சங்களைக் கண்டு கொண்டிருந்த போது மனதில் அச்சமோ, பீதியோ இல்லை. என்றாலும் ஒரு வெறுமை வந்து கவ்விக்கொண்டது.

‘நெருநல் உளன் ஒருவன் இன்றில்லை என்னும் பெருமை படைத்து இவ்வுலகு’ என்கிறார் வள்ளுவப் பேராசான். நேற்றிருந்தான், இன்றில்லாமல் போனான் எனும் பெருமை உடைத்தது இவ்வுலகம். கிடைக்கும் ஒவ்வொரு நாளும் போனஸ் எனக் கருதும் வயதுதான், முதுமைதான் என்றாலும் ஆசை அறுத்தது யார்? ‘ஆசை அறுமின், ஆசை அறுமின், ஈசனோடாயினும் ஆசை அறுமின்’ என்பது தமிழ்ப்பா. ‘அகிலமெலாம் கட்டி ஆளினும் கடல் மீதும் ஆணை செலவே நினைவர்’ என்பார் தாயுமானவர்.

யாரால் எதை விட முடிகிறது?

**சித்திரை முதல் பங்குனி வரையிலான 12 மாதங்களுக்கும் தனிச்சிறப்புகள் உண்டு. அவற்றை சுருக்கமாக தொகுத்துத் தந்திருக்கிறார் பெருங்குளம் ராமகிருஷ்ண ஜோஸ்யர்.**

## மாதங்களில் இது சித்திரை

**வருடத்தின் முதல் மாதம். இம்மாதத்தின் தமிழ்ப் பெயர், மேழம். இந்த மாதத்தில் சூரியன் மேஷ ராசியில் இருப்பார். இந்த மாதத்தில் சித்திரை நட்சத்திரத்தில் பௌர்ணமி வருவதால் இதற்கு சித்திரை மாதம் என்கிற பெயர் ஏற்பட்டது. மனிதனின் காலக்கணக்கை எழுதும் சித்ரகுப்தன் பிறந்த மாதம் இதுவே என நம்பிக்கை. சூரியன் இந்த மாதத்தில்தான் அதிகமான அனலைக் கொடுக்கிறார். இதை கத்திரி வெயில் என்கிறோம்.**

காசிக்குப் போனால் தாம் விரும்பும் எதையாவது விட்டுவிட்டு வரச் சொன்னார்கள் நம் மூத்தோர். துறவுக்கான பால பாடமாக! நாம் கொத்தவரங்காயையும் கோவைக்

காயையும் விட்டோம்! என்ன சௌகரியம் பாருங்கள்! சிலர் குளித்து முடித்தபின் கோவணத்தை விட்டேன் என்பார்கள். அண்ணாச்சி நெல்லைக் கண்ணன் அடிக்கடி சொல்லும் பட்டினத்தார் பாடல் ஒன்றுண்டு. சும்மா சாலையில் நடந்து போகும் ஒருத்தனைப் பார்த்து, தீ, புழு, மண், பருந்து, நரி, நாய் யாவும், 'இதோ எமக்கான உணவு போகிறது' என்று சொல்லுமாம். நடமாடும் உணவகம்.

'எரி எனக்கென்னும், புழுவோ எனக்கென்னும், இந்த மண்ணும் சரி எனக்கென்னும், பருந்தோ எனக் கென்னும் தான் புசிக்க, நரி எனக் கென்னும், புன் நாய் எனக் கென்னும், இந்நாறுடலைப் பிரியமுடன் வளர்த்தேன், இதனால் என்ன பேறு எனக்கே!' என்பது பாடல்.

நம் முன்னோர் பேசுவார்கள் முன்பு, பிரசவ வைராக்கியம், மயான வைராக்கியம் என்று. பிரசவ வலியில் துடிக்கும் கர்ப்பிணி நினைப்பாளாம், வலி பொறுக்க மாட்டாமல், 'என்ன ஆனாலும் சரி! இனி இந்த ஆம்பிளையைக் கிட்டயே சேத்திரப்பிடாது' என்று, வைராக்கியமாக. மூன்று மாதங்கள் தாங்காது அந்த வைராக்கியம். அது போல சுடுகாட்டுக்குச் சென்று உறவினரை அல்லது நண்பரை எரியூட்டி, நீரினில் மூழ்கும்போது நினைத்துக்கொள்வார்களாம்,

''சவம், என்ன வாழ்க்கை? எல்லாரும் போய்ச் சேர வேண்டியதுதான் ஒரு நாளைக்கு... இன்னா பாரு! என்னா ஆட்டம் ஆடினான்! காலம் பற பாத்தா ஒரு பிடி சாம்பலு மிஞ்சும்! இதுக்குத்தானா இப்பிடிக் கெடந்து பேயாப் பறக்கோம்? சொத்து சுகம் மாடு கண்ணுண்ணு... எல்லாம் போட்டுக்கிட்டு ஒரு நாளு பொறப்பிட வேண்டியதுதானே!'' என்று.

ஆங்கிலக் கவிஞர் ஒருவர், எழுதினார். 'Sweet Thames run softly Till I end my song' என்று. அது போல் கங்கை சலசலத்து, அவசரமற்று ஓடிக்கொண்டிருந்தது. பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே புறப்பட்ட பெரும்பாம்பு ஒன்று ஊர்வதைப் போல. தலை போய்ச் சேர்ந்த இடம் யாது? வால் வந்து சேரப் போகும் காலம் எது?

பிணங்கள் எரிவதன் கணப்பையும் தாண்டி, குளிர் உட்புகுந்து எலும்பு தேடியது. தீச்சுவாலை எரிந்தும் அடங்கியும் ஆடியும் அசைந்தும் கங்கா மையாவுக்கு நடுச்சாம ஆர்த்தி காட்டியது. புற இருளும் நிச்சலனமும் இறுக்கமாகப் போர்த்திக்கொண்டன மனத்தை. பாரிக்கரைப் பார்த்தேன். ''ஜாயங் கே சாப்'' என்றார்.

விரக்தியல்ல, வெறுப்பல்ல, ஒரு வகைத் துறவு வந்து பூண் ஆயிற்று மனதில். இன்றோ, நாளையோ, எந்தச் சந்தில் காத்திருக்குமோ,

எந்த வடிவத்தில் எதிர்கொள்ளுமோ? $H_1N_1$, Ebola, டெங்கு, விரைந்து வரும் வாகனம், குண்டுவெடிப்பு, மாரடைப்பு... எத்தனை இல்லை?

திரும்புகையில் எனக்கு பனாரசில் இருந்து மாலை ஆறே முக்காலுக்கு டெல்லிக்கு விமானம். முன்னிரவு ஏழே முக்காலுக்கே டெல்லி சேர்ந்து விட்டேன். கோவைக்கு தொடர் விமானம் காலை ஆறரைக்குத்தான். மறுநாள் மாலை கோவையில் விஷ்ணுபுரம் இலக்கிய வட்டம் சார்பில் கவிஞர் ஞானக்கூத்தனுக்குப் பரிசளிப்பு விழா. விழாவில் நானும் கலந்துகொள்ள வேண்டும்.

இரவு முழுக்க விமான நிலையத்தில் காத்துக் கிடப்பானேன் என்று பட்டாளத்துக்கார நண்பர் ரவிச்சந்திரன் அருகிருந்த தனது தாவளத்துக்கு அழைத்துப் போனார் உறங்க. உணவுக்கும் உபசரிப்புக்கும் ஒரு குறைவும் இல்லை. தமிழ் நன்கு பேசிய கொங்கண் மராத்தி பட்டாளத்துக்காரரும் உடன் இருந்தார் உரையாட. விமான தளத்தில் இருந்து பாரக்சுக்குப் போகும்போதும் அதிகாலை அங்கிருந்து திரும்பி வரும்போதும் குளிர் 4°C. நண்பர் வீட்டில் உறங்க உல்லன் போர்வைகள் இருந்தன. ஆனால், கணப்பு இல்லை. குளிர் அடங்குவேனா என்று எதிர்க்கேள்வி போட்டது. அதிகாலை நான்கு மணிக்கு எழுந்து புறப்பட யத்தனிக்கையில் குளிரில் விறைத்துச் செத்து விடுவேனோ என்ற அச்சம் ஏற்பட்டது. அரிச்சந்திரா காட்டில் ஏற்படாத மரண பயம் வெருட்டியது. நரைத்துச் சாகும் வயதுதான் என்றாலும் உடனடியாகச் சாகப் பிரியமில்லை.

அண்ணா பாரதி மணி, 'புள்ளிகள் கோடுகள் கோலங்கள்' எனும் சமீபத்திய நூலில் விவரித்திருக்கும் நிகம்போத் காட் எனும் யமுனைக் கரை சுடுகாடு நினைவில் வந்தது.

**(கற்போம்...)**

## மாதங்களில் இது வைகாசி

**இது ஆண்டின் இரண்டாவது மாதம். இம்மாதத்தின் தமிழ்ப் பெயர், விடை. இந்த மாதத்தில் சூரியன் ரிஷப ராசியில் இருப்பார். வைகாசியின் தொடக்கத்திலும் கத்திரி வெயில் தொடரும். இந்த மாதத்தின் கடைசியில் கோடைக்கு விடை கொடுத்து வசந்தம் வீசத் தொடங்கும். வெயிலுக்கு விடை கொடுப்பதால் இம்மாதத்திற்கு 'விடை' எனப் பெயர் வந்தது.**

# கைம்மண் அளவு

ரசிகமணி என நேயத்துடன் விளிக்கப்படும், டி.கே.சி என்று அறியப்படும் டி.கே.சிதம்பரநாத முதலியார் இன்றிருந்தால் வயது 134. அவரது அணுக்கத் தொண்டர்களில் ஒருவராக இருந்தவர் ல.ச எனப்பட்ட வித்வான் ல.சண்முகசுந்தரம். இவ்வாண்டு மார்ச் 24ம் நாள் இரவில், தமது 94வது வயதில் காலமானார்.

பழுத்த பழம். தமிழ் அவரை அங்ஙனம் கனியச் செய்திருந்தது. செய்யுளை உரைநடை போல் வாசித்த புலவர் பெருங்கூட்டத்தில், அவர் பாட்டு போல படிப்பார். அவர் சொல்லும் விதத்தில், இருமுறை கேட்டால் மனப்பாடமாகிவிடும்.

'வெண்பா இருகாலில் கல்லானை வெள்ளோலை
கண் பார்க்கக் கையால் எழுதானைப் – பெண்பாவி
பெற்றாளே பெற்றாள் பிறர் நகைக்கப் பெற்றாளே'

**நாஞ்சில் நாடன்**

ஓவியம்: **மருது**



என்பார் பிற்கால ஔவையார். 'இரண்டு தரம் கேட்ட அளவி லேயே வெண்பாவைக் கற்றுக் கொள்ளாதவனையும், வெள்ளை ஓலையில் எழுதப்பட்டிருப்ப தைக் கண் பார்த்து நிற்கையில் கையால் எழுதாதவனையும், பெண் பாவி பெற்றாளே பெற் றாள், பிறர் நகைக்கப் பெற்றாளே' என்பது பொருள். இதனால் தெரிய வருவது, 'சொல்லும் விதத்தில் சொன்னால், எந்தப் பாடலும் இருமுறை கேட்டாலே மனப்பாடம் ஆகிவிடும்' என்பது. ஆக, பாட்டு சொல்லும் விதம் முக்கியமானது. இன்றைய புல வர் பலரும் அறியார் அதை.

நண்பர் மரபின் மைந்தன் முத்தையா ஏற்பாட்டில், ல.ச கோவைக்கு வந்தபோதெல்லாம் சந்தித்து, 'ரசனை' மாத இதழ் அலுவலகத்தில் ஒரு சிறு குழு வாக அமர்ந்து உரையாடி இருக்கி றோம். மிக இனிமையான, சுவார சியமான, ஆழ்ந்த புலமையுள்ள மனிதர். பாட்டுச் சொல்வதைக் கேட்டுக்கொண்டே இருக்கலாம். தமிழாசிரியர் பலரும் இன்று கல் லுக் கடலையாகப் பாட்டை நெய் யூற்றி வறுக்கும்போது, கனிந்த வருக்கைப் பலாச்சுளை யாக சேதப்படாமல் எடுத்துத் தருபவர் வித்வான் ல.சண்முக சுந்தரம். பாரதி அறநிலை ரவீந் திரன், 'ஆஹா... ஆஹா...' என்று இசைக் கச்சேரி உணர்வை வெளிப்படுத்துவார்.

ரசிகமணி பிறந்த நாள் விழாக்கள் மூன்றில் நான் கலந்து கொண்டிருக்கிறேன். கடைசியாகப் போனபோது சிக்குன் குனியா பாதிப்புடன் பாதியில் திரும்பினேன். தென் காசியில் ரசிகமணியின் வீடான 'பஞ்சவடி'யில், ரசிகமணியின் பேரர்களான தீப.நடராசன், தீப. குற்றாலிங்கம் சாந்நித்யத்திலும் வித்வான் ல.ச.வுடன் உரையாடி இருக்கிறோம். அவரது சம வய தினரான கரிசல் எழுத்தாள மேதை கி.ராஜநாராயணனும் ஒருமுறை உடனிருந்தார்.

தமிழுக்கு என்றோர் உள்ளுறை இனிப்பு உண்டு. நெல்லிக்காயின் இனிப்பு அது. எம்மொழிக்கும் இருக்கலாம்தான். எனினும் எம் மொழி பற்றித்தானே யாம் பேச வியலும்? தமிழ்ச் சொற்கள் புண ரும் விதமே இசைவின் இனிமை யைப் பெருக்குவதாக இருக்கும். இன்றுள்ள வன்புணர்ச்சியாளர் கள் அந்த இயல்பு சுகம் உணர மாட்டாதவர். எல்லோரும் ரசிகமணி வீட்டுப் பிசிறில்லாத வட்டத் தோசையையும் எள்ளு மௌளகாப் பொடியையும் செக்கு நல்லெண்ணெயையும் சிலாகித்துக் கொண்டிருக்கும்

போது, வித்வான் ல.ச., ரசிகமணி பாட்டுச் சொல்லும் விதம் பற்றி உரையாடுவார்.

அவர் பாட்டுச் சொல்லும் பாணியே வித்தியாசமாக இருந்தது. கையெடுக்காமல், கனிந்த மாம்பழத்தின் தோல் சீவுவதைப் போல, சுருள் சுருளாகச் சொற்கள் சந்தி பிரித்து வந்து விழும். கம்பன் கவியை 'செவி நுகர் கனிகள்' என்பார். சொல்வார் சொன்னால், எந்த நல்ல கவிதையும் செவி நுகர் கனிதாம். வித்வான் ல.சண்முகசுந்தரம் அவர்களை நினைவுகூர்வதற்காக, அவர் சொன்ன பாடல்கள் பலவற்றினுள் ஒன்று இங்கே...

**‘எல்லோரும் உறங்குகிறார்கள். இரவு தனித்து இருக்கிறது. இரவுக்குத் துணையாக நான் மட்டுமே விழித்திருக்கிறேன்...’**



ஒப்பிலாமணிப் புலவர் பாடியது. இவரது ஜனனம், தேசம், காலம் போன்ற வர்த்தமானங்கள் எதுவும் கிடைக்கவில்லை. தமிழூர் அறிஞர், பேராசிரியர், முனைவர் ச.வே.சுப்பிரமணியன் அண்மையில் பதிப்பித்த தனிப்பாடல் களஞ்சியத்துள் 7159 பாடல்கள் உண்டு. அவற்றுள் 1067வது பாடல். ஒப்பிலாமணிப் புலவர் பெயரின் கீழ் தரப்பட்டவை 27 பாடல்களே.

இளம் பெண்ணொருத்தி, கணவனை அல்லது காதலனைப் பிரிந்து தனித்திருக்கிறாள், இரவெல்லாம். போருக்குச் சென்றானோ, பொருள் தேடப் பிரிந்தானோ, கல்விக்காகப் போனானோ, தூதுவனாய் நடந்தானோ, வேறு அரசுப் பணி நிமித்தம் அகன்றானோ? பொழுது விடியுமானால் பல்வேறுபட்ட வேலைகளில் பொழுது போவது தெரியாது அவளுக்கு! வாசல் தெளித்தலில் தொடங்கி, மாடு கறத்தல், தண்ணீர் இறைத்தல், கன்று காலி மேய்த்தல், சமைத்தல், தோட்டக்காட்டு வேலை என்று ஆயிரம் இருக்கும்! உறவுகள், தோழிகள், அக்கம் பக்கத்தவர் என உரையாடல் நடக்கும். எனவே பகலில் தனிமைத்துயர் அடைய மாட்டாள். ஆனால் துயரம், நீண்ட இரவுகள் தாம். இரவு நீண்டு நடக்கிறதே அன்றி, விடியலுக்கு உண்டான அறிகுறிகள் காணோம். கோழி

கூவக் காணோம். புள்ளினம் சிலம்பக் காணோம். ஒழுங்கு மரியாதையாகக் கீழ்த்திசையில் உதிக்கும் சூரியன் எங்கே போய் ஒழிந்தான்? இந்த இரவு இப்பாடு படுத்துகிறதே! பரிதியின் தேரோட்டியும் குதிரைகளும் போய்த் தொலைந்ததெங்கே?

**'அரவம் கரந்ததோ? அச்சு மரம் இற்றுப்**
**புரவி கயிறு உருவிப் போச்சோ? – இரவிதான்**
**செத்தானோ? இல்லையோ, தீவினையோ? பாங்கி எனக்கு**
**எத்தால் விடியும் இரா?'**

இது பாடல். தலைவி, தோழியை நோக்கி வருந்தி வினவுவதான பாவம். பாங்கி என்றால் தோழி. அரவம் எனில் பாம்பு. புரவி எனில் குதிரை. இரவி எனில் சூரியன்.

'தோழி! இந்த இரவு எனக்கு எப்படி விடியப் போகிறது? சூரிய கிரகணம் போல, ராகு கேது எனும் பெரும் பாம்புகள் சூரியனை மறைத்துக் கொண்டனவா? ஏழு வண்ணக் குதிரைகள் பூட்டிய தேரில் வரும் சூரியனின் தேர் அச்சு இற்று, குதிரைகள் கயிறு உருவிப் பாய்ந்து போய் விட்டனவா? இரவிதான் செத்து விட்டானா? இல்லை வேறு ஏதும் தீவினையோ? எப்போது விடியும் இந்த இழவெடுத்த இரவு?'

இந்தப் பாடலைப் பெரியவர் ல.ச சொல்லிச் சிலமுறை கேட்டிருக்கிறேன். அவர் சொல்லும் பாடலின் தொனியை, பாவத்தை என்னால் எழுதிக் காட்ட இயலாது. ஷெனாயில் இசைத்துக் காட்டவும் தெரியாது. ஓரளவுக்குச் சொல்லி வேண்டுமானால் காட்டலாம்.

இது 1932ம் ஆண்டுப் பதிப்பான 'தனிப்பாடல் திரட்டி'ல் கண்டவாறு இங்கே தரப்பட்டுள்ளது. சென்னை – இட்டா பார்த்தசாரதி நாயுடு குமாரன் இ.கோவிந்தராஜுலு நாயுடு பதிப்பித்தது. காஞ்சிபுரம், மகாவித்வான் ராமசாமி நாயுடு உரை எழுதியது. தமிழ்ப் பேராசிரியரும் சட்ட விரிவுரையாளருமான கா.சுப்பிரமணிய பிள்ளை 1939ல் பதிப்பித்த தனிப்பாடல் திரட்டும் பாடலை மேற்கண்டவாறே சொல்கிறது.

ஆனால், வித்வான் ல.ச பாடலைச் சொல்லும்போது, பாடபேதம் ஒன்று காட்டுவார். 'இரவிதான் செத்தானோ? இல்லையோ தீவினையோ? பாங்கி எனக்கு எத்தால் விடியும் இரா?' என்பதை, 'இரவிதான் செத்தானோ, வேறு வழிச் சென்றானோ? பேதை எனக்கு எத்தால் விடியும் இரா?' என்று சொல்வார். அது இன்னும் கூடுதல் பொருளும் பாவமும்

பகருவதாக இருந்தது எமக்கு. அதுதான் ரசிகமணியின் பள்ளிக் கூடம் என்பது!

'அரவம் கரந்ததோ? அச்சு மரம் இற்றுப் புரவி கயிறுருவிப் போச்சோ?' என்று சொல்லிச் சற்று நிறுத்தி விட்டுச் சொல்வார் ல.ச, "ஆகா... அடாடா... என்னமா வருது பாத்தேளா பாட்டு?" - அவரது தோய்வு, லயிப்பு நம்மையும் தீப்போலப் பற்றிக்கொள்ளும். ரசிகமணியை விட நாற்பதாண்டுகள் இளையவர். ரசிகமணி அமரரானது, அவரது 72வது வயதில். அந்தக் காலத்தில் வித்வான் பரீட்சை கொடுத்துத் தேற வேண்டுமானால், உண்மையிலேயே ஒருவர் வித்வானாக இருக்க வேண்டும். இந்தச் சந்தர்ப்பத்தில் மகாவித்வான் திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம்பிள்ளை, மகாவித்வான் தண்டபாணி தேசிகர் போன்றோரை நினைத்துப் பார்க்கலாம். ல.ச கோவை வந்ததோர் சந்தர்ப்பத்தில் பாரதி அறநிலை ரவீந்திரனும் மரபின் மைந்தன் முத்தையாவும், ரசிகமணி பாணியில் பாட்டுச் சொல்லக் கேட்டு பதிவு செய்தார்கள், கிட்டத்தட்ட இரண்டு மணி நேரம்.

நாவூறக் கேட்டிருக்கிறேன். ல.ச இப்படிப் பாட்டுச் சொல்வார் எனில் ரசிகமணி எப்படிச் சொல்லி இருப்பார்? ரசிகமணி பரம்பரையில் வந்த ஒரு படைப்பிலக்கியவாதி கி.ராஜநாராயணன். தொடர் சங்கிலியின் மற்றொரு கண்ணி. 'கரிசல் இலக்கியத்தின் முன்னத்தி ஏர்' என்று போற்றப்பட்ட ஆளுமை. 94 வயதான அவரைப் பார்க்கவென்றே கோவை விஜயா பதிப்பக அண்ணாச்சி வேலாயுதமும் நானும் போன மாதம் பாண்டிச்சேரி போனோம். மீசை வைத்த சிவபெருமான் போல, மீசை வைத்த கி.ராவை அன்று பார்த்தோம். அரை நாள் பேசிக்கொண்டிருந்த அன்றும் ரசிகமணி பற்றிய செய்தியொன்று சொன்னார் கி.ரா. இங்கே அதைப் பகிர்ந்துகொள்வது என்பது இலக்கிய அரசியலாகிவிடும்.

வித்வான் ல.சண்முகசுந்தரத்திடம் பாடல் கேட்டு வீட்டுக்கு வந்தால் ஒப்பிலாமணிப் புலவரைத் தேடத் தோன்றும். தோன்றியது எனக்கு. கண்ட இன்னொரு பாடல்:

**'ஆழிவாய்ச் சத்தம் அடங்காதோ? யான் வளர்த்த**
**கோழிவாய் மண்கூறு கொண்டதோ? - ஊழி**
**திரண்டதோ? கங்குல் தினகரனும் தேரும்**
**உருண்டவோ பாதாளத்துள்?'**

இந்தப் பாடலும் மேற்

சொன்ன பாடலின் பாவம் தான். 'கடலின் அலையோசை அடங்காதோ? நான் வளர்த்த சேவற்கோழியின் வாயில் மண் அடைத்து விட்டதோ? அதுவும் கூவ மாட்டாமல் கிடக்கிறதே! ஊழிக்காலம் திரண்டு விட்டதா இந்த இரவில்? சூரியனும் அவன் தேரும் பாதை பிறழ்ந்து, தவறிப் பாதாளத்தில் உருண்டு போச்சோ?'

ஒப்பிலாமணிப் புலவரின் வெண்பாவை அடியொற்றிச் சென்றால், நாம் சென்றடைவது திருக்குறளின் 'படர் மெலிந்து இரங்கல்' அதிகாரம். பாடல் எண் 1168.

**'மன்னுயிர் எல்லாம் துயிற்றி அளித்து, இரா**

**என்அல்லது இல்லாத் துணை'**

'இந்த உலகத்து உயிர்களை எல்லாம் உறங்கச் செய்து காக்கும் இரவுக்கு என்னை அல்லாது வேறு யார் துணை?' இந்தப் பாடல் நுட்பமாக ஒரு உணர்வைச் சொல்கிறது...'எல்லோரும் உறங்குகிறார்கள், இரவு தனித்து இருக்கிறது. இரவுக்குத் துணையாக நான் மட்டுமே விழித்திருக்கிறேன்' என்பது. மிக நுணுக்கமாக தனிமைத்துயரும் பிரிவின் வேதனையும் உணர்த்தும் பாடல்.

போன தலைமுறை எழுத்தாளர் ஒருவர், அவர் காலத்தவரால் இமாலயத்துக்கு இணையாகக் கொண்டாடப்பட்டவர், சொன்னார் ஒரு நேர்காணலில், 'திருக்குறள் நீதி நூல், அது இலக்கியம் ஆகாது' என்று. திருக்குறள் முழுமையாகக் கற்றிருக்க மாட்டார் போலும். கல்லாமல் கருத்துச் சொல்கிறவர் மீது நமக்கு இரக்கமே ஏற்படுகிறது. சொன்ன குறளொன்று போதாதா?

ஒப்பிலாமணிப் புலவரைத் தொடர்ந்து திருவள்ளுவருக்கு வந்தால், அவர் நம்மைக் கைப்பிடித்து இட்டுச் செல்வது குறுந்தொகைக்கு. குறுந்தொகையின் ஆறாம் பாடல்; நெய்தல் திணையில் பதுமனார் பாடியது. அவரை அடுத்து, பெரும்பதுமனார் என்று ஒருவரும் பரூஉ மோவாய்ப் பதுமனார் என்று வேறு ஒருவரும் இருந்திருக்கிறார்கள். பத்துப்பாட்டு - எட்டுத்தொகைநூல்களினுள் பதுமனார் பெயரில் கிடைக்கும் பாடல் இது ஒன்றே!

பதுமனார் பாடல் இதோ...

**'நள்ளென்று அன்றே யாமம்; சொல் அவிந்து**

**இனிது அடங்கினரே மாக்கள்; முனிவு இன்று**

**நனந்தலை உலகமும் துஞ்சும்;**

**ஓர்யான் மன்ற துஞ்சாதேனே!'**

'இருள் செறிந்து கிடக்கிறது இரவு. மக்கள் எல்லோரும் பேச்ச

டங்கினர். வெறுப்பின்றி, பரந்த இவ்வுலகமும் உறங்குகிறது. நான் ஒருத்தி மட்டுமே உறங்காமல் கிடக்கிறேன்'. என்ன தன்னிரக்கம் பாருங்கள்!

வித்வான் ல.சண்முகசுந்தரம் சொன்ன ஒரு பாடலின் பாவம் தொடர்ந்து பயணித்தால் அது நம்மை சங்க இலக்கியம் வரை இட்டுச்செல்கிறது. நினைவு கூர்ந்தால் தற்கால சினிமாப் பாடலுக்கும். அது, பாடல் சொல்லும் திறன், உத்தி, அனுபவம், ரசனை. மேலும் அது கண்டறியா ரசிகமணியின் மேதைமை பாலும் இட்டுச் செல்லும். அவர் காலத்தில் வாழ்ந்தவர்கள், பழக நேர்ந்தவர்கள் கொடுத்து வைத்தவர்கள். ராஜாஜி, கல்கி, எம்.எஸ், ஜஸ்டிஸ் மகராஜன், ம.பொ.சி, ல.ச, கி.ரா என நீண்டதோர் பட்டியல் அது. பெருமகனார் மட்டுமென்று இல்லை, பாமரர்களும் அவரை அனுபவித்திருக்கிறார்கள்.

வித்வான் ல.சண்முகசுந்தரம் எழுதி, 1970ல் வெளியான, இன்று வரை மறுபதிப்பு இல்லாத, 'தமிழும் தாவரமும்' என்ற நல்ல நூல் ஒன்று உண்டு. 220 பக்க அந்த நூலின் ஒளி நகல் என்னிடம். அபூர்வமான புத்தகம்.

அழிந்து வரும் விலங்குகள், பறவைகள், தாவரங்கள் பற்றி எல்லாம் சுற்றுச்சூழலியலாளர் கவலைப்படுகின்றனர். எனக்கும் அது பற்றிக் கவலை உண்டு. அது போல, தமிழில் மெய்யான புலமையும் தேர்ச்சியும் கொண்ட இனமும் அழிந்து வருகிறதே என்று கவலைப்படுகிறேன். மூலிகைத் தாவரங்கள் அழிந்து நச்சுக் களைகள் வளர்ந்து மண்டிக் கிடக்கும் தோட்டமாகிப் போயிற்று எம் மொழி. வள்ளுவரை மேற்கோள் காட்டினால், 'இளையதாக முள் மரம் கொல்க'.

(கற்போம்...)

## தங்கத் துளிகள்



ஆபரணத் தங்கம் சுத்தமானது தானா என்பதை வெறுமனே தேய்த்துப் பார்த்தெல்லாம் கண்டுபிடிப்பது ரொம்பக் கடினம். இதற்கெனவே தற்போது xrf எனப்படும் விசேஷ இயந்திரங்கள் உள்ளன. தங்கத்துக்கு தரச் சான்று தரும் அமைப்புகள் பலவும் இந்த இயந்திரங்களைத்தான் பயன்படுத்துகின்றன. இவை நகைகளின் மீது கதிர் ஒளிகளைப் பாய்ச்சி, நகையில் எவ்வளவு தங்கம் உள்ளது எனச் சொல்லி விடும்.

# கைம்மண் அளவு

தேச விடுதலை பெற்று ஒன்பது ஆண்டுகளுக்குப் பிறகே, திருவிதாங்கூர் சமஸ்தானத்திலிருந்து பிரிக்கப்பட்ட தோவாளை, அகஸ்தீஸ்வரம், கல்குளம், விளவங்கோடு, நெய்யாற்றின்கரையின் பாதி தாலுகாக்களைக் கொண்டு கன்னியாகுமரி மாவட்டம் உருவாயிற்று. இந்த மாவட்டத்துக்காரர்கள் நெடுங்காலம் ரயில் பார்த்தது சினிமாக்களில்தான். திருநெல்வேலி அல்லது திருவனந்தபுரம் போக வேண்டும், ரயிலை நேரில் பார்க்க. புகைவண்டி என்றும், தொடர்வண்டி என்றும், இருப்புப்பாதை வண்டி என்றும், மின் தொடர்வண்டி என்றும், ரயில் காடி என்றும் அழைக்கப்பட்டும், இன்று கூட 'ரயில்' என்ற சொல் மக்கள் புழக்கத்தில் இருந்து மாயவில்லை.

**நாஞ்சில் நாடன்**

ஓவியம்: **மருது**



ஏதோ ஒரு கல்யாணத்துக்காக, திருவனந்தபுரம் போன எங்கள் குடும்பம், ரயில் பார்க்க, திருவனந்தபுரம் தம்பானூரில் இருந்த சென்ட்ரல் ஸ்டேஷன் போனது. அங்கு ரயில் ஏறி, அடுத்த நிறுத்தமான பேட்டையில் இறங்கினோம். குடும்பத்தினர் 15 பேர் இருப்போம். பேட்டை ஸ்டேஷனிலிருந்து வெளியே வரும்போது பரிசோதகர் டிக்கெட் கேட்டார். ஐந்தாம் வகுப்பு தோற்ற பெருமை உடைத்த அப்பாவுக்கு, ரயிலில் ஏறிப் பார்க்க கட்டணம் செலுத்தி பயணச்சீட்டு வாங்க வேண்டும் என்று தெரிந்திருக்கவில்லை. நிலைமை உணர்ந்த பரிசோதகர், மலையாளத்தில் தெறிகள் சொல்லி வெளியே அனுப்பினார். என்ன, 'பாண்டித் தமிழம் மாரு' என்று சொல்லி இருக்கலாம். எனக்கு அப்போது பத்து, பன்னிரண்டு வயதிருக்கும்.

விடுதலை பெற்று அறுபது ஆண்டுகள் பின்னரே எமக்கு முதல் மருத்துவக் கல்லூரி வந்தது. ரயில் பார்க்க பொன் விழா ஆண்டு வரை காத்திருந்தோம். ஏனெனில் நாம் ஜனநாயக, சோஷலிச, மதச்சார்பற்ற, நீதி வழுவாத மக்களாட்சி.

பி.யு.சி தேறியதும் பொறியியல் பட்டப்படிப்பு நேர்காணலுக்கும், பி.எஸ்சி தேறியதும் இன்கம்டாக்ஸ் இன்ஸ்பெக்டர் தேர்வு எழுதவும், எம்.எஸ்சி கடந்ததும் வேலை தேடி பம்பாய்க்கும் என மூன்று முறை எனக்கு சென்னை நோக்கிய பயணம். அன்று ஊரிலிருந்து ஒன்றே முக்கால் மணி நேரத்துக்கு ஒரு முறை வரும் டவுன் பஸ் பிடித்து நாகர்கோவில் வந்து, அங்கிருந்து இன்னொரு பஸ் ஏறி 80 கி.மீ திருநெல்வேலி அடைந்து, பிறகு ரயிலேற வேண்டும்.

பின்னாட்களில் ரயில் பயணங்களும் பேருந்துப் பயணங்களும் என் வாழ்க்கை நெறி ஆயின. தால்சாவல் உண்பதற்கான மார்க்கமும். முன்பதிவுப் பயணமோ, பொது கோச்சோ, ரயிலில் ஏதோ ஒன்று. உலகப் பணக்காரர்கள், விமானத்தில் பெரும்பான்மையினர் பயணம் செய்யும் வகுப்பை 'கால்நடை வகுப்பு' என்கிறார்கள். நம்மூர் அன்ரிசர்வ்ட் கோச் பயணத்தை என்னென்பார்கள்? 'பன்றித் தொழுவம்' என்றா?

அந்த நாட்களில் எனது நிலையம் பம்பாய். பணி நிமித்தம் இரவுப் பயணங்கள் நாக்பூர், சோலாப்பூர், கோலாப்பூர், பரோடா, சுரேந்திர நகர் என... ஒற்றை ஆளாக. ஞாயிறு இரவு புறப்பட்டு அடுத்த ஞாயிறு காலை வருகை. ஏழு இரவுகளும் ஆறு பகல்களும். அதற்குத் தோதாக உடைகள், பிற அடங்கிய

**கண்முன்னே, இரு சக்கர வாகனத்தில் அடிபட்டுக் கிடப்பவனைப் பொருட்படுத்தாது வேகமெடுத்துப் போகின்றன ஊர்திகள். தன் பங்கோடு நில்லாமல் ஏமாளி பங்கையும் பறித்துக்கொள்ள முண்டுகிறது உலகம்.**



ஏர்பேக், தோளில். கையில் எமது நிறுவனத்தின் விலைப்பட்டியல்கள், கேட்டலாக், தகவல் கோப்பு, விசிட்டிங் கார்டு எனக்கொண்ட பெட்டி. பணம் கால்சட்டை பாக்கெட்டில்... இரண்டு மூன்று இடங்களில் பிரித்து! அன்றைக்கெல்லாம் செல்போன், சார்ஜர், லேப்டாப் போன்ற சுமைகள் இல்லை. வாழ்க்கை நன்றாகத்தான் இருந்தது. வாசிக்கப் புத்தகங்களும் பயணப்பொருட்களில் இருந்தன.

திருட்டுக்கு அஞ்சவில்லை. நம்மிடம் திருடிக் கொண்டு போக என்ன உண்டு? இருக்கும் அற்ப சொற்ப அறிவும் யாருக்கு வேணும்? இன்றும் சிலர் பகல் நேர வண்டியிலும் பயணப்பெட்டியைப் பூட்டி, அதைச் சங்கிலியால் பிணைத்து, பூட்டை இழுத்துப் பார்த்து பயணம் செய்கிறார்கள். நமக்கு சிரிப்பு வரலாம், ஆனால் அவருக்கு முன் அனுபவம் இருக்கும்தானே! நான் சிறுவனாக இருந்தபோது, ரயில் பயணங்களில் திருட்டு பயம் பற்றிய சுவாரசியமான செய்திகள் உண்டு-

‘பெட்டியைத் தலைக்கு வைத்துப் படுக்க வேண்டும். செலவாதிக்குப் போனாலும் கையிலே கொண்டு போகணும். ஒறங்கச்சிலே கள்ளப் பயக்கோ வந்து உள்ளங்காலை நக்குவான்... அல்லது ஊரல் எடுக்க என்னமாம் தடவுவான்... தலையத் தூக்கிப் பாத்தா பொட்டியைக் காணாது பாத்துக்கோ!’ எனும் ரீதியில்.

அன்றைக்கெல்லாம் தண்ணீர் போத்தல் விலைக்கு வரவில்லை. PET பாட்டில்களே பின்னாட்களில்தான் வந்தன. பெரிய ரயில் நிலையங்களில் தண்ணீர் பிடித்துக்கொள்ள வேண்டும், அரக்கப் பரக்க ஓடிப் போய், குடிநீர்க் குழாயில் ஒரு கண், ரயிலில் ஒரு கண். கைக்குழந்தைகளுடன் பயணம் செய்வோர் பாடு சிரமம். குழந்தைக்குப் பால் அல்லது வெந்நீர் வாங்க ஓட வேண்டும். அன்று சிரமம் உணர்ந்து தண்

ணீர் பிடித்துத் தர, பால் வாங்கி வர உதவும் பரோபகாரிகளும் நிறையப் பேர் இருந்தனர்.

முன்பதிவு செய்த என் பயணங்களில் கீழ் பெர்த் கேட்டு வாங்குவேன். நேரமற்ற நேரத்தில் வரும் என் நிலையத்தில் இறங்க ஏதுவாக இருக்கும். மேல் பெர்த்தில் வேறு வகையான அனுகூலங்கள் உண்டு. எப்போது வேண்டுமானாலும் எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் உறங்கலாம். எவரும் தொந்தரவு செய்து காலைச் சுரண்ட மாட்டார்கள். பெரும்பாலான என் பயணங்களில், தேர்ந்து கீழ்ப் படுக்கை வாங்கி இருந்தாலும், முகம் அவதானித்து வந்து கோரிக்கைவைப்பார்கள். கோரிக்கைகள் கீழ்க்காணும் விதத்தில் அமையும்.

1. அம்மாவால மேல் பெர்த் ஏற முடியாது. நீங்க மேல் பெர்த் எடுத்துக்கிறீங்களா?

2. நானும் வொய்ஃபுமா ஊருக்குப் போறோம். எனக்கு பெர்த் இந்த கோச்லே! வொய்ஃபுக்கு S11. கைக்குழந்தை வேற... கொஞ்சம் ஒப்லைஜ் பண்ணுங்க!

3. எங்கூர்ல அம்மன் கோயில்லே கொடை, கேட்டேளா! நாலஞ்சு குடும்பமா ஊருக்குப் போறோம்... ஒருத்தன் S7லே மாட்டிக்கிட்டான்... சவம், சின்னப் பெய! கொஞ்சம் ஒத்தாசை செய்யுங்களேன்....

4. அய்யாக்கு கால் மூட்லே ஆபரேஷன் பாத்துக்கிடுங்க... அப்பர் பெர்த் ஏற முடியாது... தயவு பண்ணுங்க ஐயா!

மேற்கொண்டும் சொல்லும் காரணங்களை அவரவர் கற்பனைக்கு விடுகிறேன். எனக்கென்று இல்லை, இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு பலருக்கும் இவ்வனுபவங்கள் இருக்கலாம்.

கூடுமான வரை முகம் சுளிக்காமலும், ஈண்டையானும் மனிதன் என்பதால் சில சமயம் முகச்சுளிப்புடனும் இடம் மாறிக் கொடுத்திருக்கிறேன்.

ஒருமுறை பம்பாயிலிருந்து புறப்பட்ட தாதர்-மெட்ராஸ் விரைவு வண்டி. எதிர் இருக்கைக்காரர் நாட்டியக் கலைஞர். பம்பாயில் நிகழ்ச்சி முடிந்து திரும்பிக் கொண்டிருந்தார். நாட்டியத்தில் வழுவூர் பாணி பந்தநல்லூர் பாணி வேறுபாடுகளை விளக்கிக்கொண்டிருந்தார். பேச்சு நல்ல சுவாரசியத்தில் இருந்தது. அவர் கொணர்ந்திருந்த மிளகாய்ப் பொடி- நல்லெண்ணெய் காப்பிட்ட இட்லி சில என்னுடன் பகிர்ந்து கொண்டார். புனேயில் ரயில் நின்று புறப்பட்டவுடன் என் முகம் நோக்கி ஒரு குரல். மேற்சொன்ன காரணங்களில் இரண்டாவது. என் தரப்பை நாட்டியக் கலைஞர் வாதிட்டார்.

“இப்பிடி பாதிப் பிரயாணத்திலே வந்து கேட்டா எப்பிடிங்க? லுங்கிக்கு மாறியாச்சு... இப்பப் போயி ‘சூட்கேசும் சோத்து மூட்டையும் எடுத்துக்கிட்டு S6க்கு போ’ன்னா எப்பிடி?”

வந்தவர், “தப்புதாங்க... வேற நிவர்த்தி இல்லே. கைப்பிள்ளையைக் கைமாத்தி வச்சுக்கிட வேற யாரும் இல்லே!”

நான் புறப்படும் மனநிலைக்கு வந்துவிட்டேன். “லக்கேஜ் நான் தூக்கிக்கிடுதேன் சார்” என்றார் நயந்த குரலில். நமக்கு வேறு மார்க்கமென்ன?

இன்னொரு முறை, இடமாற்றம் ஒப்புக்கொண்டு போனதில், முன்பதிவில் இருந்து ஆர்.ஏ.சி இருக்கையில் போய் விழுந்தேன். கேட்டுக்கொண்டவரிடம் முறையிட்டதில், “எப்பிடியும் சோலாப்பூர்லே உங்களுக்கு பெர்த் கன்ஃபர்ம் ஆயிடும் சார்” என்றார். ‘என்ன தவம் செய்தனை?’ என்று உள்மனம் கேட்டது.

தனது துறையில் இடமாற்றம், கவுன்சிலிங் நடக்கும்போது பொறுப்பில் இருக்கும் அதிகாரிகள் பல இலக்கங்கள் தேத்தி விடுகிறார்கள் என்பது செவிவழிச் செய்தி! தமது துறையில், தம் கீழ் வேலை செய்வோரிடமே இடமாற்றத்துக்குப் பணம் கேட்கும் மனிதரைக் குறிக்க அகராதியில் சொல் உண்டா? தன் சதை அறுத்து, உப்பு மிளகு தூவி, தானே தின்னும் சமூகமாக மாறிப் போயிற்று நமது. இப்போது யோசித்துப் பார்க்கிறேன், ரயில் பயணத்தில் ஒரு பெர்த் மாற்றிக் கொள்வதற்காக சில நூறுகள் கேட்டிருக்க மாட்டார்களா? எங்கோ வாசித்த நினைவு...

**‘முடிவளமும் சருமப் பொலிவும்’ என ஹோமியோபதி டாக்டர் ஆர்.ஞானசம்பந்தம் எழுதிய நூலிலிருந்து சில தகவல்கள் இந்த இதழில்...**




தினமும் இயற்கையாக ஒருசில முடி உதிர்வதும் வளர்வதும் இருக்கும். ஆனால் வளர்பருவத்தில் இருக்கும் முடி கொட்டினால் அதை கவனிக்க வேண்டும். இதை எப்படிக் கண்டுபிடிப்பது? விழுந்த முடியை வெள்ளைத்தாளில் வைத்துப் பாருங்கள். முடியின் அடிப்பகுதி பழுப்பு நிறத்தில் இருந்தால், அது வளர் பருவத்தில் விழுந்துள்ளது. இயல்பான நிறத்தில் இருந்தால், அது சிதை பருவத்தில் இயல்பாக விழுந்துள்ளது என அர்த்தம்.

வழக்கமாக பாலியல் தொழிலாளியிடம் கலவி செய்பவன், சொந்த மனைவியைக் கூடிவிட்டு, அவள் தலையணையின் கீழே சலவைத் தாள்கள் வைத்தான் என்று!

சில சமயம் சுத்தமான புது கோச்சில் இருந்து, காற்றாடி சுழலாத டப்பா கோச்சினுள் தள்ளப்பட்டிருக்கிறேன். அமைதியான பெட்டியில் இருந்து கல்யாணக் கூட்ட ஆதாளியில் செலுத்தப்பட்டிருக்கிறேன். அல்லது திறக்கவோ, மூடவோ முடியாத சன்னல் இருக்கைக்கு.

இன்று கணினி முன்பதிவு. இருபத்தோரு வயது காளைக்கு கீழ்ப் படுக்கையும், எழுபது வயது முதுமைக்கு மேற்படுக்கையும் போடும் அது. கால் மூட்டு அறுவை சிகிச்சை செய்தவரா, பாரித்த உடம்பா, மணிக்கு ஒரு தரம் உபாதை இறக்கப் போகும் நீரிழிவா என்பன எல்லாம் கணினியின் அக்கறைகள் அல்ல.

சென்ற ஆண்டில் கோவை விஜயா பதிப்பகம் வேலாயுத அண்ணாச்சியுடன் இரவில் சென்னையிலிருந்து சேரன் விரைவு ரயிலில் கோவை பயணம். இருவருக்குமே மேல் படுக்கை. அண்ணாச்சிக்கு 75 வயது, எனக்கு 67. கீழ்ப் படுக்கைகள் இரண்டிலும் கோவை கல்லூரி ஒன்றில் வாசிக்கும் இரு மாணவிகள். அண்ணாச்சி அவருக்கே உரித்தான கலகலப்புடன் கேட்டார், ''ஏம்மா, ரெண்டு பேரும் மேலே போறீங்களா? தொந்தரவு இல்லாம தூங்கலாம்!''

இருவரும் சேர்ந்திசை பாடும் குரலில் கொஞ்சிச் சொன்னார்கள், ''இல்ல அங்கிள்... ஆங்கில்லே பிராப்ளம் இருக்கு!''

''பரவால்ல அண்ணாச்சி, ஏறுங்க! நான் பிடிச்சுக்கிடுவேன்'' என்றேன். அவர் எதையும் பெரிதாகப் பொருட்படுத்துபவர் இல்லை. அந்த வயதில், காலில் இருந்த புண்ணுடன், சற்றுப் பெரிய உடம்பை வைத்துக் கொண்டு, மேல் பெர்த் ஏறியது காணச் சங்கடமாக இருந்தது.

சில வாரங்கள் முன்பு, இரவுப் பயணமாக ரயிலில் திருவனந்தபுரம் போனோம். எனக்கும், மனைவிக்கும், இரண்டு வயது மகனுடன் இருக்கும் எம் மகளுக்குமாக இரண்டு மேல் படுக்கை, ஒரு சைடு அப்பர். கணினியின் மனிதாபிமானம்! யாரிடமாவது ஒரு கீழ்ப்படுக்கை கேட்டுப் பார்க்கலாம் என்ற நம்பிக்கை மனைவிக்கு. கீழ் இரண்டு பெர்த்துகள் பிடித்திருந்த தம்பதியினரிடம் கேட்டாள் மனைவி. தமிழர்கள்தான். ''உடம்பு சரியில்லீங்க!'' என்று சொல்லி விட்டனர்.

விரைந்து நலம் பெற பிரார்த்

தனை செய்து விட்டு மனைவியைப் பார்த்தேன். "பெட்ஷீட் வச்சிருக்கேன்... தரையிலே விரிச்சுப் படுக்க வய்க்கேன்!" என்றாள்.

உரையாடலைக் கவனித்துக் கொண்டிருந்த சைடு லோயர் மலையாளி, "இவிடக் கிடந்தோழின்" என்றார். 'நல்லார் ஒருவர் உளரேல், அவர் பொருட்டு எல்லோர்க்கும் பெய்யும் மழை'.

கண் முன்னே, இரு சக்கர வாகனத்தில் அடிபட்டுக் கிடப்பவனைப் பொருட்படுத்தாது வேகமெடுத்துப் போகின்றன ஊர்திகள். தன் பங்கோடு நில்லாமல் ஏமாளி பங்கையும் பறித்துக் கொள்ள முண்டுகிறது உலகம். 'ஏபி நெகட்டிவ் ரத்தம் உடனடியாக இருபது யூனிட் வேண்டும், அவசரம்' என்று விளம்பரங்கள் வருகின்றன. கண், சிறுநீரகம், இதயம், கல்லீரல் என தானம் கோருகின்றனர். தமக்கு ஒன்று என்றால் உலகமே எதிர் நின்று, ஏந்தல் மாந்தல் செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கின்றனர். முதுகில் புத்தகச் சுமையுடன் நெடுஞ்சாலையில் இரண்டு கிலோமீட்டர் நடக்கும் சிறுவரை ஏற்றிக்கொள்ளலாம் என எவரும் நினைப்பதில்லை. பென்ஸும், ஆடியும், ஸ்கோடாவும் அவர் ஏறினால் அழுக்காகி விடும்!

'செத்தார்க்கு நோற்பார் பல நாள்' என்கிறது சிறுபஞ்சமூலம். செத்துப் போனவனுக்குப் பல நாட்கள் நோன்பிருப்பார்கள். பல்வகைப் பதார்த்தங்கள் படைத்து சாமி கும்பிடுவார்கள். 'நடமாடக் கோயில் நம்பர்க்கு ஒன்று ஈயார்'. உயிர் வாழ்வார்க்கு எந்த சகாயமும் செய்ய மாட்டார்கள். சகாயம் என்றவுடன் கவலையுடன் அச்சமும் சேர்ந்து கொள்கிறது. அவரையும் அவரது குடும்பத்தினரையும் உலகாளும் பரம்பொருள் உடன் நின்று பேணட்டும்.

'காக்க காக்க கனகவேல் காக்க!'

(கற்போம்...)




உப்பு நீர், குளோரின் நீர் குளியல், அதிக ஷாம்பு, சோப்பு, பொடுகு, சத்துக்குறைவான உணவு, நோய்கள், ஹார்மோன் பிரச்னை, டென்ஷன், நோய்களுக்கு எடுத்துக் கொள்ளும் மருந்துகள் என முடி உதிர எதுவும் காரணமாகலாம். பழக்கவழக்கங்களை மாற்றினாலே பாதி சரியாகிவிடும். பலன் கிடைக்காதநிலையில் மருத்துவரிடம் ஆலோசனை பெறுங்கள்.

# கைம்மண் அளவு

38
ஆண்டுகளுக்கு
முன்பு,
பம்பாயில்
வாழத்
தலைப்பட்ட
பிறகு
விடுமுறையில்
ஒருமுறை
சொந்த
ஊருக்கு
வந்தபோது,
எழுத்தாளர்
நகுலனை
முதன்முறையாக
திருவனந்த
புரத்தில்
சந்தித்தேன்.
எனது
எண்ணிறந்த
குருக்கன்
மார்களில்
அவரும்
ஒருவர்.

**நாஞ்சில் நாடன்**

ஓவியம்: **மருது**



சரியான நேரத்தில், சரியான பஸ் ஸ்டாப் தெரிந்து,

கேட்டு, சரியான சில்லறை கொடுத்து, சரியான

அவர் காலமாவது வரை அது தொடர்ந்தது. நான் திருவனந்தபுரத்தில் பெண் கட்டியதும் வசதியாகப் போய்விட்டிருந்தது. 'அனந்தபுரம்' என்பதைச் சொல் மாற்றி, நீல.பத்மநாபன் 'பள்ளி கொண்டபுரம்' என்று தலைப்பிட்டு அவரது சிறந்த இரண்டாவது நாவலை எழுதினார். நெருக்கமான எனது நண்பர், திரைப்பட இயக்குநரின் சொந்த ஊர் 'பள்ளி கொண்டா' பக்கம். அது வேலூர் மாவட்டம்.

ஒருமுறை நகுலனை அவர் வீட்டில் சந்தித்து உரையாடிக் கொண்டிருந்தேன். எழுத்தாளர்களே மதித்துப் போற்றும் மிக முக்கியமான தமிழிலக்கியப் படைப்பாளி அவர். அந்தக் காலத்து தமிழ் எம்.ஏ., ஆங்கில எம்.ஏ. ஆங்கிலப் பேராசிரியராகப் பணியாற்றினார். கல்லூரி போய்வர சைக்கிள் பயன்படுத்தினார். சிக்கலான போக்குவரத்து இடைஞ்சல்களில் சைக்கிளை உருட்டிக்கொண்டே அவர் நடப்பதைப் பார்த்ததுண்டு.

கேசவதாசபுரம் தாண்டி, பருத்திப்பாறை சந்திப்பிலிருந்து சற்றே சாய் கோணத்தில் குன்று ஏறினால் அவர் பயிற்றுவித்த மார் இவானியஸ் கல்லூரி. நான் 1968-1970ல் எம்.எஸ்சி வாசித்த மகாத்மா காந்தி கல்லூரி, கேசவதாசபுரத்தில் மற்றுமோர் குன்றின் மேலிருந்தது. அவர் பயிற்றுவித்த கல்லூரி, அவர் வீடு இருந்த கௌடியார் கொட்டார சாலையிலிருந்து அதிக தூரம் என்று சொல்ல இயலாது.

படிக்கிறபோது அவரைக் கேள்விப்பட்டிருக்கிறேன். பார்த்துப் பேசிப் பழகியது கிடையாது. பிற்காலத்தில் நட்பு பூண்ட பின்னர் யதேச்சையாக ஒருநாள் கேட்டேன், "ஏன் சார்? பஸ்ஸிலே போகலாம்லா?" அவர் இயல்பாகச் சொன்னார், "பயம்மா இருக்கு!"

அவர் இயல்பும் குணச்சித்திரமும் தெரியும். பிற்கால எனது கதாபாத்திரம், 19 சிறுகதைகளில் ஆட்சி செய்த கும்பமுனி, நகுலனின் சற்றே சாய்ந்து திரிந்த கோலம். என் வினாவுக்கு உத்தரம் சொன்னது என்னைப் பகடி செய்ய அல்ல என்றறிவேன். சரியான நேரத்தில், சரியான பஸ் ஸ்டாப் தெரிந்து, சரியான பஸ் பிடித்து, சரியான இடம் சொல்லி டிக்கெட் கேட்டு, சரியான சில்லறை கொடுத்து, சரியான நிறுத்

## சரியான பஸ் பிடித்து, சரியான இடம் சொல்லி டிக்கெட்

## நிறுத்தத்தில் இறங்கி... எத்தனை சிக்கல்கள்?

தத்தில் இறங்கி... எத்தனை சிக்கல்கள்?

யோசிக்கலாம் நீங்கள், 'பின்னே அவர் எப்படி ஆங்கில இலக்கியம் கற்பித்தார்' என! ஞானியாக இருப்பது வேறு; *Street Smartness* என்பது வேறு. ஒரு புகழ் பெற்ற இசையமைப்பாளர் பற்றிச் சொல்வார்கள்... உண்மையோ, கற்பனையோ, யாமறியோம் பராபரமே! ஒரு பாடலுக்கு அவர் மெட்டுப் போட்டுக் கொண்டிருந்தபோது, இசை வரம்புக்குள் அடங்காமல் பாடலின் சொல்லொன்று முரண்டு பிடித்து நின்ற வேளையில், இசையமைப்பாளர் சொன்னாராம் -

"கூப்பிடு இந்தப் பாட்டு எழுதியவனை!" என்று.

"சார், அது பாரதி பாட்டுங்க..!" என்றார்களாம் பதிலாக.

''எவனா இருந்தா என்னய்யா? கூப்பிடுய்யா அவனை" என்று கர்ஜித்தாராம் இசையமைப்பாளர். அவர் இசைச்சிற்பி, ஆனால் பாரதியாரைத் தெரிந்திருக்கவில்லை. அதுபோல் எண்ணிக் கொள்ளலாம் நகுலனின் பயத்தையும்.

'திருவருட்பா' வழங்கிய ராமலிங்க வள்ளலார் தமக்கே நாணமும் பயமுமாக இருந்தது; 'கையுற வீசி நடப்பதை நாணிக் கைகளைக் கட்டியே நடந்தேன்' என்கிறார். 'காட்டுயர் அணை மேல் இருக்கவும் பயந்தேன், காலின் மேல் கால் வைக்கப் பயந்தேன், பாட்டு அயல் கேட்கப் பாடவும் பயந்தேன், பஞ்சணை படுக்கவும் பயந்தேன், நாட்டிய உயர்ந்த திண்ணைமேல் இருந்து நன்குறக் களித்துக் கால் கீழே நீட்டவும் பயந்தேன், நீட்டிப் பேசுதலை நினைக்கவும் பயந்தேன் எந்தாய்!' என்று பாடும் வள்ளலாரின் மனநிலையைச் சற்று யோசித்துப் பாருங்கள்.

'இச்சகத்துளோர் எலாம் எதிர்த்து நின்ற போதிலும் அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே' எனப் பாடும் பாரதி, முற்றிலும் வேறான மனநிலையில். அவர், 'காலா, என்னெதிரே வாடா! உன்னைக் காலால் உதைக்கிறேன்' என்று அறைகூவியவர். ஆனால் வள்ளலாரின் பயம் வேறு வகை.

மாணிக்கவாசகர் 'அச்சப் பத்து' என்றே பத்துப் பாடல்கள் பாடியிருக்கிறார். அவற்றுள் ஒன்றை, இசைஞானி இளையராஜா குரலில் இன்றும் கேட்க

லாம், ‘திருவாசகம்’ எனும் ஆல பத்தில். ‘புற்றில் வாள் அரவும் அஞ்சேன், பொய்யர் தம் மெய்யும் அஞ்சேன்’ என்பது அந்தப் பாடல்.

‘புற்றில் வாழ் அரவும்’ என்று தானே இருக்க வேண்டும் என அவசரப்பட்டுத் ‘திருவாசக’த்தைத் திருத்தப் போகாதீர்கள். ‘வாள்’ என்றால் ஒலி என்று பொருள் சொல்கிறார் நீ.கந்தசாமிப் பிள்ளை. ஒளி என்றும் பொருள் தருகிறார் பேராசிரியர் கா.சு.பிள்ளை. மாணிக்கவாசகர் ‘எதற்கெல்லாம் அஞ்சமாட்டேன்; ஆனால் எவற்றுக்கெல்லாம் அஞ்சுவேன்’ என்று பட்டியல் தருகிறார் ‘அச்சப் பத்து’ பகுதியில்.

*‘வன்புலால் வேலும் அஞ்சேன்*

*வளைக்கையார் கடைக்கண் அஞ்சேன்’*

வலிமையான கொலைக் கருவியான வேலை அஞ்சமாட்டேன். வளையணிந்த வளரிள மாதர் கடைக்கண் வீச்சுக்கு அஞ்சேன்.

*‘பிணி எலாம் வரினும் அஞ்சேன்*

*பிறப்பினோடு இறப்பும் அஞ்சேன்’*

எப்பிணி வந்தாலும் அஞ்சேன். பிறப்புடன் இறப்புக்கும் அஞ்சமாட்டேன்.

*‘வாள் உலாம் எரியும் அஞ்சேன்;*

*வரை புரண்டிடினும் அஞ்சேன்’*

பேரொலியுடன் உலாவும் தீயை அஞ்சமாட்டேன். மலை புரண்டாலும் அஞ்சேன்.

*‘தகைவு இலாப் பழியும் அஞ்சேன்*

*சாதலை முன்னம் அஞ்சேன்’*

பொருத்தமில்லாத பழி வந்தால் அஞ்சேன். சாவுக்கு எப்போதும் அஞ்சேன்.

*‘தறி செறு களிறும் அஞ்சேன்*

*தழல் விழி உழுவை அஞ்சேன்’*

கட்டுத்தறியை அறுத்து சினத்துடன் ஓடிவரும் யானையை அஞ்சேன். தீப்போலக் கண்களை உடைய புலியை அஞ்சேன்.

*‘மஞ்சு உலாம் உருமும் அஞ்சேன்*

*மன்னரோடு உறவும் அஞ்சேன்’*

மேகக் கூட்டங்களிடையே உலாவும் இடியை அஞ்சேன். மன்னர்களின் உறவும் அஞ்சேன்.

*‘கோள் நிலா வாளி அஞ்சேன்*

## நீதித்துறைக்கு அஞ்சுவானா?
## லஞ்ச ஒழிப்புத் துறைக்குக் கலங்குவானா?

கூற்றுவன் சீற்றம் அஞ்சேன்’

கொல்ல வரும் நிலை பெற்ற அம்புக்கு அஞ்சேன். யமனின் சீற்றத்துக்கு அஞ்ச மாட்டேன்.

‘இவை எவற்றுக்கும் அஞ்ச மாட்டேன். ஆனால் அம்பலத்து ஆடுகின்ற இறைவனை ஏத்தி, அவன் அருளை அள்ளிப் பருக மாட்டாத அன்பு இலாதவரைக் கண்டால் நான் அச்சமடைகிறேன்’ என்கிறார். இது வேறு ஒரு நிலை. ‘கடவுளுக்கே அஞ்சாதவன் வேறு எவர்க்கு, எதற்கு அஞ்சுவான்’ என்பது அவர் கவலை.

கடவுள் என்பவன், அல்லது என்பவள், அல்லது எனப்படுவது ‘ஆணாகிப் பெண்ணாகி அலியும் ஆனவனா’ என்றெனக்குத் தெரியாது. கருப்பொருளா, உரிப்பொருளா என்றும் அறியேன். எண்ணமா, ஆற்றலா என்பதும் அறிய மாட்டேன்.

ஆனால், எனக்குத் தோன்றுகிறது, கடவுளுக்குப் பயப்பட்ட மக்கள் தப்பு செய்யாமல் இருந்தார்களோ என! குற்றம் செய்தால் பெண்டு, பிள்ளைகள் நன்றாக இருக்காது; அநியாயம் செய்தால் மாடு, கன்று நன்றாக இருக்காது; அறம் பிறழ்ந்து நடந்தால் தோட்டம், துரவு நன்றாக இராது என்றெல்லாம் பயம் இருந்தது மனிதனுக்கு! பாவம், புண்ணியம் என்பன சரியா, தவறா என்ற கேள்வியை ஆன்மிகவாதிகளிடம் விட்டுவிடலாம். ஆனால் அறமற்ற செயல் செய்பவர்களுக்கு எதிராகவே சைவ, வைணவ, பௌத்த, இஸ்லாமிய, கிறிஸ்தவ சமய இலக்கியங்கள் பேசுகின்றன.

‘அரசியல் பிழைத்தார்க்கு அறம் கூற்றாகும்’ என்கிறது சிலப்பதிகாரம். அறத்தின் நாயகனாகக் கடவுளையும், அறத்தின் வழியாகச் சமயங்களையும் கண்டார்கள் ஞானிகளும், துறவிகளும், சித்தர்களும். தப்புச் செய்தால் கடவுள் கேட்பான் என்று நம்பினார்கள் சகல தேசத்தவரும், இனத்தவரும். *God Fearing* என்றே ஒரு சொல்லாட்சி உண்டு ஆங்கிலத்தில்.

இன்றோ கோடி கோடியாகக் கொடுக்கிறான் கோயிலுக்கு. ஆனால் கொலைக்கு அஞ்சுவதில்லை, கொள்ளையே வாழ்க்கை நெறி. சூதும், களவும், வஞ்சனையும், வன்புணர்ச்சியும் செய்பவன் அஞ்சுகிறானா இறையை?

இறைவனுக்கு அஞ்சாதவன்

நீதித்துறைக்கு அஞ்சுவானா? காவல்துறை பற்றிக் கவலைப்படுவானா? லஞ்ச ஒழிப்புத் துறைக்குக் கலங்குவானா?

நான் தினசரி பயணம் செய்யும் சாலையின் மருங்கிருக்கும் வட்டாட்சியர் அலுவலகச் சுவரில் பல வண்ணங்களில் கொட்டை எழுத்துக்களில் அறிவிப்பு எழுதி வைத்திருக்கிறார்கள், 'இந்த அலுவலகத்தில் எவரும் லஞ்சம் கேட்டால் கீழ்க்கண்ட அலைபேசி எண்ணைத் தொடர்பு கொள்ளுங்கள்' என்று. எனக்கு பேருந்தில் நிர்வாணமாக உட்கார்ந்திருப்பது போலிருந்தது.

பண்டைய கோயில்களில் சிற்பங்களாக, ஓவியங்களாக வடித்தோ, தீட்டியோ வைத்திருப்பார்கள்... இரு பாம்புகள், வட்ட வடிவமாக ஒன்றன் வாலை இரண்டாவது பாம்பு கவ்விக்கொண்டிருக்கும். இரண்டாவதன் வாலை முதலாவது கவ்விக் கொண்டிருக்கும். உங்களில் பலரும் கண்ணுற்றிருப்பீர்கள். அந்தச் சிற்பத்தின் பொருள் விளங்கியதில்லை எனக்கு. இப்போது பொருளாகிறது, ஒருவன் மற்றவனைத் தின்ன முயல்வதன் குறியீடு அது என.

சுற்றி வளைக்காமல் சொல்வதானால்... அமைச்சர், முதன்மை அதிகாரியைக் கவ்வுகிறார்; முதன்மை அதிகாரி, கீழதிகாரியைக் கவ்வுகிறார்; அவரோ ஊழியரைக் கவ்வுகிறார்; ஊழியரோ எனில் குடிமக்களைக் கவ்வுகிறார். குடிமக்கள் என்ன செய்வார்கள்? கொல்லும் நச்சுக் குப்பியைத்தான் கவ்வ வேண்டும்?

எதற்காகக் கொலை மிரட்டல், எதற்காகத் தற்கொலைகள், எதற்காக பெண்டு, பிள்ளைகளைத் தூக்கிப் போய் விடுவோம் என்ற அச்சுறுத்தல், எதற்காகக் குடிமக்களை வாட்டி, வதைத்து, முறுக்கிப் பிழிந்து, செக்கிலிட்டு ஆட்டி எண்ணெய் எடுத்தல்?

'தன் ஊன் பெருக்கற்குத் தான் பிறிது ஊன் உண்பான் எங்ஙனம் ஆளும் அருள்' என்று கேட்கிறார் வள்ளுவர். நானந்தக் குறளின் பொருளை சற்று விரித்துப் பார்க்கிறேன். தன் சதையைப் பெருக்கிக்கொள்ள அடுத்தவன் சதையைத் தின்கிற சமூகம்... பிழிந்தெடுத்த எண்ணெயில் ஏற்றும் தீபங்களில் கோயில் விளக்குகள் எரிகின்றன.

## சுவரொட்டிகளில் சிரிக்கும் மனிதர்கள், மொத்த உருவமாகத் தெரிகிறார்கள்.

எங்ஙனம் பிறன் சதை வெட்டித் தின்பவனுக்கு ஆண்டவனிடம் அச்சம் ஏற்படும்? ஊழலை வாழ்க்கை நெறியாகக் கொண்டவர்களிடம் ஆண்டவனே கையூட்டில் பங்கு பெற்றுக்கொள்ளும்போது?

அச்சமாக இருக்கிறது எனக்கு! சுவரொட்டிகளில் சிரிக்கும் மனிதர்கள், மருந்து கண்டுபிடிக்கப் படாத நோயின் மொத்த உருவமாகத் தெரிகிறார்கள்.

நகரப் பேருந்தில் பயணச் சீட்டு வாங்கக்கூட லஞ்சம் கொடுக்க வேண்டிய காலம் வெகுதூரத்தில் இல்லையோ என்று பயமாக இருக்கிறது ஐயா!

இது வள்ளலாரின் அச்சமா, மாணிக்கவாசகரின் அச்சமா என்றெனக்குத் தெரியவில்லை. குடிமக்களைப் பகை போலப் பார்க்கிறார்கள். அறிதுயிலில் இருந்த ஆண்டவர்கள் கூட, உறக்கத்துக்கு மாத்திரை போட்டு விட்டு ஆழ்ந்ததுயிலுக்குப் போய் விட்டார்கள் போலும்!

உண்மையில், இங்கே நான் எழுத நினைத்திருந்த வரிகள் இவையல்ல. எழுத அச்சமாக இருக்கிறது. வள்ளுவர் சொல்கிறார், ‘அஞ்சுவது அஞ்சாமை பேதைமை’ என்று.

உங்களில் சிலர் கேட்பீர்கள், ‘நல்லவர் என்று எவருமே இல்லையா’ என்று. இருக்கிறார்கள் ஐயா! அவர்களைத் தெய்வம் போல் தொழலாம், கொண்டாடலாம். அவர் பொருட்டுத்தானே எல்லோர்க்கும் மழை பெய்கிறது!

பிறகு யார்தான் காப்பார்கள் குடிமக்களை? ‘ஊதியம்’ என்பது முற்பிறவியில் செய்த புண்ணியத்தின் டிவிடெண்ட் என்றும், ‘லஞ்சம்’ என்பது பிறப்புரிமை என்றும் கருதுபவர்களிடமிருந்து சாமான்யர்களைக் காப்பவர் எவர்?

அதிவீர ராம பாண்டியன், ‘நறுந்தொகை’ எனும் நூலில் கூறுகிறார்... ‘எழு நிலை மாடம் கால் சாய்ந்து உக்கு கழுதை மேய் பாழ் ஆயினும் ஆகும்’ என்று! ஏழு நிலைகளையுடைய மாட மாளிகைத் தூண்கள் சாய்ந்து, உத்தரங்கள் இற்று, கழுதை மேயும் பாழ்நிலமாக ஆனாலும் ஆகும்!

‘ஆகுமா’ என்று கேட்பீர்களேயாயின், ‘ஆகும்’ என்றே சொல்வேன்.

**(கற்போம்...)**

# ஐம்மண் அளவு

திருவனந்தபுரத்தில் தம்பானூர் சென்ட்ரல் ரயில் நிலையத்தின் எதிரே மிகச்சிறந்த சைவ உணவு விடுதி ஒன்றுண்டு. அங்கு செல்லும் நண்பர்களுக்கு அந்த விடுதியை முன்மொழிவேன். அந்நகரில் தங்க நேரிடும் நாட்களில் விரும்பிப் போவதுண்டு அங்கே. விலை, கோவை அல்லது சென்னை விலைகளுக்கு மாற்றுக் குறைந்ததில்லை என்றாலும் உணவின் தரம் உயர்வாக இருக்கும். நெரிசல் மிகுந்த நாட்களில், ஓட்டலின் உரிமையாளரே முன்னின்று பந்தி விசாரிப்பார்.

அண்மையில் குடும்பத்துடன் திருவனந்தபுரம் சென்றிருந்தேன். திரும்புவதற்கு மாலை ஐந்து மணிக்கு முன்பதிவு இருந்தது ரயிலில். குடும்பத்தினரை உறவினர் வீட்டிலிருந்து நேராக ரயில் நிலையம் வரச் சொல்லிவிட்டு, நான் முன்னதாகக் கிளம்பி, மூத்த எழுத்தாளர் – சிறுகதைக் கலைஞர் ஆ.மாதவன் அவர்களைப் பார்க்கப் போனேன். ரயில் நிலையம் வரும் முன் மேற்படி உணவு விடுதிக்குள் நுழைந்தேன், ஒரு காபி குடிக்கும் உத்தேசத்துடன்.

**நாஞ்சில் நாடன்**

ஓவியம்: **மருது**



கீழ்த்தளத்தில் அப்போது தான் மதிய உணவுக்கடை ஒதுங்கிக் காலியாகக் கிடந்தது. சுத்தம் செய்வார்கள் போலும். நிர்வாகி போல நின்று கொண்டிருந்தவர் சொன்னார், ''அண்ணாச்சி, மேல போயிருங்களேன். இங்க இன்னும் சர்வீஸ் ஆரம்பிக்கல''.

சற்றுத் தயங்கியது மனம். 24 படிகள் ஏற வேண்டும். கீழே காபி 25 ரூபாய் என்றால் மேலே குளிர்பதன அரங்கில் 30 ரூபாய். 'சரி, வந்தாச்சு! நல்ல காபி ஒன்று குடிக்காமல் நகர் நீங்கினோம் என வேண்டாம்' என்றெண்ணி மாடிப்படி ஏறினேன். காபி அற்புதமாக இருந்தது... புதுப்பால், புது டிகாக்ஷன், அரைச் சீனி.

எதிர் இருக்கையில் ஒருவர் சுடச்சுட வடையும், சட்னியும், சாம்பாரும் சாப்பிட்டுக் கொண்டிருந்தார். நம் உணவுப் பழக்கத்தில் எத்தனை ஏறுகால் பாருங்கள்! ஒரு உளுந்த வடைக்கு சட்னியும் சாம்பாரும்! எதிர் காலத்தில் காரச் சட்னியும் ஊறுகாயும் கூட வேண்டி வரலாம். 'குடும்பத்தினருக்கு நாலு வடை வாங்கிப் போனால் என்ன' என்று அங்கலாய்த்தது மனம். காபிக்கு முப்பது ரூபாய் பில் வந்தது. அவரிடம் கேட்டேன், ''தம்பி, நாலு வடை பார்சல் தர முடியுமா?''

''அதுக்கென்னங்க... தாராளமா!'' என்றவர், வடைக்கு 120 ரூபாய் பில்லும் பார்சலுமாக வந்தார். அன்று காலைதான் கீழ்த்தளத்தில் நண்பர் ஏர்வாடி சுல்தான், அவர் தம்பி சல்மானுடன் சிற்றுண்டி அருந்தி இருந்தேன். வடை 25 ரூபாய் என்பதறிவேன். பில்லைப் பார்த்தபடி, கொண்டு வந்தவரிடம் கேட்டேன், ''ஏன் தம்பி... பார்சல் வடைக்கும் குளிர்சாதன விலையா?''

இலேசாகச் சிரித்தார் அவர். அந்தச் சிரிப்பு முதலாளிக்கு ஆதரவானதா, பயன்பாட்டாளருக்கு ஆதரவானதா என்று கண்டுகொள்ள இயலவில்லை. அவர் என்ன செய்வார் பாவம்? எய்தவன் இருக்க அம்பை நோவானேன்? ஆனால், அம்பைத்தானே நோகிறார்கள்? இரண்டாக ஒடித்தும் போடுகிறார்கள்?

ஏற்றுமதி செய்கிறவன் இருக்க, ஏற்றுமதியாகும் இடத்துக்குக் கொண்டு சேர்ப்பவன் இருக்க, கிடங்குகளில் பதுக்கி வைப்பவன் இருக்க, கிடங்குக்குக் கொண்டு சேர்ப்பவன் இருக்க, காட்டில் இருந்து நகருக்குக் கீழே இறக்குபவர் இருக்க, இவற்றுக்கெல்லாம் பின்னால் இருந்து சரடு வலிக்கும் சூத்ரதாரிகளான செல்வந்தர்கள், அதிகாரிகள், காவல்துறையினர், அமைச்சர்கள், தலைவர்கள் இருக்க, தினக்கூலிக்குச் செம்மரம் வெட்டப் போகிற அம்பு

கள்தானே சித்திரவதை, சிறை, கொலை என வல்லாண்மைக்கு இரையாகின்றன! எய்தவர்களே தமிழராய், தெலுங்கராய் கரந்து களித்து வாழ்கையில் முறிபடும் அம்புகள் தமிழ் அம்பு ஆனால் என்ன, தெலுங்கு அம்பு ஆனால் என்ன? சாகிறவனும் தமிழ், கொல்கிறவனும் தமிழ் என்றால் மரணம் பரவாயில்லையா?

எப்போதும் வலியை, துயரத்தை, சாவைக் கை நீட்டி வாங்கிக் கொள்கிறவன் ஏழையாகவும், அவற்றைக் கூவி விற்பவன் இன்னொரு கூட்டமாகவும்தானே இருக்கிறார்கள்! மலையானால் என்ன, மணல் ஆனால் என்ன, நிலக்கரியானால் என்ன, மருந்துகள் ஆனால் என்ன, பருகும் பால் ஆனால் என்ன, மாட்டுத் தீவனம் ஆனால் என்ன, சினிமா ஆனால் என்ன, கல்வியானால் என்ன, வேலைவாய்ப்புகளானால் என்ன, பணியிட மாற்றங்கள் ஆனால் என்ன? கேட்கலாம் என்று தோன்றுகிறது, சூரனை வதம் செய்த சுப்ரமணியனைப் பார்த்து, ‘வேலைப் பிடித்ததும் என்ன, என்ன, என்ன?’

களப, சந்தன, இளநீர், பால், தயிர், பன்னீர், விபூதி, பஞ்சாமிர்த அபிஷேகங்களை ஏற்றுக் கொள்வதற்காகவா வீரவேல், வெற்றிவேல்? எந்த மக்கட் பகையையும் வேரறுக்காதா?

புதிய சாலைப் பாதுகாப்பு மசோதா வந்தால், யாரும் டூவீலரையோ காரையோ தொட்டுப் பார்க்க முடியாது போலிருக்கிறது. இந்த மாதிரி கடுப்பேத்திங் கட்டுப்பாடுகள் அமெரிக்காவில் அதிகம். அதைப் பார்த்துதான் இங்கே பூனைக்கு சூடு போட்டிருப்பார்கள் போல! உலகெங்கும் இருந்த, இருக்கும் அப்படிப்பட்ட சட்டங்கள் இதழெங்கும்!




அமெரிக்காவின் மின்னாபோலிஸ் மாகாணத்தின் லேக் ஸ்ட்ரீட் பகுதியில் சிவப்பு நிறக் காரை ஓட்டிச் செல்ல நிரந்தரத் தடை உள்ளது.

முருகா! உன் துருப்பிடித்த வேலைத்தூர எறி! பிரதம அமைச்சர் தொழில்முனைவோர் சடங்குக்காக குடிசையினுள் புகுந்து கூழ் குடித்தல் போலன்றி, வனத்தினுள் கூலி வேலைக்குப் போய்ப் பார்! உன் கோவணத்தையும் உருவிக்கொண்டு ஓட்டி விடுவார்கள் சூரபதுமர்கள்!

மூத்த திறனாய்வாளர், பொதுவுடைமை சித்தாந்தி, தி.க.சி. மரணத்துக்குத் துட்டி கேட்க திருநெல்வேலி போயிருந்தோம். அதிகாலையிலேயே விஜயா பதிப்பகத்து அண்ணாச்சியுடன் மரண வீட்டில் தி.க.சிக்கு அஞ்சலி செலுத்திவிட்டு உட்கார்ந்திருந்தோம். இலக்கியச்சுற்றம் பெரும்பான்மையும் இருந்தது. ஒன்பதரை மணி போல, கோணங்கி வந்தார். ஒரு பயணத்தில் இருந்து இன்னொரு பயணத்துக்கு ஆயத்தமாக, *Transit Passenger* போல. கருவூரில் தொடங்கிய பயணம் மறையூருக்கு... காலை பத்து மணி ஆயிற்று. பசித்தது. "கோணங்கி, சாப்பிடப் போலாமா?" என்றார் அண்ணாச்சி. மூவருமாக நடந்து, மேலரதவீதியின் வடக்கு முனையில் இருந்த தரமான உணவு விடுதிக்குள் நுழைந்தோம்.

அண்ணாச்சியும், கோணங்கியும் பூரி மசால் சொன்னார்கள். எனது பதினெட்டு ஆண்டுகால பம்பாய் வாசத்தில், மொத்த வாழ்க்கைக்கும் தேவையான பூரிகளைப் போதுமான அளவு உண்டு முடித்து விட்டதால், நான் தோசை சொன்னேன். இலை போட்டு, ஆறி அலந்து கிடந்த இரண்டு 'வலுக் வலுக்' பூரி வைத்து, எவர்சில்வர் தூக்கு வாளியிலிருந்து பெரிய அகப்பையாக இரண்டு அகப்பை சாம்பார் கோரி ஊற்றினார், பரிமாறுகிறவர், கோணங்கி இலையில்.

"ஐயா... வந்து... நாங்க பூரி மசால்லா கேட்டோம்?" என்றார் கோணங்கி.

"மசால் தீந்து போச்சு!"

"அப்ப சொல்லாண்டாமா? வேற ஆர்டர் பண்ணி இருப்போம்லா?"

"சரி! பரவால்ல கோணங்கி... அந்த இலையை எம்பக்கம் இழுத்து விடுங்கோ. நீங்க வேற ஆர்டர் பண்ணுங்கோ" என்றார் அண்ணாச்சி. வேலாயுத அண்ணாச்சிக்கு அது இயல்பு. ஒரு நாள் முன்னிரவில் கோவையிலிருந்து நீலகிரி விரைவு ரயிலில் அவர் சென்னை புறப்பட வேண்டும். இரவு உணவு புத்தகக் கடை

**தமிழ்க்கடவுள் முருகனும் தமிழ் மூதாட்டி ஔவையும் சந்தித்து உரையாடும் காட்சி எழுதினால் கூட, அதில் இரட்டை அர்த்தம் வைப்பார் போலும்!**

யிலேயே சாப்பிட்டுவிட்டுக் கிளம்பலாம் என்று நாலு இட்லி வாங்கி வரச் சொன்னார்.

பார்சல் கட்டுபவன் வைக்க மறந்தானோ, வாங்கப் போனவன் பார்க்க மறந்தானோ, பார்சலைப் பிரித்தபோது வெறும் இட்லி மாத்திரம் இருந்தது. "சரி, விடு... இன்னைக்கு கொடுத்து வச்சது இதுதான்" என்று வெறும் இட்லியைத் தின்றுவிட்டு ரயிலுக்குப் போனார். எனவே அவருக்கு பூரியும் சாம்பாருமே விருந்துதான். கோணங்கி சொன்னார், "அதுக்கில்லே அண்ணாச்சி... இவுரு மொதல்லேயே சொல்லீருக்காண்டாமா?"

பரிமாறுபவர் ஏதோ சமாதானம் சொன்னார். கை கழுவப் போகுமுன் காற்றாடி விசையை மறக்காமல் அணைக்கிற பில் வாங்குபவர் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்.

இஃதோர் அற்ப சங்கதி என்று கடந்து போய்விடலாம். ஆனால் இதற்குள் இருக்கிற மனோபாவம்தான் எனது பாடு பொருள். சின்ன முளைதானே நாளை முன்மரமாகவும் கிளைக்கிறது. ஆனால் நீங்கள் கிழிந்த பத்து ரூபாய்த் தாள் ஒன்றைக் கொடுத்துப் பாருங்கள்... எதிர்வினையை அனுபவிக்கலாம்.

சில ஆண்டுகள் முன்பு இலக்கியச் சந்திப்பு ஒன்றுக்




**வடக்கு கரோலினா சட்டப்படி ஒரு கல்லறைத் தோட்டத்துக்குள் காரைக் கொண்டு செல்ல முடியாது.**

காக ஈரோடு போய், மறுநாள் காலையில் கோவை திரும்பிக் கொண்டிருந்தேன். பெருந்துறை சாலையில், திண்டலுக்கு முன்பாக புதியதாய் ஐஸ்கிரீம் பார்லர் ஒன்று திறந்திருந்தார்கள். ஐஸ்கிரீம் என்பதை 'பனிக்கூழ்' என்றெழுதலாமா? சொல் தேர்வை உங்களுக்கே விட்டுத் தருகிறேன். விளம்பரத்துக்காக, வானளாவ வைத்திருந்த ஃப்ளெக்ஸ் பேனர் முகத்தில் அறைந்தது. அதில் ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்த வாசகம் அப்படியே... *Ready to be Squeezed, Sucked & Licked.*

இதன் தமிழ் மொழிபெயர்ப்பு தரும் உத்தேசம் இல்லை எனக்கு! சிறுவரும் இளைஞரும் பால்பேதம் இன்றி விரும்பி உண்ணும் ஒன்று ஐஸ்கிரீம். உலகத் தர ஐஸ்கிரீம் தினுசுகள், உலகத்

தர விலையில் இறக்குமதியாகி விநியோகம் செய்யப்படுகின்றன. தரமும் சுவையும் மெச்சற்பாலதே! விளம்பரத்துக்கு எனப் பயன்படுத்தப்பட்ட சொற்கள் யாவும் ஆங்கில அகராதிச் சொற்களே! ஆனால், அவற்றைச் சேர்த்துப் பயன்படுத்தும்போது விபரீத அர்த்தம் தருகின்றன.

பண்பாட்டின் மீது செலுத்தப்படும் வன்முறை இது. கீழ்மையான விளம்பர உத்தி. சினிமாக்காரர்கள் லாபம் கருதி, பண்பாட்டுக் கூறுகளில் நஞ்சு கலப்பதைப் போல, உணவக அதிபர்களும் ஆரம்பித்துவிட்டால் எப்படி? விளம்பர வாசகமாக இச்சொற்களைப் பயன்படுத்திக்கொள்ளும் மனம் எத்தனை வக்கிரமானது? சினிமாப் பாடல்களில், வசனங்களில், சைகைகளில் கையாளப்படும் பாலியல் திணிப்பு வன்முறைகளில் ஐம்பது பிஎச்.டி பட்டங்களுக்கு ஆய்வுகள் மேற்கொள்ளலாம். ஆயிரக்கணக்கான பக்கங்கள் நீளும்.




அமெரிக்காவின் நெவாடா மாகாண நெடுஞ்சாலைகளில் ஒருவர் ஒட்டகத்தின் மீதேறி பயணம் செய்வது குற்றம் என சட்டம் சொல்கிறது.

எவரும் சொன்னார்களோ, கடைக்காரர்களுக்கே உடம்பில் ஊறலும் தடிப்பும் ஏற்பட்டதோ, சில நாட்களில் அந்த விளம்பரம் அகற்றப்பட்டது. முன்பு பேசப்பட்டவை ஒருவகையான பொருள் சுரண்டல் எனில், இஃதோர் பண்பாட்டு நசிவு. சூழலில் நஞ்சு பெய்தல். தமிழர்களோ, ‘பெயக்கண்டும் நஞ்சு உண்டு அமைவர் நயத்தக்க நாகரிகம் வேண்டு பவர்’ என்ற குறளை எழுத்துப் பிசகாமல் பின்பற்றுகிறார்கள். பருகும் பானத்தில் நஞ்சு ஊற்றுவதைக் கண்டிருந்தாலும், அதை அமுதம் என்று கருதி, மறுக்காமல் வாங்கிப் பருகும் நாகரிகம் உடையவர்கள். தமிழன் சங்க இலக்கியம் கற்பித்ததையும் மீறுவதில்லை. ‘முந்தை இருந்து நட்டோர் கொடுப்பின் நஞ்சும் உண்பர் நனி நாகரிகர்’ என்ற நற்றிணைப் பாடல் வழி ஒழுகுகிறவர்கள். முன்னால் அமர்ந்து, நட்புப் பூண்டவர் ஊற்றிக் கொடுத்தால், நஞ்சைக் கூட உண்ணும் சிறந்த நாகரிகம் அவர்களது.

தமிழனுக்கு இரங்குவதையும் அழுவதையும் தவிர்த்து நமக்கு

மாற்று வழி என்ன? மட்டமான தெருப் பொறுக்கிகளும், பேட்டைக் காலிகளும் பயன்படுத்தும் ஆபாசமான இரட்டை அர்த்த மொழியை எங்கும் பயன்படுத்த தமிழ் சினிமா வசனங்களும் பாட்டுகளும் கூசுவதில்லை. 'ஊதா கலரு ரிப்பன்', 'எவன்டி உன்னைப் பெத்தான்' என்பதெல்லாம் இங்கு சினிமா இலக்கியம்! தமிழ்க்கடவுள் முருகனும் தமிழ் மூதாட்டி ஔவையும் சந்தித்து உரையாடும் காட்சி எழுதினால் கூட, அதில் இரட்டை அர்த்தம் வைப்பார் போலும்!

ஆங்கில *Pulp Fiction* எழுத்தாளர் ஒருவரைப் பற்றிச் சொல்வார்கள், அவர் மூளைக்குள் இருக்கும் பெண்குறி வழியாகவே சிந்திக்கிறார் என! எனக்கொரு ஐயப்பாடு! தம் வீட்டுப் பெண்களிடமும் இந்த சினிமாக்காரரர்கள் இரட்டை அர்த்தத்தில்தான் பேசுவார்களோ? அரசுகளே பின் சென்று அவர்கள் கூவுவதற்கும் ஏவுவதற்கும் தம் கடன் பணி செய்து கிடப்பதே என்று அலையும்போது எவர் காப்பாற்ற முடியும் தமிழ் மக்களை?

முன்பு கிராமப்புறங்களில் நடக்கும் சிறுதெய்வ வழிபாட்டுக் கொடைகளின்போது, நள்ளிரவு தாண்டி, சிறுவர் சிறுமியர் உறங்கப் போன பின்பு, கரகாட்டக் காரரர்கள் பாலியல் கொச்சை




**அமெரிக்காவின் அலாஸ்கா மாகாணத்தில் காருக்கு மேலே செல்லப்பிராணியை நிறுத்தி வைத்து டிரைவ் செய்வது கடும் குற்றம்!**

வசனம் பேசி வாலிப, வயோதிக அன்பர்களை உசுப்பேற்றுவார்கள். கரகாட்டக்காரப் பெண், சொம்புத் தண்ணீரை வாய் முழுக்க வாங்கி, கோமாளி மீது உமிழ்வாள். வெளிநாட்டில், ஓர் நட்சத்திரக் கலைவிழாவில், பிரபல இந்தி நடிகர் ஒருவர், முன்வரிசைத் தொழிலதிபர் பெண்களை மேடைக்கு ஏற்றி, அவர்கள் மீது வாய் நிறையத் தண்ணீர் வாங்கி உமிழ்ந்தார்! பெண்டிருக்கோ பரவசமும் மெய்மறப்பும்.

சினிமாவும் ஊடகங்களும் விளம்பரங்களும் இன்று யாவர் மீதும் உமிழ்ந்து கொண்டிருக்கிறார்கள் வாய்த் தண்ணீரை. அது வாய்த் தண்ணீராக இல்லாமல், சிறுநீராக இருந்தாலும் கூட நமக்கு மெய்சிலிர்ப்புத்தானே!

**(கற்போம்...)**



நாகர்கோயில் போயிருந்தேன் அண்மையில். நாகர்கோயிலா அல்லது நாகர்கோவிலா என்றொரு வழக்குண்டு இன்னமும். அதைத் தமிழறிஞர் தீர்க்கட்டும். 'நாஞ்சில் நாடன் நாகர்கோயில் போவது அதிசயமா? என்னவோ சுவிட்சர்லாந்து போனதுபோல் சொல்கிறாரே' என்பார் எமை அறிந்தார். அதுவும் சரிதான். என் 87 வயதுத் தாய் வாழும் ஊர், சகோதர சகோதரிகளும் சுற்றமும் வாழும் ஊர்.

## நாஞ்சில் நாடன்

ஓவியம்: **மருது**



காரணம் வந்துகொண்டே இருக்கும். நிச்சயதார்த்தம், கல்யாணம், சீமந்தம், பிள்ளைப்பேறு, காது குத்து, சாமத்தியம், யார் கணக்கிலும் அடங்காத இழவு, கோயில் கொடைகள்...

1972ல் புலம் பெயர்ந்த பிறகு, 1974ல் முதல்முறையாக பம்பாயிலிருந்து ஊருக்குப் போனேன். அப்பொழுது எல்லாம் திருத்தணி தாண்டியதும் ஏற்படும் மனக்கிளர்ச்சி சொல்லில் அடங்காது. கால்நூற்றாண்டுக்கு முன்பு கோவைக்குப் புலம் பெயர, அதன்பின் மாதம் ஒருமுறை ஊருக்குப் போவது தவறாது. சில சமயம் இரண்டு முறையும்! உத்தேசக் கணக்காகக் கொண்டாலும் 300 முறைகள்.

நாகர்கோயில் போக நான் ரயிலில் முன்பதிவு செய்வதில்லை. சொகுசுப் பேருந்துகள் அல்லது அரசுப் பேருந்துகள். சொகுசுக்கு எதிர்ப்பதம் அரசு என்று கொண்டாலும் எனக்கு அதில் வழக்கில்லை! ஒற்றைப் பயணக் கட்டணம் சராசரியாக ஐந்நூறு ரூபாய் என்று கொண்டாலும், கடந்த 25 ஆண்டுகளில் பேருந்துக்கு மாத்திரம் மூன்று லட்ச ரூபாய் செலவிட்டிருப்பேன். ஈதெல்லாம் பசித்தவன் பழம் கணக்குப் பார்ப்பது. எதுவானாலும் மதுரை வந்துவிட்டால் ஊருக்குப் போகிறோம் என்ற உணர்ச்சியும், திருநெல்வேலி தாண்டியதும் உடலிலும் உயிரிலும் பரவசமும் ஏறிவிடும். மின்பொறி தட்டியதுபோல் மொழியில் ஒரு மாற்றமும்!

ஒரு காலத்தில் வீரநாராயணமங்கலத்தின் மேற்கே பாயும் பழையாற்றின் மேற்குக்கரைச் சுடுகாட்டில்தான் எனது ஈமப்புகை எழும்பும் என்று விரும்பி இருந்தேன். இன்று அந்த மூர்க்கம் இல்லை. கோவையில் ஏதோ ஓர் மின் மயானம் காத்திருப்பதாகவே தோன்றுகிறது. நாமென்ன மாவீரன் செண்பகராமனா, ஜெர்மனியில் இருந்து கொண்டுவந்து சிதைச் சாம்பரை நாஞ்சில் நாட்டு வயல்வெளிகளில் தூவ?

என்றாலும் எவர் பேரேட்டை எவர் பேணி விட இயலும்?

சொல்ல வந்த சம்பவம் வேறு!

இப்போதெல்லாம் நாகர்கோயிலில் அதிகாலையில் இறங்கி, பதறி அடித்து ஊருக்கு ஓடுவதில்லை. வடிவீசுவரத்தில் தம்பி வீடு இருந்தது, நகருக்குள். தேரோடும் வீதியில் இருந்து நேராக முதல் மாடி அறைக்குப் போக வசதியுண்டு. முன்தினமே தகவல் சொல்லிவிட்டால், அறை சுத்தமாக்கப்பட்டு, தயாராக இருக்கும். நள்ளென்ற யாமத்தும் உறங்கும் வீட்டாரை எழுப்பாமல் நேராக அறைக்குப் போய்

விடலாம். பிறகு குளித்து, உடை மாற்றி, காலை உணவு உண்டு, அம்மாவைப் பார்க்க கிராமத்துக்குப் போவேன்.

ஏப்ரல் 24ம் நாள் காலை, எமது நண்பர் ஆரியபவன் சைவ உணவு விடுதி ரமேஷ், தனது இரண்டாவது நவீனமான கிளையை மாவட்ட நீதிமன்றவளாகத்துக்கு எதிரே திறந்தார். புகழ்பெற்ற ஓவியர் ட்ராட்ஸ்கி மருது, அண்ணா சௌந்தர் வல்லத்தரசு, கவிஞர் அறிவுமதியுடன் நானும் கலந்து கொண்டேன். நிகழ்ச்சி முடிந்ததும் காலை உணவு உண்டு நாகர்கோயில் நகரப்பேருந்து நிலையம் போனேன்.

எங்கள் ஊருக்குப் போக, அறுபது ஆண்டுகளாக ஓடும் தேரூர் - தாழக்குடி என்ற வழித்தடப் பேருந்து உண்டு. நாகர்கோயில் - ஆரல்வாய்மொழி என்று இறச்சகுளம், தாழக்குடி வழியாக ஒன்று. அதன் பின்னால் - நம்மாழ்வாரின் தாயார் காரிப்பிள்ளை பிறந்த, நூற்றெட்டு வைணவத் தலங்களில் ஒன்றான - திருவண்பரிசாரம் என்று நாலாயிரத் திவ்யப் பிரபந்தமும், திருப்பதிசாரம் என்று தோராயமான பிரபந்தங்களும் விளிக்கும் ஊரைத் தொட்டு, தாழக்குடி வழியாக ஆரல்வாய்மொழி போகும் பேருந்து ஒன்று.

மழை தூறிக்கொண்டிருந்தது. மழையின் தன்மை போல் சொற்கள் உண்டு நாஞ்சில் மொழியில். பொசுங்கல், சாரல், தூறல், தூற்றல், பெருமழை, அடைமழை என்றெல்லாம்!

அன்று சிணுசிணுவென, சவலைப் பிள்ளை அழுவதைப் போலத் தூற்றல். வேட்டி நனையப் போதும். எனக்கு வடசேரி, இறச்சகுளம், தாழக்குடி வழியாக ஆரல்வாய்மொழி பேருந்து கிடைத்தது.

பேருந்து என்றும் அதைச் சொல்லலாம் தான். இருவர் அமரும் இருக்கையில் இளைஞன் ஒருவன் உட்கார்ந்திருந்தான். சற்று உள்ளே தள்ளி உட்காரச் சொன்னேன். என்னை உள்ளே போக ஆற்றுப்படுத்

**அதெப்படி தனியார் கட்டும் கட்டிடம் நூறு ஆண்டு நிற்கிறது... அரசாங்கம் கட்டும் வீடு இருபது ஆண்டுகளில் விழுகிறது?**

தினான். வடசேரியில் இறங்குவான் போலும் என்றெண்ணி முன்னெச்சரிக்கை புரிந்தது. இருக்கைத் துணி கிழிந்து தொங்கிற்று. சற்று நேரத்தில் எனது மூலாதாரப் பிரதேசத்தில் தண்ணீர் கொவர்ந்து குளிர்ந்தது. பேன்டில் கறை ஏறாமல் இருக்க வேண்டுமே எனக் கவலை கொண்டது மனம். எனது வலது கைப் பக்கம், சன்னல். மழை, வெயில், காற்று, தூசுக்கு எந்தத் தடுப்பானும் இல்லை. மழை சற்றே வலுத்தது. பேருந்துக் கூரையில் இருந்து மழைநீர் வழிந்து இருக்கைப் பக்கம் வடிந்து கொண்டிருந்தது. உற்றுப் பார்த்தால், சன்னலோரக் கம்பிகள், தகரத் தடுப்புப் பகுதி யாவும் பல போர்க்களங்கள் கண்ட தளவாடங்கள் போலிருந்தன. தொட்டால் கை கிழியும்; பட்டால் மேல் கிழியும். தமிழ்ப் பாடல் வரி சொன்னால், 'முள் பட்டாலும் முள்ளிலிட்டாலும் முதலில் கிழிவது துணிதான்'.

எனது பரிதவிப்பைக் கண்ட இளைஞன் சொன்னான், 'மழை பெலமாப் பெஞ்சா, ஒழுகும் சார்' என்று. நேரடியாகக் காயலான் கடையில் இருந்து பழைய விலைக்குப் பேரீச்சம்பழம் கொடுத்து வாங்கி இருக்கும் போல அரசு. எனக்கும் பல காலமாக சந்தேகம் உண்டு. அதெப்படி தனியார் கட்டும் கட்டிடம் நூறு ஆண்டு நிற்கிறது... அரசாங்கம் கட்டும் வீடு இருபது ஆண்டுகளில் விழுகிறது? அரசாங்கம் தொட்டால் எந்தத் தொழிலும் அப்படித்தான் துலங்குமோ? நான் அமர்ந்திருந்ததைப் போன்ற பேருந்தை மகாராஷ்டிரா, ஒடிசா, பீகார், உத்தரப்பிரதேசம், ஜார்கண்ட், சத்தீஸ்கர் கிராமப் பயணங்களில் கண்டதில்லை. நமதோ, தேனிருந்து மழை பொழியும் தீந்தமிழ் தேசம். அது போன்றதோர் பேருந்து சென்னை, கோவை, சேலம், ஈரோடு, மதுரையிலும் கண்டதில்லை. இளைஞனிடம் கேட்டேன், "ஏந் தம்பி! உங்க மாவட்டத்துக்குள்ளே ஓட்டுப் பொறுக்கிய உதிரிப் பாகங்களை வைத்து பஸ் பாடி கெட்டுவாங்களா?"

"இல்ல சார்! முப்பது வருசத்துக்கு மிந்தி மெட்ராஸ்லே எறக்கினபோது பஸ் புதுசாத்தான் இருந்திருக்கும். அது அங்க ஓடி, விழுப்புரத்திலே ஓடி, சேலத்துல ஓடி, மதுரையிலே ஓடி, கடைசியாத் தெக்க வந்து சேரச்சிலே அதுக்கு ஊப்பாடு பத்திப் போகு! பஸ்சை எப்படிக் கொற சொல்ல முடியும் சார்?"

"சென்னையிலே ஒரு கிலோ மீட்டர் பயணத்துக்கு வாங்கப் பட்ட பயணக் கட்டணம்தானே இங்கேயும் வாங்குகான்! இல்லே, இங்க விலையில்லாப் பயணமா?"

அதற்குள் எனது வலப்புறம் சட்டைத் தோள்பாகம், கை எல்லாம் நனைந்து சொட்டியது. ஒவ்வொரு சாலை நொடியிலும் வண்டி இறங்கி ஏறும்போது, உட்கார்ந்திருந்த இருக்கையின் கம்பிகள் அசைந்து குலுங்கி, சிறுவயதின் எருமை சவாரியை நினைவுறுத்தியது.

அன்று காலை தம்பி வீட்டில் இருந்து நாட்டார் வழக்காற்றியல் ஆய்வாளர் அ.கா.பெருமாள் வீட்டுக்கு ஆட்டோவில் போய்க்கொண்டிருந்தேன். சாலைகளின் தரம் எனக்கு குஜராத் சுரேந்திர நகர் ஒட்டகச் சவாரியை நினைவுபடுத்துவதாக இருந்தது. அநேகமாக அனைத்துச் சாலைகளுமே! நாகர்கோயில் ஒரு மாவட்டத்தின் தலைநகரம் என்பதை நினைவில் கொள்க!

பம்பாயில் முன்பு நான் வாழ்ந்திருந்தபோது, டைம்ஸ் ஆஃப் இந்தியா எனும் ஆங்கிலத் தினசரியில் கார்ட்டூனிஸ்ட் மேதை ஆர்.கே.லக்ஷ்மண் கேலிச் சித்திரங்கள் வரைவார். ஒரு நாள் கார்ட்டூனில் திருவாளர் பொதுஜனம், பக்கத்தில் நிற்பவரிடம் சொல்வார், "இந்தச் சாலைகளின் பள்ளங்களைத் தூர்ப்பதற்குப் பதிலாக, பள்ளங்களின் குறுக்கே பாலம் கட்டுவது எளிதான, செலவு குறைந்த வேலை" என்று. நமக்கோ, பாதை பல்லாங்குழி போலிருந்தது. பாலம் கட்டுவதில் நடைமுறைச் சிக்கல்கள் உண்டு.

ஆட்டோ ஓட்டுநரிடம் கேட்டேன்... ''ரெம்ப நாளா ரோடு இப்படித்தான இருக்கு?''

''ரோடு போடுவானுக சார்... அதுக்கு முன்னே அவுனுகளுக்கு வீடு கெட்டாண்டாமா?'' என்றார் பரிகாசமாக.

''வண்டி ஓட்ட ரெம்ப சாமர்த்தியம் வேணும்!'' என்றேன்.

''விழுந்து செத்தா தலைக்கு மூணு லட்சம் சார்... எவன் ஆண்டாலும் இங்க நம்ம நெலமை இதுதான்!'' என்று கசந்து பேசினார்.

நகைப்பதா, கரைவதா

**சன்னலோரக் கம்பிகள், தகரத் தடுப்புப் பகுதி யாவும் பல போர்க் களங்கள் கண்ட தளவாடங்கள் போலிருந்தன. தொட்டால் கை கிழியும்; பட்டால் மேல் கிழியும்.**

நாம்?

ஒருவேளை தர்மபுரி, விருத்தாசலம், கோவில்பட்டி, சிவகங்கை, மானாமதுரை நிலைமை இதைவிட மோசமாக இருக்கக்கூடும்.

மாட்டு வண்டிகூட நுழையாத ஊர்களுக்குள் எல்லாம் தங்கள் பாட்டு வண்டி போனது என்பார் இசைஞானி இளையராஜா. இன்று மாட்டு வண்டிகள் போகாத ஊருக்கெல்லாம் சிற்றுந்துகள் ஓடுகின்றன. அந்த சிற்றுந்துகளின் நிலை அரசுப் பேருந்துகளின் நிலையைவிட மேலாக இருக்கின்றன. ஒரு காலத்தில் எனக்கு இவ்விதப் பேருந்துப் பயணங்களின் போது, ஓட்டுனர் - நடத்துனர் மேல் பகை தோன்றி வெறியும் ஏறும். கண்மணி குணசேகரனின் 'நெடுஞ்சாலை' நாவல் வாசித்த பிறகு அவர்கள் மேல் தயையும் கருணையுமே தோன்றுகிறது.

தோட்டத்தில் பாதி கிணறு என்றால் தொழிலாளர்கள் என்ன செய்வார்கள்? இன்றைவனும் அமைச்சனின் அல்லது மேலதிகாரியின் தாங்கொணாத் துன்பம் காரணமாகத் தற்கொலை முயல வேண்டாம். இவ்வித ஓட்டை உடைசல் மேளதாள குத்தாட்ட ஊர்ப்புறப் பேருந்தில் பயணம் செய்தாலே போதுமானது.

இதை எல்லாம் எழுதுவதால் என்ன பயன் என்றும் தோன்றுகிறது. பழமொழி நானூறு கூறுகிறது, 'அறுமோ நரி நக்கின் றென்று கடல்?' என்று. 'நரி நக்கியது என்பதால் கடல் நீர் குறைந்து போகுமா?' என்றாலும் நமக்குச் சொல்லாமல் தீராது.

பல முறை செய்தித்தாள்களில் வாசிக்கிறோம், அரசு நஷ்ட ஈடு வழங்காமல் போனதினால் அரசுப் பேருந்தைப் பறிமுதல் செய்தார்கள் என்று! நான் பயணம் செய்த பேருந்துகள் போல பறிமுதல் செய்ய நேர்ந்தால், அவை துருப்பிடித்த இரும்பு விலைக்குத்தான் போகும் என்பதால், ஒரு லட்சம் ரூபாய் வசூலாக வேண்டுமானால் இருபத்தைந்து பேருந்துகளைப் பறிமுதல் செய்ய வேண்டியதிருக்கும்!

மழை பொய்த்தாலோ, காற்று கனக்க வீசினாலோ மத்திய அரசாங்கத்துக்கு லிகிதம் எழுதும் அரசியல் பாரம்பரியம் நமது. நாட்டில், ஊர்ப்புறங்களுக்கு என்று ஓடும் அரசுப் பேருந்துகள் கோளாறாகி நின்றால் யாருக்குக் கடிதம் எழுதுவார்கள்? பராக் ஒபாமாவுக்கா?

எனக்கொரு யோசனை தோன்றுகிறது. கற்றவர் அறிவுரையைக் கவர்ன்மென்ட் ஏற்றுக் கொள்வது பாவம் அன்று, 'கடிக்கும் வல் அரவும் கேட்கும் மந்திரம்'

என்பான் கம்பன். 'கடிக்க வரும் கொடிய பாம்புகூட சொல்லுக்குக் கட்டுப்படும்'. ஆள்பவர்கள் நன்மதியாளர்களின் சொல்லுக்குக் கட்டுப்படாவிட்டால் என்ன ஆகும்? வெளியே இருந்து எவரும் கெடுக்க வேண்டும் என்று இல்லை. தாமே கெட்டழிந்து போவார்கள். நான் சொல்லவில்லை. வள்ளுவம் சொல்கிறது:

'இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பார் இலானும் கெடும்'

எமது ஆலோசனை, எதற்காக வம்புக்கு சாலைப் பராமரிப்பு? பேருந்துப் பராமரிப்பு? மாற்றாக, கிராமத்துப் போக்குவரத்துக்கு என வான்வழிச் சேவை தொடங்குவது சாலவும் நன்று. மூலதனச் செலவு பெரியதாகவே இருக்கும். 'பெரிதினும் பெரிது கேள்' என்பதுதானே ஆன்றோர் வாக்கு. செலவு பெரிதானால், வரவும் பெரிதுதானே! வரவு எதில் அதிகம், ஆயிரம் ரூபாய் செலவு செய்வதிலா? ஆயிரம் கோடி செலவு செய்வதிலா?

வழக்குகள் வரக்கூடும்! எவர் ஆண்டாலும் பாரத கண்டத்தில், வழக்கென்று வந்துவிட்டால் தீர்ப்பென்று ஒன்று வர முப்பது ஆண்டுகளாவது ஆகாதா?

பிறகென்ன, பெருக வாங்கிப் பெருவாழ்வு வாழ்க! ஆனால், ஆங்காரத்துடன் தலைகீழாய்ச் சொல்கிறார் ஔவை மூதாட்டி: 'எள்ளளவும் கைக்கூலி தான் வாங்கும் காலறுவான், தன் கிளையும் எச்சம் இறும்'. என்ன கடும் சாபம் பாருங்கள்... எள் அளவுகூட லஞ்சம் வாங்குபவன் சுற்றம் மிச்சம் மீதி இல்லாமல் அழியும் என்று.

'அழியுமா?' என்ற கேள்வி உங்களைப் போல எனக்கும் உண்டு. எனினும், கண்ணதாசன் சொன்னது போல், 'நம்பிக்கை என்னும் நந்தா விளக்கு, உள்ளவரையில் உலகம் நமக்கு!'

**ஆங்காரத்துடன் சொல்கிறார் ஔவை... 'எள்ளளவும் கைக்கூலி தான் வாங்கும் காலறுவான், தன் கிளையும் எச்சம் இறும்'. என்ன கடும் சாபம் பாருங்கள்!**

(கற்போம்...)

# கைம்மண் அளவு

நாஞ்சில் நாடன்

ஓவியம்: மருது

இந்த வயதிலும் மாதம் மூவாயிரம் கிலோமீட்டர் சராசரியாகப் பேருந்துப் பயணம் எமக்குப் பிழைப்பு. சென்னையும் சென்னை கடந்த ஊர்களும் என்றால் ரயில் மார்க்கம். நம்மையும் இலக்கியவாதி என்று எவரும் கருதினால், தூர தேசப் பயணங்களுக்கு வான் வழி. சொந்தச் செலவில் எங்கு போவதானாலும் பேருந்துதான். சொகுசுப் பேருந்துக்கு மாற்றாக, சற்று காசு மிச்சமாகுமே என்பதால் அரசுப் பேருந்துதான் பிடிப்பேன். இடை நில்லாப் பேருந்தே என்றாலும், இடர் வந்து இடையே தடைப்பட்டு நின்றால் அதற்கு அரசு பொறுப்பல்ல, ஈசன் பொறுப்பு.



சிங்கநல்லூர் பேருந்து நிலையத்தில் இருந்து மதுரை ஆரப்பாளையம். அங்கிருந்து நகரப் பேருந்தில் மாட்டுத்தாவணி. மறுபடியும் தொடரும் பயணம் நாகர்கோயிலுக்கு. ஒரு மணி நேரம் தாமதமாகும். ஆகிவிட்டுப் போகட்டுமே, நமக்கென்ன 'ஷாட் ரெடி' பண்ணி வைத்திருக்கப் போகிறார்களா... போய் 'ஃபைட் சீன்' எடுக்க? முன்பு பல சமயம் பம்பாயில் இருந்து சோலாப்பூர், அக்கோலா, நாசிக், கோலாப்பூர், அகமத்நகர் என்று மராத்திய மாநில அரசுப் பேருந்துகள் பயன்படுத்தி இருக்கிறேன்.

இரவுப் பேருந்துகளை அங்கு 'ராத் ராணி' என்பார்கள். தமிழில் 'இரவு ராணி' என்றால் விபரீதமாகப் பொருள் கொண்டு பழகிவிட்டோம். அறுபது, எழுபது ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு நாளிதழ் நடத்திய அற்பணிப்பு. அதுபோன்றே கற்பழிப்பு என்ற சொல்லும். நாமோ 'கற்பெனப் படுவது' என்று கட்டுரை எழுதுகிறோம். 'சொல் திறம்பாமை' என்கிறாள் தமிழ் மூதாட்டி.

கோவை சிங்கநல்லூர் பேருந்து நிலையத்தில் இருந்து எனக்கு நேரடியாகவும் அரசுப் பேருந்து கிடைக்கும். 3+2 இருக்கை அமைப்பு. ஐந்நூறு கிலோ மீட்டர் தூரத்தை எட்டு மணி நேரத்தில் கடந்து விடுவார்கள். எந்த நகரையும் தொடாமல், தங்க நாற்கரச் சாலையில் திண்டுக்கல்லில் ஏறினால் வள்ளியூரில் இறங்கினால் போதும்.

இரண்டு, மூன்று நாட்கள் சேர்ந்தாற்போல விடுமுறை நாட்கள் எனில் ஊருக்குப் போகும் மாணவர் கூட்டம் நிரம்பித் ததும்பும். மாணவர் என்பது இங்கு இருபாலருக்கும் பொதுச் சொல். பேருந்தில் சினிமா இரைச்சலும் காதலும் காமமும் வழியும் இசை முழக்கமும் தாண்டியும் மாணாக்கரின் உற்சாகமான பேச்சரவம் பயணம் முழுக்கக் கேட்டுக்கொண்டே இருக்கும்.

கோவை நகரக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்-மாணவியர் விகிதம் தலைகீழாகவே இருக்கிறது. பெண்கள் இன்று அதிகம் பயில்வதில் எனக்குப் பெரிய உற்சாகம் உண்டு. அதிகாலை மூன்றரை அல்லது நாலு மணிக்கு எமது பேருந்து திருநெல்வேலி பேருந்து நிலையம் சேரும். 'திருநெல்வேலிக்காரர்கள் தினமும் மூன்று வேளைக்கும் இடையில் பருகும் தேநீருக்கும் அல்வாதான் தின்பார்களோ' என்ற ஐயம் எழுப்பும் ஒரிஜினல் லாலா அல்வா கடைகள் பேருந்து நிலையம் முழுக்க... எங்கெங்கு காணினும் அல்வா அடா! ஏழு கடல் அதன் வண்ணமடா!

பேருந்து நிலையம் வந்த



**மாணவிகள் வீட்டுக்கு என்று ஒன்றும், வெளிவேலை களுக்கு என்று ஒன்றுமாக தனித்தனி சிம் கார்டு வைத்திருக்கிறார்கள். என்ன விஞ்ஞான பூர்வமான காரணம் இருக்கும்?**

வுடன், பின் தூங்கி முன் எழுந்த மாணாக்கியர் அனைவரும் முதல் காரியமாய் கைப்பையின் சீப்பு எடுத்து தலைவாரிக்கொள்வார்கள். அடுத்த முக்கியமான காரியம், அவரவர் செல்போன் எடுத்து சிம் கார்டு மாற்றுவது. அப்போது என் மந்த புத்திக்கு உறைத்தது, அவர்கள் வீட்டுக்கு என்று ஒன்றும், வெளிவேலைகளுக்கு என்று ஒன்றுமாக தனித்தனி சிம் கார்டு வைத்திருக்கிறார்கள் என்பது! என்ன விஞ்ஞானபூர்வமான காரணம் இருக்கும் என்று யோசித்துப் பார்த்துக்கொள்ளுங்கள்.

ஊரிலிருந்து கோவை திரும்பும் எனது பயணத்தில் பெரும்பாலும் ஒரு கட்டைப் பை கூடவே பயணம் செய்யும். ஏழெட்டு நெற்றுத் தேங்காய், இரண்டு பக்கா சம்பா அவல், ஐந்தாறு நார்த்தங்காய், கொஞ்சம் தவிட்டு முருங்கைக்காய், இரணியல் கத்திரிக்காய், முதிர்ந்த சீமைச் சக்கை, பருத்த வாழைப்பூ, காட்டு நெல்லி, ஏத்தங்காய் வத்தல், முறுக்கு, முந்திரிக்கொத்து, மிக்சர், மட்டிப் பழச்சீப்பு எனச் சில, பருவகாலத்துக்குத் தகுந்தாற் போல. அம்மை, சித்தி, தம்பி, தங்கைகள் எனத் தொடரும் பாசத்துக்கு விலைப்பட்டியல் போட இயலாது. சில சமயம் கொண்டு வரும் பொருட்களின் விலையைவிட, அவற்றை வீடு கொண்டு சேர்க்கும் ஆட்டோ கட்டணம் அதிகமாக இருக்கும். இருக்கட்டுமே! எந்த சித்திரை விஷுக் கணி காணலும் வெல்லமும் தேங்காயும் போட்டு விரவிய அவல் இல்லாமல் நடந்ததில்லை எமக்கு.

கட்டைப் பை காரணமாகவே வக்கீல் தம்பி, கோவை பயணத்துக்கு சொகுசுப் பேருந்தில் ஏற்றி அனுப்புவான். என் மனமோ கூடுதல் கட்டணத்தைக் கணக்குப் போடும். ஏறும் படிக்கட்டுகளையே அனிச்சையாக எண்ணிக்கொண்டு போகிறவன், இதை விடுவேனா? பெரும்பாலும் அன்று நான் விரும்புவது தாராபுரம் வழி, இன்று பொள்ளாச்சி வழி. எல்லாம் வீட்டுக்கான ஆட்டோ கட்டணம் கணக்

கிடல்தான்.

ஞாயிறு இரவுகளின் திரும்பு கால் பயணம் எனில், சொகுசுப் பேருந்து கல்லூரி மாணவ, மாண வியரால் நிறைந்திருக்கும். ஒரு சமயம் எனது இருக்கைக்கு முன் பக்கம் இரு மாணவியர் இருந்த னர். எனக்குப் பின்பக்கமோ இரு மாணவர்களும். அறிமுகமான வர்கள் எனக் காணத் தெரிந்தது. இரவு ஒன்பதுக்கு நாகர்கோயி லில் புறப்பட்ட வண்டி, அடுத்த நிறுத்தமான திருநெல்வேலியில் நின்றது, இரவு பத்தே முக்கா லுக்கு. அங்கு பேருந்து நிரம்பி விடும். பிறகு எங்கும் நிறுத்த மாட்டார்கள், இறக்கம் இருந் தால் ஒழிய.

இரவுப் பயணங்களில் பெரும் பாலும் எனக்கு உறக்கம் வராது. ஆயிரம் ரூபாய் அன்பளிப்பாய்த் தந்தாலும், கொட்டகையில் போய்ப் பார்க்கத் துணியாத திரைப்படங்களைப் பேருந்துப் பயணத்தில் கவனம் சிதையாமல் பார்த்துக் கொண்டிருப்பேன். கல்வி எப்போதுமே கடினமான வேலைதானே! இலக்கிய உலகில் எரிமலைக் குழம்பை வெறுங் கையால் அள்ளி மேல் தேய்த் துக் குளிப்பவர்கள் பங்கேற்ற திரைப்படங்களில், நாட்பட்ட புண்களை நக்கிக் கிடப்பதையும் காணவியலும்.

அந்தக் குறிப்பிட்ட இரவில், திருநெல்வேலித் தரிப்பில் அல்வா பொட்டலங்களுடன் ஆட்கள் ஏறினார்கள். ‘மக்கா போயிட்டு வா என்னா! போனதும் கூப் பிட்டுச் சொல்லு... மிஸ்டு கால் குடுத்தாப் போரும்... பிள்ளை யைப் பார்த்துக்கோ... போட்டு கண்டமானிக்கு அடியாத!’ எனும் பிரிவு உபசாரச் சொற்கள் கடந்து, பேருந்து நகர்ந்து, தச்சநல் லூர் தாண்டியதும் விளக்கையும் அணைத்தார்கள். தச்சநல்லூர் எனும் சொல் பெய்யாமல் ‘திருந வேலி’த் தமிழைத் தாண்டுவது எப்படி?

விளக்கணைத்ததும் எனது பின்பக்க இருக்கையில் இருந்து எழுந்து ஒரு மாணவர் என் முன் பக்க இருக்கைக்குப் போனார். முன்பக்க இருக்கையில் இருந்து எழுந்த மாணவி ஒருத்தி பின்பக்க இருக்கைக்கு வந்தாள். சமன்பாடு சரியாப் போச்சா? என்ன செய்து விட முடியும் ஓடும் பேருந்தில், இருக்கையில் அமர்ந்து? இரவே ஆனாலும் இருளே செறிந்தா லும்? எப்படியும் பிள்ளை உண் டாக்கி விட இயலாது என்று உங்களைப் போலவே எனக்கும் தெரியும்! பிறகென்ன, கண்மூடி உறங்குவது போலப் பாசாங்கு செய்ய வேண்டியதுதான்.

வாழ்க்கையில் எண்ணிக்கை யில் அடங்காத தவணைகள், படுக்கை வசதி ரயில் பயணங்



> இரண்டு பக்கா சம்பா அவல், கொஞ்சம் தவிட்டு **முருங்கைக்காய், இரணியல் கத்திரிக்காய்,** முதிர்ந்த சீமைச் சக்கை, காட்டு நெல்லி, **ஏத்தங்காய் வத்தல், முந்திரிக்கொத்து,** மட்டிப்பழச்சீப்பு எனச் சில, **பருவகாலத்துக்குத்** தகுந்தாற் போல.

கள் மேற்கொண்டிருக்கிறேன். கப்பல், நீர்மூழ்கிக் கப்பல் ஏறிப் பார்த்திருக்கிறேன் என்றாலும் இராத் தங்கியதில்லை. ரயில் பயணங்கள் 1972ல் நான் அனுபவித்தது போலில்லை இன்று. எல்லாம் நவீனப்பட்டுவிட்டது.

1960களில் தொடங்கிற்று எனது அரசியல் கூட்டங்கள் கேட்பு. அன்று எனக்கு நாவலர், நடமாடும் பல்கலைக்கழகம் நெடுஞ்செழியன் மேடைப் பேச்சு பிடிக்கும். அவரது நையாண்டி பிடிக்கும். 'ஐம்பது தமிழ்ப் பாட்டுக்கள் மனப்பாடமாகத் தெரிந்திருந்தால் அவரெப்படி நடமாடும் பல்கலைக்கழகம் ஆக முடியும்' என்ற கேள்வி பின்னால்தான் எழுந்தது. 'பல்கலைக்கழகம் என்பது எத்தனை துறைகள், எவ்வளவு ஆழ அகல விரிவு?' நானே பிறகு அவரைக் கிண்டல் செய்திருக்கிறேன். என்றாலும் இன்றும் யோசித்துப் பார்க்கும்போது மிகவும் ரசிக்கத் தகுந்ததாக இருந்திருக்கிறது அவரது மேடைப் பேச்சு.

அடிக்கடி அவர் சொன்ன ரயில் ஜோக் ஒன்று... என்ன, கோட்டாறு கம்போளத் தெருவில் சொன்ன ஜோக்கையே, வடசேரி வஞ்சி ஆதித்தன் புதுத் தெருவிலும் சொன்னார். அவருக்கே உரித்தான குரல் ஏற்ற இறக்க பாவனைகளுடனும் பாவத்துடனும்! ரயில் பயணம் செய்யும்போது கக்கூஸ் போக மூன்று கைகள் வேண்டும் என்பார். இரண்டு கைகள் தண்ணீர் வரும் குழாயை அமுத்தி அமுத்த, ஒரு கை கழுவ...

இரவின் படுக்கைவசதிப் பயணங்கள் தவிர்த்து ஓரேயொரு முறை படுக்கை வசதிப் பேருந்தில், வேறு மார்க்கம் இன்றி சென்னையில் இருந்து கோவைக்கு வந்தேன். பேருந்தின் நீளவாக்கில், ஓட்டுனர் பின்பக்கம், இரண்டு பேர் படுக்கும் வசதி. நடத்துனர் பின்பக்கம், ஒருவர் படுக்கும் வசதி. தரைத்தளமும் மேல்தளமும் என இரண்டு அடுக்குகள், பிரிவுகள் அடுத்தடுத்து.

எனக்கு வாய்த்தது இரண்டு பேர் படுக்கும் மேல்தளப் படுக்கை, உள்பக்கம். எனது படுக்கையைப் பகிர்ந்து கொண்டவர் - நேரான அர்த்தத்தில் - அந்தகனின் வாகனம் போலிருந்தார். அதாவது காலதேவனின் வாகனம். பத்து புரோட்டா தின்று அரைக்குப்பி IMFL அருந்தியிருப்பார் போலும். கடுங்குறட்டை. சமயங்களில் கால் தூக்கி என் மேல் போட்டார். ஊடே ஊடே ஏப்பமும் எதுக்களிப்பும். வாந்தியும் எடுப்பாரோ என்ற அச்சம் எனக்கு. திருக்குறளில் 107வது அதிகாரம், 'இரவச்சம்'. அது இரவு தோன்றும் அச்சமல்ல. இரத்தலில் தோன்றும் அச்சம். ஆனால் எனக்கு அந்த இரவு முழுக்க அச்சம்தான்.

அன்று தீர்மானித்தேன், பொடி நடையாக நடந்தே ஊருக்குப் போனாலும் படுக்கைப் பேருந்தில் பயணம் செய்யக் கூடாது என்று!

அண்மையில் பொறுப்பான உயர் பதவி வகிக்கும் நண்பர் ஒருவர் பேசிக் கொண்டிருந்தார். அவர் கீழ் வேலை செய்யும் எவரும் தற்கொலைக்குத் தூண்டப்பட மாட்டார்கள். உடனே 'பொழைக்கத் தெரியாத ஆளு' என்பீர்தானே! விடுமுறையில் ஊருக்குப் போகும் காதலர்கள் இரவுப் பயணங்களில் படுக்கைப் பேருந்துகளில் பதிவு செய்து கொள்கிறார்களாம். இரட்டை மேல்தளப்படுக்கை. *II AC SLEEPER* வகுப்பு போலத்திரைச்சீலையால் மூடிக் கொள்ளலாம். கையோடு கொண்டு போகும் சேஃப்டி பின்னால் திரைச்சீலை ஜாயின்ட்களில் கொளுவிக் காபந்து செய்து கொள்கிறார்களாம். 'என்னய்யா அத்தாட்சி?' என்றேன். அவர் மேற்கொண்டு சொன்ன விவரங்களை இங்கு எழுதவிரும்பவில்லை. நமது திரைப்படப் புரட்சிப் பூகம்பங்கள் எவரும் இதனை சீன் பிடிக்கலாம். நாம் காப்பீடு கோர மாட்டோம்!

காதலர் தினத்தன்று படுக்கைப் பேருந்துகளின் கட்டணம் மும்மடங்காகிப் பொலிகின்றன. காற்றுள்ளபோது தானே தூற்றிக் கொள்ள இயலும்! *Demand and Supply Theory*. நண்பர் தொடர்ந்து ஆச்சரியங்கள் ஊட்டினார்... அண்மையில் சில சொகுசுப் படுக்கைப் பேருந்துகள் சோதனையிடப்பட்டன என்று! விடுதிகளில் குளிர்பதன அறை எடுப்பதைக் காட்டிலும் இது வசதி. போலீஸ் ரெய்டு இருக்காது. விடுதி வராந்தாக்களில் கேமரா பொருத்தப்பட்டிருக்கும், அறை மாறிப் போவோரைக் கண்காணிக்க!

இஃதோர் தொழிலாகவும் மாறி வருகிறதாம் பாலியல் தொழிலாளிகளுக்கு. குறிப்பாக



> **விடுமுறையில் ஊருக்குப் போகும் காதலர்கள் இரவுப் பயணங்களில் படுக்கைப் பேருந்துகளில் பதிவு செய்து கொள்கிறார்களாம்.**

சென்னை, பெங்களூரு, ஐதராபாத், புனே வழித்தடங்களில்! விற்பனைப் பிரதிநிதிகள் போலப் பயணிக்கிறார்களாம். கூடலுக்குத் தோதாக உடைகள் வடிவமைக்கப்படுகின்றனவாம். மண் தின்னப் போவதை மகராசன் அனுபவிக்கட்டும் என்று நாம் எடுத்துக்கொள்ளலாம். என்றாலும் நாட்டு நடப்பைத் தெரிந்துகொள்ளாவிட்டால் நம்மை முற்போக்கு முகாமில் சேர்க்காமல் போகும் அபாயமும் இருக்கிறதல்லவா?

'எல்லாம் காதல் படுத்தும் பாடு' என்று பெருந்தன்மையாகவே எடுத்துக்கொள்ளலாம்.

1958ல், விஜய பாஸ்கரன் நடத்தி, பொதுவுடைமைப் புறங்குத்தால் அகாலத்தில் நின்றுபோன சீரிய இலக்கியப் பத்திரிகை 'சரஸ்வதி'யில் சுந்தர ராமசாமி 'லவ்வு' என்றொரு சிறுகதை எழுதினார். அவரது முழுத்தொகுப்பில் உண்டு. வாய்ப்புக் கிடைத்தால் வாசித்துப் பார்க்கலாம்.

காமம் இல்லாமல் காதல் இல்லை பெரும்பாலும். ஆனால் காமம் என்பதையே காதல் என்றும் சிலம்பித் திரிகிறோம் இன்று. 'பாரதி-அறுபத்தாறு' என்ற பாடலில் பாரதியார் பாடுகிறார்.

*'காதலினால் மானுடர்க்குக் கலவி யுண்டாம்;*
*கலவியிலே மானுடர்க்குக் கவலை தீரும்;*
*காதலினால் மானுடர்க்குக் கவிதை யுண்டாம்;*
*கானமுண்டாம்; சிற்பம் முதல் கலைகளுண்டாம்;*
*ஆதலினால் காதல் செய்வீர் உலகத்தீரே!*
*அஃதன்றோ இவ்வுலகத் தலைமை இன்பம்;*
*காதலினால் சாகாமல் இருத்தல் கூடும்;*
*கவலைபோம்; அதனாலே மரணம் பொய்யாம்'*

இது கவிஞனின் இலக்கணம். கலவி எனில் புணர்ச்சி. புணர்ச்சி எனில் உடலுறவு. ஆனால் அதனைப் பேருந்துப் பயணம், விரைவு ரயிலின் பொதுக்கழிப்பறை எனும் தரத்துக்கு இறக்கி விடுவது காதலுக்குப் பெருமை அன்று.

'தேன், நெய், புளிப்பின் சுவை இன்னா' என்கிறது இன்னா நாற்பது. தேனே ஆனாலும் நெய்யே ஆனாலும் புளித்துப் போனால் அந்தச் சுவை துன்பமானது என்பது பொருள்.

**(கற்போம்...)**

# கைம்மண் அளவு

அண்மையில் கடலூர் சென்று வந்தேன். 2013 ஜூன் மாதம், வாழ்நாள் சாதனைக்கான, கனடா இலக்கியத் தோட்டத்தின் 'இயல் விருது' பெறுவதற்காக கனடா சென்றிருந்தபோது திரு.மதிவாணன் குடும்பத்தினருடன் 25 நாட்கள் றொறன்ரோ நகரில் தங்கி இருந்தேன். இந்தியா வந்திருந்த மதிவாணன் மூலம் அவர் குடும்பத்தினருக்குச் சில புத்தகங்கள் அனுப்ப வேண்டிய காரியம் இருந்தது.

சித்திரைப் பௌர்ணமி நாட்கள். மேலும் சேர்ந்தாற்போல மூன்று தினங்கள் விடுமுறை. நின்ற நிலையில் என் பயணம் தீர்மானிக்கப்பட்டதால் அரசு விரைவுப் பேருந்து, கடலூர் வழியாகப் போகும் புதுச்சேரி சொகுசுப் பேருந்துகள் எவற்றிலும் இருக்கை இல்லை.

**நாஞ்சில் நாடன்**

ஓவியம்: மருது



கோவையில் இருந்து கடலூருக்கு ரயில் மார்க்கம் எளிய பயணமும் அல்ல. எனவே வருவது வரட்டும் என்று சேலம் போய், அங்கிருந்து கடலூருக்கு மாறிப் போய்விடலாம் என்ற நம்பிக்கையில் புறப்பட்டேன். பெரும்பாலும் எனது தமிழ்நாட்டுப் பயணங்கள் அவ்விதத்திலேயே தீர்மானிக்கப்படுபவை. நன்றோ, தீதோ நமக்குத்தானே. ஆனால் இன்றளவும் இலக்குகளைத் தாமதமாக அடைந்திருப்பேனே தவிர, இலக்கை அடையாமலும் இல்லை; மடங்கிப் போந்ததும் இல்லை.

கோவை பேருந்து நிலையத்தில் வெள்ளியங்கிரி மலை ஏறித் திரும்பும் பெருங்கூட்டம், கையில் காட்டில் வெட்டிய நெற்றி மட்ட ஊன்றுக்கம்புடன்! மற்றொன்று, முழு நிலா தினங்கள் ஆகையால் திருவண்ணாமலை கிரிவலம் வரப் புறப்பட்ட கூட்டம். ஏதோ ஈரோட்டுப் பெரியாரின் பெருங்கொண்ட முயற்சியால், தமிழ்நாட்டில் பக்திப் பெருவெள்ளம் பெருக்கெடுத்து இஞ்சிக்குப் பாய்ந்து மஞ்சளுக்கும் பாய்கிறது.

சரியாக நள்ளிரவு ஒரு மணிக்கு சேலத்துக்குப் போய் விட்டது எனது பேருந்து. பேருந்து நிலையத்தில், அரசின் 'விலையில்லா மகிழ்வுந்து வழங்கும் விழா' நடப்பதைப் போன்று கட்டுக் கடங்காத கூட்டம். கடலூர், சிதம்பரம், பாண்டிச்சேரி வழியாகப் போகும் பேருந்துகள் ஒன்றுகூட தளத்தில் இல்லை. சென்னை, விழுப்புரம் பேருந்துகள் தொங்கத் தொங்கப் போய்க் கொண்டிருந்தன.

இரண்டு மணி தாண்டி கடலூர் போகும் வண்டியொன்று வந்தது. எங்கிருந்து ஏறினார்களோ, ஏற்கனவே தொண்ணூறு சதமானம் வண்டி நிரம்பி இருந்தது. கடைசி வரிசைக்கு முந்திய வரிசையில், மூவர் இருக்கையில், வெளியோரம் இடம் தந்தனர்.

வெக்கை, புழுக்கம். முழங்கை கூட வியர்த்து, கசகசப்பு ஊறிக் கிடந்தது. பயணப் பொருட்களை வைக்க இடம் பார்த்தேன். எங்கும் இடமில்லை. பக்கத்தில் வைத்துக் கொண்டு பயணம் செய்தால், பேருந்து வளைவுகளில் திரும்புகையில் சற்றுக் கண்ணயர்ந்தாலும், கதவுப் பக்கம் இருக்கும் என் இருக்கையிலிருந்து சறுக்கி, பயணப்பைகள் சாலைக்குப் போய்விடும்.

நல்ல காலமாக, பின் வாசலுக்கும் அதற்கு முந்திய இருவர் அமரும் இருக்கைக்கும் இடையே பொந்து காலியாக இருந்தது. ஏர்பேக்கை முதலில் இடுக்கில் தள்ளிவிட்டு, அதன்மேல் சரிந்து விழாதபடி கட்டைப் பையையும்

சாய்த்து வைத்தேன். எவரும் இதுவரை எனது நாற்பதாண்டுப் பயணங்களில், என் பையை எடுத்துக் கொண்டு இறங்கியது இல்லை. அதன் பொருள், அடுத்தவர் பையை நான் எடுத்துக் கொண்டு இறங்கியது உண்டு என்பதல்ல!

உறக்கமும் விழிப்பும் கனவுமாகப் பயணம் போயிற்று. 180 கிலோ மீட்டரை ஆறு மணி நேரமாக உருட்டிக் கொண்டிருந்தனர். எனக்கு ஓட்டுனர் - நடத்துனர் மேல் கடுப்பு ஏற்படுவதில்லை. அனுதாபமே அதிகம்! பாவம், சம்பளமும் போனஸூம் தவிர்த்து மற்று எந்த பொத்து வரத்துக்கும் போக்கற்ற அரசு ஊழியர்கள்.

பண்ருட்டி தாண்டியதும் ரயில்வே லெவல் கிராஸிங்கில் வண்டி வேகம் மட்டுப்பட்டது. வாட்டசாட்டமான இளைஞர் ஒருவர் ஏறினார். டி ஷர்ட்டும் டிராக் சூட்டும் போட்டிருந்தார். முதுகில் மூட்டைப் பை தொங்கிற்று. ஏறியதும் என் பயணப் பைகள் இருந்த பொந்தை உற்றுப் பார்த்தார். தனது முதுகுப் பையை இறக்கலாம் என நினைத்திருப்பார் போலும். அங்கிருந்த என் பொருட்களைப் பார்த்ததும் கடுப்பான குரலில் கேட்டார், “யார் பேக்குங்க இதெல்லாம்?” குரலில் அதிகாரம் ஒலித்தது. “அதுக்கு மேல வைக்காதீங்க, ப்ளீஸ்!” என்றேன்.

தமது பையை இறக்கி, என் பையை அணைந்தவாறு நெருக்கி வைத்தார். வைத்தவர் என்னை ஏழெட்டு தரம் முறைத்து முறைத்துப் பார்த்தார். உடற்கட்டும் முடி வெட்டும் போலீஸ்காரர் போலிருந்தது. ஆனால் சீருடையில் இல்லை. நடத்துநர் பயணச்சீட்டு வாங்கக் கேட்டு வரும்போது தணிந்த குரலில் சொன்னார், ‘பி.சி’ என்று. அவரும் சரியென்று போய் விட்டார். சட்டப்படி இலவசப் பயணத்துக்கு - மன்னிக்கவும், விலையில்லாப் பயணத்துக்கு - சீருடையில் இருக்க வேண்டாமோ? சரி, தொழிலாளிக்குத் தொழிலாளி செய்யும் சலுகை என்றெண்ணி

**போ**

**லீஸ்காரர் கண்களுக்கும் சாமான்யர் எல்லாம் குற்றவாளிகள் போலவும், செல்வந்தர், சினிமா நடிகர், அரசியல்வாதிகள் என்போர் தேவதூதர் போலவும் தோற்றம் தருவார்களோ!**

னேன். அவரோ மறுபடியும் நம்மை முறைக்க ஆரம்பித்தார்.

பண்டு ஒரு முறை, ‘ஊது பத்தி’ என்றொரு கதை எழுதினேன். பிற்பாடு கொஞ்சம் பிரச்னை ஆகி, என்மேல் சாதிச் சேறு பூசப்பட்ட கதை. ஆனால், அது எனது சொந்த அனுபவம். புலம் பெயர்ந்து, நெல் அறுவடைக்கு வந்த அம்புரோஸ் என்ற எனது நண்பன், கதிர்க்கட்டு சுமந்து வந்தபோது விபத்தில் மரணம் அடைந்த கதை. தகவல் சொல்ல போலீஸ் ஸ்டேஷன் போனேன். அப்போது, 1967ல் நான் பட்டப் படிப்பு இரண்டாமாண்டு மாணவன். சம்பவத்தை அரைகுறையாகக் கேட்ட போலீஸ் இன்ஸ்பெக்டர், என்னிடம் சொன்னார்... “சரி லே! அந்த மூலையிலே உக்காரு” என்று. அவர் காட்டிய திக்கில் ஏற்கனவே இரண்டு பேர், ஜட்டி மட்டும் அணிந்து உட்கார்ந்திருந்தனர். நானும் பேன்ட் - சட்டை கழற்ற வேண்டுமோ என்ற ஐயமும் அச்சமும் உண்டாயிற்று. அரண்டவன் கண்ணுக்குத்தான் இருண்டதெல்லாம் பேய் என்பார்கள். போலீஸ்காரரர் கண்களுக்கும் சாமான்யர் எல்லாம் குற்றவாளிகள் போலவும், செல்வந்தர், சினிமா நடிகர், அரசியல்வாதிகள் என்போர் தேவதூதர் போலவும் தோற்றம் தருவார்களோ!

என்ன வீர ஆவேசத்துடன் எழுதினாலும் பேசினாலும், சற்றுக் கிலி பிடித்து ஆட்டியது. கடலூர் பேருந்து நிலையத்தில் இறங்கியதும், என் சட்டைக் காலரைப் பிடித்துத் தூக்கி, செவளை செவளை என்று அறையலாம். எதற்கும் இருக்கட்டும் என்று எனது நண்பர்களாய் இருந்த சில ஐ.பி.எஸ். அதிகாரிகளின் செல்பேசி எண்களைத் தயார் நிலையில் வைத்துக்கொண்டேன். என்ன நட்பு என்றாலும், அறை வாங்கிய பிறகுதானே ஆதரவுக் கரம் நீளும்! அதைவிடப் பெரிய அச்சம், 26 கிராம் கஞ்சா பொட்டலம் ஒன்றை நம் பைக்குள் திணித்து, பிணை வாங்க முடியாத வழக்கில் எஃப்.ஐ.ஆர். போட்டு விடலாம். இளைஞரின் முறைப்பின் அதிகாரம் குறித்தே யோசித்தபடி இருந்தேன்.

2012ம் ஆண்டின் ஜூலை-ஆகஸ்ட் மாதங்களில் 58 நாட்கள் அமெரிக்க சுற்றுப்பயணத்தில் இருந்தேன். ஏழு நாட்கள் அங்கு நியூ ஜெர்ஸி நகரில் நண்பர் முரளி பதி வீட்டில் தங்கினேன். அண்மையில் ராஜபாளையம் போயிருந்தபோது, ஆலங்குளம் சாலையில் தொம்பக்குளம் கீழூரில் இருந்த அவரது எண்பது வயதுத் தகப்பனார், ஓய்வு பெற்ற ஆசிரியர் திருப்பதி அவர்களைக் கண்டு வணங்கி வந்தேன்.

நியூ ஜெர்ஸி நகரம், நியூயார்க் நகரத்திலிருந்து அரை மணி நேரப் பயணம். 24 மைல்கள் தூரம் என்று ஞாபகம். ஒரு ஞாயிறு மாலையில் ஐ.நா சபை பார்த்துவிட்டு, அமெரிக்கப் பொருளாதாரத் தலைமைப்பீடமான வால் ஸ்ட்ரீட் வந்தோம். நடந்து நடந்து கால்கள் களைத்திருந்தன. தொண்டை ஒரு குளிர்ந்த பியர் கேட்டது. சாலையின் மருங்கிருந்த பிரதான வங்கியொன்றின் தலைமை அலுவலக வாசல் படிக்கட்டுத் திண்டில் ஏறி அமர்ந்தேன். நொடிக்கும் நேரத்தில் ஒரு சார்ஜென்ட் என் முன்னால் தோன்றினார். “எனி ப்ராப்ளம்?” என்று கேட்டார். “நத்திங்... டயர்ட்” என்றேன். “இட்ஸ் ஓகே! ரிலாக்ஸ்” என்றவரை வேகமாக அணுகிய முரளிபதி சொன்னார், “ஹி இஸ் எ ரைட்டர் ஃபிரம் இண்டியா” என்று! சார்ஜென்ட் அதற்கு மறுமொழியாக, “ஓ! பிக் மேன்... டோன்ட் கில் ஹிம்!” என்று புன்னகைத்து நகரப் போனார். முரளிபதி அவரைக் கேட்டு, அவர் என் தோளில் கைபோட்டுப் புகைப்படம் எடுத்துக்கொண்டார்.

நான் சிறு பிராயத்தே, சினிமாக் கொட்டகைகளில், ‘உங்கள் நண்பன்’ என்ற காவல் துறை பற்றிய நியூஸ் ரீல் போட்டுப் பார்த்திருக்கிறேன். காவல் துறை என்றில்லை, இன்று எந்த அரசுத் துறையும் எங்கள் நண்பர்கள் அல்ல. ஒருவேளை பகையாக இருப்பார்களோ என்று சந்தேகம் வருகிறது.

பெரும்பாலும் குற்றம் தொடர்பான இந்தியத் திரைப்படங்களில், மூன்று பேர் கொலை, கொள்ளை, வன்கலவியில் ஈடுபடும் வில்லன்களாக இருப்பார்கள். ஒருவன் புன்செல்வம் சேர்த்த ஆயுதமும் ஆட்படையும் கொண்ட கொடுங்குற்றப் பின்னணி கொண்டவன். இன்னொருவன், ஐந்தாம் தர அரசியல்வாதி. மூன்றாமவன், குற்றங்களுக்குத் துணை போகும் போலீஸ் உயரதிகாரி. இஃதோர் ஃபார்முலா இங்கே! தமிழ், மலையாளம், தெலுங்கு, இந்தி, எந்தப் படமானாலும்! வெளிநாட்டுப் படங்

காவல் துறை என்றில்லை, இன்று எந்த அரசுத்துறையும் மக்கள் நண்பர்கள் அல்ல. ஒருவேளை பகையாக இருப்பார்களோ என்று சந்தேகம் வருகிறது.

களில் போலீஸ்காரர்களை மோசமான வெளிச்சத்தில் காட்டுவதில்லை. அவர்களிலும் லஞ்சம், ஊழல், குற்றப் பின்னணியினர் இருக்கமாட்டார்களா என்ன? ஒருவேளை மிகக்குறைந்த சதவீதத்தினராக இருக்கலாம்.

சில மாதங்கள் முன்பு செய்தி வாசித்திருப்பீர்கள். மகன் குடும்பத்தினருடன் சில மாதங்கள் அமெரிக்காவில் வாழப் போனார் இந்தியர் ஒருவர். பொழுது போகாமல் ஒருநாள் காலனிக்குள் இறங்கி, பராக்குப் பார்த்தபடி நடந்திருக்கிறார். பராக்குப் பார்ப்பதும் சேதமில்லாத ஒரு இந்தியக் குணம்தானே! அவர் இருமருங்கும் இருந்த வீடுகளை நோக்கமின்றிப் பார்த்து நடப்பதைக் கண்ணுற்ற ஒரு அமெரிக்கன், போலீசுக்குத் தகவல் சொல்லிவிட்டான்... 'சந்தேகப்படும்படியான ஒருவர் இங்கு நடமாடுகிறார்' என்று. சில நிமிடங்களில் போலீஸ் வந்தது. நம்மூர் போலக் குற்றம் நடந்து, காயம்பட்டவன் இறந்து, பிணமும் கருவாடு ஆன பிறகு வருவதைப் போலன்றி, துரிதச் செயல்பாடு.

அந்த நாட்டில் மக்கட் தொகையும் ஆள் நடமாட்டமும் குறைவு. நகரங்களில் சில பகுதிகளில் மட்டும் மனிதர்கள் தென்படுவார்கள் என்பதால், நீங்காத, நிரந்தர அச்சத்தோடு வாழ்வார்கள் போலும்! வடக்கு கரோலினா மாநிலத்தில் சார்லெட் எனும் சிறு நகரத்தில் வாழும் என் மகனுடன் ஒரு வாரம் தங்கியிருந்தேன். ஒரு நாள் முற்பகல், உணவுக்குப் போனோம். நடக்கும் தூரம்தான். அந்த ஊரில் 'ஸ்வீட் டொமாட்டோ' என்னும் தொடர் உணவகம் இருந்தது. சாலட் உணவு எனக்குப் பிடித்திருந்தது. எட்டு, பத்து முறை சாப்பிட்டிருப்பேன். இருபது விதமான சாலடுகள், பிரெட், கேக், ஐஸ்கிரீம். சைவமோ, அசைவமோ, அவரவர் விருப்பு.

நடந்து போன வழியில் புல்வெளி நடுவே ஒரு வீடு. சுற்றுச் சுவரோ, கம்பிவேலியோ இல்லை. சாலையைப் பார்த்து ஒரு அறிவிப்புத் தட்டி நடப்பட்டிருந்தது. ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்த வாசகத்தைத் தமிழில் தருகிறேன். 'தனியார் சொத்து. கடப்பவர்கள் சுடப்படுவார்கள். மீண்டும் சுடப்படுவார்கள்' என்றிருந்தது. '*And will be shot again*' எனும் வாசகம் என்னை அச்சுறுத்தியது. எனது கூற்று மிகையல்ல!

நமது நாட்டில் நாம் பாம்புகளுக்கு மத்தியில் தானே குடியிருக்கிறோம். விஷத்துக்கு அஞ்ச மாட்டோம் என்றில்லை. ஆனால், அதையே நினைத்துக் கொண்டிருப்பதும் இல்லை.

இத்தனை கொலைஞர், கொள்ளையர் மத்தியிலும் நமக்கந்த கெதி கேடு இல்லை என்பதோர் ஆறுதல்.

நாம் முன் சொன்ன இந்தியரைப் பெரு வழியில் விட்டுவிட்டு வந்தோம். சந்தேக மான அவர் நடமாட்டம் அறிந்து வந்த போலீஸ், அவரைக் கையாளுவதற்காக அணுகினார்கள். வரும் ஆபத்தைப் பற்றி எந்த அச்ச உணர்வும் ஐயப்பாடும் இன்றி, அவர் பாட்டுக்குப் பராக்குப் பார்க்கும் தம் தொழிலில் முனைந்திருந்தார். எதற்கு போலீஸ் சார்ஜென்ட் தன்னை நோக்கி வருகிறார் எனும் பரப்பிரம்மச் சிந்தனையுடன் பேன்ட் பாக்கெட்டினுள் கைவிட்டிருக்கிறார். பேன்ட் பாக்கெட்டினுள் கைவிட்டதை, துப்பாக்கி எடுக்கப் போகிறார் என்று சார்ஜென்ட் புரிந்து கொண்டார். அந்த ஊரில் அதுதான் வழமை போலும் - மறு கணத்தில் இந்தியருக்குக் கைவிலங்கு பூட்ட கீழே தள்ளி, கைகளைப் பின்புறம் கொண்டுவந்து விட்டார்.

கீழே தள்ளப்பட்ட இந்தியருக்கு முதுகெலும்பு முறிந்து போனது. அறுவை சிகிச்சை ஆகி, இன்னும் மருத்துவமனையில் கிடக்கிறார். யோசித்துப் பார்த்தேன், நம்மூரானால் என்ன நடக்கும்? குற்றவாளி பாக்கெட்டில் கைவிட்டால் நம்ம ஆள் என்ன நினைப்பார்? என்ன எதிர்பார்ப்போடு காத்திருப்பார்?

சிலருக்கு இரண்டு மணி நேரத்தில் கிடைக்கும் நீதி. செல்வமும் செல்வாக்கும் அரசியல் பின்னணியும் இருந்தால்! எதற்கு என்றே தெரியாமல் பேட்டரி வாங்கிக் கொடுத்த காரணத்துக்காக பேரறிவாளன் 26 ஆண்டுகள் சிறையில் கிடக்கிறான்! அதி

சிலருக்கு இரண்டு மணி நேரத்தில் கிடைக்கும் நீதி. செல்வமும் செல்வாக்கும் அரசியல் பின்னணியும் இருந்தால்! எதற்கு என்றே தெரியாமல் பேட்டரி வாங்கிக் கொடுத்த காரணத்துக்காக பேரறிவாளன் 26 ஆண்டுகள் சிறையில் கிடக்கிறான்!

காரத்தின் துணை இருந்தால் குற்றவாளிகளே தமக்குச் சாதகமான தீர்ப்பு எழுதி, நீதி தேவர்களின் கையெழுத்துக்கு அனுப்பிவிடலாம் தானே!

ஜாரே ஜஹான் ஸே அச்சா

இந்துஸ் தான் ஹமாரா, ஹமாரா..!

**(கற்போம்...)**

# கைம்மண் அளவு

‘நேரம் பொன் போன்றது’ என்பார்கள் பெரியோர். Time is money என்பார்கள் ஆங்கிலத்தில். அதாவது, காலம் என்பது செல்வம் எனும் பொருளில். காலத்தைச் சேமித்தல் என்பது செல்வம் சேர்த்தல். பொன்னும் பணமும் போனால் தேடிக்கொள்ளலாம். ஆனால் தொலைந்த காலத்தைத் தேடிக் கண்டடைய இயலாது. அது போனால் போனது தான். அது கடந்த காலம்; இறந்து போன காலம். ‘ஆண்டாண்டு காலம் அழுது புரண்டாலும் மாண்டார் வருவரோ மாநிலத்தில்’ என்பது மானுடர்க்கு மட்டும் இல்லை. காலத்துக்கும் சேர்த்துத்தான். போனால் வராது. தொலைந்தால் தேட இயலாது. காலம் என்பது சக்கரம் போலச் சுழல்வது. மேலே இருப்பதைக் கீழே கொண்டு வந்துவிடும். கீழே இருப்பதை மேலே கொண்டு போய்ச் சேர்த்துவிடும்.

**நாஞ்சில் நாடன்**

ஓவியம்: மருது


வெள்ளி

எனவே வம்புக்கு, வீணாகக் காலத்தை விரயம் செய்வது வாழ்க்கையின் பகுதியைக் காணாமற் போக்குவதற்கு ஒப்பானது. பொழுதுபோக்கு என்பது அலுக்க வேலை செய்தபின் கொள்ளும் ஓய்வு. பொழுது போக்குவதையே வேலையாகக் கொள்ள இயலுமா? காலம் பூரா தொலைக்காட்சிப் பெட்டிகளின் முன்னால் காத்துக் கிடப்பதை நாம் என்னவென்று சொல்ல? காலைப் பொழுதில் திரையரங்கு வாசல்களில் காத்துக்கிடக்கும் பெருங்கூட்டத்தை, நாம் இந்தியா தவிர வேறு எந்த தேசத்திலும் பார்க்கவாய்க்காது. கடையில் பொருள் வாங்கும் போது நூறு ரூபாய் கொடுத்து விட்டு மிச்சம் வாங்க மறந்து வந்துவிட்டால் வீட்டுக்கு வந்து மனம் குமைகிறோம். ஆனால், இரண்டரை மணிநேரம் ஒரு குப்பைப் படத்துக்காகத் திரையரங்கில் தொலைத்துவிட்டு வருவதில் நமக்கு எந்த ஆயாசமும் இல்லை. காசை விடப் பல்லாயிரம் மடங்கு விலைமதிப்புள்ள காலத்துக்கு நாம் செய்யும் மரியாதை இது!

அண்மையில் ஒரு திருமண வரவேற்புக்குப் போயிருந்தேன். இளைய வாசக நண்பர் ஒருவரின் திருமணம். அழைப்பிதழில் மாலை ஆறு முதல் எட்டு வரை என்று போட்டிருந்தார்கள். அன்று மாலை நான்கு மணி வரை எனக்கு நகரில் வேலை இருந்தது. வேலை முடிந்து, பன்னிரண்டு கல் அகல இருக்கும் என் வீட்டுக்குப் போய், குளித்து விட்டு உடை மாற்றித் திரும்பவும் வரலாம் அல்லது அருகில் இருந்த மலையாள நாளிதழின் அலுவலக மேலாளராக இருந்த எனது நண்பர் விஜயகுமார் குன்னிசேரியுடன் சற்று நேரம் உரையாடி விட்டு வரவேற்புக்குப் போகலாம். அவர் மலையாளக் கவிஞர், விகடகவி, தமிழில் இருந்து மலையாளத்துக்கு மொழியாக்கம் செய்பவர். ஆறரைக்குள் வரவேற்பில் கலந்துகொண்டால், ஏழரைக்குள் வீட்டுக்குப் போய் விடலாம் என்று நினைத்தேன்.

குன்னிசேரியிடம் விடை பெற்று ஆறேகாலுக்கு அரங்கினுள் நுழைந்தேன். மணமேடை வெறுமையாகக் கிடந்தது. சின்னத் தோதிலான வரவேற்பு. எனக்கு முன்பே ஐம்பது பேர் வந்திருந்தனர். மேலும் வந்து கொண்டும் இருந்தனர். பங்குனி போய்ச் சித்திரையும் வந்தது போல், ஆறரையாயிற்று, ஏழாயிற்று, ஏழேகால் கடந்தது. மணமக்கள் வரவில்லை. என் பக்கத்தில் இருந்தவரிடம் ஒருவர் சொல்லிக் கொண்டிருந்தார். மணமகள் ஒப்பனைக்குப்

போனவர் இன்னும் வரவில்லை என்று. யாரோ இளக்காரமாகச் சொன்னார்கள், "பொண்ணு அலங்காரம் ரெண்டு மணி நேரம் எடுக்குமுங்க!" அடுத்திருந்தவர் சொன்னார், "அது மொதல்லேயே தெரியும்ல? ரெண்டு மணி நேரம் முன்னக் கூட்டியே மேக்கப்புக்குப் போயிருக்கணும்ல?"

ஆமாம்! அதுதானே நியாயம்? ஓடுகிற நாய்க்கு ஒரு முழம் கூட்டித்தானே எறிவார்கள்? அரங்கில் கூட்டம் நிறையவும், மேலும் வந்தவர்களுக்கு இருக்க இடமில்லாமற் போயிற்று. எவரோ, பிரதானி போலத் தெரிந்தவர், உரத்த குரலில் அறிக்கை செய்தார், "சாப்பிடப் போலாம்ங்க... பொண்ணு மாப்பிளை இப்ப வந்திருவாங்க..." என்று. மனதின்றியும், ஒரு வேலை முடியட்டும் என்று கருதியும் கூட்டத்தில் ஒரு பங்கு உணவுக்கூடம் நோக்கிப் போனது.

பெரும்பாலும் மணமக்களுக்குப் பரிசாக, எனது புத்தகம் ஒன்றோ இரண்டோ கையெழுத்திட்டுக் கொடுப்பது எனக்கு வழக்கம். நமது சக்திக்கு இயைந்த சிறு தொகை கொடுக்கலாம். நமது தலைகுனிவுக்கும் பெறுபவர் துச்சத்துக்குமே வினையாகும். ஆனால், புத்தகங்கள் விலை மதிப்பற்றவை. மணமக்கள் வாசிப்பார்களா

**மணமக்கள் சர்வ அலங்காரப் பூஷிதராகப் பொலிவதில் நமக்கு ஒன்றும் வழக்கில்லை. அதற்காக முந்நூறு பேரின் இரண்டு மணி நேரத்தைக் களவாடுவது என்ன நியாயம்?**

என்று உமக்குத் தோன்றலாம். குடும்பத்தில் எவரோ படிப்பார் தானே! ஒருவேளை எடைக்குப் போடப்பட்டாலும் எவரேனும் பழைய புத்தகக் கடையில் வாங்கி வாசிப்பார்தானே! என்ன, அதில் நம் கையெழுத்து, பரிதாபமாக இளித்துக் காட்சி தரும். கையில் புத்தகப் பொதியுடன் காத்திருந்தேன். ஏழே முக்காலுக்கு மணமக்கள் வந்தனர். ஏதோ ராஜஸ்தான் அரச குடும்பத்து வாரிசுகள்

போன்ற ஆடைத் தோற்றப் பொலிவுடன்.

அவர்கள் சர்வ அலங்காரப் பூஷிதராகப் பொலிவதில் நமக்கு ஒன்றும் வழக்கில்லை. அதற்காக முந்நூறு பேரின் இரண்டு மணி நேரத்தைக் களவாடுவது என்ன நியாயம்? அதாவது அறுநூறு மனித மணி நேரம். அந்த நேரத்தை வேறு என்ன செய்திருப்பார்கள் என்றொரு துணைக் கேள்வியும் பிறக்கும்! அது அவரவர் சுதந்திரம். என்றாலும் எனது இரண்டு மணி நேரத்தை அபகரித்துக் கொள்ளும் பொறுப்பின்மை மீது எமக்கு எதிர்ப்பு உண்டு.

கடுப்பாக இருந்தது. விருந்தை அவதி அவதியாகத் தின்று, புத்தகங்களைத் திணித்து, புன்முறுவலுடன் வாழ்த்தி, வீடியோவுக்குச் சிரித்து, விரைந்து நடந்தேன் நகரப் பேருந்து பிடிக்க. எனது வாழ்வின் அந்த இரண்டு மணி நேரம் பாழாகப் போயிற்று. திரும்பி வரப் போவதில்லை எக்காலத்தும்! இப்படி அடுத்தவர் பொறுப்பின்மையால் நமது காலம் கணிசமாகக் கரைகிறது.

இலக்கியக் கூட்டங்களுக்குப் போனால், நிகழ்ச்சி மாலை 6-05 மணிக்குத் துவங்கும் எனப் போட்டிருப்பார்கள். அதென்ன 6-05 என்று கேட்பீர்கள். ஞாயிறுகளில் 4-30 முதல் 6-00 வரை ராகு காலமாம். இத்தனை துல்லியமாக நேரம் குறிப்பிட்டு அழைப்பிதழ் அடிப்பார்கள். நிகழ்ச்சி துவங்குவது ஆறே முக்காலுக்கோ, ஏழே காலுக்கோ... ஒன்றில் கூட்டம் சேர்ந்திருக்காது, அன்றேல் சிறப்பு விருந்தினர் கழிப்பறையில் முக்கிக் கொண்டு உட்கார்ந்திருப்பார். ஏன் கூட்டம் சேர்ந்திருக்காது என்று கேட்டால், “ஆறு மணிக்குண்ணு போடுவானுகப்பா... ஆறே முக்காலுக்குத்தான் ஆரம்பிப்பானுக...’’ என்பார்கள். கோவையில், ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ் நடத்தும் நிகழ்ச்சிகள் குறித்த நேரத்தில் துவங்கப் பெறும் என்பதால் மக்கள் சரியான நேரத்துக்கு வருகிறார்கள் என்பது ஒரு உபரித் தகவல். முதலமைச்சரோ, ஆளுநரோ கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகளுக்கு அரைமணி நேரம் முன்பாக இருக்கையில் அமர வேண்டும் என்றால் அனுசரிக்கத்தானே செய்கிறார்கள்?

தாங்கொணாத் தாமதம் என்றால் எழுந்து வீட்டுக்குப் போகப் பழக வேண்டும் நாம். சிறப்பு விருந்தினரோ, பார்வையாளரோ, சினிமா பார்க்கப் போனால், ரயில் பிடிக்கப் போனால், விமானத்துக்குப் போனால், மருத்துவரிடம் நேரம் கேட்டு வாங்கி இருந்தால்,

அரைமணி நேரம் தாமதமாகப் போவார்களா? பெரும்பாலும் குறித்த சமயத்துக்கு முன்பே சென்று சேர்வார்கள். பிறகேன் அடுத்தவர் நேரம் என்றால் அத்தனை அலட்சியம்? நம் வீட்டுக் கழிப்பறைக்குப் போய் வந்தால் உடனே விளக்கணைப் போம், அடுத்தவர் வீடு என்றால் அணைக்க மறந்துவிடலாமா?

'ஐயா! நானுங்கள் வாசகன், மடத்துக்குளத்தில் இருந்து பேசுகி றேன். மாலை நான்கு மணிக்குச் சந்திக்க வரலாமா?' என்பார்கள் அலைபேசியில். நான் நகருக்குப் போய்விட்டு, பிற்பகல் மூன்று மணிக்கு உணவருந்தி, அதன்பின் கிடந்தபடியே கொஞ்ச நேரம் வாசித்து, அப்படியே அரைமணி நேரம் உறங்கி, கிடக்கப் படுத் தும் கிடந்து ஒழியாமல், உறங்கி உணர்ந்தபின் மேலும் அரைமணி நேரம் வாசித்து, பின்பு முகம் கழுவி, காப்பிக்குத் தயாராகிற வன்.

மாலை நான்கு மணிக்கு வரு வார் என்பதால் உறங்கப் போக இயலாது. காத்திருக்கும் போது, ஐந்தரை மணிக்கு ஒரு அழைப்பு வரும், 'ஐயா, உக்கடம் வந்து விட்டேன்' என்று. அங்கிருந்து வேறு பேருந்து பிடித்து வீட்டுக்கு வர ஆறரை மணி ஆகிவிடும். எதிர்பார்த்திருப்பதை விடுத்து நமக்கு வேறு மார்க்கம் என்ன?

sun mon tue wed thu fri sat

**இலக்கிய நிகழ்ச்சி மாலை 6-05 மணிக்குத் துவங்கும் எனப் போட்டி ருப்பார்கள். அதென்ன 6-05 என்று கேட்பீர்கள். ஞாயிறுகளில் 4-30 முதல் 6-00 வரை ராகு காலமாம்.**

மாற்றாக, ஆறரை மணிக்கு வரு வேன் என்று சொல்லியிருந்தால் நம் அலுவல்களுக்குப் பங்கம் இருக்காதல்லவா? எப்போதா வது யாவர்க்கும் நேரலாம் இது சரியான காரணங்களுக்காக. ஆனால் திட்டமிடலோ அலட் சியமோ, அடுத்தவர் நேரம் பக டைக்காய் ஆகலாகாது!

சிலர் காலை பத்தரை மணிக்கு வருவேன் எனச் சொல்லி, மதி யம் வரை நாம் காத்திருந்தபின்,

sun mon tue wed thu fri sat

**முன்பெல்லாம் எவரையேனும் தேடிப்போனால் கையில் முகவரி எழுதிய தாள் துண்டு இருக்கும். இன்று அலைபேசி எண் மட்டுமே வைத்துக்கொள்கிறார்கள்.**

"சார்... இன்னைக்கு வர முடியல்லே... இன்னொரு நாள் ஃபோன் பண்ணீட்டு வாறேன்" என்பார்கள், ஏதோ நாம் விரும்பி அழைத்ததைப் போன்று.

முன்பெல்லாம் நாம் எவரையேனும் தேடிப்போனால் கையில் முகவரி எழுதிய தாள் துண்டு இருக்கும். விசாரித்துப் போய்ச் சேர்ந்து விடுவோம். இன்று எல்லோரும் அலைபேசி எண் மட்டும் வைத்துக்கொள்கிறார்கள். நம் வீடு கண்டுபிடித்து வந்து சேர்வதற்குள் ஆறேழு அழைப்புகள் வந்துவிடும். சில சமயம் அவர் நிற்கும் இடத்துக்கு நடந்து போய்க் கூட்டி வர வேண்டும். சுண்டக்காமுத்தூர் தாண்டி, ஆஸ்ரம் ஸ்கூல் தாண்டி, வ.உ.சி. நகர் நிறுத்தத்தில் இறங்குங்கள் என்றால், அவர் மறுபடியும் அலைபேசியில் அழைப்பார், "அண்ணா, அண்ணா நகர் ஸ்டாப்பில் எறங்கிட்டேன்" என்று சொல்ல. நமக்குக் குழப்பமாகி விடும், எந்த அண்ணா நகர் என்று. ஏனெனில் இரண்டு கிலோமீட்டர் இடைவெளியில் இங்கே இரண்டு அண்ணா நகர்கள் உண்டு. மாவட்டத்தலைநகர் கடலூரில் இரண்டு அண்ணா நகர்கள். பெரியண்ணா நகர், சின்னண்ணா நகர் என்றால் கூட நமக்கு விளக்கமாகும்!

காலம்... அதாவது நேரம் யாவர்க்கும் இன்றியமையாதது. அது எவர் நேரம் ஆனால் என்ன? 'காலமறிதல்' என்று திருக்குறளில் ஒரு அதிகாரம். அதில் ஒரு குறள் சொல்கிறது :

**'ஞாலம் கருதினும் கைகூடும் காலம்**
**கருதி இடத்தால் செயின்'**

உலகம் எல்லாம் பெறுவதற்கு நினைத்தாலும் பெறலாம். ஆனால் காலம் குறித்து, இடம் அறிந்து செயலாற்ற வேண்டும்.

**- கற்போம்...**

# கைம்மண் அளவு

‘அடுத்த உலகப் பெரும் போர் தண்ணீருக்காகவே நடக்கும்’ என்கிறார்கள் வரலாற்றை முன்மொழிபவர்கள். தமிழ்த் திரைப்பட வெளியீட்டுக்கான சினிமாக் கொட்டகைகளுக்காகவும் அது நடக்கலாம். ஊழல் பணம் பங்கு வைப்பதிலும் நடக்கலாம். ‘யாருடைய கடவுள் பெரிய கடவுள்’ என்பதற்காகவும் நடக்கலாம். இருந்து காணும் தீப்பேறு பெற்றவர்கள் காண்பார்களாக..!

**நாஞ்சில் நாடன்**

ஓவியம்: **மருது**



இந்திய தேசத்தின் மாநிலங்களுக்கு இடையில் தற்சமயம் நீதிமன்றங்களில் போர் நடந்துகொண்டிருக்கிறது, தண்ணீர் தாவா தீர்க்க. ஒரு மாநிலத்துக்கு உள்ளேயேகூட இப்படி நடந்தது. திருநெல்வேலி மாவட்டத்திலிருந்து தூத்துக்குடி மாவட்டம் பிரிந்தபோது, தாமிரபரணி தண்ணீரைப் பங்கு வைக்கக் கூடாது என்று போராட்டம் நடந்திருக்கிறது. ஒரே மாவட்டத்தினுள்ளும் காரைக்குடி தண்ணீரை தேவகோட்டைக்கு அனுப்பக் கூடாது என்று போராட்டம் நடந்ததுண்டு.

2012ம் ஆண்டில் 58 நாட்கள் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் 20 மாநிலங்களுக்கும் அதிகமாக சுற்றித் திரிந்தபோது, நண்பர்களுடன் சில ஆயிரம் மைல்கள் காரில் பயணம் செய்திருக்கிறேன். கலிபோர்னியா மாநிலத்தின் ஃப்ரிமாண்ட் கவுன்ட்டியில் வசித்த சடகோபன் திருமலைராஜன், என்னை கிராண்ட் கேன்யான் அழைத்துப் போனார், லாஸ் வெகாஸ் தாண்டி. அந்தப் பயணத்தின்போது சில விவசாயப் பண்ணை முகப்புகளில் பெரிய அறிவிப்பு எழுதி வைத்திருந்தனர். ‘அண்டை மாநிலத்துடனான தண்ணீர்த் தாவா காரணமாக, இந்தப் பண்ணை இந்த வறண்ட கதியில் கிடக்கிறது’ என்பதாக.

கர்நாடகம் தமிழகத்துக்குத் தண்ணீர் தர மறுப்பதை எதிர்த்து நாம் போராடும் வேளையில், கர்நாடகத்தின் மேற்குப் பகுதியில் இருக்கும் பீஜப்பூர் மாவட்டத்தில் குடிநீர்க் குழாயில் தண்ணீர் பிடிக்க, நீண்ட வரிசையில் 200 குடங்கள் கிடப்பதைக் கண்டிருக்கிறேன். அங்கு தங்கும் விடுதியில், பல் துலக்க, முகம் மழிக்க, கழிப்பறை போக, குளிக்க என்று யாவற்றுக்குமாக அறையில் இரண்டு வாளித் தண்ணீர் அளந்து தந்தனர். டார்ஜிலிங் எனும் சொல் கேட்ட உடன், தானே மனதிலும் உடம்பிலும் பனிக்குளிர் ஊடுருவும். அங்கே தள்ளுவண்டியில் கூலிகள் 20 லிட்டர் கேன்கள் பல வைத்துத் தள்ளிக்கொண்டு போவதைக் காணலாம். பெட்ரோல் அல்லது டீசல் என்று எண்ணிக் கொள்ள வேண்டாம், தண்ணீரேதான்!

‘பணத்தைத் தண்ணீர் போலச் செலவழிக்கிறான்’ என்று சொல்வார்கள், ஊதாரித்தனம் புகல! ஆனால் இன்று ‘தண்ணீரைப் பணம் போலச் செலவு செய்ய வேண்டும்’ என்று சொல்லும் இடத்துக்கு நகர்ந்து வந்திருக்கிறோம். இந்தச் சூழலில், தண்ணீரை வீண் செய்ய வேண்டாம் என்று மன்றாடுவதற்காகவே இந்தக் கிழமையின் எழுத்து. இது பற்றி ஏற்கனவே பிரபல வார இத

ழின் வாசகருடன் நான் உரையாடி இருக்கிறேன்.

எல்லோரது வீட்டுக்கும் விருந்தினர்கள் வருவார்கள். நான்கு பேர் என்று வைத்துக்கொள்வோம். வந்து அமர்ந்தவுடன், மின் விசிறி சுழல விடுவோம். இல்லத்தலைவி முதலில் நான்கு பெரிய தம்ளரில் தண்ணீர் கொண்டு வைப்பார். காய்ச்சி வடிகட்டிய சிறுவாணி. தேவையற்றவர் தொடுவதில்லை. சிலர் ஒரு வாய் குடித்து வைப்பார்கள். சிலர் அரைத் தம்ளர் குடிப்பார்கள். பிறகு சிறு தீனியோ, தேநீரோ வழங்கப் பெறும். அவர்கள் விடைபெற்றுப் போன பிறகு, மீதமிருக்கும் தண்ணீரை மறுபடி குடிநீர்ப் பானையில் கொண்டு போய் ஊற்ற மாட்டோம் உறுதியாக. ஆனால், அந்தத் தண்ணீரைக் கழிவுநீர்க் கோப்பையில் கொண்டு போய்க் கொட்டுவது நியாயமா?

**'பணத்தைத் தண்ணீர் போலச் செலவழிக்கிறான்' என்று சொல்வார்கள், ஊதாரித்தனம் புகல! ஆனால் இன்று 'தண்ணீரைப் பணம் போலச் செலவு செய்ய வேண்டும்' என்று சொல்லும் இடத்துக்கு நகர்ந்து வந்திருக்கிறோம்.**

என்ன செய்யலாம்? தற்சமயம் பெரிய உணவு விடுதிகளில் ஆர்டர் செய்து தின்ன முடியாமல் மீதம் ஆவதைக் கட்டி வீட்டுக்கு எடுத்துப் போவதைப்போல, வந்த விருந்தாளிகளிடம் பிளாஸ்டிக் பைகளில் கட்டிக் கொடுத்து விடலாமா? நடைமுறைச் சாத்தியம் இல்லை. ஆகவே வீணாக்கி விடலாமா? ரயில் பயணங்களில் வாங்கும் தண்ணீர் பாட்டிலின் மிச்சத்தைப் பலரும் கையோடு எடுத்துப் போகிறார்கள். அவர்கள் பொறுப்புணர்வு வாழ்க! சிலர் அலட்சியமாக வண்டியிலேயே விட்டுப் போவார்கள். ரயில் பெட்டியைச் சுத்தம் செய்வோர், தண்ணீரைக் கொட்டிவிட்டு, காலி பிளாஸ்டிக் சேமித்துக் கொள்கிறார்கள்.

நீங்கள் முனகுவது கேட்கிறது, 'என்னதான் செய்யச் சொல்கிறார்' என்று. மாற்று வழியொன்று தோன்றுகிறது. வீட்டு மனைகளில் மண் உடையவர் செடியொன்று நட்டு,

எச்சில் தண்ணீரைச் செடியின் வேரில் விடலாம். வீட்டைச் சுற்றி மண்ணே இல்லாமல் கான்க்ரீட் போட்டவர்கள், அடுக்குமாடிகளில் வசிப்போர் தொட்டிச் செடி வளர்க்கலாம். சாக்கடைக்குப் போகும் நீரை அதற்கு உயிர்த் தண்ணீராய் ஊற்றலாம். மூத்த தமிழ் எழுத்தாளர் அம்பை, தனது மும்பை வெர்ஸோவா பீச் சாலையில் இருக்கும் ஃபிளாட்டில் இருபது, முப்பது தொட்டிச் செடிகள் வைத்திருக்கிறார். ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு பெயரும். அவற்றுள் பல செடிகளுக்குத் தமிழும் கற்றுத் தந்திருக்கிறார், உரையாட.

அண்மைச் செய்தியொன்று, மத்திய அமைச்சர் ஒருவர் தனது சொந்த சிறுநீரைச் சேமித்துச் செடிகளுக்கு ஊற்றுகிறார் என! அவர் தன்னைக் காண வரும் பார்வையாளர் சிறுநீரையும் சேமிக்கலாம். அல்லது என் இரண்டரை வயதுப் பேரன் சித்தார்த்தன் செய்வதைப் போல, நேரடியாகவே செடிகளுக்குப் பாய்ச்சலாம். நான் என்ன செய்கிறேன் என்பதை இடக்கரடக்கல் கருதி இங்கே தவிர்த்துச் செல்கிறேன்.

அண்மையில் புதுச்சேரியில் ‘வடகரை’ நூல் அறிமுகவிழாவுக்குச் சென்றிருந்தபோது, புதுவை திருக்குறள் மன்றச் செயலாளர் லட்சுமிநாராயணன் பேசிக்கொண்டிருந்தார். எண்பது வயது கடந்த பெரியவர், காந்தியவாதி, தீவிர வைணவர், கிருஷ்ண தேவராயரின் படைத்தளபதி போலத் தோற்றப் பொலிவு கொண்ட அவர் சொன்னார், ஒவ்வொரு முறை சிறுநீர் கழிக்கும்போதும் கோப்பையில் 7 லிட்டர் தண்ணீர் ஊற்றப்படுகிறது என்று. அவர் ஜெயராம் ஓட்டலின் பொது மேலாளர், எனவே தகவல் சரியாகவே இருக்கும்.

அனைத்து உணவு விடுதிகளிலும் வைக்கப்படும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீரில், குடிக்கப்படாத தண்ணீர் கீழே கொட்டப்படுகிறது. திருமண விருந்துகளில் குடிக்க என 300 மி.லி அல்லது 500 மி.லி பாட்டில்கள் வைக்கப்படுகின்றன. ஒருவாய், அரைவாய் குடித்த பின் வீணாக்கப்படுகின்றன. தண்ணீர் சிரமம் உணர்ந்த சிலர் மட்டும் மிச்சத் தண்ணீரைக் கையில் எடுத்துக்கொள்கிறார்கள். புத்திசாலிகளான சிலர், கை கழுவி வாய் கொப்பளிக்கப் போகும் தண்ணீர் அசுத்தமானதாக இருக்கும் என்று அறிந்து, அங்கே பாட்டிலைக் கொண்டு சென்று பயன்படுத்துகிறார்கள்.

வறண்ட பூமியில் வாழும் கிராம மக்கள், மழைத் தண்ணீரை வடிகட்டிச் சேமிக்கி

றார்கள். அதற்காகவே தோதாக, கூரையின் ஓவுகள் இருந்தன. கலங்கிய ஊருணி நீரைத்தேத்தாங்கொட்டை போட்டுத் தெளிய வைத்துக் குடிக்கிறார்கள். இன்றும் செட்டிநாட்டில், வட இந்தியாவின் பல மாநிலங்களில் தலைமேல் இரண்டு குடமும் இடுப்பில் இரண்டு குடமுமாக நடக்கிறார்கள் பெண்கள், தூரம் கடந்து.

இன்றும் செட்டிநாட்டில், வட இந்தியாவின் பல மாநிலங்களில் தலைமேல் இரண்டு குடமும் இடுப்பில் இரண்டு குடமுமாக நடக்கிறார்கள் பெண்கள், தூரம் கடந்து.

கனடா ஏரிகள் நிறைந்த தேசம். அங்கும் மழை பொய்த்துப்போனதெனில், 'வாகனங்களைத் தண்ணீர் கொண்டு கழுவலாகாது' என மாநகராட்சி அறிவிக்கும். மக்கள் அதை பொறுப்பாக அனுசரிப்பார்கள் என்றும் அறிந்தேன். அமெரிக்க மாநிலமான நியூ மெக்சிகோவில் அல்புகர்க் மாநகரில் தங்கியிருந்தபோது நண்பர் ராஜன் பிள்ளை சொன்னார், முற்பகல் பத்து மணி முதல் பிற்பகல் நான்கு மணி வரை தோட்டத்துச் செடிகளுக்குத் தண்ணீர் ஊற்ற அனுமதி இல்லை என்று! சூரிய வெப்பத்தால் அதிக நீர் ஆவியாகி விடும் என்பதால் இந்தத் தடை.

நம் நாட்டில் அக்னி நட்சத்திரக் கோடைக் காலங்களில் தண்ணீர்த் தொட்டியில் இருவேளை தினமும் குளிக்கும் கனவான்கள் உண்டு.

ஆடம்பரமாக நாம் வீணாக்கும் தண்ணீரை எவ்விதம் சேமிக்கலாம் என நிபுணர் குழு அமைத்துக் கேட்டால் அவர்கள் 47 ஆண்டுகள் எடுத்துக் கொள்வார்கள் அறிக்கை சமர்ப்பிக்க! அதற்குள் மாந்தர் குடல் கருகிச் சாவார்கள், தாவரங்கள் இலை கருகிச் சாகும். எனவே வீட்டில் தொடங்குங்கள் தண்ணீர் சேமிப்பை!

முன்பு வீட்டுக்கு வரும் விருந்தினருக்கு லோட்டாவில் தண்ணீர் கொடுப்பார்கள். 'லோட்டா' என்பது உருதுச் சொல். 'நீர்ச்செப்பு' எனலாம்

தமிழில். அதைத் தூக்கி, தண்ணீரை அண்ணாந்து குடிப்பார்கள். மூன்று நான்கு பேர் நோய்த்தொற்று இன்றிப் பகிர்ந்துகொள்வார்கள். எச்சில் படாமல் அண்ணாந்து தண்ணீர் குடிப்பது மூட நம்பிக்கை என்றும், பண்பு அழிந்த செயல் என்றும் கருதியதால், எல்லோரும் தம்ளரில் வாய் வைத்து உறிஞ்சிக் குடிக்கக் கற்றுக்கொண்டோம். சில சமயம் தோன்றுகிறது, நாகரிகம் எனும் பெயரில் வண்டியை மாட்டுக்கு முன்னால் பூட்டுகிறோம் என்று!

சில சமயம் தோன்றுகிறது, நாகரிகம் எனும் பெயரில் வண்டியை மாட்டுக்கு முன்னால் பூட்டுகிறோம் என்று!

அகில உலகத் தண்ணீர் தாகித்திருப்போர் சார்பாக, என் கோரிக்கை இதுதான். தண்ணீரைப் பயன்படுத்தும்போது சற்று யோசியுங்கள். விரயம் என்பது மனித குலத்துக்கு எதிரான அநீதி.

கம்பன் ஒரு சந்தர்ப்பத்தில் உவமையொன்று சொல்வார், ‘அங்கணத்து உகுத்த அமுது’ என்று. அங்கணம் என்றால் முற்றம் அல்லது முன்றில். இந்த இடத்தில் ‘முற்றத்துத் தரையில் கொட்டிய அமுது’ என்று பொருள் தரும். உண்ணீரும் அமுதேதான். அதை முற்றத்தில் சிந்தி வீணாக்குவது முறையன்று.

கிராமத்தில், எங்கள் ஓலைக் குடிசை வீட்டின் பின்புறம் இரு தெங்குகள் நின்றன. தமிழ்ப் பேராசிரியர்கள் கவனத்துக்கு - தெங்கு என்பது சங்ககாலச் சொல், ‘தென்னை’ என்ற பொருளில். எங்கள் தகப்பனார் சாப்பிட்டுக் கை கழுவ, தெங்கு மூட்டுக்குப் போவார். ஒவ்வொரு நாள், ஒவ்வொரு தெங்கு. விவசாயிக்குத் தெரியும் தாவரங்களும் தண்ணீரும் பற்றி. திருவள்ளுவர் சொல்கிறார், ‘வான் சிறப்பு’ எனும் இரண்டாவது அதிகாரத்தில்...

‘விசும்பின் துளிவீழின் அல்லால் மற்றாங்கே
பசும்புல் தலைகாண்பது அரிது’

மழைத்துளி, அதாவது நீர்த்துளி விழாமற் போனால், பசும் புல்லின் நுனியைக் கூடக் காண இயலாது.

**– கற்போம்...**

# கைம்மண் அளவு

‘ரெண்டுல நீ ஒண்ணைத் தொடு மாமா’ என்றொரு திரை இசை சாகித்தியம் உண்டு தமிழில். நேரான அர்த்தத்தில் புரிந்து கொள்ளப் பிரயத்தனப்பட வேண்டும்.
ஆட்காட்டி விரலுக்கு ஒன்றை நினைத்துக் கொண்டு, நடுவிரலுக்கு எதிர்மறையான இன்னொன்றை நினைத்துக் கொண்டு, தனது எதிர்பார்ப்பை உறுதி செய்து கொள்ள, முன்னால் நிற்கும் தோழன் அல்லது தோழியிடம் கேட்டுக்கொள்வது, ‘ரெண்டுல நீ ஒண்ணைத் தொடு’ என்று. தேர்வு முடிவுகள் வர இரண்டு நாட்கள் இருக்கும்போது, ‘ஆட்காட்டி விரலைத் தொட்டால் வெல்வேன்’ என்றும், ‘நடுவிரலைத் தொட்டால் தோற்பேன்’ என்றும் நினைத்துக் கொள்வார்கள். வெல்வேன் என்று நினைத்த விரல் தொடப்படாமற் போனால், மறுபடி விரல்களை ஆட்டி மாற்றி நினைத்துக்கொள்வதும் உண்டு.

**நாஞ்சில் நாடன்**

ஓவியம்: மருது





இதனைப் பல துக்கும் பொருத்திப் பார்த்துக்கொள்ளலாம். சாதகம் பார்க்காமல், சாமி சந்நிதியில் பூக்கட்டிப் போட்டுப் பார்த்து முடிவெடுப்பது போல! சிவப்பு வந்தால் கல்யாணம் நடத்தலாம், வெள்ளை வந்தால் நடத்த வேண்டாம். மாற்றியும் நினைத்துக் கொள்வதுண்டு. அஃதே போல்தான் சீட்டு எழுதிப் போட்டு எடுக்கச் சொல்வதும். சாதகம் பார்ப்பது, ஆரூடம் பார்ப்பது, நிமித்தம் பார்ப்பது, பிரசன்னம் பார்ப்பது... யாவுமே அடிப்படையில் நம்பிக்கை சார்ந்தவை. நாளும் கோளும் எனும்போது விஞ்ஞானம் சற்றுக் குறுக்கிட்டாலும் நம்பிக்கைதான் மூல பலம்.

இது ஒருவகையான மன உறுதிக்கான செயல்பாடு எனலாம். நம்பிக்கை இன்றேல் வாழ்க்கை ஏது? பண்டைக் காலத்தில் காதல் வயப்பட்ட பெண்கள் கூடல் இழைத்துப் பார்த்திருக்கிறார்கள். கூடல் இழைப்பது என்றால் என்ன? தலைவன் மேல் காதல் வயப்பட்ட பெண், புன்னை மர நிழலில் அல்லது தாழம் புதர் நிழலில் ஆற்று மணல் மேல் உட்கார்ந்திருப்பார். அன்றெல்லாம் ஆற்றில் மணல் இருந்தது. ஆனால், கல்வித் தந்தைகள் இல்லை. இன்று ஊருக்கு நான்கு கல்வித் தந்தைகள் உண்டு. ஆனால் ஆற்றில் மணல் இல்லை.

ஆற்று மணல் அல்லது கடல் மணல் மேலே, மர நிழலில் உட்கார்ந்திருக்கும் பெண், கண்களை மூடிக் கொண்டு தனது ஆட்காட்டி விரலால், மணலில் வட்டம் வரைவாள். வரையும் போது நினைத்துக்கொள்வாள். வட்டம் கூடுமேயானால், தான் விரும்பும் தலைவனைக் கூடுவாள். வட்டம் கூடாமற் போனால், கூட மாட்டேன் என்று கருதுவாள்.

வட்டம் வரையும் பெண்ணுக்கு, பாதி வட்டம் வந்தவுடன் சந்தேகம் வந்து விடும். ஒருக்கால் வட்டம் கூடாமற் போனால், தலைவனைச் சேர முடியாமற் போகுமே! அது மிகவும் துன்பம் அல்லவா? எனவே வட்டம் வரைவதை நிறுத்தி விடுவாளாம்.

கூடல் இழைத்துப் பார்க்கும் பண்டைத் தமிழ் வழக்கம் பற்றி முத்தொள்ளாயிரம் பேசுகிறது. முத்தொள்ளாயிரம் என்பது, சங்க இலக்கியங்கள் என்று அறிஞர்கள் வரையறுத்த 41 நூல்களில் நாற்பதாவது. மூன்று தொள்ளாயிரம் பாடல்களைக் கொண்டிருந்த பாடல்களில் இன்று கிடைப்பது 108 நேரிசை வெண்பாக்கள் மட்டுமே! 1905ல்

இரா.இராகவையங்கார் இதனை முதன்முறையாகப் பதிப்பித்தார். கிடைத்தவற்றுள் 82வது பாடல் மேற்சொன்ன விரலால் சுழி போட்டுக் குறி பார்ப்பதைப் பேசும் பாடல்.

'கூடல் பெருமானைக் கூடலார் கோமானைக்
கூடப் பெறுவனேல் கூடு என்று - கூடல்
இழைப்பாள் போல் காட்டி இழையாது இருக்கும்
பிழைப்பில் பிழை பாக்கு அறிந்து!'

'மதுரை நகர் மன்னனை, கூடல் நகரத்தார் கோமகனான பாண்டியனை என்னால் கூட இயலும் என்றால், வளையமே நீ கூடுவாயாக' என்று நினைத்து, கண்கள் இரண்டையும் மூடிக் கொண்டு, வட்டம் வரையத் தொடங்கி, வட்டத்தை முடிக்காமல் தயங்கி நிற்பாள். ஏனெனில் வளையம் கூடாவிட்டால், பாண்டியனைக் கூட முடியாமல் போகும் பிழை நேருமே என்ற அச்சம் காரணமாக.

பல கோணங்களில் இன்று நாமும் மனத்தினுள் கூடல் இழைத்துப் பார்க்கிறோம். மழை வருமா, வராதா? மின்சாரம் வருமா, வராதா? பேருந்து வருமா, வராதா? விரும்பிக் கேட்ட இடத்துக்குப் பணியிட மாறுதல் கிடைக்குமா, கிடைக்காதா? மேற்படியான் திரைப்படம் வெளியாகுமா, வெளியாகாதா? வெளியானால் வெல்லுமா, கொல்லுமா? நகரத்து வீடு எனில் தண்ணீர் வருமா, வராதா? ரேஷன் கடையில் மண்ணெண்ணெய் வருமா, வராதா?

ஆங்கிலத்தில் '*Caught in between devil and deep sea*' என்றொரு சொல்வழக்கு உண்டு. பொருளாவது, 'பேய்க்கும் ஆழ்கடலுக்கும் நடுவில் சிக்கிக்கொள்வதைப் போல' என்பது. இதில் என்ன ஒத்தையா, ரெட்டையா வைப்பீர்கள்? உயிர் உறிஞ்சத் துரத்தும் பிசாசா அல்லது ஆழ்கடலா? எது மேலானது ஐயா? உயிர்க்கொல்லி நோயா அல்லது அதிநவீன மருத்துவமனையா?

**அ**

**ன்றெல்லாம் ஆற்றில் மணல் இருந்தது. ஆனால், கல்வித் தந்தைகள் இல்லை. இன்று ஊருக்கு நான்கு கல்வித் தந்தைகள் உண்டு, ஆனால் ஆற்றில் மணல் இல்லை.**



கல்லாமை எனும் பேயா அல்லது பெற்றோரின் அரை வேட்டியையும் உரித்து விடும் கல்வித் தந்தையரின் கொள்ளைக் கூடங்களா? பெண்டும் பிள்ளைகளும் அருகே இருந்து வாழக் கொடுத்து வைக்காத பணியிடங்களா, அல்லது மாறுதல் ஆணைக்கு இரண்டாண்டு சம்பளத்தைச் சன்மானமாகக் கேட்கும் சொந்தத்துறை மேலதிகாரிகளா?

பி.ஏ., எம்.ஏ., எம்.ஃபில்., பிஎச்.டி என்று தமிழ் கற்றபின் மாதம் ஏழாயிரம் ரூபாய் ஊதியத்துக்கு வேலைக்குப் போவதா, அன்றேல் நூறு நாள் வேலைத் திட்டத்தில் குட்டை மண் சுமக்கப் போவதா?

இரண்டில் எந்த ஒன்றைத் தொடுவீர்கள்?

கதையொன்று சொல்வார்கள்... வேங்கைப் புலி ஒன்று துரத்தி வந்ததாம் ஒருவனை. ஓடிவந்து, கிணற்றுக்குள் தொங்கி ஆல மரத்து விழுதினைப் பற்றி கிணற்றினுள் இறங்க யத்தனித்தானாம். ஆழம் தீர்மானிக்க, கிணற்றினுள் குனிந்து பார்த்தானாம். அங்கே கொடிய விஷ நாகம் ஒன்று படம் எடுத்து நின்றதாம். என்றாலும் ஆலமரத்துக் கிளையில் அண்ணாந்து பார்த்தால், கிளையில் இருந்த தேன்கூட்டிலிருந்து செந்தேன் சொட்டு விழாதா என்ற அங்கலாய்ப்பு.

பாயும் அரசியல் புலிக்கும் படமெடுத்து நிற்கும் அதிகார நாகத்துக்கும் நாம் பயந்து நடுங்கும் வேளையில் சொக்கி நிற்பதோ தமிழ் சினிமா எனும் மாயத்தேன் சொட்டுக்கு...

இருமுனை என்றில்லை, பல்முனைப் போராட்டமாக இருக்கிறது வாழ்க்கை. பகிர்ந்து கொள்ள முடிகின்றவை, பிறரிடம். மனதினுள்ளே வைத்துப் புழுங்குகின்றவை? தாங்கிக் கொள்ள வேண்டும் அல்லது தற்கொலை செய்துகொள்ள வேண்டும். விவசாயிகளுக்கு அடுத்தபடியான எண்ணிக்கையில் இன்று அரசு ஊழியர்களின் தற்கொலைகள் அமைந்து விடும் போலும்!

இருதலைக் கொள்ளி எறும்பு என்பார்கள் முன்பு. மூங்கில் போன்று உட்குழாய் உடைய சிறு துண்டு மரத்தில் இருபுறமும் தீப்பற்றிக் கங்கு பாய்ந்து கிடக்க, குழாயின் நடுவே சிக்கிக் கொண்ட எறும்பின் சிக்கல். இந்த இரண்டு முனைகளில் எந்தத் தலையைத் தொடும் கட்டெறும்பு, சிற்றெறும்பு, கடியெறும்பு, பிள்ளையார் எறும்பு, செவ்வெறும்பு, மொசறு எறும்பு, கருத்துவா எறும்புகள்?

கர்நாடக இசை மேதை, மதுரை சோம சுந்தரத்தின் சொந்த சாகித்தியம் ஒன்றுண்டு. அவர் குரலிலேயே உருகி, நைந்து, குழைந்து பாடும் கீர்த்தனை... 'என்ன கவி பாடினாலும் உந்தன் மனம் இரங்கவில்லை...' என்று கடவுளை நோக்கி யாசித்த பாவம். இன்றோ என்ன கவி பாடினாலும் இரங்காத அதிகாரம், இரங்காத குடிமக்கள் நல்வாழ்வுத் துறைகள்... கவிக்கு இரங்காதவை, காசுக்கு மட்டுமே இரங்குகின்றன. எங்கு குறை இரந்து போய் நின்றாலும் அங்கே குரல்வளையை அறுக்கிறார்கள், ஆட்டுக்கு அறுப்பதைப் போன்று.

தனிப்பாடல் திரட்டில், தொண்டை நாட்டு ராமச்சந்திரக் கவிராயர் பாடல்கள் என 27 தொகுக்கப்பெற்றுள்ளன. எல்லீசு துரை அவரது கல்வித் திறமையைப் புகழ்ந்து பாடியிருக்கிறார். இனி, கவிராயர் பாடல்:

'ஆவீன, மழை பொழிய, இல்லம் வீழ,
அகத்தடியாள் மெய் நோவ, அடிமை சாக,
மாவீரம் போகுதென்று விதை கொண்டு ஓட,
வழியிலே கடன்காரர் மறித்துக் கொள்ள,
சாவோலை கொண்டொருவன் எதிரே செல்ல,
தள்ள ஒண்ணா விருந்து வர, சர்ப்பம் தீண்ட,
கோவேந்தர் உழுதுண்ட கடமை கேட்க,
குருக்களோ தட்சணைகள் கொடு என்றாரே!'

பொருள் சொல்ல வேண்டும் என்றில்லை. எளிமையான பாடல்தான். என்றாலும் தேவைப்படும் சிலருக்காக... சினைப்பசு கன்று ஈன, அடை மழை பொழிய, வீடு இடிந்து விழ, மனையாட்டிக்கு பிரசவ வலி எடுக்க, எப்போதும் கூடவே இருக்கும் வேலையாள் செத்துப் போக, வயலில் ஈரப்பதம் போய்விடும் என்று அவசரமாய் விதை நெல் கொண்டு ஓட, வழியில் பார்த்த கடன்காரன் வசூலாகாத பாக்கி கேட்டு மறித்து நிற்க, நெருங்கிய உறவினர் பக்

இ

தில் என்ன
ஒத்தையா,
ரெட்டையா
வைப்பீர்கள்?
உயிர் உறிஞ்சத்
துரத்தும்
பிசாசா
அல்லது
ஆழ்கடலா?
எது மேலானது
ஐயா?
உயிர்க்கொல்லி
நோயா
அல்லது
அதி நவீன
மருத்துவ
மனையா?

**க**

**டவுளுக்குத்தான் எத்தனை அலுவல்கள்? அரசியல் செய்வோருக்கு முன் ஜாமீன் எடுக்க வேண்டும், முறையான ஜாமீன் எடுக்க வேண்டும், விடுதலை வாங்கிக் கொடுக்க வேண்டும் என்று எத்தனை எத்தனை கவலைகள்!**

கத்து ஊரில் செத்துப் போனார் என்று சாவுச் செய்தி கொண்டு ஒருவன் எதிரே வர, தள்ள முடியாத விருந்தாளிகள் வீடு தேடி வர, விஷ நாகம் தீண்ட, உழுது பயிர் செய்த நிலத்தின் வரி தரச் சொல்லி மண்ணாளும் வேந்தர் ஆள் அனுப்ப, குருக்களோ 'எனக்குத் தர வேண்டிய தட்சணைகளைக் கொடுத்து விடு' என்றாராம்.

பன்னிரண்டு வகையான துன்பங்கள், ஒன்று சேர்ந்தும் அடுத்து அடுத்தாகவும் அந்த ஏழைக் கிராம விவசாயிக்கு... இதிலெங்கே அவர் இரண்டில் ஒன்றைத் தொடுவது?

இன்று அரசாங்கம் உழுதுண்ட கடமை கேட்கிறது. வியாபாரி அவனது உடல், பொருள், ஆவியும் கேட்கிறான். ராமச்சந்திரக் கவிராயரின் இன்னொரு பாடலும் இறைவனை நொந்து கொள்கிறது.

*'கல்லைத்தான் மண்ணைத்தான் காய்ச்சித்தான்*
*குடிக்கத்தான் கற்பித்தானா?*
*இல்லைத்தான் பொன்னைத்தான் எனக்குத்தான்*
*கொடுத்துத்தான் ரட்சித்தானா?'*

என்றெல்லாம். யார் கற்பித்திருக்க வேண்டும்? யார் ரட்சித்திருக்க வேண்டும்? கடவுள்தான், வேறு யார்?

ஆனால், கடவுளுக்குத்தான் எத்தனை அலுவல்கள்? அரசியல் செய்வோருக்கு முன் ஜாமீன் எடுக்க வேண்டும், முறையான ஜாமீன் எடுக்க வேண்டும், நிபந்தனை ஜாமீன் எடுக்க வேண்டும், விடுதலை வாங்கிக் கொடுக்க வேண்டும் என்று எத்தனை எத்தனை கவலைகள்!

நாம் என்ன செய்யலாம்? வாழ்வேனா அல்லது சாவேனா என்று 'ரெண்டிலே ஒண்ணைத்' தொடச் சொல்லலாம்!

**– கற்போம்...**



# கைம்மண் அளவு

பழமொழி, சொலவம், சொலவடை யாவும் ஒரு தாய் மக்கள். அவை மக்கள் மொழியின் நயமும் சுவையும் ஆழமும் கூட்டுபவை. ஒன்றைச் சொல்லி, மற்றொன்றைப் புரிய வைப்பவை. விரிவான பொருளைத் தேடிப் போகப் பணிப்பதே அவற்றின் பண்பும் பயனும் ஆகும். தமிழ் இலக்கணம் பேசும் குழூஉக் குறி, இடக்கர் அடக்கல், மங்கல வழக்கு யாவற்றுக்கும் பழமொழிகளில் எடுத்துக்காட்டுகள் உண்டு.

மொழிக்குள் புதைந்து கிடக்கும் பழமொழிகள் பற்றி விரிவான ஆய்வுகள் நடத்திய பல்கலைக்கழகங்கள், தடித்தடியான ஆய்வேடுகளைத் துறை நூலகங்களில் பதுக்கி வைத்திருக்கின்றன. புத்தகங்களில் தொகுப்பது என்று வரும்போது, பழமொழிகளைக் கழுவித் துடைத்து, பூ வைத்துப் பொட்டிட்டு, அவற்றின் மண் வாசமும் மொழி வாசமும் நீக்கி, இயற்கை அழகை ஆபாசப்படுத்தி விடுவார்கள். வடநாட்டில் ஒரு பழமொழி சொல்வார்கள், 'கர் கா முர்கி, டால் பராபர்' என்று. பொருள் 'வீட்டுக்கோழி, பருப்புக்குச் சமானம்' என்பது.

பழமொழிகள் தமிழ் மொழிக்கேயான சிறப்பு என்று இல்லை. எம்மொழி பேசும் மக்களானாலும் மிகத் தாராளமாகத் தமது

நாஞ்சில் நாடன்

ஓவியம்: மருது



உரையாடல்களின்போது பழமொழி பயன்படுத்துகிறார்கள். நகர்வயப்பட்டவர், தமது சொந்த வேர்களைத்துண்டித்து அந்நியப்பட்டுப்போனதனால், அவர்களிடம் பழமொழிகள் தமது செல்வாக்கை இழந்து நிற்கின்றன. அவர்கள் நகரத்துக் கொச்சை வழக்கில் புழங்குகிறார்கள்.

சங்க இலக்கிய நூல்களின் அங்கமான பதினெண் கீழ்க்கணக்குநூல்கள் என அறியப்படும் பதினெட்டு நூல்களில் மூன்றாவது நூல், 'பழமொழி நானூறு'. நேரிசை வெண்பாக்களும் சில இன்னிசை வெண்பாக்களுமாக நானூறு பாடல்கள். மூன்றுரை அரையனார் இயற்றியது. அற்புதமான பழமொழிகள் நானூறைப் பாடல்கள் மூலம் விளம்பும் நூல்.

'மரம் குறைப்ப மண்ணா மயிர்' என்கிறது ஒரு பாடல். மரத்தினை வெட்டிக் குறைக்கும் வல்லமை உடைய கருவிகள், மயிர் வெட்ட உதவ மாட்டா என்பது பொருள். தொழில் வெட்டுவது தான் என்றாலும், கருவிகள் வேறு வேறுதானே! இன்னொன்று 'நாய் பெற்ற தெங்கம் பழம்' எனும் பழமொழியைக் கையாள்கிறது. தெங்கம் பழம் எனில் 'தேங்காய் நெற்று' என்று பொருள். தென்னையின் மாற்றுச் சொல் தெங்கு. சங்க இலக்கியங்களில் தென்னையைத் தேடிக் காணாமல், 'சங்க காலத்தில் தமிழகத்தில் தென்னை மரம் இல்லை' என்று ஆய்வு நடத்துகின்றன தமிழ்த் துறைகள். ஒரு நாயிடம் முதிர்ந்த தென்னை நெற்றுக் கிடைத்தால் அதை வைத்து நாய் என்ன செய்யும்? உடைத்துத் தின்ன இயலுமா? சும்மா உருட்டிக் கொண்டிருக்கும், அவ்வளவே!

சில ஆண்டுகளுக்கு முன்பு கோவையில் செம்மொழி மாநாடு நடந்தபோது, 'நாய் பெற்ற தெங்கம் பழம்' எனும் தலைப்பில் நீண்ட கட்டுரை எழுதினேன். சமீபத்தில் கோலாலம்பூரில் உலகத் தமிழ் மாநாடு நடந்தபோது சிறப்பு மலர் வெளியிட்ட புகழ்பெற்ற இதழ் ஒன்று, எனது கட்டுரையை முழுமையாக மறு பிரசுரம் செய்தது. தெங்கம் பழம் என்று நான் தொல் தமிழ் மொழியைச் சொன்னேன். மேற்கொண்டு உரை எழுதுவது உங்கள் ஆற்றல்.

'மச்சேற்றி ஏணி களைவு' என்கிறது இன்னொரு பாடல். மச்சின் மீது ஏணி வைத்து ஏற்றி விட்ட பின் ஏணியை எடுத்து விடுவது என்று பொருள். 'ஏற விட்டு ஏணி எடுப்பான் ஆம்பிளைச் சாதி' என்று பழைய சினிமாப் பாடல் வரியொன்று நினைவில் ஓடுகிறது. 'உமிக் குற்றக் கை வருந்தும் ஆறு' என்பது வேறொரு பாடலின் வரி. உலக்கைபோட்டு

நெல்லைக் குத்தி. அதனால் கைவலி எடுத்தால் அதற்கு அர்த்தம் உண்டு. உமியைக் குத்தி எவரேனும் கைவலி தேடிக் கொள்வார்களா? இன்று தமிழ்க் கவிதை எனும் பெயரில் பெரும்பாலும் உமியைக் குத்தி நமக்குக் கைவலி எடுக்கிறது!

மராத்தி மொழியில் அடிக்கடி சொல்லும் பழமொழி, 'நாச் ந ஆலா, ஆங்கணு தேடா' என்பது. 'நாட்டியம் ஆடுவதற்குத் திராணியில்லை, முற்றம் கோணலாக இருக்கிறது என்று சொன்னாளாம்' என்பது வெளிப்படையான பொருள். செய்யும் தொழிலில் தேர்ச்சி இல்லை. ஆனால் கருவியை, வாகனத்தைப் பிறரைக் குறை கூறுவார்கள் அல்லவா, அதற்கான பழமொழி இது. இதற்கு இணையான தமிழ்ப் பழமொழி உண்டு. 'ஆடத் தெரியாதவள் கூடம் கோணல் என்றாளாம்' என்பது அது. இந்தப் பழமொழியில் ஒரு சொல்லை நீக்கிப் பயன்படுத்துகிறேன். நமக்கு எதற்கு வம்பு. ஏற்கனவே

> மச்சின் மீது ஏணி வைத்து ஏற்றி விட்ட பின் ஏணியை எடுத்து விடுவது என்று பொருள். 'ஏற விட்டு ஏணி எடுப்பான் ஆம்பிளைச் சாதி' என்று பழைய சினிமாப் பாடல் வரியொன்று நினைவில் இருக்கிறது.

நம் எழுத்தை வாசிக்காமலேயே விலையில்லாப் பட்டங்கள் வழங்குகிறார்கள்.

தமிழ்நாட்டில் இன்றும் பரவலாகப் பேசப்படும் பல பழமொழிகளை நாம் இங்கு பேசவியலாது. ஒன்று, 'பாலியல் வக்கிரம்' என்ற பகுப்பில் சேர்த்து விடுவார்கள், அல்லது 'சாதியை இழிவுபடுத்துகிறான்' என்ற கற்கள் எறியப்படும். பழமொழிகளில் இருந்து எந்தவொரு சாதியும் தப்ப முடியாது. 'வெள்ளாளன் போன இடமும் வெள்ளாடு போன இடமும் வெட்டை' என்று எழுதினால் சங்கங்கள் என் தலைக்கு விலை வைக்கும். இதைவிடக் கடுமையான பழமொழிகள் கைவசம் உண்டு. எவையும் நான்

கண்டுபிடித்ததல்ல. ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக இங்கு புழக்கத்தில் இருப்பவை.

கொங்கு நாட்டில், 'கோமணம் பீ தாங்குமா?' என்றொரு பழமொழி. வேண்டுமானால் 'கௌபீனம் மலம் தாங்குமா?' என்று வாகீசக் கலாநிதி கி.வா.ஜகந்நாதன் பாணியில் சுத்தப்படுத்தலாம். பழமொழி கோவணத்தையும் மலத்தையும் பேசினாலும், அது உணர்த்தும் பொருள் அதுவல்ல. 'தேவையற்று எதற்கு எடுத்தாலும் அச்சப்படாதே' என்கிறது மலையாளப் பழமொழி. பழமொழி என்பதை மலையாளிகள் பழஞ்சொல் என்கிறார்கள். 'ஆனைக்கு பேடிக்காம், லொத்திக்குப் பேடிக்காமோ?' என்பதந்தப் பழமொழி. அதாவது யானைக்கு பயப்படலாம் அது நியாயம், ஆனால் யானை விட்டைக்கு அஞ்சலாமா? ஆனால் அஞ்சுகிறோம், நாட்பட்ட யானை லொத்திகளுக்கும்.

*'சிப்பாயைக் கண்டு அஞ்சுவார் - ஊர்ச் சேவகன் வருதல் கண்டு மனம் பதைப்பார்'* என்கிறார் பாரதியார்.

என் தோழர் ஒருவர், மாவட்ட ஆட்சித் தலைவருக்குக் காரோட்டினார். தேவைக்கு ஏற்ப பெரிய பையைத் தூக்கிக்கொண்டு சந்தைக்குப் போய், வேண்டிய காய்கறிகளை இலவசமாக வாங்கித் தன் வீட்டுக்குக் கொண்டு போய் விடுவார். இதில் அந்த ஆட்சித் தலைவரைக் குறை சொல்ல முடியாது. லொத்திக்கும் அஞ்சுபவரை என்ன செய்ய இயலும்?

மலையாளத்தில் இன்னொரு பழமொழி, 'அண்ணான் சாடிந்நு மண்ணான் சாடாமோ?' என்று. அண்ணான்

உலக்கை போட்டு நெல்லைக் குத்தி கைவலி எடுத்தால் அர்த்தம் உண்டு. உமியைக் குத்தி எவரேனும் கைவலி தேடிக் கொள்வார்களா? இன்று தமிழ்க் கவிதை எனும் பெயரில் பெரும்பாலும் உமியைக் குத்தி நமக்குக் கைவலி எடுக்கிறது!

என்றால் அணில்; மண்ணான் எனில் வண்ணான்; சாடி என்றால் குதித்தது எனப் பொருள். உயர்ந்த மரக்கிளையில் இருந்து அணில் குதித்தது என்று வண்ணான் குதிக்க இயலுமா? அண்ணானுக்கு மண்ணான் எதுகை அவ்வளவே! ஏன் வண்ணானை 'மண்ணான்' என்றனர். உவர் மண்ணைக் கொண்டு துணி வெளுப்பவன் என்பதனால். இதை மனதில் கொண்டுதான், 'துணி வெளுக்க மண்ணுண்டு தேச முத்துமாரியம்மா' என்று பாரதி பாடினார்.

எல்லோருக்கும் தெரியும் கடுக்காய் என்பது மலமிளக்கி என்பது. 'அவன் எனக்குக் கடுக்கா கொடுத்திட்டான்' எனும் வழக்கு அது கருதி ஏற்பட்டதுதான். கடுக்காய் பொடியைக் கரைத்துக் கொடுத்தால் அவசர அவசரமாக டாய்லெட்டுக்கு ஓட வேண்டியதிருக்கும். பாரதி மணி அண்ணா சொல்வார், 'கடுக்காயைத் தொட்டானாம்... கோமணத்தை அவிழ்த்தானாம்...' என்று. அதன் பொருள், 'கடுக்காய் அரைத்துக் குடிக்கக் கூட வேண்டாம், அதைத் தொட்டாலே போதும், பேதியாகும்' என்பது.

பாவலர் இரணியன் சொன்னார் ஒரு நாள், 'செப்பு வனையமாட்டாத கொசவன், மொடாவுக்கு அச்சக்கிரயம் வாங்கின மாதிரி' என்று. குயவன் எனில் கலயம், தோண்டி, சட்டி, பானை, குடம், குலுக்கை, மொடா யாவுமே வனையத் தெரிந்த தொழிலாளி. ஒருவனுக்கு மண் செப்புக்கூட வனையத் தெரியாதாம். அவன் ஆகப்பெரிய மண் பாண்டமான மொடா வனைவதற்கு அச்சாரம் - அட்வான்ஸ் - முன்பேறு வாங்கினானாம். இங்கு அச்சாரம் எனும் சொல்லுக்கு 'முன்பணம்' என்று பொருளைத் தாண்டி, 'அச்சக்கிரயம்' எனும் சொல் ஆளப்படுகிறது. மொடா வனையச் சொல்லிவிட்டு, பின்பு வனைந்தான பிறகு, காசு கொடுத்து வாங்கிக் கொள்ளாமற் போனால் என்ன செய்வது எனும் அச்சத்தின் காரணமாகப் பெறப்பட்ட கிரயம் அல்லது விலை, அச்சக்கிரயம். ஆகா, இவைதான் மொழிக்குள் புதைந்திருக்கும் தங்கக் காசுகள் என்பேன். இங்கு குயவன் என்பது குயவனல்ல, மொடா என்பதும் மொடாவல்ல.

திருநெல்வேலிச் சீமையில் சொல்வார்கள், 'நக்குகிற நாய்க்கு செக்கென்றும் சிவலிங்கம் என்றும் தெரியுமா?' என்று. எண்ணெய் ஆட்டிய செக்கை நாய் நக்கப் போவது அதில் ஒட்டியிருக்கும் புண்ணாக்குத் துணுக்குகளுக்காகவும், வாசமான எண்ணெய்ப் பிசுபிசுப்புக்கும். அதற்கு

ஆசைப்பட்டே, செக்கென்று நினைத்துக் கொண்டு நாய் சிவ லிங்கத்தையும் நக்கப் போகும். இலக்கிய உலகிலும் சிலர் செக் கென்று நினைத்துத்தான் என் னையும் நக்கிப் பார்க்கிறார்கள்.

நாஞ்சில் நாட்டில் சொல் வார்கள், 'எட்டுக் கருப்பட்டியை ஒண்ணா முழுங்கிருவான்' என்று. ஒரு கருப்பட்டியையே பதினா றாக உடைத்துத்தான் கடிக்கவே முடியும்! இதிலெங்கே விழுங் குவது? சிலர் பீற்றிக் கொள்வார் கள் தமது அதிக சாமர்த்தியம் குறித்து! அதற்கான எதிர்வினை இந்தப் பழமொழி. கருப்பட்டி பார்த்தே இராதவர்களுக்கு இது தகவல்... ஒரு கருப்பட்டி அரைத் தேங்காய் அளவுக்கு இருக்கும், சின்னதானால். பதநீர் அல்லது தெளுவு அல்லது நீரா எனப்படும் பனைமரத்தின் பாலைக் காய்ச்சி ஆற வைத்துப் பாதுகாப்பது. அதன் உத்தேசமான மறுசொல், பனை வெல்லம். கருப்பட்டியில் சிறப்பானது, சின்ன வட்டு, உடங் குடிக் கருப்பட்டி. கிலோ ரூ.240 முதல் ரூ.280 வரை. எந்தக் கலப் படமும் ரசாயனமும் சேராத, நோயாளியும் பயன்படுத்தும் நாட்டார் இனிப்பு. நமக்குத்தான் கிலோ ஆயிரம் ரூபாய் விலையில் இனிப்புகள் உள்ளனவே!

கொங்கு நாட்டுப் பழமொழி ஒன்றினை மாற்றிச் சொல்கிறேன். 'ஆண்டிக்குப் பொறந்தவன் அதிகாரம் செய்கிறான். கனவா னுக்குப் பொறந்தவன் கையைக் கட்டிக்கிட்டு நிற்கிறான்.' இங்கு ஆண்டி எனப்படுபவர் எளிய சாதிக்காரர், கனவான் எனப்ப டுபவர் வலிய சாதிக்காரர். இந்தப் பழமொழியின் உட்பொருளை யோசித்துப் புரிந்துகொள்ளுங் கள். அசல் பழமொழியையும் அதன் உட்பொருளையும் எழுதி விட்டு நான் கோவையில் குடி யிருக்க இயலாது.

மறுபடியும் பாண்டிச்சேரி போனபோது, மூத்த சம்பாதி கி.ரா. வண்டி வண்டியாகப் பழமொழிகள் சொன்னார். நாட்டுப்புறக் கதைகளுக்கும் சொலவடைகளுக்கும் பாலியல் கதைகளுக்கும் அவர் சுரங்கம். 92 வயதானவர் இன்னும் கையி னால் எழுதிக் கொண்டிருக்க இயலாது. எந்தக் கூறுள்ள அர சாங்கமும் அவருக்கு இரண்டு உதவியாளர்கள் கொடுத்து, ஷிஃப்ட் முறையில் எழுதிக் கொள்ள வேண்டும், அவர் சொல்லச் சொல்ல. ஆனால் கூறுள்ள அரசாங்கங்களுக்கு நாம் புரந்தரனார் போலத் தவம் செய்ய வேண்டும்.

நடு நாட்டுச் சொல்லகராதி தொகுத்த தம்பி கண்மணி குண சேகரனை அண்மையில் விருத் தாசலத்தில் சந்தித்தபோது, பேச்

சுவாக்கில் சொன்னார். 'சற்று ஏச்சுப் பட்டாலும் பொருட்டில்லை' என்று, தற்குறிப்பேற்றம் ஏதும் செய்யாமல் அப்படியே தருகிறேன். 'ஆம்படையான் அடிச்சான்னு, கொழுந்தனாரு .......... கடிச்சாளாம்' என்பதது. இதற்கு நான் உரையெழுத விரும்பவில்லை. ஆழமான பாலியல் உறவுகள் பேசும் பழமொழி இது. பழமொழியை திருப்பிப் போட்டும் வாசிக்கலாம்.

தமிழ்நாட்டுப் பழமொழிகள் தனி நூலாக எழுதப்பட வேண்டியவை. 'குங்குமம்' வாசகர்களுக்காக ஒரு விள்ளல் மட்டுமே! 'மரத்தின் கீழ் ஆகா மரம்' என்பது நமக்குத் தெரியும். 'யானை போனால் அதன் வால் போகாதா?' என்பதும் தெரியும்.

பழமொழிகள் பல அபூர்வமான தமிழ்ச் சொற்களைத் தங்கரியம் செய்து வைத்திருக்கின்றன. அந்தச் சொற்களை அகராதிகளில் காண இயலாது. இலக்கியச் சான்றுகளும் தர இயலாது.

'அவனவனுக்கு ஆயிரத் தெட்டு வேலை, அவயானுக்கு மண்ணு பறிக்கப் பட்ட வேலை'

என்பதோர் எடுத்துக்காட்டு. இங்கு அவயான் என்றால், நடுநாட்டில் அகவான், மலையாளத்தில் பெருக்கான், தமிழில் பெருச்சாளி. இப்போது பழமொழி அர்த்தமாகும்.

ஒரு நாளிதழின் கேலிச் சித்திரப் பகுதியில் சமீபத்தில் கண்ட பழமொழி, 'பேய்க்குப் பேன் பார்த்த கதை' என்ற ஒன்று. இந்திய நாட்டில் அறுபது ஆண்டுகளுக்கும் மேலாக நாம் பேய்களுக்குத் தானே பேன் பார்க்கிறோம்!

**- கற்போம்...**

உடங்குடிக் கருப்பட்டி. கிலோ ரூ.240 முதல் ரூ.280 வரை. எந்தக் கலப்படமும் ரசாயனமும் சேராத, நோயாளியும் பயன்படுத்தும் நாட்டார் இனிப்பு. நமக்குத்தான் கிலோ ஆயிரம் ரூபாய் விலையில் இனிப்புகள் உள்ளனவே!

# கைம்மண் அளவு

சில ஆண்டுகள் முன்பு, கோவையின் இலக்கிய மேடையில் சிலம்பொலி செல்லப்பனார் ஒரு சம்பவம் சொன்னார். அவரை எனது பம்பாய் நாட்களில் இருந்தே அறிவேன். அப்போது அவர் தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித்துறை தனி அலுவலராக இருந்தார். கோடை விடுமுறையில், குடும்பத்துடன் பம்பாயில் இருந்த அவரது இஸ்லாமிய நண்பர் வீட்டில் வந்து தங்குவார்.


நாஞ்சில் நாடன்

ஓவியம்: மருது


Learn

ஒரு முறை அவ்வாறு வந்து தங்கியபோது, பம்பாய் தமிழ்ச் சங்கத்தில் மூன்று தனிச் சொற்பொழிவுகள் செய்தார்; ஒரு பட்டிமன்றத்துக்குத் தலைமையும் வகித்தார். அவர் தலைமையில், ஓர் அணியில் பேசியது எனக்கு நினைவிருக்கிறது. மரபிலக்கியத்திலும் நவீன இலக்கியத்திலும் நல்ல தேர்ச்சியும் வாசிப்பும் உண்டு அவருக்கு. பின்னர் தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநராக இருந்து ஓய்வு பெற்றார். அவரைப் போலவே தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநராக இருந்து ஓய்வு பெற்ற ம.ராசேந்திரன் அவர்களுக்கும் படைப்பிலக்கிய அனுபவமும், நவீன இலக்கிய வாசிப்பும் மரபிலக்கியத் தேர்ச்சியும் உண்டு. ஒரு பருவம் அவர் தஞ்சைத் தமிழ் பல்கலைக்கழகத் துணைவேந்தராக இருந்தார். அமரர் ஜெயகாந்தன், மூத்த தமிழ் எழுத்தாளர் சா.கந்தசாமி ஆகியோரின் அருமை நண்பர் அவர். சிலம்பொலியாரைப் போலவே ம.ராசேந்திரனும் பண்பாளர். சிலம்பொலியார் குறைந்தது அறுநூறு தமிழ் நூல்களுக்கு முன்னுரை எழுதிக் கொடுத்திருப்பார். அவை நான்கு தொகுதிகளாக வெளியாயின. அந்த நூல்களில் பல பொக்காகிப் போனதற்கு, சிலம்பொலியார் பொறுப்பல்ல.

கோவை மேடையில், சிலம்பொலியார் தனது தமிழாசிரியர் குறித்துச் சொன்னார். பல ஆண்டுகள் பணிபுரிந்து ஓய்வு பெறும் நாளில் பிரிவு உபசாரம் நடத்தும் முகத்தான், அவரைக் கண்டு தாக்கல் சொல்லி இருக்கிறார்கள்.

“எதுக்குப்பா வீணா?” என்றாராம்.

“இல்லீங்க ஐயா! மாணவரெல்லாம் அறுவது ரூபா வசூல் செய்து, உங்களுக்கு ஒரு பட்டு வேட்டியும் பட்டுச் சட்டைக்குத் துணியும் வாங்கி வச்சிருக்கிறோம்.”

“அறுவது ரூவாயா? எனக்கு ஒரு மாசச் சம்பளம்பா... நெல்லு வாங்கிப் போட்டா ரெண்டு மாசம் சாப்பிடுவோம்!”

அது அன்றைய தமிழாசிரியர்கள் நிலைமை. பிற துறை ஆசிரியர்களை விட அவர்களுக்கு சம்பளம் குறைவு. தலைமையாசிரியராகவோ, கல்வி அதிகாரியாகவோ ஆகும் தகுதி கிடையாது.

என்றாலும் வஞ்சமில்லாமல் தமிழை வாரிக் கோரி ஊட்டினார்கள், தமது மாணாக்கருக்கு.

நான் இறச்சகுளத்தில் நடுநிலைப்பள்ளி வாசிக்கும்போது (1958-1961), எங்களுக்கு வகுப்பாசிரியராகவும் தமிழாசிரியராகவும் எங்கோடிச் செட்டியார் இருந்தார். ‘அதென்ன... எங்கோடி என்றா பெயர்?’ எனக் கேட்பீ

ரேயானால், அது எங்கள் பகுதியின் சாஸ்தா பெயர் என்பேன். ஆரல்வாய்மொழியில் பரகோடி கண்டன் சாஸ்தா, சுசீந்திரத்தில் சேரவாதல் சாஸ்தா மற்றும் பூலா உடைய கண்டன் சாஸ்தா, ஒழுகினசேரியில் எங்கோடி கண்டன் சாஸ்தா, என் சொந்த ஊர் வீரநாராயண மங்கலத்தில் நீர் நிறைகாவு கொண்ட சாஸ்தா, இறச்சகுளத்தில் எருக்கலை மூட்டு சாஸ்தா, சித்தூரில் தென்கரை மகராஜன் சாஸ்தா என சில சாஸ்தாக்கள் உடனடியாக நினைவுக்கு வருபவர்கள். சபரிமலையின், பந்தளத்தின், குளத்துப்புழையின், எரிமேலியின், ஆரியங்காவின், அச்சன்கோவிலின் சாஸ்தாக்கள் பற்றி நீங்கள் அறிந்திருப்பீர்கள்.

எங்கோடி வாத்தியார் என்றழைப்போம் நாங்கள்.




பெரிய பித்தளைத் தூக்குவாளியில் மதியச் சாப்பாடு கொண்டு வருவார். மதிய இடைவேளை மணி அடித்ததும் கூவிச் சொல்வார், “சாப்பாடு கொண்டு வராதவன் எவனாவது ஒருத்தன் வாங்கலே!” என்று.

எங்கள் பள்ளி இறச்சகுளம் பொத்தை அடிவாரத்தில், தாமரைத் தடாகங்கள் சூழ அமைந்திருந்தது. பொத்தை எனும் சொல் அர்த்தமாகவில்லை என்றால் ‘திரடு’ அல்லது ‘குன்று’ என்று கொள்ளுங்கள். அகன்ற தேக்கு இலையோ, தாமரை இலையோ பறித்துக் கொண்டு ஒருத்தன் ஓடுவான். தூக்குவாளியைத் திறந்து சோறு அள்ளி வைத்து, குழம்பு ஊற்றி துவரனோ, பொரியலோ, அவியலோ வைத்துத் தருவார். மதியம் பழையது கொண்டு போக வக்கற்ற நாட்களில் சில முறை நானும் வாங்கித் தின்றிருக்கிறேன். அதைச் சொல்ல நானொருத்தன் இருக்கிறேன் இன்று.

நான் எட்டாவது வாசிக்கும் போது, வகுப்பில் முதன்மை மாணாக்கராகிய நானும், இறச்ச குளம் கிராமத்துப் பார்வதியும், மரம் நடும் வாரத்தின்போது எங்கோடி வாத்தியார் எடுத்துக் கொடுக்க நட்ட மருத மரமும் அரச மரமும் வானோங்கி வளர்ந்து நிற்கின்றன இன்று. பேரக்குட்டிகள் எடுத்த பார்வதி, பெங்களூருவில் வசிக்கிறாள்.

என் வயதொத்த அனைவருக்கும் இது போல் வாத்தியார்கள் இருந்திருக்கிறார்கள். பாடப் புத்தகங்கள் வாங்கித் தந்தவர், பள்ளிக் கட்டணம் செலுத்தியவர், பள்ளி நேரம் முடிந்த பிறகு கட்டணம் ஏதுமற்று டியூஷன் எடுத்தவர், பேச்சுப் போட்டிக்கும் பாட்டுப் போட்டிக்கும் கைக்காசில் டிக்கெட் வாங்கி மாவட்டத் தலைநகருக்கு இட்டுப் போனவர், தேர்வு மையத்துக்கு சைக்கிளின் பின்புறம் வைத்து மிதித்தவர்...

‘திசை நோக்கித் தொழுகின்றேன்!’ என்றொரு கட்டுரை உண்டு என் கணக்கில். மெட்ரிகுலேஷன் பள்ளிகள் வரும்முன்பு, கான்வென்ட் பள்ளிகள் பற்றி அறியும் முன்பு, கேந்த்ரிய வித்யாலயா கேள்விப்பட்டிராதபோது, சி.பி.எஸ்.இ. பாடத்திட்டம் அறியப்படும் முன்பு, அரசுப் பள்ளிகளில் படித்து ஆளாகிய தலைமுறையும் இருந்தது. அன்று எங்கள் ஆசிரியர்கள் சம்பளத்துக்கு மட்டுமே உழைத்ததில்லை. ஏனெனில் அவர்கள் பார்த்தது தொழில் அல்ல, ஊழியம்!

‘ஊழியம்’ என்பதும் ‘பணி’ என்பதும் ஆழ்ந்த பொருளுடைய சொற்கள். உழவாரப் படையாளி திருநாவுக்கரசர் சொன்னார், ‘என் கடன் பணி செய்து கிடப்பதே’ என்று. சேவை எனும் சொல் போல. ஊழியமும் பணியும் சேவையும் கடமையும் ஆற்றுபவர்கள் ஊதியம் பெறக் கூடாது என்பதல்ல. ஆனால், ஊதியம் மட்டுமே கருத்தில் பற்றிக்கொண்டு செயல்படுவது ஊழியம் அல்ல. அரசு ஊழியர் எனும் சொல் இன்று எதிர்மறைப் பொருள் தரும் அளவுக்கு நீட்சி அடைகிறது. ஊழியத்தின் பண்பு நலன்கள் எதுவுமேயற்ற பல தொழில்களையும் இன்று ‘ஊழியம்’ என்றே அழைக்கிறோம். இன்னல் யாதெனில், லஞ்



சம், ஊழல், செயல்திறன் இன்மை, செய்நேர்த்தி இன்மை, கடனுக்கு மாரடித்தல் இவற்றையும் ஊழியம் என்கிறோம். எதிர்காலத்தில் பிக்பாக்கெட், சங்கிலிப் பறிப்பு, வழிப்பறி இவற்றையும் ஊழியம் என்பார் போலும்.

பின்னாட்களில் தமிழாசிரியர்களும் தலைமை ஆசிரியர்கள் ஆனார்கள்; மாவட்ட முதன்மைக்கல்வி அதிகாரிகளாயும் ஆனார்கள்; தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் ஆனார்கள். சமமாகச் சம்பளம் பெற்றார்கள். நல்ல ஆசிரியர்களாக இருந்தார்கள். நூற்றைக் கெடுத்த குறுணி போன்ற ஒருசிலரை நாம் தள்ளிவிடலாம். அவர்கள் எல்லாத் துறைகளிலும் இருப்பார்கள்தானே!

இன்றைய நிலைமையைச் சற்றுக் கறாராக அணுகுவதுதான் இந்தக் கட்டுரை. தனியார் துறை நிறுவனங்களுக்கு ‘மினிமம் வேஜஸ்’ என்ற ஒன்றை அரசாங்கம் பரிந்துரைத்துள்ளது. அதன்படி சம்பளம் தருகிறார்களா எனப் பரிசோதிக்க தொழிலாளர் நலத்துறை ஆய்வாளர்கள்




உண்டு. அவர்கள் ஆய்வு செய்து முடிந்த பின்பு என்ன வாங்கிக் கொள்கிறார்கள் என்பது எனக்குத் தெரியாது.

இவை எவற்றையும் பொருட்படுத்தாமல், சகல அரசியல் கட்சிகளையும் சார்ந்த பிரமுகர்கள் கல்வித் தந்தைகளாக இருந்து நடத்தும் தனியார் கல்லூரிகளில் பி.ஏ.(தமிழ்), எம்.ஏ.(தமிழ்), எம்.ஃபில், பிஹெச்.டி என்று பட்டம் பெற்ற இளைஞர்களுக்கு மாதம் ஏழாயிரம் ரூபாய் சம்பளமும் உதவிப் பேராசிரியர் எனும் பதவியும் தருகிறார்கள். தோராயமாக மாதம் 25 நாட்கள் வேலை என்று கொண்டால், தினத்துக்கு என்ன ஊதியம்? 280 ரூபாய்! நகரில் கட்டிட வேலைக்குப் போய் செங்கல்லும் ஜல்லியும் மணலும் சுமக்கும் கூலிக்கு சம்ப

ளம் 400 ரூபாய். அவர்கள் எம்.ஃபில், பிஹெச்.டி தேறியிருக்க நிர்ப்பந்தமும் இல்லை.

அண்மையில் மூன்று மாவட்டங்களின் ஓவிய ஆசிரியர்களுக்கான முகாம் ஒன்றில் உரையாற்றப் போயிருந்தேன். எனது அமர்வுக்குத் தலைமை தாங்கியவர், ஒரு மாவட்டத்தின் முதன்மைக் கல்வி அதிகாரி. ஓவிய ஆசிரியர்களை வாழ்த்திப் பேசிய அவர் மிகுந்த மனக்குறையுடன் சொன்னார்... 'நான்கு மணி நேர வேலைக்கு மாதம் 5000 ரூபாய் கொடுக்கிறது அரசாங்கம்... ஆனால் ஆசிரியர்கள் கிடைப்பதில்லை' என்று. அதிகாரத்தின் அண்டையில் நிற்பவரின் பார்வை அது. நான்கு மணி நேர வேலை என்பது நான்கு மணி நேர வேலை மட்டும் அல்ல. அலுவலகத்தில் உதவி, தெருவுக்குப் போய் தேநீர் வாங்கி வருவது, மாவட்டக் கல்வி அலுவலகத்துக்கு தபால் கொண்டு போவது, தபால் வாங்கி வருவது எனப் பல சோலிகள். தினக்கூலி சுமாராக 200 ரூபாய். நான் கேட்டேன், "ஏன் நீங்கள் செங்கல் சுமக்கப் போகக்கூடாது?" என்று. அதிகாரிக்கு முகம் சிவந்துவிட்டது!

நம்மை எந்தக் கட்சி ஆள வந்தாலும் தமிழ்தான் அவர்கள் மூச்சு. ஆனால், முதுமுனைவர் பட்டம் பெற்ற கல்லூரித் தமிழாசிரியருக்கு தினக்கூலி 280 ரூபாய். சில தனியார் கலை, அறிவியல் கல்லூரிகளில் தமிழ்த் துறை இருக்கும்... ஆனால், தமிழ் கற்பிக்க ஆசிரியர்கள் இருக்க மாட்டார்களாம். ஆங்கில ஆசிரியரோ, விளையாட்டுகளுக்குப் பயிற்சியாளராக இருப்பவரோ தமிழ் வகுப்பை நடத்தி விடுவார்களாம். ஆனால், எல்லா அரசு அலுவலகக் கூரையிலும் 'தமிழ் வாழ்க' என போர்டுகள் மின்னுகின்றன.

இப்படி மாதம் ஏழாயிரம் ரூபாய் சம்பளம் வாங்கும் முதுமுனைவர்தான், கல் தோன்றி முள் தோன்றாக் காலத்து மூத்த மொழியை இளைய மாணவருக்கு வஞ்சனையில்லாமல் கற்றுத் தர வேண்டும். அரசு ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களின் ஊதியத்தில் கால்வாசி கூட இல்லை இது. அரசு கலைக்கல்லூரி ஆசிரியர்களின் ஊதியத்தில் ஏழில் ஒரு பங்கு. பட்டினி கிடந்தும் தமிழ் கற்றுத் தரவேண்டிய கட்டாயம் அந்த இளைஞர்களுக்கு. தமிழ் கற்ற மாணவருக்குப் பிழையறத் தமிழ் எழுத வரவில்லை என்ற கணக்கை நாம் வேறொரு கட்டுரையில் நேர் செய்வோம்!

எனக்கு அறிமுகமானதோர் இளைஞர், தன்னாட்சிப் பல்கலைக்கழகம் ஒன்றின் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியில் பேராசிரிய

தனியார் கல்லூரிகளில் பி.ஏ.(தமிழ்), எம்.ஏ.(தமிழ்), எம்.ஃபில், பிஹெச்.டி என்று பட்டம் பெற்ற இளைஞர்களுக்கு தினத்துக்கு ஊதியம் 280 ரூபாய்! கட்டிட வேலைக்குப் போய் செங்கல்லும் ஜல்லியும் மணலும் சுமக்கும் கூலிக்கு சம்பளம் 400 ரூபாய்.

ராக இருந்தார். பேரு எல்லாம் பெத்த பேருதான். ஒரு அகில இந்தியக் கருத்தரங்கம் நடத்த, அவர் பெயரையும் கையெழுத்தையும் போட்டு பல்கலைக்கழக மானியக் குழுவிடம் விண்ணப்பித்திருந்தது நிர்வாகம். நிதி உதவ அனுமதிக் கடிதம் வந்தபோது தான் இளைஞருக்கே தெரியும், தனது கையெழுத்தையும் நிர்வாகமே போட்டுவிட்டது என்பது. 'ஏன்?' என்று கேட்கப் போனார். தன்னாட்சிப் பல்கலைக்கழகத்தின் கல்வித் தந்தை - அவர் ஒரு சைவத் தந்தையும் கூட - இளைஞரை அழைத்து, அந்த நாள் வரைக்குமான கூலி கொடுத்துத் தீர்த்து அனுப்பி விட்டார்.

மற்றொரு கல்லூரி தமிழ் விரிவுரையாளர் புலம்பினார்... மாணவர்கள் தம் ஆசிரியர்களை 'ஃபிஸிக்ஸ் போகுது', 'கெமிஸ்ட்ரி போகுது' என்று சொல்ல மாட்டார்கள், ஆனால் காது படவே 'தமிழ் போகுது' என கிண்டல் செய்கிறார்கள் என்று.

எல்லாக் காலங்களிலும் மாணவருக்குத் தமிழ் போதிப்பது மட்டுமல்லாமல், பொது அறிவும், தமிழ் உணர்வும், அரசியல் அறிவும் ஊட்டுபவர்கள் தமிழாசிரியர்களே! தகுதியுள்ள பலருக்கும் இன்று வேலை இல்லை. வேலை கிடைத்தாலும் நேரான ஊதியம் இல்லை. பலர் இன்று நூறு நாள் வேலைத் திட்டத்தில் கூலி வேலைக்குப் போகலாமா என்று யோசித்துக் கொண்டிருக்கிறார்கள்.

அரசு விழாக்களிலோ தமிழ் காது கிழிபட அலறுகிறது!

- கற்போம்...

# கைம்மண் அளவு

உவப்பானவற்றைப் பேசி விட்டு, துவர்ப்பானதைப் பேசாமல் போவது எழுத்தாளனின் அறம் அல்ல. தமிழ் கற்றார்க்கு கல்வித் தந்தையர் செய்யும் அநீதி பற்றிப் பார்த்தோம். தமிழ் கற்பிப்பவருக்கும் சில நீதி சொல்வது நமது கடமையாகும். அவர் அதைக் கைக்கொள்வதும் தள்ளுவதும் அவர்களது மனவார்ப்பு. பல்கலைக்கழக வளாகங்களும், கல்லூரி வளாகங்களும் தமிழ் கற்போருக்கு தமிழைச் சரிவர போதிக்கின்றனவா, போதிப்பதைக் கற்போர் சரிவர வாங்கிக் கொள்கிறார்களா, வாங்கிக் கொண்டதை அடுத்த தலைமுறை மாணாக்கருக்கு அவர்கள் திரும்பத் தருகிறார்களா என்பவை தமிழறிஞர்களும் கல்வியாளர்களும் தொடர்ந்து எழுப்பும் கேள்விகள்.

**நாஞ்சில் நாடன்**

ஓவியம்: மருது



எனது தீவிர வாசகரான இளைய மாணவர் ஒருவரிடம் கேட்டேன். "உங்க தமிழாசிரியர் எப்பிடிப் பாடம் நடத்தறார் தம்பி?" அந்த மாணவரின் தமிழாசிரியர் எனக்கு அறிமுகமானவர். மேடைகளில் பெரும்பேச்சு பேசுகிறவர். மாணவர் சொன்ன பதில் எனக்கு வியப்பளிக்கவில்லை.

"சட்டியிலே இருந்தாத்தானே, அகப்பையிலே வரும்?" - இது கொஞ்சம் கவலைக்கிடமான நிலைமை.

ஆசிரியர்கள் எத்துறை சார்ந்தவராக இருப்பினும், பாடத்திட்டங்களுக்கு வெளியேயும் வாசித்தல் வேண்டும். மொழி கற்பிப்போர் அதற்கு விலக்கு அல்ல. தமிழோ, மலையாளமோ, கன்னடமோ, களி தெலுங்கோ எதுவானாலும்! எம்மொழி கற்பிப்போராயினும் அவர்கள் கற்பது அவசியமாகிறது. பிற மொழிகளில் எவ்வாறு என்று தெரியவில்லை. தமிழ் கற்பிப்போர், தாம் கற்கும்போதும், கற்பிக்கும்போதும், பாடத்திட்டங்களுக்குப் புறம்பாக வேறு ஏதும் வாசிக்கிறார்களா என்பது நமது நீண்ட நாள் கேள்வி.

எனது ஐந்தாவது நாவல் 'சதுரங்கக் குதிரை' 1995ல் பாரதியார் பல்கலைக்கழகக் கல்லூரிகளில் பாடமாக இருந்தது. அதனால் நான் பெரும் பொருள் ஈட்டிவிட்டேன் என தயவுசெய்து எண்ணி விடாதீர்கள். அந்த ஆண்டில் பல்கலைக்கழக கல்லூரித் தமிழாசிரியருக்கான பயிற்சி முகாமில், 'சமகாலத் தமிழ்ப் புதினம்' என்ற தலைப்பில் உரையாற்ற அழைக்கப்பட்டிருந்தேன். புதினம் என்றால் என்ன என்று கேளாதீர். நாவல் எனில் ஆங்கிலச் சொல். நூற்றாண்டுகளாகப் பல்கலைக்கழகங்கள் மட்டும் புதினம் என்றே பயன்படுத்துகின்றன. எனது உரை முடிந்த பிறகு, நடந்த கேள்வி நேரத்தில் வந்த கேள்விகளில் முக்கியமானது, "பாடம் நடத்துவதற்கு சதுரங்கக் குதிரை புரியவில்லை" என்பது.

அந்த நாவல், 1995ம் ஆண்டுக்கான சிறந்த தமிழ் நாவல் என்று தமிழக அரசாலும், கோவை கஸ்தூரி சீனிவாசன் அறக்கட்டளையாலும், புதிய பார்வை - நீலமலைத் தமிழ்ச் சங்கத்தாலும் பரிசளிக்கப்பட்டது.

இந்த இருபது ஆண்டுகளில் ஏழு பதிப்புகள் கண்ட நாவல். ஆனால், கல்லூரி மாணவருக்கு அந்த நாவல் அர்த்தமாகவில்லை. எளிதில் புரிந்துகொள்ள முடியாத நாவல்கள் தமிழில் சில உண்டு. என் நாவல்கள் எதுவுமே அப்படி அல்ல. அந்த அரங்கில் நான் சொன்னேன், 'நீங்கள் மந்திரக்கோல் மாயாவி, சிந்துபாத் போன்ற படக்கதைகளைப் பாட

மாக வைப்பது நன்று' என்று.

ஒரு சராசரி தமிழ் நாவல் புரியாமல் போனால் நற்றிணையும் குறுந்தொகையும் எவ்விதம் புரியும்? தொல்காப்பியமும், நன்னூலும், யாப்பருங்கலமும் எவ்வாறு புரியும்? அல்லது சமகால நாவல்களுக்கும் கோனார் கைடு எழுதிவிடுவது நல்லது. மாணவரும் பாடமாக இருக்கும் நாவலை வாங்காமல் கைடு மட்டும் வாங்கிக்கொள்வார்கள்.

நான் பம்பாயில் வாழ்ந்த நேரம் அது... ஆண்டு விடுப்பில் சொந்த நாட்டுக்கு வரும்போது, திருவனந்தபுரம் சாலைக் கடைத்தெருவில் இருந்த மூத்த எழுத்தாளர் ஆ.மாதவன் பாத்திரக்கடையில் இருந்தேன். முன்பே ஏற்பாடு செய்தபடி, கேரளப் பல்கலைக்கழகத்து முனைவர் பட்ட ஆய்வு மாணவர் ஒருவர் என்னைச் சந்திக்க வந்தார்.

“ஐயா! நாஞ்சில் நாடன் படைப்புலகம்னு ஆய்வுத் தலைப்பு...”

“வண்ணதாசன், வண்ணநிலவன், பா.செயப்பிரகாசம், பூமணி, ராசேந்திர சோழன் எல்லாம் வாசிச்சிருக்கேளா தம்பி?”

“ஐயா! அந்தப் பேருல எல்லாம் நீங்க எழுதறீங்களா?”

நான் உத்தேசித்தது, என்னை விடவும் சிறப்பாக எழுதும் எனது சமகால எழுத்தாளர் பற்றி ஆய்வு மாணவருக்குப் பரிச்சயம் உண்டா என்பதறிய. அவரோ அவை எல்லாமே எனது புனைப்பெயர்களோ என்று மயங்குகி

**ஒரு சராசரி தமிழ் நாவல் புரியாமல் போனால் நற்றிணையும், குறுந்தொகையும், தொல்காப்பியமும், நன்னூலும், யாப்பருங்கலமும் எவ்வாறு புரியும்?**

றார். பத்மநாபசாமி கோயிலின் கிழக்குக் கோட்டை வாசலில் போய் முட்டுங்கள் என்பது போலப் பார்த்தார் ஆ.மாதவ அண்ணாச்சி. எனது படைப்புகளில் இதுவரை இருபத்தைந்து பேர் ஆய்வு செய்து முனைவர் பட்டம் வாங்கி இருக்கிறார்கள். முனைவர் என நான் சொல்வது *Ph.D.* என்பதைக் குறிக்க. எம்.ஃபில் ஆய்வாளர் பற்றிய கணக்கு என்னிடம் இல்லை. அவருள் ஒரு சிலர் தவிர்த்து, பலருக்கும் சமகாலத் தமிழ்ப் படைப்புலகம் பற்றிய எந்த அறிமுகமும் இல்லை. கற்பிக்கும் உலகுக்கும் படைக்கும் உலகுக்கும் பாரதூரமான இடைவெளி இருக்கிறது என்பதைத்தானே இது சாற்றுகிறது?

2002ம் ஆண்டில் நான்

‘பாம்பு’ என்றொரு சிறுகதை எழுதினேன். தமிழ்ப் பேராசிரியர் வீட்டு வளாகத்தில் வசித்த நாகப்பாம்பு ஒன்று, தற்செயலாக வழி தவறி அவரது வாசிப்பு அறைக்குள் நுழைந்து விட்டது. அவர் என்ன வாசிப்பார் என்பது தமிழ்த் தாய்க்கே உறுதி! வாசிப்பு மேசை மேல் விரித்து வைக்கப்பட்டிருந்த பேராசிரியரின் ஆய்வேடு ஒன்றின் சில பக்கங்களைப் பாம்பு வாசிக்கவும் செய்தது. பாம்புக்குத் தமிழ் தெரியுமா என்று கேட்பீர்கள்! தமிழ் சினிமாவில் ஒற்றை உதையில் ஒரு டாடா சுமோ பனைமர உயரம் பறக்குமானால், பாம்பும் தமிழ் படிக்கும்! ஆய்வேடு வாசித்த பாம்பு, மனதுக்குள் கருவிக் கொண்டது, ‘இவனைப் போட்டுத் தள்ளாமப் போகக் கூடாது’ என்று. மிச்சக் கதையை என் தொகுப்பில் வாசிக்கலாம்.

அது பாம்பின் கோபமல்ல. ஒரு ஆய்வேட்டை வாசிக்கநேரும் ஒரு படைப்பாளியின் சோகம். அவனால் அதுதானே முடியும்? ஆற்றில், குளத்தில் வீழ்ந்து சாக முடியாதல்லவா? ஆற்றில், குளத்தில், கிணற்றில் விழுந்து சாகத் தண்ணீர் வேண்டாமா? நான் சொல்ல வருவது, தமிழிலக்கிய ஆய்வேடுகள் பெரும்பாலும் ஆரம்ப நிலை ஆய்வுகளாக உள்ளன என்று.

இன்று, கல்லூரித் தமிழாசிரியர்களின் ஆய்வுகள் சில இதழ்களில் கட்டுரைகளாக வெளிவருகின்றன. அவை, அவர் பெயரில் புத்தகமாக வந்தால், *SET* அல்லது *NET* மதிப்பெண்கள் கிடைக்கக் கூடும். ஆனால், வாசிக்கும் நமக்கு மெத்த வருத்தம் ஏற்படுகிறது. அலுப்பூட்டும் மொழி நடை, உப்புச் சப்பில்லாத வெளிப்பாட்டுத் திறன்... ஒரு பத்தியில் ஆறு சொற்றொடர்கள் எனில், ஆறுமே ‘சுட்டிச் செல்கிறார்’ என்றா முடிவது? ஆதிகாலத்துக் கட்டுரை மொழி! இந்த ஆய்வாளர்களில் பெரும்பாலோர் சமகால நவீன படைப்பு மொழியோடு ஒரு தொடர்பும் அற்றவர் என்று எனக்குத் தோன்றுகிறது. கடந்த பத்தாண்டுகளில் வெளியான சிறந்த பத்து நாவல்களோ, சிறுகதைத் தொகுப்புகளோ, கவிதை நூல்களோ, கட்டுரை நூல்களோ சொன்னால் பெரும்பாலான தமிழாசிரியர்கள் கேள்விப்பட்டிருக்கக்கூட மாட்டார்கள். பிறகெங்கே வாசிப்பது? நண்பர்கள் ஜெயமோகனும் எஸ்.ராமகிருஷ்ணனும் தமிழின் சிறந்த நூறு நாவல்களை, சிறுகதைகளை பட்டியல் இட்டுள்ளனர். இவற்றுள் எத்தனை அறிந்திருப்பார்கள்? இந்தக் கேள்வியை ஒரு வங்கி அதிகாரியை, மருத்துவரை, கட்டுமானப் பொறியா

ளரை நோக்கி நாம் கேட்கவில்லை! மொழி பயிற்றும் ஆசிரியர்களை நோக்கி முன் வைக்கிறோம்! பிறகெப்படி தமிழ் இலக்கியம் கற்பிப்பது? பிறகு எப்படி நவீன தமிழ் இலக்கியம் அர்த்தமாகும்?

நான் இங்கு பேச முற்படும் சில செய்திகள் உங்களுக்கு அதிர்ச்சி ஏற்படுத்தக் கூடும். முனைவர் பட்டத்துக்கான ஆய்வடங்கல்கள் இன்று ஒரு லட்ச ரூபாய் கொடுத்து எழுதி வாங்கப்படுகின்றன என்கிறார்கள். சில வழிகாட்டிகளே எழுதித் தந்துவிடுகிறார்கள் என்கிறார்கள். சில பேராசிரியர்களும் சில அறிஞர்களும் இந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ளதாகச் சொல்கிறார்கள். முனைவர் பட்ட ஆய்வேடு, வழிகாட்டியின் நண்பர்கள் பணியாற்றும் பல்கலைக்கழக அல்லது கல்லூரித் தமிழ்த் துறைக்கே மதிப்பீட்டுக்கு அனுப்பப்படுகின்றதாம். ஆய்வு மாணவர் அவரையும் கண்டு வர வேண்டுமாம். ஆய்வுகள் ஏற்றுக் கொள்ளப்பட்டதன் பின்பு, பட்டம் வழங்குவதற்கு முன்பான 'நேர் முகம்' காண்பதற்கு வரும் பேராசிரியர்களுக்கு மாணவரே பஞ்சப்படி, பயணப்படி தருவதுடன் சிறப்பான விருந்தும் ஏற்பாடு செய்ய வேண்டுமாம். இவை தவிர பலருக்கு இங்கு எழுதத்தரமற்ற நெருக்கடிகளும் தரப்படுகிறதாம். இவற்றை ஆய்வு மாணவர்களே பேசித் திரிகிறார்கள்.

எல்லோராலும் இப்படி முனைவர் பட்டங்களை 'வாங்க' முடியுமா? சிலர் கடினமாக உழைத்து, அவர்களது வழிகாட்டிகளின் ஊக்கத்தால் கற்று, ஆய்ந்து, எழுதிப் பட்டம் வாங்குகிறார்கள். சிலர் 'வாங்குகிறார்கள்'. கையோடு, பெரும்பணம் கொடுத்து அரசு வேலைகளும் 'வாங்குகிறார்கள்'.

> **பால் வடியும் முகம் கொண்ட எத்தனை கயவர்கள் சாமான்யரின் ரத்தத்தை வலி உணரவிடாமல் உறிஞ்சுகிறார்கள்?**

'மக்களே போல்வர் கயவர்' என்பார் திருவள்ளுவர். அஃதாவது, 'கயவரும் மக்களைப் போலவே தோற்றம் கொண்டிருப்பார்கள்' என்று இந்தச் சந்தர்ப்பத்தில் பொருள் எழுதுகிறேன். பால் வடியும் முகம் கொண்ட எத்தனை கயவர்கள் சாமான்யரின் ரத்தத்தை வலி உணரவிடாமல் உறிஞ்சுகிறார்கள்?

‘பயிர்களே போலும் களை’ என்றும் சொல்லலாம். அது போல் ஆகிவிட்டது தமிழின் ஆய்வுப் படிப்பு. இந்தக் கோராமையில், சிரமப்பட்டுத் தேர்வுகள் எழுதிப் பட்டங்கள் வாங்கி வேலைக்கு நடக்கும் ஏழை மாணவர் பற்றிய கவலை எதிரேறி வருகிறது. பெரு நகரங்களில் சில குறிப்பிட்ட சந்திகளில், கொத்தனார்களும் தச்சர்களும் தத்தம் தொழில் தளவாடங்களுடன் குழுக்களாக உட்கார்ந்திருப்பார்கள்... வேலைக்கு எவரும் கூப்பிட வருவார்கள் என எதிர்பார்த்து! கூப்பிட்டால் வேலைக்கும், கூப்பிடாவிட்டால் வீட்டுக்கும் போவார்கள். அதுபோல் ஆகிவிடக்கூடாது நேர்மையாகத் தமிழ் கற்றவர் நிலைமை என்பது எம் ஆயாசம். அதைத்தான் நாம் சென்ற வாரம் பேசினோம்.

இந்த வாரம் நம் கவலை வேறு!

தரமற்ற கல்விக்குத் தரமற்ற ஆசிரியரும் பொறுப்பு இல்லையா? இதில் சேதம் யாருக்கு? ‘முன் பட்டாலும் முள்ளில் இட்டாலும் முதலில் கிழிவது துணிதான்’ என்பார் கண்ணதாசன். பணம் கொடுத்துப் பட்டம் பெற்றாலும், படிக்காமல் போதிக்க வந்தாலும், சீரழிந்து போவது எவருடைய எதிர்காலம்? விதை நெல்லில் கலப்படம் அனுமதிக்கத் தகுந்ததா? பாடப்புத்தக வரிகளுக்கு உள்ளே மட்டும் நின்று கால் மாற்றி ஆடுகிற ஆசிரியர்கள், மாணவருக்கு என்ன பரிமாறுவார்கள்? அவர்கள் பரிமாறும் தமிழ் மீது மாணவருக்கு என்ன ஆர்வம் வரும்? ஐ.நா. சபை அறிக்கை கூறுகிறது, நூறாண்டுகளுக்குள் அழிந்து போகும் மொழிகளின் பட்டியலில் தமிழ் எட்டாவது இடத்தில் இருக்கிறது என்று. புலம்பி என்ன பொருள்?

இன்றைய இளைய சமூகத்தினரின் தமிழறிவு பற்றி மண்டை புண்ணாகும் படி யோசிக்கிறார்களா என்ன நமது கல்வி அமைச்சர்களும் கல்வித்துறை அதிகாரிகளும்? எத்துறை ஆனால் என்ன, சில்லறை என்ன மிஞ்சும் என்பதல்லவா அதிகாரத்தின் கணக்கு?

அருகாமை நகரின் கல்லூரி ஒன்றில் நடந்த, அனைத்திந்திய சங்க இலக்கிய மூன்று நாள் கருத்தரங்குக்குப் போயிருந்தேன். ‘அனைத்திந்திய கருத்தரங்கு’ என்றால் தமிழ்நாட்டின் நான்கைந்து கல்லூரிகள் என்று பொருள். மிச்சமெல்லாம் பல்கலைக்கழக மானியக் குழுவின் நிதி பெறும் முயற்சி. தற்சமயம் அதுவும் ஒரு வரும்படி கல்லூரி நிர்வாகத்துக்கு. தரமான ஒரு நூல் கூட வெளியானதில்லை. ஒரு ஆய்வாளர் பேசிக்கொண்டே போனார், “சங்க இலக்கியத்தில்

மொத்தம் 2,420 பாடல்கள்" என்று. நான் சொல்ல வேண்டியதாயிற்று, "ஐயா! 2,420 பாடல்கள் என்பன எட்டுத்தொகை மட்டுமே... அவற்றுள்ளும் இன்று கிடைப்பன 2,350 பாடல்களே... மிச்சமுள்ள 33 நூல்களின் கணக்கை எப்படிக் கூட்டுவீர்கள்?" என்று. அந்த ஆய்வாளருக்கு நான் வாழ்நாள் பகையாகிப் போவேன். ஏற்கனவே இதில் எமக்கு முன் அனுபவங்களும் உண்டு.

எமது கோரிக்கை, 'அருள்கூர்ந்து தப்பைப் போதிக்காதீர்கள்' என்பது. அண்மையில் மாத இதழ் ஒன்றில், 'தொல்காப்பியம் காட்டும் உயிரினங்கள்' என்றொரு ஆய்வுக் கட்டுரை வாசித்தேன். ஆர்வத்துடன் தான் வாசிக்க ஆரம்பித்தேன். ஒன்றே கால் பக்கத்தில் கட்டுரை முடிந்து போயிற்று. தலைப்பின் ஆழமென்ன, தீவிரம் என்ன, படைப்பது என்ன? தொல்காப்பியம் 52 தாவரங்களையும், பாசிகள் பற்றியும் குறிப்பிடுகிறது. உயிரினங்கள் என்று அனைத்தையும் உள்ளடக்கி தனி நூலே எழுதலாம். அதற்கான வாசிப்பும் ஆய்வும் ஆற்றலும் வேண்டும். ஆய்வு என்பது சாப்பாட்டு மெஸ்ஸில் வாங்கி வந்த பண்டத்தைச் சூடாக்கிப் பரிமாறுவதல்ல!

செம்மொழியின் சிறப்பு என்பது அது ஆண்டுதோறும் பெறும் மானியங்களில் இல்லை. மாநாடுகள் நடத்திக் கோலாகலங்கள் காட்டுவதிலும் இல்லை. அல்லது வேண்டியவர், கட்சிக்காரரர், 'கண்டுக்கினு' போனவர்

**ஐ.நா. சபை அறிக்கை கூறுகிறது, நூற்றாண்டுகளுக்குள் அழிந்து போகும் மொழிகளின் பட்டியலில் தமிழ் எட்டாவது இடத்தில் இருக்கிறது என்று. புலம்பி என்ன பொருள்?**

பார்த்து விருது வழங்குவதிலும் இல்லை.

இதையெல்லாம் யார் போய்ச்சொல்ல வல்லார்கள்? எழுத்தாளன் கருத்து என்பது இம்மாநிலத்தில் எக்காலத்தும் அம்பலம் ஏறியதில்லை. ஏனெனில் இது கேரளமோ, கன்னடமோ, மராட்டியமோ, வங்காளமோ இல்லை.

மருத்துவர்களில், மருந்தில் போலி என்பது எத்தனை அபாயகரமானதோ, அதைவிட அபாயகரமானது ஆசிரியத்தில் போலி என்பது. நமக்கோ அசலை அடையாளம் தெரியாது. ஆனால் போலிகளைக் கொண்டாடிக் கொண்டிருப்போம்!

**- கற்போம்...**

# கைம்மண் அளவு

‘தான் தற்புகழ்தல் தகுதி அன்றே’ என்கிறது பன்னரும் சிறப்பின் பவணந்தி இயற்றிய நன்னூல். ‘தானே தன்னைப் புகழ்ந்துகொள்வது தகுதியுடையவர் செயலல்ல’ என்பது பொருள். எனில் காசு கொடுத்தும், காரியங்கள் நடத்திக் கொடுத்தும் பிறரைக் கொண்டு புகழச் செய்தல் தகுதியானவர் செயலா? அப்படிப் பார்த்தால், தகுதியானவர் என்று பகலில் விளக்கு கைக் கொண்டு தேடினாலும் வெகு சிலர்கூட கிட்ட மாட்டார்கள். பொருள் பெறும் விதமாக தமிழ்ப் புலவர் ஒருவர், ‘போர் முகத்தை அறியானைப் புலியே என்றேன்’ என்று பாடியதற்கு வருந்துகிறார். இந்து மாக்கடலே என்பதும் மன்னும் இமயமலையே என்பதும் இந்தப் புகழ்ச்சியிலே தான் சேரும்.

சீர்காழி அருணாசலக் கவிராயர் சொல்கிறார், ‘தன்னைப் புகழ்வானும் சாட்சி சொல்லி நிற்பானும் பொன்னை மிகத் தேடிப் புதைப்பானும் பேய்’ என்று. தன்னைத்தானே புகழ்ந்து கொள்கிறவன் - அது அடியாள் வைத்துப் புகழ்வதாயினும் ஆயிரங்கள் கொடுத்துப் புகழ்வதாயினும் - பொய் சாட்சி சொல்கிறவன், அளவுக்கு அதிகமாகப் பொன் தேடிப்

**நாஞ்சில் நாடன்** | ஓவியம்: **மருது**



புதைத்து வைப்பனும் பேய் என்கிறார். பொன் தேடிப் புதைத்து வைப்பது பேய்த்தனம் என்று கருதித்தான், இன்று எவரும் மண்ணில் புதைப்பதில்லை. ஆனால், வெளிநாட்டு வங்கிகளில் பதுக்குகிறார்கள். பினாமி பெயரில் சொத்து வாங்கிக் குவிக்கிறார்கள். நகத்தின் அழுக்கு போல நுண்ணளவுக்குப் பொருள் செலவில் சமூக அல்லது இலக்கிய சேவை அமைப்புகள் ஏற்படுத்தி, காலம் கருமை பூசிய வஞ்சக முகங்களைக் கழுவிக்கொள்ள முனைகிறார்கள்.

சிலருக்கு சொந்தமாகக் கப்பல்கள் இருக்கிறதென்றும், தீவுகள் வாங்கி வைத்துள்ளனர் என்றும், வெளிநாட்டில் ஓட்டல்கள் உண்டென்றும், நகைக் கடைகளுக்கு சொந்தக்காரரர்கள் என்றும், அண்டை நாடுகளில் மலைத் தோட்டங்கள் உண்டு என்றும், சாயாக்கடை பெஞ்சுகளிலும் மதுச்சாலை டேபிள்களிலும் உரையாடுகிறார்கள். அவர்தம் பெருமைகளை இங்கே பாடியும் நடக்கிறார்கள் பாணர்கள்.

நாம் தற்புகழ்ச்சி பற்றிப் பேசிக்கொண்டிருந்தோம். மூத்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தாம் ஆற்றிய அவை உரைகளை எல்லாம் தொகுத்து நூலாக வெளியிட்டிருந்தார். அதில் பத்திக்குப் பத்தி தம் தலைவர் பற்றிய பாமாலை, புகழ் மாலை. அந்த மூத்த தலைவரின் பல மடங்கு இழிந்த வடிவங்களைத்தான் இன்று நாம் பேரவை உறுப்பினர் உரைகளில் காண்கிறோம். கழிப்பறையில் நின்றால் கூட, ஒரு நிமிடம் தம் தலைவர் புகழ் பரவிய பின்தான் மடை திறப்பார்கள் போலும். சைவர்கள் சோற்றுக்கு முன்னால் உட்கார்ந்து ‘அன்னம் பாலிக்கும் தில்லைச் சிற்றம்பலம்’ என்று திருநாவுக்கரசர் தேவாரம் பாடும் பய பக்தி தோற்றுவிடும் போலும் தலைவர்கள் மீது சிறு தலைவர்களும் குறு தலைவர்களும் கொண்ட பக்தி.

இப்படித் தன்னைத்தானே புகழ்வதையும், அடியாட்களைக் கொண்டு புகழச் செய்வதையும் ஒரு வகையில் வணிகச் செயல்பாடு என்றே சொல்லலாம். அதாவது விளம்பரம். சுயமோகிகள் என்றொரு சொல்லும் உண்டு. சுயமோகத்தில் வணிகம் இல்லை; விளம்பரம் என்றால் வணிகம் வந்து புகுந்துகொள்கிறது. பூவுக்கு வண்டுகளைத் தேடிக் கொண்டு விட எவரும் விளம்பரம் செய்கிறாரா? அது இயற்கையானது. அது வியாபாரம் அல்ல. இரு தரப்புக்கும் ஆதாயம் உண்டு. விற்பவன் பால் வாங்குபவனின் மோகத்தைப் பெருக்குபவை விளம்பரங்கள்.

இன்று வாக்குகள் பொறுக்கி அள்ளவோ அல்லது பெரும் பொருள் சேர்க்கவோ விளம்பரங்கள் பயன்படுகின்றன. அதில் பயனடைகிறவர்கள், ஊடகங்களும் விளம்பர மாடல்களுமே. இழந்து நிற்போர் சாதாரணக் குடிமக்கள் தவிர வேறு யார்?

'யாவுமே விற்பனைக்கு' என்று ஆகிவிட்ட சூழலில், விற்பனையைப் பெருக்கவும் அதிகப் பணம் ஈட்டவும் நிறுவனங்கள் துணிந்து விட்ட நிலையில், விளம்பரம் என்பது அதற்கான பெருவழிப்பாதை ஆகிவிட்டது. தேநீர் அல்லது சாயா அல்லது டீ என்ற ஒன்றே தமிழனுக்கு அறிமுகம் இல்லாத காலத்து, எப்படித் தேநீரை அறிமுகம் செய்து விளம்பரப்படுத்தினார்கள் என்பதைக் கரிசல் இலக்கியத்தின் முன்னத்தி ஏர், 92 வயதான கி.ரா கட்டுரை எழுதி இருக்கிறார். 'அந்தக் காலத்தில் காப்பி இல்லை' என்பது பேராசிரியர் ஆ.இரா.வேங்கடாசலபதியின் நூலின் தலைப்பு. இன்று சராசரித் தமிழன், தினமும் 4 தேநீர் குறைந்தது அருந்துகிறான். இரண்டும் ஒன்று இல்லை என்றாலும், மது பற்றிப் பேசுகிறவர்கள் டீ அல்லது காபி பற்றி வாய் திறப்பதில்லை. விளம்பரங்களின் மூலம்தானே தேயிலை எஸ்டேட்டுகளும் தேயிலை தயாரிப்பு நிறுவனங்களும் இதனைச்

**ந**

**கத்தின் அழுக்கு போல நுண்ணளவுக்குப் பொருள் செலவில் சமூக அல்லது இலக்கிய சேவை அமைப்புகள் ஏற்படுத்தி, காலம் கருமை பூசிய வஞ்சக முகங்களைக் கழுவிக்கொள்ள முனைகிறார்கள்.**

சாதித்து எடுத்தன!

நான் கல்லூரி மாணவனாக இருந்த 1966 வாக்கில், கோககோலா குளிர்பானம் பருகிப் பார்க்க கல்லூரிகளுக்குள் நுழைந்து, முகவர்கள் இலவச கூப்பன்கள் விநியோகித்தார்கள். அதைக் கொடுத்து எந்த ஓட்டலிலும் பானம் பருகலாம். 'அதில் ஆஸ்ப்ரோ மாத்திரை போட்டுக் குடித்தால், ஒரு கட்டிங் அடித்தது போலிருக்கும்' என்றோர் பேச்சு நாடெங்கும் இருந்தது. அதையும் தானே முயன்று பார்த்தோம்! இன்று இந்தியாவில் குளிர்பானங்களின் விற்பனை எத்தனை ஆயிரம் கோடிகள் என்று யாரேனும் சொல்வீர்களா? அவர்களின் விளம்பரச் செலவு

என்ன என்று சொல்வீர்களா? இந்தக் கோடிகள் யாருடைய பணம் கனவான்களே! ரேஷன் கார்டுகளைக் கூட அடமானம் வைக்கிற தேசத்தில் நாம் வாழ்கிறோம் என்பது உமக்கு நினைவிருக்கிறதா?

அண்மையில் ஒரு விளம்பரம் கண்ணுற நேர்ந்தது. ஒரு இளைஞர் ஒரு பெட்டிக் கடையில் போய் ஒரு குளிர்பானம் கேட்கிறார். கடைக்காரர் 'வண்டி வரவில்லை' என்கிறார். இளைஞர் தனது முக்காலமும் உணரும் ஞான திருஷ்டியால், குளிர்பானம் ஏற்றி வரும் வண்டி, எந்த ஊரில், எந்த சிக்னலில், டிராஃபிக் நெருக்கடியில் சிக்கிக் கொண்டிருக்கிறது என்பதை அறிகிறார். பிறகென்ன? தனது மாய, மந்திர ஆற்றலால், ஹெலிகாப்டர் ஒன்றில் தொங்கிக் கொண்டு, குளிர்பானம் ஏற்றிய வண்டி நிற்கும் இடத்துக்குப் பறந்து போய், நான்கு நீள இரும்புச் சங்கிலிகளால் கொக்கி போட்டு, ஹெலிகாப்டரில் இருந்தபடியே, வண்டியைப் பிணைத்துத் தூக்கிக் கொண்டு போய் பெட்டிக் கடை அருகில் நிறுத்தி, ஒரு பாட்டில் வாங்கி, பாற்கடலில் கடைந்து எடுத்த அமுதத்தைக் குடித்து, சாகாவரம் பெற்று, பேரானந்தத்துடன் நடக்கிறார்.

நமக்குத் தோன்றுகிறது. அந்தக் குளிர்பானம் கிடைக்காவிட்டால் வடக்கிருந்து உயிர் நீப்பாரா அல்லது பக்கத்துக் கடையில் கேட்பாரா எவரும்? நடுச்சாலையில், விபத்தில் சிக்கி, உயிருக்குப் போராடும் ஒரு இளைஞரைக் காப்பாற்ற துரும்பு எடுத்துப் போடுவாரா? இது போன்ற விளம்பரங்களை பாரத மக்கள்தொகை வாய் பிளந்து பார்த்துக் கிடக்கிறது. எனக்குக் கேட்கத் தோன்றுகிறது. இவ்விதம் விளம்பரம் செய்யும் நிறுவனங்கள் ஏழை மக்களின் கல்விக்கோ, மருத்துவத்துக்கோ எத்தனை தருவார்கள்?

குப்பிகளில் அடைத்து விற்கப்படும் அனைத்துக் குளிர்பானங்களைவிடவும் பன்மடங்கு சத்தும் சாரமும் நிறைந்தது உள்ளூர் இளநீர், தெளுவு எனப்படும் பதநீர் அல்லது நீரா. அது உணவும், மருந்தும் ஆகும். 'விலை இருபது ரூபாயா' என வாய் பிளக்கிறார்கள். முதலுக்கு வட்டியும் உழைப்புக்கு கூலியும் ஆதாயமும் எந்தப் பன்னாட்டுக் கம்பெனியும் கவர்ந்து போவதில்லை. ஆனால் தென்னந்தோப்புக்காரரும் பனை விளைக்காரரும் ஹெலிகாப்டர் கொண்டு வந்து விளம்பரம் செய்ய முடியுமா?

இப்படித்தான் இரண்டே நிமிடங்களில் நூடுல்ஸ் என்றார்கள், முப்பது ஆண்டுகளுக்கு முன்

னால் பள்ளிச் சிறார் எல்லாம் பாய்ந்து பாய்ந்து தின்றனர். இன்று அதனை நச்சுக் கடல் கடைந்த நாசம் என்கிறார்கள். இத்தனை ஆண்டுகளாக விளம்பரங்கள் மூலம் விஷம் உண்ணத் தூண்டினோம்தானே! அரசாங்கம், அதிகாரிகள், ஆராய்ச்சி நிறுவனங்கள் யாருக்குப் பேன் பார்த்துக் கொண்டிருந்தனர்? இன்று தடை செய்யப்பட்ட அந்த உணவுக்காக சென்ற ஆண்டின் விளம்பரச் செலவு 445 கோடி என்றும் தரக்கட்டுப் பாட்டுச் செலவு 19 கோடி என்றும் தலையங்கம் எழுதுகிறது ‘அம்ருதா’ மாத இதழ். இந்த விளம்பரங்கள் மூலம் சிறுவருக்கு விஷம் ஊட்டி அவர் உடல்நலம் பாழாக்கியதற்கு என்ன நஷ்டஈடு தருவார்கள்? ‘தின்றவன் எல்லாம் தின்றான் போனான், திருக்கணங்குடியான் தெண்டமுறுத்தான்’ எனலாமா?

பள்ளி விட்டு வரும் சிறுவருக்கு கொண்டைக்கடலையோ, நிலக்கடலையோ, பாசிப்பயிறோ, தட்டைப்பயிறோ, உளுந்தோ, காணமோ வேகவைத்துச் சுண்டல் செய்து, சிறு கொட்டானில் போட்டு சிறு தீனியாகத் தர நமக்கும் நேரம் அற்றுப் போயிற்று. எட்டு மாதத்துக்கு முன்பே, வேகவைத்து உலர்த்திக் கலந்த காய்கறித் துண்டுகளை, சிக்கன் துணுக்குகளை கிண்டிக் கிண்டிக் கொடுத்தோமே ஐயா! எவ்வளவு பெரிய பாவிகள் நாம்?

பள்ளி விட்டு வரும் சிறுவருக்கு கொண்டைக் கடலையோ, நிலக்கடலையோ, பாசிப்பயிறோ, தட்டைப்பயிறோ, உளுந்தோ, காணமோ வேக வைத்துச் சுண்டல் செய்து, சிறு கொட்டானில் போட்டு சிறு தீனியாகத் தர நமக்கும் நேரம் அற்றுப் போயிற்று.

விளம்பரம் என்றால் அது சற்று மிகையாகவே இருக்கும். ஆனால், மிகை என்பது பொய் அல்ல. கவிதைக்குத்தான் பொய் அழகு. உணவிலும் மருந்திலும் கல்வியிலும் பொய் ஆபத்தானது. எந்தக் காலத்திலாவது மருத்துவமனைகளுக்கு ஆங்கில, பிராந்திய மொழித் தினசரிகளில் நான்கு பக்கங்களில் விளம்பரங்கள் வந்ததுண்டா? நோய் வந்தால் நோயாளி தேடிப் போவான் தன்னைப் போல. ஐந்து நட்சத்திர விடுதிகளின் நிர்வாகிகள் வாரம் ஒரு முறை மீட்டிங் போட்டு, தமது விடு

திகளின் தங்கும் அறைகளின் *Occupancy Rate* பற்றி விவாதிப்பார்களாம். இன்று மருத்துவமனைகளும் அந்த வேலையைச் செய்கின்றன என்கிறார்கள். மணல் கொள்ளை பற்றிப் பேசுகிற நாம் மருத்துவக் கொள்ளை பற்றிப் பேசுகிறோமா? திறமையும் சேவை மனோபாவமும் மூப்பும் கொண்ட மருத்துவர்களைப் பார்த்துச் சீறுகிறார்களாம் மருத்துவமனைகளின் நிர்வாக இயக்குநர்கள், "ஏன்யா ஆறு ரூம் காலியா கெடக்கு?" என்று.

'பள்ளித்தலம் அனைத்தும் கோயில் செய்குவோம்' என்றான் பாரதி, கல்விக்கூடங்கள் யாவும் இறை வழிபாட்டுத் தலங்கள் எனும் பொருளில். இன்று பன்னிரண்டாம் வகுப்பு பொதுத் தேர்வுக்கு மாணவர் ஆயத்தம் ஆகும் முன்பே கல்வி நிறுவனங்கள் ஆயத்தம் ஆகிவிடுகின்றன. நாளிதழ்களில் முழுப்பக்க வண்ண விளம்பரங்கள், பெரும் பொருட்செலவில். நாட்காட்டிகள் அச்சிட்டு விநியோகிக்கின்றன. பேருந்து நிலையங்களில் துண்டுப்பிரசுரங்கள் இறைந்து கிடக்கின்றன. யாருடைய காசில் இந்த விளம்பரங்கள்? கல்வித் தந்தையரின் தோட்டம் துரவு, காடு கரை, வீடு மனை விற்ற பணத்திலா? கல்விக் கட்டணம் என்று மாணவரிடம் கொள்ளைப் பணம் வசூல் செய்யும் வசதியில்!

என்றாலும் ஆண்டுக்கு ஒரு லட்சத்துக்கும் அதிகமான பொறியியல் கல்லூரிப் படிப்புக்கான இடங்கள் காலியாக ஓடுகின்றன வாம். சில ஆண்டுகளில் பல பொறியியல் கல்லூரிகள் மணல் கொட்டி வைக்கும், கிரானைட் பாளங்கள் அடுக்கி வைக்கும், போலி மதுபானப் பெட்டிகள் அடுக்கி வைக்கும் கோடவுன்களாக மாறிவிடும் என்கிறார்கள். யாரோ சொல்வது எனக்கும் கேட்கிறது, 'அவர்கள் பலரின் ஆதித் தொழிலே அதுதானே?' என்று.

பிறவா நெறிப் பெற்றியாளனான சிவனாரின் திருவிளையாடல்களில் ஒன்று, பிச்சாடனம். தாருகா வனத்து முனிவர்களின் கர்வம் அடக்கிய திருவிளையாடல். தன்னை மதிக்காமல் தருக்கித் திரிந்த ரிஷிகளின் கர்வம் பங்கப்படுத்த, சிவனார் பிச்சாடனராகப் போனாராம். அதாவது ஆடைகளற்ற பிச்சைக்காரனாக. அவரது நிர்வாண தரிசனத்தில் மயங்கிய ரிஷி பத்தினிகள், மோகமுற்று மனதால் சிவனாரைச் சார்ந்து கற்பு நிலை அழிந்தார்களாம். ஆயர்பாடிக் கண்ணன் பின்னால் ஆநிரைகள் நடந்ததைப்போல நடந்தார்களாம்.

அஃதேபோல், இன்றொருவன் உடலில், குறிப்பாக அக்

குளில் வாசம் தெளிப்பானாம். அவனது டியோடரன்ட் வாசம் மோந்துபார்த்துக்கொண்டே பிறகாலே போவார்களாம் பெண்கள். பெண்களை மயக்கி எடுக்க எத்தனை எளிய வழி பாருங்கள்... அந்தக் கம்பெனியின் தெளிப்பான் ஒன்று வாங்கினால் போதும்! பெண்ணியவாதிகள் இதுபோன்ற விளம்பரங்களுக்கு எல்லாம் எந்த எதிர்ப்பும் தெரிவிக்க மாட்டார்களா? செல்லா இடத்து சினம் காப்பார் போலும்!

மாதிரிகளுக்காகச் சில சொன்னேன். இன்று மருத்துவம், கல்வி, அரசியல் என எந்தத் துறையும் சேவை அல்ல. பெரும் பணம் ஈட்டும் வணிகம். நூடுல்ஸ் விற்பவருக்கும், குளிர்பானம் விற்பவருக்கும், கேளிக்கை விற்பவருக்கும், மருத்துவமனைகள், பொறியியற் கல்லூரிகள், கலை அறிவியல் கல்லூரிகள், மருத்துவக்கல்லூரிகள் நடத்துபவருக்கும், மணல் கொள்ளை அள்ளுபவனுக்கும், மலைகளை வெட்டிச் சாய்ப்பவனுக்கும், செம்மரம் சந்தன மரம் வெட்டிக் கடத்துபவனுக்கும் நகைக் கடைக்காரருக்கும் தொழில் எனும் பார்வையில் எந்த வேறுபாடும் இல்லை. என்ன முதலீடு, எத்தனை மடங்கு லாபம் என்பதே கணக்கு! எனவே மக்களுக்கு விழிப்புணர்வு வேண்டும்.

**பெண்களை மயக்கி எடுக்க எத்தனை எளிய வழி பாருங்கள்... அந்தக் கம்பெனியின் தெளிப்பான் ஒன்று வாங்கினால் போதும்!**

விளம்பரம் என்பதே தப்பான செயல்பாடு அல்ல. ஆனால் எங்கு அளவுக்கதிகமான பொருட்செலவில், பெரும்பணம் நடிகருக்குக் கொடுத்து விளம்பரம் செய்யப்படுகிறதோ, அங்கு ஏதோ ஆபத்து கரந்துறைகிறது என்று பொருள். அது சினிமாவானால் என்ன, பல மாடிக் குடியிருப்பு மனைகள் என்றால் என்ன, பருகும் தின்னும் பொருளானால் என்ன, உணவுக் கூடங்களானால் என்ன, கல்விக் கூடங்களானால் என்ன, மருத்துவமனைகள் ஆனால்தான் என்ன, ஆன்மிக வழிகாட்டும் மையங்களானால் என்ன?

வெகு விரைவில் சிவனாரும் திருமாலும் நான்முகனும், மலைமகளும் திருமகளும் நாமகளும் பென்னம்பெரிய விளம்பரங்களில், 'என் கோயிலுக்கு வாருங்க... உண்டியலில் பணம் போடுங்க...' என்று கெஞ்சினாலும் வியப்படைய மாட்டேன்.

**- கற்போம்...**

# கைம்மண் அளவு

சில மாதங்களுக்கு முன்பு பணி நிமித்தம் ராஜ பாளையம் போயிருந்தேன். முன் மாலைக்குள் அலுவலக வேலைகளை முடித்துக்கொண்டு, பின் மாலையில் என் மனம் போக்கு அலைச்சலையும் நடத்திய பிறகு, மகாத்மா காந்தி பண்டு விஜயம் செய்திருந்த நூலகத்தின் பக்கம் வந்தேன். இரவு நேரச் சிற்றுண்டியை உணவு விடுதியொன்றில் முடித்துக்கொண்டு, திரும்ப தங்கியிருந்த விடு திக்கு நடக்கத் தலைப்பட்டேன்.

பங்குனி மாதப் புழுக்கம். எனினும் இரவு பத்து மணி தாண்டிவிட்டதால் தூசியும் வெக்கையும் இரைச்சலும் அடங்கி, காற்று மென் தூவலில் இருந்தது. நடக்கும்போது காதுகளில் ஒலிபெருக்கி வாய்ப்படாத நையாண்டி மேள ஓசையைச் செவி மடுத்தேன்.

**நாஞ்சில் நாடன்** | ஓவியம்: **மருது**



நையாண்டி மேளம் என்பது ஒரு கிராமிய மேளம். இரண்டு நாதஸ்வரங்கள், இரண்டு தவில்கள், ஒரு கைத்தாளம், இரண்டு முரசுகள், ஒரு ஒத்து. முரசு என்று ஈண்டு நான் குறிப்பது ஒன்றுக்கு மேல் ஒன்றாக இரண்டு தோல் வாத்தியங்கள் கொண்டது. வாசிப்பவர் கழுத்திலிருந்து தொங்கும். கீழே பம்பை, அதன் மேல் சேர்த்து அடுக்கினால் போல முரசு. சற்றே வளைந்த, செதுக்கிச் சீவப்பட்ட கம்புகளை இரண்டு கைகளிலும் வைத்துக் கொண்டு வாசிப்பார்கள். இரண்டு கைகளாலும் நான்கு முகங்களிலும் வாசிப்பார்கள்.

ஐந்து முகம் கொண்ட பஞ்சமுக வாத்தியம் ஒன்றும் இருந்தது நம் இசை மரபில். திருவாரூர் தியாகேசர் ஆலயத்தில் இன்றும் வாசிக்கிறார்கள். வேறு எங்கேயாவது எவரும் வாசிக்கிறார்களா என்று ஒருவேளை இசையறிஞர் நா.மம்மது அறிந்திருக்கக் கூடும்.

நையாண்டி மேளம் என்பது, கோயிலுக்கு வெளியே திடலில் வாசிக்கப்படுவது. கூடவே கரகாட்டமும் இருக்கும். மேளம் வாசிப்பவர்களுக்கு தொல்லிசை மரபுகளில் நல்ல தேர்ச்சி உண்டு. தாளம், லயம் பிசகாது. ஒரு முறை இசை விமர்சகர் சுப்புடு எழுதினார்... 'நமது முரசு, பம்பை, மகுடம், உடுக்கு, தப்பு, பறை, உருமி போன்ற மேளங்களை சென்னை சபாக்களில் வாசிக்கச் செய்ய வேண்டும், நமது புகழ்பெற்ற தாள லய விற்பன்னர்களை அதைக் கேட்கச் செய்ய வேண்டும்' என!

நையாண்டி மேளத்தின் தாளக்கட்டுகளுக்கு, கரகாட்டக் கலைஞர்கள் அடவு போடுவார்கள். கிராம மக்கள் விரும்பி ரசிக்கும் கலை இது. கர்நாடக இசை மெட்டுக்களில் அமைந்த பாடல்கள், பழைய சினிமாப் பாடல்கள் என வாசிப்பார்கள். 'நலந்தானா?'வும் கேட்கலாம், 'மச்சானைப் பாத்தீங்களா?'வும் கேட்கலாம். 'கறுப்புதான் எனக்குப் பிடிச்ச கலரு'ம் கேட்கக் கிடைக்கும். கமகங்களும் பிருகாக்களும் சங்கதிகளும் கிராம மக்கள் அறியாதவை அல்ல.

விடுதி அறைக்குத் திரும்பாமல், மேள ஓசை வந்த திசை நடந்து, இரவு இரண்டு மணி வரை திடலின் ஓரமாக நின்று நையாண்டி மேளம் கேட்டுக் கொண்டிருந்தேன். நையாண்டி மேளமும் கரகாட்டமும் வில்லுப்பாட்டும் கணியான் கூத்தும் பொய்க்கால் குதிரையாட்டமும் மயிலாட்டமும் ஆலி ஆட்டமும் காவடியாட்டமும் தோல் பாவைக் கூத்தும் பத்து வயது முதலே எமது ஆவியில் புகுந்து

போன கலைகள். மகுடமும், உடுக்கும், முரசும், பம்பையும், தவிலும், தப்பட்டையும், பறையும், செண்டையும் இன்றும் என் நாடி நரம்புகளை அதிர வைப்பவை. வீட்டில் சொல்லிக் கொண்டும், சொல்லாமலேயும் பக்கத்துக் கிராமங்களில் எங்கு முத்தாரம்மன் கோயில் கொடை, காளி ஊட்டு, சுடலை மாடன் கோயில் கொடை நடந்தாலும் அங்கு நம் பிரசன்னம் இருக்கும். விடிய விடியக் கொடை பார்த்து, கூடத் துணைக்கு வந்த தோழர்கள் எப்போது நம்மைத் தேடிச் சலித்து சொல்லிக் கொள்ளாமல் ஊருக்குப் போனார்கள் என்று தெரியாமலேயே காலம் போக்கி, இரவு மூன்று மணிக்குக் கொடை முடிந்ததும் ஒற்றைத் தனியனாக நடந்து ஊருக்குப் போக அஞ்சி, கோயில் நடையிலேயே படுத்து உறங்கி, பல பலா விடிய, கோழி கூவக் கண் விழித்து, பதுங்கிப் பதுங்கி வீடு போய்ச் சேர்ந்த நாட்கள் அவை.

சுடலைமாடன், புலைமாடன், கழுமாடன், இயக்கி, பேய்ச்சி, முத்தாரம்மன், முப்பிடாதி அம்மன், சந்தனமாரி, சூலைப் பிடாரி, கரிய காளி எனப்பட்டவர்களின் அலங்கரிக்கப்பட்ட உருவங்கள், கோமரத்தாடிகளின் உரத்த ஓங்காரப் பிளிறல் என உறக்கத்தில் கனவாய் வந்து வெருட்டியதுண்டு. கொடை முடிந்தாலும் இரண்டு நாட்கள் ககன வெளியில் முரசு, உடுக்கு ஓசை காதுபட ஒலித்துக்கொண்டிருக்கும். அந்த வயதில் அஃதோர் போதை, ஈர்ப்பு. தன்னை மறந்து கால்கள் போட்ட தாளம், வெட்டி அசைத்த சிரம், நின்றவாறே தொடையில் தட்டிய கைகள்...

**அழுதுகொண்டே பள்ளிக்குத் தாமதமாக வரும் சிறுவனைப் பார்த்து, 'பள்ளிக்கூடத்துக்குப் போனா என்ன எழவாம் சொல்லித் தந்திடுவானுக லே... வீட்டுக்குப் போலே...' என்பார்.**

இன்றும் கோவையிலிருந்து இராக்காலப் பேருந்துகளில் ஊர் நோக்கிய பயணங்களின்போது, தை, மாசி, பங்குனி, சித்திரை மாதங்களில், ஒட்டன்சத்திரம் தாண்டியதும், நெடுஞ்சாலை ஓரத்து சிற்றூர்களில் நடக்கும் நள்ளிரவுக் கொடைகளின் நையாண்டி மேளங்களைச் சில கணங்கள் கடந்து போகும்போது, உடலும் மனமும் பரவசம் கொள்வதுண்டு.

என் அனுபவப் பரப்பின்

மிச்ச சொச்சங்கள்தான் ராஜ பாளையம் கோயில் முன்பிருந்த முற்றத்தில் என்னைக் கட்டி நிறுத்தி இருந்தது. நெடுநேர நையாண்டி மேளத்துக்கும் கர காட்டத்துக்கும் பிறகு, இரவு ஒரு மணியளவில், மேளக்கா ரர்களின் ஓய்வுக்கு வேண்டி, ஆட்டக்காரிகளும் கோமாளி களும் சல்லாபமான தோர் உரையாடலில் ஈடுபட்டார்கள். சிறுவர்கள் களைத்துப் போய் உறங்கச் சென்ற பிறகு, வயது வேறுபாடற்று பெண்களும் ஆண்களும் கூட்டமாய் நின்றும், வீட்டுப் படிப்புரைகளில் அமர்ந் தும் அந்த சிருங்கார ரசப் பேச் சுக்களை ரசித்து, கெக்கலித்து, நாணுவது போல் பாவித்து, ஓரக் கண்ணால் எதிர்பாலரைக் கவ னித்து, கூசிச் சிரித்துக் கொண் டிருந்தனர்.

எதுவும் கிராமத்தில் புழங் காத உரையாடல் அல்ல. அபிந யங்களும் குரலின் ஏற்ற இறக்க மும் முகபாவங்களும் காமரசம் மிகுத்துக் காட்டும். எங்களூரில் ஒரு பூசாரிப் பாட்டா இருந் தார். அம்மன் கோயில் பூசாரி, துடியான சாமி கொண்டாடி. ஆரம்பப் பள்ளியில் கடைநிலை ஊழியம். களிமண்ணில் சிறுவ ருக்கு காளையும் பசுவும் செய்து தருவார். குருத்தோலையில் காற்றாடி செய்வார். அழுது கொண்டே பள்ளிக்குத் தாமத மாக வரும் சிறுவனைப் பார்த்து, ‘பள்ளிக்கூடத்துக்குப் போனா என்ன எழவாம் சொல்லித் தந் திடுவானுக லே... வீட்டுக்குப் போ லே...’ என்பார்.

தெருவழியாக நடந்து அவர் வீட்டுக்குப் போகும்போது, எவளாவது ஒரு இளம் பெண் - புதிதாகக் கல்யாணம் ஆன வள் - வீட்டுப் படிப்புரையில் அமர்ந்து தண்டங்கீரை ஆய்ந்து கொண்டிருப்பாள்.

“என்னா ராசாக்கமங்கலத் துக்காரி? பேரனுக்கு மத்தியானச் சாப்பாட்டுக்கு கீரைத் தொவர னும் கீரைத்தண்டு புளிக்கறி யுமா?”

கேள்வியில் ஒன்றுமே அறி யாத பாவம் இருக்கும். பேத்தி பதில் சொல்வாள். ‘‘ஆமா பாட்டா... மத்தியானம் சாப்பிட வாறேளா?”

‘‘நல்ல கூத்தாட்டுல்லா இருக்கு? ராவெளுக்கசோலி பாக் கப்பட்டவனுக்கு ஒரு முட்டை, மீனுன்னு வாங்கி வைய்க்க மாட்டியா? கீரைத்தண்டு அவிச் சுப் போட்டா கை காலு ஓஞ்சு போகாதா? பின்ன எப்பிடி மூசி யாம சோலி பாப்பான்?”

பேத்திக்கு பாட்டாவின் பாலி யல் எள்ளல் அப்போதுதான் அர்த்தமாகும். நாணிக் கண் புதைத்து, “போங்க பாட்டா...

சாகப் போற வயசாச்சு, பேச்சைப் பாரேன்!" என்பாள்.

இது கொச்சை வழக்கல்ல. கிராமத்து, பாலியல் எள்ளல் வழக்கு. தொலைக்காட்சிப் பெட்டிகளின், திரையரங்கு கொச்சைகளுக்கும் வக்கிரங்களுக்கும் பழகிப் போன நகரத்தாருக்கு கரகாட்டக்காரர்களின் உரையாடல் ஆபாசமாகத் தோன்றக்கூடும். ஆனால் கிராமம் தனது மன அழுத்தங்களை இவ்வாறுதான் தளர்த்திக்கொள்கிறது.

திடீரென கரகாட்டக்காரி ஒருத்தி, குடிக்க செம்பில் தண்ணீர் வாங்கி வாய் நிறைத்துக் கொண்டு, கோமாளி மீது முழுத்தண்ணீரையும் பீய்ச்சிக் கொப்பளித்தாள். கூட்டம் ஆரவாரித்தது. ஈதென்ன கிராமத்துக் கலை என்று உங்களுக்குத் தோன்றக்கூடும்! ஆனால் சில ஆண்டுகளுக்கு முன்னால் வளைகுடா நாடொன்றில் கலை நிகழ்ச்சி நடத்தப் போன முன்னணி இந்திக் கதாநாயகன் ஒருவன், தன்னுடன் சேர்ந்து ஆடப் பெண்களை அழைத்தான், பார்வையாளர் கூட்டத்தில் இருந்து. தன்னுடன் ஆடவந்த உயரதிகார, செல்வந்தர் வீட்டு மணமான பெண்கள் மீது, மேடையில் ஆடிக் கொண்டிருக்கும்போதே, தண்ணீர் பாட்டிலிலிருந்து வாய் நிறைய

**நை**யாண்டி மேளத்தில் 'நலந்தானா?'வும் கேட்கலாம், 'மச்சானைப் பாத்தீங்களா?'வும் கேட்கலாம். 'கறுப்புதான் எனக்குப் பிடிச்ச கலரு'ம் கேட்கக் கிடைக்கும்.

வாங்கி பீய்ச்சி உமிழ்ந்தபோது, கனவான்கள் நிறைந்த கூட்டமும் ஆரவாரமே செய்தது. ஈதோர் பாலியல் முன் விளையாட்டு என்று கூறலாம்.

இதில் எதனையும் நியாயப்படுத்த அல்லது தீர்ப்பு வழங்க இதனை நான் எழுதவில்லை. கிராமம் தனது கலைகள் மூலம், அன்றும் இன்றும், தனக்கான ஆட்டத்தை, பாட்டை, தாளத்தை, இசையை, பல்சுவையை, குதூகலத்தை, பொழுதுபோக்கைக் கண்டெடுத்துக் கொள்கிறது. மன அழுத்தங்களுக்கான விடுதலையைத் தேடிக்கொள்கிறது. பாலியல் கல்வியையும் பாலியல் வேட்கையையும் அறிந்துகொள்கிறது.

என் வாழ்க்கையில் முதன் முதலாக மேட்டூர் வட்டம், மேச்சேரி அருகில் இருக்கும் ஏர்வாடியில், எட்டாண்டுகள் முன்பு தெருக்கூத்து பார்த்தேன்.

கட்ட பொம்மலாட்டம் பார்த்தேன். நண்பர் மு.ஹரிகிருஷ்ணன் ஆண்டுதோறும் ஏற்பாடு செய்கிறார். தீவிரமான காட்சி நடந்து முடிந்ததும் கட்டியங்காரன் வந்து நின்று நாம் மேற்சொன்ன உரையாடல்களை நிகழ்த்துகிறார். எந்தக் கிராமியக் கலையிலும் இதுவோர் அம்சம்.

முன்பு நான் பம்பாயில் வாழ்ந்த காலத்து, சென்னை வழியாகத்தான் ரயில்கள் இருந்தன. சென்னையில் எனக்கொரு சகோதரி இருந்தாள், நங்கநல்லூரில். அவள் வீட்டில் தங்கிக் கொண்டு, எழுத்தாளர்களைச் சந்தித்து அளவளாவுவேன். அசோகமித்திரன், சா.கந்தசாமி, ந.முத்துசாமி, ஞானக்கூத்தன், வல்லிக்கண்ணன், சி.சு.செல்லப்பா, தீபம் நா.பார்த்தசாரதி, தி.க.சிவசங்கரன் என. நண்பர்களும் கவிஞர்களுமாக ஞாயிறு மாலையில் மெரீனா கடற்கரையின் மரத்தடியில் உரையாடும்போது நானும் சிலமுறை கலந்து கொண்டிருக்கிறேன்.

ஒருமுறை, கோயில் கொடை, ஆடு கோழி பலி, நையாண்டி மேளம், கரகாட்டம், நள்ளிரவு பாலியல் உரையாடல் என்று பேசிக்கொண்டிருந்தேன். "நீங்களென்ன காட்டுமிராண்டிகளா?" என்றார், சென்னையிலேயே பிறந்து வளர்ந்த கவிஞர் ஒருவர். "இதுவென்ன ஆபாசம்?" என்றார் மற்றொரு கவிஞர். உண்மையான ஆபாசங்களை, பாலியல் வக்கிரங்களை, இரட்டுற மொழிதலை நாம் உயர் வகுப்புகளில் முன்பதிவு செய்யப்பட்ட குளிர்பதன அரங்குகளில், வாய் பிளந்து ஜொள் வடியப் பார்த்துக் கிடக்கிறோம், மூன்று வயதுச் சிறுமியையும் பக்கத்தில் வைத்துக் கொண்டு.

வாத்சாயனர் சொன்ன 64 காம நிலைகளிலும் விகாரம் காட்டுகிறார்கள். ஒரேயொரு வித்தியாசம், ஆடைகள் அணிந்து கொண்டபடி! நீச்சல் குளத்தில், நீச்சலுடையில் குளிக்கும் காதலியைத் தூக்கி, இரண்டு கால்களையும் கழுத்தில் இரு பக்கமும் தொங்கப் போட்டுத் தோளில் சுமக்கிறான். கடற்கரை மணலில், வெறும் உள்ளாடை மட்டும் அணிந்து ஒருவன் தண்டால் எடுக்கிறான். அவன் முதுகில் தனது முன்புறம் அழுந்த, கவிழ்ந்து படுத்துக்கிடக்கிறாள், உள்ளாடைகள் மட்டும் அணிந்த காதலி. அவளைச் சுமந்தபடி தண்டால் தொடர்கிறது. காதல் காட்சிகள் யாவுமே ஆடை அணிந்துகொண்டு கலவியில் ஈடுபடுவது போலுள்ளன.

பாடல்களோ எனில், 'நேத்து ராத்திரி யம்மா!' என்கின்றன. ஒருத்தன், 'சமஞ்சது எப்படி?'

என்கிறான். 'பூவரசம் பூ பூத்தாச்சு, பொண்ணுக்கு சேதி வந்தாச்சு!' என்கிறான் மற்றொருவன். 'அழகுப் பெண்ணின் அம்மா என்றால் அத்தை என்றே அர்த்தம்' என்கிறான் வேறொருவன். 'சின்னப் பொண்ணும் வேண்டாம் மாமா, பெரிய பொண்ணும் வேண்டாம் மாமா, அத்தை மட்டும் போதும் மாமா' என்கிறான் பெருந்தன்மையுடன். இவை யாவும் காதல் இலக்கியங்கள். ஆனால், எளிய கிராமத்து மனிதன், காசு பணம் செலவின்றி, ஆண்டுக்கு ஒரு முறை பின்னிரவில் ரசிப்பது ஆபாசம், காட்டுமிராண்டித்தனம்.

பள்ளி மாணவன் இணையத்தில் இருந்து செல்போனுக்குத் தரவிறக்கம் செய்து, நண்பர்களுடன் நீலப்படம் பார்க்கும் தரத்துக்கு இறங்கிவிட்டோம் நாம். மாதா, பிதா, குரு வரிசையில் இருக்கும் ஆசிரியை, கரும்பலகையில் சாக்பீஸால் எழுதும்போது, காம நோக்கில் படம் எடுத்துப் பூட்டி வைக்கும் கலையும் தெரிந்துகொண்டார்கள் அவர்கள்.

இரவு பதினோரு மணிக்கு மேல், பாலியல் ஐயங்களைத் தீர்ப்பது போன்ற பம்மாத்தில் வீரிய மாத்திரைகள் விற்கின்றன தொலைக்காட்சிச் சானல்கள்.

**ஒருத்தன், 'சமஞ்சது எப்படி?' என்கிறான். 'பூவரசம் பூ பூத்தாச்சு, பொண்ணுக்கு சேதி வந்தாச்சு!' என்கிறான் மற்றொருவன். 'அழகுப் பெண்ணின் அம்மா என்றால் அத்தை என்றே அர்த்தம்' என்கிறான் வேறொருவன்.**

இப்போதுதான் இந்திய அரசாங்கம் யோசிக்கவே ஆரம்பித்திருக்கிறது, பாலியல் வக்கிரம் புகட்டும் இணையதளங்களை எவ்விதம் கைகாரியம் செய்வது என!

மூன்று வயது பெண் குழந்தை முதல் எண்பது வயது மூதாட்டிகள் வரை வன்புணர்ச்சி செய்யப்படுகிறார்கள். தேசிய ஊடகங்களில் சான்றோர் பெருமக்கள் தலை குலுக்கி, விரல் நீட்டி, முகம் கறுத்து விடிய விடிய விவாதித்து, பஞ்சப்படி, பயணப்படி வாங்கிக்கொண்டு போகிறார்கள்.

சமூகத்தைப் பீடித்திருக்கும் இந்த நோய்க்கு மருந்தேதும் இல்லை என்பது மற்றுமோர் பழிகரப்பு அங்கதம்.

**- கற்போம்...**

# கைம்மண் அளவு

பள்ளிக்கூடம் விட்டு வந்ததும், பெரும்பாலும் நேரடியாகச் சாப்பாடுதான் அன்று எமக்கு. நல்ல பசியும் இருக்கும். மத்தியானம் அரைவயிறு, கால்வயிறு, சோறு வடித்த கஞ்சி அல்லது பைப் தண்ணீர் என்ப தால். எமக்காவது மோசமில்லை, எம்மில் சிலருக்கு பள்ளி விட்டு வந்தாலும் விளக்கு வைத்தபின் உலையேற்றி வடித்து இறக்கி, குழம்பு கொதித்த பின்தான் சாப்பாடு.

சற்று வசதியான வீட்டுப்பிள்ளைகள், மத்தியானம் நல்ல எடுப்பு எடுத்திருக்கும் என்பதால், மாலை பள்ளி விட்டு வந்ததும், வீட்டில் சிறுதீனி ஏதும் செய்து வைத்திருப்பார்கள். சின்ன பனையோலைக் கொட்டானில் போட்டு, வாசல்படிப் புரையில் உட்கார்ந்து தின்பார்கள். காலையில் நனையப் போட்டு வைத்து, மாலையில் உப்புப் போட்டு அவித்த மொச்சை, கடலை, பெரும்பயிறு, சிறுபயிறு, காணம் என் பன. பெரும்பயிறு என்கிற தட்டப்பயிறு என்றால், வேகவைத்துக் கொஞ்சம் அவல் தூவி விரவிக் கொடுப்பார்கள். சிறுபயிறு என்கிற பாசிப்பயிறு என்றால், கொஞ்சம் தேங்காய் துருவிப் போட்டு. நாக ரிகமான மொழியில் அதனைச் ‘சுண்டல்’ என்பார்கள்.

**நாஞ்சில் நாடன்** | ஓவியம்: **மருது**



உழக்குப் போல, கொட்டானில் வைத்துத் தின்று கொண்டிருப்பார்கள். உழக்கு என்றால் தெரியும்தானே! தமிழ்தான்... ஆழாக்கு, உழக்கு, உரி, நாழி, பக்கா என்பன முகத்தல் அளவுகள். நாழி எனில் ஏகதேசமாக ஒரு லிட்டர். ஔவை, 'நாழி முகவுமோ நானாழி?' என்றாள். 'நான்கு நாழிகள் கொள்ளும் தானியத்தை ஒரு நாழி முகக்க முடியுமா' என்ற பொருளில். 'உண்பது நாழி, உடுப்பது இரண்டு முழம்' என்பதுவும் ஔவைதான். உண்பது நாழி அரிசிச் சோறு, உடுப்பது இரண்டு முழம் வேட்டி என்று பொருள். இன்று நாழி அரிசிச் சோறு என்பதைக் கற்பனை கூட செய்ய இயலாது.

சில சமயம் கடித்துக்கொள்ள, கொட்டானில் ஒரு துண்டுக் கருப்பட்டியும் கிடக்கும். இடைப் பயிராக விதைத்து நெற்று எடுத்த பின், உளுந்தும் கிடக்கும். முழு உளுந்து நெற்றாகவே வேக வைத்துத் தருவார்கள். அவித்த முழு நிலக்கடலையும். உரித்து உரித்துத் தின்னலாம். அல்லது மண் சட்டியில் ஆற்று மணலுடன் சேர்த்துப் போட்டு வறுத்த நிலக்கடலை. அந்த வாசத்துக்கே நாசி விடைக்கும்.

சிலர் கொஞ்சம் போல அவல் நனைத்து, துவர வைத்து, அதில் கருப்பட்டி சீவிப் போட்டு, தேங்காய் துருவிப் போட்டு கலந்து தருவார்கள். கனிந்த பேயம்பழம் ஒன்றும் இருந்தால் உத்தமம். 'பாபநாசம்' சினிமாவின் மூலப் பிரதியான, மோகன்லால் - மீனா நடித்த 'திருஷ்யம்' பார்த்தவர்கள் கவனித்திருக்கக் கூடும். பள்ளி விட்டு வந்த இரண்டாவது மகளான சிறுமி கேட்பாள், 'அம்மே! விஷக்குந்துண்டு... எந்தெங்கிலும் தின்னான் தா!' என்று. 'அம்மா பசிக்குது, ஏதாவது தின்னத் தா' என்று பொருள். அம்மா சொல்வாள், 'அதோ, அவிட அவல் இருப்புண்டு' என்று. 'பாபநாசம்' என்ன தின்னத் தந்தது என்றெனக்குத் தெரியாது.

ஆக, கேரளத்தில் பள்ளி விட்டு வரும் சிறாருக்கு நான் மேற்சொன்ன அவல் இன்றும் மாலைச் சிற்றுண்டி. பணக்கார வீடுகளில் முறுக்குச் சுட்டு, பெரிய செம்புப் பானைகளில் போட்டு வைத்திருப்பார்கள். ஒரு மாதம் கிடக்கும். நிக்கர் பாக்கெட்டில் இரண்டு திணித்துக் கொண்டு விளையாட வருவார்கள். 'கொதி' போடாமல் இருக்க நமக்கும் சிறு துண்டு கிடைக்கும்.

மாலைச் சிற்றுண்டி, பள்ளி விட்டு வரும் பாலகருக்குச் செய்து தருவது ஒன்றும் மலை மறிக்கும் காரியம் இல்லை. சிறியதோர் திட்டமிடல் வேண்டும், அவ்வளவே! மாலை சுண்டல்

செய்ய வேண்டும் என்றால், முதலில் வீட்டில் கடலையோ, பயிறோ இருக்க வேண்டும். அதனை உரிய காலத்தில் நனையப் போட வேண்டும். குக்கர் இல்லாத, கேஸ் அடுப்பு இல்லாத வீடுண்டா இன்று? தோதுப் போல குக்கரில் வைத்து, பயிறுக்கு ஏற்றபடி விசில் விட வேண்டும். பயிறு வெந்து, குக்கர் ஆறியதும், சீனிச் சட்டியில் ஒரு கரண்டி எண்ணெய் ஊற்றி, கடுகு - கறிவேப்பிலை தாளித்து, அரிந்த வெங்காயம், பச்சை மிளகாய் வதக்கி, வத்தல் மிளகாய் கிள்ளிப் போட்டு, அதில் வேக வைத்த பயிறு போட்டு ஒரு புரட்டுப் புரட்டினால் தீர்ந்தது சோலி. மேலே தேங்காய்த் துருவல் போட்டுக்கொள்ளலாம்.

கொழுக்கட்டை செய்வதற்கு என்ன நேரமாகும்? பச்சரிசியோ, புழுங்கல் அரிசியோ முன்னமே ஊறப் போடுதல் ஒன்றுதானே திட்டமிடல்? அரிசி, உப்பு, தேங்காய், வேறென்ன? உப்புக்கு மாற்றாக வெல்லம் போட்டால் சர்க்கரைக் கொழுக்கட்டை. இவைதானே இடுபொருட்கள்? கொழுக்கட்டையிலேயே இருபது, முப்பது தினுசு என்றால் என்ன இடுக்கண் நமக்கு

> வயல் வேலை, காட்டு வேலை, கட்டிட வேலை நடக்கிற இடங்களில் கவனித்திருப்பீர்கள்... குறைந்தபட்சம் சினிமாக்களிலேனும்! மரக்கிளையில் தொங்கப் போட்ட தூளிகளை...

சிறுவருக்குச் செய்து வழங்க?

நீங்கள் கேட்பீர்கள், 'எல்லாம் சரிதான் ஐயா, அதற்கு பள்ளி விட்டுச் சிறுவர் வரும்போது வீட்டில் பெற்றோர் ஒருவர் இருக்க வேண்டாமா?' என்று. அதுதானே இங்கு பிரச்னையே! இன்றைய வாழ்க்கைச் சூழலில் இருவர் சம்பாத்தியம் இல்லாமல் தீராது. கணவன் அல்லது மனைவியின் பெற்றோர் கூடவே வாழ்வது என்பது எல்லோர்க்கும் வாய்ப்பதில்லை. அக்கம்பக்கத்து வீட்டார் நிலைமையும் நம் நிலைமைதானே! நகரம் என்பது கிராமம் அல்லவே! நமக்கோ கல்யாணக் கடன், வீடு கட்டக் கடன், ஃபிரிட்ஜ்-டி.வி- வாஷிங் மெஷின் கடன், நகைக் கடன், புடவைக் கடன், வாகனம் வாங்கிய கடன் என்று எத்தனை!

பல வீடுகளில் டைனிங் டேபிள்

மேல் பல்வகை உதிரி பிஸ்கெட்கள் கொண்டடின், பிரட், பட்டர், ஜாம், காலையிலேயே போட்டு பிளாஸ்க்கில் ஊற்றி வைக்கப்பட்ட பால் அல்லது பால் பானங்கள். கொஞ்சம் வளர்ந்த பிள்ளைகள் பள்ளி விட்டுத் திரும்பும்போதே அரை லிட்டர் பால் பாக்கெட், பிஸ்கெட் அல்லது பன் வாங்கி வருகின்றனர். டீ போட கற்று வைத்திருக்கின்றனர். அல்லது பலகாரக் கடையிலிருந்து தலைக்கு இரண்டு பப்ஸ் அல்லது சமோசா... நவீன இளைஞர்கள் பணி இடைவேளையில் சில பல பப்ஸ்களைத்தான் மதிய உணவாகக் கொள்கிறார்கள்.

சில வீடுகளில் கைப்பிள்ளைகளை, பாலர் பள்ளி சென்று திரும்பும் குழந்தைகளைக் கவனித்துக்கொள்ள பகற்பொழுதில் ஆயாக்கள் வைத்துக் கொள்வதுண்டு. என் மகள் சில ஆண்டுகளுக்கு முன்பு, பெங்களூரு நாராயணா ஹ்ருதயாலயா மருத்துவமனையில் அனெஸ்தீஸியா எனும் மயக்கவியல் மருத்துவ சிறப்புப் பயிற்சிக்காக ஆறு மாதம் சென்றிருந்தாள். 25 அறுவை சிகிச்சை தியேட்டர்கள் இயங்கும் புகழ்பெற்ற மருத்துவமனை அது. மருத்துவமனையின் அடுக்குமாடிக் குடியிருப்பு சில கிலோமீட்டர் தூரத்திலேயே இருந்தது. மேல் மாடியில் பத்து மாதக் கைக்குழந்தையுடன் மருத்துவர் தம்பதிகள். பகல் முழுக்கக் குழந்தையைப் பராமரிக்க ஆயா உண்டு.

ஒரு நாள் எதிர்பாராமலும் வழக்கத்துக்கு மாறாகவும் பாதி நாளிலேயே பணி முடிந்து, காரில் வீடு திரும்பிக் கொண்டிருந்தார் தாய். சிக்னலில் கார் நின்றபோது, கைப்பிள்ளையை வைத்து ஒரு பெண் யாசகம் வாங்கிக் கொண்டிருந்தாள். தாய் நினைத்துக் கொண்டாள், நம் பிள்ளையின் பிராயம் இருக்கும் என.

வீட்டுக்கு வந்தால் வீட்டில் குழந்தை இல்லை. ஆயா பதறிப் பதறிப் பேசினாள். ஆயாவையும் கூட்டிக் கொண்டு, சிக்னலுக்குத் திரும்பிப் போய் குழந்தையை மீட்டு வந்தார் தாய். குழந்தை வாடகைக்கு விடப்பட்டிருந்தது. எல்லா வேலைக்காரிகளும் ஆயாவும் அப்படித்தான் என்று சொல்ல வரவில்லை. ஆனால் இப்படியும் நடக்கிறது.

வயல் வேலை, காட்டு வேலை, கட்டிட வேலை நடக்கிற இடங்களில் கவனித்திருப்பீர்கள்... குறைந்தபட்சம் சினிமாக்களிலேனும்! மரக்கிளையில் தொங்கப் போட்ட தூளிகளை... உறங்கும் பிள்ளை கண் விழித்து அழுதால், ஓடிப்போய் வாரி எடுத்து பால் கொடுக்கும் தாய்மாரை. அலுவலகம் போகும் பெண்களுக்கு

இந்த வசதிகள் இல்லை. நர்சரிக்குப் போகும் பாலகரை எவர் கவனிப்பது?

மேயப் போயிருக்கும் கறவை மாடுகளின் கன்றுகள் காத்துக் கிடக்கும் தத்தம் தாய்ப்பசுக்களின் வரவு பார்த்து. மாணிக்கவாசகர் பேசுகிறார், 'நன்றே வருகுவர் நம் தாயர்' என்று. கவனிக்க வேண்டிய பாவம், நம் தாயர் என்பது. அவரே மற்றோர் பாடலில், 'கற்றாவின் மனம் போலக் கசிந்து உருக வேண்டுவனே!' என்கிறார். கன்றினை உடைய தாய்ப்பசுவின் மனம் தனது கன்றுக்காகக் கசிந்து உருகும். மடிக் காம்புகள் விடைத்துப் பால் சொட்டி நிற்க. 'அதைப் போல நானும் உருகுகிறேன்' என்றார்.

அது தாய் மனம். காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு. ஆனால், சமகாலத் தாய்மாரின் போராட்டம், நெருக்கடி, சூழல் பலவிதம். என்ன தான் செய்வார்கள் பாவம்! அதைப் பயன்படுத்திக் கொண்டார்கள் பன்னாட்டு, இந்நாட்டு முதலாளிகள். அவர்களின் செல்வாக்குடைய அரசியல் தரகர்கள். பல வீடுகளில் இரவு உணவே இரண்டு நிமிட நூடுல்ஸ் என்றாயிற்று.

நமது ஊறுகாய் ஓராண்டு இருந்தாலும் புழு வருவதில்லை. அதி நவீன முறையில், கைபடாமல் தயாரிக்கப்பட்டு, சீல் வைக்கப்படும் பழரசத்திலும் பழக்கூழிலும் பழ அடையிலும் எப்படிப் புழு வருகிறது?

நான்காண்டுகள் முன்பு 58 நாட்கள் அமெரிக்க ஐக்கிய நாடுகளில், பல மாநிலங்களில் நண்பர்களுடன் தங்கி இருந்தேன். வட கரோலினா மாநிலத்து சார்லெட் நகரில் என் மகனுடன் இரண்டு தவணையாக எட்டு நாட்கள் இருந்தேன். ஒரு நாள் படேல் பிரதர்ஸ் என்ற சங்கிலித் தொடர் பல்பொருள் அங்காடிக்குக் கூட்டிப் போனான். குஜராத்திகள் கடை. தயார் நிலை உணவுப் பிரிவில் பிளாஸ்டிக் டப்பாக்களில் அடைக்கப்பட்டிருந்த மினி இட்லி - சாம்பார், ஆப்பம் - கடலை, மசால் தோசை, சப்பாத்தி - குருமா, பூரி மசாலா, டோக்ளா, தயிர்வடை, மீன்கறியும் சோறும், கோழிக் குழம்பும் சோறும், பொங்கல் - உளுந்த வடை... காண எனக்கு ஆயாசமாக இருந்தது. இந்தியாவில் எங்கோ, எப்போதோ தயாரிக்கப்

பட்டு, சீல் செய்யப்பட்டு, உறைய வைக்கப்பட்டு, கப்பல் மூலமோ சரக்கு விமானம் மூலமோ 18,000 மைல்கள் கடந்து வந்து அங்காடியில் காத்துக் கிடந்தன. வாங்கிச் சென்று அவனில் சூடாக்கித் தின்பார்கள்.

மும்பையில் புறநகர் ரயில் நிலையங்களின் வெளிப்புறத்துக் கடைகளில் - விக்ரோலி, முலுண்ட், டோம்பிவிலி, கோரேகாவ், போரிவிலி என எந்த ஸ்டேஷன் ஆனாலும் – உணவுக் கடைகளும் இருக்கும். பணி முடிந்து வீடு திரும்புவோர் வாங்கிச் செல்ல என! செய்து, தயார் நிலையில் சப்பாத்தி (மராத்தியர் அதனை 'போளி' என்பார்கள்), சப்ஜி வகைகள், பருப்பு, சோறு என்று.

வீட்டு உறுப்பினர்களின் தலை எண்ணி, சாப்பாட்டுத் திறன் கருதி, சப்பாத்தி, சப்ஜியாக பெண்டி (வெண்டை), கரேலா (பாகல்), வாங்கி (கத்தரி), தால் (பருப்பு), சாவல் (சோறு) வாங்கிக் கொண்டு வீட்டுக்கு நடப்பார்கள். சூடாகவும் சுகாதாரமாகவும் சுவையாகவும் இருக்கும். எனக்குத் தெரிந்து, நடைபாதைக் கடைகளின் உணவுத்தரம் மும்பையில் உயர்வாக இருக்கும். ஆனால், அதுவல்ல இந்த *Frozen Food* சமாச்சாரம்.

புகழ்பெற்ற நிறுவனங்களின் பால் தயாரிப்புகளில் புழு இருக்கிறது என்கிறார்கள். புலம்பிப் பயனில்லை. *Junk Food*க்கு எதிரான மனோபாவம் வளர்த்துப் பழக வேண்டும். குறிப்பாகக் குழந்தை உணவு எனும்போது. நமது நாரத்தங்காய் ஊறுகாய், ஆவக்காய் ஊறுகாய் ஓராண்டு இருந்தாலும் புழு வருவதில்லை. மலையாளிகள் பருவ காலத்தில் செய்து வைக்கும் பலாப்பழ வறட்டியில் வருவதில்லை. பாரம்பரிய வற்றல், வடகம், காணப் பொடி, பருப்புப் பொடி, தவணைப் புளி, வேப்பிலைக் கட்டியில் வருவதில்லை.

அதி நவீன முறையில், காற்றுப் புகாமல், கைபடாமல் தயாரிக்கப்பட்டு, சீல் வைக்கப்படும் பழரசத்திலும் பழக்கூழிலும் பழ அடையிலும் எப்படிப் புழு வருகிறது? வண்ணப் பெட்டிகளில் அடைக்கப்பட்ட பழச்சாறுகளை, கண்ணால் பார்க்காமல் ஸ்ட்ரா போட்டு உறிஞ்சுகின்றனர் சிறுவர்கள்... மனிதன் உண்ணத் தகுதியற்ற விதவிதமான வேதியியல் பொருட்களின் சேர்மானம் வேறு.

எப்படிக் காப்பாற்றப் போகிறோம் நமது குழந்தைகளை, இம்மாபாவிகளின் பேராசைக் கரங்களில் இருந்து? ஆண்டுக்கு ஒரு தரம் புத்தாடை வாங்கிக் கொடுத்து, பலூன்கள் ஊதிக்

கட்டித் தொங்கவிட்டு, மூவாயிரம் பணத்துக்கு கேக் வாங்கி, மெழுகுத் திரி ஏற்றி, ஊதி அணைத்து, 'ஹேப்பி பர்த்டே டு யூ' எனக் கூவிப் பாடினால் போதுமா?

எல்லாக் குழந்தைகளும் ஐந்தரை அடிதான் வளரும். 'எமது ஊட்ட பானம் நாளுக்கு இருமுறை பருகினால் ஏழே காலடி வளரலாம்' என்பதை நம்பினால் தீர்ந்ததா கடமை? எங்கள் பற்பசைக்குக் கிருமிகள் அண்டாது என்றால், ஏன் இத்தனை பல் மருத்துவக் கல்லூரிகளும் பல் ஆஸ்பத்திரிகளும்?

எல்லாக் குழந்தைகளும் ஐந்தரை அடிதான் வளரும், 'எமது ஊட்ட பானம் நாளுக்கு இருமுறை பருகினால் ஏழே காலடி வளரலாம்' என்பதை நம்பினால் தீர்ந்ததா கடமை?

மூதாதையர் சொன்னதை நம்ப மாட்டோம். ஆனால், நூற்றுக்கணக்கான கோடிகள் செலவில் விளம்பரம் செய்யும் கொலைச் சுறாக்களைக் கண்மூடித்தனமாக நம்பிக் கட்டுப்பட்டு நடப்போம். அவர்கள் சொல்லும் பற்பசை தேய்க்கும் சிறுவரை, பல்லால் ஒரு கரும்பைக் கடித்துத் தின்னச் சொல்லுங்கள் பார்ப்போம்!

சற்று விவரமுள்ள பள்ளிகளில், குழந்தைகள் *Junk Food* எடுத்துவர அனுமதி இல்லை. அறியாமை காரணமாக, நடுத்தர வர்க்கத்துப் பெற்றோர் ஒன்று வாங்கினால் ஒன்று இலவசம் பார்த்துப் பரவசமடைகிறார்கள். இலவசமாகக் கிடைக்கிறது என்றால் விஷம் வாங்கித் தின்போமா?

பள்ளிக்கூட வாசலில் விற்கப்படும் எளிய பண்டங்கள் வாங்கித் தின்றால் நோய் வரும், ஆனால் நேரடியாகவே புழு மிதக்கும் பானங்கள் பருகலாம்! *Ready to eat* உணவுப் பண்டங்களில் இத்தனை சுகாதாரக் கட்டுப்பாடுகள், தர வரைமுறைகள் என்றால், மருந்துக் கடைகளில் ஏன் ஆயிரம் தினுசுகளில் மாத்திரைகள்?

குறைந்தபட்சம், 'பணம் என்ற ஒன்றை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு நஞ்சு விற்கும் முதலாளிகளால் நாம் வஞ்சிக்கப்படுகிறோம்' என்பதையாவது மனதில் கொள்ளுங்கள் பெற்றோரே! அறத்தின் பகைவர்களிடம் ஏமாறாதீர்கள்!

**- கற்போம்...**

# கைம்மண் அளவு

எமது பள்ளிப்பருவம் என்பது 1953 முதல் 1964 வரை. பதினோரு வகுப்புகள். பதினோராம் வகுப்பை அன்று 'ஸ்கூல் ஃபைனல்' என்பார்கள். எம் காலத்தில் பால்வாடி எனப்படும் பாலர் பள்ளி, ப்ரீ கே.ஜி, எல்.கே.ஜி, யு.கே.ஜி என்பன இல்லை. ஆங்கில A, B, C, D வரிசை எழுத்துக்கள் அறிமுகம் ஆனது ஐந்தாம் வகுப்பில். இறுதி மூன்று வருடங்கள் இந்தியும் பயின்றோம். இந்தியில் தேர்ச்சி கட்டாயம் இல்லை என்றாலும், தேர்வு எழுத வேண்டும். இந்தியிலும் நாங்கள் சிலர் தேர்ச்சி அடைந்தோம். இந்தி எதிர்ப்பு போராட்ட காலத்துக்கு முந்திய காலகட்டம் அது. இந்தி கற்றமைக்காக என்றும் நான் வருத்தப்பட்டதில்லை.

நாஞ்சில் நாடன் | ஓவியம்: மருது



இன்று ப்ரீ கே.ஜி முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை மாணவர் ஆங்கில வழியிலும் தமிழ் வழியிலும் கல்வி பெறுகிறார்கள், 15 ஆண்டுகள். இன்று அவர்கள் மொழித்திறன் பற்றி யோசிக்கும்போது மகிழ்ச்சியாக இல்லை. சரியான உச்சரிப்பு வழிகாட்டுதல் இன்றி, WORLD என்ற சொல்லை நாங்கள் 'வொரல்டு' என்று வாசித்தாலும், எழுதும் போது எம்மிடம் இலக்கணப் பிழை இருந்ததில்லை. ஐந்தும் மூன்றும் எட்டு என்று கூட்ட கால்குலேட்டர் பயன்படுத்தவில்லை. *He* என்ற சொல்லுக்கு *spell check* பயன்படுத்தவில்லை.

பள்ளி வகுப்பு மணி அடிக்கும் முன் எண்சுவடி வாய்ப்பாடு மனப்பாடம். ஆத்திச்சூடி, கொன்றை வேந்தன் மனப்பாடம்...

என்றும் எமக்குக் கல்வி சுமையாக இருந்ததில்லை. எமது கவலை எல்லாம் பசி, பாடப் புத்தகங்கள் வாங்குவது. 'ஸ்கூல் டே' கொண்டாட்டத்துக்கு எட்டணா கொடுக்க இயலாமல், அந்த தினத்தில் பள்ளிக்குப் போகாமல் இருந்ததுண்டு. இன்று சில மாணாக்கருக்கு அதிக மதிப்பெண் வாங்குவதற்கு தமிழ் படிப்பது சிரமமாக இருக்கிறதாம். தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவருக்கு இலக்கணம், செய்யுள், மனப்பாடப்பகுதி, துணைப்பாடம் என்பன தாங்கொணாச் சுமைகள். பத்தாம் வகுப்பு வரை மொழிப் பாடத்தில் தமிழ் கற்றவர், பதினொன்றாம் வகுப்பில் பிரெஞ்சு, ஜெர்மன், இந்தி, சமஸ்கிருதம் எடுத்துக்கொள்கிறார்கள்.

'அம்மொழிகள் பயில எளிதானவை' என்று எவரேனும் சொன்னால், அது அம்மொழிகளுக்கு நாம் செய்யும் அவமரியாதை. வான்மீகியும் வியாசனும் காளிதாசனும் பர்த்ருஹரியும் துளசிதாசும் கபீரும் பிரேம் சந்தும் புழங்கிய மொழிகள் எளிமையானவையா? தமிழுக்கு மாற்றாக மாற்றுமொழிகள் எடுத்துப் பயிலும் மாணவர் தம் மொழியறிவை எவரும் சோதித்துப் பார்ப்பீரா? நன்றாக பிரெஞ்சு எழுதவும் வாசிக்கவும் போதிக்கவும் தெரிந்த, பிரெஞ்சு இலக்கியங்கள் பயின்ற பாண்டிச்சேரி பேராசிரியர் ஒருவரிடம் கேட்டேன், "ஐயா! தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட தமிழ்க் குழந்தைகள் பிரெஞ்சை மொழிப் பாடமாக எடுத்துப் பயிலும்போது, அவர்கள் மொழியாற்றல் எங்ஙனம் உளது?' என்று. அவர் உடனே பேச்சை மாற்றிவிட்டார்.

தமிழைத் தாய்மொழியா



**பிரெஞ்சு அல்லது சமஸ்கிருதம் பயிலும் தமிழ் மாணவர் அம்மொழிகளை எவரிடம் பேசிப் பழகுவார்கள்? மொழி கைவரப் பெறுவது என்பது பேசியும் எழுதியும் பயில்வது மூலம்தானே!**

கக் கொள்ளாத மாணவர் பற்றி இங்கு நான் விவாதிக்கப் போவதில்லை. தமிழனுக்கேயான இந்தத் தனிக்குணம் பற்றித்தான் என் கவலை. கற்றுக் கொள்ள எளிதாக இருக்கிறது என்றும் மதிப்பெண் வாங்கச் சுளுவாக இருக்கிறதென்றும் எந்த குஜராத்தி, ராஜஸ்தானி, மராத்தி, வங்காளி, பஞ்சாபி மாணவனும் பிரெஞ்சு கற்பதில்லை. தமிழனுக்கு ஏன் தாய்மொழி கற்க இத்தனை கடுப்பாக இருக்கிறது? பள்ளி விழாக்களில் பங்கேற்றபோது இதை நேரடியாகவே கேட்டிருக்கிறேன். பிள்ளைகள் அனைவரும் சொன்ன ஒரே பதில், 'அப்பாவைத்தான் கேட்கணும்!'

தாய்மொழியை வெறுக்கும் அல்லது புறக்கணிக்கும் உலகத்து இனம் தமிழினமாகவே இருக்கும் போலும். நான்கு ஆண்டுகளுக்கு முன்பு, வாஷிங்டனில் தமிழ் பயிற்றுவிக்கும் பள்ளிகளின் விழா ஒன்றில் பங்கேற்றேன். நண்பர் நிர்மல் பிச்சையா, பால்டிமோர் நண்பர் வேல்முருகன் ஏற்பாடு. தமிழ்த் தம்பதியர் ஒருவரிடமிருந்து எனக்கு வந்த கேள்வி, 'நாங்கள் எதற்காக எங்கள் குழந்தைகளுக்கு தமிழ் கற்றுத் தர வேண்டும்?' ஆத்திரத்துடன் சொன்னேன், 'தமிழ் கற்றுக்கொள்ள எங்கள் நாட்டில் எட்டுக்கோடித் தமிழர்களின் பிள்ளைகள் இருக்கிறார்கள். அவர்கள் மொழியைக் காப்பாற்றுவார்கள். ஆனால் ஒன்று எனக்குப் புரியவில்லை. டாலர் சம்பாதிக்க வந்த நீங்கள், தமிழ் கற்றுக் கொள்வதை சுமை என்று கருதும் நீங்கள், வீணான வேலை என்று எண்ணும் நீங்

கள், பதினெட்டாயிரம் மைல்கள் தாண்டி வந்தும் எதற்கு தீபாவளியும் வரலட்சுமி நோன்பும் கொண்டாடுகிறீர்கள்? உங்கள் தெய்வங்களை அங்கேயே நிம்மதியாகப் பொங்கலோ, அக்கார வடிசிலோ, சுண்டலோ, வடையோ தின்றுகொண்டு இருக்க விடாமல் இங்கே தூக்கி வந்து அலைக்கழிக்கிறீர்கள்? அவர்களுக்கும் பர்கர் மற்றும் கோக் கொடுக்கலாம்தானே!'

இங்கே நின்று யோசித்தால் நிலைமை இவ்வாறு உள்ளது. எனக்குத் தோன்றும்... பிரெஞ்சு அல்லது சமஸ்கிருதம் பயிலும் தமிழ் மாணவர் அம்மொழிகளை எவரிடம் பேசிப் பழகுவார்கள்? மொழி கைவரப்பெறுவது என்பது பேசியும் எழுதியும் பயில்வது மூலம்தானே! சரளமாகப் பேச முடியாமல், எழுத முடியாமல், ஒரு மொழி பயின்று என்ன பயன்? இவர்கள் பயிலும் வேற்று மொழி எந்த வகையில் இவர்களுக்கு எதிர்காலத்தில் உதவும்? படிக்கிறவர்களில் காலே அரைக்கால் சதமானமேனும் பிரான்ஸ் போவார்களா? அங்கு போனாலும், இவர்கள் பேசும் பிரெஞ்சு, பிரஞ்சுக்காரனுக்குப் புரியுமா? சமஸ்கிருதத்தை எவரிடம் போய்ப் பேசுவார்கள் இந்தியாவில்? மொழி கற்பது என்பது அணில், ஆடு, படம், பம்பரம் என்று சில நூறு சொற்களைத் தெரிந்து கொள்வதா?

தமிழில் இலக்கணம், செய்யுள், கட்டுரை என்று கற்க ஆயாசப்படுகிறார்கள். பிறமொழிப் பாடங்களில் இவை ஏதும் இருக்காதா? ஒருவேளை பன்னிரண்டாம் வகுப்பு மாணவன் இரண்டாம் வகுப்புத் தரத்தில் பிறமொழி கற்பானோ?

பிறமொழிகள் கற்றால் மதிப்பெண்கள் வாங்குவது எளிது என்கிறார்கள்! எனில் தமிழில் பன்னிரண்டாம் வகுப்பு பயிலும் மாணவர்கள் தங்கள் தேர்வுகளில் 'அணில், ஆடு' என்றும், 'அம்மா இங்கே வா வா! ஆசை முத்தம் தா தா!' என்றும் எழுதி நூற்றுக்கு நூறு வாங்கி விடலாமே!

இந்த மதிப்பெண் வாங்குவது என்பது என்ன? இந்தக் கட்டுரையை எழுதிக் கொண்டிருப்பவன் பள்ளியில் முதலிடம் பதினொன்றாம் வகுப்பில். மதிப்பெண்கள் அறுநூறுக்கு நானூற்று ஆறு. தமிழில் நூற்றுக்கு அறுபத்தி நான்கு. ஆரோக்கியம் என்பது கண்டதையும் தின்று, குடித்து உடம்பை ஊதிப் பெருக்கிக்கொள்வதா?

மாநிலத்தில், மாவட்டத்தில், பள்ளியில் முதல் மதிப்பெண் எடுப்பது எந்தப் பெற்றோ



ருக்கும் கர்வம் தரும் செயல்தான். முதலமைச்சர் கையில், மாவட்ட ஆட்சியர் கையில் சான்றிதழ் பெறலாம். நாளிதழ்களில் படத்துடன் செய்தி வரும். பள்ளிச் சுவரில் புகைப்படம் மாட்டி வைப்பார்கள். அக்கம் பக்கத்தில், உறவில் பெருமையும் பீற்றிக் கொள்ளலாம். இந்தியாவில் பல பல்கலைக்கழகங்களில் மூன்றாண்டு, ஐந்தாண்டு பயின்று முனைவர் பட்டம்

**இடியாப்பம் அல்லது சேவை அல்லது சந்தகை அல்லது நூல்புட்டு செய்து தின்பது சிரமமான காரியம்; எனவே நமக்கு நூடுல்ஸ் போதும் என்பது போலவா மொழிக் கல்வியும்?**

பெறுவதுண்டு. சில லெட்டர் ஹெட் பல்கலைக்கழகங்களில் காசு கொடுத்தால் பிஹெச்.டி. தருவார்கள். எதை விரும்புவோம் நாம்?

நாளிதழ்களில் தேர்வு விகிதமும் முதல் இடமும் என்றெல்லாம் விளம்பரம் கொடுப்பதற்காக, பள்ளி நிர்வாகமே பிரெஞ்சு எடுப்பதை ஊக்குவிக்கிறார்களாம். மொழிப்பாடத்தின் மதிப்பெண் பொறியியல் கல்வி, மருத்துவக் கல்வி, விவசாயக் கல்வி என எதற்கும் கருதப்படாமற் போகும்போது பிரெஞ்சும் ஜெர்மனும் பயின்று ஆகப் போவதென்ன?

ஒருவேளை தமிழ் மொழிப் பாடமாக எடுத்துப் படிக்கும் மாணவர் அனைவருக்கும் பிற பாடங்களில் 25 போனஸ் மதிப்பெண்கள் என்று அரசாங்கம் அறிவிக்குமேயானால், மாற்று மொழி ஆசிரியர்கள் பிழைப்பற்றுப் போய்விடுவார்கள்.

கோவையில் இருபது சதமானம் மாணவர் தாய்மொழியாக மலையாளம் கொண்டவர்கள். “மொழிப்பாடமாக மலையாளம் பயில வாய்ப்பு இருந்தும் அவர்கள் தமிழே எடுக்கிறார்கள், திறமையுடன் கற்கிறார்கள்”

என்கிறார் பள்ளித் தலைமை ஆசிரியராக இருந்து ஓய்வு பெற்ற பாவலர் இரணியன். அவர்களில் இந்து, இஸ்லாமியர், கிறிஸ்துவர் என்று பேதம் இல்லை. தெலுங்கைத் தாய்மொழியாகக் கொண்ட அனைத்து மாணவர்களும் மொழிப்பாடத்தில் தமிழே எடுக்கிறார்கள். தெலுங்கு பேசும் ஒரு வைணவர் சொன்னார், "தமிழ் கற்றால் தானே எம்பிள்ளைகள் நாலாயிரத் திவ்யப் பிரபந்தம் வாசிக்க இயலும்" என்று.

ஆனால், 'தமிழ் எங்கள் மூச்சு', 'ஏப்பக் காற்று' என முழங்கும் தமிழன், தன் பிள்ளைகள் தமிழ் கற்கச் சிரமப்படுகிறார்கள் என்கிறான். எனக்கு அந்த மாணாக்கரை நினைத்தால் கவலையாக இருக்கிறது. கோழிச் சண்டைக்கு என்றே வளர்க்கப்படும் சேவல்கள் போல, மதிப்பெண்கள் போட்டிக்கு என்றே இவர்கள் வளர்க்கப்படுகிறார்களா?

தமிழ்நாட்டின் பல கிராமங்களில் பள்ளி செல்லும் மாணவர் போகவும் வரவும் தினமும் ஐந்து கிலோமீட்டர் நடக்கிறார்கள். அல்லது முக்கால் மணி நேரம் அரசுப் பேருந்துக்கு காத்து நிற்கிறார்கள். வீட்டுக்குப் போனால் பெற்றோருக்கு வீட்டு வேலையில், காட்டு வேலையில் உதவி செய்கிறார்கள். அவர்களுக்குத் தமிழ் பயிலக் கடினமாக இல்லை; நேரமும் இருக்கிறது. ஆனால், பள்ளி வாகனத்தில் பயணிக்கும், அல்லது பெற்றோரால் வாகனங்களில் பள்ளி வாசல்களில் கொண்டு இறக்கப்படும் மாணவருக்கு நேரம் கிடைக்கமாட்டேன் என்கிறது.

ஒரு நாள் நடைப் பயிற்சியின் போது கவனித்தேன். காரை டிரைவர் ஓட்டுகிறார். பின் சீட்டில் தாய் அமர்ந்து பத்தோ பதினொன்றோ படிக்கும் தன் மகளுக்கு காலை உணவு ஊட்டிக் கொண்டும் வாயைத் துடைத்துக் கொண்டும் போகிறார். மாணவி மடியில் பாடப் புத்தகம் இருக்கிறது! காலையில் எதுவும் உண்ணாமல், பள்ளியில் சத்துணவு வாங்கித் தின்னும் பெரும்படை ஒன்றிருக்கிறது இங்கே!

சென்னை, வேலூர், சேலம், ஈரோடு, கோவை, மதுரை, திருப்பூர், திருநெல்வேலி போன்ற முதன்மை நகரங்களில் வாசிக்கும் மாணவருக்கு மாற்று மொழி ஒன்று உளது மதிப்பெண் வாங்க. நாட்டுப்புறத்து நலிந்த மாணவருக்கு எத்தனை கடினமாக இருந்தாலும் தமிழை மட்டுமே கற்க இயலும். இதில் ஒரு அநீதி உள்ளது என்பது புலப்படவில்லையா?



**கடினமாக இருக்கிறது என்பதற்காக இட்லியை மிக்சியில் அரைத்துத் தின்பார் போலும்!**

தமிழுக்கு என்று முறை வாசல் தெளிப்பது போன்ற மாநாடுகள் நடத்துகின்ற, மூன்றாம் தரத்து அறிஞர்களையும் படைப்பாளிகளையும் வெளிநாட்டுக்கு அனுப்புகின்ற, அரசாங்கக் கட்டிடங்களில் பெரிய எழுத்துக்களில் 'தமிள் வாள்க' என்று எழுதி வைக்கும் அரசுகளுக்கு உண்மையில் மொழி மீது ஏதும் கரிசனம் உண்டா?

மராத்திய மாநிலத்தில் லட்சக்கணக்கான தமிழர்கள் வாழ்கிறார்கள். மராத்தி மொழிப் பாடம் பயில்வது அங்கு தவிர்க்க இயலாதது. சின்னஞ் சிறு நகரங்களிலும் விடுமுறை நாட்களில் அவர்கள் தம் குழந்தைகளுக்குத் தமிழ் கற்பிக்கிறார்கள். புவனேஷ்வர் நகரில் ஒடியா மொழியில் பயிலும் தமிழ்ப் பிள்ளைகள், தமிழ்ச்சங்கத்தில் ஞாயிறுதோறும் தமிழ் பயிலுவதை நானே பார்த்தேன். தமிழனுக்கு மட்டுமே தாய்மொழித் தரித்திரியம். மலையாளத்தில் ஒரு பழமொழி உண்டு. 'தாரித்ரியம் கொண்டு கிடக்கானும் பாடில்லா, தான மானம் கொண்டு நடக்கானும் பாடில்லா' என்று.

நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக இருக்கும். நான் பம்பாயில் வாழ்ந்த நேரம். ஆப்ரிக்கக் கண்டத்து நெட்டா நகரிலிருந்து நாயுடு என்றொரு பெரியவர் வருவார் இந்தியாவுக்கு. என்றோ கரும்புத் தோட்டங்களுக்குக் கூலி வேலைக்குப் போன தமிழரின் சந்ததியினரான 300 குடும்பத்துக் குழந்தைகளுக்கு தமிழ் கற்றுத் தர பாடப்புத்தகங்கள் அச்சடித்துக் கொண்டு போக! நாயுடுவின் குழந்தைகள் வளமான வாழ்க்கை வாழ்வதனால், தனது சொந்த சேமிப்பை அதற்குச் செலவிடுகிறார். அப்படியும் ஒரு மனிதர்!

நம் நாட்டில் வசதியாக வாழ்கிறவர் பிள்ளைகளுக்கு ஒரு நீதி, அன்றாடங்காய்ச்சிகளின் பிள்ளைகளுக்கு இன்னொரு நீதி! ஒன்று வழிபடப்படும் தெய்வச் சிலையாகப் போகும் கல்பாளம், மற்றொன்று வாசல் படியாகக் கிடக்கப் போகும் கல்பாளமா? இடியாப்பம் அல்லது சேவை அல்லது சந்தகை அல்லது நூல்புட்டு செய்து தின்பது சிரமமான காரியம்; எனவே நமக்கு நூடுல்ஸ் போதும் என்பது போலவா மொழிக் கல்வியும்?

எது கடினமானது இல்லை வாழ்க்கையில்? நாளை பார்க்கப்போகிற வேலை, '*Cake Walk*' என்று சொல்வார்களே ஆங்கிலத்தில், அதுபோல எளிதானதா? சிறந்த மருத்துவராக, பொறியியலாளராக, ஓவியராக, இசைக்கலைஞராக இருப்பது என்பது எளிதானதா? விளையாட்டு வீரனாவது எளிதானதா? ஐ.ஏ.எஸ் அல்லது ஐ.பி.எஸ் தேர்வுகளில் வெல்வது எளிதானதா? எளிதில்லை என்பதால் முயற்சி செய்ய மாட்டீர்களா? எளிதானதைத் தேர்ந்தெடுத்துக் கொள்வீர்களா?

தமிழ்நாட்டில், சென்ற ஆண்டில் எட்டே கால் லட்சம் பேர் பன்னிரண்டாம் வகுப்புத் தேர்வு எழுதினார்கள். அவருள் ஐந்தரை லட்சம் மாணாக்கர் தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு கற்றவர். இரண்டே முக்கால் லட்சம் பேர் ஆங்கில வழிக்கல்வி. இந்தப் பிள்ளைகளில் சிலருக்கு மட்டும் தமிழ் கற்பது கடினமாக இருக்கிறது, தாய்மொழி தமிழே என்றாலும். ஏனெனில் அவர்கள் வசதியானவர் வீட்டுப் பிள்ளைகள்! நகர்மயப்பட்டவர் பிள்ளைகள்! பெற்றோர் பலர் அரசு ஊழியம், வங்கி ஊழியம், உயர்ந்த தனியார் நிறுவன ஊழியம் என மேல்நிலை ஆக்கம் பெற்றவர். அவருக்குத் தமிழ் கடினமாகத் தானே இருக்கும்?

கடினமாக இருக்கிறது என்பதற்காக இட்லியை மிக்சியில் அரைத்துத் தின்பார் போலும்!

ஈழத்துப் புலவன் பண்டிதர் சச்சிதானந்தம் பாடினார், 'சாவில் தமிழ் படித்துச் சாக வேண்டும் – என் சாம்பல் தமிழ் மணந்து வேக வேண்டும், ஓடையிலே என் சாம்பல் கரையும் போது – ஒண் தமிழே நீ சலசலத்து ஓட வேண்டும்' என்று. இப்பாடலில் தமிழ் என்பதற்கு மாற்றாக பிரெஞ்சு, ஜெர்மன், இந்தி, சமஸ்கிருதம் என்று மாற்றிப் போட்டுப் பாடிப் பாருங்கள் தமிழன்மாரே!

**– கற்போம்...**

# கைம்மண் அளவு

**நாஞ்சில் நாடன்**

ஓவியம்: மருது

யாவர்க்குமே பள்ளிப்பருவம் என்பது முன்பு காணக் கிடைத்த, இன்று காணாமற் போன உதகமண்டலத்துப் புல் வெளிகள் போலப் பசுமையானவை. அது குடியரசுத் தலைவராக இருந்தாலும் சரி, தேநீர்க் கடை வாசலில் ஒரு சாயா யாசகம் கேட்டு நிற்கும் பரதேசியாக இருந்தாலும் சரி, காலம் கொள்ளை கொண்டு போக இயலாத பெருஞ் செல்வம் பால்ய காலம். பள்ளிகளின் அன்றாட வாழ்க்கையைத் தாண்டி, ஆண்டு விழாக்கள் கொண்டாடுவது அன்றும் இன்றும் இயல்பு.



பள்ளி வாழ்க்கை எனக்கு மூன்று ஊர்களில் நடந்தது. அதன் பொருள் எமது அப்பா ஊர் ஊராக மாற்றலாகிப் போனார் என்பதல்ல. ஒரே ஊரில்தான், தனது 55 வயது வரை விவசாயக் கூலியாக வாழ்ந்து மாண்டார். உள்ளூர் வீரநாராயண மங்கலத்தில் ஆற்றங்கரை ஆலமரம் முன்பிருந்த ஆரம்பப் பள்ளியில் ஐந்தாம் வகுப்பு வரையே இருந்தது. அடுத்து எட்டாம் வகுப்பு வரையே இருந்த நடுநிலைப் பள்ளி, 2 கி.மீ தூரத்தில் இறச்சகுளம் கிராமத்தில், குன்றின் அடிவாரத்தில் தாமரை பூத்த தடாகத்தின் பக்கம். உயர்நிலைப் பள்ளியோ, ஊருக்குக் கிழக்கே இரண்டு கிலோமீட்டரில். நாச்சியார் புதுக்குளம் என்று அல்லியும் ஆம்பலும் பூத்த பெரிய குளம் தாண்டி தாழக்குடியில். எப்படிப் பள்ளிக்குப் போவோம் என்று கேட்பீர்களேயானால் கால் நடையாகத்தான். இங்கு 'கால்நடை' என்று சேர்த்து எழுதினால் கன்றுகாலிகள் என்று பொருள். நான் உயர்நிலைப் பள்ளியில் வாசித்துக் கொண்டிருந்தபோது காமராசர் கால் நடையாகப் போனார் என்ற செய்தியை மாற்று அணி நாளிதழ் ஒன்று, 'காமராசர் கால்நடையாகப் போனார்' என்று எழுதியது. அது தமிழ் தெரியாத காரணத்தால் அல்ல.

சிறு பிராயத்தின் ஒவ்வொரு வகுப்புக் கல்வியும் துல்லியமாக நினைவில் இருக்கிறது. ஆரம்பப் பள்ளியில் ஆண்டு விழா கொண்டாடிய நினைவில்லை. எட்டாம் வகுப்பில் வாசித்தபோது கொண்டாடியது நினைவில் உள்ளது. அன்றுதான் விளையாட்டுப் போட்டிகளுக்கும் பேச்சு மற்றும் கட்டுரைப் போட்டிகளுக்கும், முதல் மதிப்பெண்ணுக்கும் பரிசுகள் தருவார்கள். பரிசு என்றால், சான்றிதழ்கூட கிடையாது. பென்சில், சோப்பு டப்பா, கேமல் கம்பெனியின் ஊற்றுப் பேனா என்பன. அன்று கலை நிகழ்ச்சிகள் நடக்கும், பாட்டு, நாட்டியம், மாறுவேடம் மற்றும் ஓரங்க நாடகங்கள். பாடத் தெரிந்தவர் பாடுவார்கள். ஆட்டம் என்பது பெரும்பாலும் குறவன், குறத்தி ஆட்டம். மாறுவேடப் போட்டியில் காந்தித் தாத்தா, பாரதியார், தொழுநோயாளி, பிச்சைக்காரன். போட்டிகளில் பங்கேற்போர் பொருட்செலவு செய்து ஆடை அணிகள் வாங்கி அல்லது வாடகைக்கு எடுத்து வேடமிடும் வசதி இல்லாதவர்கள். எனவே, பிச்சைக்காரர்களே அதிகமாக வருவார்கள். அன்று முதலீடு இல்லாத தொழில் பிச்சை கேட்பது.

எட்டாவது படிக்கும்போது நாங்கள் ஒரு சின்ன நாடகம்

தயாரித்தோம். சேரன் செங்குட்டுவன். கனக விசயர் தலையில் கல் ஏற்றி, ஏர் மாடுகளை ஓட்டி வருவதைப் போல் அவர்களை செங்குட்டுவன் ஓட்டி வருவான். எவர் எழுதியது என்று நினைவில் இல்லை. ஒரு வேளை எங்கள் எட்டாம் வகுப்புத் தமிழாசிரியர் அருணாசலம் பிள்ளை - அவர் தான் எங்கள் நாடகத்தின் டைரக்‌ஷன், மேக்கப், பேக்கிரவுண்ட் மியூசிக், சீனடிப்பவர் எல்லாமும் - எழுதியிருக்கக் கூடும்.

அன்று பிற நிகழ்ச்சிகள் நடந்தேற, நேரம் போய்விட்டது. எங்கள் நாடகமும் பரிசளிப்புமே பாக்கி. பரிசை முன்னால் கொடுத்துவிட்டால் மாணவரும் பெற்றோரும் போய் விடுவார்கள் என்று தலைமையாசிரியர் சுப்பிரமணியம் செட்டியாருக்குத் தெரியும். அவசரமாக மேக்கப் ரூமுக்கு வந்தார். “ரொம்ப நேரமாயிட்டுப்பா... பரிசு வழங்கல் வேற இருக்கு? ஒங்க நாடகத்திலே ஒரேயொரு சீன் மட்டும் நடிங்க, போரும்!” என்றார்.

எங்களுடன் பிரம்மநாயகத் தேவர் என்றொரு எட்டாம் வகுப்பை மூன்றாண்டுகளாய் மூழ்கி முத்தெடுப்பவன் இருந்தான். அவனுக்கு சேரன் செங்குட்டுவன் தளபதி வேடம்.

> தேர்வு விகிதத்துக்கு ஃப்ளெக்ஸ் பேனர் வைப்பது போல, முதல் மதிப்பெண் பெற்ற மாணவர் படம் வெளியிடுவதைப் போல, பள்ளி ஆண்டு விழாக்களின் கலை நிகழ்ச்சியும் விளம்பர உத்தியாகி விட்டது.



பெயர் வில்லவன் கோதை என்றிருக்கலாம். “வாள் பிடித்த கை மன்னா, வாள் பிடித்த கை” எனும் டயலாக் ஒன்றுண்டு அவனுக்கு. ராப்பகலாய் மனப்பாடம் செய்து கொண்டிருந்தான்.

ஆண்டு விழாவுக்குப் பத்து நாட்கள் முன்பு, ஆங்கிலப் பாடம் நடத்திக் கொண்டிருந்த ஆசிரியர் அவனிடம் கேள்வியொன்று கேட்டார். பிரம்மநாயகம் தாயாட்டைப் பிரிந்த மறி போல விழித்தான். ஆங்கில ஆசிரியர் சந்தோஷம் நாடார் வெள்ளை மல் வேட்டி, வட்டக் கழுத்து முழுக்கை வெள்ளை ஜிப்பாவில் அருமையாக நடத்துவார். முக்கியமான குறிப்புச் சொல்லும்போது, கால் படங்களை ஊன்றி, உப்புக் குத்தியைத் தூக்கி, ஒரு எழும்பு எழும்புவார், இரண்டு கைகளையும் இணையாக ஆட்டிக் கொண்டு. இன்று என் ஆங்கிலத்துக்கு அவரது

பங்களிப்பும் உண்டு. ஆனால் சந்தோஷமான ஆசிரியர் அல்ல. அவர் உடல்மொழி - உடல் மொழி என்பது கவிதாயினிகளுக்கு மட்டுமேயான சொல்லா என்ன? - கடுத்த முகபாவம் யாவும் அச்சம் கிளர்த்திக் கொண்டே இருக்கும்.

கேட்ட கேள்விக்கு, வகுப்பில் முதல் மாணவரான எம்மனோரே விழித்துக் கொண்டிருக்க, பாவம் பிரம்மநாயகம் என்ன செய்வான்? அந்தக் காலத்தில் ஆசிரிய தர்மம், 'அடியாத மாடு பணியாது' என்பது. எனது ஆசிரியப் பெருந்தொகையில், அதிகமும் பிரம்பை நம்பியவர் சந்தோஷம் நாடார். அடி வாங்கிய பிள்ளைகளின் பெற்றோர் பள்ளி வாசலுக்கு வந்து, "எம் பிள்ளையை எப்பிடிவே அடிக்கலாம்" என்று கறட்டு வழக்கும் பிடித்ததில்லை.

வாட்ட சாட்டமான பிரம்மநாயகம் அடி வாங்கும்போதெல்லாம் ஓவர் ரியாக்ஷன் கொடுப்பான். நடிப்பின் நெற்றிப் பொட்டுக்கள் தோற்றுப்போவர். அடி வாங்காத மாணவருக்கு எல்லாம் அது நகைச்சுவைக் காட்சி. வகுப்பு முடிந்ததும் இங்கு எழுத இயலாத கெட்ட வார்த்தை ஒன்று சொல்லி ஆசிரியரைத் திட்டிச் சிரிப்பான்.

வடக்குமலை மணிப் பிரம்பால் அன்று மூன்று சாத்து வாங்கியும் வழக்கமான எந்த மெய்ப்பாடும் இன்றி, மேலும் கையை நீட்டியவாறு, மாவீரன் போல நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு நின்றான். ஆங்கில ஆசிரியர் கேட்டார், "ஏம்லே எழவெடுப்பான், இன்னும் கையை நீட்டுகே! இங்க என்ன கோயில் சுண்டலா தாறாவ? எடத்துக்குப் போயி ஒக்காருலே மயிராண்டி!"

அன்று பிரம்மநாயகத்தின் மறுமொழி பள்ளிப் பிரசித்தமாயிற்று. ஐம்பத்து ஐந்து ஆண்டுகள் சென்றும் அதை ஞாபகம் வைத்து எழுதுகிறேன் என்றால் கணக்காக்கிக் கொள்ளுங்கள். பிரம்ம நாயகத்தின் உடம்பினுள் வில்லவன் கோதை ஆவி புகுந்து ஆட்கொண்டது போலும். வகுப்பையும் ஆங்கில ஆசிரியரையும் பார்த்துச் சொன்னான், அந்தப் புகழ்பெற்ற டயலாக்கை... "வாள் பிடித்த கை சார்! வாள் பிடித்த கை!" என்று. சந்தோஷம் நாடார் முகத்தில் முதலும் கடைசியுமான ஒரு சிரிப்பைப் பார்த்தோம்.

சரி, ஆண்டு விழாவுக்கு வருவோம்! மூன்று மாதம் ரிகர்சல் பார்த்து, டயலாக் மனப்பாடம் செய்து, அரச நடை பயின்று பழகிய எங்களுக்கு அழுகை அழுகையாக வந்தது. தமிழாசிரியர் திகைத்து நின்றிருந்தார். வகுப்பில் குள்ளமான, கோழையான, ஏழை

யான, சேரன் செங்குட்டுவன் வேடத்தில் இருந்த எனக்குக் கொஞ்சம் வீரமும் வந்தது. "வேண்டாம் சார் ஒரு சீனும்" என்று சொல்லி, ஒப்பனைகளைக் கலைக்க ஆரம்பித்தேன். நாடக நடிகர் பலரும் எங்கள் சிற்றூர். நாங்கள் உடனே வீட்டுக்குத் திரும்ப முடிவெடுத்தோம். வழக்கமாக பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, முதல் மாணவன் என எனக்கு வர இருந்த பென்சில், சோப்பு டப்பா, ஜாமெட்ரி பாக்ஸ் எல்லாம் துறந்து, புத்தகப் பையைத் தூக்கிக்கொண்டு ஊருக்கு நடக்க ஆரம்பித்தோம். எங்களுடன் எங்கள் ஊரில் இருந்து இறச்சகுளம் நடுநிலைப் பள்ளியில் படிக்க வரும் அனைத்து மாணவரும், எனது சேனாதிபதியான பிரம்ம நாயகத்தேவரும்... விளையாட்டுப் போட்டிகளில் அவனுக்கு இருந்த பல பரிசுகளையும் பொருட்படுத்தாமல். எங்களுக்குக் காவலாக எங்கள் ஊரில் இருந்து வந்திருந்த பெற்றோரும்.

மறுநாள் ஞாயிறு விடுமுறை. திங்கட்கிழமை வழக்கம் போலப் பள்ளிக்குப் போனோம். உள்ளுக்குள் அச்சமும் ஆத்திரமும் சுழறிக் கொண்டிருந்தது. வளாகத்தில் நுழைந்ததும் பிரம்ம நாயகம், "மக்கா, எல்லாத்துக்கும் இன்னைக்கு டி.சி.தான்" என்று புளி கரைத்தான்.

> ஆடல் என்றாலும் பாடல் என்றாலும் பள்ளிகளில் தேர்ந்தெடுக்கும் தரம் தாழ்ந்த பொறுக்கிப் பண்பாட்டின் சினிமாப் பாடல்கள் மட்டுமே முகச்சுளிப்பை ஏற்படுத்தும்.



இறை வணக்கம் முடிந்து வகுப்புக்கு மாணவர் கலைய முற்பட்டபோது, தலைமையாசிரியர் அறிவித்தார் - "நாடகத்துலே நடிச்சவங்களும், வீராணமங்கலத்துப் பிள்ளைகளும் ரூமுக்கு வாங்க."

நெஞ்சக் கனகல்லும் திகிலால் எரிந்தது. எல்லோரும் போய் நின்றபின் கோபத்தில் சத்தம் போட்டார். கொஞ்சம் அச்சுறுத்தினார். கொஞ்சம் உபதேசம் செய்தார். வருத்தப்பட்டார். அவமதிப்பு என்றார். "சரி, போட்டும். இந்த முறை விட்டிருக்கேன்... இனி இப்பிடி நடக்கப் பிடாது... வகுப்புக்குப் போங்க..." என்றார். பிரம்மநாயகத்துக்குக் கொஞ்சம் வருத்தம்தான், எல்லோருக்கும் டி.சி. தரவில்லை என்று.

இப்படித்தான் எல்லாப் பள்ளிகளிலும் அந்த நாட்களில் ஆண்டுவிழாக்கள் கொண்டாடி

னார்கள். இன்று எழுத்தாளனாக ஆகிவிட்ட பிறகு, பள்ளிகளுக்கும், கல்லூரிகளுக்கும் தமிழ் மன்றம், மாணவர் தினம் என்று ஆண்டுக்கு இருபது பள்ளிகள், கல்லூரிகளுக்குப் போகிறேன்.

பல பள்ளிகளில் எனது உரை முடிந்த பின்பு, எனக்குச் சலிக்கும் வரை அமர்ந்திருந்து கலை நிகழ்ச்சிகள் பார்க்கிறேன். இளைய மாணவத் தலைமுறையின் அளப்பரிய ஆற்றல் கர்வம் கொள்ளச் செய்கிறது. ஆடல் என்றாலும் பாடல் என்றாலும் அவர்கள் தேர்ந்தெடுக்கும் தரம் தாழ்ந்த பொறுக்கிப் பண்பாட்டின் சினிமாப் பாடல்கள் மட்டுமே முகச்சுளிப்பை ஏற்படுத்தும். இசைக் குழுவுக்கும் ஒலி - ஒளி அமைப்புக்கும் ஒப்பனைகளுக்கும் உடையலங்காரத்துக்கும் பெரும் பொருள் செலவு செய்வார் போலும். அதனை மாணவர் தாமே செய்து கொள்வார்களா அல்லது பள்ளிகளே செய்வார்களா என்று எனக்குத் தெரியாது.

அண்மையில் வெளியூரில் ஒரு மெட்ரிகுலேஷன் பள்ளி ஆண்டு விழாவுக்குப் போயிருந்தேன். அனைத்துக் கலை நிகழ்ச்சிகளையும் பொறுமை காத்துப் பார்த்தேன். பிரமாதமான ஆடல் பாடல்கள். அற்புதமாகப் பயிற்சி பெற்ற மாணாக்கர். ஆனால், ஆபாசமான சினிமாப் பாடல்கள். இதய நோயாளிகளை எந்த நேரமும் சாய்த்து விடலாம் போன்ற வல்லிசை. நிகழ்ச்சி முடிவில், ஆட்டக்காரர்களுக்குப் பயிற்சி கொடுத்த ஒருவரை கௌரவப்படுத்தினார்கள். அவர் நடப்பும் உடுப்பும் குரலுமே அவர் ஏதோ ஒரு சேனலில் குத்தாட்டங்கள் போடுபவர் என்பது தெரிந்தது. அவர் ஓர் அறிவிப்புச் செய்தார். அந்தப் பள்ளியின் அறுபது மாணவரைத் தொலைக்காட்சிச் சேனல் ஒன்றில் விரைவில் ஆட வைப்பார் என்று.

பார்வையாளரும் பெற்றோரும் விருந்தினரும் மாணாக்கரும் கனத்த கரவொலி செய்து குத்தாட்ட பயிற்சியாளரை ஊக்குவித்தபோது எனக்குத் தோன்றியது, அந்த ஆண்டு விழாவுக்கான நாட்டியப் பயிற்சிக்காக அவர் கட்டாயம் சில வாரங்கள் எடுத்துக் கொண்டிருப்பார். சில லட்சங்கள் ஊதியமும் பெற்றிருப்பார். சேனல்களின் நிகழ்ச்சிகளுக்கான TRB rating போல, பள்ளிகளுக்கும் சந்தை மதிப்பு இருக்கும் போலும். தமது பள்ளியின் பொது மதிப்பீட்டை உயர்த்த, அதன் மூலம் அடுத்த ஆண்டுக்கான மாணவர் சேர்க்கையை அதிகரிக்க, நன்கொடையும் கல்விக் கட்டணங்களும்

வசூலிக்க, பள்ளி நிர்வாகங்கள் மேற்கொள்ளும் உபாயம் அதுவென அறிந்துகொண்டேன். எதிர்காலத்தில் பங்குச் சந்தையில் நிறுவனங்களின் மதிப்பீட்டுப் புள்ளிகள் போல இது உயரவும் வாய்ப்பு உண்டு.

செய்தித்தாள்களில் முழுப் பக்க விளம்பரம் கொடுப்பது போல, தேர்வு விகிதத்துக்கு ஃப்ளெக்ஸ் பேனர் வைப்பது போல, முதல் மதிப்பெண் பெற்ற மாணவர் படம் வெளியிடுவதைப் போல, பள்ளி ஆண்டு விழாக்களின் கலை நிகழ்ச்சியும் விளம்பர உத்தியாகி விட்டது. எதைச் செய்தும் வணிகம் பெருக்கு என்பதுதான் குறிக்கோள். இப்படியே போனால் கலையாற்றல் மிகுந்த மாணவியரை ரெக்கார்ட் டான்ஸ் தரத்துக்கு இறக்கிவிடுவார்கள் என்று கவலையாக இருக்கிறது.

சென்ற ஆண்டு ஒரு பொறியியல் கல்லூரி, பள்ளி மாணவர்களுக்கு நடத்திய பேச்சுப் போட்டிக்கு பரிசளிக்கப் போயிருந்தேன். நகரின் பல பள்ளிகளின் மாணாக்கர் பெற்றோருடன் பரிசு வழங்கும் விழாவுக்கு வந்திருந்தனர். கல்லூரியின் பொதுநல சேவையை மனம் பாராட்டியது. பின்னர் புலனாகியது, இத்தகு போட்டிகளைப் பொறியியல் கல்லூரிகள் நடத்துவதன் நோக்




கம் தமிழ்ப் பணியோ, பொதுப் பணியோ அல்ல என்பதும், நல்ல மாணவரையும் பெற்றோரையும் தமது வளாகத்தினுள் வரவழைத்து, அவர்கள் மனதில் கல்லூரி பற்றிய மதிப்பீட்டை ஏற்றுவது எனும் வணிக நோக்குதான் என்பதும்.

ஈராண்டு முன்பு, ராஜபாளையத்தில் ஒரு இலக்கிய நிகழ்ச்சி. மறுநாள் தொம்பக்குளம் கீழூர் போக வேண்டியதிருந்தது. ராஜபாளையத்திலிருந்து சத்திரப்பட்டி தாண்டி, ஆலங்குளம் சாலையில் இருந்தது அவ்வூர். நியூஜெர்சியில் நான் தங்கி இருந்த எனது நண்பர் முரளிபதியின் அப்பா, எண்பதைக் கடந்த ஆசிரியர். திருப்பதி அவர்களைச் சந்திப்பது என் நோக்கம்.

சுமார் ஆயிரம் வீடுள்ள ஊர். அரசு கிளை நூலகம் ஒன்றும் பத்தாம் வகுப்பு வரை உள்ள அரசுப் பள்ளியொன்றும் இருந்

தது. பெரியவர் திருப்பதியுடன் பேசிக் கொண்டிருந்தபோது, பள்ளியின் தலைமை ஆசிரியரும் இன்னொரு ஆசிரியரும் என்னைக் காண வந்தனர். "எங்க பிள்ளைகளுக்கு அரை மணி நேரம் ஏதாவது சொல்லுங்க" என்றார்கள். சற்று நேரத்தில் புறப்பட்டுப் போனேன். என் முன்னால் எட்டாவது முதல் பத்தாவது வரை பயிலும் மாணவ மாணவியர் நூற்றிருபது பேர் தரையில் அமர்ந்திருந்தனர். அங்கு பத்தாம் வகுப்புக்கு தேர்வு மையம் இல்லை. சில மைல்கள் போகணும், வேறு பள்ளிக்குத் தேர்வு எழுத. எனக்கு நான் எஸ். எஸ்.எல்.சி எழுதியது நினைவு வந்தது. பதினொன்று பன்னிரண்டாம் வகுப்புப் பயில வேறு பள்ளிகள் நாட வேண்டும். ஒரு தேநீர் மட்டுமே நான் பெற்ற ஊதியம். திருப்பதி ஐயா வீட்டில், நான் கோவைக்கு எடுத்துச் செல்ல என்று விளக்கெண்ணெய் எனப்படும் ஆமணக்கு எண்ணெயில் வதக்கிய வெள்ளாட்டுக் கறி ஒரு டப்பா நிறையப் போட்டு அனுப்பினார்கள். அந்த வாசனையும் சுவையும் மறக்க முடியாதது போலவே அந்தப் பள்ளியில் நான் பேசிய பேச்சும்.

இப்போது அந்தப் பிள்ளைகளை நினைத்துக் கொள்கிறேன். அவர்களது பள்ளி ஆண்டு விழா எப்படி இருக்கும்? 1964ல் நான் பதினொன்றாம் வகுப்பில் படித்த பள்ளியின் ஆண்டு விழாவை விட மேலானதாக இருக்க இயலாது. அவர்களுக்கு எந்தச் சேனலின் எந்த நிகழ்ச்சித் தயாரிப்பாளனும் குத்தாட்டப் பயிற்சியாளனும் வந்து ஆட்டம் சொல்லித் தர மாட்டான். நகரத்து மாணவருடன் எதிர்காலத்தில் இந்த மாணவரும் நேர்ப்போட்டியில் ஈடுபட்டாக வேண்டும். மேற்படிப்பிலும் வேலைவாய்ப்பிலுமான நியாயமற்றதோர் போட்டி! சென்னை, கோவை, நாமக்கல் பள்ளி மாணாக்கருடன் இவர்கள் எப்படி சமம் ஆவார்கள்?

வல்லரசுக் கனவும் ஏவுகணை விடுதலும் லட்சக்கணக்கான கோடிப் பணத்தில் நிதிநிலை அறிக்கை சமர்ப்பித்தலும் இவர்களைக் கணக்கெடுத்துக் கொள்கிறதா? இந்த மாணவர் 'எதிர்கால வாக்கு வங்கி', 'காசு கொடுத்து சினிமா டிக்கெட் வாங்குபவர்' என்பது மட்டும் தானா?

'உலகினுள் இல்லதற்கில்லை பெயர்' என்கிறது பழமொழி நானூறு, உலகத்தில் இல்லாத பொருளுக்குப் பெயர் இருக்க இயலாது என்ற பொருளில். ஆனால் இல்லாத பொருளுக்கு நம்மிடம் ஒரு பெயர் இருக்கிறது. 'சமூக நீதி!'

**- கற்போம்...**

# கைம்மண் அளவு

சமீபகாலமாக எதிர்பாராத நாட்களில், எதிர்பாராத நேரங்களில் எல்லாம் கோவையில் போக்குவரத்து நெருக்கடி. அது வாகனத்தில் போவோருக்கு மட்டும்தான் என்றில்லை, எம்மைப் போல நடந்து போகிறவருக்கும்தான். அதற்கு நாம் மாநகராட்சி அதிகாரிகளை, காவல்துறை அதிகாரிகளை, பொதுப்பணித்துறை அதிகாரிகளை குற்றம் காண இயலாது. அவர்கள் அனைவருமே திறமைசாலிகள், மக்கள் நலன் பேணுகிறவர்கள், ‘மக்கள் சேவையே மகேசன் சேவை’ என்று சிந்தித்திருப்பவர்கள். அவர்களுக்கு நாளுக்கு 24 மணி நேரம் போதவில்லை. பலர் கைக் காசு செலவிட்டு அல்லும் பகலும் பணி செய்து கிடப்பவர்கள் என்பதில் எவருக்கும் இரண்டு பேச்சு இருக்க இயலாது.

**நாஞ்சில் நாடன்**

ஓவியம்: மருது



அண்மையில் மலையாள சாகித்ய உல்சவம் ஒன்றில் கலந்து கொள்ள கேரளத்தினுள் நுழையும் போது வாளையார் செக்போஸ்ட் தாண்டினோம். செக்போஸ்ட் எல்லை தாண்டியதுமே கருமேக மூட்டமும் சரம் சரமாய்ப் பொழியும் மழையும்.

“ஆனாலும் பாருங்க இந்த மழைக்கு ஓரவஞ்சனையை... கேரள எல்லை வரைக்கும் பெய்து கொண்டாடுது... தமிழ் நாட்டுக்குள்ளே நுழைய மாட்டேங்குது!” என்றேன். காரில் என்னுடன் பயணித்த விஜயகுமார் குன்னிசேரி என்னும் விகடகவி சொன்னார், “மழை எப்பிடிங்க செக்போஸ்ட் தாண்ட முடியும்? லஞ்சம் கொடுக்க அதன் கையில் காசுண்டோ?” என்று. மலையாளிகள் எப்போதுமே தமிழன்மாரைத் துச்சமாகக் கருதுகிறவர்கள் என்பதால் நாமதைப் பொருட்படுத்த வேண்டாம்.

எதிர்பாராத விதமாகப் பண்டிகைகள் வந்து சேர்கின்றன. எதிர்பாராத விதமாகக் கோயில் திருவிழாக்கள் நடக்கின்றன - குடமுழுக்கு, பூச்சாட்டு, குண்டம் என. எந்த முன்னறிவிப்பும் இன்றி மழை பொழிகிறது. மழைக்குத் தெரியுமா வானிலை அறிக்கை பற்றி எல்லாம்! எந்த முன்னேற்பாடும் இன்றி ரயில்வே மேம்பாலம், சாலைச் சந்திப்பு மேம்பாலம் கட்ட ஆரம்பித்து அது ஐந்தாண்டுத் திட்டம் போல நடக்கிறது. யாரையும் கேட்காமல் முகூர்த்த நாட்கள் வந்து விடுகின்றன. ஒரு முகூர்த்தப் பட்டு எடுக்க அறுபது, எழுபது பேர் வந்து துணிக்கடை வாசலிலும் உணவு விடுதி வாசலிலும் காத்துக் கிடக்கிறார்கள்.

ஆழ்குழாய்ச் சாக்கடைகள் அமைக்க நீண்ட நெடுஞ்சாலையின் நடுப்பகுதியில் தோண்ட வேண்டியதிருக்கிறது. வளர்ச்சிப் பணிகளைத் தாமதிக்க இயலுமா? திடீர் என கேரளத்தில் இருந்து பாலக்காடு மார்க்கமாக, ஊரைக் காலி செய்கிறார்களோ எனும் விதத்தில் சாரிசாரியாக வாகனங்கள் கோவைக்குள் புகுந்து உதகைக்குப் பயணிக்கின்றன. சபரிமலை சீசன் என்றால் ஆந்திர, கர்நாடக, தமிழ்நாட்டு வெள்ளம் திசைமாறி கேரளத்துக்கு கோவை வழியாகவும் பயணிக்கின்றது. சில பொழுதுகளில், முழு நிலா நாளில் கிரிவலம் நடக்கும் திருவண்ணாமலை போல் தெரிகிறது கோயம்புத்தூர்.

இருசக்கரதாரிகள், சொந்த ரதம் வைத்திருப்பவர், திரிசக்கரக் கொடுங்கோலர்கள், கால் டாக்சிகள் தோதான தெருக்கள், சூறுக்குச் சந்துகள் எனப் பயன்படுத்தி போர் முனையில் இருந்து தப்பித்து ஓடிவிடுகிறார்கள். பெரும்பாடு பேருந்துப் பயணிகளுக்கும்

சரக்கு வாகனங்களுக்கும்தான்.

என் வசிப்பிடத்தில் இருந்து கோவை காந்திபுரம் வருவதற்கு நகரப் பேருந்தில் நாற்பது நிமிடங்களுக்கு மாற்றாக, சமயங்களில் ஒன்றே கால் மணி நேரம் எடுக்கிறது. நானொரு எளிய மனிதன். காரணமின்றி என் வாழ்நாளில் தினமும் போக வர ஒன்றரை மணி நேரம் களவாடப்படுவதில் எனக்கு வழக்கில்லை. அரசு ஊழியர்களுக்கு போய்ச் சேர்ந்த நேரமே அலுவலக நேரம். ஆனால், தனியார் நிறுவனப் பணியாளர்கள், தொழிலாளிகள், கடைகளில் வேலை செய்வோர், தொழிற்சாலைகளில் வருகைக்கு கார்டு பன்ச் செய்கிறவர், பள்ளி மாணவர், நோயாளிகள், முதியவர் பாடு பெரும்பாடு! அதனால் என்ன? வல்லரசுக் கனவில் தேசம் திரும்பி நிற்கும்போது சில்லறைக் கவலைகள் நம்மைத் தின்னத் தகுமோ?

நகர் மண்டபத்துக்குப் பயணச் சீட்டு வாங்கி இருப்போம். "டவுன் ஹால் எல்லாம் போகாதுங்க, ரயில்வே ஸ்டேஷனில் இறங்கிக்குங்க" என்பார் நடத்துநர். ரயில்வே ஸ்டேஷனுக்குப் பயணச் சீட்டு வாங்கி இருந்தால், "சுங்கம் வழியாப் போகுது சார்" என்பார். நமக்கு வேறு மார்க்கம் இல்லை... வெயிலில், புகையில், தூசியில், வியர்வையில் சில கிலோமீட்டர் நடப்பதைத் தவிர! இதில் அரசுப்

**தனியார் துறைப் பேருந்து ஓட்டுநர்களும் நடத்துநர்களும் மக்களைப் படுத்தும் அலைக்கழிப்பை அரசியல்வாதிகள், அதிகாரிகளின் மக்கள் விரோதச் செயல்பாடுகளுக்கு ஒப்பிடலாம்.**

பேருந்து நடத்துநர், ஓட்டுநரை நாம் கடிந்து கொள்ள இயலாது. அவர் நெருக்கடி அவருக்கு. சந்தேகம் இருந்தால் அரசுப் போக்குவரத்துப் பணியாளருமான எழுத்தாளர் கண்மணி குணசேகரனின் நாவல் 'நெடுஞ்சாலை' வாசித்துப் பாருங்கள்; 'தமிழினி' வெளியீடு.

ஆனால் தனியார் துறை பேருந்து ஓட்டுநர்களும் நடத்துநர்களும் மக்களைப் படுத்தும் அலைக்கழிப்பை அரசியல்வாதிகள், அதிகாரிகளின் மக்கள் விரோதச் செயல்பாடுகளுக்கு ஒப்பிடலாம். முரட்டுத்தனமான பேச்சு, ஆபாசமான சைகைகள்... எங்கு வேண்டுமானாலும் பயணிகளை இறக்கி விடுவார்கள். விரையும் போக்குவரத்து நெரிச

லில், நடுச்சாலையில் வண்டியை நிறுத்தி, இறங்க அவசரப்படுத்துவார்கள். பெண்களும் வயோதிகர்களும் விழாத குறையாக பதற்றப்பட்டு இறங்குவார்கள். யாரும் தட்டிப் பேச இயலாது. பேருந்து உடைமையாளர்களின் வேர்கள், கோட்டை வரைக்கும் பரவிப் படர்ந்திருக்கலாம்.

பெரும்பாலும் இளைஞர்களே நடத்துநர்களும் ஓட்டுநர்களும். அண்மையில் நகர் மண்டப நிறுத்தத்தில் ஒரு அனுபவம். நகர் மண்டப நிறுத்தமே ஆனாலும், நடைபாதையின் பாதி இடம் வரை கடைக்காரர்களின் அபகரிப்பு. காத்திருப்பவர் காலடியில் கொட்டப்பட்டிருக்கும் அடுமனைகளின் குப்பைகள். நரகத்தில் பாவம் செய்தவர்களை வறுக்க என கொதிக்கும் எண்ணெய்ச் சட்டிகள் வைத்திருப்பார்களாம்... அது போல எந்நேரமும் கொதித்துக் கொண்டிருக்கும் எண்ணெய்ச் சட்டிகள். அதில் வறுபட்டுக்கொண்டே இருக்கும் எந்த தேசத்தைச் சார்ந்ததென அறிய முடியாத பலகாரங்கள். புகை, தொண்டைக் கமறல், இருமல். நிழலைப் பயன்படுத்தி நின்று கொண்டிருக்கும் பழ வண்டிகள். வெயிலில் பேருந்துகளுக்குக் காத்துக் கிடக்கும் பயணிகள். இவை யாவும் மேயர்வாளும் ஆணையர் சார்வாளும் அடிக்கடி வாகனங்களில் பயணம் செய்யும் அலுவலக வாசலின் காலெட்டும் தூரத்தில்.

கோவையில் கால் நூற்றாண்டாக வசிக்கும் நான், கூடுமான வரை தனியார் பேருந்துகளில் ஏறுவதில்லை என்ற முடிவில் இருப்பவன். காதடைக்கும் காமப் பாடல்கள், நெரிசல், ஒழுக்கம் இல்லாத மொழி, நிறுத்தத்தில் பொழுதுக்கும் நின்று கிடக்கும் பேருந்து எனப் பற்பல காரணங்கள். என்றாலும் நமக்கிருக்கும் நெருக்கடிகள், முன் தீர்மானங்களை உடைத்தும் விடுகின்றன. நான் காத்திருந்த அந்தப் பொழுதில், பேருந்துகள் ரயில் நிலையம் வழியாகப் போகுமா எனத் தெரியாது. “தம்பி, ரயில்வே ஸ்டேஷன் போகுமா?” என்றேன் கண்டக்டர் சிறுவனிடம். “போகும்யா... ஏறு மொதல்லே!” என்றான் சிறுவன்.

நாம் தமிழ்நாடு அரசுப் பரிசு, கலைமாமணி, சாகித்ய அகாதமி விருது, கண்ணதாசன் விருது, அமுதன் அடிகள் விருது, கனடாவின் வாழ்நாள் சாதனைக்கான இயல் விருது எல்லாம் பெற்றவன். இந்தியா முழுக்கவும், உலகின் பல நாடுகளும் சுற்றியவன். முப்பத்தைந்து நூல்கள் எழுதியவன். மூத்த எழுத்தாளர் எனும் பெத்த பேரு பெற்றவன் என்பதை எல்லாம் அவன் அறிந்திருக்க வேண்டிய கட்டாயம்

இல்லை. அதுவென் மனக்குறையும் இல்லை. ஆனால் தன்னைவிட ஐம்பதாண்டுகள் மூத்தவன் எனும் அறிவு கூடவா இருக்காது?

என் கதையைப் பொருட்படுத்த வேண்டாம், நானொரு எளிய தமிழ் எழுத்தாளன். பேருந்தினுள் எனக்கு முன்னால் ஒருவர் நின்றிருந்தார். எழுபத்தைந்துக்கும் மீறிய முதியவர் மாத்திரம் அல்ல, இயலாதவர். கையில் ஒரு கட்டைப் பை நிறைய சாதனங்கள். வேட்டியை மடித்துக் கட்டியிருந்தார். கசங்கிய அரைக்கைச் சட்டை. தோளில் துண்டு. தள்ளாமை உடைய முதியவர்.

"ஐயா, சுங்கம் போகுதுங்களா?" என்றார் நடத்துநரைப் பார்த்து. மூர்க்கத்துடன் இருந்தது சிறுவனின் மறுமொழி... "இறங்குய்யா! கேட்டு ஏற மாட்டியா? சுடுகாட்டுக்கெல்லாம் பஸ் போகாது!"

நடு மதியம்தான். பேருந்தினுள் நெரிசல்தான். போக்குவரத்து நெருக்கடிதான். தாமதமான பயணச் சூழல்தான். எல்லாம் சரிதான். எனினும் எளிய, முதிய, ஏழைக் குடிமகனை மனிதனாகக் கூடப் பொருட்படுத்தாமல், முதுகில் கை வைத்துத் தள்ளினான் படிக்கட்டை நோக்கி. பெரியவர் ஏதோ பெரும் பாதகம் செய்த மருட்சியுடன் தள்ளாடி இறங்கிப் போனார்.

**இறைவனிடம் எதை யாசித்து நின்றிருப்பார் அவர்? மக்கள் நல் வாழ்வை? உடல்நலத்தை? வெள்ளைக் குதிரையில் மேகமுட்டங்களுக்கு நடுவே பூந்தென்றல் தழுவுவது போலொரு மரணத்தை?**

எனது ஆச்சரியம், தனியார் பேருந்து நடத்துநர் எவரும் எம்.பி.ஏ பட்டதாரி அல்ல. ஐ.ஐ.டி பட்டதாரிகளும் இல்லை. ஒரு முனிசிபல் கவுன்சிலர் மகன் அல்லது அரசாங்கத்தில் இளநிலை எழுத்தர் மகன் வருவாரா இந்தப் பணிக்கு? அவர்களும் சமூகத்தின் அடித்தட்டு மாந்தர்தான். பிறகேன் சக மனிதர் மீது பரிவோ, அனுதாபமோ இல்லாமற் போகிறது?

கதையொன்று சொல்வார்கள் மேடைதனில். வட்டாட்சியர் வீட்டு நாய் செத்தால் கூட்டம் கூட்டமாகப் போவார்களாம் ஊழியர்கள், துக்கம் கேட்டு. தொண்டை அடைக்க, கண்கள் கசிய விசாரிப்பார்களாம். ஆனால் அந்த வட்டாட்சியரே

செத்துப் போனால் ஈ, காக்கை கூடக் காணக் கிடைக்காதாம்.

கற்பனை செய்து பார்த்தேன். சினிமாவில் எளிய வேடம் தரிக்கும் நடிகர் ஒருவர் பேருந்தில் நுழைந்தால் - கடவுளால் ஆசீர்வதிக்கப்பட்ட அவர்கள் நுழைய மாட்டார்கள். எனினும் கற்பனைதானே! - என்ன நடக்கும்? இதுதான் சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த தமிழன் பண்பாடு!

இந்தக் கோளாறில், முதியவர்களை மதித்து ஆகப்போவதென்ன என்று நினைக்கிறது சமூகம்! 'சோத்துக்குச் செலவு, பூமிக்குப் பாரம்!' தினமும் இருமுறை எனது பேருந்துப் பயண வழித்தடத்தில், சுந்தரமூர்த்தி நாயனார் பாடிய, பட்டீசுவரம் எனப் புகழ்பெற்ற, பேரூர் எனும் சிவத்தலம் குறுக்கிடும். சில சமயம் அங்கே இறங்கிப் பேருந்து மாறுவேன். கோயிலை ஒட்டியே பேருந்து நிறுத்தம். அன்று அங்கே இறங்கியபோது, சோர்ந்த நடையில் தெரிந்த முகம் ஒன்று. எழுபத்தைந்து வயதிருக்கும். பதினைந்து நாள் தாடி. காவி வேட்டி -வெள்ளை அரைக்கைச் சட்டை. எங்கே பார்த்தோம் என்று நினைவு நதியில் துழாவினேன். எனக்கும்தானே வயதாகிறது!

சற்றுக் கூர்ந்து கவனித்ததில் - உண்மையில் நாங்கள் தீவிர இலக்கியவாதிகள் அவதானித்ததில் என்றே எழுத வேண்டும் - புலனாயிற்று. எங்கள் நிறுவனம் கணக்கு வைத்திருந்த வங்கியில் மூத்த மேலாளராக இருந்தவர். மனிதனாகவும் இருந்தவர்.

“என்ன சார் இப்படி?” என்றேன் அதிர்ச்சியில். அவர் பக்கம் சென்று கைகளைப் பற்றினேன். மெலிதாகச் சிரித்தார். எப்போதும் வாய்விட்டுச் சிரிப்பவர் தான்.

“வாங்க டீ குடிப்போம்!” என்றார்.

“என்ன சார் ஆச்சு? இப்பிடிப் பரதேசிக் கோலம்?” என்றேன்.

கொஞ்சம் சாலையை வெறித்தார். கண்கள் கலங்கினாற் போலவும் முகம் சற்றுக் கோணினாற் போலவும் இருந்தது.

“வீட்டுக்காரி போயிட்டா... ஆறு வருஷம் ஆச்சு! ரெண்டு பொண்ணுங்க... ஒருத்தி மிச்சிகன்லே... ஒருத்தி ஆர்ம்ஸ்டர்டாம்லே...”

அதற்குமேல் ஒரு கதாசிரியனுக்கு சொல்லத் தேவை இல்லை. வடவள்ளியில் அவர் வீடு. மருதமலையில் இருந்து வடவள்ளி, தொண்டாமுத்தூர், பேரூர் வழியாகக் கோவைப்புதூர் வந்து ஈச்சனாரி போகும் பேருந்து ஒன்று உண்டு. தம்பி முருகனில் தொடங்கி அப்பன் சிவனைக் கண்டு அண்ணன் விநாயகனைத் தரிசிக்கலாம். மூன்றுமே முக்கியமான இறைத்

தலங்கள். சும்மா ஏறி உட்கார்ந்து பயணச்சீட்டு வாங்கி, போய்த் திரும்பினால் நான்கு மணி நேரம் செத்துவிடும்.

சாய் போடத் தெரிந்திருக்கலாம். சமைக்கவும் தெரிந்திருக்கலாம். வாசிப்புப் பழக்கம் உண்டென்றும் இசை கேட்பதில் நாட்டம் உண்டென்றும் அறிவேன். ஆனால், அவை எல்லாம் போதுமா... உறங்கும் ஐந்து மணி நேரம் தவிர்த்து மீதி நேரம் கொல்ல? சேமிப்பு இருக்கும், ஓய்வூதியம் வரும், ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் இருந்து வரும் அன்புப் பொழிவுக்குப் பங்கமில்லை.

“உடம்பைப் பாத்துக்கங்கப்பா... வேளைக்குச் சாப்பிடுங்கப்பா... மாத்திரை மறக்காம எடுத்துக்குங்கப்பா... வாக்கிங் போங்கப்பா... ரெகுலரா பிரஷர், சுகர் செக் பண்ணுங்கப்பா... எதானாலும் கூப்பிடுங்கப்பா... வச்சிரட்டாப்பா...”

மேலும் சில யாண்டுகள் சென்று, கால்கள் சற்றுத் தள்ளாடும்போது, நெரிசலான நகரத் தனியார் பேருந்தில் அவரைக் கற்பனை செய்து பார்த்தேன். முட்டிக்கொண்டு வந்தது அழுகை. அந்த நாளுக்கு நானும் வெகு தூரத்தில் இல்லை.

இறைவனிடம் எதை யாசித்து நின்றிருப்பார் அவர்? மக்கள் நல்வாழ்வை? உடல்நலத்தை? வெள்ளைக் குதிரையில் மேக மூட்டங்களுக்கு நடுவே பூந்தென்றல் தழுவுவது போலொரு மரணத்தை?

**வாழ்க்கை என்பது என்றும் நிரந்தரமான குத்தாட்டம் அல்ல. செல்வம் கொய்து சேர்க்கும் சூதாட்டம் அல்ல. இறுதியில் ஒரு காலாட்டமும் உண்டெனத் தெளிவீர் உலகத்தீரே!**

அப்படியும் இப்படியும் ஆன சகல முதியோர்களிடமும் கருணையற்று இருக்கிறார்கள் சக மனிதர்கள்?

கோவையில் தொண்டாக, மிக மிக நியாயமான விலையில் மிகமிக ருசியான உணவு படைக்கும் நிறுவனம் ஒன்றுண்டு. அவர்களுக்கு பெட்ரோல் பங்கும், பெரிய அளவிலான மருந்துக்கடையும் மருத்துவ ஆலோசனை மையமும் உண்டு. அவர்கள் உணவு விடுதியில் இருபத்தைந்து ரூபாய்க்கு திருத்தமான, சூடான, சுவையான மதிய உணவுக்கு வரிசையில் நின்றிருப்பார்கள் மக்கள். உணவருந்தும்

கூடத்தில் 'முதியோருக்கு இலவசம்' என்று தனிப்பிரிவு உண்டு. அங்கு எவரும் விலையில்லா உணவுக்காக நின்றிருப்பதில்லை. காரணம், முதியவர்கள் கோருவது அன்பையும் அரவணைப்பையும்தான். இலவசங்கள் கூட வேண்டாம். ஆனால் மரியாதையையும் பரிவையும் சமூகம் அவர்களுக்கு மறுக்கிறது.

ஊரில் சொல்வார்கள், 'பழுத்தோலையைப் பார்த்து குருத்தோலை சிரிக்கிறது' என்று. பெரும்பாலும் அனைத்து முதியவர் உள்ளத்திலும் ஏக்கம் ஒன்று முளைத்துப் படர்ந்து கிளைத்து வளர்ந்து பூத்துக் காய்த்துக் கனிந்து உதிரலாம். 'மணிச்சித்திர தாழ்' என்ற, மோகன்லாலும் சுரேஷ் கோபியும் ஷோபனாவும் நடித்த மலையாளப்படத்தில் தமிழ்ப் பாடல் ஒன்றுண்டு. குந்தளவராளி ராகத்தில், 'ஒரு முறை வந்து பார்த்தாயா?' என்று. கல்யாணி ராகத்தில் பாபநாசம் சிவன் எழுதிய பாடல் ஒன்றும் கர்நாடக இசைவானில் கேட்கக் கிடைக்கும். பாடுபவர் பாடிக் கேட்க வேண்டும்.

**'உன்னையல்லால் வேறே**
**கதி இல்லை அம்மா!**
**உலகெலாம் ஈன்ற அன்னை**
**உன்னையல்லால் வேறே கதி இல்லை'**

என்று.

மரணத்துக்கான காத்திருப்பு அன்றி வேறேதும் செய்ய ஏலாத ஒற்றைத் தனியன்கள் ஆணும் பெண்ணுமாய் பல மொழி பேசும் எத்தனை கோடிப்பேர் இருப்பார்கள் இந்திய வளநாட்டில்? 'யாத்திரைப் பத்து' பகுதியில் மாணிக்க வாசகர் பாடுகிறார்... 'தாமே தமக்குச் சுற்றமும் தாமே தமக்கு விதிவகையும், யாமார் எமதார் பாசமார் என்ன மாயம்?' என்று! தாமே தமக்கு உறவினர்கள். தாமே தமக்கு ஆணையிடும் அதிகாரி. நாம் யார்? எமதென்று எவருளர்? நம்மைப் பிணிக்கும் கட்டுக்கள் என்ன? என்ன மாயங்கள் இவை எல்லாம்?

சைவத் திருமுறை சொல்வது போல், 'தந்தை போனார், தாயார் போனார், தாமும் போவார்'.

வாழ்க்கை என்பது என்றும் நிரந்தரமான குத்தாட்டம் அல்ல. செல்வம் கொய்து சேர்க்கும் சூதாட்டம் அல்ல. இறுதியில் ஒரு காலாட்டமும் உண்டெனத் தெளிவீர் உலகத்திரே! சக மனிதனிடம் சற்றுக் கருணை காட்டுங்கள். எல்லோருக்கும் காது மந்தமாகும், பல் விழுந்து மொழி குழறும், கண் பார்வை குன்றும், முடி நரைக்கும், உடலும் உள்ளமும் தளரும். இன்று வட்டத்தை, மாவட்டத்தை, மாநிலத்தை ஆளுகிறோம் எனத் தினவெடுத்து, ஆடாத ஆட்டம் ஆடினாலும் நாளை காட்டைத்தான் ஆளவேண்டியது இருக்கும்!

**- கற்போம்...**

# கைம்மண் அளவு

நாள்தோறும் பல சொற்கள் தமிழுக்கு அறிமுகம் ஆகிக் கொண்டே இருக்கின்றன. பழைய சொற்கள் காலாவதி ஆகிக்கொண்டும்! 'கணினி' என்றோ, 'முகநூல்' என்றோ, 'குறுஞ்செய்தி' என்றோ சொற்களை முப்பது ஆண்டுகளுக்கு முன்பு எவரும் கேட்டிருக்கக் கூட வாய்ப்பில்லை. மாவட்ட ஆட்சித் தலைவர் என்ற சொல் தமிழுக்கு வந்து எத்தனை ஆண்டுகள் ஆகியிருக்கும். காலத்தைக் கருதிக்கொண்டு எழுதும் எழுத்தாளர்கள் அந்தக் காலத்தின் சொற்களிலும் கவனமாக இருத்தல் வேண்டும்.

**நாஞ்சில் நாடன்**

ஓவியம்: **மருது**



பார்வைக்கு வந்த இராசேந்திர சோழன் காலத்து நாவல் ஒன்றில் மாவட்ட ஆட்சித் தலைவர் எனும் சொல்லொன்று கண்டு எமக்கு வியப்பேற்பட்டது. ஒரு வேளை தமிழின் தீவிர எழுத்தாளரும் போராளியும் 'எட்டுக் கதைகள்' என்ற தொகுப்பின் மூலம் புகழ்பெற்றவருமான இராசேந்திர சோழன் பற்றிய நாவலோ எனில், அங்ஙனமும் இல்லை.

'பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே' என்பது நன்னூல் நூற்பா. நன்னூல் சுவாரசியமான வாசிப்புக்கானதோர் இலக்கண நூல். தமிழாசிரியர் பலர் இலக்கணம் கற்றுத் தந்தும் கெடுத்தனர், கற்றுத் தராமலும் கெடுத்தனர்.

'இல்லாத பொருளுக்குச் சொல்லேதும் இல்லை' என்று இரண்டு கிழமை முன்பே சொன்னோம். எல்லாச் சொல்லுக்கும் பொருள் உண்டென்கிறது தொல்காப்பியம். அந்த நூற்பாவை முன்பு வேறெங்கோ ஒரு கட்டுரையில் கையாண்ட போது, மெத்தப் படித்து மேதையாகிவிட்ட கவிதாயினி ஒருத்தர் ஐயம் எழுப்பினார், 'ஐயோ' எனும் ஒலிக்குறிப்புக்குப் பொருள் உண்டா என்று! 'ஐயோ' மாத்திரம் என்றல்ல, தமிழில் அந்தோ, மன்னோ, அம்மா, அம்ம, அரோ, மாதோ, அன்றே, அடா, ஆல், அன்னோ, கொல், எல்லே எனக் கணக்கற்ற அசைச் சொற்கள் உண்டு. செய்யுளின் ஓசை கருதி அவை ஆளப்பட்டாலும், சூழலைப் பொறுத்து வியப்பு, அச்சம், மகிழ்ச்சி, துயரம் என இடம் சார்ந்த பொருள் உண்டு. வான் முட்டப் பேசுவதைக் குறைத்துக் கொண்டு, வாசிக்கப் பழக வேண்டும். தமிழின் சொற்பரப்பு அத்தகையது. நவ படைப்பாளிகளின் சொல் 'இலம்பாடு நாணுத் தரும் எனக்கு!'

தமிழ்ச் செய்யுளுக்குள் எச்சொல் வரலாம் என்பதற்கு தொல்காப்பியத்தின் சொல்லதிகாரம், எச்சவியல் நூற்பா ஒன்று இலக்கணம் கூறுகிறது, 'இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என்று அனைத்தே செய்யுள் ஈட்டச் சொல்லே' என்று. பாடல் யாப்பதற்கான சொற்கள் நான்கு வகை. அவை இயற்சொல், திரிசொல், திசைச் சொல், வடசொல் என்பன. நான்கு வகைச் சொல்லையும் விரித்து எழுதினால் அவை தனித்தனிக் கட்டுரை ஆகும்.

எம்மொழியினுள்ளும் சொல்லுக்குப் பொருள் உண்டு, இலக்கணம் உண்டு, பயன்பாடும் உண்டு. பெருங்கவிகள் என்று தம்மைப் பாவித்துக் கொள்கிறவர்கள் எவராயினும் இதை உணர்வது அவசியம்.

சொல்லுக்கு எந்த வறுமைப் பாடும் இல்லாத மொழி தமிழ் மொழி. 'சோத்துக்குச் செத்தாலும் சொல்லுக்குச் சாகாதே' என்று தமிழ்க் கவிஞர்களைப் பார்த்து நானெழுதிய கவிதையும் ஒன்றுண்டு. எடுத்துக்காட்டுக்கு ஒரு சொல் பற்றிய நூற்பா, நன்னூலில் இருந்து. இன்று முன்னுரை என்று வழங்குகிறோம் அல்லவா, அந்தச் சொல்லின் மாற்றுச் சொற்கள் பற்றியது.

'முகவுரை, பதிகம், அணிந்துரை, நூன்முகம், புறவுரை, தந்துரை, புனைந்துரை, பாயிரம்' என்கிறார் பவணந்தி முனிவர். இச்சொற்களோடு பணிந்துரை சேர்த்துக்கொள்ளலாம். நூல் முகம் என்பதை முகநூல் என்று மாற்றிப் போட்டுப் பாருங்கள், சுவாரசியமாக இருக்கும்.

உலகத்து மொழிகளின் மேதைமைப் புலமைகள் ஆண்ட சொற்கட்டுமானங்களை விஞ்ஞானம் இன்று கேலி செய்கிறது. விஞ்ஞானம் இன்றியும் மானுட வாழ்வு இல்லை. விஞ்ஞானத்தில் வளர்ந்து வளர்ந்து வானத்து வெளிகளை ஆளும்போது, மொழியைச் சிதைத்து, சொல்லை உருமாற்றி ஆதிமனிதனின் ஒலிக் குறிப்புகளுக்குள் சென்று சேர்ந்து விடுவார் போலும்.

*Thanks* எனும் சொல்லை *Tx* என்றும் *You* எனும் சொல்லை *u* என்றும் ஆங்கிலத்தில் பயன்படுத்தும் பாணியிலேயே சகல மொழிகளிலும் புதுமொழி ஒன்று உருவாகி வருகிறது.



Thanks எனும் சொல்லை Tx என்றும் You எனும் சொல்லை u என்றும் ஆங்கிலத்தில் பயன் படுத்தும் பாணியிலேயே சகல மொழிகளிலும் புது மொழி ஒன்று உருவாகி வருகிறது.

பணியில் சேர்ந்து பத்தாண்டுகள் வரை, எழுதும் அலுவலகக் கடிதங்களைக் கையினால் எழுதி *Typing Pool*-க்கு அனுப்புவேன். எழுத்துப் பிழைகள் வராது. பின்பு பதவி உயர்ந்து, பவிசு கூடி, எனக்கென சுருக்கெழுத்தாளர் அருளப் பெற்று, கடிதங்களை

*dictate* செய்ய ஆரம்பித்தேன். இப்போது, தேவை கருதி மறுபடி எழுதும்போது *spelling*-ல் ஏகப்பட்ட சந்தேகங்கள் வருகின்றன. *Tough, Cough, Vogue* போன்ற எளிய சொற்களில் கூட. இன்று குறுஞ்செய்தி அடிப்பவர், எதிர்காலத்தில் கடிதம் எழுத நேரும்போது *u* என்றும், *Tx* என்றும் *urs* என்றும் பயன்படுத்தும் நிலைமை வரும்.

அண்மையில் 'உயிர் எழுத்து' இலக்கிய இதழில், எனக்கும் மூத்த படைப்பாளி - ஒரு வகையில் எனக்கு வழிகாட்டியுமான - வண்ணதாசன் 'நாபிக்கமலம்' என்றொரு கதை எழுதி இருந்தார். மிக அற்புதமான கதை. அது போன்றதொரு கதையை, அது போன்றதொரு ஆளுமை தான் எழுத இயலும். எனது மகிழ்ச்சியைச் சொல்ல, அவருக்கு ஒரு குறுஞ்செய்தி அனுப்பினேன், '*It is a great feet*' என்று. அவர் மறுமொழி தந்தார், 'நாஞ்சில், நல்லாருங்க... *Feat* என்பதை *Feet* என்று *Type* செய்துவிட்டீர்கள்' என்று.

தமிழை நாம் எத்தனை முயன்று சேதப்படுத்தினாலும், அதன் சொந்த முயற்சியில் அது வளர்ந்து செழித்துக்கொண்டுதான் இருக்கும். பலருக்கு ல, ள, ழ குழப்பம் ஆண்டுகள் பலவாகத் தீராமல் இருக்கும்போது, காலம், சோளம், ஆழம் போன்ற சொற்களில் வரும் ல, ள, ழ எனும் எழுத்துக்களுக்கு ஆங்கிலத்தில் *L* எனும் எழுத்தையே பயன்படுத்துகிறார்கள். ஆங்கில லிபியில் தமிழ்க் குறுஞ்செய்தி அனுப்பும்போது மொழியறிவு பல்கிப் பெருகிவிடும்!

சொல் என்பது சாதாரண விடயம் அல்ல. அது மந்திரம். 'சொல் ஒக்கும் சுடு சரம்' என்கிறார் கம்பர். 'சொல்லை ஒத்தஎரிக்கும் அம்பு' என்ற பொருளில். ஒரு சொல்லைப் பயன்படுத்தினால், அதை வெல்லும்படியான மற்றொரு சொல் இருக்கக் கூடாது என்கிறார் திருவள்ளுவர். 'சொல்லுக சொல்லை பிறிதோர்சொல் அச்சொல்லை வெல்லும்சொல் இன்மை அறிந்து' என்பது குறள். சொல்லை மண்ணை உழுது பண்படுத்தும் ஏருக்கு உவமை சொல்கிறார்.

'வில்லேர் உழவர் பகை கொளினும் கொள்ளற்க சொல்லேர் உழவர் பகை' என்பது குறள். வில் எனும் ஏர் கொண்டு உழும் வில்லாளியின் பகைகொண்டாலும், சொல் கொண்டு உழும் சொல்லாளியின் பகை கொள்ளாதே!

இடது முலையைத் திருகி எறிந்து மதுரையை எரித்தாள் கற்பின் கனலி கண்ணகி என்றால், 'எல்லையற்ற இந்த உலகங்கள்

யாவற்றையும் ஒரு சொல்லினால் சுட்டுப் பொசுக்குவேன்’ என்கிறார் கற்பினுக்கு அணியான சீதை. சொல்லின் தீவிரத்தைப் புலவன் கையாளும் தீவிரம் இது.

சொல் எனும் சொல்லே இன்றைய நேற்றைய பயன்பாடல்ல. அகநானூறும், ஐங்குறுநூறும், கலித்தொகையும், குறுந்தொகையும், திருமுருகாற்றுப்படையும், பதிற்றுப்பத்தும், பரிபாடலும், புறநானூறும், மதுரைக் காஞ்சியும் பயன்படுத்திய சொல் அது. ‘சொற்கள்’ எனும் சொல்லைக் கலித்தொகை சொல்கிறது. சொல்லுக்கு ‘நெல்’ என்ற பொருளும் உண்டு. சீவகசிந்தாமணி ‘சொல்’ எனும் சொல்லை, ‘நெல்’ எனும் பொருளில் பயன்படுத்துகிறது. திருவள்ளுவரும் நாம் முன்பு எடுத்தாண்ட குறளில் அந்தப் பொருளில்தான் பயன்படுத்தினாரோ என்னவோ? மாற்றிப் போட்டுப் பார்ப்போமா?

‘வில்லேர் உழவர் பகை கொளினும் கொள்ளற்க நெல்லேர் உழவர் பகை’ என்று. இது திருக்குறளைத் திருத்துவதல்ல; ரசிகமணி பாணியில் மாற்றியும் பொருள் கொண்டு பார்ப்பது.

சொல்லின் பொருள் ஆழம் குறிக்க, ‘சொல்லாழம்’ என்றொரு சொல்லுண்டு தமிழில். தமிழில் இறந்துபட்ட எத்தனையோ நூல்களில் ‘சொல்லகத்தியம்’ எனும் இசை நூலும் ஒன்று.



**சொல் ஆக்கும், சொல் அழிக்கும். நந்திக் கலம்பகம் பாடி மன்னனை எரியூட்டியதும் சொல்தான். அடைத்த கதவைத் திறக்கச் செய்ததும் சொல்தான்.**

திறமையாகச் சொற்களைக் கையாள்பவரைக் குறிக்க, ‘சொல்லின் செல்வன்’ என்றொரு சொற்றொடர் உண்டு நமக்கு. அனுமனைக் குறித்து வினவ, ராமன் வாயிலாகக் கம்பன் பயன்படுத்திய சொற்றொடர் அது. ‘யார் கொல் இச் சொல்லின் செல்வன்?’ என்று. ‘கொல்’ என்பது வியப்புப் பொருளில்

வரும் அசைச்சொல். சொற் பிரயோகத்துக்கான அழுத்தம் ஏற்படுத்துவது. ஓசை நிறைப் பது! இரண்டு முறை சொல்லிப் பாருங்கள்! 'யார் இச்சொல்லின் செல்வன்?' என்றும், 'யார் கொல் இச்சொல்லின் செல்வன்?' என் றும்! வேறுபாடு புரியும். வேறு பாடு புரியாதவர் சொல்லிக் கொண்டிருக்கலாம் அதெப்படி 'எல்லாச் சொல்லும் பொருள் உடைத்தனவே!' என்று. தொல் காப்பிய நூற்பாவைக் கேள்வி கேட்கும் ஆற்றல் அவர்க்கு உண்டு!

ராமன் கேள்விக்கு அனுமன் சொல்லும் பதிலும் அற்புத மானது. 'காற்றின் வேந்தர்க்கு அஞ்சனை வயிற்றில் வந்தேன், நாமமும் அனுமன் என்பேன்!' வாயு புத்திரன் என்றோ, வாயு பகவானின் வாரிசு என்றோ சொல்ல வராதா கம்பனுக்கு? எதற்காகக் காற்றின் வேந்தர்க்கு எனும் சொல்லாட்சி? அது கம்ப னின் சொல்லாட்சி!

கான மயிலாடக் கண்டி ருந்த வான்கோழி போல, நாம் யாரை வேண்டுமானாலும் பிளேட்டோ, சாக்ரடீஸ், இங் கர்சால், எமர்சன், பெர்னார்ட் ஷா என்று அழைக்கலாம். அது போலவே எத்தனையோ சொல் லின் செல்வர்களும் உண்டு நமக்கு!

திறமையாகப் பேசும் பெண்ணை 'சொல்லாட்டி' என்கிறது கலித்தொகை. 'சொல் லாட்டி நின்னொடு சொல்லாற்ற கிற்பார் யார்?' என்பது பாடல் வரி. 'திறமையாகப் பேசும் உன் னோடு எவரால் சொல்லாட இயலும்' என்பது பொருள்.

பிறமொழிச் சொற்களின் ஆற் றல் பற்றிப் பேச நான் ஆளில்லை. ஆனால் தமிழ்ச் சொல் பற்றிய அறிவு உண்டு. சொல் ஆக்கும், சொல் அழிக்கும். நந்திக் கலம்ப கம் பாடி மன்னனை எரியூட்டிய தும் சொல்தான். அடைத்த கதவைத் திறக்கச் செய்ததும் சொல்தான். கூழைப் பலா தழைக்கப் பாடியதும் சொல் தான். பாரதி, 'சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே!' என்கிறார்.

தமிழ்க் கடவுள் முருகன், 'நற்ற மிழால் சொற்றமிழால் நம்மைப் பாடு' என்கிறான். நமச்சிவாயத் திருப்பதிகத்தில் திருநாவுக்கர சர், 'சொற்றுணை வேதியன் சோதிவானவன்' என்கிறார். திருத்தாண்டகத்தில், 'சொல்லா னைப் பொருளானைச் சுருதியா னைச் சுடர் ஆழி நெடுமாலுக்கு அருள் செய்தானை அல்லா னைப் பகலானை அரியான் தன்னை அடியார்க்கு எளியா னை' என்கிறார். 'சொல்லாய், பொருளாய், வேதமாய் விளங் குபவன். சுடர் போன்ற சக்கரப்

படையை நெடுமாலுக்கு அளித்தவன். இரவாகப் பகலாக விளங்குபவன். ஆனால் அடியவர்க்கு எளியவன்'. அப்பரின் எடுப்பில் முதல் பதம், 'சொல்லானை' எனும்போது சொல்லின் உயர்வு பொருளாகும்.

கம்பராமாயணத்தில் 6 காண்டங்களும் 118 படலங்களும், 10,368 பாடல்களும், 1,293 மிகைப் பாடல்களும் எழுத்தெண்ணிப் படித்திருக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை, வாலியைத் தெரிந்து வைத்திருக்க. ஈண்டு நாம் வாலி என்பது சினிமாவில் ஆன்மிகப் பாடல்களும் ஆபாசப் பாடல்களும் எழுதிய பாடலாசிரியர் வாலியை அல்ல. ராமாயணத்து வாலியை. சிவபெருமானின் வில்லையே உடைத்த, தீ உமிழ்கின்ற கொடிய செஞ்சரங்களைத் தொகுத்துத் தொடுக்க வல்ல, கரிய செம்மலான ராமன் நேருக்கு நேர் நின்று போர் செய்ய அஞ்சிய குரங்கு இனத்து வேந்தன், மாவீரன் வாலியை.

மறைந்து நின்று ராமன் எய்த அம்பினைக் கைகளால் பற்றி, அது மேற்கொண்டு துரந்து உள்ளே செல்வதைத் தடுத்து நிறுத்தி, 'அழுத்தும் இச்சரம் எய்தவன் ஆர் கொல்?' என்று வலியும் கோபமும் வருத்தமும் வியப்புமாக ஐயுற்ற வாலியின் கூற்றாகக் கம்பனில் பாடல் ஒன்றுண்டு.



> புத்தகக் கண்காட்சி வாசலில் கொடுக்கப்பட்ட விளம்பர நோட்டீசுகள் மைதானம் எங்கும் குப்பை போல இறைந்து கிடப்பதைப் போன்று, பயனற்ற, பொருளற்ற சொற்கள் யாங்கணும் இறைந்து கிடக்கின்றன.

பாடல் எண் -4007, கோவை கம்பன் கழகப் பதிப்பு. கவிச் சக்கரவர்த்தி கம்பனின் சொற்களில் சொன்னால், ' "வில்லினால் துரப்ப அரிது, இவ்வெஞ்சரம்" என வியக்கும் "சொல்லினால் நெடு முனிவரோ தூண்டினார்" என்னும்;'

வலிய வாலியின் ஆற்றலைத் துரந்து செல்லும் இக்கொடிய

அம்பு, எந்த மாபெரும் வில்லாளியின் வில்லிலிருந்து ஏவப்பட்டதாக இருக்க வழியே இல்லை. இந்த அம்பு வாலியின் உரம் கிழித்து ஏக வல்லதாக இருக்கிறது. எவனோ ஒரு நெடிய தவத்தினை உடைய முனிவன் தனது சொல்லினால் தூண்டப்பட்ட அம்பாக இருக்க வேண்டும்!

ஆம்! சொல்லினால் ஏவப்பட்ட அம்பு, வாளி, சரம், ஆவம், கோல், கணை, பகழி...

இதுதான் சொல்லுக்கான ஆற்றல். சொல் என்பது *AK-47* போன்ற வலுவான இயந்திரத் துப்பாக்கி. கண்டம் விட்டுக் கண்டம் பாயும் *Inter Continental Ballistic Missile.*

அத்தகு ஆற்றல் உடைய சொல்லைத்தான் நாம் மாங்காய் பறிக்கவும் எலியை அடிக்கவும் கண்டாங்கி பாச்சாவைக் கொல்லவும் பயன்படுத்துகிறோம் இன்று. புத்தகக் கண்காட்சி வாசலில் கொடுக்கப்பட்ட விளம்பர நோட்டீசுகள் முகப்பு மைதானம் எங்கும் குப்பை போல இறைந்து கிடப்பதைப் போன்று, பயனற்ற, பொருளற்ற சொற்கள் யாங்கணும் இறைந்து கிடக்கின்றன. அரசியல் மேடைகளில், மதப் பிரசங்க சபைகளில், பட்டிமண்டப வாத அரங்குகளில், பாராட்டு விழாக்களில், புத்தக வெளியீட்டு விழாக்களில் இலையுதிர் காலத்துச் சருகுகள் போல் உதிரும் சொற் குப்பைகள். கூட்டிக் கூட்டி, பெருக்கிப் பெருக்கி, வாரி வாரி அள்ளினாலும் மாயாத குப்பை. அதிகக் குப்பை உதிர்க்கிறவர் சொல்லின் செல்வர், கவிகளின் ஷா-இன்-ஷா, திரு நாக்குக்கு வேந்து, கலைவாணியின் கடைக்கண் பார்வை பட்டவன்.

பெரும் சத்தத்துடன் குப்பை உதிர்க்கிறவனும், அதிகக் குப்பை உதிர்க்கிறவனும், நெடு நேரம் குப்பை உதிர்க்கிறவனும் இங்கு ஆரவாரமான அரசியல் முதலாளிகள்.

தமிழ் மறை என்றும் பொய்யா மொழி என்றும் பொது மறை என்றும் உத்தரவேதம் என்றும் தமிழனின் சொத்து என்றும் கொண்டாடப்படும் திருக்குறள் சொல்கிறது, பயனில சொல்லாமை அதிகாரத்தில்... 'பயனில் சொல் பாராட்டுவானை மகன் எனல் மக்கட் பதடி எனல்' என்று. 'பயனற்ற சொற்களைக் கொண்டாடுகின்றவனை, மனிதன் என்று கூட மதிக்காதே, மனிதப் பயிரில் மணியாகத் தேறாத பதர், குப்பை என ஒதுக்கு' என்று.

நீங்களே முடிவெடுத்துக் கொள்ளுங்கள், நம் தலைவர்கள் மணிகளா... பதர்களா... என்பதை!

**- கற்போம்...**

நாஞ்சில் நாடன்

ஓவியம்: மருது

‘தூது’ என்பது 96 வகை சிற்றிலக்கியங்களில் ஒன்று. செய்தி சொல்லவும் மறு செய்தி வாங்கி வரவும் தூது அனுப்பப்பட்டது. நட்பு நாட்டு, பகை நாட்டு வேந்தருக்கும், குறுநில மன்னர்களுக்கும் அரசர்கள் தூது அனுப்பினார்கள். எந்தச் செய்தியையும் பகிர்ந்து கொண்டார்கள்.

‘தூது’ என்பது தொல் தமிழ்ச் சொல். சங்க இலக்கியங்களில் அகநானூறு, ஐங்குறுநூறு, கலித்தொகை, குறுந்தொகை, நற்றிணை, பரிபாடல், புறநானூறு ஆகிய நூல்கள் ‘தூது’ எனும் சொல்லைப் பயன்படுத்தியுள்ளன.





திருக்குறளில் 'தூது' என்றொரு அதிகாரமே உள்ளது. 'தொகச் சொல்லித் தூவாத நீக்கி நகச் சொல்லி நன்றி பயப்பதாம் தூது' என்கிறது திருக்குறள். 'செய்திகளைத் தொகுத்துச் சொல்வதும், தேவையற்ற செய்திகளை நீக்கிச் சொல்வதும், எதையும் மனம் கொள்ளுமாறு சுவைபடச் சொல்வதும், நலம் தேடித் தருவதுமே தூது'. தூது போன இடத்தில் இழவு இழுத்து விடுபவன் தூதுவன் அல்ல.

1969 வரை தமிழில் தெரிய வந்துள்ள தூது நூல்கள் 127. அவற்றுள் எத்தனை அச்சு வடிவம் பெற்றன, இன்று அச்சு வடிவத்தில் கிடைப்பன எத்தனை, அவற்றுள் எத்தனை வாசிக்கப் பெறுகின்றன என்று பேசப் புகுந்தால் அது முனைவர் பட்ட ஆய்வு ஆகிவிடும். அதைக்கூட வாசித்து விடுவோமா நாம்?

மனிதர்களைத் தூது அனுப்பியது போக பலவற்றையும் தூது அனுப்பிய செய்திகளை இலக்கியங்கள் பேசுகின்றன. 'தூதுக்கான பொருட்கள் பத்து' என மரபு இலக்கணம் பேசுகிறது. ஆனால் இலக்கியம் என்பதே மரபை மீறுவதுதானே! பறவைகளில் அன்னம், கிளி, குயில், மயில், பஞ்சவர்ணம், காக்கை எனத் தூது அனுப்பி இருக்கிறார்கள். வண்டு தூது போயிருக்கிறது. மேகம், தென்றல், காதல் நெஞ்சம், தமிழ், மான், மாரி, அன்பு என்பன தூது நடந்திருக்கின்றன. ஆடலும் பாடலும் அறிந்த விறலி தூது போயிருக்கிறாள். மறலி எனப்படும் யமன் தூது போயிருக்கிறான். கமலம், சவ்வாது, துகில், தாதி, நங்கை, மாது, பணம், பாக்கு, பாவை, பிள்ளை, புலவர், பூவை, பொன், மலர், வஞ்சி, வெற்றிலை என தூது அனுப்பப்பட்டிருக்கின்றன. நெல்லும் பழையதும் தூது போயிருக்கிறது. படுக்கையும் புகையிலையும் தூது போயிருக்கிறது. கழுதைகூட தூதுக்குப் பயன்பட்டிருக்கிறது. பிற்காலத்தில் தந்தி தூது போயிருக்கிறது. இவ்வாறு கண்டது கடியது யாவும் தூதுப் பொருட்களே!

காதலுக்கும், காமத்துக்கும், பொன் - பொருள் வேண்டியும், மனைவியின் ஊடல் தீர்க்கவும், இறையருள் வேண்டியும் தூது அனுப்பினர். 'பாண்டவர்க்காய்த் தூது நடந்தானை' என்று பார்த்தனைப் பாடி இருக்கிறார்கள். தூதுவனின் இலக்கணங்கள் பேசப்பட்டிருக்கின்றன.

எவரால் எவருக்குத் தூது அனுப்பினாலும், நோக்கம் செய்தி சொல்வதுதான். ஓட்டக்காரர்கள், குதிரைக்காரர்கள் என ஓலை சுமந்து சென்ற காலம் போக, தபால் இலாகா வந்தது.

பிறகு தந்தி வந்தது. தனியார் நடத்தும் தூதஞ்சல் வந்தது. மின்னஞ்சல் வந்தது. பின்னர் குறுஞ்செய்திகள் அனுப்பும் முறையும் வந்தது.

வேகம், சுருக்கம், உடனடி என்பன குறுஞ்செய்திகளின் தீவிரப் பயன்கள். முன்பெல்லாம் இது போன்ற வசதிகள் இல்லை. இன்று நினைத்தால், நினைத்த மாத்திரத்தில் ஆயிரக்கணக்கான கல் தொலைவுக்கு அனுப்பி விட முடிகிறது. ஊராட்சி மன்றத்தின் உள் எல்லை ஆனாலும் கண்டம் விட்டுக் கண்டம் தாண்டியும். தூர தொலைவில் இருக்கும் நண்பருக்கு, மக்களுக்கு plz call என்று செய்தி அனுப்புவது சாத்தியம் ஆகிறது.

1972ம் ஆண்டின் நவம்பர் மாத மத்தியில் என்னைத் தனியாக பம்பாய்க்கு அனுப்பினார்கள், இரண்டாயிரம் கிலோமீட்டர் தாண்டி. எம்.எஸ்சி தேறியிருந்தும், ஊரில் பிழைக்க வழியில்லாத ஊழல் சூழல். வீரநாராயணமங்கலம் என்னும் 120 வீடுகள் கொண்ட ஆற்றங்கரைச் சிற்றூரில் இருந்து, இந்தியாவின் பெருநகரம் பம்பாய்க்கான எனது பயணம். ஒன்றே முக்கால் மணி நேரத்துக்கு ஒரு முறை வந்து திரும்பும் டவுன் பஸ் பிடித்து நாகர்கோயில். அங்கிருந்து திருநெல்வேலி பஸ். கண் கலங்கி, தோள் தட்டி, 'பாத்துப் பத்திரமாப் போ... போய்ச் சேந்து கடுதாசி போடு தாயமாட்டாம' என்று கையசைத்துச் சென்று விட்டனர் வழியனுப்ப வந்தவர் எல்லாம். 89 கிலோமீட்டர் தூர திருநெல்வேலிக்கு, மூன்று மணி நேரம். அங்கிருந்து ரயில் நிலையம், ரயில் புறப்படும் தளம், பெட்டி தேடி இருக்கை அடைந்து... மாலை அமர்ந்தால் மறுநாள் காலை சென்னை எழும்பூர். எழும்பூரிலிருந்து



பஸ் பிடித்து சென்னை சென்ட்ரல். அங்கு தளம் தேடி, ரயில் தேடி, பெட்டி தேடி, இருக்கை தேடி... மாலை புறப்பட்ட ரயிலில் முப்பத்தாறு மணி நேரப் பயணம். பம்பாய் சென்ட்ரல் ரயில்வேயின் இறுதி ஸ்டேஷனான விக்டோரியா டெர்மினஸில் இறங்கும்போது மூன்று நாட்கள் ஆகிவிட்டிருந்தன. நினைவில் கொள்ளுங்கள், புறப்பட்ட அன்று காலை ஊரில் குளித்ததுதான். இன்று விமானத்தில் 24 மணி நேர அமெரிக்கப் பயணத்துக்கு ஆயாசப்படுத்துகிறார்கள் நம்மை.

ஊரில் கையசைத்த பெற்றோருக்கு மூன்றாவது நாள் பொறுத்து பம்பாயில் இறங்கி, தெரிந்தவர் குடியிருப்புக்குப் போய், உள்நாட்டுக் கடித உறை வாங்கி, எழுதித் தபாலில் சேர்த்து, ‘நலமாக பம்பாய் வந்து சேர்ந்தேன்’ என்ற தகவல் போய்ச் சேர பத்து நாட்கள். ஊரில் அன்று தொலைபேசி எவர் வீட்டிலும் இல்லை. வேண்டுமானால் தந்தி அடித்திருக்கலாம். நாம் பேச வந்த விடயம், 1972ல் இது எங்கள் நிலைமை என்பதைச் சுட்ட.

இன்றைய அறிவியல் வளர்ச்சி நம்மை வாய் பிளக்க வைக்கிறது. பிளந்த வாயினுள் குழலி புகுந்து வெளிப்போந்தும் விடுகிறது. வீட்டில் இருந்து ஐந்து நிமிடம் நடந்து பேருந்து பிடித்தவுடன், ‘*Got Bus*’ என்று குறுஞ்செய்தி அனுப்புகிறார்கள். வீட்டுக்கு வர நேரமாகும், சாப்பிட்டுவிட்டு வருவேன், கேட்ட பொருள் கிடைக்கவில்லை என்று மணிக்கு மணி அனுப்பலாம். தகவல்தொடர்பு சாதனங்களின் வளர்ச்சியும் மலிவும்! பள்ளி மாணவர் இருபாலரும் வீட்டை விட்டு இறங்கி, தெருமுக்குத் தாண்டியதும் அலைபேசியைக் கைக்கொள்கிறார்கள். பள்ளித் தோழர்-தோழியருக்குச் சேதி சொல்வார்களாக இருக்கலாம்.

நாகர்கோவிலில் ஒரு நாள் தம்பி வீட்டில் இருந்தபோது, முழு ஆண்டுத் தேர்வுகள் நடந்து கொண்டிருந்த சமயம், பதினொன்றாம் வகுப்பில் வாசித்துக் கொண்டிருந்த தம்பி மகனுக்கு ஒரு குறுஞ்செய்தி, ‘*Today what exam?*’ என்று. நல்லவேளை அன்று என்ன தேர்வு என்று மட்டுமே ஞாபகத்தில் இல்லை அவனுக்கு. அவன் வாசிக்கும் வகுப்பு நினைவில் இருந்தது.

உயர்நிலைப் பள்ளி மாணவருக்கு உரையாற்றச் செல்லும்போது பொதுவாக மாணவியருக்கு நான் சொல்லும் அறிவுரை, ‘குறுஞ்செய்தியாளரிடம் கவனமாக இருங்கள்’ என்பது. சீருடை அணிய வேண்டும் என்ற நெருக்




கடி இல்லாத சில நாட்களில் வண்ண ஆடைகள் அணிந்து போகும் அவருக்கு முதலில் ஒரு குறுஞ்செய்தி போகும், *'ur dress good'* என்று. பதிலாக *'Tx'* என்றால் அடுத்த செய்தி *'u r beauty'*. அதற்கும் *'Tx'* என்று பதிலிறுத்தால் மூன்றாம் செய்தி *'u r angel'*. தொடர்ந்து போய்க்கொண்டே இருந்தால், ஏழாவது நாள் *'L u'*, எட்டாவது நாள் *'Kis u'*. ஒன்பதாம், பத்தாம் நாள் என்பன சூரபதுமன் தலை போல் வெட்ட வெட்டக் கிளைக்கும். பன்னிரண்டாம் வகுப்பில் படிக்கும் கன்னிகை தனது அந்தரங்க ஆடைகளுடன் செல்ஃபி எடுத்து அதே வகுப்பில் படிக்கும் காதலனுக்கு அனுப்பிய முன்னுதாரணங்கள் உண்டு. போன ஆண்டில், கத்தோலிக்கத் திருச்சபைப் பிரிவு ஒன்றின் இல்லத்தில் ஒன்பது நாட்கள் தங்கியிருந்து 18,000 மாணவ மாணவியருக்கு அசெம்பிளியின்போது பேசினேன். உரை முடிந்த பின் பள்ளித் தலைமை ஆசிரியர்களாக இருந்த அருட் சகோதரிகளுடன் உரையாடியபோது அவர்கள் கவலையுடன் பகிர்ந்துகொண்ட அனுபவங்கள் தந்த வருத்தத்தில் பேசுகிறேன் இவற்றை.

எனது இரவு நேர ரயில் பிரயாணங்களில் இரவு இரண்டு மணிக்கும் பெர்த்தில் படுத்துக்கொண்டு குறுஞ்செய்தி அனுப்பும் இருபால் இளைஞரைக் கண்டதுண்டு. 'நீரு எதுக்குவே அதுவரைக்கும் ஒறங்காமக் கெடந்தேரு?' என்று கேட்கக் கூடாது. அத்தனை நேரம் விழித்திருந்து என்ன ஐயம் தெளிவார்கள்? பென்டகனுக்கும் நாசாவுக்கும் ஆலோசனை சொல்வார்களா? அல்லது இந்திய தேச நலனுக்காக முக்கிய முடிவுகள் எடுப்பார்களா?

எனது பேருந்துப் பயணங்களில், பக்கத்து இருக்கையில் அமர்ந்து அசாதாரண வேகத்துடன் குறுஞ்செய்தி அனுப்பும் இளைஞர்களைக் கவனித்திருக்கிறேன். பத்து பெண்களுக்கு தூண்டில் வீசுவதைப் போல, படபடவெனக் குறுஞ்செய்திகள் பறக்கின்றன. மூன்று மீன்கள் கடிக்கின்றன. ஒன்றேனும் சிக்கும். அன்றைய பயணப் பொழுதுபோக்குக்கு ஆயிற்று. 'ஓய்ந்த வேளையில் விபசாரம் செய்தால் உப்புப் புளி மிளகுக்காச்சு' என்றதைப் போல... வெளியே வேடிக்கை பார்க்கக் கூட பொழுதில்லை. சந்தையில் குண்டு வெடித்து எத்தனை பேர் செத்தால் யாருக்கு என்ன?

ஒரு குறுஞ்செய்தி அனுப்ப முப்பது நொடிகள், மறுமொழி வாங்க முப்பது நொடிகள் என்று தோராயமாகக் கணக்கில் கொண்டாலும், நாளுக்கு ஒன்றரை மணி நேரம் செத்துப் போகும். தவிர நேரடியாக வெட்டியாகப் பேசும் நேரம். நகரப் பேருந்துகளில் ஏறிய உடன் செல்பேசியை எடுத்து, எண்ணைத் தடவி, தொடர்பு கிடைத்ததும் கேட்கும் முதல் கேள்வி, 'என்னடா மச்சி, படத்துக்குப் போலாமா?'

குறுஞ்செய்தி அனுப்பியும், பேசியும், படம் பார்த்தும், சேனல்கள் தாவியும், நள்ளிரவுக் கிரிக்கெட் பார்த்தும் போக்கிக் கொண்டிருக்கிறோம் வாழ்வின் பெரும் பகுதியை! திரும்ப வாய்ப்பே இல்லாத நேரங்களை! ஆண்டாண்டு காலம் அழுது புரண்டாலும் மாண்ட மணித்துளிகள் மீண்டு வருமோ மாநிலத்தில்? 'அரிது, அரிது, மானுடராகப் பிறத்தல் அரிது' என்கிறாள் ஔவை. அரிதாகப் பிறந்த மானுடப் பிறப்பை, உதவாத குறுஞ்செய்திகள், வெட்டிப் பேச்சு, எப்பயனும் இல்லாத திரைப்படங்கள், சேனல்களில் தொலைக்கிறோமா? 'நீரழிவு, சீரழிவு' என்பார்கள். இங்கு நீரழிவு என்பது பாழாய்த் தண்ணீரைச் செலவு செய்தல். நீரிழிவு என்றால் டயாபெடிக். பாழாகத் தண்ணீரைச் செலவு செய்தலே சீரழிவு எனில், பாழாய் நேரத்தைச் செலவு செய்தல் எந்த வகையான இழிவு. பேரிழிவு அல்லவா?

குறுஞ்செய்தி அனுப்பக் கூடாது என்பதல்ல. செய்தியாக என்ன அனுப்புகிறோம் என்பது தான். பிலாஸ்பூரில் இருந்து நண்பர் ஒருவர் கோவையில் வாழும் எனக்கு மத்தியானம் மூன்று மணிக்குச் செய்தி அனுப்புகிறார், 'சாப்டாச்சா?' நான் சாப்பிட்டிராவிட்டால் அவரால் என்ன செய்ய இயலும்? ஒரு தயிர் சாதம்

வாங்கித் தர இயலுமா? இப்படித்தான் போகிறது நம்பொழுது நமச்சிவாயா!

எனக்குத் தோன்றும்... தினமும் எதற்காக, 'இனிய காலை வணக்கம்' பொருளற்று? செப்டம்பர் முதல் நாளன்று 'இனிய காலை வணக்கம் x 30' என்று ஒரே செய்தியாக அனுப்பினால் உமக்கும் எமக்கும் எவ்வளவு நேரம் மிச்சம்?

கிராமங்களில் ஐம்பது வயது தாண்டிய பலருக்கும் பிறந்த நாள் என்றே ஒன்று நினைவுக்கணக்கில் இல்லை. அவர்கள் 'ஹேப்பி பெர்த் டே' என்று கூவுவதும் இல்லை, கேக் வெட்டுவதும் இல்லை. இன்று பிறந்த நாள், மண நாள், ஆசிரியர் தினம், தாயார் தினம், தந்தையர் தினம், காதலர் தினம்... குறுஞ்செய்தி அனுப்ப என்றே தினங்கள் கண்டுபிடிப்பார்கள் போலும்! இப்படியே போனால் 365ல் எத்தனை மிச்சம் இருக்கும்?

அண்மையில் எனக்கொரு குறுஞ்செய்தி. ஒரு கார் கம்பெனி, அவர்களுடைய வாகனத்தை நான் தொடர்ந்து பயன்படுத்தி ஊக்குவிப்பதால் எனக்கு 3.80 மில்லியன் டாலர் பரிசு வழங்க முடிவெடுத்திருக்கிறார்களாம். எனது மின்னஞ்சல் முகவரியில் இருந்து என் ஒப்புதலைத் தெரிவிக்க வேண்டுமாம். நான் உபயோகிக்கும் நகரப் பேருந்துகள் அசோக் லேலண்ட் நிறுவனத்தினருடையது. தமிழ்நாடு அரசாங்கத்துக்குச் சொந்தமான வாகனங்கள். மின்னஞ்சல் அவர்கள் எனக்கு எதற்கு அனுப்பப் போகிறார்கள்? மில்லியன் என்றால் பத்து லட்சம்தானே! அமெரிக்கன் டாலர் இன்றைய விலை 65 பணமா? மனம் கணக்குப் போட்டுப் பார்க்கிறது. உத்தேசமாக 24 கோடி.




ஒரு மனம் சொல்கிறது, 'என்னைப் பெத்த அம்மா! எனது சகலவிதமான பொருளா

தாரப் பிரச்னைகளும் ஐந்து லட்சத்துக்குள் முடிந்து விடுமே! மிச்சப் பணத்தை என்ன செய்ய?' என்று. இன்னொரு மனம் சொல்கிறது, 'ப்பூ... இதெல்லாம் ஒரு பணமா? முட்டாப் பயல்கள் அரசியலில் நுழைந்து ஆயிரக்கணக்கான கோடிகள் அடித்து மாற்றுகிறார்களே' என்று. மற்றொரு மனம் கேட்கிறது, 'யானை தூறுவது போல, ஆட்டுக்குட்டி தூற முடியுமா?' என்று. மறைந்த எழுத்தாளர் நகுலன் சொன்னதைப் போல, 'இந்த மனதை வைத்துக் கொண்டு ஒன்றும் செய்ய முடியாது!'

இன்னொரு சங்கதி. எனக்கு குறுஞ்செய்தி வந்த மொபைல் எண் இந்திய எண். அவர்கள் எதற்கு டாலரில் பணம் தர வேண்டும்?

நாடாளுமன்றத்தில் உரையாற்றிக் கொண்டிருந்தபோது, இந்திய நிதியமைச்சருக்கு ஒரு குறுஞ்செய்தி வந்ததாம், 'வீடு கட்டக் கடன் வேண்டுமா' என்று கேட்டு. இந்தியத் திருநாட்டின் அரசியல்வாதி எவரும் கடன் வாங்கும் நிலையிலா இருக்கிறார்? அவர்கள் உலக வங்கிக்கே கடன் தருவார்களே!

பல சமயங்களில் மேடைச் சொற்பொழிவாளர்களின் அலுப்புத்தாங்காமல் வெளியே எழுந்து போகவும் மரியாதை இடம் தராமல், ரத்தம் கசிய உட்கார்ந்திருக்கும்போது, அரங்கில் நமக்குப் பின்னால் இருக்கும் எவரோ குறுஞ்செய்தி போடுவார்கள் - 'சொற்பொழிவாளரைக் கத்தியால் குத்தலாமா, வாளால் வெட்டலாமா' என்பது போல. அந்தக் குறுஞ்செய்தி நம் சுவாசத்தைச் சீராக்க உதவும். 'ஒரு பீரியட் பேசுவாரா', 'கட்டுச் சோறு கொண்டு வந்திருக்கலாமோ', 'கடைசிப் பேருந்து கிடைக்குமா' என்று மற்றும் சில எடுத்துக்காட்டுகள். எனது நண்பர், இலக்கிய ஆன்மிகச் சொற்பொழிவாளர் மரபின் மைந்தன் முத்தையா அரங்கில் இருந்தால் பேச்சைக் கவனிக்காமல் குறுஞ்செய்திகளை வாசிக்கலாம். சில சமயம் நான் ஒலிவாங்கி முன் நின்று பேசிக் கொண்டிருக்கும் போது எனக்கே குறுஞ்செய்தி அனுப்புவார் - 'கும்பமுனி இன்னும் வெளியே வரவில்லையே' என்று.

விஞ்ஞான வளர்ச்சியில் தொலைக்காட்சி சேனல் என்று இல்லை, சகலவிதமான அத்துமீறல்களையும் சகித்தே வாழ வேண்டியதுள்ளது! என்றாலும் நம் தோட்டத்தில் அடுத்தவன் நாற்றுப் பாவி, பறித்து நட்டு, காய் பறித்துக் கொண்டு போக அனுமதிக்கலாமா?

நாற்பது தாண்டிய முதுமரங்க

ளைப் பற்றி நாம் அதிகம் கவல வேண்டியதில்லை. ஆனால் மாணவரைப் பற்றி எச்சரிக்கையாக இருப்பது அவசியம் ஆகிறது. 'இளையதாக முள்மரம் கொல்க' என்கிறார் திருவள்ளுவர். முட்செடி, நம் மனையில் வளருமானால், அது சிறு கன்றாக இருக்கும்போதே பிடுங்கி எறிவது நல்லது!

எல்லா மாதமும் நாலாம் தேதி எனக்கொரு குறுஞ்செய்தி வரும். 'உங்கள் கடன் தவணை ரூ. 4999/- ஏழாம் தேதி வருகிறது. உங்கள் வங்கியில் போதுமான இருப்பு வைத்திருங்கள்' என்று. பத்தாம் தேதி இன்னொரு குறுஞ்செய்தி வரும். 'இதுவரை உங்கள் இம்மாதத் தவணை செலுத்தப்படவில்லை. காலதாமதமானால் உங்கள் ரேட்டிங் பாதிப்படையும்' என்று. பதினைந்தாம் தேதி மூன்றாவது குறுஞ்செய்தி - 'இன்னும் மூன்று தினங்களுக்குள் பணம் செலுத்தப்படாவிட்டால் விரும்பத்தகாத சம்பவங்களைச் சந்திக்க வேண்டியது இருக்கும்' என. நான் பதில் செய்தி அனுப்பினால் போகவே செய்யாது. இரண்டாண்டுகளாக எனக்கிந்த துன்பம். நீங்கள் கேட்பீர்கள், 'கடன் வாங்கினால் திருப்பிக் கட்ட மாட்டீரா?' என்று. ஒரூரில் இருக்கும் அந்த நிதி நிறுவனத்தின் பெயரைக் கூட

**இந்தியத் திருநாட்டின் அரசியல்வாதி எவரும் கடன் வாங்கும் நிலையிலா இருக்கிறார்? அவர்கள் உலக வங்கிக்கே கடன் தருவார்களே!**

நான் கேள்விப்பட்டதில்லை. எந்தக் கடனும் அவர்களிடம் நான் பெற்றதில்லை. நான் கைந்து சந்தர்ப்பங்களில், அந்த நிதி நிறுவனத்தின் உயரதிகாரிகளின் அலைபேசி எண் வாங்கிப் பேசவும் செய்தேன். 'இன்னா, அன்னா' என்றார்கள். இதுவரை கதிமோட்சம் இல்லை.

எனது அச்சம், வழக்கமாக வாராக்கடன் வசூலிக்க அனைத்து நிதி நிறுவனங்களும் அடியாள் கும்பல் வைத்திருக்கிறார்கள். ஒரு நாள் நள்ளிரவில், வீட்டுக்கு முன்னால் டெம்போவில், தமிழ் சினிமாப் பாணியில் அடியாட்கள் வந்து இறங்கி விடுவார்களோ என்பது. அவர்கள் பின்னால் அரசியல்வாதி எவனும் பலமாக இருக்கலாம். சாதாரணக் குடிமகனுக்குத் தெய்வம் அன்றித் துணை எவர்?

**- கற்போம்...**

# தமிழின் அளவு

**நாஞ்சில் நாடன்**

ஓவியம்: **மருது**

சில ஆண்டுகளாக, உயர்நிலைப் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுடன் உரையாடுகிறேன். கோவையின் புகழ்பெற்ற பொறியியல் கல்லூரித் தமிழ் மன்றத்தில் துவக்க உரையாற்றப் போனபோது சொன்னேன், “பெரியவர்களை இனி செதுக்கவோ, இளக்கவோ, கரைக்கவோ இயலாது. உடைக்கத்தான் முடியும். அந்த அளவுக்கு சிந்தனைப் பாறையாக உறைந்து போனவர்கள்” என்று. என் முன்னால் அமர்ந்திருந்த கல்லூரி தாளாளரும் கோவையின் பெருந்தகைகளில் ஒருவருமானவர் கேட்டார், “அப்ப எங்களுக்குப் பேச மாட்டீங்களா?” என்று. “பேசிப் பயனில்லை” என்றேன்.



மாணவர்கள் இன்று அவர்களுக்கான சிக்கல்களுடன் இருந்தாலும், எவரும் திருத்த முடியாத அளவுக்கு விஷம் ஏறியவர்கள் இல்லை. பலரும் சரியாகத்தான் சிந்திக்கிறார்கள் என்பதில் எந்த ஐயமும் இல்லை. ஒரு கல்வி ஆண்டில் 50 ஆயிரத்துக்கும் குறைவில்லாத மாணவர்களுடன் உரையாடும்போது என் நம்பிக்கை வளர்கிறதேயன்றித் தேய்வதில்லை. இனி கெடுக்க இடமேயில்லை எனும் அளவுக்கு இந்த தேசத்தை நச்சுப்படுத்தி வைத்திருந்தாலும், இளையவர்கள் விஷம் முறித்து மீட்டெடுப்பார்கள் என்பதில் தெளிவும் உறுதியும் உண்டெனக்கு.

உண்மையில் எம் கவலை யாவும் ஆசிரியர்களைப் பற்றியும் பேராசிரியர்களைப் பற்றியும் தான். சில ஆண்டுகளுக்கு முன்பு கோபிசெட்டிப்பாளையத்தில் ஒரு மகளிர் கல்லூரி தினத்துக்குப் பேசப் போனேன், கோவையிலிருந்தே நண்பரின் வாடகைக் காரில். சுமார் 950 மாணவியர். பேசி முடித்து, விடுதியில் சாப்பிட்ட பிறகு, பேராசிரியர்கள் எம்மை வழியனுப்பத் தயாரான போது, பத்திருபது மாணவியர் எம்மைச் சூழ்ந்துகொண்டனர். “ஐயா! எங்களுடன், ஒரு வகுப்பறையில் அமர்ந்து கொஞ்ச நேரம் உரையாட முடியுமா?” என்றனர். பேராசிரியர் ஒருவர் சொன்னார், “இல்லம்மா... சாருக்கு நெறைய வேலை இருக்கு... அவர் பொறப்பிடட்டும்!”

என் நண்பரும் தோழரும் போராளியும் வாடகைக் கார் உரிமையாளருமான சேவூர் வாசுதேவனிடம் கேட்டேன், “என்னங்க! இருந்துட்டுப் போலாமா?” அவர் சொன்னார், “இருக்கலாமுங்க” என்று.

சின்ன வகுப்பறை. ஓரமாய் எனக்கொரு நாற்காலி. அறை முழுக்க அறுபதுக்கும் மேற்பட்ட மாணவியர். “சித்தப்பா, பெரியப்பா, தாய் மாமாகிட்ட பேசுவது போல, கூச்சப்படாம என்ன வேணுமானாலும் கேளுங்கம்மா!” என்றேன். அன்றைய உரையாடல் எனக்கு மிகவும் நிறைவாக இருந்தது. எனது நற்பேறு, கடந்த 15 ஆண்டுகளாக, 12வது வகுப்புத் துணைப்பாடத்தில் எனது சிறுகதை ஒன்று பாடமாக இருந்து வருவது. மாணவியர் பெரும்பாலோர் என்னை அறிந்தவர்களாக இருந்தனர்.

வீடு திரும்புகையில் மதுரைப் பெண்கள் கல்லூரி ஒன்றுக்குப் பேசப் போனது என் கவனத்துக்கு வந்தது. அன்றைய கருத்தரங்கில் என்னுடன் பங்கேற்றோர் நண்பர் ஜெயமோகன், பேராசிரியர் அ.ராமசாமி. கருத்தரங்கம் நிகழ நான்கு நாட்கள் இருக்கும்

போது, துறைத் தலைவரான பேராசிரியை என்னுடன் பேசினார். 'கற்பெனப் படுவது' என்று அப்போது வெளியாகி இருந்த என் கட்டுரையை அவர் வாசித்திருந்தார்.

"சார்! இது பெண்கள் கல்லூரி. உங்க கட்டுரை வாசிச்சேன்... கொஞ்சம் பயமா இருக்குங்க!"

"பயமா இருந்தா கேன்சல் பண்ணிருங்கம்மா... ஆனா ஒரு விஷயம்! நானும் பொம்பளைப் பிள்ளை பெத்தவன். பொறுப்பில்லாம பேச மாட்டேன்!"

அஃதோர் கிறிஸ்தவக் கல்லூரி. அன்று கலந்துரையாடலின்போது ஒரு மாணவி எழுந்து கேட்டாள், "ஐயா! கற்பு என்றால் என்ன?"

நான் பேராசிரியை முகத்தைப் பார்த்தேன், 'பதில் சொல்லவா... வேண்டாமா?' என்பது போல. அவர் அனுமதியுடன் பதில் சொன்னேன். இன்னொரு மாணவி கேட்டாள், "ஐயா! குடிப்பது சரியா, தவறா?" நான் மதுப்பழக்கம் பற்றி மூன்று கட்டுரைகள் எழுதியவன். பரவலாக வாசிக்கப்பட்ட கட்டுரைகள் அவை. அவற்றுள் ஒன்று கள் பற்றியது. கள் வேண்டுவோர் சங்கத்தால் அந்தக் கட்டுரை 10 ஆயிரம் படிகள் அச்சிடப்பட்டு விநியோகிக்கப்பட்டது.



**"பயமா இருந்தா கேன்சல் பண்ணிருங்கம்மா... ஆனா ஒரு விஷயம்! நானும் பொம்பளைப் பிள்ளை பெத்தவன். பொறுப்பில்லாம பேச மாட்டேன்!"**

என்ன சொல்ல வருகிறேன் என்றால், மாணவரின் அமைதியைப் பார்த்து அவர்கள் மந்தமாக இருக்கிறார்கள் என்று எண்ணிவிடலாகாது. அவர்கள் நம்மைச் சுற்றி நடப்பன எல்லாம் கூர்மையாகக் கவனித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

புதிய திரைப்பட இயக்குநர் ஒருவருடன் உரையாடிக்கொண்டிருந்தபோது அவர் சொன்னார், "சார், என்ன குப்பைப் படம்னாலும் கல்லூரி மாணவர்கள் அதை

ஒரு வாரம் ஓட்டிடுவாங்க!" என்று. கல்லூரி மாணவ மாணவர் பற்றி, குப்பைப் படம் எடுப்பவர்களின் மதிப்பீடு என்னைக் கவலைகொள்ளச் செய்தது. போன மாதம் ஒரு பொறியியல் கல்லூரியின் முதலாம் ஆண்டு மாணவருக்கான தொடக்கவிழாவில் பேசும்போது கேட்டேன், "ஏம்பா... நீங்களெல்லாரும் குப்பைத் திரைப்படத்தை ஒரு வாரமாவது ஓட்டுவது என்று ஏதும் சபதம் எடுத்திருக்கிறீர்களா?" என்று. மாணவரின் ஆரவாரம் என்னை பலம் கொள்ளச் செய்தது.

இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போது, 1966ம் ஆண்டு, குதிகாலில் பிரம்படி வாங்கியது என் நினைவில் உண்டு. அது போன்ற மாணவர் எழுச்சியைத் தமிழ்நாடு அதற்குப் பிறகு சந்தித்ததில்லை. இந்திய அரசின் ஆதரவுடனும் அரசியல் நாடகங்களுடனும் நடந்த ஈழப்படுகொலையின்போதும் அவர்கள் மௌனமே காத்தனர். மாணவர் மீது எனக்கொரு மனத்தாங்கலும் இருந்தது. பின்பெனக்குத் தோன்றியது நமது அரசியல் முதலீட்டாளர்களிடம் அவர்களுக்கு நம்பிக்கை இல்லை என்பது. அதையோர் நல்ல குறிப்பாகப் பார்க்கிறேன்.

சென்ற ஆண்டில், தீபாவளிக்கு முன்பு, சென்னை தாம்பரத்தில் இருக்கும் கத்தோலிக்க கிறிஸ்தவ கிளாரெட் திருச்சபை, தாம்பரத்தைச் சுற்றி இருக்கும் எட்டுப் பள்ளிகளில் மாணவருக்கு ஒரு நாள் புத்தகக் கண்காட்சி நடத்தினார்கள். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பள்ளி. பள்ளிகளின் அசெம்பிளியின் போது பதினைந்து அல்லது இருபது நிமிடங்கள் என்னைப் புத்தகங்கள் பற்றிப் பேசப் பணித்திருந்தனர். கிளாரெட் சபையின் இல்லத்திலேயே தங்கியிருந்தேன், அருட்தந்தையரின் அன்பான விருந்தோம்பலும் அர்த்தபூர்வமான உரையாடல்களுமாய்! அதிகமும் பெண்கள் பள்ளிகள். மொத்தம் 19,000 மாணவர்களிடம் உரையாற்றினேன்.

முதல் நாள் பள்ளித் தலைமையாசிரியரும் அருட்சகோதரியுமான அம்மையார் அறையில் அமர்ந்திருந்தேன். பக்கத்தில் இந்த ஏற்பாடுகளுக்குப் பொறுப்பான அருட்தந்தை ஜெயபாலன். தலைமையாசிரியர் ஓரக்கண்ணால் என்னை அலட்சியமாகப் பார்த்துக் கேட்டார், "ஓ! இவர் தான் பேசப் போறாரா?" என்று.

எனக்குச் சற்று திடுக்கிட இருந்தது. அருட்தந்தை என் கை பிடித்து ஆசுவாசப்படுத்தினார். எமது உயர்நிலைப் பள்ளி நாட்களில், மாணவரை மகிழ்விக்க

என்று மாஜிக் ஷோ நடத்துபவர், சின்னத் தோதில் சர்க்கஸ் செய்பவர் என்று வருவார்கள். பள்ளி கொஞ்சம் பணம் கொடுக்கும். ஆசிரியர்களும் பணக்கார மாணவரும் நன்கொடைகள் தருவார்கள். அஃதே போல் நினைத்திருப்பார் போலும். 'என் பிழைப்பு இப்படி ஆகிப் போனதே' என்று சங்கடமாக இருந்தது. மேலும் தோன்றியது, 'அவர்களை விடப் பெரிதாக நாம் என்ன வாழ்ந்து சாதித்துவிட்டோம்' என்று. ஒரு காலத்தில் நவீன எழுத்தாளர் என்று தம்மைப் பிரகடனப்படுத்திக் கொண்ட அனைவரும் உச்சரித்துத் திரிந்த ஜார்ஜ் லூயிஸ் ஃபோர்ஹே சொன்னால் என்ன, ஒரு சாதாரண எழுத்தாளன் நாஞ்சில் நாடன் சொன்னால் என்ன, எழுத்தின் முதல் வேலை வாசிப்பவனை சுவாரசியப்படுத்துவதுதானே!

அந்தப் பள்ளி மாணவியருக்கு அன்று உரையாற்றும் போது, என் முன்பாக இரு பள்ளிகளின் ஐந்தாவதுக்கு மேல் படிக்கும் மாணவியர் 3,000 பேர். ஒரு பங்கில் ஆங்கில வழி, மற்றொரு பங்கில் தமிழ் வழி. வரிசையாக, நீள் சதுர வடிவில் நடப்பட்டிருந்த 20 மரங்களின் நிழலில். மாணவரிடம் எப்போதும் பாடப்புத்தகங்களுக்கு அப்பால் என்று வலியுறுத்திப் பேசுகிறவன் நான். என் முன்னால் நின்ற மரங்கள், பார்வைக்கு கொடுக்காப்புளி மரங்கள் போலிருந்தன, இலையும் பூவும். ஆனால் காய்களைப் பார்த்தால், சீனிப் புளியங்காய்களாகத் தெரியவில்லை. எடுத்த எடுப்பில் கேட்டேன், "நீங்க உட்கார, விளையாட நிழல் தரும் இந்த மரத்தின்

**ஒரு மாணவி கேட்டார், "விவேகானந்தர் நூறு இளைஞர்களைக் கேட்டார், இந்த தேசத்தைச் செம்மைப்படுத்திக் காட்ட! நாங்கள் இன்று கோடிப் பேர் இருக்கிறோம். உங்களிடையே ஒரு விவேகானந்தரைக் காட்டுங்கள்" என்று.**

பெயர் என்னம்மா?''

ஒருவருக்கும் தெரிந்திருக்க வில்லை. ஆசிரியைகளைப் பார்த்தும் கேட்டேன். அவர்களும் அறிந்திலர். பள்ளி முதல்வர், அருட்சகோதரி பக்கம் பார்வையைத் திருப்பினேன். அவர் சற்று சங்கடத்துடன் கை விரித்தார். ''தயவுசெய்து யாரிடமாவது கேட்டுத் தெரிந்துகொள்ளுங்கள். பள்ளியில் சேர்ந்த நாளிலிருந்து இந்த மரத்தைப் பார்க்கிறீர்கள்'' என்றேன். எனக்கு ஒரு கணக்குத் தீர்ந்தது போலவும் இருந்தது. பத்து மாதங்கள் ஆகி விட்டன, இது நடந்து. இன்னும் பெயர் கண்டுபிடித்தார்களா என்று தெரியவில்லை. எதுவாயினும் இந்த நிலைக்கு உறுதியாக, மாணவியர் பொறுப்பல்ல.

பரங்கிமலை பக்கம் ஒரு பள்ளி. ஐந்து முதல் பன்னிரண்டு வரை வாசிக்கும் மாணவியர் 5,500 பேர் கடல் போல் என் முன் அமர்ந்திருந்தனர். பறவைகள் பற்றிப் பேசிக் கொண்டிருந்தேன். தேன் சிட்டு, சிட்டுக் குருவி, காகம், குயில், புறா, மைனா எனும் நாகணவாய்ப் புள், செவன் சிஸ்டர்ஸ் எனும் சாம்பல் குருவி, செம்பகம் எனும் செம்போத்து, கிளி, வால் நீண்ட கருங்குருவி, கொக்கு, செங்கால் நாரை, பருந்து எனும் கருடன், கூகை எனும் ஆந்தை, குயில், நீர்க்காகம், ஆலா, இருவாய்ச்சி, கழுகு என.

முதல் வரிசையில் இருந்து சடாரென ஒரு மாணவி எழுந்து, ''ஐயா! பருந்து வேறு கழுகு வேறா?'' என்றார். எனக்குப் பெருமிதமாக இருந்தது. மதர் சுப்பீரியர் அப்பள்ளி முதல்வர். இன்முகத்துடன் மாணவியை அமரச் சொன்னார். நான் ஆழ்வார்கள் பாடிய செந்தலைக் கருடனையும், காளமேகம் பாடிய பெருமாளைத் தூக்கிப் போன பருந்தையும் சொன்னேன். கம்பராமாயணக் கதாமாந்தர்களான, சூரியனை நோக்கிப் பறந்த அண்ணன் தம்பிக் கழுகுகளான சம்பாதி, சடாயு பற்றிச் சொன்னேன். ரிச்சர்ட் பா எழுதிய, 50 லட்சம் பிரதிகள் விற்ற, ஜோனதன் லிவிங்ஸ்டன் சீகல் எனும் கடற்பறவை பற்றியும் உற்சாகமாகச் சொன்னேன். அனைத்துப் பள்ளிகளிலும் என்னுடனேயே இருந்த ஃபாதர் ஜெயபாலனுக்கு மட்டற்ற மகிழ்ச்சி.

கன்னிகையர் மடத்தில் மதிய உணவு உண்டதும் மதர் சுப்பீரியர் கேட்டார், ''எங்க டீச்சர்களுக்கு அரை மணி நேரம் பேச முடியுமா?'' என்று. நம் கடன் பணி செய்து கிடப்பதுதானே!

சென்ற கிழமை, சென்னை வள்ளலார் நற்பணி மன்றத்தின் பொன் விழா ஆண்டுக் கொண்

டாட்டத்துக்காக, பள்ளி - கல்லூரி மாணவரிடையே பேச்சுப் போட்டி நடத்தினார்கள். தமிழ்நாட்டை எட்டு மண்டலங்களாகப் பிரித்து நடந்த போட்டிகளில் கோவை மண்டலத்தில் கல்லூரி அளவில் 128 மாணவர் பங்கேற்றனர். கோவை, Dr. NGP கலை அறிவியல் கல்லூரியில் நடந்தது. கவிஞர் சிற்பி, மரபின் மைந்தன் ஆகியோர் பொறுப்பாளர்கள். மூன்று குழுக்களாகப் பிரித்து நடத்தப்பட்ட பேச்சுப் போட்டியில் ஒரு குழுவுக்கு நானும் நடுவராக இருந்தேன். மறுபடி இறுதிச் சுற்றுக்கு வந்த பத்து மாணவருக்கு இடையே நடந்த போட்டியிலும் நடுவராக. காலை 11 மணி முதல் மாலை ஆறு மணி வரை மாணவ, மாணவியர் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்த எனக்கு அலுப்பாக இல்லை. அவர்களின் பேச்சுத்திறன் பற்றியும் பொது அறிவு பற்றியும் வாசிப்பு அனுபவம் பற்றியும் எனக்குப் பெருமிதம்.

ஒரு மாணவி கேட்டார், “விவேகானந்தர் நூறு இளைஞர்களைக் கேட்டார், இந்த தேசத்தைச் செம்மைப்படுத்திக் காட்ட! நாங்கள் இன்று கோடிப் பேர் இருக்கிறோம், உங்களிடையே ஒரு விவேகானந்தரைக் காட்டுங்கள்” என்று. மிகச் சரியான கேள்வி. என் கேள்வியும் அதுதான். இன்று, இளைஞர்கள் நம்பிப் பின்தொடர்ந்து போவதற்கு நம்மிடையே தலைவர் உண்டா? பிள்ளை பிடிப்பவர்கள்தானே தலைவர் போலத் தோற்றம் தருகிறார்கள்! இதை மாணவர் அறிந்திருக்கிறார்கள் என்பதே பெருமிதத்தின் காரணம்!




**“நம் நாட்டில் கழிப்பறையின் உள்ளே போகக் காசு, வெளியே போனால் இலவசம். ஆனால் வெளிநாடுகளில் உள்ளே போக இலவசம், வெளியே போனால் காசு கொடுக்க வேண்டும், அபராதமாக!”**

நான் நினைத்திருந்ததைப் போல, அவர்களின் அரசியல் சமூக உணர்வுகள் மந்தமாக

இல்லை. உறங்கும் எரிமலையாகவே தோன்றியது.

இன்னொரு மாணவி பேசினார், “நம் நாட்டில் கழிப்பறையின் உள்ளே போகக் காசு, வெளியே போனால் இலவசம். ஆனால் வெளிநாடுகளில் உள்ளே போக இலவசம், வெளியே போனால் காசு கொடுக்க வேண்டும், அபராதமாக” என்று.

அண்மையில் கோவை அரசு கலை அறிவியல் கல்லூரிப் பேராசிரியர் முனைவர் கனகராஜ் அவர்கள் கட்டணமின்றி நடத்தும் ஆட்சிப் பணி தேர்வுக்கான பயிற்சி மையத்துக்குப் போயிருந்தேன். 375 பயிற்சி பெறும் மாணவருக்கு ஒரு மணி நேரம் உரையாற்றினேன். உண்மையில் எனக்குப் பெரிய நம்பிக்கை ஏற்பட்டது, அவர்களைக் காண. எதிர்காலத்தில் அவர்களில் பலர் *I.A.S., I.F.S., I.P.S., I.R.S., I.R.&R.S.* மற்றும் முதல் பிரிவு அதிகாரிகளாக வருவார்கள். அவர்களின் முகத்தில் ஆர்வமும் தீவிரமும் தெரிந்தது. ஏற்கனவே உயரதிகாரிகளாக இருந்த, இருக்கும் மலை விழுங்கிய மகாபுருஷர்கள் செய்த தீமைகளைத் தீர்த்து தேசத்தைச் சுத்தம் செய்வார்கள் என்றும் தோன்றியது.

நமது மாணவரில் சிலர் புகை பிடிக்கலாம், சிலர் மது அருந்தலாம், மாணவியரைக் கலாட்டா செய்யலாம், சினிமா பித்துப் பிடித்து அலையலாம், செல்போனில் ஆபாசப் படங்கள் பார்க்கலாம். ஆனால் அந்தச் சிலர் பலராக மாட்டார்கள். எப்போதும் அவர்கள் சிலர்தான். அந்தச் சிலரைத் தாண்டி, இளைய மாணவ மாணவியர் நம் தேசத்தின் வீரப் படை. இப்படை பற்றி நாம் செருக்குக் கொள்ளலாம். திருக்குறளில் ‘படைச்செருக்கு’ என்றொரு அதிகாரம் உண்டு. அதில் முதல் குறள்: ‘என்னை முன் நில்லன்மின் தெவ்விர் பலரென்னை முன்னின்று கல் நின் றவர்’. விரித்துப் பொருள் சொன்னால், ‘பகைவர்களே! என் தலைவன் முன்னால் போருக்கு நின்று இன்று நடுகற்களாகச் சமைந்து நின்றவர் பலர். எனவே, என் தலைவன் முன்னால் நிற்காதீர்கள்’. இன்றைய இளைய மாணவ சமூகம் உணர்ந்து எனக்கு இதுவே சொல்லத் தோன்றுகிறது.

அரசியல் கோஷமாக, சாயம் வெளிறிய கூச்சல் ஒன்றுண்டு நம்மிடம். ‘இப்படை தோற்கின் எப்படை வெல்லும்?’ என்றும், ‘இந்தப் படை போதுமா, இன்னும் கொஞ்சம் வேணுமா?’ என்றும்.

உண்மையில் இன்றைய மாணவர்களுக்கு அது மிகச் சரியாகப் பொருந்தும்.

**– கற்போம்...**

# கைம்மண் அளவு

சென்ற கட்டுரையை வாசித்து விட்டு, நான் கூட்டங்கள் பேசிப் பெரும் பொருள் ஈட்டுகிறேன் என்று நினைக்க ஏதுவுண்டு. அது வேறோர் இனம், சக்கரங்கள் மீதுலாவும் சர்க்கஸ் கம்பெனி போல! டாடா சுமோ அல்லது இன்னோவா போன்ற வாகனத்தில் நடுவர் அடக்கம் ஏழு பேர் பயணிப்பார்கள்... பட்டிமண்டபங்கள் நடத்தி மக்களைக் குதூகலப்படுத்த!

**நாஞ்சில் நாடன்**

ஓவியம்: **மருது**



எந்தத் தொழிலிலும் நல்லது, கெட்டதுகள் இருக்கும். அதை விமர்சனம் செய்யப் புகுவதற்கு இது தக்க தருணம் அல்ல. என்றாலும், அவர்கள் காலடியில் சமர்ப்பிக்க நம் கைவசம் கோரிக்கை மனு ஒன்றுண்டு. அவையோரின் கைக்கிடையில் அடிவயிற்றில் விரல் அளைந்து கிச்சுகிச்சு மூட்டுவதைத் தவிர்த்துக்கொண்டு, சீரிய செய்திகளைச் சுவாரசியமாகச் சொல்ல முயல்வது மேடைக் கலைக்கு ஏற்றம் தரும்.

தோற்றுப் போன எழுத்தாளன் திறனாய்வாளன் ஆன கதை போல் என் கூற்றைக் கொண்டு விடலாகாது. சீர்மையுடனும் நேர்மையுடனும் மேடையை ஆண்டவர்கள் என சென்ற தலைமுறையில் நமக்கு முன்னுதாரணங்கள் உண்டு. வாகீசகலாநிதி கி.வா.ஜகந்நாதன், அறிஞர் அ.ச.ஞானசம்பந்தன், பேராசிரியர் இரா.இராதாகிருஷ்ணன், பெரும்புலவர் பா.நமச்சிவாயம், பேராசிரியர் தெ.ஞானசுந்தரம், குன்றக்குடி அடிகளார் என... அவர்களின் தொடர்ச்சியாக இன்றும் மேடைக்கலையை அறத்துடன் ஆள்பவர்கள் உண்டு.

நான் சொல்ல வந்த கதை வேறு. பள்ளிகளில், கல்லூரிகளிலிருந்து எனக்கு அலைபேசி அழைப்பு வரும். பேசுபவரில் பலரை எனக்கு முன்பின் அறிமுகம் இருக்காது. பள்ளி ஆண்டு விழா, கல்லூரி தமிழ் மன்றத் துவக்க விழா அல்லது நிறைவு விழா, கலந்து கொள்ள வேண்டும் என! நாம் என்ன நாடறிந்த பட்டிமன்ற நான்மீன்களில் ஒன்றா? அல்லது, கவிவெள்ளப் பணிமனையா? சில சமயம் ஒரு தப்பித்தலுக்காகச் சொல்வேன், ''வெளீல இருக்கேன் தம்பி... வீட்டுக்குப் போயி டைரி பார்த்துச் சொல்றேன்" என்று. ஒப்புக்கொண்டால் நான் சொல்லும் ஒரே நிபந்தனை, ''வீட்டுக்கு வந்து கூட்டீட்டுப் போங்க தம்பி. வீட்ல கொண்டாந்து விட்ருங்க" என்பதுதான்.

நகரப் பேருந்து பிடித்து எளிதாகப் போய் விடலாம். ஒன்றும் நம் புகழ்ச் சாயம் வெளிறி விடாது. ஆனால், பள்ளி அல்லது கல்லூரி வாசலிலிருந்து பத்துப் பேரிடம் வழிகேட்டு போய்ச் சேர வேண்டும். அப்படி ஒரு கல்லூரியில் எதிர்ப்பட்ட பேராசிரியர் போலத் தோன்றிய ஒருவரிடம், எம்மை அழைத்தவர் பற்றி விசாரித்தேன்.

அவர் கேட்டார், "நீங்க ஆரு?"

"நாஞ்சில் நாடன்..."

''அது எங்க இருக்கு?'' என்றார்.

இதுபோன்ற அல்லாடல் வேண்டாம் என்பதனால்தான்

வந்து கூட்டிப் போகச் சொல்வது. அந்த விவரம் கூட எனக்கில்லை. நண்பர், ஓவியர் ஜீவாவின் அறிவுரை அது. அனுபவசாலிகள் சொன்னால் கேட்பதுதானே அறிவு!

மேடை ஏறியதும் கண்டிப்பாக ஒரு பூச்செண்டு தருவார்கள். ஒரு கட்டு சுக்கட்டிக் கீரை தந்தால் அடுத்த நாள் துவரனுக்கு ஆகும். பிறகு அடர் வண்ணத்தில், நீலம், பச்சை, தங்க மஞ்சள், மாரியம்மன் சிவப்பு நிறத்தில் பொன்னாடை ஒன்று போர்த்துவார்கள். அந்தப் பொன்னாடையை வைத்துக்கொண்டு என்ன செய்வது? உடுத்துக் குளிக்க இயலாது, சன்னலுக்கு திரை தைக்க உதவாது. மேசை விரிப்பாகப் பயன்படாது. வேண்டுமானால் தவுல் வாத்தியத்துக்கோ, மிருதங்கத்துக்கோ உறை தைக்க ஆகும். நமக்கு அவை வாசித்துப் பழக்கம் இல்லை. நாலாகப் பொன்னாடையைக் கிழித்து, ஒரு துண்டை எட்டாக மடித்துத் தைத்தால் பாத்திரம் விளக்க ஆகும். பல இடங்களில் இந்த ஆலோசனையை இலவசமாக வழங்கி இருக்கிறேன். மேடைச் சொற்பொழிவாளர்கள் பயன்படுத்தினார்களா என்று தெரியவில்லை. மேலும், எழுத்தாளன் பேச்சுக்கு என்ன மரியாதை உண்டு? இதென்ன கேரளமா, கன்னடமா, மராத்தியமா, வங்காளமா?

தாம்பரத்தில் ஒரு புத்தகக் கடை திறந்து வைக்கப் போனேன். என்னை அழைத்திருந்த ஃபாதர் ஜெயபாலன், திறப்பு விழா முடிந்ததும் பாட்டா காலணிகள் கடைக்குக் கூட்டிப் போய் கடுத்த அரக்கு நிறத்தில் மொக்காசின் ஷூ ஒரு ஜோடி வாங்கித் தந்தார். எனக்கு உவப்பாக இருந்தது. இந்தப் பொன்னாடை வாங்கும் விலையில், இரண்டு கிலோ பெரிய வெங்காயம் தந்து உதவலாம். சொன்னால் யார் கேட்கிறார்கள்!

சில கல்லூரிகளில் நினைவுப் பரிசாக, சுமார் 500 ரூபாய் பெறுமதியுள்ள புத்தகம் வாங்கிப் பரிசுப் பொதியல் செய்து வழங்குவார்கள். பெரும்பாலும் அவை, எந்தக் காலத்திலும் நான் காசு கொடுத்து வாங்கத் துணியாத புத்தகமாக இருக்கும்; அல்லது ஏற்கனவே வாங்கிவிட்ட

இந்தப் பொன்னாடை வாங்கும் விலையில், இரண்டு கிலோ பெரிய வெங்காயம் தந்து உதவலாம். சொன்னால் யார் கேட்கிறார்கள்!

நூலாக இருக்கும். நாம்தான் நமக்கு வேண்டிய புத்தகம் நேற்று வெளியானதை இன்று வாங்கி விடுகிறோமே! அதற்குக் கல்லூரித் தமிழ் மன்றத்தைக் குறை சொல்ல என்ன உண்டு?

இப்போதெல்லாம் சிறப்பு விருந்தினருக்குக் கையளிக்க எனப் புத்தகம் வாங்க, கோவை விஜயா பதிப்பகத்துக்கு தமிழ் மன்றத்தார் போனால், சிறப்பு விருந்தினர் நான்தான் எனத் தெரிந்தால், கடையிலிருந்து விஜயா பதிப்பகம் சிதம்பரம் என்னை அலைபேசியில் கூப்பிடுவார், “சார்! உங்களுக்கு என்ன புத்தகம் கொடுக்கலாம், சொல்லுங்க!” என்று. நான் வாங்க நினைத்து, விலை உத்தேசித்துத் தள்ளிப் போட்டிருந்த புத்தகம் ஒன்று அல்லது இரண்டு சொல்வேன். இப்போதும் என் மன அடுக்கின் வரிசையில், வாங்க வேண்டிய புத்தகங்கள் எனக் காத்து நிற்பவை சில உண்டு. கந்தர்வன் சிறுகதைகள், பா.செயப்பிரகாசம் சிறுகதைகள், பூமணி சிறுகதைகள், எஸ்.ராமகிருஷ்ணன் சிறுகதைகள் (யாவும் முழுத் தொகுப்பு) மற்றும் ஜெயமோகனின் மகாபாரத நாவல் வரிசையில் ஐந்தாவதான ‘பிரயாகை’. மேலும், காலச்சுவடு வெளியீடான பாரதியார் கவிதைகள் - செம்பதிப்பு.

யாவும் சரிதான்! சில கல்லூரிகள் அவர்களே நடத்திய கருத்தரங்குகளில் வாசிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரைகளின் தொகுப்பை இரண்டு படிகள் வைத்து செம்மாப்புடன் கட்டித் தந்து விடுவார்கள். நான் பிறந்த நேரத்தை நொந்துகொள்ளும் தருணங்கள் அவை. முதல் கட்டுரை வாசித்த உடனேயே வயிற்றில் ‘கடாமுடா’ என்று பேராசிரியப் பேரரவம் கேட்கும். என்னைக் காண வருபவர்களுக்கு அவற்றை அன்பளித்தால், நம்மை அவர்கள் மண்ணுள்ளிப் பாம்பைப் பார்ப்பது போல் பார்ப்பார்கள். அப்புத்தகங்கள், சுமங்கலிப் பெண்டிருக்கு வைத்துக் கொடுக்கும் பிளவுஸ் துண்டு போல, உலகம் சுற்றிப் பார்த்து விட்டு நமக்கே திரும்ப வந்து சேரும். உலகம் என்பது உருண்டையானதுதானே!

புத்தகம் கூடப் பருவரல் இல்லை. இனம் இனத்தோடு, வெள்ளாடு தன்னோடு! மெமென்டோ என்று ஒன்று தருவார்கள். அவை குறித்துத் தனியாக எழுத உத்தேசம். ஈண்டு விரித்துரைக்கப் புகவில்லை. பிளாஸ்டிக்கில் செய்த மின்னணுக் கடிகாரத்தை என்ன செய்வது? 135 ரூபாய் விலை இருக்கும்! பெரும் பொதியலாகவும் இருக்கும். சுவருக்கு நான்கு என்று ஆணி அறைந்து மாட்ட முடியுமா அவற்றை!

சாகித்ய அகாதமி விருது வாங்கிய பின்பு, கோவை சேம்பர் ஆஃப் காமர்சில் எனக்குப் பாராட்டு விழா நடந்தபோது வேட்டியும் சட்டையும் பரிசளித்தார்கள். நான் மதிக்கும் பெருந்தகைகள் இயகோகா சுப்ரமணியம், ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ் கிருஷ்ணன் அல்லது கோவை பங்குச் சந்தை தலைவர் டி.பாலசுந்தரம் போன்றோர் காரணமாக இருக்கக்கூடும். அண்மையில் எனது 40 ஆண்டு எழுத்துத் திறனைப் பாராட்டி சிறியதோர் விழா நடந்தபோது, எனக்கு உடை வாங்கித் தந்தவர்கள் ‘தியாகு புக் சென்டர்’ நண்பர்களும் கோவை ஏஜன்சீஸ் மாணிக்க அண்ணனும்.

நீங்கள் காதோடு கேட்பது, ஒலிபெருக்கியில் கேட்பது போல எனக்குக் கேட்கிறது, ‘பணம் ஏதும் தர மாட்டார்களா?’ என்று. நமக்குக் கேட்டு வாங்கிப் பழக்கமில்லை! நிபந்தனைகள் பேச உதவியாளரும் அலுவலகமும் இல்லை. முன்கூட்டியே வங்கிக் கணக்கில் பணம் செலுத்தச் சொல்லிக் கேட்கும் சாமர்த்தியமும் இல்லை. இதற்கு யாரை நொந்து கொள்வது? கூப்பிட்ட இடத்துக்குப் போவேன். அண்ணா சௌந்தர் வல்லத்தரசு அடிக்கடி சொல்வது போல, “பெரிய மனுஷன் கையைப் புடிச்சு இழுத்தா வேண்டாம்னா சொல்ல முடியும்?”

பெருந்தன்மையுடன் சில கல்லூரிகளில் 500 ரூபாய் முதல் 5,000 ரூபாய் வரை தருவார்கள். மனம் சற்று உல்லாசமாக இருக்கும்! வந்தியத்தேவனுக்கு மட்டும்தான் தோள்கள் பூரித்து, வாகுவலயங்கள் இற்று வீழுமா என்ன? எழுத்தாளன் என்றாலும் பால் விலை விட்டடருக்கு 40 பணம்தானே நாயன்மாரே!

> **ப**ரிசுப் புத்தகங்கள், சுமங்கலிப் பெண்டிருக்கு வைத்துக் கொடுக்கும் பிளவுஸ் துண்டு போல, உலகம் சுற்றிப் பார்த்துவிட்டு நமக்கே திரும்ப வந்து சேரும். உலகம் என்பது உருண்டை யானதுதானே!

கோவையில் புகழ்பெற்றதோர் பொறியியல் கல்லூரி மாணவர் மன்றத்துக்கு நான்காவது முறையாகப் போனேன், சென்ற கல்வியாண்டில். முதல் மூன்று முறையும் அவர்கள் வெளியிட்ட புத்தகப் பொதியல்தான். என் மகனுக்கு கல்விக் கட்டணமாக எனது புத்தகங்களை அங்கே நான் செலுத்தியதில்லை.

சென்ற முறை மாணவர் மன்றத்தின் செயலாளர் எனது இலக்கிய நண்பரின் மகள். நண்பர் தன் மகளை மிரட்டியிருப்பார் போலும், 'நாஞ்சிலுக்கு காரிய மாட்டு ஏதாவது செய்யணும்' என்று. கையெழுத்து வாங்கிக் கொண்டு 5000 ரூபாய் பணம் தந்தனர். என்னுடன் அன்று உரையாற்ற வந்தவர், புகழ்பெற்ற கார்ட்டூனிஸ்ட். அவருடன் விழாவுக்குப் பொறுப்பான பேராசிரியர் உரையாடியபோது தெரிந்து கொண்டேன். ஓவியருக்கு சென்னையிலிருந்து கோவைக்கு போக வர விமானப் பயணச் சீட்டு. நகரின் உயர்தர விடுதியில் தங்கல். விமான தளத்திலிருந்து விமான தளம் வரை அவர் உபயோகத்துக்கு குளிர்சாதன வாகனம்.

அதெல்லாம் கொடுக்காமல் தீராதுதான். பொறுப்பேற்றிருந்த பேராசிரியர் அந்த ஓவியரிடம் சொன்னபோது நானும் உடனிருந்தேன். "சார்! 25,000 ரூபாய்க்கு உள்ளே இருந்தாத்தான் கேஷ் தர முடியும். அதுக்கு மேலேங்கிறதுனால பேங்க்லேதான் கட்டு வாங்க... கொஞ்சம் IFSC நம்பர் சொல்றீங்களா?"

ஒரு மொழியை அடுத்த நூற்றாண்டுக்கு நகர்த்தும் படைப்பு இலக்கியம் பற்றி வான்முட்ட 'மொழி வாழ்க' எனப் பேசும் நமக்கு இருக்கும் மதிப்பீடு பற்றிய சிந்தனை ஆயாசம் ஏற்படுத்துவது. எவரிடம் சென்று நாம் முறையிட? எனக்கு அடிக்கடி வரும் பெருங்கனவே, பெரிய தோசை ஒன்றை வைத்துக் கொண்டு தின்ன முடியாமல் தின்று கொண்டிருப்பது தானே!

யாரோ சொன்னார்கள், கோபிசெட்டிப்பாளையம், ஈரோடு, பவானி, சித்தூர், பாலக்காடு, சத்தியமங்கலம், திருப்பூர், பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை, பழனி போன்ற ஊர்களின் கல்லூரிக்குப் போவதென்றால், "பஸ்ஸிலே போகாதீங்க நாஞ்சில்... கார் பிடிச்சுப் போங்க..." என்று. போனேன் உடுமலைப்பேட்டைக்கு, நண்பர் சேவூர் வாசுதேவன் வாடகைக் காரில். போக வர 150 கிலோ மீட்டர். சிறப்புரை ஆற்றி ஆற்றி ஊற்றி முடித்தபின் புறப்பட யத்தனித்தேன். தமிழ்த்துறைத் தலைவர் 2000 ரூபாய் கொடுத்தார். கூசித் தயங்கி, மலரினும் மெல்லிய குரலில், "சார்! காருக்கு?" என்றேன். "எல்லாம் சேத்துத்தான்" என்றார். இது நாம் வாழ்ந்த நலம்.

சங்க காலத்தில் இருந்து 'சங்' காலம் வரை, புலவன் நிலை இப்படித்தான் போலும். 'பரிசில் வாழ்க்கை'. பிற்காலப் புலவனுக்கு எனில் வேறொரு நெருக்கடி இருந்தது. 'போர் முகத்தை அறியானைப் புலியே'

என்று புகழ்ந்து பாடும் நெருக்கடி. நிறைய புலவர்கள் இன்றும் அப்படித்தான் வாழ்கிறார்கள். இங்கு நான் புலவர் என்பது எழுத்தாளர்களை. அங்கும் நாம் வேறு இனம். 'உன்னை அறிந்தோ தமிழை ஓதினோம்' என்று கம்பன் கேட்டதை நினைவில் வைத்திருக்கும் இனம்.

இரண்டாண்டுகள் முன்பு, சென்னையில் புகழ்பெற்ற மன்றம் ஒன்றுக்கு சிறப்புரையாற்றப் போனேன். பட்டிமண்டபம், கருத்தரங்கம், சுழலும் சொல்லரங்கம் எவற்றிலும் உள்ளடங்காத ஓர் சிறப்புச் சொற்பொழிவு, கம்பனின் சொல் ஆளுமை குறித்து. சினிமா தயாரிப்பாளர்கள், சினிமா இயக்குநர்கள், முன்னாள் அமைச்சர்கள், உயர் நீதிமன்ற நீதிபதிகள் என்பவர் கட்டிக் காக்கும் செல்வாக்கான மன்றம். காரைக்குடி கம்பன் கழகத்தின் 74வது ஆண்டு விழாவுக்கு நான் விழாத் தலைமை ஏற்றதன் பின்பு, 'கம்பனின் அம்பறாத் தூணி' என்று ஆய்வு நூலொன்று எழுதிய பிறகு, இந்த மன்றத்தில் என் தனிப் பேச்சு. மூன்று நாட்கள் விழாவில் உணவும் தங்குமிடமும் மண்டபத்திலேயே இலவசமாக. "பயணச்சீட்டு?" என்றேன். "நீங்களே வாங்கிட்டு வந்திருங்க சார்! இங்க கொடுத்திருவோம்" என்றார்கள். இருவழிப் பயணச்சீட்டும், எனது வீட்டிருந்து ரயில் நிலையம், சென்னை ரயில் நிலையத்திலிருந்து மண்டபம், மறுபடியும் திரும்புகையில் அவ்விதமே கால்டாக்சிக் கட்டணங்கள் வேறு.

தமிழ்நாட்டின் மூத்த சொற்பொழி

**பிளாஸ்டிக்கில் செய்த மின்னணுக் கடிகாரத்தை என்ன செய்வது? 135 ரூபாய் விலை இருக்கும்! சுவருக்கு நான்கு என்று ஆணி அறைந்து மாட்ட முடியுமா அவற்றை!**

வாளர்கள், மலேசிய அமைச்சர், பதப்பட்ட ரசிகர்கள் முன்னால் எனது அரை மணி நேரப் பேச்சு. சொன்னாலும் சொல்லாவிட்டாலும், மேடையில் நான் வைத்துக் கொண்டு வஞ்சகம் செய்வதில்லை. எனக்கு எவரையும் கிச்சுக்கிச்சு மூட்டும், துதிக்கும் நெருக்கடிகள் கிடையாது. எனக்கானதோர் படைப்புச் செருக்கும் உண்டு.

விழா முடிந்த பின் 2000 ரூபாய் தந்தார்கள், எனது மேற்சொன்ன செலவினங்களுக்கும் சேர்த்து. வெளிப்ப

> **மேடைப் பேச்சாளர்களில் பலர் தமிழ் சினிமாவில் துணைக் கதாபாத்திரங்கள் ஏற்று, சாக்குச் சாக்காய் பணம் வாரிக் குறுக்கிக் கட்டுகிறார்கள்.**

டையாகச் சொல்லி விட்டுப் புறப்பட்டேன், “கோவையில் கட்டிட வேலை நடக்கும் இடத்தில் செங்கல் சுமக்கப் போனால் இதை விட அதிகச் சம்பளம் கிடைக்கும்” என்று.

இப்போது நான், ‘நாராய் நாராய் செங்கால் நாராய்’ என்ற பாடிய சத்திமுத்தப் புலவரை நினைத்துக் கொள்கிறேன். ‘இல்லி தூர்ந்த பொல்லா வறுமுலை’ என்று பாடிய பெருந்தலைச் சாத்தனாரை நினைத்துக் கொள்கிறேன். ‘முல்லையும் பூத்தியோ, ஒல்லையூர் நாட்டே?’ என்று பாடிய குடவாயில் கிரத்தனாரையும் நினைத்துக் கொள்கிறேன். ‘உப்புக்கும் பாடி, புளிக்கும் ஒரு கவிதை ஒப்பிக்கும் எந்தன் உளம்’ என்ற பிற்கால ஔவையாரை நினைத்துக்கொள்கிறேன்.

யாவற்றையும் மீறி, இன்னுமோர் வாய்ப்பு காத்திருக்கிறது என்ற செம்மாப்பு உண்டு எனக்கு. மேடைப் பேச்சாளர்களில் பலர் தமிழ் சினிமாவில் துணைக் கதாபாத்திரங்கள் ஏற்று, சாக்குச் சாக்காய் பணம் வாரிக் குறுக்கிக் கட்டுகிறார்கள். நமக்கொரு நாள் அந்த வாய்ப்பு வராதா என்ன?

‘பரதேசி’ படத்தில் நான் வசனம் எழுதி, படப்பிடிப்பில் முப்பது நாட்கள் இருந்தபோது, இயக்குநர் பாலா என்னையொரு வேடம் தரிக்கச் சொன்னார். ‘அல்லேலூயா’ என்று பாடும் எஸ்டேட் டாக்டர் வேடம். அந்தப் பாடலோ, காட்சியோ நான் எழுதியதல்ல. அதனால் என்றில்லை, எனது இயல்பான கூச்சத்தினால் மறுத்து விட்டேன். என் பிள்ளைகள் செய்த தவம்! என் பெண்டாட்டியின் மங்கல நாண் பேறு! நல்லவேளையாகப் பிழைத்தேன். இல்லாவிட்டால் எனது சகோதர முற்போக்கு எழுத்தாளப் பெரும்படை, எலும்பில்லாத என் கறியை கிலோ அறுநூறு ரூபாய் என்று விற்றிருப்பார்கள், தமிழ் எழுத்தாளனின் தனிக்கறி, சில்லியோ மஞ்சூரியனோ ரூஷியோ செய்தால் பிரமாதமாக இருக்கும் என்று கூவி.

ஆனால் தமிழை மட்டுமல்ல, தமிழின் தீவிர எழுத்தாளனையும் காப்பது சகலகலாவல்லியின் பொறுப்புதானே!

**- கற்போம்...**

# கைம்மண் அளவு

பத்தாண்டுகளுக்கு முன்பு, கோயம் புத்தூர் ராம் நகர் பகுதியில் வேலை பார்த்துக் கொண்டிருந்தபோது, நாங்கள் தயாரித்து விற்பனை செய்யும் இயந்திரங்கள் வாங்க வரும் வாடிக்கையாளரைச் சில சமயம் மதிய உணவுக்கு அழைத் துப் போக நேரும். சிலர் சோறே தான் வேண்டும் என்பார்கள்.

நாஞ்சில் நாடன்

ஓவியம்: மருது



சிலர் பியரே போதும் என்பார்கள். சிலர் அசைவம் இல்லாமல் உண்பதில்லை என்பார்கள். சிலருக்கு சுக்கா ரொட்டி, புல்கா என்று விருப்பம் இருக்கும். விருப்பத்துக்குத் தகுந்தாற்போல் நடந்துகொள்வதுதானே விற்பனைத் தந்திரம்.

எங்கள் அலுவலகத்திலிருந்து நடந்து போகும் தொலைவிலேயே எல்லா ஏற்பாட்டுக்கும் இடங்கள் இருந்தன. மாதத்தில் நான்கைந்து நாட்கள் இப்படி ஆகி, எமக்கும் தொந்தி பெருத்துவிடும். பத்து, பன்னிரெண்டு நாட்கள் வெளியூர்ப் பயணங்களிலும் இருப்போம்.

நம்மிடம் வாங்க இருப்பவரை உணவுக்கோ, மதுவுக்கோ அழைத்துப் போவது வணிக நோக்கம் கருதித்தான். சும்மா பேருந்து நிறுத்தத்தில் காத்து நிற்பவரை சாப்பிடக் கூப்பிடுவோமா என்ன? என்றாலும் நாம் முனைந்து உணவுக்கு அழைத்துப் போகும் பலரில், நூற்றுக்கு இரண்டு பேர் எம்மை பில் கொடுக்க அனுமதிக்காமல் தாமே வல்லந்தமாகக் கொடுப்பார்கள். அவர்களது நேர்மை அரும்பொருள் என்பதால் வியப்பு ஏற்படும். ஆனால் வேறு சிலரோ, 'இரவில் தனியாக உறங்க முடியவில்லை, ஒருதுணை ஏற்பாடு செய்ய முடியுமா?' என்றும் கேட்பார்கள். அது மாமா வேலை என்பதால் நாமதைச் செய்ததில்லை.

தொழில்துறையில் அதையும் செய்கின்ற நிறுவனங்கள் உண்டு. சினிமாவிலும் அரசியலிலும் அதையே தொழிலாகச் செய்வோரும் உண்டு. எவரும் 'இடம் போனால் என்ன, வலம் போனால் என்ன?' என்றிருப்பது இந்திய மனசாட்சி ஆகிவிட்டது.

மருந்து தயாரிக்கும் நிறுவனங்கள் பலவும், தமது மருந்தை நோயாளிகளுக்குப் பரிந்துரைக்கும் மருத்துவரை எதற்குத் தாய்லாந்து அனுப்புகிறார்கள்? கேட்பீர்களேயானால் விநோதமான பதில்கள் வரும். 'யோகா பயில' என்பார்கள். 'மருத்துவ உபகரணங்கள் பார்வையிட' என்பார்கள். கடற்காற்று வாங்க, கடல் நீராட, நீர் விளையாட்டுக்கு என்பார்கள். *Flesh Trade* என்றொரு சொல்லாட்சி உண்டு ஆங்கிலத்தில். 'உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசுவோர் உறவு கலவாமை வேண்டும்' என்கிறார் வள்ளலார். ஆனால் அவர்கள் உறவு இல்லை என்றால் வணிகம் இல்லை.

பம்பாயில் நான் இருந்தபோது, தொழிற்சாலைக்குத் தேவையான சில்லறைப் பொருட்கள் விற்க, துடிப்பான மார்வாடி இளைஞர் ஒருத்தர் வருவார். பஜ்ரங்லால் என்று பெயர். எங்கள்



ஜொ

**ழில்துறையில் தரகையே செய்கின்ற நிறுவனங்கள் உண்டு. சினிமாவிலும் அரசியலிலும் அதையே தொழிலாகச் செய்வோரும் உண்டு.**

நிறுவனத்தின் மேலாண் இயக்குநர், அவருக்கு உறவு.

"ஏம்பா! அவருட்டே ஒரு வார்த்தை சொன்னா இன்னும் ரெண்டு ஃபேக்டரிக்கு சிபாரிசு செய்வாரில்லே?" என்றேன்.

"போயி கேட்டேன்ல!" என்றார் பஜ்ரங்லால்.

"என்ன சொன்னாரு?"

"அரே பாய்! து ஜெ தோ பேஜ்னா ஹை! உன்கோ தோ லேனா ஹை! பீச்மேமைன் கியோங்?" என்றாராம். 'அட சகோதரா! உனக்கு விற்கணும், அவனுக்கு வாங்கணும், இடையிலே நானெதற்கு?' என்று அதற்குப் பொருள்.

இன்றோ, வாங்குவதானாலும், விற்பதானாலும் இடைத்தரகர்கள் செல்வாக்கே கோலோச்சுகிறது. உற்பத்திச் செலவைப் போல மூன்று மடங்கு ஆதாயம் இடைத்தரகனுக்குப் போய், மொத்த விலையும் வாங்குபவன் தலையில் விடிகிறது. மிகவும் மலிவான கால் குப்பி மதுவின் விலை 98 ரூபாய் என்றால் அதில் நாற்பத்தைந்து ரூபாய் அரசாங்கத்துக்கு, முப்பது ரூபாய் தயாரிப்பாளன் ஆதாயம், மிச்சம் உற்பத்திச் செலவு. யாரிதில் இடைத்தரகர்கள் வான்களே?

தீவிர இலக்கிய வாசகரும் பள்ளித் தலைமையாசிரியரும் நவீன விவசாயியுமான எனது நண்பர் தங்கமணி ஒரு நாள் வீட்டுக்கு வந்தார். எனக்குக் கொஞ்சம் காட்டு நெல்லி கொண்டு வந்தார். நான் ஔவை மூதாட்டியும் இல்லை; அவர் தகடூர் அதியமானும் இல்லை என்றாலும்.

"ரொம்ப சந்தோஷம் தங்கமணி... கால் கிலோ முப்பது ரூபாய் விக்கிறானுக!" என்றேன்.

"என்னத்தைப் போங்க... எங்களுக்கு கிலோவுக்கு பதினஞ்சு ரூவா தந்தா அதிகம்" என்றார். மொரப்பூர் பக்கம், மூக்கனூர்ப்பட்டியில் கிலோ பதினைந்து ரூபாய்க்கு கொள்முதலாகும் பண்டம், கோயம்புத்தூரில் நடை

பாதைத் தள்ளுவண்டியில் கிலோ நூற்றிருபது ரூபாய். இடையில் பலருக்கு பிழைப்பு நடக்கிறது என்றாலும், விவசாயி வாழ முடியவில்லை என்பதுதானே காலத்தின் கசப்பு!

நாஞ்சில் நாட்டுக்காரர்கள் மலையாளிகள் போல, கோவாக்காரர்கள் போல, தேங்காய் அதிகம் பாவிப்பவர்கள். இந்திய நாட்டின் இதய மருத்துவ வல்லுனர் அனைவரும் ஒரு மனதாகத் தேங்காய்க்கும் எண்ணெய்க்கும் எதிராகப் புனிதப்போர் நடத்தியபோதும் நாங்கள் அதனைப் பொருட்படுத்தியதில்லை. இன்று கேரள நாட்டு ஆய்வுகள், அறுபது எழுபது ஆண்டுகளாக தேங்காய்க்கு எதிராக நடந்த பரப்புரையைத் தகர்த்து எறிந்துள்ளன. தென்னையே வளராத நாட்டின் பாமாலினுக்கு ஆதரவாகவும், உள்ளூர்த் தேங்காய்க்கு எதிராகவும் செயல்பட்ட மேநாட்டு சூதுக்குப் பகடைக்காயான சங்கதி இன்று சிரிப்பாய்ச் சிரிக்கிறது. இதன் தரகுத் தொகையைக் கொள்ளை கொண்டு போனது எவர்?

வாரத்துக்கு ஏழு காய்கள் எனச் சராசரியாகத் தேங்காய் சுமப்பேன், இருபது ரூபாய் மேனிக்கு வாங்கி. ரசம், மோர், தேநீர் தவிர மற்றெதுவும் தேங்காய் இன்றி அமையாது எமக்கு. தென்னை விவசாயி சொல்கிறான், தனக்குக் காய்க்கு ஐந்து ரூபாய் கிடைத்தால் அதிகம் என்று. கடந்த ஓராண்டாக நாங்கள் கோவைப்புதூரில் வாழ்கிறோம். எம் புறக்கடை மண்ணில் தெங்கு வைத்தால் காய்க்க ஏழாண்டுகள் ஆகும்! வைத்துப் பராமரிக்கும் சிரமம் இன்றி அண்டை வீடுகளில் நூறு ரூபாய் கொடுத்தால் பன்னிரண்டு காய்கள் தருகிறார்கள். எனக்குப் பாதி விலை, அவர்களுக்கும் நியாய விலை.

எரிவாயுக்கான மானியத்தைத் துறந்து தேசக் கட்டுமானத்துக்கு உதவும்படி மாதந்தோறும் குறுஞ்செய்தி வருகிறது. ஈரோடு புத்தகக் கண்காட்சி சென்று 7000 ரூபாய்க்குப் புத்தகங்கள் வாங்கி, பேருந்தில் திரும்பும்போது சகஎழுத்தாள நண்பர் எம்.கோபாலகிருஷ்ணனுடன் அதுபற்றிப் பேசிக்கொண்டு வந்தேன். மாதம் நமக்கு ஒரு எரிவாயு உருளை ஆகும். தேச நிர்மாணத்துக்கு என்று மாதம் 200 ரூபாய் மானியத்தைத்துறப்பதும் சாத்தியம்தான். மாதம் இருபது முறையேனும் நகருக்குச் சென்று திரும்புபவன் நான். போனால் ஒரு காபி குடிப்பது அத்தியாவசியம். சேவை வரி அடங்கலாக ஒரு காபி 27 ரூபாய். 540 ரூபாய் போய் விடும் மாதத்துக்கு. கோவையில்

**பா**மாலினுக்கு ஆதரவாகவும், உள்ளூர்த் தேங்காய்க்கு எதிராகவும் செயல்பட்ட மேநாட்டு சூதுக்குப் பகடைக்காயான சங்கதி இன்று சிரிப்பாய்ச் சிரிக்கிறது. இதன் தரகுத் தொகையைக் கொள்ளை கொண்டு போனது எவர்?



தற்போது 5 ரூபாய்க்குத் தேநீரும் 5 ரூபாய்க்கு வடை அல்லது பஜ்ஜி அல்லது போண்டாவும் கிடைக்கிறது. அந்தக் கணக்குக்குப் போனால் மாதம் 200 ரூபாயே ஆகும். காபி குடிப்பதை நிறுத்தினால் 340 ரூபாய் மிச்சம். எரிவாயு மானியம் வேண்டாம் என்று குறுஞ்செய்தி அனுப்ப இன்னும் மனத்துணிவு வரவில்லை என்றாலும், மனதின் ஓரத்தில் உட்கார்ந்து கிடக்கிறது அந்த யோசனை.

கூடவே துணைக் கேள்வியொன்று வருகிறது. சமூகநீதி பேசும் நமது அரசியல் வியாபாரிகள், சினிமாக்காரர்கள், கல்வி-மருத்துவ-உணவுத் தந்தைகள் எவரேனும் இன்று வரை எரிவாயு மானியம் துறந்தார்களா? ஒருவேளை வெள்ளித் திரையிலும் மேடைகளிலும் மட்டும்தான் சமூகத்துக்கு முன்மாதிரிகளாக இருப்பார்களோ!

சமீபத்திய செய்தி ஒன்று... நாட்டின் அழுக்குகளைப் புளி போட்டு விளக்க வந்த, டெல்லி மாநில அமைச்சர் ஒருவர் வீட்டுக்கு மாதம் மின்சாரக் கட்டணம் 1,25,000 ரூபாயாம். அதை மாநில அரசே செலுத்துகிறதாம்.

நான்கு பேர் வாழும் வீட்டில், குளிர்சாதனமும் வெந்நீர் குளியலும் இல்லாத நடுத்தர வர்க்கத்தினருக்கு, குளிர்சாதனப் பெட்டி, துவைப்பு இயந்திரம், அரைப்பு இயந்திரம், கலப்பு இயந்திரம், துணி தேய்க்கும் பெட்டி, தொலைக்காட்சிப் பெட்டி, விளக்குகள், மின்விசிறிகள் என உபயோகிப்பவருக்கு உத்தேசமாக மாதம் நானூறு ரூபாய் மின் கட்டணம் ஆகிறது.

எப்படி ஐயா, மாநில அமைச்சரே ஆனாலும், மாதம் ஒன்றே கால் லட்சத்துக்கு மின்சாரம் பயன்படுத்த இயலும்? ஒருக்கால் ஈர விறகை, ஈரத்துணியை, வற்றல் - வடகத்தை மின்சாரம் கொண்டு சூடாக்குவார்களா? அல்லது வீட்டின் மொத்த சாக்கடைத் தண்ணீரையும் மின்சாரம் செலுத்தி ஆவியாக்குவார்களா? ஒருக்கால் சப் மீட்டர் போட்டு தெருவுக்கே விற்பார்களோ?

நாடே இடைத்தரகர்களால் நிறைந்து செழிக்கிறது. ஊழியம், சேவை, தொண்டு, பணி எனும் சொற்கள் யாவும் பொருள் இழந்துபோய் ரத்தம் கடித்துறிஞ்சும் நீண்ட பேய்ப் பற்கள் காட்டுகின்றன. இந்திப்படம் ஒன்றில் ஒரு சிரிப்பு நடிகர், தன் முன்னால் வெள்ளை பேன்ட், வெள்ளை சட்டை, வெள்ளை கோட், வெள்ளைக் காலணியுடன் வந்து நிற்கும் மனிதனைப் பார்த்து ஒரு வசனம் சொல்வார், "சஃபேத் சஃபேதி திக்தா ஹை... ஜரூர் ஸ்மகிளர் ஹோ கா!" என்று. 'வெள்ளையும் சொள்ளையுமாகத் தெரிகிறான், நிச்சயம் கடத்தல்காரனாகவே இருப்பான்' என்பது பொருள்.

இன்றைக்குச் சொல்லலாம் என்று தோன்றுகிறது. 'சிரிக்கவே மாட்டேன் எனும் பிடிவாதத்துடன், இறுகிக் கனத்த முகத்துடன், தடித்த தொந்தியுடன் முறைத்து முறைத்துப் பார்க்கிறார். எனவே அரசுப் பணியாளராகவே இருக்கவேண்டும்' என்று. இன்று சேவை, பணி, ஊழியம் எனும் சொற்களுக்கு மாற்றாகத் தரகு எனும் சொல்லை அகராதிகள் பயன்படுத்தும் போலும்.

பரபரப்பாகக் கலைச்சேவை செய்யும் பெரியதனக்காரர் பற்றிய செய்தியொன்று காற்றில் உலவுகிறது. அரசின் மேன்மக்களோடு இறுக்கமான உறவு பூண்ட அவர், கலைவாணிக்குச் செய்யும் கலைச்சேவை காரணமாக ஏற்பட்ட தனது பரிச்சயங்களைப் பயன்படுத்திக் கொண்டு தரகு செய்வாராம். தொழில் முனைவோரை மேன்மக்களிடம் அழைத்துச் சென்று அறிமுகம் செய்து வைப்பதுடன் அவர் பணி முடிந்து போகுமாம். பிறகென்ன, வாயுள்ள பிள்ளைகள் பிழைத்துக் கொள்ளும்! தரகுத் தொகையோ, தொழில் முதலீட்டின் பெருக்கத்துக்கு நேர் விகிதத்தில் இருக்குமாம். ஆயிரம் உண்டிங்கு தரகுச்சாதி, எனில் அந்நியன் வந்து புகலென்ன நீதி?

இன்று லஞ்சம், ஊழல், கையூட்டு எனும் சொற்கள் பழசாகிப் போய் அலுத்துவிட்டன. அச்செயல்பாடுகள் ஊழிக்கால முடிவில்தான் ஒழியும் போலும்! எத்தனை ஆயிரம் பக்கங்களில் சட்டங்கள் இயற்றினாலும், எவ

**வஞ்சம், ஊழல், கையூட்டு எனும் சொற்கள் பழசாகிப் போய் அலுத்துவிட்டன. அச்செயல்பாடு கள் ஊழிக்கால முடிவில்தான் ஒழியும் போலும்!**



ரின் எந்த ரோமத்தையும் அது பிடுங்குவதில்லை.

இருபதாண்டுகளுக்கு முன்பு ரோமம் பிளந்து பார்ப்பதுபோல், மேற்கத்தியப் புரட்சிகளை இங்கு பாடம் நடத்தியவர்கள் இன்று மயில்களைக் கொன்று ஆய்ந்த பீலிப் படுக்கைகளில் உறங்குகி றார்கள். குளிர்பதன இல்லங் களில் வாழ்கிறார்கள். கோடி பெறும் வாகனங்களில் பய ணம் செய்கிறார்கள். குப்பிக்கு இருபதினாயிரம் விலையுள்ள மதுபானங்கள் பருகுகிறார்கள். இடப்பக்கம் ஒன்றும் வலப்பக் கம் ஒன்றுமாய்த்துயில்கிறார்கள். எல்லாம் இடைத் தரகுதான்.

தரகர்களால் தரகர்களுக்காக தரகர்களே நடத்தும் தரகாட்சி! அதன் மாற்றுப் பெயர்தான் மக்களாட்சி என்பது.

இருபதாண்டுகள் முன்பு நானோர் கவிதை எழுதினேன். 'எல்லாம் வசப்படும்' என்ற தலைப்பில்.

*'குற்றாலத்து அருவியின் பாய்ச் சலை அறைக்குள் நிறுத்தலாம்,*

*வங்காளத்து விரிகுடா ஓசையை அகழ்ந்து கொணரலாம்,*

*சுந்தர வனத்துக் காட்டின் இருட்டை முன்றில் படர்த்தலாம்,*

*பெரிய கோயில் பிரகாரக் குறிக ளைப் படுக்கையில் புணரலாம்,*

*சிங்கக் குட்டியின் செவியைத் துளைத்து சங்கிலி கோர்த்து நடத் தித் திரியலாம்,*

*ஆதிகேசவன் கோயிலில் பெயர்த்த பாளம் பதித்து அழுக்குத் துவைக்கலாம்,*

*கனகவிசயர் சுமந்த கல்லில் அம்மியும் குழவியும் அடித்துப்போட லாம்,*

*சந்தனக் காட்டின் வைரம் இழைத்து கக்கூசுக்குக் கதவு பூட்ட லாம்,*

*வரவேற்பறையின் வளைவில்*

*நிறுத்த ரோடின் சிற்பம் செதுக்கித் தருவார்,*

*உணவுக்கூட அகலத்துக்கென சால்வடோர் டாலி வரைந்து தருவார்,*

*அடிப்படையாக அறிக நீ ஒன்று!*

*பொருள்மேல் பொருள் செயும் ஆறு எதுவென?*

(அரும்பொருள்: ரோடின் - புகழ்பெற்ற சிற்பி, சால்வடோர் டாலி - புகழ்பெற்ற ஓவியர், ஆறு - வழி.)

கல்விக்கு, தொழிலுக்கு, வீடு கட்ட எனக் கடன் தரத் தயாராக இருக்கின்றன வங்கிகள். ஆனால் இடையில் ஒரு தரகு உண்டு. நோய் வந்தவனுக்கு மருத்துவமனை வைத்தியம் பார்க்கும். இடையில் ஒரு தரகுண்டு. கமிஷன் என்றும் சேவைக் கட்டணம் என்றும் கன்சல்டன்சி சார்ஜ் என்றும் பற்பல நாமங்கள் உண்டு தரகுக்கு. பிறகென்ன, தெள்ளேணம் கொட்ட வேண்டியதுதானே!

வள்ளுவர் சொல்கிறார், 'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார், மற்றெல்லாம் தொழுதுண்டு பின் செல்பவர்' என்று. ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு ஒருவேளை அது சரியாக இருந்திருக்க வேண்டும். இன்று 'உழுதுண்டு' எனும் சொல்லைத் 'தரகாய்ந்து' என்று மாற்றிப் போட்டுக்கொள்ளலாம்.

இந்தியப் பெருங்குடியினர் தொழுதுண்டு பின் செல்வார்கள். அவர்களால் வேறென்ன செய்யக்கூடும்! மேய்ப்பவர்களுக்குப் பிறகுதானே செம்மறிக் கூட்டம் நடக்கும். ஆயர்பாடிக் கண்ணன் பின் சென்றதுபோல் தரகர்பாடி மன்னன் பின் செல்லும் மந்தைகளாக...

'செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும் எஃகதனில் கூரியது இல்' என்கிறது வள்ளுவம். 'பொருளை ஈட்டுங்கள். பகைவரின் செருக்கை அறுத்து எறியும் கூரிய ஆயுதம் வேறு ஒன்றும் இல்லை' என்பது பொருள். 'செய்க பொருள்' என்பதற்கு 'நல்ல வழியில் நின்று, அறம் பிறழாது பொருள் ஈட்டுக' என்றுதான் திருக்குறளுக்கு உரையெழுதிய இருநூற்றுக்கும் மேற்பட்ட ஆசிரியர்களும் உரைக்கிறார்கள்.

கழுத்தை அறுத்து, வயிற்றில் மிதித்து, கொள்ளையடித்து, கொலைகள் புரிந்து, காட்டிக் கொடுத்து, கூட்டிக் கொடுத்து, தரகு வாங்கிப் பொருள் ஈட்டுக என்றெவரும் போதிக்கவில்லை.

திருக்குறளை வேதம் எனப் பேசும் அனைத்து அரசியலாளர்களும் திருக்குறளுக்கு எதிராகவே செயல்படுகிறார்கள். இந்தியத் தொல்மரபின் அனைத்து அறநூல்களையும் திருத்தி எழுதும் சாமர்த்தியம் உடையவர்கள் அவர்கள்.

**- கற்போம்...**

# கைம்மண் அளவு

ஆங்கிலப் பழமொழி ஒன்று உண்டு– ‘புத்தகத்தையும் மனைவியையும் இரவல் கொடுக்காதே’ என்று. போனால் திரும்பாது. புத்தகம் சரி, போனால் வராது. ஆனால் மனைவி எப்படி? அவள் எப்படி இரவல் போகக்கூடிய சாதனம் ஆவாள்? புத்தகம் தானாக கால் முளைத்து நடந்து போகாது; தானாக வரவும் செய்யாது. ஆனால் மனைவி என்பவள் அப்படியா? இரவல் போனாலோ, அனுப்பப் பட்டாலோ, தானாகத் திரும்பி வர இயலும் அல்லவா? ஆனால் திரும்ப வராது என்றால், இரவல் போனவளுக்கு திரும்ப மனசற்றுப் போகும் என்றும் பொருள் கொள்ளலாம். அவள் இதுவரை இருந்த இடத்தை விட, சென்ற இடம் நிறைவாக, மகிழ்ச்சியானதாக இருக் கிறது என்பதல்லவா அதன் பொருள்? அது ஆராயப்பட வேண்டிய விஷயம்.

**நாஞ்சில் நாடன்**

ஓவியம்: **மருது**



மனையாட்டி, மக்கள் எனக் குடும்பங் குடும்பமாக அடிமைகளாக இருந்திருக்கின்றனர். அடிமைகளாக இருக்கும் தம்பதியினருக்குக் குழந்தை பிறந்தால் அந்தக் குழந்தையும் அடிமையே! அடிமைகளை விற்கலாம், வாங்கலாம், அடமானம் வைக்கலாம், தேவைப்பட்டால் கொல்லவும் செய்யலாம் என்று வாழ்ந்த சமூகங்கள்தான் நாம். உன்னதங்களைப் பேசும் நாம் உன்மத்தங்களையும் பேசித்தானே ஆக வேண்டும்.

பாஞ்சாலியைப் பணயமாக வைத்துச் சூதாடினார்கள் பாரதத்தின் பெரும் புத்திரர்களான பாண்டவர்கள். பாரதியின் மொழியில் சொன்னால், 'ஆவியில் இனியவளை, உயிர்த்து அணிசுமந்து உலவிடும் செய்யமுதை, ஓவியம் நிகர்த்தவளை, அருள் ஒளியினை, கற்பனைக்கு உயிர் அதனை, தேவியை, நிலத்திருவை எங்கும் தேடினும் கிடைப்பரும் திரவியத்தை' வைத்துச் சூதாடினார்கள்.

பாஞ்சாலி கேட்டாள், 'என்னை முதல் வைத்து இழந்த பின்பு தன்னை என் மன்னர் இழந்தாரா? மாறித் தமைத் தோற்ற பின்னர் எனைத் தோற்றாரா?' என்று. அது திரௌபதியைச் சூதில் வைத்து ஆடியிழந்த கதை.

இரவல் என்பது சூதாடித் தோற்பதல்ல; பணயம் போவதல்ல; விலை போவதல்ல. இரவல் பொருள் போனால் திரும்ப வேண்டும். ஆனால், இரவல் போன பொருள் மறதியால், கள்ளத்தால், போன இடத்திலேயே தங்கிவிடும் அபாயம் உண்டு. மனைவியைப் போல புத்தகமும் விலை மதிப்பற்றது என்ற காரணத்துக்காக அந்தப் பழமொழி சொல்லப்பட்டிருக்கலாம். புத்தகம் இரவல் போனால் திரும்ப வராது என்பதை வலியுறுத்தவும் சொல்லப்பட்டிருக்கலாம்.

பொன்னாபரணங்களை இரவல் வாங்கிப் போட்டுத் திருமணங்களுக்குப் போய் வந்து கழற்றித் திரும்பக் கொடுப்பதுண்டு. தன்னிடம் நல்ல புடவை இல்லை என்று புடவை இரவல் வாங்குவதுண்டு. ஆத்திர அவசரத்துக்கு வெட்டுக்கத்தி, கோடரி, மாங்காய் முருங்கைக்காய் பறிக்கும் கொக்கி இரவல் கேட்பதுண்டு. சேவை பிழியும் நாழி, புட்டரிப்பு, அப்பக்கல், பெரிய பாத்திரங்களான வெண்கல உருளி, செம்பு நிலவாய், பித்தளைக் குட்டுவம் இரவல் போவதுண்டு. ஒரு உழவு மாட்டுக்கு உடல்நிலை சரியில்லாமல் போனால், உழவு மாடு கேட்டு வாங்கிப் போவதுண்டு. நெல் அளவு மரக்கால் இரவல் போகும்.

லட்சக்கணக்கான ஈழத் தமி

ழர்களுக்கு. இன்று தாய்நாடே இரவல் தாய்நாடாகிப் போயிற்று. அரசியல் கூலிகளும் காலிகளும் தரகர்களும் துரோகிகளும் ஆட்சி செய்வதைப் பார்க்க, நமக்கே கூட இது இரவல் நாடோ என்று தோன்றும்!

'இரவல்' எனும் சொல்லுக்கு, சென்னைப் பல்கலைக்கழகப் பேரகராதி 'யாசகம்' என்று பொருள் தருகிறது. இரவல் எனும் சொல்லை, யாசகம் எனும் பொருளில் புறநானூறும் பெரும் பாணாற்றுப்படையும் பயன்படுத்தியுள்ளன. பேரகராதி, இரவல் எனும் சொல்லுக்கு, 'மீண்டு தருவதாகக் கொண்ட பொருள்' என்றும் பொருள் தருகிறது. அதாவது 'திருப்பித் தருவேன்' என்று வாக்களித்து வாங்கிக்கொண்டு போகும் பொருள். என்றாலும் இரவல் எனும் சொல்லுக்குள் இரத்தலின் கேவலம் இருக்கிறது.

சிறு வயதில் பல வீடுகளிலிருந்தும் பல பொருட்கள் இரவல் வாங்கப் போன இழிவு எனது ஆழ்மனத்தில் இன்றும் வண்டலாய்க் கிடக்கிறது. திருக்குறளில் 'இரவச்சம்' எனும் அதிகாரமே உண்டு.

'ஆவிற்கு நீரென்று இரப்பினும் நாவிற்கு

இரவின் இளி வந்தது இல்'

என்பது அதில் ஒரு குறள். 'போற்றிப் பேணிப் பிள்ளை போல் வளர்க்கும் பசு மாட்டுக்குத் தண்ணீர் வேண்டும் என்று இரந்தாலும் கூட, ஒருவன் நாவிற்கு அதைவிட இழிவான பிறிதோர் சொல் இல்லை' என்பது பொருள்.

**அடிமைகளை விற்கலாம், வாங்கலாம், அடமானம் வைக்கலாம், தேவைப் பட்டால் கொல்லவும் செய்யலாம் என்று வாழ்ந்த சமூகங்கள் தான் நாம்.**

இங்கு நாம் பயன்படுத்தும் இரவல் என்ற சொல்லுக்கு யாசகம் என்று பொருள் கொள்ளாவிட்டாலும், அது இரப்புதான்.

எல்லா மொழிகளுமே ஏராளமான இரவல் சொற்களைத் தம்முள் அடுக்கி வைத்துள்ளன. தஞ்சைத்தமிழ்ப் பல்கலைக்கழகத்துப் பேராசிரியர் அருளி தொகுத்து வெளியிட்ட, 'அயற்சொல் அகராதி', இருபதினாயிரத்துக்கும்

அதிகமான வேற்றுமொழிச் சொற்கள் தமிழில் புழங்குகின்றன எனும் தகவலைத் தருகின்றது. அரபி, ஆங்கிலம், ஸ்பானிஷ், இந்தி, இந்துஸ்தானி, லத்தீன், உருது, எபிரேயம், கன்னடம், கிரேக்கம், சமஸ்கிருதம், ஜப்பானியம், சிங்களம், சிரியாக், சீனம், டச்சு, துருக்கி, துளு, தெலுங்கு, பாரசீகம், பாலி, பிரெஞ்சு, பிராகிருதம், போர்த்துக்கீசியம், மராத்தி, மலாய், மலையாளம் என 27 மொழிகளின் சொற்கள். அவை அனைத்துமே நமக்கு இரவல் சொற்கள்தானே!

மொழியில் மட்டும் என்று இல்லை. கல்வியில், மருத்துவத்தில், உடையில், ஆபரணங்களில், உணவில், இசையில், நடனத்தில், ஓவியத்தில், முடி திருத்துதலில், ஒப்பனையில், கட்டிடக்கலையில் என எங்கு பார்த்தாலும் இரவல் மயமாகிவிட்டது. இரவல் நன்மையும் செய்யும்; தின்மையும் செய்யும். ஆனால் நம் மனப்பாங்கு, சுயத்தைப் புறக்கணித்துவிட்டு இரவலைக்கொண்டாடப் போய்விட்டது.

புத்தகங்களை நேசிப்பவர்களுக்கான சனிப்பெயர்ச்சி என்பது, புத்தகங்களை இரவல் கேட்க வருபவர்கள்தான். முகத்தை முறித்துக்கொண்டு எங்ஙனம் புத்தகத்தை நேசிக்கும் ஒருவன் புத்தகத்தை நேசிக்கும் இன்னொருவனுக்கு இல்லை என்று சொல்லவியலும்? இரண்டிருந்தால் ஒன்றை கண்டிப்பாக மகிழ்ச்சியுடன் கொடுத்துவிடலாம். பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னால், கம்ப ராமாயணத்துக்கு வை.மு.கோபாலகிருஷ்ணமாச்சாரியார் உரை அச்சில் இல்லாமலும் கிடைக்காமலும் இருந்தது.

தமிழக அரசியல்வாதிகளில் வெகுசிலரே புத்தகம் வாசிப்பவர்கள். அவர்களில் ஒருவர் சட்டப்பேரவைத் தலைவராக இருந்த காளிமுத்து அவர்கள். கோவை விஜயா பதிப்பகத்தில் பலமுறை அவரைச் சந்தித்துப் பேசியிருக்கிறேன். கம்பனுக்கு வை.மு.கோ உரை தேடிக்கொண்டிருப்பதைச் சொன்னேன். தன்னிடம் இரண்டு செட் இருப்பதாகவும் அவற்றுள் ஒன்றை இரவலாக அல்ல... அன்பளிப்பாகத் தருவதாகவும் சொன்னார். காலம் கை கூடவில்லை. மத்திய அமைச்சராக இருந்த திருமதி. சுப்புலட்சுமி ஜெகதீசன் புத்தகங்களைத் தீவிரமாக நேசிப்பவர். அவரது கணவர் திரு.ஜெகதீசன் தேர்ந்து வாசிப்பவர். நல்ல புத்தகங்கள் வாங்கினால் எனக்கும் ஒன்று சேர்த்து வாங்குவார். எனவே, அவரிடம் எனக்கு இரவல் கேட்க நேர்ந்ததில்லை.

புதியதாக வீடு கட்டியபோது எனது எழுத்து வேலைக்கும்

புத்தகங்களுக்குமாக ஒரு நூலக அறை அமைத்துக்கொண்டேன். இப்போது என்னிடம் 8000 புத்தகங்களாவது இருக்கும். படித்துவிட்டு, 'இனியெனக்கு ஆகாது' எனக் கழித்த சில ஆயிரங்கள் போக! கழிப்பனவற்றை வேறு எவருக்கேனும் கொடுத்து விடுவேன். ஞாபகமறதியாகவோ, அவசரமாகத் தேடிக் கைக்கு அகப்படாமற் போனாலோ இரட்டைப் பிரதியும் வாங்கி விடுவதுண்டு. அல்லது, நாம் வாங்கிய பிறகு நூலாசிரியரோ, நண்பர்களோ இன்னொரு பிரதி தந்துவிடுவதுண்டு.

> **இரவல் எனில், 'திருப்பித் தருவேன்' என்று வாக்களித்து வாங்கிக்கொண்டு போவது. என்றாலும் இரவல் எனும் சொல்லுக்குள் யாசகத்தின் கேவலம் இருக்கிறது.**



நாவல், சிறுகதை, கட்டுரை, நாடகம், கவிதை, அனைத்துப் பிரிவிலுமான மொழிபெயர்ப்புகள், சங்க இலக்கியங்கள், சமய இலக்கியங்கள், சார்பு நூல்கள், வழி நூல்கள் எனத் திருப்பித் திருப்பி அடுக்கும்போது, நம்மிடம் இருந்து பின்னர் காணாமற் போக்கிய நூல்கள் நினைவில் வந்து அலைக்கழிக்கும். எவரும் என்னிடம் புத்தகம் திருடியதில்லை. சில சமயம் 'நல்ல புத்தகம், வாசித்துவிட்டுத் தாருங்கள்' என நானே தருவேன். சில சமயம் அவர்களே கேட்டு வாங்கியும் போவார்கள். நாம் இரவல் கொடுக்கும் புத்தகங்களை பேரேடு ஒன்று காத்து, பதிந்து வைத்துக்கொள்ளும் பழக்கம் இல்லை எனக்கு. பிறகு யாரிடம் என்ன கொடுத்தோம் என்று மறந்தும் போய்விடும். கொடுக்காத ஆளிடம் போய், 'புத்தகத்தைத் திருப்பித் தாருங்கள்' என்று கேட்டு அவமானப்பட முடியுமா! சிலர் வாங்கிப் போய் வாசித்துவிட்டுப் பொறுப்பாகத் திருப்பித் தருவார்கள்.

தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர்கள் - கலைஞர்கள் சங்கத்தின் மாநிலப் பொதுச் செயலாளராக இருந்த சிறந்த சிறுகதை எழுத்தாளரும் - நவீன இலக்கியவாதி கோணங்கி, நவீன நாடக இயக்கம் சார்ந்த முருகபூபதி ஆகியோரின் அண்ணனுமான

ச.தமிழ்ச்செல்வன் ஈராண்டு களுக்கு முன்பு என் வீட்டுக்கு வந்தார். நட்பு நிமித்தம் வந் தார் போலும் என்று எண்ணிக் கொண்டேன்.

"எனக்கு பா.செயப்பிரகாசம் சிறுகதைகள் முழுத்தொகுப்பு இரவல் வேணும். ஒரு கட்டுரை எழுதணும்... பத்திரமா திருப்பித் தருவேன்" என்றார். வராதவர் வந்து, கேட்கக் கூடாததை - கர்ணனின் கவச குண்டலங்களை அந்தணன் வேடத்தில் வந்த இந்திரன் கேட்பதைப் போல - கேட்கிறாரே என்று மனதில் எண்ணிக்கொண்டு, "எங்கிட்டே இருக்குன்னு யாரு சொன்னா?" என்றேன்.

"கீரனூர் ஜாகிர் ராஜா சொன் னார்" என்றார்.

வைத்துக் கொண்டு வஞ்சம் செய்வது நமக்கு வழக்கமில்லை. எடுத்துக் கொடுத்தேன். என்னை நம்புங்கள், இரண்டு மாதங்களில், திடமாகப் பேக்கிங் செய்யப் பட்டு, நன்றிக் கடிதத்துடன், எனது புத்தகம் தூதஞ்சலில் எனக்கு வந்து சேர்ந்தது. எனக்கு 'உண்டாலம்ம...' என்று தொடங் கும் சங்கச் செய்யுள் நினை வுக்கு வந்தது. அது தனிமனிதப் பொறுப்பு, நாணயம் சார்ந்த விஷயம்.

கோவையில் கல்லூரியில் வேலை பார்த்த இளைஞர் ஒரு வர் முனைவர் பட்ட ஆய்வு மேற்கொண்டிருந்தார். அறிஞர் ஒருவர், அவரும் என்னை நன்கு அறிந்தவர்தான், ஆய்வில் உதவி புரிந்தார். ஆய்வுத் தலைப்பு நினைவில்லை எனக்கு, என்றா லும் தமிழ் நவீன கவிதை சார்ந் தது. மாணவர் மூலம் அறிஞர் எனக்கொரு கடிதம் கொடுத்து அனுப்பினார். 'நாஞ்சில், கீழ்க் கண்ட சில கவிதை நூல்கள் கோவையில் வேறெவரிடமும் இல்லை. உங்களிடம் இருக்க வாய்ப்பு உண்டு. இருந்தால் தந் துதவுங்கள். ஆய்வு முடிந்ததும் திருப்பி விடுவேன்' என்ற வகை யில் கடிதம். சி.மணியின் 'வரும் போகும்', ஞானக்கூத்தனின் 'அன்று வேறு கிழமை', பசுவய்யா வின் 'நடுநிசி நாய்கள்', நகுலனின் 'கோட் ஸ்டாண்ட் கவிதைகள்', ஆத்மாநாம் கவிதைகள், அபியின் 'அந்தர நடை' என்று பத்துப் பன் னிரண்டு புத்தகங்கள் கொடுத்து அனுப்பினேன்.

மூன்றாண்டுகள் சென்று, பொது நிகழ்ச்சியொன்றில் அந்த மாணவரைச் சந்தித்தபோது, அவர் முனைவர் ஆகியிருந் தார்; நகரத்துக் கல்லூரி ஒன்றில் வேலை பார்ப்பவராகவும்!

"தம்பி, அந்தப் புத்தகங்கள் திரும்பக் கிடைக்கலியே!" என் றேன்.

"அறிஞர் கொடுத்துனுப்ப

லையா?" என்றார். தம்பி இன்று துறைத் தலைவர். 'கண்ணே, மணியே, கற்கண்டே, கருந் தேனே' என்று கொஞ்சிக் குலவி முயங்கிக் களித்த பின்பு, 'தள்ளிப் படு, காத்து வரட்டும்' என்று சொல்கிற கதை போல் ஆகிவிட்டது நம் கதை. மலையாளத்தில் பழமொழி ஒன்றுண்டு. 'பாலம் கடக்கும்போழ் நாராயணா! பாலம் கடந்தப்போழ் பூராயணா!' என்று. அபாயகரமான சேதமடைந்த மரப்பாலம். அதைக் கடந்து போகும்போது 'நாராயணா, நாராயணா' என்பார்களாம். பாலம் கடந்து போன பின்பு 'பூராயணா' என்பார்களாம். அது மலையாளத்தில் ஒரு கெட்ட வார்த்தை.

அந்தக் கவிஞர்களின் முதற் பதிப்பு நூல்கள் அவை. இன்று தேடினாலும் அந்த வெளியீடுகள் கிடைக்காது.

1979 ஆகஸ்ட் 29ம் நாள் எனக்குத் திருவனந்தபுரத்தில் திருமணம் ஆயிற்று. திருமணத்துக்கு என் நண்பர் ஞான.ராஜசேகரன் வந்திருந்தார். 'மோகமுள்', 'முகம்', 'பாரதி', 'பெரியார்', 'ராமானுஜன்' போன்ற திரைப்படங்களை இயக்கியவர். சென்னை கம்பன் கழகம் அப்போது உயர்நீதிமன்ற நீதிபதி மு.மு.இஸ்மாயில் பதிப்பாசிரியராக இருந்த 'கம்ப ராமாயணம்' மூலம் மட்டும் ஒரே நூலாக

**ஆங்காங்கே முனைகள் மடிக்கப் பட்டு, வரிகளில் கோடிடப்பட்டு, ஓரங்களில் குறிப்புகள் எழுதப்பட்டு... பப்படக் கட்டு போலக் காட்சி தந்தது, வயதாகி நோய்ப்பட்ட பாலியல் தொழிலாளி போல.**



வெளியிட்டிருந்தது. மெல்லிய உயர்தரத் தாளில், காலிக்கோ பைண்டிங்கில் நல்ல பதிப்பு. அந்தப் புத்தகம் 36 ஆண்டுகளுக்கு முன்பு 75 ரூபாய். எனக்குத் திருமணப் பரிசாகத் தந்தார்.

இன்று அந்தப் பதிப்பு என் கைவசம் இல்லை. ஆண்டாளைப் பிரிந்த பின்னர் பெரியாழ்வார் பாடினார்- 'ஒரு மகள் தன்னை உடையேன், உலகம் நிறைந்த புகழால் திருமகள் போல வளர்த்தேன், செங்கண் மால்தான் கொண்டு போனான்' என்று. அதுபோல் அந்தப் புத்தகத்தைத்

தேடித் தேடிக் களைத்தேன். எளிதாகச் சொல்லி விடலாம், 'இன்னொன்று வாங்கிக்கொண்டால் போயிற்று' என்று. ஆனால், சென்னைக் கம்பன் கழகத்தாரிடம் பட்டிமண்டபம் நடத்தப் பணம் உண்டு, மறுபதிப்புச் செய்யக் காசில்லை.

கலைஞன் பதிப்பகம், மூன்று பாகங்களாக, 'ஒரு நூற்றாண்டுச் சிறுகதைகள்' என்று வெளியிட்டனர், பதினைந்து ஆண்டுகள் முன்பு. அவற்றுள் என் கதை ஒன்றும் இருந்ததால், ஒரு பாகம் எனக்கு இலவசமாக - மன்னிக்கவும், விலையில்லாமல் - கிடைத்தது. கலைஞன் பதிப்பக உரிமையாளர் மாசிலாமணி தீவிர இலக்கிய வாசகர். எனக்கு வர வேண்டிய ராயல்டி கணக்கை நேர் செய்து, மற்ற இரு பாகங்களையும் தந்தார். கோவைக்குப் பணி மாற்றம் பெற்று வந்த எம் நெருங்கிய உறவு, மூன்று பாகங்களையும் வாசிக்க எடுத்துப் போனார். இரண்டை மட்டுமே திரும்பத் தந்தார். மூன்றாவதை அவர் அலுவலகச் சகபாடியொருவர் வாசித்துக் கொண்டிருந்தாராம். இன்னும் வரவில்லை. என்ன செய்யலாம் சொல்லுங்கள்?

பல்கலைக்கழகம் ஒன்றில் என் படைப்புகளில் முனைவர் பட்ட ஆய்வு செய்தவர் பணிபுரிகிறார். எம்.ஏ. கற்கும் மாணவருக்கு, ஐஞ்சிறு காப்பியங்களில் ஒன்றான 'உதயணகுமார காவியம்' பாடம் நடத்த வேண்டும் அவர். 'தமிழ் நிலையம்' ஐந்து தொகுதிகளாக, ஐஞ்சிறு காப்பியங்கள் வெளியிட்டிருந்தது. பொறுப்பான ஆய்வாளர், சிறப்பான நண்பர் என்பதால், 'உதயணகுமார காவியம்' இடம் பெற்றிருந்த ஐந்தாம் தொகுதி மட்டும் இரவல் கொடுத்தேன். சில மாதங்கள் சென்று, புத்தகம் திரும்பி வந்தது. என் புத்தகங்களை நான் மட்டுமே வாசிப்பதால், அவை கருக்கழியாமல் இருக்கும்; சில புத்தகங்கள் கன்னி கழியாமலும்! எனது பேராசிரிய நண்பர், என் புத்தகத்தை அவரது மாணவருக்கு இரவல் தந்திருக்கிறார். புத்தகத்தில் அந்த மாணவர் தன் பெயரை எழுதி, அது கிறுக்கி மறைக்கப்பட்டு, முகப்புப் பக்கத்தில் அரைப்பக்கம் கிழிக்கப்பட்டு, ஆங்காங்கே முனைகள் மடிக்கப்பட்டு, வரிகளில் கோடிடப்பட்டு, ஓரங்களில் குறிப்புகள் எழுதப்பட்டு... பப்படக் கட்டு போலக் காட்சி தந்தது, வயதாகி நோய்ப்பட்ட பாலியல் தொழிலாளி போல. இன்றும் ஏதோ தேவைக்கு அந்தப் புத்தகத்தைப் புரட்ட நேரும்போது, என் வயிற்றில் இஞ்சி, பூண்டு, மிளகு, பச்சை மிளகாய் எல்லாம் சேர்த்து அரைத்துக் குடித்த

சங்கடம் ஏற்படுகிறது.

சொந்தப் புத்தகமே ஆனாலும், முனை மடிப்பது, அடிக்கோடு இடுவது, ஓரங்களில் குறிப்பு எழுதுவது, புத்தகத்தின் முதுகை வளைத்து வைத்துப் படிப்பது எனக்குப் பிடிப்பதில்லை. எந்தப் புத்தகத்தையும் அதன் மரியாதையுடன் வாசிக்க வேண்டும். இடது கையில் முதுகு வளைத்துப் பிடித்த புத்தகமும், வலது கையில் சாளை மீன் குழம்பு ஊற்றிப் பிசைந்த சோறும் தின்றால் அது எமக்கு ஒவ்வாமை.

நான் புத்தகம் இரவல் வாங்குவதில்லையா என்று நீங்கள் கேட்கக் கூடும். முன்னட்டை, பின்னட்டை இல்லாத வங்காள நாவல், 'ஆரோக்கிய நிகேதனம்' மற்றும் காகா கலேல்கர் எழுதிய 'ஜீவன் லீலா' இரண்டும் நான் ஜெயமோகனிடம் இரவல் வாங்கிப் படித்ததுதான். பெருந்தகை டி.பாலசுந்தரம் அவர்களிடமிருந்துதான் மிகமிக அரிதான புத்தகங்களான 'ஆண்டாள் பிள்ளைத்தமிழ்' மற்றும் 'இரணிய வதைப் பரணி' இரவல் வாங்கினேன். உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் வெளியிட்ட, யாழ்ப்பாணத்துக் கதிரைவேல் பிள்ளை தொகுத்த 'தமிழ்ச் சொல்லகராதி' நான்கு பாகங்கள். அவற்றுள் முதல் பாகம், பேராசிரியர் ஜெயந்த ஸ்ரீ பாலகிருஷ்ணனிடம் இரவல் வாங்கியது. இன்னும் கொடுக்கவில்லை. உ.வே.சாமிநாதய்யர் நூலக வெளியீடான 'சீவக சிந்தாமணி' மூலமும் நச்சினார்க்கினியர் உரையும் இன்று அச்சில் இல்லை. அதுவும் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடான டாக்டர் கு.சீனிவாசன் எழுதிய 'சங்க இலக்கியத் தாவரங்கள்' எனும் நூலும் நூலகப் பிரதிகள் என் கைவசம் இருக்கின்றன இரவலாக.

**இடது கையில் முதுகு வளைத்துப் பிடித்த புத்தகமும், வலது கையில் சாளை மீன் குழம்பு ஊற்றிப் பிசைந்த சோறும் தின்றால் அது எமக்கு ஒவ்வாமை.**



இரவல் புத்தகங்கள், வளர்க்கக் கொடுத்த பிள்ளை போல. கொடுக்க மனமில்லாவிட்டாலும், திருப்பிக் கொடுக்காமல் தீருமா?

**- கற்போம்...**

# கைம்மண் அளவு

எனக்கு வாசகர் என்று எவரும் இல்லை. எல்லோரும் நண்பர்களே! இத்தொடரை தொடர்ந்து வாசித்து வரும் நண்பர்களில் பலர் கேட்டுவிட்டனர், 'மதுவிலக்கு பற்றி வாய் திறக்க மாட்டீர்களா' என! ஒருவேளை நாம் வாய் திறந்தால் மது மணம் வீசக்கூடும். சிலர் அதை மது நாற்றம் எனலாம். எமக்கதில் மறுப்பு இல்லை. நாற்றம் என்றாலும் தமிழில் மணம் என்றே பொருள்.

**நாஞ்சில் நாடன்**

ஓவியம்: **மருது**



ஆயிரத்து இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு, நாச்சியார் திருமொழியில் ஆண்டாள், 'கற்பூரம் நாறுமோ, கமலப் பூ நாறுமோ, திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித்திருக்குமோ?' என்று மாதவனின் வாய்ச்சுவையும் நறுமணமும் வியக்கிறாள்.

நள்ளிரவில், நடுச்சாலையில் நிறுத்தி, என்னை எவரும் இதுவரை ஊதச் சொல்லிக் கேட்டதில்லை. நடந்து போகிறவனை வேலை மெனக்கெட்டு ஊதச் சொன்னால் பைசாவுக்குப் பயன் உண்டா?

பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு வரை கதைகளும் நாவல்களுமே எழுதிக் கொண்டிருந்தேன். கட்டுரை எழுதும் சோலிக்கு வந்ததெல்லாம் கி.பி 2000க்குப் பிறகுதான். இப்போது சிந்துபாத்தின் தோளில் ஏறி அமர்ந்துகொண்டு, இறங்க மாட்டேன் என்று அடம்பிடிக்கும் கிழவன் போலாகிவிட்டது.

தொடக்க காலத்தில் நானெழுதிய கட்டுரைகளில் ஒன்று மதுப்பழக்கம் பற்றியது. தலைப்பு, 'நஞ்சென்றும் அமுதென்றும் ஒன்று'. எனது முதல் கட்டுரைத் தொகுப்பின் தலைப்பும் கூட அஃதே. இதுவரை மூன்று பதிப்புகள் கண்ட நூல் அது. மேலும் இரண்டு கட்டுரைகள் எழுதினேன், மதுப்பழக்கம் பற்றி. அவற்றில் ஒன்றின் தாக்கத்தால் 'மதுச்சாலை' என்றொரு திரைப்படம் வந்தது. மது பற்றிய எனது மூன்றாவது கட்டுரை 'உண்ணற்க கள்ளை' என்ற தலைப்பில் கள் உண்ணுதல் பற்றியது. கள்ளுக்கு ஆதரவானது.

இன்றைய அரசியல் சூழலில் மதுவுக்கு ஆதரவாகக் கட்டுரை எழுதினால், 'கிறுக்கன்' எனப் பட்டம் சூட்டி விடுவார்கள். ஏனெனில் வெகுசன மனப்போக்கு அவ்விதம் உள்ளது. ஆகவே, ஊர் ஓடும்போது நடுவில் ஓடுகிறார்கள் பலரும். பாம்பு தின்னும் நாட்டுக்குப் போனால், 'நடுக்கண்டம் எனக்கு' என்று சொல்லவும் வல்லவர்கள். ஆனால், எழுத்தாளன் அவ்வாறு இருக்க இயலாது. அவன் நடுப்பகலில் தீப்பந்தம் ஏந்தி மனிதனைத் தேடுகிறவன்.

குடிப்பவர்களில் வகைகள் உண்டு. எப்போதாவது அல்லது அவ்வப்போது பருகுவதை ஒரு ரசானுபவமாகச் செய்கிறவர்கள். இரண்டாவது, தினமும் குடிக்கும் குடிகாரர்கள். மூன்றாவது, குடி வெறியர்கள் அல்லது குடி நோயாளிகள். பொதுமக்கள் பார்வையில் பட்டு அவர்களைக் கவலையும் கோபமும் வெறுப்பும் அருவருப்பும் அடையச் செய்பவர்கள் இவர்கள். குடி வெறிக்கும் குடிநோய்க்கும் ஆளான

நாடு முழுக்க கல்யாணக் கொண்டாட்டங்களின்போது மக்கள் குடிக்கிறார்கள், ஆடிப் பாடுகிறார்கள். ஆனால், சாவின்போது குடிப்பவன் தமிழனாகவே இருக்கிறான்.



வர்களை வைத்தியம் செய்து சீராக்கும் முயற்சியில் சமூகம் ஈடுபட வேண்டும்.

தமிழ்நாட்டில் மதுவை ஒழிக்க வேண்டும் என்று போராடுபவர்களின் சிந்தனையை ஆட்கொண்டிருப்பவர்கள் இந்த மூன்றாவது வகையினர்தான். அவர்களது நியாயம் நமக்குப் புரிகிறது. ஆனால் பூரண மதுவிலக்கு என்பது தீர்வா, சாத்தியமா என்ற ஆய்வும் அவசியமாகிறது.

உலகெங்கும் வாழும் பத்து கோடித் தமிழர்கள் என்னைப் பொறுத்தருள வேண்டும். ஏனெனில், எனது கணிப்பில் பெரும்பாலான தமிழர்கள் என்ன குடிக்க வேண்டும், எப்போது குடிக்க வேண்டும், எவ்வளவு குடிக்க வேண்டும், எப்படிக் குடிக்க வேண்டும், யாருடன் குடிக்க வேண்டும் என்பதை அறிய மாட்டார்கள். பள்ளிகளில் பாலியல் கல்வி வேண்டும் என்று முழங்குகிற நாம், மதுப்பழக்கம் பற்றிய அத்தியாவசியமான புரிதலை வழங்குவதும் தேவையானதாகிறது.

உடனே கேட்பீர்கள், "தமிழனுக்கு மட்டும் இதை ஏன் சொல்லித் தர வேண்டும்" என்று. இந்தியா முழுக்கப் பயணம் செய்தவன் எனும் நிலையில், பார்வையில் படுகிற காட்சிகளையும் செவிப்படுகிற செய்திகளையும் வைத்துக்கொண்டு யோசிக்கும்போது, தமிழனுக்குச் சில தகவல்கள் போய்ச் சேரவில்லையோ என்று தோன்றுகிறது. சென்ற ஆண்டில், புவனேஸ்வர் தமிழ்ச் சங்கத்தின் அழைப்பின் பேரில் ஏழு நாட்கள் ஒரிசா மாநிலத்தில் சுற்றித் திரிந்தேன். புவனேஸ்வர், கட்டாக், பூரி என்று அலைந்தபோது மதுக்கடைகளே கண்ணில் படவில்லை. என்னை ஊர் சுற்றிக் காட்டிய புவனேஸ்வர் தமிழ்ச் சங்கத் தலைவர் துரைசாமி, செயலாளர் அன்சாரி, செயற்குழு உறுப்பினர் மரகத ராஜா ஆகியோரிடம் கேட்டேன்.

ஒரிசா மதுவிலக்கு அமலில் உள்ள மாநிலம் அல்ல என்று எனக்குத் தெரியும். எங்கும் காலிக் குப்பிகள், உடைக்கப்பட்ட பீர் பாட்டிகள் காணோம். எனக்குச் சொன்னார்கள், அங்கு மது விலக்கு இல்லை என்றும், வேண்டியது கிடைக்கும் என்றும். ஆனால் நம்மூரில் மருந்துக் கடைகளுக்கு அடுத்தபடியாக மதுக்கடைகள் தென்படுவதைப் போல அல்ல அங்கே! ஏழு நாட்கள் அலைந்ததில் நாலைந்து கடைகளே கண்ணில் பட்டிருக்கும். அங்கும் சாரிசாரியாக மக்கள் கூட்டம் சாயவில்லை. நம்மூரிலோ, ரேஷன் கடைகளுக்கு அடுத்தபடியாக மதுக்கடைகளில்தான் கூட்டம் கிடக்கிறது.

அடிக்கடி பயணம் செய்யும் கேரளத்தில், கர்நாடகாவில், ஆந்திராவில், மகாராஷ்டிராவில், தெலங்கானாவில் குடி வெறியர்கள் இத்தனை கூட்டமாகக் கண்பட்டதில்லை. கோயில், தேவாலயம், பள்ளிவாசல், மருத்துவமனைகள், கல்விக் கூடங்களை அடுத்து அங்கெல்லாம் மதுச் சாலைகள் இல்லை.

சென்ற கிறிஸ்து பிறப்பை ஒட்டி நான்கு நாட்கள் வாரணாசியில் இருந்தேன். அங்கே கஞ்சா இலையை சொடக்கு விடும்படிமை போல அரைத்து, பாலில் கலக்கி பச்சை நிறத்தில் லஸ்ஸி விற்கும் கடைகளில் வெளிப்படையாக விற்பனை செய்கிறார்கள். பாங் என்றொரு பானம். மராத்திய மாநிலத்தில் பெட்டிக் கடைகளில் பியர் விற்பதைப் போல. காசியில் சந்துகளுக்குள் கஞ்சா புகைக்கும் குடில்கள் உள்ளன. ஹூக்கா நடுவில் இருக்க, சுற்றி பத்துப் பேர் உட்கார்ந்திருக்கிறார்கள். அங்கே அலம்பலும் இல்லை; அலவலாதித்தனமும் இல்லை. உத்தரப் பிரதேசத்தில், பீகாரில், உத்தராஞ்சலில், உத்தர்கண்டில், மத்தியப் பிரதேசத்தில் நம்மளவுக்குக் குடி வெறியர்கள் இல்லை.

இன்னொரு விடயம், நாடு முழுக்க கல்யாணக் கொண்டாட்டங்களின்போது மக்கள் குடிக்கிறார்கள், ஆடிப் பாடுகிறார்கள். ஆனால், சாவின்போது குடிப்பவன் தமிழனாகவே இருக்கிறான். பாடை கட்ட ஆரம்பிக்கும் முன்பே இங்கு மதுக்குப்பிகள் வந்து இறங்கி விடுகின்றன. பாடல் வரியொன்று சொல்கிறது. 'தமிழன் என்றொரு இனம் உண்டு, தனியே அதற்கொரு குணம் உண்டு' என. அந்தத் தனிக் குணம் என்ன என்பதைப் பல்கலைக்கழகங்கள் ஆய்வு செய்ய வேண்டும்.

மதுவுக்கு எதிரான அத்தனை பாடல்களையும் மேற்கோள் காட்டி, எம்மால் தனி நூல்

பெரும்பாலான தமிழர்கள் என்ன குடிக்க வேண்டும், எப்போது குடிக்க வேண்டும், எவ்வளவு குடிக்க வேண்டும், எப்படிக் குடிக்க வேண்டும், யாருடன் குடிக்க வேண்டும் என்பதை அறிய மாட்டார்கள்.

எழுதவியலும். 'கள்ளுண்பார் நஞ்சுண்பாரே' என்றும், 'சான்றோரால் எண்ணப் படாதவர்' என்றும், 'கள்ளுண்டு கவறாடும் இறைமுறை பிழைத்த அரசு' என்றும் ஏராளம் பாடல்கள் உண்டு. எவர் எப்படிச் சொன்னாலும் மதுப்பழக்கம் என்பது எஞ்ஞான்றும் அறம் சார்ந்த சமாச்சாரம் அல்ல. அது தனி மனித ஒழுக்கம் சார்ந்தது. எனது மூன்று கட்டுரைகளிலும் திரும்பத் திரும்ப அதைத்தான் பேசினேன்.

எல்லோரும் கேட்கிறார்கள், "ஐந்நூறு ரூபாய் சம்பளத்தில் முன்னூறு ரூபாய்க்குக் குடிக்கிறானே! பன்னிரண்டாம் வகுப்பு மாணவன் குடிக்கிறானே! குடித்து விட்டுச் சாக்கடையோரம் விழுந்து கிடக்கிறானே! குடிவெறியில் பாலியல் பலாத்காரம் செய்கிறானே! நோய் வந்து சாகிறானே! பெண்டாட்டி பிள்ளைகளைப் போட்டு அடிக்கிறானே! தாறுமாறாய் வாகனம் ஓட்டி சாலையில் விழுந்து சாகிறானே!"

ஆம், ஆம், ஆம்! எனக்குத் திருப்பிக் கேட்கச் சில கேள்விகள் உண்டு! "ஏன் வங்காளத்தில், பஞ்சாபில் இத்தனை தீவிரத்துடன் மேற்சொன்ன காரியங்கள் நடக்கவில்லை? ஏன் பஜாரில், பேருந்து நிலையங்களை அடுத்து அங்கெல்லாம் மதுக்கடைகள் திறந்து வைக்கப்படுவதில்லை? மருத்துவமனை எமர்ஜென்சி வார்டு போல, ஏன் இரவு இரண்டு மணிக்கும் இங்கு மது வாங்கக் கிடைக்கிறது? எப்படி அரசு ஆணைகளின் படி காந்தி ஜெயந்தி, மகாவீர் ஜெயந்தி போன்ற நாட்களில் மதுக்கடைகள் சாத்தப்பட்டிருந்தாலும் அதிக விலையில் பக்கத்து கோழிக்கடையிலும் புரோட்டா கடையிலும் குப்பிகள் கிடைக்கின்றன? எந்தக் கட்சிக்காரன் ஓட்டுக் கேட்டாலும் காசுடனும் பிரியாணியுடனும் கால் குப்பியும் எதற்காக வழங்குகிறார்கள்?"

எந்த வகை மதுவானாலும் தயாரிப்பு முறை என ஒன்றுண்டு. திராட்சையில் தயாரானால் ஒயின், பிராந்தி... கோதுமை, பார்லி போன்ற தானியங்களில் தயாரானால் விஸ்கி; அரிசியில் தயாரானால் சாக்கே; முந்திரிப்பழத்தில் அல்லது தேங்காய்த் தண்ணீரில் தயாரானால் ஃபென்னி என்பது போல்; இங்கே அனைத்து வகை மதுபானத்துக்கும் அடிப்படை, சர்க்கரைத் தொழிற்சாலைகளின் உப பிறப்பான மொலாசஸ் மூலப்பொருளாகக் கொண்ட 'ஸ்பிரிட்' என்கிறார்கள். பிராந்தி, விஸ்கி, ரம், வோட்கா, இவற்றுக்கான வாசம், நிறம், சுவை ஏற்றப்படுகிறதாம். யாவற்றிலும் ஸ்பிரிட்டின் அளவு 42.8 சதவிகிதம்தான்.

தமிழ்நாட்டின் தரமான மது ரசிகர்கள் கேரளத்திலும் கர்நாடகத்திலும் சென்று மது பாட்டில்கள் வாங்கி வருகிறார்கள். விலை சற்று அதிகம் என்றாலும் சரக்கு தரமானதாக இருக்குமாம். சிறுபாணாற்றுப் படை பாடிய புலவன், 'பாம்பு வெகுண்டன்ன தேறல்' என்கிறான். 'நாகப்பாம்பின் சீற்றத்தை ஒத்த மது' என்று பொருள்.

நம்மாளுக்கு தரமான சரக்கு போட்டால், 'கடிக்கலை சார்' என்கிறான். அவனுக்கு உள்ளூர் சரக்குதான் சரியாகக் கடிக்கிறது. இந்த மாயம் என்ன? இந்த மாயம் நிகழ்த்தும் மந்திரவாதிகள் யார்? இந்த மாயம் காட்டும் சேதம் யாது?

சரி, பூரண மதுவிலக்கு என்ற ராம ராஜ்ஜியம் வந்துவிடுவதாகவே இருக்கட்டும். பூரண மதுவிலக்கு வந்த மறுநாள், டேங்கர் லாரிகளில் சாராயம் கொண்டு வந்து எல்லா பேருந்து நிலையங்களிலும் நிறுத்தப்பட்டு, அரசியல்வாதிகளின் நல்லாசியுடனும் காவல்துறையின் நல்லாதரவுடனும் விற்கமாட்டார்கள் என்பதற்கு உறுதியுண்டா? தமிழ்நாட்டின் எல்லைகளான நான்கு பிற மாநிலங்களின் மதுக்கடைகள் அமோக விற்பனை நடத்த மாட்டார்கள் என்பதற்கு உறுதியுண்டா? அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் குற்றப்பின்னணி உடைய வியாபாரிகளும் பெரும் முதலாளிகள் ஆவதற்கான சூத்திரமா அது?

மதுவிலக்குப் போராட்டத்தில் உயிர் நீத்த பெரியவரின் பிணத்தின் பக்கத்தில் போய் படுத்துக் கொள்ள இங்கு எத்தனை போட்டி? முடியுமானால் புத்தரின் பல், புத்தரின் எலும்பு, புத்தரின் தலைமுடி என்று பாதுகாத்து வைத்துக் கும்பிடுவதைப் போல, தியாகிகளின் சடலங்களைப் பங்கிட்டுக்கொள்வார் போலும்!

குஜராத் பூரண மதுவிலக்கு

**எழுத்தாளன் அவ்வாறு இருக்க இயலாது. அவன் நடுப்பகலில் தீப்பந்தம் ஏந்தி மனிதனைத் தேடுகிறவன்.**



மாநிலம். அங்கு மதுவிலக்கு செயலாகவில்லையா என்று கேட்பீர்கள். பணியில் இருந்தபோதும் ஓய்வுபெற்ற பின்னரும் பலமுறை நான் குஜராத் போனவன். எங்கள் நிறுவனத்தின் மேலாளர்கள் மாநாடு ஆண்டுக்கு இருமுறை அகமதாபாத்தில்தான் நடக்கும். விலை இரண்டு மடங்கு என்பதைத் தவிர எந்தத் தட்டுப்பாடும் இல்லை, அன்றும் இன்றும்.

என்னுடைய பெரு வியப்பு, தமிழ்ச் சமூகம் மட்டும் ஏன் குடிப் பழக்கத்தைக் குடி நோயாக மாற்றிக்கொண்டது? விலையில்லா அத்தியாவசியப் பண்டங்களா, உடல் உழைப்புக்கான விலை இங்கு மிக அதிகம் என்பதாலா, அரசு அலுவலகங்களில் கை கடந்து புரளும் லஞ்சப் பணமா, அரசியல் தரகர்கள் தம் குடிபடைகளுக்குக் காட்டும் தனிப் பெருங் கருணையா? பணவெறி போல, கொலைவெறி போல, மதவெறி போல, பெண் வெறி போலத் தீவிரமாகிப் போன குடிவெறியை காய்தல் உவத்தல் இன்றி ஆராய வேண்டும். பழமொழியொன்று சொல்வார்கள் - ‘அறியாதவன் அறிஞ்சானாம். ஆம்புளைப் புள்ள பெத்தானாம். தொப்புள் அறுப்பதுக்குப் பதிலா குறியை அறுத்தானாம்’ என்று. குடிப்பதுவும் இங்கு அப்படித் தான் ஆகிவிட்டது போலும்.

அரசாங்கமே தங்கள் சொந்தக் கடைகள் மூலம் தம் குடிமக்களுக்குப் போலிச் சரக்கு விற்கும் அறமற்ற செயல் செய்துவிட்டு, ‘குடி குடியைக் கெடுக்கும்’ என்றால் எப்படி? தமிழ்நாட்டில் மட்டும் ஏன் குடி, குடியைக் கெடுக்கிறது?

நம்மைச் சுற்றியுள்ள எந்த மாநிலத்திலும் கள்ளுக்குத் தடையில்லை. ஆனால் தமிழ்நாட்டில் மட்டும் தென்னங் கள், பனங் கள், ஈச்சங் கள் என்று எதுவானாலும் தடை. உயர் நீதிமன்ற ஆணை சொல்கிறது, ‘மரத்துக்கு மரம் தரக் கட்டுப்பாடு சாத்தியமில்லை’ என்று. போலி மதுக் குப்பிகளுக்கு தரச் சான்றிதழ்

வழங்குவதார்? குழந்தைகள், நோயாளிகள், முதியோர் பருகும் அத்தியாவசியப் பொருளான பாலின் தரக்கட்டுப்பாடு, பசு மாட்டுக்குப் பசு மாடு செய்கிறார்களா?

கள் என்பது மருந்து, கள் என்பது உணவு, கள் என்பது மிதமான போதை. அதிலும் பேட்டரிக் கட்டை போடுகிறார்கள், யானை மயக்கி மாத்திரை போடுகிறார்கள், ஊமத்தங்காய் போடுகிறார்கள் எனில் நிர்வாகம் செய்ய வேண்டியது அரசின் பொறுப்பு. சொந்தத் தோட்டத்தில் கள் இறக்கி விற்கும் விவசாயி எவனும் அந்த மாபாதகங்களைச் செய்வானா? அவனுக்கு ஹெலிகாப்டரில் வந்து தனது மாளிகை மொட்டை மாடியில் இறங்கும் சாத்தியமுண்டா? அவன் கள் விற்க 'சியர் கேர்ள்ஸ்' வைத்துக் கொள்ள இயலுமா?

கள் எனில் கிராமத்துப் பொருளாதாரம் கிராமத்துக்கு உள்ளேயே கிடக்கும். எந்தப் பன்னாட்டு முதலாளியின் பைக்குள்ளும் அது போகாது. நமது தமிழினத்தைக் காக்கத் தலையெடுத்த அரசுகள் யாவுமே அந்நிய மதுவுக்கு நட்பாகவும் கள்ளுக்குப் பகையாகவும் இருப்பதேன்?

மதுப்பழக்கத்தை முறையாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்குப் பாடுபடும் கேரள அரசு, பன்னிரண்டு ஆண்டுகளில் இந்தியாவில் தயாராகும் அந்நிய மதுக்களின் பயன்பாட்டையே நிறுத்தி விட முடியும் என்று செயல்படும் கேரள அரசு, கள்ளுக்கு எந்தக் காலத்திலும் தடை இருக்காது என்கிறது.

பூரண மதுவிலக்கு என்று இங்கு அரசாணை போட்டு, கையெழுத்துப் போட அரை மணி நேரம் போதும். ஆனால் மது ஒழிந்துவிடுமா?

ராவணனுடைய கோட்டையைப் பார்த்து அனுமன் வியப்பதாகக் கம்பன் பாடல் - இதனுள் கறங்குகின்ற காற்றுப் புகாது. கதிரவனின் ஒளி புகாது. யமனின் ஆட்சி செல்லுபடியாகாது. உலகம் அழியும் காலத்து யாவும் அழிந்தாலும் அழியாத பொருள் ஒன்றுண்டு. அதன் பெயர் அறம். அந்த அறம் கூட நுழைய முடியாது. பிறகல்லவா வானவர் நுழைய முடியாது என்கிற பேச்சுக்கு வர வேண்டும்?

அவ்விதம் எங்கிருந்தும் எவ்வழியிலும் எல்லை தாண்டி மது புகுந்து விடாதபடிக்கு கோட்டை கட்டப் போகிறார்களா? தமிழ்நாட்டு ரேஷன் அரிசி கேரளத்துக்குக் கடத்தப்படுவதைத் தடுக்க முடியாதவர்கள், கேரளத்தின், ஆந்திரத்தின், கர்நாடகத்தின், பாண்டிச்சேரியின் மது தமிழ்நாட்டுக்கு வர முடியாதபடி

> கள்ளை தடை செய்யும் உயர் நீதிமன்ற ஆணை சொல்கிறது, 'மரத்துக்கு மரம் தரக் கட்டுப்பாடு சாத்தியமில்லை' என்று. அத்தியாவசியப் பொருளான பாலின் தரக்கட்டுப்பாடு, பசு மாட்டுக்குப் பசு மாடு செய்கிறார்களா?



தடுத்துவிடுவார்களா?

அரசியல்வாதிகளின் பாதுகாப்புடன் காவல்துறையின் ஆதரவுடன் கடத்தல் கோலாகலமாக நடைபெறாதா?

இந்தியா முழுக்க இந்தி மொழி பேசுகிறவர்கள் அனைவருக்குமாகத் தயாரிக்கப்பட்ட சினிமாக்கள் சென்ற ஆண்டில் 263. கன்னடத்தில் 143. வங்காளத்தில் 135. பஞ்சாபியில் 69, குஜராத்தியில் 53, மராத்தியில் 160. தமிழில் எத்தனை தெரியுமா, 202.

தமிழ் மொழிக்கு மாத்திரம் இத்தனை சினிமாக்களுக்கான தேவை என்னவென்று நாம் ஆராயப் புகுந்தால், அந்த ஆய்வு 'தமிழன் ஏன் இப்படித் தாப்புத் தெரியாமல் குடிக்கிறான்' என்ற கேள்விக்கும் விடை தேடித் தரக்கூடும்!

பன்றிக் காய்ச்சல் வந்தது என்று பன்றிகளை அடித்துக் கொல்வதற்கு முன்னால், பறவைக் காய்ச்சல் வந்தது என்று கோழிகளைக் கொளுத்துவதற்கு முன்னால், நீல நாக்கு நோய் என்று கன்றுகாலிகளைக் கொல்வதற்கு முன்னால், அந்தந்த நோய்களின் மூல காரணங்களையும் ஆராய வேண்டாமா? எய்ட்ஸ் வருகிறது என்று உடலுறவைத் தடை செய்வார்களா? விபத்தால் மரணம் அதிகம் என்று இருசக்கர வாகனங்களைத் தடை செய்வார்களா?

நமது பண்பாட்டு நீர்த்தேக்கம் கசிகிறது என்றால், பெருத்த அபாயம் காத்திருக்கிறது என்றால், அணையின் உட்பக்கம் ஓட்டையை அல்லது விரிசலை அடைக்க முயல வேண்டுமே அன்றி, அணையின் வெளிப்பக்கம் சிமெண்ட் கலவைச் சாந்து பூசிப் பயன் என் காண்?

மதுவிலக்குக்கு ஆதரவாக உரத்து மொழியும் நமது அரசியல்வாதிகள் இதனை அறிய மாட்டார்களா? அனைவருக்கும் தெரியும். ஆனால் காற்றுள்ள போதே தூற்றிக்கொள்கிறார்கள்!

**– கற்போம்...**

# நகட்டண் அளவு

**நாஞ்சில் நாடன்**

ஓவியம்: மருது

Award எனும் ஆங்கிலச் சொல்லுக்கு இணையான தமிழ்ச் சொல்லாக 'விருது' எனும் சொல்லைப் பயன்படுத்துகிறோம். இந்தச் சொல்லுக்கு பட்டம், கொடி, வெற்றிச் சின்னம் எனப் பேரகராதி பொருள்கள் தருகின்றது. 'வெற்றி' எனும் பொருளில் விருது எனும் சொல்லைக் கம்பன் ஆள்கிறான்.



கம்ப ராமாயணத்தில் 7வது படலமான தாடகைவதைப் படலத்தின் பாடல் ஒன்று, 'பருதி வானவன் நிலம் பசை அறப் பருகுவான் விருது மேற்கொண்டு உலாம்' என்று நீளும். இதன் பொருள், 'சூரிய தேவன், நிலத்தின் ஈரப்பசை அற்றுப் போகும்படியாகப் பருகி வெற்றிகொண்டு உலவினான்' என்பது.

பரிசு என்ற சொல்லும் உண்டு. *Prize* எனும் ஆங்கிலச் சொல் நேர்ச்சொல். லாட்டரியில் பணம் விழுந்தாலும் அது பரிசுதான். *Bumper Prize, Lucky Prize* என்றார்கள். பரிசு என்று இன்று நாம் பயன்படுத்தும் சொல், பண்டு 'பரிசில்' என்று வழங்கப்பட்டது. பரிசில் என்றால் கொடை என்றும் பொருள். ஆங்கிலத்தில் சொன்னால் *Gift, Donation, Present* என்பன. பரிசில் வேறு, பரிசல் வேறு. பரிசல் என்பது வல்லம், ஓடம், தோணி போன்று நீர் மேல் பயணம் செய்யும் வாகனம்.

பரிசில் எனும் சொல்லைக் குறுந்தொகை, சிறுபாணாற்றுப்படை, திருமுருகாற்றுப்படை, நற்றிணை, பதிற்றுப்பத்து, பரிபாடல், புறநானூறு முதலாய சங்க இலக்கிய நூல்கள் பயன்படுத்துகின்றன. எனில், ஈராயிரம் ஆண்டுகளுக்கு மேலாக நம்மிடையே வாழ்ந்த சொல் என்றுதானே அர்த்தம்?

புலவர்களது வாழ்க்கை என்பதே பரிசில் வாழ்க்கையாக இருந்தது. மன்னர்களைப் பாடிப் பரிசில் பெற்று வாழ்க்கை நடத்துவது. அவர்களுக்கு வேறு தொழில் தெரியாது. பாடியதற்குப் பரிசாக ஆழாக்கு உழக்குத் தினை கிடைத்தது என்பது ஔவையார் வாக்கு. குறுநில மன்னர்களைப் புகழ்ந்து பாடினால் நான்கு மரக்கால் சோளமோ, கம்போ, இரண்டு பக்கா பயிறுகளோ கிடைத்திருக்கும். தலைச்சுமடாக நடந்து வீட்டுக்குக் கொண்டு போயிருப்பார்கள். கொண்டு வந்ததில் 'அக்காவுக்குக் கொடு', 'அடுத்த வீட்டுக்காரிக்குக் கொடு', 'வாங்கின கடனைத் திருப்பிக் கொடு' என்று தாராளமாக இருந்திருக்கிறார்கள். யாவற்றுக்கும் ஆதாரமாக நம்மிடம் பழந்தமிழ்ப் பாடல்கள் உண்டு.

பரிசில் வாங்கி வந்த பொருள் தீர்ந்து போனால் அடுத்த குறுநில மன்னர். இதுதான் புலவர்களின் பரிசில் வாழ்க்கை. இதில் ஐராவதம் என்னும் வெள்ளை யானை கொடுத்தான், காமதேனு என்னும் காராம்பசு கொடுத்தான், ஆயிரம் கழஞ்சு பொன் கொடுத்தான், கண்ணுக்கு எட்டிய தூரம் கிடக்கும் வயற்காடு கொடுத்தான் என்பதெல்லாம் வாசிக்க

நன்றாகத்தான் இருக்கிறது.

பத்மநாப சாமிக்குப் பால் பாயாசம், பண்டாரம், பரதேசிக்கு மனப் பாயாசம். எனவேதான் புலவர்கள், 'எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே!' என்று பாடினார்கள். 'வெறும் சோற்றுக்கோ வந்ததிந்தப் பஞ்சம்' என்றும்.

குறுநில மன்னரை, பாளையக்காரரை, பெருநிலக்கிழாரைப் போய்ப் பார்த்து, 'சிங்கமே', 'கரடியே', 'எட்டுக் கருப்பட்டியை ஒண்ணா முழுங்குபவரே', 'அலெக்சாண்டரையும் நெப்போலியனையும் தோற்கடித்தவரே', 'ரெண்டு டஜன் பெண்களோடு தினமும் சல்லாபிக்க வல்லவரே' என்று தெண்டித்திரிந்த காலம், போன நூற்றாண்டு வரை புலவர்களுக்கு இருந்தது.

புலவர்கள் போய் கவிஞர்கள், எழுத்தாளர்கள் வந்த பிறகு, இப்படிப் போய்ப் பார்த்து, பாடிப் பரிசு வாங்கி



**கவிஞர் விக்கிரமாதித்யன், 'ஓய்ந்த வேளையில் இலக்கியம் செய்கிறார், உருப்படுமா தமிழ் இலக்கியம்' என்று கேட்பதன் நியாயம் புரிந்தாலும், கும்பித் தீ என்பது கொடிய தீ!**

வரும் நிலைமை மாறிவிட்டது. போய்ப் பார்த்து இச்சகம் பேசி முகமன் கூறி நின்றால் மதிய உணவுக்கும் வண்டிச் சத்தத்துக்கும் கால் குப்பிக்கும் காசு தருவார்கள் என்ற நிலைமை உருவாயிற்று. மேலும் பாரதியை, புதுமைப்பித்தனைப் பார்த்துப் பாடம் கற்றுக்கொண்டார்கள். ஆத்மாவுக்கு என்று எழுத்தும், சோற்றுப் பாட்டுக்கு என்று குமாஸ்தா உத்தியோகம், ஆசிரியப் பணி, கோழிக்கடை, குருணை வியாபாரம் என்றும் ஆயிற்று.

கவிஞர் விக்கிரமாதித்யன், 'ஓய்ந்த வேளையில் இலக்கியம் செய்கிறார், உருப்படுமா தமிழ் இலக்கியம்' என்று கேட்பதன் நியாயம் புரிந்தாலும்,

கும்பித் தீ என்பது கொடிய தீ!

வசதி உடையவர்கள், தமிழின் மீது ஆர்வம் கொண்டவர்கள், இலக்கிய வாசிப்பும் நேசிப்பும் கொண்டவர்கள், அமைப்பு ஒன்றை ஏற்படுத்தி இலக்கியம் செய்வோருக்குப் பரிசு கொடுக்க ஆரம்பித்தார்கள். பல சந்தர்ப்பங்களில் தகுதியானவருக்குப் பரிசு கொடுப்பது என்பது கட்சி பார்த்து, சாதி பார்த்து, 'நம்ம ஆளா வேற்று ஆளா' எனும் விருப்பங்களுக்குள் குறுகிப் போவதும் உண்டு. பரிசு வாங்க ஆள் பிடிப்போரும் உண்டு. ஏதோவோர் விருது வாங்கப் போனவர், அந்தத் தலைவரின் காலடியிலேயே நெடுநேரம் நெடுஞ்சாண் கிடையாக விழுந்து கிடந்தார் என்றும், 'விருது கிடைத்த அதிர்ச்சியில் செத்துப் போனாரோ' என்று பதைத்து இரண்டு பேராய்த் தூக்கி நிறுத்தினார்கள் என்றும் கிசுகிசுப்புகள் உண்டு.

பெரும்பாலும் அரசு வழங்கும் விருது என்பது ஆளுங்கட்சி அடிமைகளுக்கே போயிற்று. பல்கலைக்கழகங்கள் போட்டி போட்டுக்கொண்டு தலைவர்களுக்கு டாக்டர் பட்டங்கள் வழங்கும். எந்தப் பல்கலைக் கழகமும் மூத்த தமிழ் எழுத்தாளர் எவருக்கும் டாக்டர் பட்டம் வழங்கியதாக நமக்குச் செய்திகள் இல்லை. சினிமாவுக்குப் பாட்டெழுதப் போனால் ஏழெட்டுப் பொறுக்கி வரலாம். மொழியை அடுத்த நூற்றாண்டுக்குக் கடத்துபவர்கள் மீது நமக்கு என்ன கரிசனம்?

முன்பெல்லாம் டாக்டர் பட்டம் என்ற விருது வழங்குவதற்கென்றே சில லெட்டர் ஹெட் அமைப்புகள் இருந்தன. அச்சடித்த வழவழ தாளில் கையெழுத்துப் போட்டுக் கொடுக்க வேண்டியதுதான். அதற்காக ஏன் வீணான பணச்செலவு என்று இப்போதெல்லாம் தேவைப்படுகிறவர்கள் பட்டங்கள் அச்சடித்து கையெழுத்தைப் போலி செய்து முத்திரையும் குத்திக் கொள்கிறார்கள். முத்திரைத்தாள் மோசடி போல என்று வைத்துக்கொள்ளலாம். அரித்து எடுத்தால் அனைத்து இந்தியப் பல்கலைக்கழகங்களிலும் ஆயிரக்கணக்கில் போலி டாக்டர்கள் கிடைப்பார்கள். போலி மருத்துவர் இனம் போல இது. பணம் கொடுத்து முனைவர் பட்ட ஆய்வுகளை எழுதி வாங்குபவர்களை இங்கு கணக்கில் சேர்க்கவில்லை.

இத்தகையவர்கள் பல்கலைக் கழகத் துணைவேந்தர்களாக ஆகிவிடும் ஆபத்தும் உண்டு. பாரதியின் புலம்பல், 'பேய் அரசு செய்தால், பிணம் தின்னும் சாத்திரங்கள்!' புகழ்பெற்ற தமிழ்நாட்டுப் பல்கலைக்கழ

கம் ஒன்றின் வாசல் பக்கம், சாலையோரத்தில், மரத்தடியில் ஒருவர் இளநீர் விற்றுப் பிழைப்பு நடத்தினாராம். பல்கலைக்கழக வளாகத்தினுள் அல்ல, வளாகத்தின் வெளியே! அந்த இளநீர்க் கடைக்காரரிடம் பத்தாயிரம் ரூபாய் கையூட்டு வாங்கினாராம் துணைவேந்தர் ஒருவர். இத்தகு பல்கலைக்கழகங்கள் வழங்கும் கௌரவ டாக்டர் பட்டங்கள் எத்தரத்தில் இருக்கும்? எனவே எழுத்தாளர்கள் மனம் நொந்து கொள்ள ஏதும் இல்லை.

பலவற்றைத் தாண்டியும் தரமான தமிழ் எழுத்தாளர்களுக்கு கௌரவமான விருதும் ஐம்பதினாயிரம் முதல் இரண்டு லட்சம் ரூபாய் வரைக்கும் பொற்கிழியும் வழங்கும் பெருந்தன்மையான அமைப்புகள் இங்கு உண்டு. வழங்கும் அமைப்புகளின் தரம், விருது பெறும் எழுத்தாளரின் தகுதி என்பன ஏறக்குறைய இருந்தாலும் விருதென்பது மகிழ்ச்சியானதொன்று.

**அரித்து எடுத்தால் அனைத்து இந்தியப் பல்கலைக்கழகங்களிலும் ஆயிரக்கணக்கில் போலி டாக்டர்கள் கிடைப்பார்கள். போலி மருத்துவர் இனம் போல இது.**

நோபல் பரிசு, புலிட்சர் பரிசு, புக்கர் பரிசு எனப் பெருங்கொண்ட தொகைகள் சுமந்த பரிசுகள் உண்டு உலகில். அது இந்தியனுக்கு - குறிப்பாகத் தமிழனுக்குக் கிடைப்பது என்பது, எட்டி இனிக்கும் நாளில் நடப்பது.

எழுதிப் பிழைப்பது என்பதே இயலாதவனுக்கு ஆள் பிடிக்க அலையும் வாய்ப்பு ஏது? எனவே எப்போதாவது கிடைக்கும் ஏதாவது ஒரு விருது என்பது தமிழ் எழுத்தாளனுக்கு, கோடையிலே இளைப்பாற்றிக்கொள்ளும் வகை கிடைத்த குளிர் தரு. வாயுவை உண்டு சீவிக்கத் தெரியாத அவனுக்கு, எழுத்தின் மூலம் வருமானம் என்பது சட்ட

மன்ற உறுப்பினர் ஆவது போன்ற கனவு. பெரும்பாலும் பல தமிழ்ப் பதிப்பகங்கள் உரிமைத் தொகை ஒழுங்காகத் தருவதில்லை, அல்லது தருவதே இல்லை. வணிக இதழ்களில் எழுதினால் கிடைக்கும் காசுக்கு பற்பசையும் குளிக்கும் சோப்பும் துவைக்கும் சோப்பும் வாங்கலாம். வயிற்றுக்குக் கூழ் வார்க்க ஏலாது.

இந்தச் சூழலில்தான் விருதுத் தொகைகள் பயனளிக்கின்றன. மருத்துவத்துக்கோ, மக்களின் கல்விக்கோ வாங்கிய கடன்கள் அடைக்க ஆகும். ஆனால், விருது வழங்கும் எல்லா அமைப்புகளும் பெருந்தன்மையுடன் இருப்பதில்லை. ஆயிரம் முதல் பத்தாயிரம் ரூபாய் வரை தமிழில் பற்பல விருதுகள் உண்டு. விழா எடுப்பதற்கான செலவின் அற்பமான கூறே விருதுப் பணம் என்பது.

2007 வரை நான் பெற்ற விருதுகள் பதினொன்று. அவற்றின் மொத்தத் தொகை 23,000. அதனுள் 'அமுதன் அடிகள்' விருதுப் பணம் பத்தாயிரம் அடக்கம். கண்ணதாசன் விருது பெற்ற பின்னரே வீட்டில் உட்கார மர நாற்காலிகளும் இரண்டு ஒற்றைக் கட்டில்களும் வாங்கினேன். 2009ல் தமிழ்நாடு அரசின் 'கலை மாமணி' பெற்றபோது, இருபத்தி நான்கு கிராம் பொற்பதக்கம். எல்லாம் ஒரு நம்பிக்கைதான் - என்றாவது அதை ஏலம் விட்டு சில கோடிகள் திரட்ட இயலாதா? சாகித்ய அகாதமி விருது 2010ல் பெற்றபோது மகளுக்கு ஒரு நகை வாங்கினேன். கனடா நாட்டு இயல் விருது வந்தபோது, கல்யாணத்துக்கு வாங்கிய ஒரு கடன் தீர்த்தேன்.

பற்பல விருதுகளாகப் பெற்ற மெமென்டோக்களை, புதிதாய்க் கட்டிய வீட்டில் மாடிப் படிக்கட்டில் அடுக்கி வைத்துள்ளேன். அவற்றை என்ன செய்வது? நாமென்ன நடிகர் நடிகையா, வரவேற்பறையில் பதினைந்துக்குப் பன்னிரண்டு அடி நீள அகலத்தில் ஷோ கேஸ் செய்து அடுக்கி வைக்க? எடைக்குப் போடவும் மனசில்லை. வெளியே வீசவும் திறனில்லை. கனடா நாட்டிலிருந்து வெளியாகும் 'காலம்' இரு மாத இலக்கிய இதழில் 'வெள்ளித் தாம்பாளம் சொன்ன கதை' என்று கும்பமுனிக் கதையொன்று எழுதினேன். அதன் தகவல்கள் பெரும்பாலும் என் அனுபவங்கள். திரும்பவும் இங்கே எழுதும் உத்தேசம் இல்லை.

என்ன செய்ய? எல்லோருக்கும் எல்லாப் பெருந்தன்மையும் இருப்பதில்லை. 'இவனுக்கு இது போதும்' என நினைப்பார்கள் போலும். தம்பி கொலை செய்துவிடுவான் என்று காட்டுக்குள்

**நோபல் பரிசு, புலிட்சர் பரிசு, புக்கர் பரிசு எனப் பெருங் கொண்ட தொகைகள் சுமந்த பரிசுகள் உண்டு உலகில். அது இந்தியனுக்கு - குறிப்பாகத் தமிழனுக்குக் கிடைப்பது என்பது, எட்டி இனிக்கும் நாளில் நடப்பது.**



தப்பியோடி, மறைந்து வாழ்ந்த குமணனிடம் ஒரு புலவன் பரிசில் யாசித்துப் போனான் என்றால் புலவனின் வறுமையை நினைத்துப் பாருங்கள். தீ அசைந்து ஆடுகின்ற அவன் அடுக்களையின் கோட்டை அடுப்பு. தீயை மறந்து விட்டதாம். அடுப்புச் சாம்பலில் காளான் பூத்து விட்டதாம். பசியினால் முலைக் காம்பின் துவாரங்கள் தூர்ந்து போன மனைவியின் மார்பு சுவைத்துப் பார்த்து, பால் வராமல், தாய் முகம் பார்த்ததாம் குழந்தை. தாய், புலவன் முகம் பார்த்தாளாம். புலவன் குமணன் முகம் பார்த்து வந்தானாம்.

அன்றைய புலவன் நிலைதான் இன்றைய எழுத்தாளன் நிலையும். சிலர் அதிலிருந்து தப்பிக்க அரசியல் சார்பெடுத்து, பட்ட மரம் பச்சை பிடித்தாற் போல ஆகிவிடுகிறார்கள். எல்லோருக்கும் அது சாத்தியம் இல்லை. இதில் முற்போக்கென்ன, பிற்போக்கென்ன, நற்போக்கென்ன? அவர்கள் குப்பிக்கு எட்டாயிரம் கொடுத்து போதை பாவிப்பார்கள். சாமான்ய எழுத்தாளன் குப்பி முன்னூறுக்குக் கிடைக்கும் மிலிட்டரி ரம்மில் போதை பாவிப்பான். அவ்வளவு தானே! சாவது என்று முடிவெடுத்த பின் ஏ.கே. 47 ஆனால் என்ன? நாட்டுத் துப்பாக்கியானால் என்ன?

ஆண்டுதோறும் தமிழில் வெளியாகும் சிறந்த சிறுகதைக்குப் பரிசளிக்கும் புகழ்பெற்ற அமைப்பு ஒன்று, பரிசுத் தொகையாக இன்று ஆயிரம் ரூபாய் தருகிறார்கள். ஆண்டில் வெளியான சிறந்த சிறுகதைக்கான வெகுமானம்!

கோவையின் அருகிருக்கும் நகர் ஒன்றில் விருது என வழங்கும் தொகை ஒரு ஜோடி பேன்ட், சட்டை வாங்கப் போதுமானது! பல அமைப்புகள் 'விருது' எனும் பெயரில் பிளாஸ்டிக் ஸ்டாண்ட் தந்து அனுப்பி விடுகிறார்கள்.

சேலத்தில் புகழ்பெற்ற கல்லூரிக் குழுமங்களின் இலக்கிய அமைப்பு 'சரசுவதி' பெயரால் விருதொன்று தந்தார்கள், எனக்கும் நக்கீரன் ஆசிரியர் கோபாலுக்கும். நாலடி அகலம், மூன்றடி உயரம், முக்காலடி கனத்துக்கு பிளாஸ்டிக் டப்பா போல இருந்தது. அதன் நடுவே துளையிட்டு, தலைகீழாகப் பேனா ஒன்றைப் பெரிய அளவில் செருகி இருந்தனர். விருதைப் பார்த்து பயந்து போனேன்.

நக்கீரன் ஆசிரியரிடம் கேட்டேன், "சென்னைலேருந்து நீங்க கார்லேதானே வந்திருப்பீங்க?'' என்று. அவர் புரிந்து கொண்டார். நானோ பேருந்துப் பயணி. இதை எப்படிப் பேருந்தில் கொண்டு செல்வது என்பது என் கவலை. விருது வழங்கும் விழாவுக்கு என்னுடன் கவிஞர் சிபிச்செல்வன் வந்திருந்தார். அவர் சேலத்துக்காரர். "சிபி, இதை வீட்டுக்குக் கொண்டு போயிருங்க. பேனாவை மட்டும் உருவி எடுத்தீங்கன்னா இருபத்தஞ்சு கிலோ அரிசி தட்டி வைக்கலாம்'' என்றேன். அப்படித்தான் ஆயிற்று.

அண்மையில் தொலைக்காட்சிச் சேனல் ஒன்று தகுதியானவர்க்கு விருதுகள் வழங்கிற்று. விருதுப் பொருள், ஓராள் உயரமுள்ள பித்தளை நிலை விளக்கு. மிக நல்ல வேலைப்பாடு. காணவே கவர்ச்சியாக இருந்தது. விருதாளர்களில் ஒருவர், ஆயுர்வேத மருத்துவர் எல்.மகாதேவன். நாகர்கோவில் அருகே தெரிசனங்கோப்பு எனும் ஊரில் தலைமுறைகளாகச் சேவை புரியும் ஸ்ரீசாரதா ஆயுர்வேத மருத்துவமனையின் பிரதான மருத்துவர். ஏற்புரையில் அவர் சொன்னார், "விருதுப் பொருளை மட்டும் கூரியர்லே அனுப்பிருங்க" என்று.

தாம் பெற்ற பரிசுப் பட்டயம் பற்றி மிக சுவாரசியமாகப் பிரபஞ்சன் எழுதி இருக்கிறார். சில சமயம் எழுநூறு ரூபாய் போக்குவரத்துக்கு செலவு செய்து இருநூறு ரூபாய் பெறுமதியுள்ள பிளாஸ்டிக் ஸ்டாண்ட் ஒன்றை விருதாக நான் பெற்று வந்திருக்கிறேன். அதைப் பொதிந்துகொள்ள ஒரு ஜிகினாப் பொன்னாடையும். 'சுண்டைக்காய் கால் பணம், சுமட்டுக் கூலி முக்கால் பணம்' என்பார்கள்.

காரைக்குடி கம்பன் கழகத்தின் பவள விழாவின்போது, 'கம்பனின் அம்பறாத் தூணி'

என்ற என் நூல் வெளியாயிற்று. கவிக்கோ அப்துல் ரகுமான் வெளியிட்டார். கம்பனின் சொல்லாட்சி சிறப்புப் பேசும் நூல் அது. பாண்டிச்சேரி கம்பன் கழக விருதுக்கு எனது பதிப்பாளரான உமா பதிப்பகத்தினர் அதனை அனுப்பியிருப்பார்கள் போலும். அந்த நூலுக்கு விருது அறிவித்தார்கள். உமா பதிப்பக லெட்சுமணன், “சார், வராம இருந்துராதீங்க” என்றார்.

“தங்க இடம், போக்குவரத்து எல்லாம் தருவாங்களா?” என்றேன்.

“அதெல்லாம் நீங்களே பாத்துக்கணும்!” என்றார்.

சற்று யோசனையாக இருந்தது. சரி, போய்த்தான் பார்ப்போமே என்று தீர்மானித்தேன். இரண்டு இரவுகள் எண்ணூறு கிலோமீட்டர் பயணம் செய்து, நேரத்தையும் பணத்தையும் செலவழித்துத் தங்கி விருதைப் பெற்றேன். விருதுத் தொகை ரூபாய் 5,000. செலவு போக மிச்சத்தை காசாக வீட்டுக்குக் கொண்டு போக வேண்டாம் என்று பேரனுக்கு கால் கிலோ ரவை கேக்கும் எனக்கு ஒரு குப்பி பிளாக் டாக்கும் வாங்கிக்கொண்டேன்.



**‘வெள்ளித் தாம்பாளம் சொன்ன கதை’ என்று கும்பமுனிக் கதையொன்று எழுதினேன். அதன் தகவல்கள் பெரும்பாலும் என் அனுபவங்கள்.**

நல்லவேளையாக விருது பொறித்த பிளாஸ்டிக் ஸ்டாண்ட் எதுவும் தரவில்லை. வழவழ காகிதத்தில் வண்ணங்களில் அச்சிடப்பட்ட சான்றிதழ் ஒன்று தந்தார்கள். சான்றிதழைத் திருப்பிப் பார்த்தேன். காலியாக இருந்தது. நான் ஒரு பக்கம் எழுதப்படாத தாள்களை நேசிப்பவன் என்பதால் பெருத்த சந்தோஷம் ஏற்பட்டது.

**- கற்போம்...**

# கைம்மண் அளவு

முந்திய கிழமை மதுவிலக்குக் கொள்கை பற்றி நம் கருத்தைப் பரிமாறினோம். இத்தொடர் எழுதத் துவங்கிய பின்னர், எப்போதும் இல்லாத அளவுக்கு, இந்தக் கட்டுரைக்கு வாசக நண்பர்கள் எதிர்வினை ஆற்றினார்கள். வாழ்நாளில் ஒருமுறை கூட மோரைத் தவிர வேறெதையும் மோந்து பார்த்திராத நண்பர்கள், “நீங்கள் பகிர்ந்து கொண்டவை நியாயமான நடுநிலையான கருத்துகள்” என்றார்கள். அவ்வப்போதும் அடிக்கடியும் மது பாவிப்பவர்கள், “அதெப்படி மதுவை ஆதரிக்கப் போச்சு” என்றார்கள். நான் எழுதியதை மறுபடியும் இருமுறை வாசித்துப் பார்த்தேன். என்னிடம் எந்தக் குழப்பமும் இல்லை. என்றாலும், மதுப்பழக்கம் மாபெரும் சமூகத் தீமையாக மாறிப் போனதை நாம் நிச்சயமாகக் கருத்தில் கொள்ளத்தான் வேண்டும்.

நாஞ்சில் நாடன்

ஓவியம்: மருது






குடிப்பது பற்றிப் பலருக்கும் குற்ற உணர்வு இருக்கிறது, 'ஏதோ தப்பு செய்கிறோம்' என்று. ஒருவேளை பூரண மதுவிலக்கு அமலாக்கப்படுமேயானால், குடிக்க வாய்ப்பிருக்காது, எனவே குடிக்காத குடிமகனாக மாறிவிடலாம் என்று அவர்கள் கருதக்கூடும்.

மலையடிவாரத்தில் சீனிக்கிழங்கு என்று அழைக்கப்படும் சர்க்கரைவள்ளிக் கிழங்கு பயிரிடப்படும். கிழங்காகும் பருவத்தில், கிழங்கு அகழ்ந்து தின்ன காட்டுப் பன்றிகள் வரும். அவற்றைப் பிடித்து காதுகளை அறுத்து விரட்டிவிட்டாலும் அவை மறுபடி வரவே செய்யும். 'சீனிக்கிழங்கு தின்ன பன்னி செவி அறுத்தாலும் நிக்காது' என்பது பழமொழி.

அகப்பட்டுக்கொள்ளாதவரை அனைவரும் யோக்கியர்களே! ஒரு சொந்த இழப்பின் காரணமாக, விரதம் போல, மூன்றாண்டுகள் முட்டை கூட சாப்பிடாத சைவனாக, பியர் கூட குடிக்காத *Teetotaller* ஆக வாழ்ந்தேன் நான். மலேஷியா போவதற்காக ஜெட் ஏர்வேஸ் விமானத்தில் ஏறி, இரவு 00.05க்கு விமானம் புறப்பட்ட பின் மது வழங்கப்பட்டபோது நான் கை நீட்டி வாங்கினேன். எனது பக்கத்து இருக்கைக்காரர் ஜெயமோகன். அவருக்கு முன்கதை தெரியும். புருவம் உயர்த்திப் பார்த்தார். பின்பு லேசாக சிரித்தார்.

வளைகுடா நாடுகளில் நாங்கள் இருவரும் ஒரு வாரம் இலக்கியச் சுற்றுப்பயணம் செய்துவிட்டு குவைத்திலிருந்து புறப்பட்டு மஸ்கட்டில் விமானம் மாறி, திருவனந்தபுரம் பயணமானோம். விமானம் முழுக்க மலையாளிகள். ஓராண்டு, ஈராண்டு, மூன்றாண்டுகளுக்குப் பிறகு மனைவி - மக்கள் - குடும்பம் பார்க்க சொந்த மண்ணுக்குத் திரும்புபவர்கள். வேலை பார்த்த நாடுகளில் மதுவுக்குத் தடை. யார் கசையடி

வாங்குவது? விமானம் கிளம்பியபோது சன்னலோர இருக்கைக்காரர் ஜெயமோகன் தலை சாய்த்து உறங்க ஆரம்பித்தார். நாலரை மணி நேரப் பயணம். நூற்றுக்குத் தொண்ணூறு சதவிகிதம் பயணிகளும் மதுவைக் கொண்டாடிக் கொண்டிருந்தனர். நானே ஒரு சீனிக்கிழங்கு தின்ற பன்றிதானே!

எனது முன்மொழிவு, 'எந்தச் செயலையும் குற்றவுணர்வுடன் செய்யாதீர்கள். குற்றவுணர்வு ஏற்படுமானால் தவிர்த்துவிடுங்கள்'. இன்று மதுவிலக்குக்கு ஆதரவாக உரத்த குரலில் கோஷம் போடும் அரசியல்வாதிகளில் பலரும் மது பருகாதவர் அல்ல. எவருக்கும் போதி மரத்தடி ஞானம் பிறந்து ஆவேசக் கூத்தாடவில்லை.

சில தினங்கள் முன்பு ஒரு அவசரச் சாவுக்காக நாகர்கோவில் போக நேர்ந்தது. எனக்குத் தகவல் கிடைத்த நேரம், கடைசி சொகுசுப் பேருந்தும் சூலூர், பல்லடம் தாண்டியிருக்கும். சிங்காநல்லூர் போய் மதுரைக்குப் பேருந்து பிடித்து அங்கிருந்து நாகர்கோவில் போய்விடலாம் என்று புறப்பட்டேன். வேறு வழியென்ன? பயணச் சீட்டு


1990 ஆம் ஆண்டு முதல் சித்த மருத்துவத்தில் சாதனை

அதிசய மூலிகை மூலம்
குடி, புகையை மறக்க
(குடிப்பவருக்கு தெரியாமலும் கொடுக்கலாம்)
மூட்டு வலி, உடல் பருமன், மெலிவு, மூலம், ஆஸ்துமா, தோல் நோய்கள், குடல்புண், சாக்கரை நோய், நரம்பு தளர்ச்சி, மனஅழுத்தம், புற்றுநோய், V.D

ஆண்மை குறைவு
நரம்பு தளர்ச்சி
ஜீவ அணுக்கள் குறைவு, குழந்தையின்மை, துரிதஸ்கலிதம், நீங்கி இல்லறம் சிறக்க



மூலிகை பவர் கேப்சூல்
நேரடியாகவும், கொரியராகவும் கிடைக்கும்
மூலிகை பவர் 5 கேப்சூல் ரூ.450/-

மேலும் பெண்களின் மாதவிலக்கு கோளாறுகள், மார்பக வளர்ச்சியின்மை, அதிக உஷ்ணம், வெள்ளைபடுதல் போன்ற ஆண் பெண் எல்லா ரகசிய நோய்களுக்கும் சிறந்த சிகிச்சை பெறலாம்.

டாக்டரை இதில் குறிப்பிட்டுள்ள ஊர்களில் சந்திக்க முன்பதிவு செய்து வரலாம்

ஈரோடு-5ம் தேதி • சேலம்-6ம் தேதி • பெங்களூர்-7ம் தேதி • திருச்சி-12,23ம் தேதி

N.KULANDAIVELU, INDIAN BANK, VADAPALANI CHENNAI A/C.NO. 710780640

J.P.சித்த வைத்திய சாலை Ph: 044-23621955
94440 66432
91765 64112

100 அடி ரோடு, வடபழனி, சென்னை-26
E-mail: drnkvjpsiddha@yahoo.com/in • Website : www.jpsiddha.com



முன்பதிவு செய்து பயணப்படும் தோதிலா சாவுகள் வருகின்றன? திருமூலர் சொன்னது போல, 'இடப்பக்கமே இறை நொந்ததே என்றார், கிடக்கப் படுத்தார், கிடந்து ஒழிந்தாரே!' என்ற விதத்தில் அல்லவா சமய சந்தர்ப்பம் தெரியாமல் முகம் காட்டுகிறது!

பேருந்து ஏறுமுன் சிறுநீர் கழிப்பது வழக்கம். சிங்காநல்லூர் பேருந்து நிலையத்தில், விலையில்லாமல் சிறுநீர் கழிக்கலாம். சுத்தமாகவும் இருக்கும். வழியில் தேநீருக்காகப் பேருந்து நிற்கும் இடங்களில், தேங்கி நாறும் கழிப்பிடங்களில் சிறுநீர் கழிக்க ஐந்து ரூபாய் கேட்கிறார்கள். கூடவே பாஸ்போர்ட் ஒளி நகலும்! விலையில்லாமல் மாதம் குடும்பத்துக்கு 20 கிலோ அரிசி, தொலைக்காட்சிப் பெட்டி, மிக்சி, கிரைண்டர், தாலிக்குத் தங்கம், மகப்பேற்றுத் தாய்க்கு பரிசுப் பை, பொங்கலுக்கு வேட்டி - புடவை, மடிக் கணினி, வெள்ளாடு எனத் தருகிற அரசுகள், பயணத்தின்போது சிறுநீர் கழிக்க ஐந்து ரூபாய் வாங்குவதை மௌன சாட்சியாகப் பார்த்து நிற்கின்றன.

காசு வசூலிப்பவரிடம் நள்ளிரவு இரண்டு மணிக்கு வழக்காட இயலுமா? சத்தம் இல்லாமல் வெட்டிப் போட்டு விடுவார்கள். வசூலின் பங்கு எந்தக் குழாய் வழியாக எங்கு போய்ச் சேர்கிறது என்பதை யாரறிவார்?

பேருந்து நிலையத்தில் சிறுநீர் கழித்து விட்டு, பயணப் பையுடன் வெளியே வர முனைந்த போது நல்ல போதையில் எதிரே இரண்டு இளைஞர்கள் வழிமறித்தாற் போல வந்தனர். தோற்றப் பொலிவில் படிப்பு, உத்யோகம், செல்வம் தெரிந்தது. நல்ல உயரம் அவர்கள். அண்ணாந்து பார்த்தேன். அதை எனது எதிர்ப்பாகக் கருதி முறைத்துப் பார்த்தனர்.

ஐந்தாறு ஆண்டுகளுக்கு முன்பு எழுத்தாள நண்பர் எம். கோபாலகிருஷ்ணன் குடும்பத்துடன் எங்கள் வீட்டுக்கு வந்திருந்தார். ஐந்தாவது படித்துக் கொண்டிருந்த அவர் மகன் ரிஷியும் இளைய மகள் ஸ்ரீநிதியும் உடன் இருந்தனர். ரிஷி எங்களுக்கெல்லாம் ஜப்பானியப் பாணியில் இடுப்பை வளைத்துக் குனிந்து வலது கையை வயிற்றில் மடக்கி வைத்து வணக்கம் சொன்னான், கிமோனோ அணிந்து ஜப்பானியப் பெண்கள் வணங்குவதைப் போன்று. அந்தப் பாணியில், மிதமிஞ்சிய போதையில் இருந்த அந்த இளைஞர்களுக்கு நானும் ஒரு வணக்கம் சொன்னேன். என் கேலியைப் புரிந்து கொண்டார்களோ என்னவோ, வழிவிட்டுச்

சிரித்தவாறு, “போங்க சார்” என்றார்கள்.

மதுவிலக்குக்கு எனது ஆதரவு இல்லை என்றாலும், தமிழ்நாட்டின் இளைஞர்கள் மீது பரிவும் அனுதாபமும் ஏற்படுகிறது. சிங்காநல்லூர் பேருந்து நிலையத்துக்கு நேரெதிரே மதுக்கடை உண்டு. நான் குடியிருக்கும் பகுதியில், என் வீட்டிலிருந்து 300 மீட்டர் தொலைவில் மேல்நிலைப் பள்ளியொன்று இருக்கிறது. பாடசாலையிலிருந்து 50 மீட்டர் தொலைவில் மதுக்கடை. அரசியல்வாதிகள் கிடக்கட்டும், அதிகாரிகள் தினமும் எத்தனை கோழிமுட்டைக்கு மயிர் பிடுங்குவார்கள்?

தமிழ்நாட்டில் லாட்டரிச் சீட்டு அறிமுகப்படுத்தப்பட்டபோது, நீண்ட வரிசையில் நின்று லாட்டரி டிக்கெட் வாங்கியதை நான் பார்த்திருக்கிறேன். ஒரு ரூபாய்ச் சீட்டை இரண்டு ரூபாய் கொடுத்து கறுப்புச் சந்தையில் வாங்கியதும் நமக்குத் தெரியும். என் வாழ்க்கையில் எந்த மாநிலத்து லாட்டரிச் சீட்டையும் கையால் கூட நான் தொட்டதில்லை. வயோதிகத் தம்பதியரில் மனைவி வாங்கிய லாட்டரிச் சீட்டுக்குப் பரிசு விழுந்து, கணவர் அந்தப் பணத்தை கையாலும் தொட மாட்டேன் என்று வாதிக்கும் கதை ஒன்று உண்டு, ஜெயகாந்தன் எழுதியது. கதைத் தலைப்பு, ‘நான் என்ன செய்யட்டும் சொல்லுங்கோ’ என்பது என் நினைவு. ஒவ்வொரு லாட்டரிச் சீட்டு குலுக்கல் முடிந்த பின்பும், ‘சே! ஒரு நம்பர்ல போச்சு’ என்று இந்த நாட்டில் லட்சக்கணக்கானோர் புலம்பினார்கள்! ஓசிப் பேப்பரில் எண்களைச் சரி பார்த்து, கத்தையாகச் சீட்டுக்களை குப்பையில் வீசிப் போனவர் லட்சக்கணக்கானோர்!

இந்தியாவின் அனைத்து மாநில லாட்டரிச் சீட்டுகளும் தமிழ்நாட்டில்தான் அமோகமாக விற்பனையாயின. மகாராஷ்டிராவில் இல்லை, வங்காளத்தில் இல்லை, பஞ்சாபில் இல்லை, கர்



நாடகத்தில் இல்லை. அனைத்து மாநில லாட்டரிச் சீட்டுகளும் சிவகாசியிலேயே அச்சிடப்பட்டு நமது 'வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகிலே'யே விற்கப்பட்டது என்றார்கள். இன்று எல்லோருக்கும் அது மறந்தும் போய்விட்டது.

இந்தியா பூராவிலும் உள்ள அனைத்து மாநிலத் தலைநகரிலும் அலைந்து வாருங்கள்! சினிமா நடிகருக்கு நூறடி உயர கட் அவுட்டும் ஃபிளக்ஸ் போர்டும் வைப்பது நமது மாநிலத்தில் மட்டும்தான். நடிகனுக்கு பாலாபிஷேகம், பியராபிஷேகம் செய்வது நாம் மட்டும்தான். ஆயிரக்கணக்கான கோடிகள் அடித்து மாற்றிய அரசியல் தலைவர்கள் கைதானால், தண்டனை பெற்றுச் சிறைக்குப் போனால், மொட்டை அடிப்பது, மண் சோறு தின்பது, அலகு குத்திக் கொள்வது, காவடி எடுப்பது, தீ மிதிப்பது, பால் குடம் சுமப்பது, தீக்குளித்துச் சாவது வேறு எந்த மாநிலத்தும் காண முடியாதவை. 'கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளுடன் முன்தோன்றிய மூத்த குடி'யின் பகுத்தறிவுச் செயல்பாடுகள் இவை.

நீங்கள் கேட்கலாம், 'சினிமா பார்ப்பதற்கும், லாட்டரிச்சீட்டு வாங்கியதற்கும், தீக்குளித்துச் சாவதற்கும், மிதமிஞ்சிக் குடித்துச் சாலையில் விழுந்து கிடப்பதற்கும் என்ன தொடர்பு' என்று! எனக்கென்னவோ சராசரித் தமிழ் மனதின் இவ்வகைச் செயல்பாடுகளின் ஊடே தொடர்பு இருக்கிறது என்றே தோன்றுகிறது. நான் பகடியாகச் சொல்லவில்லை, தீவிரமாகவே சொன்னேன், 'தமிழன் என்றோர் இனமுண்டு, தனியே அவர்க்கோர் குணமுண்டு'. இது என் கவலை, ஆற்றாமை, அல்லல்...

எனது இந்தக் கருத்தை ஆங்கில நாளிதழ் ஒன்றில் பதிவு செய்த பின்னர், தமிழ் நாளிதழில் மதுப்பழக்கம் பற்றித் தொடர் கட்டுரை எழுதியவர், 'அறிவுஜீவிக் குடி நோயாளிகள்' என்றோர் பதம் பிரயோகித்தார். சத்தியமாய் நான் அறிவுஜீவியும் இல்லை, குடி நோயாளியும் இல்லை.

தமிழன் தனது நோய்க்கு மருந்து கண்டாக வேண்டும். நமது பிரச்னை, ஆயுதப் பயிற்சி இல்லாதவன் துப்பாக்கி ஏந்தி நடப்பதைப் போன்றது. *'Trigger Happy'* என்பார்கள் ஆங்கிலத்தில். எனவே எச்சரிக்கையுடன் இருப்பது அவசியமாகிறது. குறிப்பாக இளைய தலைமுறை, சாலையோரம் குடித்து விட்டு

ஆடை குலைந்து மண்ணில் விழுந்து கிடப்பவனைப் பார்த்துப் பாடம் கற்றுக்கொள்ள வேண்டும்.

எனது கல்லூரி நாட்களில், 'திரைப்படங்களில் முத்தக் காட்சியை அனுமதிக்கலாமா' என்றோர் விவாதம் போய்க் கொண்டிருந்தது. எப்படித் தீப்பிடித்து பிரச்னை எரிந்தாலும், இந்திய அரசாங்கம் ஒரு கமிஷன் அமைப்பார்கள். அவர்கள் பெரும்பொருள் செலவு செய்து ஆராய்ந்து அறிக்கை கொடுக்க ஆறேழு ஆண்டுகள் ஆகும். கமிஷன் அமைத்ததை அரசாங்கமும் மறந்து போகும், மக்களும் மறந்து போவார்கள்.

முத்தப் பிரச்னைக்கு 'கோஸ்லா கமிஷன்' என்ற ஒன்று அமைக்கப்பட்டது. அந்த சந்தர்ப்பத்தில் தமிழ்ப் பிரபலங்களிடம் ஊடகங்கள் கருத்துக்கேட்டன. அக்காலத்தில் ஏ.கருணாநிதி என்ற சிரிப்பு நடிகர் இருந்தார். அவர் சொன்னார், "நம்ம ஆள் முத்தம் கொடுத்தா அது விஷக்கடியாக அல்லவா இருக்கும்!" என்று. இது சிரித்துவிட்டுப் போவதற்கான சமாசாரம் அல்ல. *Oral Hygeine* பற்றிப் பேசுகிறார் அவர். 'முத்தத்தின் பண்புகள் நம் ஆட்களுக்குத் தெரியுமா' என்று கேட்கிறார். முத்தம் கொடுப்பது என்பது, ஒரு தமிழ் சினிமாவில் வடிவேலுவுக்கு பெண் புரவியொன்று முத்தம் கொடுத்ததைப் போல அல்ல. முத்தத்திற்கு அன்பின் வெளிப்பாடு, காமத்தின் சாரம் என எண்ணற்ற கூறுகள் உண்டு.

ஏ.கருணாநிதி சொன்ன கருத்தை அப்படியே குடிக்கு மாற்றிப் போட்டுப் பார்க்கலாம். எல்லோருக்கும் தெரியும், இருமல் சிரப்களில் 15 சதவீதம் வரை ஆல்கஹால் உண்டு என்று. 10 மி.லி குடித்தால் அது மருந்து. குழந்தைகளின் வயிற்றுப் பொருமலுக்குக் கொடுக்கப்படும் கிரைப் மிக்சரில் கூட ஆல்கஹால் உண்டு. மது



விலக்கு அமலில் இருந்த காலை, இருமல் மருந்து வாங்கி மொத்தக் குப்பியையும் போதைக்காக வாயில் கவிழ்த்தோர் உண்டு. கோககோலாவில் ஆஸ்ப்ரோ மாத்திரை போட்டுக் குடித்தவர் உண்டு.

ஆண்டுதோறும் கார்த்திகை, மார்கழி மாதங்களில் பெருங்கூட்டம் தமிழ்நாட்டிலிருந்து வெள்ளம்போல் சபரிமலைக்குச் சாயும். வழக்கமாக, கார்த்திகை மாதம் ஒன்றாம் நாள் கோயிலில் வைத்து குருசாமி, துளசி மணி மாலை போட்டு விடுவார். மலையேறித் திரும்பிய பின்னர், பெரும்பாலும் அதே கோயிலில் வைத்து, அதே குருசாமி மாலையைக் கழற்றுவார். அந்த துளசி மணி மாலையைத் தமது வீட்டிலுள்ள ஐயப்பன் படத்தில் போடுவார்கள். கன்னடர்கள், தெலுங்கர்கள், மலையாளிகள் என்றும் இந்த முறையைத்தான் பின்பற்றுகிறார்கள்.

தமிழர்களில் பெரும்பாலானோர், மலை இறங்கியவுடன், கண்ணில்பட்ட சாலையோரக் கோயிலில் மாலையைக் கழற்றி, பக்கத்தில் நிற்கும் மரத்தில் அவசர அவசரமாக அதைத் தொங்க விடுவார்கள். அவர்கள் வேன் அல்லது பேருந்து அடுத்து நிற்கும் இடம் மதுக்கடை.

'நுனிக் கொம்பர் ஏறினார் அஃது இறந்து ஊக்கின் உயிர்க்கு இறுதி ஆகி விடும்' என்பது 'வலியறிதல்' அதிகாரத்துக் குறள். எதுவரை சாத்தியமோ அதுவரை மரத்தின் நுனிக்கொம்பு ஏறலாம். அதைத் தாண்டியும் ஊக்கம் கொண்டு ஏறிப் போனால், அது உயிருக்கே கூட இறுதி ஆகிவிடும்.

நோய்க்கு மருந்து தரும் போது, உடல் எடையைக் கணக்கில் கொள்வார் மருத்துவர். ஒரே வயதுள்ள இரு மனிதர்களுக்கு ஒரே டோஸ் மருந்தை அவர்கள் தருவதில்லை. உடல் எடை சார்ந்து மருந்தின் டோஸ் மாறும். குமாரசாமி கால் குப்பி குடிக்கிறார் என்று வீராச்சாமி கால் குப்பி குடித்தால் கணக்கு பிசகிப் போகும். அவரவருக்கு என்று உடல்கூறு பொறுத்து தாங்கு திறன் அமையும். ஒரு கட்டிங் குடித்துவிட்டுத் தள்ளாடுபவன் உண்டு. மூன்று கட்டிங் குடித்துவிட்டு விளக்குக் கம்பம் போல் நிற்பவனும் உண்டு. அவனவன் வயிறு அவனவனுக்குத்தானே தெரியும்? அதுபோல் அவனவன் போதையின் அளவும் அவனவனுக்குத்தான் தெரியும்! இந்த இடத்தில் ஒரு உவமை சொல்லலாம், நாகரிகம் கருதித் தவிர்க்கிறேன்.

குடிப்பவர் பலருக்கும், அடுத்தவனை விடத் தனக்கு குடி

தாங்கும் வலு அதிகம் என நிரூபிக்கும் அவஸ்தை இருக்கிறது. அது மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் என்ற போதம் இருப்பதில்லை. இதை அறிந்துகொள்வது அவசியம்.

மறுபடியும் திருவள்ளுவரை மேற்கோள் காட்டலாம். 'மலரினும் மெல்லிது காமம் சிலர் அதன் செவ்வி தலைப் படுவார்.' காமம் என்பதே மலரை விட மென்மையானது. சிலர் மட்டுமே அதன் நுட்பம் அறிந்து இன்பம் துய்க்க வல்லவர்கள். கட்டிலில் மல்லாந்து படுத்துக் கிடக்கும் காதலி மீது ஓடி வந்து மேலே விழுவதல்ல காமம். அது சினிமாக் காமம். அப்படித்தான் தமிழர்களில் பலரும் மது என்றால் சாடி விழுகிறார்கள். காமம் ஆனாலும், மதுவானாலும், மருந்து போல் விருந்து போல் அனுபவிக்க வேண்டும்.

தெரிசனங்கோப்பு ஸ்ரீசாரதா வைத்தியசாலை வைத்தியர் டாக்டர் எல்.மகாதேவன் எழுதிய பல நூல்களில், இரு நூல்களின் தலைப்பு, 'மருந்தே உணவு' மற்றும் 'உணவே மருந்து!' மதுவை, காமத்தை, உணவை, மருந்து போலும் விருந்து போலும் பாவிக்க வேண்டும். துய்க்க வேண்டும். "கல்வியறிவு இல்லாத உழைப்பாளிகளிடம் கூட, எந்த ஊர் கள்ளு உயர்வானது என்ற அறிவு இருந்தது" என்கிறார் மிக மூத்த இலக்கிய முன்னோடி கி.ராஜநாராயணன். தென்னை மரத்தில் கண்டாங்கி சுற்றி இருந்தாலும் பெண் என்று ஏறி விழுபவனை என்ன செய்ய இயலும்? தமிழன் அப்படித்தான் மது மீது சாடி ஏறுகிறான்.

மராத்தியில் சொல்வார்கள், 'நாச் ந ஆலா, ஆங்கணு தேடா' என்று. 'ஆடத் தெரியவில்லை, முற்றம் கோணலாக இருக்கிறது என்று சொல்கிறான்' என்பது பொருள். மது எனும் சொல் மீது உணர்ச்சி ஏற்றி வைத்திருக்கிற தமிழ்ச் சமூகத்திடம் இதற்கு மேல் என்ன சொல்வது?

**- கற்போம்...**



# கைம்மண் அளவு

'சொல்லுதல் யார்க்கும் எளிய அரிய வாம் சொல்லிய வண்ணம் செயல்' என்பது வினைத்திட்பம் அதிகாரத் துத் திருக்குறள். அதைச் செய், இதைச் செய், அதைச் செய்வேன், இதைச் செய்வேன், அதைச் செய் திருக்கலாம், இதைச் செய்திருக்க லாம் என்று சொல்லுதல் எவர்க்கும் எளிய காரியம். ஆனால் அவர் சொன்னபடி அவரே செய்தல், அவர் எதிர்பார்த்தபடி எதிராளி செய்தல் என்பதெல்லாம் மிக அரி தான காரியம்.

**நாஞ்சில் நாடன்**

ஓவியம்: மருது



பயனில சொல்லாமை அதிகாரத்துத் திருக்குறள் சொல்கிறது, 'பயனில பல்லார்முன் சொல்லல் நயனில நட்டார்கண் செய்தலின் தீது' என்று. பலர் கூடி இருக்கும் அவையில், அல்லது பல்லோரும் வாசிக்கும் பருவ இதழில், வலைத்தளத்தில், முகநூலில் யாருக்கும் எவ்விதப் பயனும் தராத சொற்களைப் பேசுதல் என்பது, நெருங்கிய ஆத்மார்த்தமான நண்பர்களுக்குத் தகாதன செய்வதைவிடவும் தீமையானது.

அதே அதிகாரத்துத் திருக்குறள் சொல்கிறது, 'பயனில் சொல் பாராட்டுவானை மகன் எனல் மக்கட் பதடி எனல்'. எப்பயனும் விளைவிக்காத சொற்களைத் தூக்கிக் கொண்டாடித் திரிகிறவனை, மனிதன் என்று மதிக்காதே; மனிதப் பயிரில் மணியாக உருப்பெறாத பதர் என்று ஒதுக்கு.

பாரதீரமான நமது அரசியல்காரர்களை, வீரப் பிரதாபக் கோஷங்கள் போடும் எழுத்துக்காரர்களை நாம் என்னென்பது?

எம்.எம்.கல்புர்கி என்ற அறிஞர், ஆய்வாளர், வரலாற்றாசிரியர், எழுத்தாளர் கொலை செய்யப்பட்டதை வரலாறு அதிர்ச்சியுடன், ஆத்திரத்துடன், அச்சத்துடன், ஏமாற்றத்துடன் பார்த்துத் திகைத்து நிற்கிறது. தெரு நாடக இயக்கத்தின் முன்னோடியான சப்தர் ஹஸ்மி ஆளுங்கட்சி குண்டர்களால் மக்கள் நடமாட்டமுள்ள வீதியில் அடித்துக் கொல்லப்பட்ட போதும் அவ்விதமே!

ஒரு எழுத்தாளன் கொலை செய்யப்படும்போது கண்மூடி மௌனியாகிச் சும்மா இருப்பதற்கு எண்ணுகிறது சாகித்ய அகாதமி. கேட்டால், ஆட்சிக் குழுவைக் கூட்டி, தீர்மானங்களின் மீது வாக்கெடுப்பு நடத்தி, என்ன செய்வதென்று யோசிப்பார்களாம். சொந்த வீட்டில் இழவு விழுந்திருக்கிறது. பொட்டிக் கரைவது மனிதப் பண்பு. மேலிடத்து ஆணைக்குக் காத்திருப்பது அறிஞர் பண்பு போலும்.

சங்கீத் நாடக் அகாடமி, லலித் கலா அகாடமி, சாகித்ய அகாடமி போன்றவை அரசியல் தலையீடு இல்லாத சுதந்திரமான அமைப்புகள் என்று சட்ட திட்டங்கள் சொல்கின்றன. சமத்துவத்துக்கும், சகோதரத்துவத்துக்கும், சார்பற்ற தன்மைக்கும் இந்தியாவில் இல்லாத சட்டங்களா? சட்டம், சட்டம் கட்டப்பட்டு சுவரில் மாட்டப்பட்டிருக்கும். நடைமுறை அவரவர் வசதி போல், சுயநலம் போல், ஆதாயம் போல் இருக்கும். அரசின் நிதியுதவி பெறும்

**சட்டம், சட்டம் கட்டப்பட்டு சுவரில் மாட்டப்பட்டிருக்கும். நடைமுறை அவரவர் வசதி போல், சுயநலம் போல், ஆதாயம் போல் இருக்கும்.**

அல்லது அரசு சார்புடைய எந்த அமைப்பிலும் எப்படித் தலைவர்கள், செயலாளர்கள், செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள் தேர்வு செய்யப்படுகிறார்கள் என்பது சி.பி.ஐ விசாரித்தறிய வேண்டிய மர்மம் அல்ல.

இந்திய நாட்டின் எழுத்தாளன் கொலை செய்யப்படும் போது மீனம், மேஷம் கணித்து நிற்கும் சாகித்ய அகாடமி நிலைமை பரிதாபத்திற்கு உரியது. இவர்கள்தான் இந்தத் தேசத்து எழுத்தாளனின் உரிமைகளைக் காக்கிற, இலக்கியத்தைப் பேணுகிற, போற்றுகிற பெருந்தனக்காரர்கள்!

படைப்பின் குரலை அடக்க, நசுக்க, நிறுத்த முயலும் எந்த முயற்சிக்கும் எழுத்தாளன் எதிரானவன். உலகம் முழுக்க ஒரே மொழி பேசப்படுவதில்லை, ஒரே இசை இல்லை, ஒரே மரபு இல்லை, ஒரே மதம் இல்லை, ஒரே உணவு இல்லை, ஒரே மருத்துவம் இல்லை, ஒரே தத்துவம் இல்லை, ஒரே கருத்தும் இருக்க இயலாது. மாற்றுக் கருத்து உடையவர்களை எல்லாம் போட்டுத் தள்ளுவது என்பதை எந்த அறமும் போதிக்கவில்லை.

அது ஜோடி குரூஸாக இருந்தாலும் சரி, பெருமாள் முருகனாக இருந்தாலும் சரி, எல்லோருக்கும் கருத்துச் சுதந்திரம் உண்டு. ஆனால் ஜோடி குரூஸை வெட்ட வாளெடுத்துப் பாய்ந்தவர்களே இங்கு பெருமாள் முருகனுக்கு கேடயம் ஏந்தினார்கள். இந்த முரண் வியப்பளிக்கிறது. இருவருக்கும் ஆதரவாக, குறைந்தது ஐந்து நாளிதழ்களில் எனது கருத்துப்பதிவுகள் உண்டு. ஆனால், பின்னதை வசதியாக மறந்துவிட்டு, முன்னதை மந்திரம் போல் நினைவு வைத்து எனக்குச் சேராத சட்டையை, பிடிக்காத வண்ணத்தை வல்லந்தமாக அணிவிக்கப் பார்க்கிறார்கள். நாம் எவர் வீட்டு வளர்ப்புப் பிராணியுமல்ல. ஆனால் வளர்ப்புப் பிராணிகளாக இருந்தவர்கள், இருப்பவர்கள், அதைக் குதூகலத்துடன் செய்ய முனைகிறார்கள்.

குலை குலையாக லட்சத்து நாற்பதினாயிரம் திக்கற்ற ஈழத் தமிழர்கள் உயிர் துடைத்து எறியப்பட்டு பெருஞ்சவக்

குழிகளில் மூடப்பட்டபோது, பவானி சமுக்காளம் விரித்து வயிறு புடைக்கத் தின்ற களைப்பில் சொகுசு உறக்கம் பூண்டிருந்தவர்கள் இன்று வேகமாகக் கேள்விக் கணைகளை எறிகிறார்கள். அந்த சந்தர்ப்பத்தில் தமிழில் முதன்முறையாகக் 'கள்ள மௌனம்' என்ற சொல்லை நான் பயன்படுத்தினேன்.

உண்மையைச் சொன்னால், அவர் கொலை செய்யப்படுவதற்கு முன்னால், எம்.எம்.கல்புர்கியின் பெயரை நான் கேள்விப்பட்டதில்லை. அது அவர் தப்பு அல்ல. என் தவறும் அல்ல. இந்திய இலக்கியச் சூழல் இப்படித்தான். எம்.எஃப்.உசேன், ஆதிமூலம், மருது என அறிய மாட்டோம். ஆனால், உலக ஓவியங்கள், சிற்பங்கள், இசை என்போம். அவை எவையும் வாசித்து, கண்டு, கேட்டு ரசித்து இன்புற்றவை அல்ல. கூகுள் சரணம் ஐயப்பா! கட்டுரை எழுது ஐயப்பா!!

எழுத்தாளன், கவிஞன், கலைஞன் என்பவன் காலத்தின் குரல். சமூக மனசாட்சியின் குரல். நீதியின் குரல், அறத்தின் குரல். எவ்வகையினும் அதை மடக்குவது அடக்குவது என்பது மக்கள் விரோதச் செயல்பாடு. முற்போக்குவாதி, பிற்போக்குவாதி என்பார்கள் அவரவர் சௌகரியத்துக்கு. அஃதெல்லாம் ஓலைக்கால், சீலைக்கால் சமாச்சாரம். நுட்பமான எந்தக் கலைஞனும் முற்போக்குதான். அது கலைஞனின் இயல்பு, உயிரின் ஊற்று; நீவிர் வழங்கும், சூட்டும் பட்டம் அல்ல.

'மன்னவனும் நீயோ, வளநாடும் உனதோ, உன்னை அறிந்தோ தமிழை ஓதினேன்' என்று கேட்டு நாட்டைக் கடந்து நடந்தவன் முற்போக்கா பிற்போக்கா? மவுண்ட் ரோடு அடங்காத லட்சக்கணக்கான தமிழன்மார் பின்தொடர சவக்கோட்டைக்குப் போனவர் முற்போக்கு, பதின்மூன்று பேர் பின்தொடர மயானத்துக்குப் போனவர் பிற்போக்கா?

முன்பொரு சமயம், பிரபலமான மாத இதழ் ஒன்றில் அச்சிடப்பட்டிருந்த கட்டுரைக்கு எதிர்ப்பாக, அந்தக் கட்டுரை அச்சிடப்பட்டிருந்த தாளில் மலம் சுற்றி, இதழாசிரியருக்குத் தூதஞ்சல் அனுப்பியவர்களை முற்போக்கு என்பீர்களா, பிற்போக்கு என்பீர்களா? ஒரு குறிப்பிட்ட அரசியல் தலைவர் எழுதுவது இலக்கியம் அல்ல என்ற விமர்சனத்துக்கு எதிராக, நள்ளிரவில் அவர் வீட்டுத் தொலைபேசியில் கொக்கரித்தவர்கள் முற்போக்கா, பிற்போக்கா?

படைப்பாற்றலுக்கு எதிரான

அரசியல் கொலையை எதிர்த்து இடதுசாரித் தோழர்கள் அறிக்கை வெளியிட முயன்றபோது, என்னிடம் வாசித்துக்கூட காட்ட வேண்டாம், நான் உங்களுடன் இருக்கிறேன் என்று சொன்னவன். இன்னொரு படைப்பிலக்கியவாதியின் கருத்துச் சுதந்திரத்தை மறுத்து அறிக்கையில் கையெழுத்துக் கேட்டபோது மறுத்தவனும் நானே! அவரவர் கருத்துக்கு அவரவர் பொறுப்பு.

**படைப்பின் குரலை அடக்க, நசுக்க, நிறுத்த முயலும் எந்த முயற்சிக்கும் எழுத்தாளன் எதிரானவன். மாற்றுக் கருத்து உடையவர்களை எல்லாம் போட்டுத் தள்ளுவது என்பதை எந்த அறமும் போதிக்கவில்லை.**

ஆனால், இது போன்ற கொடுமைகளைக் கருவியாகப் பயன்படுத்திக்கொண்டு சொந்தக் கணக்கு வழக்குகளை நேர் செய்வதும் அரசியல் தந்திரம் தான். இந்தியாவின் லலித் கலா அகாடமி தலைவர் என்பதோ, முன்னாள் பாரதப் பிரதமரின் சகோதரி மகள் என்பதோ சாதாரணமான காரியம் அல்ல. அது போலவே பல பொறுப்புகளை முன்னாளில் வகித்த எழுத்தாளன் எனும் வர்க்கத்தில் பட்ட அரசியல் செல்வாக்கு உடையவர்களும். நகரப் பேருந்தில் பயணம் செய்யும் எம்மொழியின் எழுத்தாளனும் இவர்களும் ஒன்றா? பரிதாபத்துக்குரிய எழுத்தாளன் இவர்களுடன் சமபந்தி போஜனம் கூடச் செய்ய இயலாது.

அன்று அனுபவித்த எதையும் இன்று துறப்பது எப்படி? தத்தம் பதவிக்காலத்தில் இவர்கள் கருத்தரங்குக்கும் இந்தியாவைப் பிரதிநிதிப்படுத்தவும் சென்ற வெளிநாடுகள் எத்தனை? அந்த அரசாங்கப் பணச்செலவை எப்படித் திருப்பித் தருவார்கள்? ஒரு நாவல் எழுதியவர் 23 நாடுகளுக்குப் போகிறார், பல மொழிகளில் பெயர்க்கப்படுகிறார், பன்னாட்டுக் கருத்தரங்குகளில் கலந்துகொள்கிறார். அவரை விட எத்தரத்திலும் குறைவுபடாத, பல நூல்கள் எழுதிய அழகிய பெரியவன், சு.வேணுகோபால், கண்மணி குணசேகரன், கீரனூர் ஜாகிர் ராஜா போன்றோர் ஃபோர்ட் ஃபவுண்டேஷன் அலுவலக

முகவரியைக் கூட அறிய மாட்டார்கள்.

என்னைக் கேட்டார்கள், ''சாகித்ய அகாதமி விருதை நீங்கள் திருப்பித் தரப் போவ தில்லையா, எம்.எம்.கல்புர்கி கொலைக்கு எதிர்ப்பாக" என்று. லட்சத்து நாற்பதினாயிரம் அப்பாவித் தமிழர்கள், அவர்கள் தமிழன் என்ற ஒரே காரணத்தால், பாரத சர்க்காரின் ஆதரவுடன் கொன்று குவிக்கப்பட்டபோது தமது கிழிந்து போன உள்ளாடையைக் கூட இங்கு எவரும் துறக்கவில்லை!

மலையாளத்தின் மாபெரும் எழுத்தாளர், ஞான பீட விருதும் பெற்ற எம்.டி.வாசுதேவன் நாயர் அறிக்கையை இவர்கள் வாசித்தும் பார்த்திருக்க மாட்டார்கள். அவருக்கு என்ன அச்சமா, சுயநலமா? ஒரு கட்சியின் அரசாங்கத்தில் பதவி சுகம் பெறுகிறார்கள் பலரும். இன்னொரு கட்சியின் அரசாங்கம் வரும்போது அந்த சுகம் வேறு சிலருக்குப் போகிறது! இதில் எம்மனோர்க்கு என்ன கொடுக்கல், வாங்கல்? இழந்தவர் ஆடும் பகடை ஆட்டத்தில் நாமென்ன கருவிகளா?

எம்.எம்.கல்புர்கியின் கொலையை ஒரு அரசியல் கருவியாகப் பயன்படுத்தும் இவர்கள் கொலை செய்தவர்களைப் போல எழுத்துக்கு எதிரானவர்கள்தானே!

எழுத வந்தபோது நமக்கு எந்த விருது பற்றியும் கனவுகள் இல்லை. நாம் பெற்ற விருது வழிப்பறியல்ல. என்னை நினைவு வைத்துத் தருவதற்கு நான் முற்போக்கு முகாம் அல்ல. கல்லூரிப் பேராசிரியர் அல்ல. ஆள் பிடித்து, ஆள் வைத்து அடித்துப் பறிக்கவில்லை. நாற்பதாண்டு கால இலக்கியப் பணிக்குக் கிடைத்த மிகச் சிறியதோர் அங்கீகாரம்!

ஒரு இதழில் இருந்து தொலைபேசியில் கேட்டார்கள். "நாஞ்சில், சாகித்ய அகாடமி விருதைத் திருப்பித் தருவீர்களா?"

"பட்டயம் வேண்டுமானால் தந்து விடலாம். பணம் செலவாகிப் போய் அஞ்சு வருஷம் ஆச்சே! ஒரு காரியம் செய்யலாம். லட்ச ரூபாய் நீங்க விலையில்லாமல் தாருங்கள், திருப்பிக் கொடுத்து விடுகிறேன்'' என்றேன்.

விருது வாங்கியவர் பட்டியல் ஒரு பக்கம் இருக்கட்டும். விருது வாங்கும் முன்பே பன்னாட்டுக் கருத்தரங்குகளுக்கு எனப் பயணித்தோர் எவரெவர்? அவர்கள் அங்கு சென்று ஆற்றிய உரைகள் என்னென்ன? வாசித்த கட்டுரைகள் எவை எவை? உரையாற்றினார்கள்,

**உலக ஓவியங்கள், சிற்பங்கள், இசை என்போம். அவை எவையும் வாசித்து, கண்டு, கேட்டு ரசித்து இன்புற்றவை அல்ல. கூகுள் சரணம் ஐயப்பா! கட்டுரை எழுது ஐயப்பா!!**

கட்டுரை வாசித்தார்களா அல்லது அரங்குப் பக்கமே போகாமல் ஊர் சுற்றிப் பார்த்தார்களா, பாரில் உட்கார்ந்திருந்தார்களா? அதை எப்படி இன்று திருப்பித் தருவார்கள்?

எந்த அரசு என்றாலும், எழுத்தாளர்களுக்கு, கலைஞர்களுக்குத் தமது கட்சி நிதியிலிருந்து சாகித்ய அகாடமி விருது தருவதில்லை. கட்சி நிதியிலிருந்து வழங்கப்படும் விருதுகளின் செயல்பாடுகள் நமக்குத் தெரியும். இது மக்கள் வரிப் பணத்தில் இருந்து வழங்கப்படுவது. எவரிடம் பெற்றுக்கொண்டதை எவருக்குத் திருப்புவது?

திருமூலர் சொல்கிறார் - ‘படமாடக் கூடல் பரமற்கு ஒன்று ஈகில் நடமாடக் கூடல் நம்பர்க்கு அங்கு ஆகா’ என்று. சடையில் கங்கை, கூன் பிறை, கழுத்தில் நச்சரவம் பூண்ட பரமனுக்கு ஒன்று கொடுத்தால், குண்டு குழிச் சாலையில் புகையில் தூசியில் வெயிலில் நடமாடித்திரியும் நம்மவனுக்கு அது வந்து சேருமா என்று! விருதைத் திருப்பித் தருதல் என்பது ஒரு அடையாள எதிர்ப்பு, அவ்வளவே!

தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்க மாநிலப் பொதுச் செயலாளர் சொல்கிறார், “எமது எழுத்தாளர்கள் மூவர் விருதுகளைத் திருப்பித் தருவதாக இருந்தால் அதற்கான பணத்தை நாங்கள் தருவோம்” என்று. மேலாண்மை பொன்னுச்சாமி, சு.வெங்கடேசன், டி.செல்வராஜ் என அவர்கள் கணக்கு நேராகிவிட்டது. பாவம், பொன்னீலன் அண்ணாச்சி, புவியரசு, சிற்பி! அவர்கள் கணக்கை கலை இலக்கியப் பெருமன்றம் நேர் செய்யுமா? திலகவதி, வைரமுத்து, பிரபஞ்சன் ஆகியோர் எந்த அணி? சா.கந்தசாமி, அசோகமித்திரன் என்ன செய்வார்கள்? ஜோ டி குரூஸ் பணத்தை மோடி கட்டுவாரா?

ஒரு வாதத்துக்காகக் கேட்கிறேன்... விருதையும் பணத்தையும் திரும்பத் தந்து விடலாம்!

**ரம்மி விளையாட்டில் பாயின்ட்டுக்குப் பத்து காசு வைத்து ஆடுகிறது எழுத்தாளர் உலகம். பாயின்ட்டுக்கு கோடிகள் வைத்து ஆடுகின்றது அரசியல் உலகம்!**

ஆனால் விருது பெற்றபின் நடந்த பாராட்டுகள், நேர்காணல்கள், அந்த நூல் பிறமொழிகளில் பெயர்க்கப்பட்ட தன் உரிமம், இவற்றுக்கான மதிப்பீட்டுத் தொகையையெல்லாம் எப்படிக் கணக்கிடுவார்கள்? எப்படித் திருப்பித் தருவார்கள்? அவ்விதம் செய்ய முடியாது எனில், விருதைத் திருப்பித் தரும் செயல்பாடு என்பதுவும் ஒரு அரசியல் நாடகம் என்பேன் நான். உங்கள் அரசியல் நாடகத்துக்கு எங்களை வேடமேற்கச் சொல்கிறீர்களா?

விருதைத் திருப்பிக் கொடுங்கள் என்று சொன்ன ஒரு தோழரிடம் நான் கேட்டேன், "நானெழுதிய முப்பத்தைந்து புத்தகங்களில் எதை நீங்கள் வாசித்தீர்கள்?" என்று. கூட்டத்தோடு கூட்டமாக நின்று கல்லெறிவதும் ஒரு தமிழ்க் குணம் ஆகிப் போயிற்று இன்று.

தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகங்கள் இதுவரை எத்தனை இலக்கியவாதிகளுக்கு கௌரவ டாக்டர் பட்டம் கொடுத்து அனுப்பின? சுதந்திரம் பெற்ற இத்தனை ஆண்டுகளில் அவர்களில் எத்தனை பேருக்கு 'பத்ம' விருதுகள் தரப்பட்டன? தகுதி சால் மூத்த எழுத்தாளர் பலருக்கும் இன்று ஏன் சாகித்ய அகாடமி விருது வழங்கப்படவில்லை? மாநில அரசுகளின் விருதுகள், தாங்குபவருக்கும் தடுக்குப் போடுபவருக்கும் தரப்படுகின்றன; ஏன்?

எவரும் இங்கு வாய் திறந்து கேட்கிறார்களா? அரசாங்கங்களுக்கு எழுத்து என்றால் என்ன தெரியும்? எழுத்தாளன் என்றால் என்ன தெரியும்? ரம்மி விளையாட்டில் பாயின்ட்டுக்குப் பத்து காசு வைத்து ஆடுகிறது எழுத்தாளர் உலகம். பாயின்ட்டுக்கு கோடிகள் வைத்து ஆடுகின்றது அரசியல் உலகம்!

தமிழ் கூறு நல்லுலகு அறிதுயில் போய் ஆழ்ந்து துயிலில் கிடக்கிறது. எச்சில் சோறு தின்னும் பிச்சைக்காரன் தட்டத்தையும் ஏக்கத்துடன் பார்க்கிறது. என்ன கொடுமையடா இது!

**– கற்போம்...**

# தைக்கண் அளவு

## நாஞ்சில் நாடன்

ஓவியம்: மருது

‘காஞ்சனை’ என்று புதுமைப்பித்தனின் சிறுகதை ஒன்று. 1943ல் ‘கலைமகள்’ இதழில் வெளியான பேய்க்கதை. மிகச் சிறந்த சிறுகதைகளில் அதுவும் ஒன்று. அந்தக் கதையை வாசித்துவிட்டு அவரிடம் கேட்டார்களாம், “பேய், பிசாசு, பூதங்களில் எல்லாம் நம்பிக்கை உண்டா?” என்று. அவர் சொன்னாராம், “நம்பிக்கை இல்லை... ஆனால் பயமாக இருக்கிறதே!”

பேய் என்றால் எல்லோருக்குமே ஆர்வம், அச்சம், திகில், ஏளனம் கலந்ததோர் உணர்ச்சி. எனக்கும் சில பேய் அனுபவங்கள் உண்டு. முப்பத்தைந்து ஆண்டுகளாய் ராப் பகல் பாராமல் தேசம் முழுக்கச் சுற்றுகிறவனுக்கு பேய் எதிர்ப்படாது இருக்குமா பின்னே? ஆனால், எனது அனுபவங்களை இங்கே சொல்லப் போவதில்லை.



‘பேய் என்பதெல்லாம் மூடர்களின் நம்பிக்கை’ என்று திராவிட இயக்கம் நமக்குக் கற்றுத் தந்திருக்கிறது. அதுவே ‘கடவுளை நம்புகிறவன் முட்டாள்’ என்றும் சொல்கிறது. சாமிக்கே இப்பாடு என்றால் பேய்க்கு எப்பாடு? ஆனால், கொடுமையான பேயே பிச்சை வாங்கும் அளவுக்கு கொடுமைக்காரர்களாக, தன்மானமுள்ள மனிதர்கள் மாறிப் போனதுதான் வருத்தமளிக்கிறது.

பேய் பற்றி நீண்ட ஆய்வுகளை பல மேலை நாடுகள் நடத்தியுள்ளன. சிலப்பதிகாரம் சதுக்கப் பூதம் பற்றிப் பேசுகிறது. சந்திகளில் நின்று கொண்டிருக்கும் பூதம் அது. தீயவர்களைக் கண்டால் உடனே எடுத்து விழுங்கிப் பசியாறுமாம். எப்போதும் பசியுடனேயே இருந்திருக்கும் போல. அந்த அளவுக்கு அன்று சமூகத்தில் தீயவர் நடமாட்டம் மிகக் குறைவாகவே இருந்திருக்கும்.

இன்றானால் சதுக்கப் பூதத்துக்கு அஜீரணக் கோளாறு ஏற்பட்டிருக்கும். மேலும் நகருக்கு ஒரு சதுக்கத்துக்கு ஒரு பூதம் என்பதும் பத்தவே பத்தாது. டாஸ்மாக் கடைகளைப் போல சதுக்கப் பூதங்கள் நிறுத்தப்பட வேண்டியதிருக்கும். அன்றியும், ‘தீயவர் என்பவர் யார்’ என்றும் பூதத்திற்குப் புதிய விளக்கம் சொல்லித் தர வேண்டும். கொலைகாரன், பொய்யர், வஞ்சகர், கொள்ளைக்காரர், ஊழல் செய்பவர், கையூட்டு வாங்குபவர் எனப் பெரிய பட்டியலாக இருக்கும். அவ்விதம் செயல்படும் சதுக்கப் பூதங்கள் நிலையம் அமைத்துக் கொள்ளும் எனில், எல்லா நகரிலும் போக்குவரத்து நெரிசல் குறையும். ரயில்களில் கூட்டம் இருக்காது. மருத்துவமனைகள் காற்று வாங்கும். துவரம் பருப்பு விலை, கிலோ முப்பது ரூபாய்க்கு இறங்கி விடும்!

என்ன ஆய்வு நடந்தாலும், பேய் பற்றிய அச்சம் மனத்தில் இருந்து இன்னும் மாயவில்லை. கண்ணுக்குக் கண்ணாய் வளர்த்த தாத்தா செத்தபிறகு அந்த அறையில் உறங்க இருபத்திரண்டு வயதான பேரன் அஞ்சுகிறான். மேலும் பேய்ப்படங்கள் இன்றெல்லாம் எத்தனை கோடிகள் கொய்துகொண்டு போகின்றன.

‘நோய்க்கும் பாடு, பேய்க்கும் பாடு’ என்பது கிராமங்களில் வாழும் சொல் வழக்கு. ‘பேய் மாதிரி இல்லா திரியான்’, ‘பேயாப் பறக்கான் பாரு’, ‘பேய்க்குப் பொறந்த பய’, ‘பேய்க்குப் பேன் பார்த்தவ’, ‘பேய்க்காத்து அடிக்கு’, ‘பேயில யும் பேயி பெரிய பேய்’ எனக்

கணிசமான பிரயோகங்களும் உண்டு. பெண்டிர் பலரும் இன்று பேய்களுடன்தான் குடித்தனம் நடத்துகின்றனர் என்பது வேறு கதை. அங்ஙனமே தேற்றத்தை மாற்றியும் சொல்லலாம்!

உண்ணத் தகுதி இல்லாத காய்களுக்கு, பேய் என்றொரு அடைமொழியும் சேர்த்துக் கொள்கிறோம். பேய்ச்சுரைக்காய், பேய்ப் புடல், பேய்ப் பீர்க்கன், பேய்க்குமட்டி, பேய்த்துமட்டி என்றார்கள். பேய்க்கரும்பும் பேய்த்துளசியும் கூட உண்டு. தமிழில் அபூர்வமாக எழுதும் அற்புதமான எழுத்தாளர் 'பாதசாரி'யின் கட்டுரை நூலொன்றின் தலைப்பு 'பேய்க் கரும்பு'. பட்டினத்தடிகளின் கையில் இருக்கும் கரும்பும் பேய்க் கரும்பே என்பார்கள்.

நாட்டில்தான் எத்தனை வகையான பேய்களின் நடமாட்டம்? பணப்பேய், பதவிப்பேய், வட்டிப் பேய், வசூல் பேய், சாதிப்பேய், மதப்பேய்... பேயை நம்பாதே என்றவர்களே பேய் போல் அலைகிறார்கள்.

பேய் ஓட்டுவதற்கென்றே விசேடமான ஏற்பாடுகள் கொண்ட ஊர்கள் உண்டு. ஏர்வாடி, அம்பராம்பாளையம், திருவனந்தபுரத்தை அடுத்து பீமாப்பள்ளி, வெட்டுக்காட்டுப் பள்ளி எனப் பற்பல. அந்தத் தலங்களில் மேலே சொன்ன பேய்களைத் துரத்துவதில்லை.

மலையாளத்தில் 'மணிச் சித்ரதாழ்' என்றொரு அற்புதமான பேய்ப்படம் வந்தது. மோகன்லால், திலகன், சுரேஷ் கோபி, ஷோபனா முதலானோர் நடித்தது. சித்திக்லால், சிபிமலயில், பிரியதர்ஷன் பங்கேற்புடன் பாசில் இயக்கிய படம் என்று நினைவு. நமது தீப்பேறு, நல்ல சரக்கு தமிழுக்கு வரும்போது கலப்பட

**கருக்கு ஒரு சதுக்கத்துக்கு ஒரு பூதம் என்பதும் பத்தவே பத்தாது. டாஸ்மாக் கடைகளைப் போல சதுக்கப் பூதங்கள் நிறுத்தப்பட வேண்டியதிருக்கும்.**

மாகி விடுகிறது... அது பேய்ச் சரக்காக இருந்தாலும்!

ஊர்ப்புறங்களில் பேய்கள் வாழும் வீடுகள், மடங்கள், பாலங்கள், தோப்புகள், மரங்கள் உண்டு. சுடலைமாடன், புலை மாடன், கழுமாடன் போன்ற நாட்டார் தெய்வங்களின் கோயில்களை பேய்க்கோயில் என்றே சொன்னார்கள்.

தனிப்பாடல் ஒன்று 'பெண் புத்தி கேட்பானைப் பேய்' என்றது. திருத்தியும் சொல்லலாம் 'பெண் புத்தி கேளானும் பேய்' என்று. சங்க இலக்கியம் பேய் மகள், பேய் மகளிர், பேய் எனும் சொற்களை ஆள்கிறது. அகநானூற்றில் பரணர் பாடல் ஒன்று, 'பேயும் அறியா மறை அமை புணர்ச்சி' பற்றிப் பேசும். பேயும் அறியாத வண்ணம் மறைவாக வந்து தலைவியைத் தலைவன் புணர்ந்து போனான் என்ற பொருளில். அதாவது பேயும் உறங்கும் நேரத்துக் களவொழுக்கம்.

காரைக்கால் அம்மை பேய் வடிவம் எடுத்த சைவ மூதாட்டி. பதினோராம் திருமுறையில் 'அற்புதத் திருவந்தாதி' நூறு வெண்பாக்கள். அம்மையைக் 'காரைக்கால் பேய்' என்றே பேசுகிறார்கள். 'பேயாடும் கானத்துப் பிறங்க அனல் ஏந்தித் தீயாடும்' சிவனைக் கேட்கிறாள் காரைக்கால் அம்மை, 'எவர் காண உன் திருநடனம்?' என்று. 'செப்பேந்து இளமுலையாள் காணவோ? தீப்படு காட்டு அப் பேய்க்கணம் அவைதாம் காணவோ?' என்று கேட்கிறாள். 'செப்புப் போன்ற இள முலையாள் பார்வதி காணவா, அல்லது தீப்படுகின்ற காட்டில் உறையும் அப்பேய்க் கணங்கள் காணவா? எதற்கு நீ அண்டம் குலுங்க ஆடுகிறாய்' என்று.

'கலிங்கத்துப் பரணி' நூலில், பேய்கள் ஆடிய ஆட்டமெல்லாம் மிகச் சுவைபடப் பாடுகிறார் ஜெயங்கொண்டார். பாரதியோ, 'பேயவள் காண் எங்கள் அன்னை, பெரும் பித்துடையாள் எங்கள் அன்னை' என்கிறார். கரிசல் இலக்கிய மேதை கி.ராவைக் கேட்டால் நூறு பேய்க்கதைகள் சொல்வார்.

ஔவையார் தமிழ் மூதாட்டி... சங்க காலத்தின் ஔவை வேறு, பிற்கால ஔவைகள் வேறு. பிற்காலத்து ஔவை பற்றிய கதையொன்றுண்டு. ஔவையைப் போலக் காடுமேடாக அலைந்த புலவர் மற்றொருவர் இல்லை. இன்றைய பல புலவர்களும் கூகுள் முன் அமர்ந்தவாறே அலைகிறார்கள். ஔவை உப்புக்குப் பாடியவர், கூழுக்குப் பாடியவர், ஆழாக்கு

உழக்குத் தினைக்கும் பாடியவர்.

எவளோ ஒரு பெண்ணரசி மாலை மயங்கும் நேரத்தில் வயிறாரக் கூழ் ஊற்றி இருக்கிறாள் ஔவைக்கு. கண் வெளிச்சம் இருக்கும்வரை நடப்போம் என்று நடந்து, ஊருக்கு ஒதுக்குப்புறமான பாழ்மண்டபத்துப் படிப்புரையில், மேல்முந்தியால் தூசி தட்டி, கொடுங்கை தலைக்கு வைத்துப் படுத்திருக்கிறாள். அந்த மண்டபத்தில் நீண்டகால நிரந்தர டெனன்டாகப் பேய்கள் குடியிருந்தன. தம் இடத்தை ஆக்கிரமிக்க வந்திருக்கிறாள் என்றெண்ணி, பேய்கள் சில, மூதாட்டியைக் காலால் எற்ற வந்தன.

ஔவை சொன்னாள்... 'என்னை என்னத்துக்காச் சுட்டி எத்த வந்தேசவமே? ரெண்டு முறை சொல்லக் கேட்டும் ஒரு வெண்பாவை மனப்பாடம் செய்யாதவன் இருப்பான்... கண் பார்க்கவெள்ளைப் பனையோலையில் எழுத்தாணி வச்சு எழுதத் தெரியாதவன் இருப்பான்... அவனை எல்லாம் பெத்துப் போட்டா பாரு, பெண் பாவி... அடுத்தவங்க சிரிக்கும்படியா, அவனைப் போயி எத்து!'

**நாட்டில்தான் எத்தனை வகையான பேய்களின் நடமாட்டம்? பணப்பேய், பதவிப்பேய், வட்டிப் பேய், வசூல் பேய், சாதிப்பேய், மதப்பேய்... பேயை நம்பாதே என்றவர்களே பேய் போல் அலைகிறார்கள்.**

'வெண்பா இருகாலிற் கல்லானை, வெள்ளோலை

கண் பார்க்கக் கையால் எழுதானைப் - பெண்பாவி

பெற்றாளே பெற்றாள், பிறர் நகைக்கப் பெற்றாளே

எற்றோ மற்றெற்றோ மற்றெற்று'

அதாவது, பேய்களால் எற்றப்பட வேண்டியவர்கள் எழுத்தறிவில்லாத மக்களைப் பெற்றவர்கள் என்பது ஔவையின் துணிபு. அதை அவர், தமிழ் எழுத வாசிக்கத் தெரியாதவர்களை எற்று என்றே பாடி

யிருக்கலாம்.

'பேய் உண்டா' என்று கேட்டால் 'எனக்குத் தெரியாது' என்பேன். 'இல்லையா?' என்று கேட்டாலும் 'எனக்குத் தெரியாது' என்பேன். பேயை ஆவி என்றும் சொல்கிறார்கள். 'கெட்ட ஆவி' என்கிறது கிறிஸ்துவம். பெரும்பாலும் யாம் வாசித்த, செவிப்பட்ட பேய்கள் யாவுமே அநியாயமாகத் தம்மைக் கொலை செய்தவரைப் பழிவாங்கும் பேய்கள். அகாலமாய் அசம்பாவித மரணமுற்ற மனிதர்களின் பேய்கள். காதலனால் கெடுக்கப்பட்டுத் தற்கொலை செய்துகொண்ட பேய்கள். தண்ணீரில் தள்ளப்பட்டோ, விழுந்தோ செத்தவரின் பேய்கள். பெரும்பாலும் பேய்களில் பெண் விகிதாச்சாரமே அதிகம் போலும்!

சொத்தை அபகரிக்கும் பொருட்டோ, வன்புணர்ச்சி செய்யப்பட்டோ, வேறு காரணங்களுக்காக நீதியற்றுக் கொலை செய்யப்பட்டோ பேயாக ஆனவர் தமக்கு எதிராகக் கொடுமை இழைத்தவரைப் பழி வாங்குவதிலோ, துன்புறுத்துவதிலோ நமக்கென்ன சங்கடம்? வழிப்போக்கரை, ஒரு பாவமும் செய்யாதவரை, அப்பாவிகளைத் தொந்தரவு செய்யாதவரை பேய்கள் இருந்துவிட்டுப் போகட்டுமே! தம் கணக்கைத் தாமே சரி செய்து கொள்ளட்டுமே!

தெய்வமும் ஏனென்று கேட்பதில்லை, ஆட்சியாளர்களும் கேட்பதில்லை, அதிகாரமும் கேட்பதில்லை, நீதியும் கேட்பதில்லை எனும்போது, பேய்கள் சட்டத்தைக் கையில் எடுத்துக் கொள்வதில் சாமான்யனுக்கு என்ன விலங்கம்? அந்தப் பேய்கள் உமக்கும் எமக்கும் என்ன தீங்கு செய்துவிடும்? நாம் கொலையும் வன்கொடுமையும் செய்யாதவரை நமக்கென்ன அச்சம்? சக ஜீவிகளாக அவை இருந்துவிட்டுப் போகட்டுமே!

கொலையுண்ட கண்டர்கள் தத்தம் கணக்கு வழக்குகளைப் பேயாகத் திரும்ப வந்து தீர்த்துக் கொள்வது காவல் துறையின் பணச் சுமையைக் குறைக்கும் என்றாலும் நீதித்துறையின் பணிச்சுமையையும் குறைக்கும்தானே! அழித்தொழித்தல் செய்தவர் எவராக இருந்தாலும் அவர் அழித்தொழித்தல் செய்யப்படுவார் என்பது பல்லுக்குப் பல், கண்ணுக்குக் கண் என்ற நீதிதானே!

தற்போதைய ஜனநாயக, சோசலிச, சமத்துவக் குடியரசு ஆட்சியில் அரசாங்கம் சுதந்திரமாக இல்லை. அதிகாரிகள் சுதந்திரமாக இல்லை. நீதி பரி

பாலனம் சுதந்திரமாக இல்லை. திருத்தலங்களும் சுதந்திரமாக இல்லை. வலுவுடையவர்கள் யாவரையும் வளைத்துப்போடும் தந்திரங்கள் தெரிந்தவர்களாக இருக்கிறார்கள். காட்டிய இடத்திலும் நீட்டிய தாளிலும் கையெழுத்து வாங்கிவிடுகிறார்கள். ஏழை, எளிய, முதிய மக்கள் இம்மண்ணில் மட்கிப்போன மனுக்களைக் கையிலேந்தி கால்நூற்றாண்டாக நடந்துகொண்டிருக்கிறார்கள்.

'பேய் அரசு செய்தால், பிணம் தின்னும் சாத்திரங்கள்' என்றான் பாரதி. பேயன்றி, மெத்தப் படித்த மேதாவித் தலைவர்கள்தானே ஆட்சி செய்கிறார்கள், பிறகேன் பிணம் தின்னும் சாத்திரங்கள்? அரசியல் சட்டத் திருத்தம் ஒன்று கொணர்ந்து பேய்களுக்கும் வாக்குரிமை எனலாம்.

உண்மையில், போபாலில் விஷ வாயுக் கசிவில் இறந்துபோன மனிதர்களின் பேய்கள் நடமாடி, பொறுப்பானவர்களைக் கணக்குத் தீர்க்கலாம்!

பிரதமர் இந்திரா காந்தி கொல்லப்பட்டபோது பழி தீர்க்கப்பட்ட 3000 சீக்கிய ஆண், பெண், குழந்தைகளின் பேய்கள் தம் கணக்கை நேர் செய்துகொள்ளலாம்!

கோத்ரா ரயிலில் எரித்துக் கொல்லப்பட்டவர் பேய்களும் அதற்குப் பழியாகக் கொளுத்தப்பட்ட அப்பாவிகளின் பேய்களும் ஈவிரக்கம் இன்றி ஐந்தொகை போட்டு ஆவன செய்யலாம்!

ஈழ விடுதலைப் புலிகளாலோ, இலங்கை ராணுவத்தாலோ, இந்திய அரசாங்கத்தாலோ கொல்லப்பட்ட லட்சக்கணக்கானவரின் பேய்கள் சர்வதேச அல்லது

**தெய்வமும் ஏனென்று கேட்பதில்லை, அதிகாரமும் கேட்பதில்லை, நீதியும் கேட்பதில்லை எனும்போது, பேய்கள் சட்டத்தைக் கையில் எடுத்துக் கொள்வதில் சாமானியனுக்கு என்ன வில்லங்கம்?**

ஐக்கிய நாடுகள் சபை விசாரணைக்கு எல்லாம் காத்திருக்காமல் இப்போதே எழுந்து ஆடலாம்!

தர்மபுரியில் மூன்று பேருந்துகளோடு சேர்த்து எரித்துக் கொல்லப்பட்ட கோவை விவசாயக் கல்லூரி மாணவியரின் பேய்கள் எவரையும் வெறிதே விட மாட்டார்கள்!

பேய்களுக்கு உருவம் இல்லை என்பார்கள். பிறகெப்படி பழி தீர்க்க நடக்கும் பேய்களுக்கு காவல் துறை F.I.R. போடும்? விசாரணைக் காவலில் வைக்கும்? நீதிமன்றம் தீர்ப்பெழுதித் தீர்ப்பெழுதி எந்தச் சிறையில் கொண்டு அடைக்கும்?

வஞ்சனைப் பால் சோறு பொங்கி, வாக்காளர்களை மடி மேல் இருத்தி, உச்சி மோந்து ஊட்ட நினைக்கும் அரசியல்காரர்களிடம் நேரடியாகவோ மறைமுகமாகவோ சில பேய்கள் நியாயம் கேட்கும்.

பேய் அரசாட்சி செய்தால் ஒருக்கால் லஞ்சம் ஒழியக் கூடும். வன்புணர்வு மறையக் கூடும். கொள்ளை லாபக் குபேரர்கள் மறையக் கூடும். வாங்கும் சம்பளத்துக்கு ஊழியர்கள் வேலை பார்க்கக் கூடும். பதுக்கல் இருக்காது. மருத்துவமனைகள், கல்விச்சாலைகள் அறம் தலைப்பட இயங்கலாம். ஆசிரியர்கள் கற்று பாடம் நடத்துவார்கள். காபி 29 ரூபாய்க்கும் இரண்டு இட்லி 45 ரூபாய்க்கும் விற்காது. சினிமா படம் எடுக்க ஐம்பது கோடி அவசியப்படாது. முகநூலில் அவதூறு எழுதும் முகம் திரிந்த மேதைகள், முகம் காட்டி எழுதுவார்கள். அரசாங்கக் கட்டிடங்களின் ஆயுள் முந்நூறு ஆண்டுகள் ஆகும். மேலும் வாசகர்கள் இட்டு நிரப்பிக் கொள்ளலாம், தங்கள் அனுபவத்துக்கும் அறிவுக்கும் தகுந்தபடி!

ஒருவேளை கம்பராமாயணம் பால காண்டத்தில் நாட்டுப் படலத்தில் கம்பன் பாடும் கோசல நாட்டின் ஒழுக்கமும் அறமும் நம் நாட்டிலும் நடந்து வரலாம்.

'பொற்பின் நின்றன, பொலிவு; பொய் இலா நிற்பின் நின்றன, நீதி; மாதரார் அற்பின் நின்றன, அறங்கள்; அன்னவர் கற்பின் நின்றன, கால மாரியே' என்கிறார் கம்பர். நாட்டு மக்களின் அகத்தழகால் நிலைத்திருந்தது புறத்தழகு. அவர்களது பொய் இல்லாத தன்மையால் நீதி நிலைத்து நின்றது. அந்த நாட்டுப் பெண்களின் அன்பினால் நிலைத்து நின்றன அறங்கள். அவர்களின் கற்பினால் பருவ மழை பொய்யாமல் பெய்தது.

எனவே, பேய்களுக்கு ஒரு வாய்ப்பளித்துப் பார்த்தால் என்ன?

**- கற்போம்...**

# கைம்மண் அளவு

'கரம் பற்றுதல்' எனில் நம் மொழியில் 'வதுவை செய்துகொள்ளுதல்' என்று பொருள். எளிய தமிழில் சொன்னால், திருமணம் முடித்தல். கைத்தலம் பற்றினான் என்றாலும் கரம் பிடித்தான் என்றாலும் அதுவே பொருள். நாராயணன் நம்பி, தன்னைத் திருமணம் செய்து கொள்வ தாகக் கனாக் கண்ட அன்னவயல் புதுவை ஆண்டாள்,

*'மத்தளம் கொட்ட, வரி சங்கம் நின்று ஊத,*
*முத்துடைத் தாமம் நிரை தாழ்ந்த பந்தல் கீழ்,*
*மைத்துனன் நம்பி மதுசூதனன் வந்து என்னைக்*
*கைத்தலம் பற்றக் கனாக் கண்டேன் தோழீ! நான்'*

என்கிறாள். ஆக, கைத்தலம் பற்றுவது என்பது, கடிமணம் புரிவது. கடிமணம் என்பது கடிமுத்தம் போன்றதன்று.

நாஞ்சில் நாடன்

ஓவியம்: மருது



கம்பராமாயணத்தின் பால காண்டத்தில், கடிமணப் படலத்தில், ராமன் சீதையை மணமுடிக்கும் காட்சியை 'தையல் தளிர்க்கை தடக்கை பிடித்தான்' என்கிறான் கம்பன். 'தையலின் தளிர்க்கரத்தை ராமன் வலிய கையினால் பற்றினான்' என்பது பொருள்.

மேலும் சுந்தர காண்டத்தில் சீதை அனுமன் வாயிலாகச் சில செய்திகளை நினைவு கூரச் சொல்லுவாள். சூடாமணிப் படலம். 'வந்து எனைக் கரம் பற்றிய வைகல்வாய், இந்த இப் பிறவிக்கு இரு மாதரைச் சிந்தையாலும் தொடேன் என்ற செவ்வரம் தந்த வார்த்தை திருச்செவி சாற்றுவாய்' என்பது பாடல். 'வந்து என்னைக் கரம்பிடித்த போது, இந்த இப்பிறவியில் இன்னொரு பெண்ணைச் சிந்தையினால் கூடத் தொட மாட்டேன் என்று செம்மையான வரம் ஒன்று தந்தான் ராமன். அந்தச் சொல்லை அவன் திருச்செவியில் சொல்வாய் அனுமனே' என்பது பொருள்.

கரம் பற்றுதல் என்பதற்கு அத்தனை முக்கியத்துவம். எனவே தான் 'கையைப் பிடித்து இழுத்தான்' எனும் தொடருக்கு 'கலவிக்கு வருமாறு பிற ஆடவன் கட்டாயப்படுத்தினான்' என்று பொருள் கொள்கிறோம். நமது பாரம்பரியமான திருமணச் சடங்குகளில், தாலி கெட்டு அல்லது திருப்பூட்டு ஆன பின்னால், மணமகன் மற்றும் மணமகளின் வலது இடது கரங்களைச் சேர்த்து பட்டுத் துணியால் கட்டி, மணமேடையை மூன்று முறை வலம் வரச் செய்வார்கள். அதுவே அக்னியை வலம் வருவதும் ஆகும்.

கோவலன் - கண்ணகி திருமண நிகழ்ச்சியை விவரிக்கும் போது, 'நீல விதானத்து, நித்திலப் பூம் பந்தல் கீழ், வான் ஊர் மதியம் சகடு அணைய வானத்துச் சாலி ஒரு மீன் தகையாளைக் கோவலன் மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிட தீ வலம் செய்வது காண்பார் கண் நோன்பு என்னை!' என்கிறார் இளங்கோவடிகள். நீல விதானம், முத்துக்கள் கோர்த்த பூம்பந்தலின் கீழ், சந்திரனும் ரோகிணியும் சேரும் முகூர்த்தத்தில், அருந்ததி எனும் நாள் மீன் போன்ற கண்ணகியை, பெரிய முதிய அந்தணன் மந்திரம் ஓத, கோவலன் கரம் பற்றித் தீ வலம் வந்ததைக் கண்டவர்கள் செய்த தவம் என்ன? வானத்தில் ஊரும் மதியம், ரோகிணி, அருந்ததி எனும் நட்சத்திரம், மாமுது பார்ப்பான், மறைவழி, தீவலம், நோன்பு எனும் சொற்களையே பின்னாளில் கருஞ்சட்டைப்

படையினர் கேள்வி கேட்பார்கள் என்பதை, பாவம் இளங்கோவடிகள் யோசித்திருக்கவில்லை.

பெரிய பிரபுக்களின் மாளிகைகளில், முன்பு நோய்க்கு வைத்தியம் பார்க்கச் சென்றவர்கள், பெண்களின் கை மீது பட்டுத்துணி போர்த்தித்தான் நாடி பிடித்துப் பார்ப்பார்களாம். ஏனெனில் பிற ஆடவர் தொடுகை, கற்பு கெட்டுப் போகச் செய்யுமாம். இன்னும் சில மரபினர், பிணிப் பெண்ணுக்கும் மருத்துவருக்கும் நடுவே திரைச்சீலை தொங்க விட்டு, மருத்துவரைத் திரைச் சீலையின் மறுபக்கம் அமரச் சொல்லிப் பரிசோதிக்கச் செய்வார்களாம். காலம் மனித குல மரபுகளுக்குள் கணிசமான, தலைகீழான மாற்றங்களைக் கொணர்ந்து இங்கு சேர்த்து விடுகிறது.

கரம் என்ற சொல்லுக்கு அகராதி 'நஞ்சு' என்றும் 'வசிய மருந்து' என்றும் பொருள் தருகிறது. அன்று கையைத்தொடுதலை அப்படித்தான் சமூகம் பார்த்திருக்கிறது, ஆண் பெண் நட்பில்.

**தமிழன், காய்ந்த மாடு கம்பிலே விழுந்தது போல வந்தனம், நமஸ்தே, நமஸ்காரம் எனும் சொற்களுக்குப் பாய்ந்து விழுந்து இன்று மறுபடியும் வணக்கம் என்று எழுந்து நிற்கிறான்.**

எவரைக் கண்டாலும் இரு கரம் கூப்பி வணங்குவது நம் மரபு. மூத்தார் எனில் கால் தொட்டு வணங்குவது வட நாட்டு மரபு. அண்மையில் வட நாட்டு நிர்வாகம் நடத்திய பள்ளி ஒன்றுக்கு சிறப்பு விருந்தினராகப் போயிருந்தேன். எல்லா ஆசிரியர்களும் கரங்கூப்பி வணங்கினார்கள். இரு வட இந்திய ஆசிரியைகள் கால் தொட்டு வந்தித்தனர். அது அடிமைத்தனத்தின் எச்ச சொச்சம் என்று சுயமரியாதை சொன்னவர்கள் நமக்குச் சொன்னார்கள். ஆனால், அதிகாரத்தின் முன்னால் மேனி தரைபடக்கிடந்து வணங்குவது அவர்களுக்கு அடிமைத்தனம் இல்லை.

ஈராண்டுகள் முன்பு எம் வீட்டுக்கு காவல்துறை உயரதிகாரி வந்தார், தமது அலுவல் ஜீப்பில். வீட்டில் நுழையுமுன்

காலில் கிடந்த பூட்ஸ் கழற்றினார். ஜீப்பிலிருந்து காவலர் ஒருவர் ஓடோடி வந்தார், கையில் செருப்புக்களுடன். செருப்பை வீட்டு வாசலில் போட்டு விட்டு, பூட்ஸைத் தூக்கிக்கொண்டு ஓடினார். அது அடிமைத்தனம் இல்லை. ஆனால் மூத்தாரைக் கால் தொட்டுக் குனிந்து வணங்குவது மூட நம்பிக்கை, பிற்போக்கு, அடிமைத்தனம் என்பார்கள்.

வணக்கம் என்பது வாயினால் மட்டுமே சொல்வதல்ல. அந்தச் சொல்லுக்கே 'கூப்புகை', 'கை கூப்பு' போன்ற மாற்றுச் சொற்கள் உண்டு. மிகத் தொன்மையான சொல், 'வணக்கம்'. வணங்கார் என்று பதிற்றுப் பத்தும், வணங்கார்க்கு என்று புறநானூறும், வணங்கியோர் என்று பரிபாடலும், வணங்கினர் என்று அகநானூறும் வணங்கினேம் என்று பரிபாடலும், வணங்கினை என்று குறுந்தொகையும் பயன்படுத்தியுள்ளன.

வணக்கம் எனும் சொல்லைப் பயன்படுத்திய தமிழன், காய்ந்த மாடு கம்பிலே விழுந்தது போல வந்தனம், நமஸ்தே, நமஸ்காரம் எனும் சொற்களுக்குப் பாய்ந்து விழுந்து இன்று மறுபடியும் வணக்கம் என்று எழுந்து நிற்கிறான். வணக்கம் என்பதற்குத் தொழுதல் என்றும் பொருள் உண்டு. என்ன சங்கடம் என்றால், 'தொழுதகையுள்ளும் பகை ஒடுங்கும்' என்றார் வள்ளுவர். அதாவது, 'கும்பிட்ட கைகளின் உள்ளேயும் கொலைக் கருவி ஒளித்து வைத்திருப்பார்கள்' என்று அர்த்தம்.

கூடா நட்பு அதிகாரத்தில் வள்ளுவர் சொல்கிறார். 'சொல் வணக்கம் ஒன்னார்கண் கொள்ளற்க வில்வணக்கம் தீங்கு குறித்தமை யான்' என்று. 'பகைவர் வணங்கிப் பேசுவதில் ஏமாந்து விடாதே! அவர்களது வணக்கம் என்ற சொல், வில்லில் இருந்து புறப்பட்டுப் பாயும் கணைகள் போல் தீமையே குறிக்கும்' என்பது பொருள். 'பகைவர்' எனும் சொல்லை இன்று நாம் 'தலைவர்' எனும் சொல்லால் மாற்றிப் பயன்படுத்தலாம். அவர்கள் வணக்கம் சொல்லும்போது, நமக்கு அடிவயிற்றில் தீப் பாய்கிறது, 'என்ன தீமை செய்வதற்குக் காத்திருக்கிறானோ?' என்று.

*Good Morning, Good Evening, Good Night* போன்ற ஆங்கிலச் சொற்களுக்கு காலை வணக்கம், மாலை வணக்கம், இரவு வணக்கம் என்று மொழி மாற்றிப் பயன்படுத்துவதன் பொருத்தப்பாடு குறித்து எனக்கு ஐயம் உண்டு. *Weather is good* என்பார்கள் ஆங்கிலத்தில். நாம் காலநிலை வணக்கம் என்

போம் போலும். நண்பர்களில் சிலர் பொழுது புலர்ந்ததும் ‘வணக்கம்’ எனும் ஒற்றைச் சொல்லில் குறுஞ்செய்தி அனுப்புவார்கள், நாள் தவறாமல். சுருக்கமாக, ஜனவரி முதல் நாளில் வணக்கம் X 365 என்றால் அவருக்கும் நமக்கும் அலுப்பில்லை.

**கை குலுக்குதலோ, கன்னத்தோடு கன்னம் சேர்த்தலோ, தோள் தழுவுதலோ ஆண் பெண் செய்யும்போது, அவற்றுள் காமம் காண்பவர் இருக்கக்கூடும். அவர்கள் எதில்தான் காமம் காண மாட்டார்கள்?**

வட மாநிலத்தவர் சந்தித்த உடன், ‘நமஸ்தே’, ‘நமஸ்கார்’ என்பார்கள். மேலைநாட்டுப் பிற மரபினர், சந்தித்த உடன் கை குலுக்கிக்கொள்வார்கள், வணக்கத்துக்கு மாற்றாக. நமஸ்காரம் ஆனாலும், வணக்கம் ஆனாலும், இடை வளைத்துக் குனிந்து வணங்கும் சீன, ஜப்பான் மரபானாலும், மேலை நாட்டுக் கை குலுக்கல் என்றாலும், அரேபியத் தோள் தழுவல் என்றாலும், கன்னத்தோடு கன்னம் சேர்த்துத் தழுவுதல் என்றாலும் யாவும் நல் மரபுதான். இன்று குறுஞ்செய்தி உலகில் *Hug* என்றொரு சொல் காற்றை விடவும் வேகமாக வீசுகிறது.

‘அவரவர் இறையவர் குறைவிலர்; இறையவர் அவரவர் விதி வழி அடைய நின்றனரே’ என்பார் நம்மாழ்வார். எவருடைய இறையவரும் குறையுடையவர்கள் அல்லர். அவரவர் செயல் வழியாக அவரவர் இறையவரை அடைய நின்றார்களே என்பது பொருள்.

கை குலுக்குதலோ, கன்னத்தோடு கன்னம் சேர்த்தலோ, தோள் தழுவுதலோ, ஆண் - பெண் செய்யும்போது, அவற்றுள் காமம் காண வேண்டிய கட்டாயம் இல்லை. காமம் காண்பவர் இருக்கக்கூடும். அவர்கள் எதில்தான் காமம் காண மாட்டார்கள்? ‘*Beauty lies on beholders eyes*’ என்பார்கள் ஆங்கிலத்தில். அழகென்பது காண்பவர் பார்வையின் கோணத்தில் இருக்கிறது. ‘வேம்பின் புழு, வேம்பன்றி உண்ணாது’ என்கிறார் திருமங்கை ஆழ்வார். எனவே காமம் காண்பவர்கள் எங்கும் எதிலும் நீக்கமற நின்று காமமே காண்பார்கள்.

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு, கோவையில் ஒரு ஆன்மிகப் பயிலரங்கில் கலந்து கொண்டு, ஒரு கட்டுரையும் வாசித்தேன். ஆணும் பெண்ணுமாக, முதியவரும் இளையவருமாக ஐம்பது பேர் கலந்துகொண்டோம். பயிற்சியின்போது எங்கள் அனைவரையும் பெரிய வட்டமாகக் கலந்து உட்காரச் சொன்னார்கள். மலர்த்திய ஒருத்தர் உள்ளங்கை மீது மற்றவர் தனது உள்ளங்கையைக் கவிழ்த்தவாறு பற்றிக் கண்மூடிக் கொள்ள வேண்டும். எனது இடது வசத்தில் ஒரு சிறுவன். வலது வசத்தில் தலை நரைத்த மூதாட்டி. கண் மூடிய பின் உள்ளங்கைகளின் ஒன்றிப்பில், வெப்பம், துடிப்பு. ஏதோவோர் சக்தி பாய்ந்தோடிப் போகும் உணர்ச்சி.

திருச்சியில் வாழ்ந்த என் நண்பர் மோதி ராஜகோபால் அடிக்கடி சொல்வார், 'நாஞ்சில், அடுத்த முறை அம்மாவைப் பார்க்கப் போகும்போது, பக்கத்தில் அமர்ந்து தோள்களைப் பிடித்துக் கொடுங்கள். கால் முட்டுக்களைப் பிடித்துக் கொடுங்கள்' என்று. மோதியின் அம்மா இறந்தபோது, அம்மாவுக்கு 95 வயது. என் அம்மை 87 வயதில் இருக்கிறாள். தொடுகையில் பாயும் நேயத்தை அவர்கள் உணர்வார்கள், விரும்புவார்கள் என்பார் மோதி. அறிவார் அறிவார், அறியார் அறியார்.

நமது கைகளைக் கூப்பி, இரு பெருவிரல்களும் நம் நெஞ்சைத் தொட்டுக் கொண்டு இருக்கும்படியாக வணங்குவது ஒரு யோக முத்திரை எனில், நாம் மேற்சொன்ன அனைத்து வணக்கப்பாடுகளும் யோக முத்திரையாகத்தானே இருக்கவேண்டும்!

ஆனால் தமிழ் சினிமாக்களில் முன்னொரு காலத்தில், ஆண் பெண்ணைத் தொட்டால் அவள் கற்பு காணாமற் போய் விடும் காற்றில், கற்பூரம் போலக் கரைந்து. நவ நாகரிகமான நாயகனோ, வில்லனோ கை குலுக்கக் கை நீட்டுவார்கள், நாயகி வெடுக்கென இரு கைகளையும் கூப்புவாள். அதாவது பண்பு வழுவாமல், ஒழுக்கம் கெடாமல், கற்புடன் அவள் வளர்க்கப்பட்டிருக்கிறாளாம். அரை மணி நேரம் சென்று, கனவுக் காட்சிகளில் அவள் அடிக்கிற கூத்து நமக்கு வேறு விதமாகப் பாடம் நடத்தும்.

ஒவ்வொரு மனிதரும் ஒவ்வொரு விதத்தில் கை கொடுக்கிறார்கள். கூகுளில் தேடிப் பார்த்தால், எத்தனை வகை கை குலுக்கல்கள் உண்டு என்ற தகவல்கள் கிடைக்கக்கூடும். பூப் போலப் பிடிப்பாருண்டு. பாம்

> **நவநாகரிகமான நாயகனோ, வில்லனோ கை குலுக்கக் கை நீட்டுவார்கள், நாயகி வெடுக்கென இரு கைகளையும் கூப்புவாள். பண்பு வழுவாமல், ஒழுக்கம் கெடாமல், கற்புடன் அவள் வளர்க்கப் பட்டிருக்கிறாளாம்.**

பின் கழுத்தைப் பிடிப்பது போல அழுத்திப் பிடிப்பாருண்டு. பிடித்தவுடன் கையை விடுவித்துக்கொள்வார் உண்டு. நெடுநேரம் குரங்குப் பிடியாக வைத்திருப்பார் உண்டு. எப்போதும் வியர்த்து ஈரம் பாய்ந்த மென்கையர் உண்டு. மண்வெட்டி பிடித்த சொரசொரப்புக்கையர் உண்டு. வெப்பக்கைகள் உண்டு. மனமில்லாக் கையர் உண்டு. நட்பு நாடுகளின் தலைவர்கள், புகைப்படம் அல்லது வீடியோ எடுத்துத்தீருகிறவரை, கையைக் குலுக்கிக்கொண்டே நிற்பார்கள். கையுறை அணிந்து கை குலுக்குகிறார்கள். வெறுங்கையால் குலுக்கிய பிறகு ஓடிப் போய் கை கழுவுகிறார்கள்.

கவிதாயினி ஒருவர் சொன்னார், எங்கு சந்தித்தாலும் ஒரு குறிப்பிட்ட கவிஞர், ஓடிப் போய் அவரின் கையைப் பற்றிக் குலுக்குவாராம். சிறந்த மனிதப் பண்பு என்று எடுத்துக் கொள்ளாதீர்கள். குலுக்கும்போதே, தனது ஆட்காட்டி விரலால் கவிதாயினி உள்ளங்கையைச் சுரண்டுவாராம்! நல்லவேளை, கடவுள் அவருக்கு விரல் இடுக்கில் விதைப்பைகள் வைக்கவில்லை என்று எண்ணிக்கொண்டேன். கவிதைகளில் பெண் விடுதலை என்றும் முற்போக்கு என்றும் யுகப் புரட்சி என்றும் பெரும் பேச்சுப் பேசுகிறவர் அவர்.

எனக்கொரு மேலதிகாரி இருந்தார். சொந்த ஊர் பாலராமபுரம் பக்கம் நேமம். கான்பூர் அலுவலகத்திலிருந்து பம்பாய் தலைமை அலுவலகம் மாற்றலாகி வந்தார். ஷ்யாம் நாயர் என்று பெயர். எனக்கு மார்க்கெட்டிங் மற்றும் வணிக ஆங்கிலம் கற்றுத் தந்தவர். அவருடன் நான் போன பயணம் ஒன்றினை 'செம்பொருள் அங்கதம்' எனுமோர் சிறுகதையில் பதிவிறக்கியிருக்கிறேன். மத்தியானம் உணவு இடைவேளையின்போது, சாப்பிடும் முன் கை கழுவ வந்தார் எனில், வழியில் கடவுளே எதிர் நின்று கை

கொடுக்க நீட்டினாலும் கை கொடுக்க மாட்டார். சில சமயம் இடக்கையை நீட்டுவார். நோய்த்தொற்று தாக்கிவிடுமோ என்ற அச்சம்தான். தனது குளிர்பதன கேபின் கதவை, வலது கை முட்டியால்தான் தள்ளித் திறப்பார்.

காலையில் வீட்டிலிருந்து நீங்கி, வெளி வேலைகள் முடித்து, வீடு திரும்பி, மதிய உணவுக்கு அமரும்முன் சோப்பு போட்டுக் கை கழுவினால் நீரில் பிரியும் அழுக்கு, எனக்கு ஷ்யாம் நாயரை நினைவுபடுத்தும். இன்று திருமண வீடுகளில், குறைந்தது ஐம்பது பேருக்குக் கை கொடுக்கிறோம். நமக்குக் கை கொடுக்கும் ஐம்பதாவது ஆள், ஏற்கனவே ஐம்பது பேருக்குக் கை கொடுத்திருப்பார் என்றாலும், சாப்பிட இலை முன் அமரும்போது, கை கழுவிப் போகத் தோதிருக்காது. சில சமயம் நீரூற்றி இலையைத் துடைக்கிற சாக்கில் தோராயமாகக் கையையும் கழுவிவிடலாம் என்றால், ஏற்கனவே எல்லாம் இலை நிறையப் பரிமாறி வைத்திருப்பார்கள்.

சுகாதாரம் என்பதோர் தப்பான காரியம் இல்லை. என்றாலும் இன்று வரைக்கும் உயிர் வாழ்வது இறையருள்தான். எங்கோ படித்த வரி ஒன்று இப்படிப் போகும். 'தேவர்கள் எல்லாம் அமுதுண்டும் செத்துப் போனார்கள். ஒருவன் ஆலகால விடம் உண்டும் இருந்து அருள் செய்கிறான்' என்று.

அண்மையில் நாகர்கோயிலில் ஒரு கல்யாணத்துக்குப் போயிருந்தேன். எனது மாமன் மகளின் மகள் மணப்பெண். மண்டபத்தில் நுழையும்போதே மணப்பெண்ணின் தாயார், “அத்தான் வாருங்கோ... அக்கா வரல்லியா?” என்றாள். சற்று நிதானித்து, மண்டப வரவேற்பு மேசைப் பக்கம் நின்றிருந்த அறுபது பிராயமுள்ள பெண்ணொருத்தியைக் கூப்பிட்டாள். “யக்கா, நாஞ்சில் நாடனைப் பாக்கணும் பாக்கணும்னு சொன்னேல்லா! இன்னா, இவ்வோதான்” என்று அறிமுகப்படுத்திவிட்டுப் போனாள். அந்தப் பெண் ஏறக்குறைய எனது எல்லாப் புத்தகங்களையும் வாசித்திருப்பார் போலும். படபடவெனப் பேசிக் கொண்டிருக்கும்போதே கேட்டார், “ஒங்க கையைப் பிடிச்சுக்கிடட்டு மாண்ணேன்... தப்பா நெனைக்க மாட்டேளே?” என்று. கேட்ட மாத்திரத்தில் என் கையை இறுகப் பற்றிக்கொண்டார்.

ஒரு எழுத்தாளனாக நான் பெருமிதப்பட்ட கணம் அது!

**- கற்போம்...**

# கைம்மண் அளவு

வி.ஐ.பி. என்றொரு சொல்லுண்டு புழக்கத்தில். நான் உள்ளாடைகள் தயாரிக்கும் நிறுவனத்தைச் சொல்லவில்லை. Very Important Person என்பதன் சுருக்கமான VIP பற்றிப் பேச முனைகிறேன். Important Person என்று மட்டுமே அல்ல, Very Important Person என்பது. அதாவது, மிக முக்கியமான மனிதர்; அல்லது அதி முக்கியமான மனிதர். அது ஆணாகவோ, பெண்ணாகவோ இருக்கலாம். மாணவர் சமூகம், சற்று கேலியாக VIP என்பதற்கு 'Very Indecent Person' என்று பொருள் கொள்கிறார்கள். அவர்கள் அங்கதத்தில் உண்மை இல்லை என்று ஒதுக்கிவிட இயலுமா?

நாஞ்சில் நாடன்

ஓவியம்: மருது


VIP
VIP
VIP
ViP

சாலையில் பேருந்து நிறுத்தங்களில் காத்துக் கிடக்கும் போது, கூரையில் சுழலும் சிவப்புக் குமிழ் விளக்குடன் சொகுசு வாகனங்கள் பேய் வேகத்தில் விரைந்து செல்லும். வாகனத்தினுள் இருப்பவர் அதிமுக்கிய மனிதராக இருக்கலாம், மாணவர் கேலி செய்யும் அதி ஆபாச மனிதராகவும் இருக்கலாம். வி.ஐ.பி. வீட்டு வளர்ப்பு நாயாகக் கூட இருக்கலாம். வீட்டுச் சமையலுக்குக் காய்கறி வாங்கிப் போகும் வேலையாளாக இருக்கலாம். அல்லது மதிய உணவுக்குக் கொல்லப்படப் போகும் கோழியாகவே கூட இருக்கலாம்.

பார்த்து, வாய் பிளந்து நிற்பதல்லால் சாமான்யன் வேறென்ன செய்ய இயலும்? வி.ஐ.பி. என்பவரின் இலக்கணங்கள் என்ன என்பது தனித்ததோர் கேள்வி. ஆனால், அவர் அந்த வாகனத்தினுள் இல்லாத போதும் சுழலும் செவ்வொளியில் மக்களைக் கலவரப்படுத்தி விரையும் வாகனங்கள். நாமோ, சிப்பாயைக் கண்டு அஞ்சியவர் பரம்பரை. காவல்துறை கான்ஸ்டபிள் ஆனாலும், ஐவுளிக்கடை வாட்ச்மேன் ஆனாலும், அவர்கள் நமக்கு அஞ்சத் தகுந்தவர். ஏனெனில் நாம் ஒரு பிழையும் செய்திராத, செய்ய மனம் வராத, சாமான்யர்கள். எனினும் நாம் கலவரப்படுகிற இனம். அதிகாரம் எந்த வடிவில் வந்தாலும் அடிபணிகிற, ஆவலாதி சொல்கிற, கால்வழி மூத்திரம் பெய்கிற இனம்.

சத்தியமங்கலத்திலிருந்து நடுப்பகல் தாண்டி, பேருந்தில் கோவை திரும்பிக் கொண்டிருந்தேன். பேருந்தில் வழக்கத்துக்கு மாறாக, காமம் செப்பாத கனிவான பழம் பாடல்களாக ஒலிபரப்பாகிக் கொண்டிருந்தன. பின்னாலிருந்து ‘ப்பீய்ங்... ப்பீய்ங்...’ என்று ஆம்புலன்ஸ் சைரன். வழி விட்டு இடம் கொடுக்கவசதியில்லை ஓட்டுனருக்கு. செறிவான போக்குவரத்து நெரிசல். காதை அறுக்கும் ‘ப்பீய்ங்... ப்பீய்ங்...’ துன்புறுத்திக் கொண்டு வந்தது, ஆம்புலன்ஸ் ஊர்தி. தாங்க முடியாமல் ஓட்டுனர் வண்டியை ஒதுக்கி நிறுத்தி, “போ... சைத்தானே” என்றார். முன்னால் பாய்ந்து போயிற்று ஆம்புலன்ஸ். சைரன் தூரத்தில் கேட்டு மறைந்தது.

பாவம், எவர் கிடந்தாரோ உள்ளே... இதய வலியால் மூச்சுத் திணறிக்கொண்டு, பக்கவாதத்தில் வலித்துக்கொண்டு, விபத்தால் கால், கை சதை இழந்து! எனது வெளிநாட்டுப் பயணங்களில் கவனித்திருக்கிறேன். பின்னால் ஆம்புலன்ஸ்

> **அப்படி மிச்சமாகும் இரண்டு நிமிடங்களை அவர்கள் என்ன செய்வார்கள்? மூன்றாம் உலகப் போரைத் தடுத்து நிறுத்தப் பயன்படுத்துவார்களா?**

சைரன் கேட்டால், முன்னால் விரையும் வாகனங்கள் ஓரம் கட்டி நிறுத்தி வழி விடுவார்கள். இங்கு அத்தனைக்கு சாலை வசதிகள் இல்லை. மேலும் இங்கு அனைவருக்கும் எல்லாவற்றுக்கும் அவசரம்.

நாங்கள் முன்பிருந்த குடியிருப்பின் தெற்கு நுழைவாயிலில் இருந்து வடக்கு நுழைவாயில் வரை இரண்டு கிலோ மீட்டர் தூரம் இருக்கும். திருச்சி சாலையிலிருந்து அவிநாசி சாலைக்கு அதில் குறுக்கே பாய்வார்கள். குடியிருப்பு என்பதால் முதியவர் நடப்பார். குழந்தைகள் ஓடும். மாணவர் கடப்பார். ஆடு, மாடுகள் திரியும். கூவியர் தலையில் விற்பனைக்குப் பொருள் சுமந்து கடப்பார். அறுபதுக்கும் குறையாத கிலோ மீட்டர் வேகத்தில் வாகனங்கள் பறக்கும். இரண்டு கிலோ மீட்டர் கடக்க அந்த வேகத்தில் இரண்டு நிமிடங்கள் எடுக்கும். முப்பது கி.மீ வேகத்தில் போனால் நான்கு நிமிடங்கள் ஆகலாம். வாகனம் ஓட்டுபவருக்கு மிச்சமாகும் இரண்டு நிமிடங்கள் மிக முக்கியமானதாக இருக்கலாம். ‘அரண்மனைக்கு ஆயிரம் கிடா செல்லும். குடியான் தண்டம் இறுப்பானா?’ அப்படி மிச்சமாகும் இரண்டு நிமிடங்களை அவர்கள் என்ன செய்வார்கள்? மூன்றாம் உலகப் போரைத் தடுத்து நிறுத்தப் பயன்படுத்துவார்களா?

நான் பயணம் செய்த சத்தியமங்கலம் - கோயம்புத்தூர் பேருந்து, தனது நியாயமான வேகத்தில் தூரம் கடந்து, அன்னூர் நெருங்கிக் கொண்டிருந்தது. வழியில் வலக்கை பக்கத்திலிருந்த பரோட்டாக் கடை வாசலில் எல்லா வாகனங்களையும் ‘ப்பீய்ங்’ ஒலியால் துரத்தித் துரத்தித் தோற்கடித்த அந்த ஆம்புலன்ஸ் நின்று கொண்டிருந்தது. “அதே வாகனம்தான் என எப்படித் தெரியும்?” என்று கேட்பீர்கள்! சின்ன வயதிலிருந்தே துப்பறியும் கதைகள் வாசித்து, சிலசமயம் இதுபோன்ற வாகனங்களின் பதிவு எண்கள் மனதில் பதிந்துவிடும்.

ஆம்புலன்சைக் கடக்கும்

போது உற்றுப் பார்த்தேன். வெற்று வண்டி! இப்படித் தான் வி.ஐ.பி. வாகனங்களும் பெரும்பாலும். வாகனத்தில் வி.ஐ.பி. என்று சொல்லப்படுகிறவர் உட்கார்ந்திருந்தால் என்ன, பசு மாட்டுக்குப் புல்லுக் கட்டு திணிக்கப்பட்டிருந்தால் என்ன? அவை வி.ஐ.பி. வாகனங்கள்!

சரி, இந்த வி.ஐ.பி. என்பவர் யார்? தலையில் இரண்டு கொம்புகள் முளைத்தவரா? தலைக்குப் பின்னால் ஒளிவட்டம் சுழல்கிறவரா? தேசத்துக்கு, மக்களுக்கு மிக மிக இன்றியமையாதவரா? வாராது போல் வந்த மாமணியா? ஊனும் உயிரும் உருக நாட்டுப்பணியில் வாழ்நாள் தொலைத்தவரா?

அஃதோர் அதிகாரத்தின் அடையாளம். வேண்டுமானால் அவரது குடும்பத்துக்கும் தொண்டர் அடிப்பொடிகளுக்கும் அவர் வி.ஐ.பி.யாக இருக்கலாம். உமக்கும் எமக்கும் என்ன ஐயா? எந்த சட்டமன்ற உறுப்பு, நாடாளுமன்ற உறுப்பு, மேயர், அமைச்சரவை அங்கம் அல்லது உயரதிகாரிகள் எமக்கு இன்று வி.ஐ.பி.? தீயணைப்புப் படை வண்டி போகும் வேகத்தில் இவர் பறந்து போய் நாட்டு மக்களுக்குச் செய்யும் சேவை என்ன? இந்த நாட்டில் ஒரு வழக்குக்கு இறுதித் தீர்ப்பு வர எடுத்துக்கொள்ளும் காலம் இருபத்தைந்து ஆண்டுகள், சாமான்யனுக்கு. இரண்டு நிமிடங்கள் மிச்சம் பிடித்து இவர்கள் என்ன செய்யப் போகிறார்கள்? ஒருவேளை வி.ஐ.பி. என்பதால் சாலையோரக் கடைகளைத் தவிர்த்துவிட்டு நட்சத்திர விடுதிகளில் காசு கொடுக்காமல் பரோட்டா தின்பார்களாக இருக்கும்!

தேசத்துக்கும் மக்களுக்கும் தன்னலமற்ற தொண்டு செய்கிறவர் தானே மக்களின் வி.ஐ.பி.யாக இருக்க இயலும்? சொந்தக் குடும்பத்துக்குப் புன்செல்வம் சேர்ப்போர், அரசியல் எனும் தொழில் முனைவோர், அடித்துப் பறிப்போர், கொலைக்குற்றம் சாட்டப்பட்டவர் எப்படி மக்களின் வி.ஐ.பி. ஆவார்கள்?

அயோத்தியா காண்டத்தில் மந்திரப் படலத்தில் அமைச்சர்களின் தன்மை பற்றிப் பாடுகிறார் கம்பர். அவருக்கு வி.ஐ.பி. எனும் சொல் தெரியாது.

*'தம் உயிர்க்கு இறுதி எண்ணார்,*
*தலைமகன் வெகுண்ட போதும்,*
*வெம்மையைத் தாங்கி, நீதி*
*விடாது நின்று உரைக்கும் வீரர்'*

என்று. 'அரசன் சீற்றம் கொண்ட

காலத்தும், ஒன்றைச் சொன்னால் தமது உயிருக்கே வினை வந்து சேரும் என்று கூட அஞ்சாமல், அரசனது சீற்றத்தின் கொடுமையை ஏற்றுக்கொண்டு, விடாமல் நின்று நீதியை உரைக்கும் வீரர்கள் அமைச்சர்கள்' என்று பொருள். இன்றைய அமைச்சருடன் ஒப்பிட்டுப் பார்த்தால் நமக்கு வேட்டி இடுப்பில் நிற்க மாட்டேன் என்கிறது.

கொடுங்கோல் அதிகாரத்துக் குறள் பேசுகிறது, 'வேலொடு நின்றான் இடு என்றது போலும் கோலொடு நின்றான் இரவு' என்று. 'கூர்வேல் கைக் கொண்டு கொள்ளைக்கு வருபவனைப் போன்றவன் ஆட்சியைப் பயன்படுத்தி மக்களிடம் பொருள் பறிக்கும் அரசன்' என்று உரை எழுதுகிறார் பேராசிரியர், முனைவர், கவிஞர் சிற்பி. இவர்கள் எல்லாம் இன்று நமக்கு வி.ஐ.பி.

மதுரையைத் தீக்கு உணவாக்குகிறாள் கண்ணகி. மதுரைக்காண்டம், வஞ்சின மாலையில் 'எவரைத் தீ அணுக வேண்டாம்' என்று கண்ணகி வாக்காக இளங்கோ அடிகள் பேசுகிறார். 'பார்ப்பார், அறவோர், பசு, பத்தினிப் பெண்டிர், மூத்தார், குழவி எனும் இவரைக் கைவிட்டு தீத்திறத்தார் பக்கமே சேர்க' என்பது சிலப்பதிகாரம். அந்தப் பட்டியல், இளங்கோவுக்கு வி.ஐ.பி. பட்டியல். அந்தணர்கள், அறம் செய்பவர்கள், பசு, பத்தினிப் பெண்கள், மூத்தவர்கள், குழந்தைகள் எனும் ஆறு பிரிவினரை ஒதுக்கி விட்டு, தீயைத் தீயவர் பக்கமே சேர்ந்து எரிக்கச் சொல்கிறார். உடனே திராவிட இயக்கத்தினர் கேட்பார்கள், 'இளங்கோவடிகள் எங்ஙனம் பார்ப்பனர்களைக் காப்பாற்றப் போச்சு?' எந்தக் காலத்தில் நாம் கவியுள்ளம் தெரிந்து வாசித்தோம்?

இளங்கோவடிகள் பேசும் பார்ப்பார் என்பவர், பூணூல் அணிந்தவர் என்ற

## வி.ஐ.பி.

**வி.ஐ.பி. என்பவர் யார்? தலையில் இரண்டு கொம்புகள் முளைத்தவரா? தலைக்குப் பின்னால் ஒளிவட்டம் சுழல்கிறவரா? ஊனும் உயிரும் உருக நாட்டுப் பணியில் வாழ்நாள் தொலைத்தவரா?**

ஒற்றைத் தகுதி அல்லது பிறப்புத் தகுதி கொண்டவர்களை அல்ல. முப்புரி நூல் அணிந்து கொண்டு வஞ்சனைக்குக்கூட்டு நிற்பவர்கள், அழுக்கு அரசியலுக்கு ஆலோசனை சொல்வோர், குற்றம் என அறிந்தும் நீதியை வளைக்கவாதிடுவோர், கொள்ளை லாபம் ஈட்ட வணிகம் செய்வோர் என்பவரை அல்ல அவர் பேசுவது. அந்தணர் எனும் பொருளில் ஆள்கிறார். அந்தணர் என்பவர் யார் என வள்ளுவர் சொல்கிறார். 'அந்தணர் என்போர் அறவோர், எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டு ஒழுகலான்' என்று. 'அனைத்து உயிர்களுக்கும் நலம் கோரி ஒழுகுகிறவர்கள், அறவோர், எனவே அந்தணர்கள்'.

நான் பள்ளியிறுதி வகுப்பு வாசித்த காலை, எமக்கு காமராசர் தலைமையில் அமைச்சராக இருந்த அனைவர் பெயரும், அவர்கள் இலாகாவும் தெரியும். பண்டிட் ஜவகர்லால் நேரு தலைமையில் கேபினட் அமைச்சர்களாக இருந்தவர்கள் பெயர் அறிவோம், அவர்தம் துறை அறிவோம். இன்றோ, எவர் அமைச்சர், அவர் துறை என்ன என்பது அந்தக் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மட்டுமே தெரியும்.

தமது துறையில் பணிபுரியும் ஊழியர்களின் இடமாறுதலுக்கு அவர்களிடமே கையூட்டு வாங்குபவர்கள் வி.ஐ.பி.களா? தம் சதை அறுத்துத்தாமே தின்பார்களா? இன்று வி.ஐ.பி. அந்தஸ்து பெற்ற மிகப் பலரின் தியாகம், தொண்டு, ஆளுமை, திறன் என்பன எவராலும் பொருட்படுத்தும் தரமற்றது. 'முப்பத்தேழு நாட்கள் அமைச்சராக இருக்கும் போது அவர் வி.ஐ.பி., பதவியில் இல்லாதபோது வெற்று மனிதர்' என்பது சீரழிந்த நிலைமை அல்லவா? 'மிக முக்கியமான மனிதர்' என்பது சமூகம் வழங்கும் சிறப்பு. பதவியும் அதிகாரமும் வழங்கும் முன்னுரிமை அல்ல.

இயற்கை விஞ்ஞானி நம்மாழ்வார் நமக்கு வி.ஐ.பி. மக்கள் தொண்டுக்கு என்றே நடக்கும் தோழர் ஆர்.நல்லகண்ணு நமக்கு வி.ஐ.பி. உலகத் துத் தமிழர் நலம் பேண வாழ்நாளை அர்ப்பணித்திருக்கும் பழ.நெடுமாறன் நமக்கு வி.ஐ.பி. இலக்கியத்துக்கும் இசைக்கும் நாட்டியத்துக்கும் சிற்பத்துக்கும் ஓவியத்துக்கும் மருத்துவத்துக்கும் கல்விக்கும் வரலாற்றுக்கும் விஞ்ஞானத்துக்கும் திறன் பாய்ச்சுபவர் எவராக இருந்தாலும் நமக்கு அவர் வி.ஐ.பி. அவர்கள் வாகனத்துக் கூரையில் சுழலும் செவ்விளக்குக் குமிழ் இருக்காது! ஏன், வாகனமே கூட

இருக்காது.

நாலடியார் கூறுகிறது... 'நல்ல குலம் என்றும் தீய குலம் என்றும் சொல் அளவு அல்லால் பொருள் இல்லை - தொல் சிறப்பின் ஒண்பொருள் ஒன்றோ? தவம் கல்வி ஆள்வினை என்று இவற்றால் ஆகும் குலம்'. அட்டையும் சின்னமும் சுழல் விளக்கும் கொண்டு ஒருவன் வி.ஐ.பி. என்று குலம் பேசுவதில் ஒரு பொருளும் இல்லை. மக்கள் தொண்டு என்னும் தவம், தலையாய கல்வியுடைமை, ஆள்வினை என்பவற்றாலேயே வி.ஐ.பி. எனும் குலம் அமையும்.

இந்திய வரலாற்றின் சிறந்த பொதுவுடைமை அறிஞருள் ஒருவரான கேரளத்து ஈ.எம்.எஸ்.நம்பூதிரிபாடு, தமது கட்சி மாநாடு எனில், உணவு இடைவேளையின்போது தொண்டருடன் தொண்டராக நின்று, கையில் தட்டு ஏந்தி உணவு வாங்கித் தின்பாராம். இன்று எந்த வி.ஐ.பி.க்கு அந்த திடம் இருக்கிறது?

'பழமொழி' சொல்வது போல, 'கூற்றம் உயிர் கொள்ளும்போழ்து, குறிப்பு அறிந்து மாற்றம் உடையாரை ஆராயா'. உயிர் வாங்க வரும் கூற்றுவன், காலன், மறலி, யமன் அல்லது எமன், வி.ஐ.பி. என்று ஒதுங்கிப் போவானா? நடைமேடையில் உறங்கும் எளிய மனிதன் என்பதால் அவசரமாய்க் கவர்ந்து போவானா?

**எவர் வி.ஐ.பி. ஆனால் எமக்கென்ன லாபம் அல்லது நட்டம்? எமது தேநீருக்கான உழைப்பை யாம் தானே செய்தாக வேண்டும்?**

என்றாலும் சாவிலும் கூட வி.ஐ.பி. சாவு, சாமான்யன் சாவு என ஊடகங்கள் பிரித்து, பேதப்படுத்திக் கொண்டாடுகின்றன அல்லது புறக்கணிக்கின்றன. மகாகவி பாரதியார் இறந்தபோது பதின்மூன்று பேர் கலந்துகொண்டார்களாம். அண்மையில் ஆளுமையுடைய தமிழ்த் திறனாய்வாளர் வெங்கட் சாமிநாதன் இறந்தபோது ஏழெட்டுப் பேர் கலந்துகொண்டார்களாம். சற்று சிந்தித்துப் பாருங்கள், ஒரு வி.ஐ.பி. வீட்டு நாய் இறந்து போனால் அதை ஊடகங்கள் எவ்விதம் கொண்டாடுகின்றன என்று. விபத்திலோ, நோயிலோ இறந்து போகும் எளிய தொழிலாளி

யின் மகனை விட, வி.ஐ.பி. யின் மகன் எந்த வகையில் முக்கியமானவன்? புத்திர சோகம் என்பது பிரபலங்களுக்கும் செல்வந்தருக்கும் அரசியல் முதலாளிகளுக்கும் எனத் தனித்த சோகமா? எளிய குடிமகனின் புத்திர சோகம் பத்துப் பைசா பெறாத சோகமா? ஈதென்ன ஊடக அறம் அல்லது நெறி?

வாகனமும் காவல்துறை பாதுகாப்பும் இன்றி, சாலையில் வி.ஐ.பி. எவரும் நடந்து போனால் சமூகம் அவரைப் பொருட்படுத்தித் திரும்பிப் பார்க்குமா என்பதை நாம் யோசித்துப் பார்க்க வேண்டும். ஏனெனில், சமூகம் திரும்பிப் பார்க்கும் தன்மையில் அவரிடம் எந்தச் சிறப்பும் இல்லை. அறுநூறு வாக்கு வேறுபாட்டில் வென்று சட்டமன்ற உறுப்பினராகி, கொடுங்காற்று அடித்தால் குப்பை பறந்து கோபுர இடுக்கில் செருகிக் கொள்வதைப் போல, அமைச்சராகக் கூட ஆகிவிடலாம். எனில் சமூகத்துக்கு அவர் அதி முக்கியமான ஆள் ஆகிவிடுவாரா? எவர் வி.ஐ.பி. ஆனால் எமக்கென்ன லாபம் அல்லது நட்டம்? எமது தேநீருக்கான உழைப்பை யாம்தானே செய்தாக வேண்டும்?

சமூகம் இதுபோன்ற போலி அந்தஸ்துகளைப் பொருட்படுத்தாது. வேண்டுமானால் வேடிக்கை பார்க்கும். ஆதாயம் இருந்தால் ஒருவேளை பிறகே ஓடும், அவ்வளவுதான்! 'கண்ணுக்கு அணிகலம் கண்ணோட்டம்' என்பது போல, மனிதனுக்கு அணிகலன் மனிதம். மனிதமே இல்லாத ஒருவன் எங்ஙனம் அதிமனிதன் ஆவான்? எங்ஙனம் மிக முக்கியமான மனிதன் ஆவான்? சூதும் வஞ்சனையும் பொய்மையும் களவும் துரோகமும் அதிமனிதப் பண்புகளா ஐயா?

'பெரியவர்க்குச் செய்யும் சிறப்புகளை எல்லாம் பேணிச் சிறியார்க்குச் செய்துவிடுவது என்பது வெறி நாயைப் பல்லக்கில் வைத்துச் சுமப்பது போன்றது' எனும் பொருளில் பழம் பாடல் ஒன்றுண்டு. இன்றைய சமூக, அரசியல், பொருளாதாரச் சூழலில் ஒருவன் வி.ஐ.பி. ஆவது மிக எளிது. ஆனால் மனிதனாக இருப்பது மிகக் கடினம். மகாத்மா காந்தியின் எளிமை பற்றிச் சொல்வார்கள், அவர் எளிமையாக இருப்பதற்கான செலவு மிக அதிகம் என்று. அது போல மனிதனாக இருப்பது மிக அரிய காரியம்.

ஆகவேதான் கம்பன் பேசினான், 'மற்றுள குழுவை எல்லாம் மானுடம் வென்றதம்மா!' என்று.

**– கற்போம்...**

# கைமண் அளவு

அவனவன் மண்ணில் விளைந்ததைத் தின்றான் மனிதன். அவனவன் காடுகளில் வேட்டையாடியதைத் தின்றான். பச்சை மாமிசம் தின்று, சுட்டுத் தின்று, இன்று தந்தூரி சிக்கனும், சிக்கன் மஞ்சூரியனும், கெண்டகி ஃப்ரைடு சிக்கனும் தின்னும் அளவுக்கு மாறி இருக்கிறான். அவனவன் மண்ணுக்குள்ளே மக்கி உரமாகியும் போனான்.

நாஞ்சில் நாடன்

ஓவியம்: மருது



நாஞ்சில் நாட்டில் தென்னையும் நெல்லும் வாழையும் பயிர்கள். மானாவாரியாகப் பனைகள் நின்றன. விளைகளில் கடலையும் காணமும் காய்கறிகளும் பயிராயின. அங்கு கிடைத்தவற்றின் உள்ளேயே அவனது உணவுத் திட்டமும் இருந்தது. அவன் ஓட்ஸ் கஞ்சி குடித்திருக்கவாய்ப்பே இல்லை. அவன் பலகாரங்கள் அரிசி மாவு, தேங்காய், பனங் கருப்பட்டியில் செய்யப்பட்டவை. இன்று முந்நூறு முதல் ஆயிரம் ரூபாய் வரை கிலோவுக்கு விற்கும் எந்த ஸ்வீட்டையும் அவன் கண்ணால் பார்த்ததில்லை. என் முதல் மைசூர்பாகினை எனது இருபத்திரண்டாவது வயதில், 1969ல் சென்னையில் தின்றேன். நீங்கள் 'பாஸந்தி' என்றால் அவன் 'பாயசம்' என்றான்.

நாஞ்சில் நாட்டில் ஏழை எளிய உழவன் வீட்டிலும் மாதம் முப்பது தேங்காய் செலவிருக்கும். நாக்பூர் விவசாயி மாதம் ஒரு தேங்காய்கூட பயன்படுத்துவதில்லை. ஏனெனில், அவன் மண்ணில் தென்னை மரம் கிடையாது. லசூன் சட்னிக்கு அவன் வாங்கும் கொப்ரா, கொங்கணத்திலிருந்து வருவது. தென்னை மரமே வளராத ஊரில் கொச்சங்காய், குரும்பை, கருக்கு, தேங்காய், நெற்று, சிரட்டை எனும் சொற்கள் இருக்குமா? சொற்களே இல்லாதபோது, 'தோசைப் பருவத்து இளநீர் வழுக்கை' என்றால் அவனுக்கு என்ன தெரியும்?

கன்னியாகுமரி மாவட்டத்துக்காரன் நெத்திலி, சாளை, அயிரை, வங்கடை, வாளை, குதிப்பு, குத்தா, பாரை, நெய்மீன், வெளமீன், நவரை, வாவல், கட்டா, இறால், திருக்கை, சுறா என்பன மீனின் வகைகள் என்றறிவான். போபால்காரன் பேய் அறைந்தது போல் விழிப்பான். மீன் தின்பவர்களில் பலர் கணவா தின்பதில்லை. அதை மீனே இல்லை என்பார்கள். இந்த வயது வரை நான் கடல் நண்டு தின்றதில்லை. எல்லாம் வளர்ப்பும், பழக்கமும், மனதளவிலான ஒவ்வாமையும்.

ஒட்டகம் திரிந்த நாட்டில் ஒட்டகம் தின்றான். பக்ரீத்துக்குப் பலி செய்யும்போது நமது சகோதரர்களும் ஒட்டகம் பலி கொடுக்கிறார்கள். அண்மையில் கனடாவிலிருந்து வெளியாகும் 'காலம்' இதழில் கீரனூர் ஜாகிர் ராஜா, ஒட்டகப் பலி பற்றி எழுதிய கதையின் தலைப்பு, 'கசாப்பின் இதிகாசம்'! மலையாளத்தின் புகழ்பெற்ற எழுத்தாளர் ஓ.வி.விஜயனின் 'கசாக்கின்ட இதிகாசம்' எனும் நாவல் தலைப்பை ஜாகிர் ராஜா

கலாட்டா செய்கிறார். பன்றி உறுமிய காட்டில் பன்றியை வேட்டையாடித் தின்றான். ஆடு மேய்த்தவன் ஆடு தின்றான். மாடு திரிந்த நாட்டில் மாடு தின்றான்.

நமது இதிகாச நாயகர்கள் பசுங்கன்றின் இறைச்சி தின்றதாகக் காவியங்கள் பேசுகின்றன. வால்மீகியின் ராமன் மீன் தின்றான். கம்பனின் ராமன் மீன் தின்னவில்லை.

ஆயிரம் நாவாய்க்கு நாயகன், தூய கங்கைத்துறையில் நெடுங்காலம் படகு விடுபவன், பகைவரைக் காயும் வில்லை உடையவன், மலை போல் திரண்ட தோள்களை உடையவன், போர்த் தொழில் வல்ல குகன் எனும் நாமத்தை உடையவன், சீற்றம் இன்றியும் தீ எழ நோக்குகிறவன், கூற்றமும் அஞ்சும் குரலை உடையவன், வனவாசம் வந்த ராமனை நண்ணி, 'தேனும் மீனும் அமுதினுக்கு அமைவது ஆகத் திருத்தினென் கொணர்ந்தேன்; என் கொல் திருவுளம்?' என்று கேட்கிறான். 'தூய்மை செய்த மீனையும் தேனையும் உணவுக்காகக் கொண்டு வந்துள்ளேன். உன் திருவுளம் என்ன?' என்கிறான் குகன்.

'உள்ளத்து அன்பினால், உனது பக்தி புலப்படும் விதமாகக் கொணர்ந்த தேனும் மீனும் தேவர்க்கு உணவாகும் தகுதி உடையது. அமுதத்தை விடச் சிறந்தது. எம்மைப் போன்ற தவம் மேற்கொண்டோர்க்கும் உரியது. யாம் உண்டோம் என்று கொள்வாயாக' என்கிறான் ராமன்.

**நமது இதிகாச நாயகர்கள் பசுங்கன்றின் இறைச்சி தின்றதாகக் காவியங்கள் பேசுகின்றன. வால்மீகியின் ராமன் மீன் தின்றான். கம்பனின் ராமன் மீன் தின்னவில்லை.**

சைவமாக இருந்தவன் அசைவனாகிறான். அசைவமாக இருந்தவன் சைவமும் ஆகிறான். வரலாறு பேசும் உண்மை இது. சில மதத்தினருக்கு, சில சமூகத்தினருக்கு சில விலங்குகளின் இறைச்சி விலக்கு. அதை அவர்கள் பேணிக் கொள்வார்கள். அதில் நமக்கென்ன வழக்கு? சைவம் உண்பவர் பலர் இன்றும் காளான் உண்பதில்லை. வங்காளத்து பிராமணர்கள் தம் வீட்டருகேயுள்ள தடாகத்தில் மீன் வளர்க்கிறார்கள். மீன் அவர்களுக்கு விரும்பிய உணவு. சைவ உணவு.

இதில் உயர்வென்ன, தாழ்

வென்ன?

இந்தியாவில் மான் வேட்டையாடுவது தடை செய்யப்பட்டது. மான் கறி தின்ன வேண்டுமானால், இங்கு சட்டம் ஒழுங்கைக் காற்றுப் புகாமல் கைக்கிடையில் வைத்து நடமாடும் அதிகாரம் கொண்டவராக இருக்க வேண்டும். அல்லது சினிமா பிரபலமாக இருக்க வேண்டும். எனது அமெரிக்கப் பயணத்தின்போது, சாலையில் அடிபட்டுக் கிடக்கும் மான்களைப் பலமுறை பார்த்தேன். வாஷிங்டன் டி.சியில் வாழும் நிர்மல் பிச்சையா சொன்னார், ''உங்க கார்லே மான் அடிபட்டு இறந்தா, அந்த மானை நீங்கள் வீட்டுக்குக் கொண்டு போகலாம்'' என்று. ஏனெனில் நெடுஞ்சாலையில் கார்களில் அடிபட்டுச் சாகும் அளவுக்கு அங்கு மான்களின் பெருக்கம். நம்மூர் தெரு நாய்கள் போல!

நண்பர் ஜெயமோகனுடன் மலேசியச் சுற்றுப்பயணம் செய்தபோது, மலேசிய தமிழ்ச் சங்கத்து நண்பர் ராசேந்திரன் எங்களுக்கு மான்கறி வாங்கிக் கொடுத்தார். அவர்கள் நாட்டில் மான் வேட்டை தடையில்லை.

மானின் விழியைப் பெண்ணின் கண்களுக்கு உவமை சொல்லிக் கவிதை செய்கிறவனும் மான்கறி தின்னாமல் இல்லை. மீனை உவமை சொல்பவனும் மீன் கறி தின்னாமல் இல்லை. திருமாலின் பத்து அவதாரங்களில் ஒன்று, மச்சாவதாரம் எனும் மீன் அவதாரம். இன்னொன்று, கூர்ம அவதாரம் எனும் ஆமை அவதாரம். பிறிதொன்று, வராக அவதாரம் எனும் பன்றி அவதாரம். மச்ச, கூர்ம, வராகத்தை மனிதன் தின்கிறான். அவர்கள் எல்லோரும் திருமாலின் ஹிட் லிஸ்ட்டில் இல்லை. 'தெய்வ அவதாரங்களைத் தின்னலாமா' என்றெவரும் கேட்பதில்லை. நல்லவேளையாக மனிதன், மாலின் பிற அவதாரங்களைப் புசிப்பதில்லை. எல்லோருக்குமா, 'மூட நெய் பெய்து முழங்கை வழி வார' உண்ணும் பாக்கியம் கிடைக்கிறது?

'ஏழைகளுக்கு இறைவன் உணவு வடிவத்தில் வருகிறான்' என்கிறது திருவிவிலியம். நாம் 'இறைவனைத் தின்னாதே, இறை வடிவத்தைத் தின்னாதே' எனலாமா?

பாம்பு தின்றார்கள் பல நாடுகளில். 'பாம்பு என்றால் எமக்கு ஆதிசேடனாகும்' என்றால் யார் கேட்பார்கள்? 'வாசுகி, கார்க்கோடகன், தக்ஷன், அனந்தன், குளிகன், சங்கன், பதுமன் என்பவை எல்லாம் இறைத்தன்மையுடைய பெரும் பாம்புகளாகும்'

> **வங்காளத்து பிராமணர்கள் தம் வீட்டருகேயுள்ள தடாகத்தில் மீன் வளர்க்கிறார்கள். மீன் அவர்களுக்கு விரும்பிய உணவு. சைவ உணவு.**

என்றால் சீனர்கள் கேட்பார்களா? “இருபத்தி நான்கு மணித் தியாலங்களுக்கு உள்ளே, பாம்பு தின்பதை நிறுத்தாவிடின் ICBM ஏவிப் போர் தொடுப்போம்” என்று இறுதி எச்சரிக்கை விடுக்க இயலுமா?

இந்தோ - சீன யுத்தத்தில் நாம் தோற்றுப் பின்வாங்கிய பிறகு, பாம்பு தின்னும் சீனனைப் பற்றித் தமிழில் எத்தனை நூறு கவிதைகள் எழுதப்பட்டிருக்கும்? இப்போது நினைத்தால் சிரிப்பாணி வருகிறது. நாய், பல்லி, தவளை, பாச்சா, வண்டு, ஈசல், புழு என ரசித்துத் தின்பதைக் காண்கிறோம் சேனல்களில்! நமக்கு அது அருவருப்பாக இருக்கலாம். ஆனால் தின்பவர் விரும்பித்தானே உண்கிறார்கள்?

முட்டையிடும் நாட்டுப் பெட்டைக் கோழியையோ, முட்டை என்ற பிறப்பறியா பிராய்லர் பெடைகளையோ தின்னலாம். சேவல் என்பது குன்றேறி நிற்கும் குமரனின் கொடி. ஆகவே சேவலைக் கொன்று தின்னாதே என்று சட்டம் இயற்றுவோமா?

அணிலின் முதுகில் இருக்கும் மூன்று வரைகள், சேது பந்தனம் செய்தபோது அணில் செய்த உதவிக்காக நன்றி பாராட்டி, தசரத ராமன் தனது மூன்று விரல்களால் தடவிக் கொடுத்ததால் ஏற்பட்டவை என்கிறார்கள். கம்பன் எழுதிய யுத்த காண்டத்தில், சேது பந்தனப் படலத்தில் அதற்கு ஆதாரம் இருப்பதாகத் தெரியவில்லை. பௌராணீகக் கற்பனையாக இருக்கும். ஆனால், பல நாடுகளில் முதுகில் வரை இல்லாத அணில்களைப் பார்த்திருக்கிறேன்.

பாஸ்டன் நகரில் பூங்கா ஒன்றைத் தாண்டி, அருங்காட்சியகம் கூட்டிப் போனார் நண்பர் பாஸ்டன் பாலாஜி. போம் வழியில் சில முரட்டு அணில்கள் குஞ்சல வாலைத் தூக்கி நின்றன. “பக்கத்தில் போகாதீங்க... அவை சாது அல்ல!” என்றார் நண்பர். அவற்றின் முதுகிலும் கோடுகள் இல்லை. ஒருவேளை ராமனின் தட்டகம் இந்தியாவின் சில பகுதிகள்தாம்

போலும்! எதற்குச் சொல்ல வந்தேன் என்றால், ராமனின் கை விரல்கள் பட்ட அணில்களைச் சுட்டுத் தின்கிறார்கள், புனிதமானவை என்றும் பாராமல்.

‘பாலைப் பொழிந்து தரும் பாப்பா - அந்தப் பசுமிக நல்ல தடி பாப்பா’ என்பார் பாரதி. பசு மிக நல்ல விலங்கு. மிக மிக நல்ல விலங்கு. பிறந்த குழந்தைக்கும், நோயாளிகளுக்கும், சாவுக்குக் காத்திருக்கும் முதியோருக்கும் அதன் பால் நல்ல உணவு. எவருக்கும் அதில் இரண்டு கருத்துக்கள் இல்லை. பால் தருவது மட்டுமல்ல... வண்டி இழுக்க, ஏரோட்ட, கமலை இறைக்க, செக்கு ஆட்ட காளையங் கன்றுகளும் தரும்.

ஆனால் பால் என்பது தாவரத்து ஊறும் நீரா? தென்னை இளநீரா? கரும்பனைமரத்துப் பதநீரா? அல்லது கரும்பு பிழிந்தெடுத்த சாறா? பசு மாட்டு ரத்தத்தின் மாற்றப்பட்ட வடிவம்தானே! மேலும் மனிதன் பருக என்றா பசுக்கள் பால் சுரக்கின்றன? அவற்றின் கன்று குடிக்கத்தானே!

‘கன்று குடித்து மிஞ்சியதைக் கறந்து கொண்டு வந்திடலாம் காப்பியில் விட்டுக் குடித்திடலாம்’ என்கிறார் கவிமணி. கன்று குடித்து மிஞ்சியதைத் தான் கறக்கிறோமா? நமக்கு திக்காகக் காபி போடவும், கெட்டித் தயிராக்கவும், மணல் மணலாகப் புத்துருக்கு நெய் தரவும்தான் பசுக்கள் பால் சுரக்கின்றனவா?

‘பசு பெற்ற தாய் போன்றது’ என்பதெல்லாம் கேட்க நன்றாகவே இருக்கிறது. எனில் எருமை, ஆடு, ஒட்டகம் எல்லாம் மாற்றாந்தாய்களா? எருமை இறைச்சியும் ஆட்டிறைச்சியும் உண்பது மட்டும் அறமா? பசுவை ‘வீட்டின் லட்சுமி’ என்றோம். விவசாயி முன்பெல்லாம் பசுவோ, காளையோ, எருமையோ, கடாவோ வயதாகிப் போனாலும் அவை தொழுவத்தில் கிடந்து சாகட்டும் என்று நினைத்தான். வறுமையின், கடனின் நெருக்கலில் விவசாயியே சாகும்போது அவன் கன்று காலிகள் என்னவாகும்?

பால் குடிப்பதும் மாட்டைக் கொன்று தின்பதும் ஒன்றா என்று எவரும் கேட்கக்கூடும்! எனில் கலைஞர்களை, அறிஞர்களை, எழுத்தாளர்களைக் கொல்வது அறமா? கால் மாட்டில் கிடக்கும் இலங்கை வாழ் தமிழர்கள் ஒரு லட்சத்து நாற்பதினாயிரம் பேரைக் கொல்லக் கூட்டு நின்றோமே, அது அறமா? இன்றும் அவர்களுக்காக இந்திய அரசாங்கம் வடிப்பது நீலிக் கண்ணீரா? ரத்தக் கண்ணீரா?

காளை உண்ணலாம் எனில்

காளை சிவனின் வாகனம். இடப வாகனம். எருமைக் கடாவை 'போத்து' என்கிறது மலையாளம். 'கரும் போத்துப் போல இருக்கான்' என்பது வசவு. கரும் போத்து எமனின் வாகனம். சிங்கத்தைத் தின்பது, புலியைத் தின்பது, யானையைத் தின்பது எளிதான காரியம் அல்ல என்பதினால்தானே தவிர, அவை அம்மன் வாகனம், ஐயப்பன் வாகனம், விநாயகன் வடிவம் என்பதனால் அல்ல.

**'ஏழைகளுக்கு இறைவன் உணவு வடிவத்தில் வருகிறான்' என்கிறது திருவிவிலியம். நாம் 'இறைவனைத் தின்னாதே, இறை வடிவத்தைத் தின்னாதே' எனலாமா?**

எல்லா விலங்கும் பறவையும் சகல ஜீவராசிகளும் உயிர்கள் தாம். கருணையோடு பார்க்கப்பட வேண்டியவைதான். 'தன் ஊன் பெருக்கற்குத் தான் பிறிது ஊன் உண்பான் எங்ஙனம் ஆளும் அருள்' என்கிறார் திருவள்ளுவர். 'தன் உடலின் தசையை வளர்த்துக்கொள்ள, பிறதோர் உயிரைக் கொன்று அதன் உடலை உண்பவன் எப்படி அருளாளன் ஆக முடியும்' என்பது பொருள். 'கொல்லான் புலாலை மறுத்தானைக் கை கூப்பி எல்லா உயிரும் தொழும்' என்பதும் திருக்குறள்தான். இதற்குப் பொருள் சொல்லத் தேவையில்லை. 'அவி சொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன் உயிர் செகுத்து உண்ணாமை நன்று' என்பதும் திருக்குறளே! 'உயிரினங்களைப் பலியிட்டு ஆயிரம் வேள்விகள் செய்வதை விட ஒரேயொரு உயிரைக் கூட உணவுக்காகக் கொல்ல மறுப்பது நன்று' என்பது பொருள்.

வள்ளுவத்தைத் தமிழ் மறை என்றோர் எத்தனை பேர் புலால் மறுத்தார்கள்? சொற்பொழிவுக்கும் பிரசாரத்துக்கும் ஒன்று, சொந்த வாழ்க்கைக்கு மற்றொன்றா? வள்ளுவர் அருளாளர்களுக்குச் சொல்கிறார் என்றும், சாமான்யன் வாழ்க்கைப் போராட்டமே உணவுக்காக எனும்போது அவனுக்கு இது பொருந்தாது என்றும் எடுத்துக்கொள்கிறேன்.

ஊரில் சொல்வார்கள், 'கொன்றால் பாவம், தின்றால் போகும்' என்று. அது அத்தனை எளிமையான வாசகம் அன்று. தோலுக்காக, பல்லுக்காக, தந்தத்துக்காக, கொம்புக்காக, கொழுப்புக்காக, விடத்துக்

காக, இறகுக்காக... விலங்கை, பாம்பை, பறவையைக் கொல்வது பாவம். ஆனால், தின்பதற்காகக் கொல்வது பாவம் இல்லை. தின்பதற்காகக் கொல்வது பற்றிக் குற்ற உணர்வு அவசியம் இல்லை.

மேலும் இந்த பாவம்-புண்ணியம் என்பது என்ன? பாவ புண்ணியத்தின் அலகுகள் என்ன? பாவ புண்ணியம் என்பது மதத்துக்கு மதம், இனத்துக்கு இனம் மாறுபடுமா? பாவ புண்ணியம் என்பனவற்றுக்கும் அறத்துக்குமான தொடர்பு என்ன?

வணங்கினால் மட்டும்தான் கடவுளா? எல்லா உயிர்களும் இறை என்பதும் எல்லா உயிர்களின் மீதும் அன்பு பூண வேண்டும் என்பதும் நமது தத்துவங்கள் போதிப்பன அல்லவா? ‘உயிர்கள் இடத்து அன்பு வேணும்’ என்கிறாரே பாரதி. ‘வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்’ என்கிறாரே வள்ளலார். நெல்மணி, கோதுமை மணி, பயிறு, கடலை, கடுகு, சீரகம், வெந்தயம் எல்லாமே விதைத்தால் முளைக்கும் உயிரல்லவா? பாதாமும் பிஸ்தாவும் முந்திரியும் கொட்டையினுள் கிடக்கும் உயிர்தானே!

எனவே, எவற்றையும் கொன்றால் பாவம், தின்றால் தீரும். அவரவர் உணவு, அவரவர் வாழும் பிரதேசம், வாழ்முறை சார்ந்தது. எவரது Penal Codeக்கும் அது கட்டுப்பட்டதல்ல. புலி மானைத் தின்னும், மான் புல்லைத் தின்னும். இது இயற்கையின் நியதி. மேகம் கறுத்தால் மழை பெய்யும், மழை பெய்தால் மண் குளிரும், மண் குளிர்ந்தால் புல் வளரும், புல் வளர்ந்தால் பசு மேயும்! பசு மட்டுமல்லாது ஆடு மேயும், எருமை மேயும், கழுதை, குதிரை மேயும், மான் மேயும், மிளா மேயும்.

ஒருவருடைய இறைத்தூதர் சொல்லும் ஒன்றை எல்லா இறைத்தூதர்களும் சொல்ல வேண்டும் என்று இல்லை. ஒரு மதத்தவருக்கு பன்றி மாமிசம் தடுக்கப்பட்ட உணவு. இன்னோர் மதத்தவருக்கு பசு மாமிசம் தடுக்கப்பட்ட உணவு. மற்றோர் மதத்தவருக்கு இரண்டுமே அனுமதிக்கப்பட்ட உணவு. பிறிதோர் மதத்தவருக்கு மாமிசமே தடுக்கப்பட்ட உணவு.

அவரவர் சீலம், அவரவர் ஒழுக்கம், அவரவர்க்குச் சிறப்பு. எதையும் எவர் மீதும் திணிக்காமல் இருத்தல் மானுடத்தின் சிறப்பு. உணவு பற்றிய இன்றைய வெற்று ஆரவாரங்களைத் தவிர்த்துவிட்டு ஆக்க வேலைகளைச் செய்ய முயல்வது அரசாங்கத்தின் அறம்.

**(கற்போம்...)**



# கைம்மண் அளவு

## நாஞ்சில் நாடன்

ஓவியம்: மருது

இந்த நாட்டில் அரசியல்காரர்கள் பாம்பணையில் பள்ளி கொண்ட திருமாலாக சகல செளபாக்கியங்களுடன் சந்தோஷமாக இருக்கிறார்கள். சினிமாக்காரர்களுக்கு குபேர கடாட்சம் பரிபூரணமாக இருக்கிறது. வணிகர்கள் வாரிக் கூட்டுகிறார்கள், வரம்பற்ற செல்வம். தொழில் முனைவோர் பென்ஸ், பி.எம்.டபிள்யூ, ஆடி கார்களில் அமோகமாக வாக்கிங் போகிறார்கள். மருத்துவர்கள், பொறிஞர்கள் பூத்துக் குலுங்குகிறார்கள். தொழிலாள வர்க்கம் சிறுசிறு புலம்பல்களுடன் படகு கவிழ்ந்து போகாமல் துடுப்புப் போடுகிறார்கள். விவசாயி என்பவன் கடன், நட்டம், தோல்வி, வறுமை எனும் கொடிய நரகங்களில் வீழ்ந்து கிடக்கிறான். அதன் காரணங்கள் எவை என ஆத்மார்த்தமாக எவரேனும் ஆராய்ந்து பார்த்தோமா?



இந்தியத் திருநாட்டில் 65 விவசாயப் பல்கலைக்கழகங்கள் உள்ளன. எத்தனையோ விவசாய ஆய்வு மையங்கள் உண்டு. எத்தனை ஆயிரம் விவசாய விஞ்ஞானிகள், அறிஞர்கள், பேராசிரியர்கள், இயக்குநர்கள், முது முனைவர்கள், வெறும் முனைவர்கள், இளங்கலை - முதுகலைப் பட்டதாரிகள்? மற்றும் இந்திய விவசாயத்தை முன்னேற்றி எடுக்க என்றே கடவுளால் அனுப்பப்பட்டிருக்கும் பன்னாட்டு உற்பத்தி, விற்பனை, வணிக நிறுவனங்கள்?

மத்திய, மாநில அரசுகளால் ஆண்டுதோறும் விவசாய அபிவிருத்திக்கு என்று வழங்கப் பெறும் மானியங்கள் எத்தனை ஆயிரம் கோடிகள்? சுதந்திரம் பெற்ற நாளிலிருந்து இன்றுவரை தள்ளுபடி செய்யப்பட்டிருக்கும் விவசாயக் கடன்கள் எத்தனை ஆயிரம் கோடிகள்? செயற்கை உரத்துக்கும், பூச்சிக்கொல்லி மருந்துக்கும், விதைகளுக்கும், விவசாய உபகரணங்களுக்கும், விவசாயப் பொருட்களின் கொள்முதலுக்கும் மத்திய, மாநில அரசுகள் வழங்கியிருக்கும் மானியங்கள் இதுவரை எத்தனை கோடிகள்?

இத்தனைக்கும் பிறகும் ஏன் இந்திய விவசாயி எழுந்து நடமாட முடியாமல் தரையோடு தரையாகக் கிடக்கிறான்? ஏன் இத்தனை அதிக அளவிலான தற்கொலைகள்? ஏன் குடும்பம் குடும்பமாக கூலி வேலைக்கு நகரம் நோக்கி இடம் பெயர்கிறான்?

ஆய்க்குடி பக்கம் கம்பிளி என்னும் ஊர். சுற்றிலும் விவசாய நிலங்களும் ஆநிரை மேய்த்தலும் கறவைகள் பின் செல்தலும். என் நண்பர் இசக்கிமுத்து சொந்த ஊர் அது. அவர் சீனாவில், குவைத்தில், எகிப்தில் பணிபுரிந்து தற்போது ஆஸ்திரேலியாவில் இருப்பவர். தீபாவளிக்கு கம்பிளி வந்தவர், நேற்று தொலைபேசியில் சொன்னார். “எங்கூர்ல விவசாயி ஒருத்தரு காலம்பற பஸ்சுக்கு நிக்காரு... ‘வெடியால எங்க போறேரு? வயக்காட்ல வேல இல்லியா’ன்னு கேட்டேன். ‘நடவுக்கு வய மொழுக்கிப் போட்டிருக்கு... நடவுக் கூலிக்கு அட்வான்ஸ் கொடுத்தாச்சு... ஆள் வரமாட்டங்கு... சும்ம என்னுண்ணு வீட்ல கெடக்கது? கூலிக்குப் பெயின்ட் அடிக்கப்போறேன்’னு சொல்லுதாரு” என்றார்.

பெயின்டிங் வேலைக்குப் போவது குறைச்சல் என்று சொல்ல வரவில்லை. அவனுக்குச் செய்து தீராத ஆயிரம் வேலைகள் உண்டு. வெளியில் நின்று பார்ப்பவருக்கு அவை

புலப்படா! ஒரு இல்லத்தரசிக்கு காலை ஆறு மணிக்குப் பால் வாங்குவது தொடங்கி இரவு பத்தரை மணிக்கு கேட் பூட்டுவது வரைக்கும் எத்தனை வேலைகளோ அத்தனை வேலைகள் விவசாயிக்கும் தினமும். அவனுக்கு இரண்டாம் சனிக்கிழமை, ஞாயிறு, தேசிய விடுமுறைகள் கிடையாது. *CL, SL, PL* இல்லை. மெகா சீரியல் அவனுக்கு என்னவென்றே தெரியாது.

வயலுக்குப் போகும்போது, சாலையில் கிடக்கும் ஒரு குப்பம் மாட்டுச் சாணியைப் பிசைந்த சப்பாத்தி மாவு போல் உருட்டி எடுத்துச் செல்பவன் உழவன்; வயலில் கிடக்கும் சிறு வெட்டாங்கல்லைத் தூக்கித் தூர வீசுபவன் உழவன்; பயிரின் ஊடே வளர்ந்து நிற்கும் கோரையைப் பிடுங்கித் தூர வீசுபவன் உழவன்; தமிழின் முன்னணி எழுத்தாளர்களில் ஒருவரான கண்மணி குணசேகரன், கோரை எனும் களையுடன் விவசாயியின் போராட்டத்தை 'கோரை' எனும் தலைப்பில் நாவலே எழுதியுள்ளார். நமக்குப் பொருட்டின்றித் தோன்றுகின்ற சின்னஞ்சிறு வேலைகளையும் பொறுப்பாகச் செய்கிறவன் உழவன். சமூகத் தீமைகளையும் அறமற்ற செயல்பாடுகளையும் களை என்று பார்ப்பது விவசாய மனோபாவம். களையப்பட வேண்டியவை களைகள்தானே!

எனக்குத் தோன்றுகிறது, 'இந்த மனோபாவம்தான் அவனை ஈடேற முடியாமல் செய்கிறது' என்று. 'அம்மணங்குண்டி ராஜ்ஜியத்தில் கோமணம் உடுத்தவன் பைத்தியக்காரன்' என்பார்கள். எல்லோரும் எவ்வழியிலேனும் பொருள் ஈட்ட ராப்பகலாய் முனையும் காலகட்டத்தில், வஞ்சனையும், சூதும், அடுத்தவன் வயிற்றில் அடிக்கும் அநியாயமும் அறியாத உழவன் உய்வது எங்ஙனம்?

எல்லோரும் எவ்வழியிலேனும் பொருள் ஈட்ட ராப்பகலாய் முனையும் காலகட்டத்தில், வஞ்சனையும், சூதும், அடுத்தவன் வயிற்றில் அடிக்கும் அநியாயமும் அறியாத உழவன் உய்வது எங்ஙனம்?

நானொரு விவசாயியின் மகன். 26 வயது வரை நானே விவசாயிதான். என் அனுபவங்கள் சார்ந்தும் எனக்கு சில தீர்மானங்கள் உண்டு. அதன் அடிப்படையில் நான் பேசுகிறேன். இந்த நாட்டில் விவசாயி வஞ்சிக்கப்பட்ட இனம்.

முந்தைய தி.மு.க ஆட்சிக் காலத்தில் நடந்த, நேரடியாக மக்கள் பயன்பெற்ற இரண்டு காரியங்கள் உண்டு. ஒன்று, மாட்டுவண்டி போகும் ஊர்களை எல்லாம் சிற்றுந்து மூலம் இணைத்தது. இரண்டு, உழவர் சந்தை. பன்னிரண்டு வயதிலிருந்து வடசேரி கனகமூலம் சந்தைக்குப் போய்ப் பழகியவன் நான். எனக்கு அது விருப்பமான விஷயம். கோவையின் முதல் உழவர் சந்தை ஆர்.எஸ்.புரம் கௌலி ப்ரௌவுன் சாலையில் அமைந்தபோது, நீலிக்கோனாம் பாளையத்திலிருந்து திருச்சி சாலைக்கு நடந்து வந்து, ஒண்டிப்புதூர் - வடவள்ளி நகரப் பேருந்து பிடித்து, 15 கி.மீ பயணம் செய்து, ஞாயிறு தோறும் காய்கறி வாங்கப் போவேன்.

உழவர் சந்தையில் உட்கார்ந்திருக்கும் விவசாயியையும் வியாபாரியையும் பிரித்தறிய இயலும். மொழி, முகபாவம், தராசுத் தட்டு பிடிக்கும் விதம்... விவசாயி எனில் சொத்தைக் கத்தரிக்காய் கண்பட்டால் எடுத்துக் களைவான். சொத்தை, அழுகல், நசுங்கல் என அறிந்தும் வியாபாரி கண்டும் காணாமல் எடை போடுவான். விவசாயியிடம் வாங்கினால் ஒரு கிலோவில் நூறு கிராம் அதிகமாக இருக்கும். வியாபாரியிடம் நூறு கிராம் குறைவாக இருக்கும். விவசாயி வாழ்வானா, வியாபாரி வாழ்வானா?

அண்மையில் கோவையில் சின்ன வெங்காயம் கிலோ அறுபது ரூபாய் விற்றது. பெரிய வெங்காயத்தின் பொடி ரகம் கிலோ 20 ரூபாய். என் வசிப்பிடத்தின் அருகே இருக்கும் வாரச் சந்தைக்குப் போனேன். வாரச் சந்தை என்பது, மாலை ஐந்து மணிக்குத் தொடங்கி இரவு ஒன்பது மணி வரை நடக்கும். இரண்டு கிலோ சின்ன வெங்காயம் வாங்கினேன். மறுநாள் காலை, ஈரத்தைக் கொஞ்சம் உலர்த்தலாம், வெயில் முகம் காட்டலாம் என்று எடுத்த போது தெரிந்தது, 20 சதமானம் அழுகல் என்பதும் 30 சதமானம் பொடி ரகப் பெரிய வெங்காயக் கலப்பு என்பதும்.

இதை விவசாயி ஒருபோதும் செய்ய மாட்டான். நாம் அரசியல் தலைவர்களின் ஊழல் பற்றியும் அரசு ஊழியர்களின் ஊழல் பற்றியும் பொருமிக்

கொண்டிருக்கிறோம். ஒருவன் கறி அறுத்து மற்றவன் தின்னும் சமூகமாக நாம் மாறிப் போனோம். ஆனால், அவ்விதம் செய்ய விவசாயியின் மனம் ஒவ்வாது, ஒரு போதும். இன்றைய உலக நியதியின்படி, அவன் பிழைக்கத்தெரியாதவன்; அல்லது வாழத் தெரியாதவன். சமூகமோ அவன் தலையில் மல்லி, மிளகாய், தேங்காய், உப்பு, புளி, இஞ்சி வைத்து சம்மந்தி அரைக்கிறது, மசிய.

ஒருவன் கறி அறுத்து மற்றவன் தின்னும் சமூகமாக நாம் மாறிப் போனோம். ஆனால், அவ்விதம் செய்ய விவசாயியின் மனம் ஒவ்வாது, ஒருபோதும்.

உழவர் சந்தைக்குப் போவதென்றால் சந்தை ஓயும் நேரத்தில் போவேன். சற்று மலிவாக வாங்கும் உத்தேசம்தான். மிச்சமான காய்கறிகளை, அடுத்த நாள் சரக்குடன் கலந்து தள்ளிவிடலாம் என்று வியாபாரி கட்ட ஆரம்பிப்பான். விவசாயி, ஒன்றரைக் கிலோ கத்தரிக்காய்க்கு 'பத்து ரூவா குடுங்கண்ணா' என்று கூறி, சாக்கை உதறி மடிப்பான். மிகச் சிறிய தேங்காய்கள் பதின்மூன்று மிச்சம் இருந்தது விவசாயியிடம். 'இருவத்தஞ்சு ரூவா குடுங்கண்ணா' என்றார். கண்ணீர் மல்கியது எனக்கு. எப்படிக் கட்டுப்படியாகும்? குற்ற உணர்வோடு வீட்டுக்குச் சுமந்து சென்றேன்.

இத்தனை பேர் இந்த நாட்டில் அமோகமாகப் பிழைத்துத் தழைக்கும்போது, விவசாய இனம் மட்டும் ஏன் வஞ்சனைப் பால் சோறு உண்டு பாழாய்ப் போகிறது? அவனுக்குத் தெரியும், தனது பயிர் பச்சைகள் பூக்க, காய்க்க வீசும் காற்றுக்கு விலையில்லை; மானாவாரியாகப் பெய்யும் மழைக்கு விலையில்லை; காயும் பகலவன் கதிர்களுக்கு விலையில்லை. இயற்கை தனக்கு வழங்கும் நியாயத்தைச் சமூகத்துக்கு திருப்பிச் செய்ய நினைப்பது அவன் மரபு, பண்பு. ஆனால், அண்டா பாலைத் துளி விஷம் கெடுப்பது போல, வணிகப் பெருஞ் சமூகம் அவனுக்கு விஷத்தைத் திருப்பித் தருகிறது, கைமாறாக. எத்தனை

இலக்கம் விவசாயத் தற்கொலைகள் கடந்த ஆண்டுகளில். நானும் 'யாம் உண்பேம்' என்றொரு சிறுகதை எழுதினேன் அந்தப் பின்புலத்தில்.

கடந்த விளைச்சலின்போது உளுந்து, பாசிப்பயிறு, துவரம் பருப்பு என இந்திய விவசாயியிடம் கொள்முதல் செய்யப்பட்ட விலை, முதல் தரத்துக்கு ஐம்பத்தைந்து ரூபாய் முதல் அறுபத்தைந்து ரூபாய் வரை. சந்தையின் உச்சப்பொழுதில் விற்கப்பட்ட விலை நீங்கள் அறிவீர்கள். பதுக்கல் என்கிறார்கள். ஆன்லைன் வர்த்தகம் என்கிறார்கள். கண் முன் நடப்பதைக் காணும் விவசாயியின் மனநிலை எப்படி இருக்கும்?

விவசாயி உயர்வுக்கு என்று போராட்டம் நடத்துபவர்கள் இங்கு நகர் வாழ் மனிதனை மட்டுமே கருத்தில் கொள்கிறார்களேயன்றி, விவசாயியைக் கணக்கில் எடுத்துக் கொள்வதில்லை. உலக நாடுகளில் உணவுக்கு மனிதன் தினமும் எவ்வளவு செலவு செய்கிறான், இந்தியன் எவ்வளவு செலவு செய்கிறான் என்ற கவனமும் நமக்கு இல்லை. ஒரு தரமான தேங்காய்க்கு விவசாயி ஐந்து ரூபாய் விலை பெறும்போது, கடையில் ஏன் அதை இருபத்தைந்து ரூபாய்க்கு வாங்க வேண்டும் என்ற கேள்வியும் நமக்குக் கிடையாது. விவசாயியின் மரணத்தில் தரகர்களும் வணிகர்களும் வாழ்கிறார்கள் என்றால் அது மிகையான கூற்றென்று கருதுவீர்களா?

நகர்ப்புறங்களில் கூலி வேலைக்குச் செல்வோருக்கு, குறைந்தது தினத்துக்கு நானூறு ரூபாய் சம்பளம். கட்டிடத் தொழிலாளியின் கூலி தினமும் நானூறு ரூபாய் எனில், விவசாயக் கூலிக்கும் அந்த ஊதியம் வேண்டும் என்பதில் நியாயமுண்டு. அந்தக் கூலி தருவதற்கு, விவசாயியின் விளைபொருள்கள் அதற்கான விலையில் விற்கப்பட வேண்டும்தானே! நியாயமான விலை தேங்காய்க்கு இருபது ரூபாய் விவசாயிக்கு எனில் சந்தையில் நூறு ரூபாய்க்கு விற்பார்கள். அதில் நமக்கு சம்மதம் இருக்காது. உடனே நாம் விலைவாசி உயர்வுப் போராட்டம் நடத்துவோம், ஆனால், இடைத் தரகர்களை, வணிகர்களைக் கேள்வி கேட்க மாட்டோம். அல்லது கொப்பரை, எண்ணெய் என இறக்குமதி செய்வோம்.

சாகித்ய அகாதமி விருது பெற்று, 2011 பிப்ரவரியில் சக இந்திய எழுத்தாளர்கள் மத்தியில் புதுதில்லியில் நான் ஆங்கிலத்தில் ஆற்றிய உரையில் குறிப்பிட்டேன், 'விவசாயிகள்

வாழத் தகுதி இல்லாத நாடாக இந்தியா ஆகி விட்டது' என்று. பிற மொழி எழுத்தாளர்கள் எழுந்து நின்று கைதட்டினார்கள்.

> ஒரு தரமான தேங்காய்க்கு விவசாயி ஐந்து ரூபாய் விலை பெறும்போது, கடையில் ஏன் அதை இருபத்தைந்து ரூபாய்க்கு வாங்க வேண்டும் என்ற கேள்வி நமக்குக் கிடையாது.

இன்றைய இந்திய மோசடி வணிகச் சூழலில் விவசாயி வாழ வேண்டுமானால், வணிக உலகம் புரியும் அத்தனை மாய்மாலங்களையும் அவனே செய்ய வேண்டும். பக்காப் படிக்கு முக்காப்படி அளக்க வேண்டும். சொத்தையையும் நசுங்கலையும் அழுகலையும் விற்க வேண்டும். முதல் தரம் என்று கூவி மூன்றாம் தரம் தள்ளி விட வேண்டும். கலப்படம் செய்ய வேண்டும். 'எவன் எக்கேடு கெட்டுப் போனால் என்ன, நோய்ப்பட்டுச் செத்தால் என்ன, கை கால், மூளை செயலற்றுப் போனால் என்ன, தன் பை நிறைந்தால் போதும்' என்று எண்ண வேண்டும்.

தீப்பேறு என்னவெனில், அது அவனால் இயலாது என்பதே! அதற்கான தொழில்நுட்பம் தெரியாது. வஞ்சனை தெரியாது. தரகருக்கும் வணிகருக்கும் வழங்கப்பட்டிருக்கும் அரசியல் ஆதரவும் இல்லை. வேறு என்னதான் செய்யலாம்? கூட்டம் கூட்டமாகத் தற்கொலை செய்யலாம். ஊடகங்கள் நிபுணர்களை அழைத்து விவாதங்கள் நடத்துவார்கள். அறிஞர்கள் கட்டுரை எழுதுவார்கள். அரசியல் கட்சிகள் ஆர்ப்பாட்டம் செய்யும். பிறகென்ன? மறுபடி அவர்களுக்கு வேறு செய்தி, வேறு விவாதம், வேறு ஆர்ப்பாட்டம்.

பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக்கழகத் துறைகள், பட்டிமண்டப மேடைகள், கருத்தரங்குகள் யாவும் உழவன் பெருமையைப் பேசும். அவனுக்காகக் கண்ணீர் சிந்தும். அனைத்து மத்திய, மாநில நிதிநிலை அறிக்கையிலும் 'விவ

சாய மேம்பாடு' பற்றி ஒரு பத்தி வாசிக்கப்படும். 'சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம்' என்றும் 'உழுவார் உலகத்தார்க்கு ஆணி' என்றும் 'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்' என்றும் திருக்குறள் மேற்கோள் காட்டப்படும்.

வெட்டுப்படப்போகும் ஆட்டுக் கடாவைக் குளிப்பாட்டி, சந்தனம், குங்குமம், திருநீறு அப்பி சாமி சந்நிதானத்தில் நிப்பாட்டித் தழையைக் கடிக்க நீட்டுவதைப் போல, கொலைக் களத்தில் நிறுத்தப்பட்டிருக்கிறது இந்திய விவசாயம். 'விவசாயம் இல்லாவிட்டால் என்ன, இறக்குமதி செய்துகொள்ளலாம்' என்று நினைக்கிறது அறிவுலகம். அல்லது உணவுப் பொருட்களை இணையத்தில் இருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளலாம் என்று நினைப்பார்கள் போலும்.

எதற்கு விவசாய நிலம், எதற்கு விவசாய நீர் ஆதாரங்கள், எதற்கு விவசாயி? அவன் செங்கல் சுமக்கவும் பெயின்ட் அடிக்கவும் சாலைப் பணிகளுக்கும் போவான். அவன் பெண்டிர் உணவு விடுதிகளில் தட்டுக் கழுவலாம். நமது அரசியல்காரர்களுக்கும் 'கர்நாடகமே தண்ணீர் தா', 'ஆந்திரமே தண்ணீர் தா', 'கேரளமே தண்ணீர் தா' என்று இரந்து கூவி தொண்டைப் புண் ஏற்படாது.

நமக்குத் தாராளமாக செல்போன், வாட்ஸ் அப், ட்விட்டர், ஃபேஸ்புக், வெப்சைட் சேவைகள் உண்டு. மெயிலில் ஆர்டர் செய்தால் ஃபிளாட் கதவைத் தட்டுவார்கள் பீட்சா, பர்கர், புரோட்டா, சப்பாத்தி, பிரியாணி, குளிர்பானங்கள் கொண்டு வந்து. நமது சந்ததியினர் அரிசி காய்க்கும் மரம், வாழைப்பழம் காய்க்கும் கொடி, ஆப்பிள் ஆரஞ்சுக் கிழங்குகள் காய்க்கும் புதர் எனத் தேடித் திரிவார்கள்.

அருங்காட்சிக் கூடங்களில், கண்ணாடிக் கூண்டுக்குள் கறுப்பாகக் குள்ளமாக இரு ஆண் பெண் உருவங்களை, இலை தழை ஆடைகளுடன் பழங்குடிகள் என்று நிறுத்தி வைத்திருப்பார்கள். எதிர்காலத்தில் வேட்டி உடுத்து, தலையில் துண்டு கட்டிய ஆணையும்... பிரா, பிளவுஸ் போடாத கண்டாங்கி உடுத்த பெண்ணையும் கையில் மண்வெட்டி, பன்னருவாள், கூடை எனக் கொடுத்து கண்ணாடிக் கூண்டுக்குள் நிறுத்தி 'விவசாயி' என எழுதி வைப்பார்கள். நமது சந்ததியினர் பார்த்து நிற்பார்கள், பிழைக்கத் தெரியாமல் அழிந்து போன இனம் என்று வியந்து!

**- கற்போம்...**

# கைம்மண் அளவு

அராஜகம் எனும் சொல், ‘ராஜ்யம்’, ‘ராஜகம்’ எனும் சொற்களின் எதிர்மறைப் பிறப்பு. ‘ஒரு தேசமானது அரசியல் அற்றிருத்தல்’ என்று பொருள் தருகிறது பேரகராதி. அதாவது, அரசியலே நடக்கவில்லை, அரசாட்சி நடக்கவில்லை என்பது பொருள். அரசாட்சி என்றால் ‘அறம் பிறழாத நல்ல ஆட்சி’ என பொருள்படும். ‘அரைசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாவதூஉம்’ என்கிறது சிலப்பதிகாரம். ‘அரசியலில் பிழை செய்தால் அறமே எமனுமாகும்’ என்பது பொருள். அராஜகம் என்பது அரச நீதிக்கு எதிரான செயல் என்று பொருள் கொள்ளலாம். ஒரு காலத்தில் அராஜகம் என்ற சொல் இறை முறை பிழைத்த அரசுக்கு எதிரான கோஷமாக ஒலிக்கப்பட்டு வந்தது. பெரும்பாலும் பொதுவுடைமைக் கட்சி மேடைகளிலும் ஊர்வலங்களிலும் ஆர்ப்பாட்டங்களிலும் மறியல்களிலும்.

**நாஞ்சில் நாடன்**

ஓவியம்:
**மருது**



அயற்சொல் அகராதி ‘அராஜகம்’ எனும் சொல்லுக்கு வன்முறை, வன்செயல், அல்லரசகம் என மூன்று பொருட்கள் வழங்கும். அல்லரசகம் எனில் அரச நீதி இல்லாத ஆட்சி எனலாம். அதைத்தான் ராமலிங்க வள்ளலார், ‘கருணை இலா ஆட்சி கடுகி ஒழிக’ என்றார் போலும். நாற்றம் எனும் சொல் ஒரு காலத்தில் நறுமணம் என்று பொருள் தந்தது. ‘கருப்பூரம் நாறுமோ, கமலப்பூ நாறுமோ’ என்றாள் ஆண்டாள். இன்றோ நாற்றம் எனில் கெட்ட வாடை என்பது பொருளாயிற்று. அரசாட்சி என்ற சொல்லும் அவ்விதமே திரிந்து பட்டது போலும்.

அரசாட்சியோடு மட்டும் நிறுத்திவிடாமல், இன்று நீதிக்கும் நேர்மைக்கும் அறத்துக்கும் ஒழுங்குக்கும் அமைதிக்கும் எதிரான எச்செயலையும் நாம் அராஜகம் என்றே சொல்லிவிடலாம். எல்லோருமே, ‘செல்லும் இடத்து மட்டும் சினம் கொள்வது’ போல, இன்று அராஜகம் செயல்படுத்த யோசிப்பதில்லை. கத்தியால் குத்துவது, ரத்தம் பீறிட அரிவாளால் வெட்டுவது, உருட்டுக் கட்டையால் மண்டை பிளப்பது மாத்திரமே வன்முறை அல்ல. சக மனிதனுக்கு எதிரான, தன்னலம் கொப்பளிக்கும் எந்தச் செயல்பாடும் அராஜகம்தான்.

அரசு இயந்திரத்தின் உச்சாணிக் கொம்பில் இருப்பவர் மட்டுமே அராஜகம் செய்ய இயலும் என்பதும் இல்லை. அரசு இயந்திரத்தின் கடைநிலை ஊழியன் வரை அராஜகம் செய்ய இயலும். ஏதாவது காரியத்துக்காக அரசாங்க அலுவலகம் நுழைய நேர்ந்தவர் இதை உணர்வார்கள். ஒரு காலத்தில் போலீஸ் ஸ்டேஷன் நுழைவதே மக்களுக்கு மானப் பிரச்னை. இன்று அதை எந்த அரசு அலுவலகத்துக்கும் பொருத்திப் பார்க்கலாம்.

வாழ்க்கையின் கடைங்காணியில் ஓராண்டு முன்பு, கோவையில் சொந்த வீடு கட்டினேன். அனைத்து அனுமதிகளும் முறையாகப் பெற்றேன். குடிநீர் இணைப்புக்குக் கட்டணம் செலுத்தி, எட்டு மாதம் காத்திருந்து ஆணையும் பெற்றேன். இணைப்பு தருபவர்கள், மாநகராட்சியின் ஒப்பந்தக்காரர்கள். அவர்கள் கட்டணம் தனி. இணைப்பு தருவதற்கான வேலை நடந்து கொண்டிருக்கும்போது மூன்று நபர்கள் வந்து “வேலையை நிறுத்துங்க” என்றனர். “எழுத்து மூலம் ஆணை இருக்கு. எதுக்கு நிறுத்தணும்?” என்றேன். “அதெல்லாம் தெரியாதுங்க... உடனே வேலையை நிறுத்துங்க!” என்றார்கள். நாம் வேறென்ன செய்ய இயலும்!

“சரிங்க! உங்க பேரு, பதவி

மாத்திரம் சொல்லுங்க'' என்றேன்.

''எதுக்கு? கம்ப்ளெயின்ட் பண்ணவா?'' என்றார்கள்.

"மாநகராட்சிக்குத் தகவல் சொல்லாண்டாமா?" என்றேன்.

ஒப்பந்தக்காரரர் அவர்களைத் தனியாகக் கூட்டிப் போய்ப் பேசி அனுப்பி வைத்தார். கண்டிப்பாகக் காசு கொடுத்திருப்பார். விசாரித்தபோது சொன்னார்கள், 'ஆறு நாட்களுக்கு ஒரு முறை, ஒன்றே முக்கால் மணி நேரம், மிகக் குறைந்த அழுத்தத்தில் தண்ணீர் திறந்து விடுகிறவர்கள் அவர்கள்' என்று. மாநகராட்சி உயரதிகாரிகளுடன் ஒரே மேடையைச் சில முறை பகிர்ந்து கொண்டவன் நான். ஆனால் அடிமட்டத்து ஊழியர் ஒருவர் காசு ஒன்றைக் கருதி, நம் கண்ணில் விரல் விட்டு ஆட்ட முடிகிறது. இது எந்த வகையிலான அரசாட்சி?

வட மாநிலங்களில் கடைவாயில் வெற்றிலைச் சாறு ஒழுக, கண்கள் கன்றிச் சிவந்திருக்க, சபாரி உடையில் ஒருவரைச் சந்தித்தால், அவரை அரசு அதிகாரி என்று சொல்லிவிடலாம். அண்மையில் நண்பர் ஒருவர் கேட்டார், ''நல்ல அதிகாரியா, ஊழல் ஆத்மியா என்று எப்படிக் கண்டுபிடிப்பது?"

**ஒருகாலத்தில் போலீஸ் ஸ்டேஷன் நுழைவதே மக்களுக்கு மானப் பிரச்னை. இன்று அதை எந்த அரசு அலுவலகத்துக்கும் பொருத்திப் பார்க்கலாம்.**

சொன்னேன், ''எவன் 'வாய்யா, போய்யா' என்று அலுவலகத்தில் விண்ணப்பம் கொண்டு வருபவரை ஒருமையில் விளிக்கிறானோ, எவன் எப்போதும் கோபத்துடனும் மூர்க்கத்துடனும் பேசுகிறானோ, எவன் இறுகிக் கனத்த முகத்துடன் கடுகடுக்கிறானோ, அவன் ஊழல் ஆத்மி!" என்று.

அரசு அலுவலகங்களில், 'காசு போனால் போகட்டும்... காரியம் விரைந்து நடந்தால் போதும்' என்று கருதுபவர்கள், நாம் மேற்சொன்ன அடையாளங்கள் கொண்ட அலுவலரை அணுகுவது சிறப்பு. கடுப்பைச் சார்ந்து ரேட்டும் அதிகமாக இருக்கும். எந்த அரசு அலுவலகத்திலும், நியாயமானதோர் கோரிக்கையுடன் ஒரு அலுவலர் மேசை முன் போய் நின்றால், அவர் உம்மை நிமிர்ந்து பார்க்க இருபது நிமிடங்கள் ஆகும். அத்

தனை தீவிரமாக வேலை செய்வதாக நாம் எடுத்துக்கொள்ள வேண்டுமாம்.

அமைச்சர்கள் சம்பாதிக்கிற போது, 'அவுனுக்கு நாமென்ன கொறஞ்சவனா அறிவிலே, சாமர்த்தியத்திலே?' என்று உயரதிகாரிகள் சம்பாதிக்கிறார்கள். அதே நோக்கில் கீழ் அதிகாரிகளும் எழுத்தர்களும் கடைநிலை ஊழியர்களும் அராஜகம் செய்கிறார்கள். இன்று மகத்தான மனிதன் என்று சகலரும் கொண்டாடும் அப்துல் கலாமே உயிரோடு வந்து தலைமுடியை வெட்டி, மீசை வைத்துக்கொண்டு, வேட்டி சட்டையில் போய் அரசு அலுவலகத்தில் நின்றால் என்ன சொல்வார்கள் தெரியுமா? 'என்னய்யா? என்ன வேணும்? அதெல்லாம் முடியாது! சந்திர மண்டலத்துக்குப் போக விசா வச்சிருக்கியா? போ, போ... ஒரு வாரம் கழிச்சு வா' என்பார்கள். இது அவர்கள் உபசாரம். சபரிமலை ஐயப்பனிடம் சிற்றன்னை, தகப்பனின் நோய் மாற்ற புலிப்பால் கொண்டு வரச் சொன்னது போல் சான்றுகள், ஆவணங்கள் கேட்பார்கள். கலாம் என்ன... கடவுளரே வந்தாலும் கதை அதுதான்.

காசு நிறையக் கொடுப்பதாக இருந்தால் இருப்பவனைச் செத்தவன் என்று சான்றிதழ் வாங்கலாம். வெட்டாத கிணற்றுக்கும் வாங்காத பசுவுக்கும் கடன் வாங்கலாம். ஆற்றை, குளத்தை, கடற்கரையை, சுரங்கத்தை, குன்றை பட்டா போட்டு வாங்கலாம். ஏன், தஞ்சை பெரிய கோயிலை, குற்றால அருவியைக் கூட பட்டா போட்டு வாங்கலாம். ஆனால், அனைத்து ஆவணங்களும் சரியாக வைத்திருந்தாலும் ஒரு ரேஷன் கார்டு வாங்க இயலாது, காசு கொடுக்காமல்! நான் சொல்வதில் சந்தேகம் இருந்தால் முயன்று பாருங்கள். தோற்றுப் போவீர்கள்!

எனது வீட்டு மனையைத் தொண்ணூறுகளின் துவக்கத்தில் வாங்கினேன். எனக்கு விற்றவர் நர்மதா பதிப்பகம் ராமலிங்கம். பத்திரத்தில் மனை எல்லை குறிப்பிடும்போது மனை 27க்கும் மேற்கே என்பதற்குப் பதிலாக, மனை 28க்கும் மேற்கே என்று எழுதி விட்டிருந்தனர். திருத்தல் பத்திரம் போடாமல் அனுமதிகள் வாங்க இயலாது என்றனர். எனது வழக்கறிஞர் நண்பர்கள் சொன்னார்கள், "மனையை உங்களுக்கு விற்றவர் மீது வழக்கொன்று தொடர்ந்தால் சாதகமாகத் தீர்ப்பு வரும், அது போதும்" என்றார்கள். நீதிமன்றத்தில் வழக்கு என்றால், நமது போதாத காலம்... தீர்ப்பு வர கால் நூற்றாண்டு ஆகிவிடும். தொண்ணூறு வயது வரை

நான் இருக்கவா போகிறேன்?

ரியல் எஸ்டேட் நண்பர் ஒருவர் சொன்னார், “ஒண்ணும் பிரச்னை இல்ல சார். மூலப் பத்திரத்தைத் திருத்திடலாம். நம்மகிட்ட எக்ஸ்பர்ட்ஸ் இருக்கிறாங்க!”

வேறொரு நண்பர் சொன்னார், “அதெல்லாம் வேண்டாங்க... மனைப் பத்திரத்தை மொதல்ல ஜெராக்ஸ் எடுங்க. அதுல 28 என்பதை 27ன்னு திருத்திரலாம். அதுக்கெல்லாம் நம்மட்ட ஆளிருக்கு. திருத்தப்பட்ட ஜெராக்ஸை பிறகு ஜெராக்ஸ் எடுத்து விண்ணப்பத்துடன் சேர்த்துருங்க...”

மிக எளிய வழிகள்தான். எனினும் தவறு! “அதிகாரபூர்வமாகவே திருத்தல் பத்திரம் போட்டு விடலாம்” என்றார் விஜயா பதிப்பகத்து அண்ணாச்சி. திருத்தப் பத்திரத்துக்கு 95 ஆயிரம் ரூபாய்க்கு ஸ்டாம்ப் ட்யூட்டி கட்ட வேண்டும் என்றார்கள். அது நிலம் வாங்கிய தொகைக்கு ஒன்றரை மடங்கு. பிறகு பத்திரப் பதிவு நிபுணர்களின் ஆலோசனை பெற்று, முறையாக, சட்டப்படி, சின்ன செலவில் செய்து முடித்தோம். திருத்தப் பத்திரத்தில் கையெழுத்து போட, எனக்கு மனை விற்ற நர்மதா ராமலிங்கம் சென்னையிலிருந்து சொந்த செலவில் வந்து போனார். ஒரு எழுத்தாளனுக்காக இதைச் செய்வதாகச் சொன்னார். பத்திரப் பதிவு முடிந்த பிறகு, சார்பதிவாளர் கை குலுக்கி, தேநீர் வாங்கிக் கொடுத்து, மகிழ்ச்சி பொங்கக் கூறினார், “எம் மகன் உங்க தீவிர வாசகனுங்க... ஷெல்பு பூரா உங்க பொஸ்தகம்தான் வாங்கி அடுக்கி வச்சிருக்கான்!” என்று. கேட்க மகிழ்ச்சியாக இருந்தது. கூடவே, குறுக்குச் சால் ஓடியது மனதில், “நண்பா, ஒரு எழுத்தாளன் என்றறிந்த பின்பும் என் தொடைக் கறியில் ஒரு பங்கு பெற்றாயே!” என்று.

தாயும் பிள்ளையும் என்றாலும் வாயும் வயிறும் வேறுதானே! எங்கள் ஊரில் சொல்வார்கள், செத்துப் போன பிள்ளையைப் புதைக்கக் கொடுத்தால் அதிலும் பாதிப்பிள்ளை எடுத்துக்கொள்வார்கள் என்று. சொந்த மகன்

**காசு நிறைய கொடுத்தால் தஞ்சை பெரிய கோயிலை, குற்றால அருவியைக் கூட பட்டா போட்டு வாங்கலாம். ஆனால், அனைத்து ஆவணங்களும் சரியாக வைத்திருந்தாலும் ரேஷன் கார்டு வாங்க இயலாது.**

அல்லது மகளிடமும் காரியம் செய்து கொடுக்கரேட் பேசுவார்கள் போலும்.

அண்மையில் தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர்கள், கலைஞர்கள் சங்க புத்தக வெளியீட்டு விழாவுக்கு தேனி போயிருந்தேன். நண்பர் ம.காமுத்துரை சிறுகதைத் தொகுப்பு, 'புழுதிச் சூடு' வெளியீட்டு விழா. எனக்கு அவசரமாக, 'கைம்மண் அளவு' தொடரின் 43வது வாரக்கட்டுரை குங்குமத்துக்கு அனுப்ப வேண்டி இருந்தது. நண்பர் பொன்முடி ஏற்பாடு செய்திருந்த தங்கும் விடுதியில் அவருடன் மதிய உணவு உண்ட பின் அவரை அனுப்பி விட்டு ஜெராக்ஸ் கடை தேடினேன். காவல் நிலையம் எதிரே ஒரு கடை இருந்தது. ஏ4 அளவுத்தாளில் என் கையெழுத்தில் கருப்பு மையில் ஆறு பக்கங்கள். "மூணு செட்" என்றேன்.

நகல் எடுத்துத் தந்தார் ஒரு அம்மையார். வாங்கிப் பார்க்கத் திகைப்பாக இருந்தது. மிக மங்கலான பதிவு. அதன் மீது முகப்பவுடர் தடவியது போல் மேலும் மங்கல். உளவுத்துறையால் மட்டுமே வாசிக்க இயலும். ''தெளிவா வாசிக்கும்படி ஒரு பிரின்ட்டாவது எடுத்துக் குடுங்கம்மா'' என்றேன். முகத்தைச் சுளித்துவிட்டு மேலும் மூன்று செட் எடுத்தார். செம்மையாக இருந்தது. "எவ்வளவுங்கம்மா?" என்றேன். "அறுபது ரூவா" என்றார். "என்ன கணக்கு" என்றேன். "ஆறு மூணு பதினெட்டு. பதினெட்டும் பதினெட்டும் முப்பத்தாறு காப்பி. காப்பிக்கு ஒண்ணார் ரூவா..." அப்போதும் ஐம்பத்தி நான்கு தான் வரும். மிச்சம் சேவை வரி போலும். "ஏம்மா... நீங்க தப்பா எடுத்த பிரின்ட்டுக்கு தண்டம் நான் கட்டணுமா?" என்றேன். "பேப்பர் செலவு இருக்குல்லா?" என்றார்.

எதிரே காவல் நிலையம் சென்று புகார் கொடுக்கலாம். ஒருவேளை அவர்கள் வந்து தர்மம் உணர்ந்து நியாயம் வழங்கலாம். எலியின் அராஜகத்துக்கு அஞ்சி, புலியின் அராஜகத்தினுள் நுழைவதும் ஆகலாம். சொல்வார்கள், 'மாப்பிள்ளை புடிச்ச காசு, பிள்ளை அழிக்க ஆச்சு' என்று. இந்த அராஜகத்தை என்னவென்று சொல்ல?

கோவையில் புகழ்பெற்ற உணவு விடுதி ஒன்றில் சாம்பார் வடை சாப்பிட்டேன். மும்பையில் அதனை வடா சாம்பார் என்பார்கள். எர்னஸ்ட் ஹெமிங்வேயின் நோபல் பரிசு பெற்ற நாவல் *Old man and the sea*-யை 'கடலும் கிழவனும்' என்றும், 'கிழவனும் கடலும்' என்றும் மொழிபெயர்த்ததைப் போல. கடைசிச் சொட்டு சாம்பாரையும் கரண்

டியில் வடித்தெடுத்தபின் பார்த்தால், தட்டின் மத்திய பாகத்தில் புதிய ஒற்றை ரூபாய் நாணயம் அளவுக்கு கரிய நிறத்தில். கரண்டியால் சுரண்டினேன். 'கரகர'வென சத்தம் வந்தது. விரலினாலும் தொட்டுப் பார்த்தேன். திருப்திப்படாமல், தம்ளரில் இருந்த தண்ணீரைக் கொஞ்சம் ஊற்றி, அலசி, மறுபடி தம்ளரில் வடித்தபின் பார்த்தேன். துருவே தான். கடுப்புடன் எச்சில் தட்டை எடுத்துக்கொண்டு, பில்லுக்குப் பணம் வாங்குபவர் மேசை மேல் கொண்டு வைத்தேன். சாம்பார் வடைக்கு முப்பத்தைந்து ரூபாய் வாங்குகிறவர்கள். இனாமாக நாம் சாப்பிடுவதில்லை.

பதற்றமும் கோபமுமாக "என்னங்க இது?" என்றார். "நீங்களே பாருங்க" என்றேன். உற்றுப் பார்த்தவருக்குத் தெரியாமலா போகும். "சாரி சார்... மாத்தச் சொல்றேன்" என்றார். ஆயிற்றா? இரும்புத் துருவில் ஊறிய சாம்பாரைச் சுரண்டி எத்தனை பேர் குடித்தார்களோ? இதுபோல் எத்தனை தட்டுக்களோ? 'எவன் கேக்கறதுக்கு இருக்கு' என்ற அலட்சியம் தானே! உணவு விடுதி முதலாளியை பேசக் கூப்பிட்டால் சுத்தம், சுகாதாரம் என்று ஆணித்தரமாகப் பேசுவார்தானே!

**எந்த அரசு அலுவலகத்திலும், நியாயமானதோர் கோரிக்கையுடன் ஒரு அலுவலர் மேசை முன் போய் நின்றால், அவர் உம்மை நிமிர்ந்து பார்க்க இருபது நிமிடங்கள் ஆகும்.**

மொத்த சமூகமே ஒருத்தர் மீது மற்றவர் ஈவிரக்கம் இன்றிச் செய்யும் அராஜகமாக இருக்கிறது. தன் வாசலின் குப்பையைக் கூட்டி அடுத்தவர் வாசலில் தள்ளுவதில் தொடங்குகிறது இது. பாலில் கலப்படம் செய்பவர் பிள்ளைக்கு நோய் வந்தால் மருந்தில் கலப்படம் செய்து கொடுக்கிறார். மருந்தில் கலப்படம் செய்தவர் வீடு கட்டினால் வீடு கட்டும் ஒப்பந்தக்காரரர் கலப்படம் செய்கிறார். ஒப்பந்தக்காரரர் பிள்ளைகளின் கல்வியில் கல்வித் தந்தையர் கலப்படம் செய்வார். பள்ளிக்கூடம் நடத்துபவர் பிள்ளைகளின் உணவில் வியாபாரி கலப்படம் செய்வார். வியாபாரி கடையில் சுகாதாரம், எடைப் பரிசோதனை, தொழிலாளர் நலம், விற்பனை வரி என ஆய்வு செய்ய வரும் அரசு அதிகாரி அராஜகம் செய்வார். அரசு

அதிகாரம் செய்யும் அலுவலர் பிள்ளைகளிடம் டாஸ்மாக் கலப்படம் செய்யும். இப்படி நீள்கிறது நமது அராஜகங்களின் தொடர்ச்சி.

'ஆற்றங் கரையின் மரமும் அரசறிய வீற்றிருந்த வாழ்வும் விழும் அன்றே!' என்கிறது 'நல்வழி.' எத்தகு பெருவாழ்வும் வீழ்ந்து போகும்! பிறகு எதற்குச் சேர்க்கிறார்கள்? கரை கடந்த புன்செல்வம். எத்தனை நீதி நூல்கள், சமய நூல்கள், ஆலய வழிபாடுகள், குலசாமிக்குப் பொங்கல், கடா வெட்டு? எதுவுமே உறைக்காதா மனதுக்கு?

ஔவையாரின் தனிப் பாடல் ஒன்று பேசுகிறது, 'எண்ணாயிரத் தாண்டு நீரில் கிடந்தாலும் உண்ணீரம் பற்றாக் கிடையே போல்' என்று. 'எட்டாயிரம் ஆண்டு தண்ணீரில் கிடந்தாலும், உள்ளே ஈரம் பற்றாது கிடக்கும் பொருள் போல' என்று பொருள். சமூகத்துக்கு எதிராக அராஜகம் செய்து ஆயிரம் கோடிகள் ஈட்டி, பத்து கோடி தர்மம் செய்து கணக்கை நேர் செய்துவிடலாம் என்று நம்புகிறார்களே! சமகால வள்ளல்களும் ஆகிவிடுகிறார்களே ஐயா!

**அறிந்தும் அறியாதவர் போல் நடித்து, சமூகத்துக்கு அராஜகம் செய்து வாழ்வோர் சிறக்கத்தானே செய்கிறார்கள் என்று கேட்கிறார்கள் சிலர். எதுவும் பயனற்றுப் போவதில்லை, நல்வினையும் தீவினையும்!**

'அறிந்தும் அறியாதவர் போல் நடித்து, சமூகத்துக்கு அராஜகம் செய்து வாழ்வோர் சிறக்கத்தானே செய்கிறார்கள்' என்று கேட்கிறார்கள் சிலர். எதுவும் பயனற்றுப் போவதில்லை, நல்வினையும் தீவினையும்! அவசரப்பட்டு ஐந்தொகை போடாதீர்கள்! இன்றில்லாவிட்டால், நாளை தீர்ப்பு வரும்.

கண்ணிலும், கையிலும், சிரிப்பிலும், மெய்யிலும் தீத்தான் வைத்துக்கொண்டு இருக்கும் கடவுளை வழிபட்டால் போதும், தாம் செய்யும் வஞ்சகம், சூது, துரோகம், எல்லாவற்றையும் கண்டும் காணாமலும் இருந்துவிடுவான் என நம்புவது எத்தனை பெரிய அறியாமை. நக்கீரன் கேட்டான், 'சங்கு அறுப்பது எங்கள் குலம், சங்கரனார்க்கு ஏது குலம்?' என்று. அவர் சொன்ன சங்கு கடலில் விளையும் சங்கு. அராஜகவாதிகள் அறுப்பது கழுத்து எனப் பொருள்படும் சங்கு.

**- கற்போம்...**

# கைம்மண் அளவு

‘காவல்துறையில் மட்டும் உயர் அதிகாரிகளின் வீட்டில், கடைநிலை ஊழியக் காவலர்கள் இன்றும் தரை கூட்டிப் பெருக்கித் துடைக்கிறார்கள்; தோட்ட வேலை செய்கிறார்கள்; மீன் சந்தைக்குப் போகிறார்கள்; மேலதிகாரிகளின் சீருடைகளைத் துவைத்து உலர்த்தி தேய்த்து மடிக்கிறார்கள்; காலணிகளுக்குப் பாலீஷ் போடுகிறார்கள்’ என சினிமாக்களில் காட்சி வைக்கிறார்கள். ஒடுக்கப்பட்டோருக்கு உயிர் கொடுக்க என்றே உயிர் வாழும் தலைவர்கள் எவரும் இது பற்றி வாய் திறப்பதில்லை.

**நாஞ்சில் நாடன்**

ஓவியம்: மருது



*Magistrate, Judge, Justice* என்பன நீதிபதிகளின் பதவி அந்தஸ்து குறித்த சொற்கள். உயர் நீதிமன்ற, உச்ச நீதிமன்ற நீதிபதிகளை *Justice* என்பார்கள். 'நியமம்' எனில் சட்டம் என்றும் பொருள். அது வட சொல். 'நித்தம் நியமத் தொழிலராய் உத்தமர் உறங்கினார்கள், யோகியர் துயின்றார்' என்பார் கம்பர். நியாய சபை, நியாய ஸ்தலம், நியாயவாதி எனும் சொற்களும் வடமொழிதான். நீதி, நீதிகர்த்தா, நீதி நியாயம், நீதிமான், நீதி ஸ்தலம் எனும் சொற்களும் அவ்விதமே! எனில் 'நீதிபதி' எனும் சொல் எங்ஙனம் வடசொல் அல்லாது இருக்கக் கூடும்?

'நீதிபதி' எனில் நடுவர் என்று பொருள். நீதி எனும் சொல்லைத் திருத்தக்கதேவரின் 'சீவக சிந்தாமணி' கையாள்கிறது. நீதிபதி எனும் சொல்லைத் தமிழ்ப்படுத்துவதாகக் கருதி, அதனை 'நீதி அரசர்' என மாற்றினார்கள். அதற்குள்ளும் நீதி இல்லாமல் இல்லை. ஆனால் *Justice*, நீதிபதி என்று அழைப்பதற்கும் 'நீதி அரசர்' என்று விளிப்பதற்கும் வேறுபாடு உண்டு. சென்னைப் பல்கலைக்கழகத்து லெக்சிகனில், பேராசிரியர் அருளியின் அயற்சொல் அகராதியில், 'நீதியரசர்' எனும் சொல் பட்டியலிடப்படவில்லை.

எனது அச்சம் எதிர்காலத்தில் கட்டப்பஞ்சாயத்து நடத்தும் இனத் தலைவர்களும், தம்மை நீதி அரசர் என்று அழைத்துக்கொள்வார்களோ என்பது. அரசர், மன்னர், வேந்தர், ராஜா, மகாராஜா, சக்கரவர்த்தி எனும் ஆண்ட இனத்தைத் துறந்து மக்களாட்சிக்குள் புகுந்த நாம், இன்று நீதிபதி என்பதற்கு 'நீதியரசர்' என ஆள்வது விசித்திரமாக இருக்கிறது. நமது மற்றுமோர் கவலை, துறை சார் அமைச்சர்கள் எல்லோரும் இனி தங்களை உள்துறை அரசர், பாதுகாப்புத்துறை அரசர், நிதி அரசர், வெளியுறவுத்துறை அரசர் என்ற ரீதியில் அழைக்கத் தலைப்படுவார்களோ என்பது!

ஸ்ரீ, ஸ்ரீமான், ஸ்ரீமதி எனும் சொற்கள் நமக்கு உடம்பு அரிப்பு ஏற்படுத்தின. திரு, திருமதி என மாற்றிக்கொண்டோம். மிகப் பொருத்தமான மொழிமாற்றம். ஸ்ரீநிவாஸன் என்ற சொல்லையே நாலாயிரத் திவ்யப் பிரபந்தம் 'திருவாழி மார்பன்' எனப் பயன்படுத்தியது. எனது பக்கத்து ஊர், நம்மாழ்வாரின் அம்மை காரிப்பிள்ளை பிறந்த ஊர், நம்மாழ்வார் பாடிய பெருமாளின் ஊர், திருவண்பரிசாரம் என்று வழங்கப்பெற்ற திருப்பதிசாரம். அங்கு, திரு

**த**மிழர்களுக்கு பட்டம் வழங்கியும் பெற்றும் கொண்டாடும் மிகுமகிழ்ச்சி சொல்லத் தரமன்று. ஆனால், ஒரு சிறப்புப் பட்டத்தைத் தாங்கி நிற்கும் மனிதர் அதற்கான தகுதி உடையவராக இருக்க வேண்டும்.

மாலின் பெயர் திருவாழி மார்பன்.

மகா சந்நிதானங்களை ஸ்ரீலஸ்ரீ என்றார்கள் முன்னோர்கள். இன்று அது 'சீர் வளர் சீர்' அல்லது 'சீர் மிகு சீர்' எனவாயிற்று. பொருத்தம் கருதிய மகிழ்ச்சி நமக்கு. ஒரு காலத்தில் 'கனம் கோர்ட்டார் அவர்களே' என்ற பிரயோகம் இருந்தது. 'கனம் நீதிபதி அவர்களே' என்றும் சொன்னார்கள். 'கனவான்களே!' என்றார்கள். ராகங்களிலும் கன ராகங்கள் உண்டு. வேதம் ஓதுகிறவர்களில் 'கனபாடிகள்' இருந்தனர். கனம் எனில் பாரம், பருமன், பெருமை, செறிவு, திரட்சி, உறுதி, மிகுதி, கூட்டம், வட்டம், அகலம், மேகம், கோரைக் கிழங்கு, *Square*, *Cube* எனப் பல பொருள்கள்.

தமிழர்களுக்கு பட்டம் வழங்கியும் பெற்றும் கொண்டாடும் மிகுமகிழ்ச்சி சொல்லத் தரமன்று. ஆனால், ஒரு சிறப்புப் பட்டத்தைத் தாங்கி நிற்கும் மனிதர் அதற்கான தகுதி உடையவராக இருக்க வேண்டும். அல்லது தகுதியை வளர்த்துக்கொள்ள வேண்டும். சுமக்கிற கழுதைக்கு செங்கல் கட்டி ஆனாலும் தங்கக் கட்டி ஆனாலும் சுமை ஒன்றே என்பது போன்ற பேதமின்மை நன்றன்று.

'கலைமாமணி' என்றும் 'பத்மஸ்ரீ' என்றும் திரைப்படங்களில் டைட்டில் கார்டு போடும் பூரிப்பு இருக்கிறது. மேலும் டாக்டர் என்று பெயருக்கு முன் போடுவதும் மேடைகளில் கூவுவதும் மற்றொரு வியப்பு. எவர் மீதும் காழ்ப்பின்றி சொல்கிறேன், நமது சினிமாப் பிரபலங்களிடம்தான் எத்தனை வகையான திலகங்கள், எத்தனை தினுசு புரட்சிகள். காரல் மார்க்ஸுக்கே சலித்துப் போயிருக்கும்!

நொந்து பாடுகிறான் ஒரு புலவன், 'போர் முகத்தை அறி

தமிழர்களுக்கு பட்டம் வழங்கியும் பெற்றும் கொண்டாடும் மிகுமகிழ்ச்சி சொல்லத் தரமன்று. ஆனால், ஒரு சிறப்புப் பட்டத்தைத் தாங்கி நிற்கும் மனிதர் அதற்கான தகுதி உடையவராக இருக்க வேண்டும்.

மாலின் பெயர் திருவாழி மார்பன்.

மகா சந்நிதானங்களை ஸ்ரீலஸ்ரீ என்றார்கள் முன்னோர்கள். இன்று அது 'சீர் வளர் சீர்' அல்லது 'சீர் மிகு சீர்' எனவாயிற்று. பொருத்தம் கருதிய மகிழ்ச்சி நமக்கு. ஒரு காலத்தில் 'கனம் கோர்ட்டார் அவர்களே' என்ற பிரயோகம் இருந்தது. 'கனம் நீதிபதி அவர்களே' என்றும் சொன்னார்கள். 'கனவான்களே!' என்றார்கள். ராகங்களிலும் கன ராகங்கள் உண்டு. வேதம் ஓதுகிறவர்களில் 'கனபாடிகள்' இருந்தனர். கனம் எனில் பாரம், பருமன், பெருமை, செறிவு, திரட்சி, உறுதி, மிகுதி, கூட்டம், வட்டம், அகலம், மேகம், கோரைக் கிழங்கு, *Square*, *Cube* எனப் பல பொருள்கள்.

தமிழர்களுக்கு பட்டம் வழங்கியும் பெற்றும் கொண்டாடும் மிகுமகிழ்ச்சி சொல்லத் தரமன்று. ஆனால், ஒரு சிறப்புப் பட்டத்தைத் தாங்கி நிற்கும் மனிதர் அதற்கான தகுதி உடையவராக இருக்க வேண்டும். அல்லது தகுதியை வளர்த்துக்கொள்ள வேண்டும். சுமக்கிற கழுதைக்கு செங்கல் கட்டி ஆனாலும் தங்கக் கட்டி ஆனாலும் சுமை ஒன்றே என்பது போன்ற பேதமின்மை நன்றன்று.

'கலைமாமணி' என்றும் 'பத்மஸ்ரீ' என்றும் திரைப்படங்களில் டைட்டில் கார்டு போடும் பூரிப்பு இருக்கிறது. மேலும் டாக்டர் என்று பெயருக்கு முன் போடுவதும் மேடைகளில் கூவுவதும் மற்றொரு வியப்பு. எவர் மீதும் காழ்ப்பின்றி சொல்கிறேன், நமது சினிமாப் பிரபலங்களிடம்தான் எத்தனை வகையான திலகங்கள், எத்தனை தினுசு புரட்சிகள். காரல் மார்க்ஸுக்கே சலித்துப் போயிருக்கும்!

நொந்து பாடுகிறான் ஒரு புலவன், 'போர் முகத்தை அறி

யானைப் புலியே என்றேன்' என்று. எந்தப் போர்க்களத்தையும் அறிந்திராத மன்னனை, தனது தரித்திரம் காரணமாக பொருள் வேண்டிப் 'புலியே' எனப் பாடிய அவலம். கங்கை கொண்டான், கடாரம் வென்றான் எனும் குறிப்புகள் அந்தப் பகுதியை வெற்றி கொண்டதற்கான வரலாற்றுத் தடயங்கள். ஆனால் பராந்தகன், சோழாந்தகன், மதுராந்தகன் என்பன என்ன? அந்தகன் எனில் யமன் அல்லது கூற்றுவன். பிறர்க்கு எமன், சோழனுக்கு எமன், மதுரைக்கு எமன் என்று தம்மை அழைத்துக்கொண்டார்கள் தமிழ் மன்னர்கள் எனில் அவரை நாம் என்ன சொல்ல?

கவிச் சக்கரவர்த்தி என்ற சொல்லால் தமிழன் இன்று கம்பனை அடையாளப்படுத்துகிறான். கம்பன் அதற்குத் தகுதியானவன். அந்தப் பட்டத்தை எந்த மன்னனோ அல்லது கம்பனின் நற்பணி மன்றத்தார் எவருமோ வழங்கியதற்கான சான்றுகள் இல்லை. மன்னர்களும் ரசிக மன்றங்கள் பணம் வாங்கிக்கொண்டும் தராத பட்டத்தை மக்கள் கம்பனுக்குத் தந்தார்கள். அது அவர் வாழ்ந்த காலத்திலும் தரப்பட்டதல்ல. தொண்டர்களுக்கும் ரசிக மன்றத்தார்க்கும் சொல்லி ஏற்பாடு செய்து பெற்ற பட்டங்களைச் சுமந்து திரிபவர் காண நமக்கு இரக்கம் ஏற்படுகிறது.

சிறுகதை மன்னன், நாவல் சாம்ராட் போன்ற பட்டங்களை மாபெரும் எந்தப் படைப்பாளியும் எங்ஙனம் கூச்சமில்லாமல் அணிந்து திரிய இயலும், நாதசுரக் கலைஞர்களின் வாத்தியங்களில் தொங்கும் பதக்கங்கள் போல? 2009க்கான கலைமாமணி விருது பெற்றவன் இந்தக் கட்டுரையாளன். எனது லெட்டர்ஹெட்டிலோ, நான் பங்கேற்கும் எந்த விழா அழைப்பிதழிலுமோ இதை எவரும் கண்டிருக்க இயலாது. தருவது அவர்கள் சந்தோஷம். சுமந்து திரிவது நமது விருப்பம்.

சங்கத் தமிழ் இலக்கியப் பரப்பில் பலர் ஊர்ப்பெயரால் மட்டுமே அறியப்பட்டனர்... இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார், கள்ளிக்குடி பூதம் புல்லனார், உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் போன்று! சிலர் உடல் உறுப்புக்களால் அறியப்பட்டனர்... கருங்குழல் ஆதனார், நரி வெரூஉத் தலையார், நெடுங்கழுத்துப் பரணர் போல. சிலர் செய்த தொழிலால் பெயர் பெற்றனர்... மதுரைக் கணக்காயனார், மதுரை அறுவை வாணிகர் இளவேட்டனார், செய்தி வள்ளுவன் பெருஞ்சாத்தன்

எ

வர் மீதும் காழ்ப்பின்றி சொல்கிறேன், நமது சினிமாப் பிரபலங்களிடம்தான் எத்தனை வகையான திலகங்கள், எத்தனை தினுசு புரட்சிகள், காரல் மார்க்ஸுக்கே சலித்துப் போயிருக்கும்!

என. 'அறுவை' எனில் 'ஆடை' என்று பொருள்.

மாமூலனார், மூலங்கீரனார், ஐயூர் மூலங்கிழார் என்பார் பிறந்த நாளால் பெயர் பெற்றவர். சிலரோ அவர்கள் பாடிய பாடலால் பெயர் பெற்றவர்கள்... பாரதம் பாடிய பெருந்தேவனார், பாலை பாடிய பெருங்கடுங்கோ, வெறி பாடிய காமக்கணியார் என. சிலர் பெற்றார் பெயர் கொண்ட புலவர்... குன்னூர்க்கிழார் மகனார், காவிரிப்பூம்பட்டினத்துப் பொன் வணிகனார் மகனார் நப்பூதனார், அஞ்சியத்தை மகள் நாகையார் என. மேலும் சிலரோ தமது மரபால் பெயர் பெற்றவர்கள்... குறமகள் இளவெயினி, இடையன் சேந்தன் கொற்றனார், கடுவன் மள்ளனார் என்மனார் புலவ. இவர்களில் எவரும் தமது பட்டங்களால் அறியப்பட்டவரில்லை. எனினும் 2000 ஆண்டுகளாக வாழ்கிறார்கள்.

மலையாள மூத்த நடிகை ஒருவர் தமக்கு 'பத்மஸ்ரீ' விருது வழங்கப்பட்டபோது, "அதை வைத்துக்கொண்டு ரயில் பயணச்சீட்டு கூட வாங்க இயலாது" என்று மறுத்தார். அதெல்லாம் எப்படி வாங்குகிறார்கள் என்பதே பெரிய மர்மமாக இருக்கிறது! சில பட்டங்கள் சிலருக்கு மிகப் பொருத்தமாகவும் பட்டங்களுக்குப் பெருமை சேர்ப்பதாகவும் இருக்கிறது. ஒரேயொரு எடுத்துக்காட்டுச் சொன்னால் 'இசைஞானி'. சொல்வதில் நமக்குக் கர்வமும் உண்டு. மகாத்மா, மகாகவி, மொழிஞாயிறு, மகா மகோபாத்யாய என்றோ வழங்கப்பட்ட சொல்லுக்கும் பொருள் உண்டு. சொல்லப்பட்டவருக்கும் சிறப்பு உண்டு.

இன்று வழங்கிவரும் சில பட்டங்களைத் தவிர்த்துவிட்டுச் செல்கிறோம், பகை வந்து சேரும் என்பதால்; வீட்டுக்கு ஆட்டோ கூட வரக்கூடும்.

திரும்பத் திரும்ப ஔவை யாரைத்தான் தற்காப்புக்கு என அழைக்க வேண்டியது உள்ளது. ‘விரகர் இருவர் புகழ்ந்திடவே வேண்டும் விரல் நிறைய மோதிரங்கள் வேண்டும் - அரையதனில் பஞ்சேனும் பட்டேனும் வேண்டும் அவர் கவிதை நஞ்சேனும் வேம்பேனும் நன்று’ - இது வெண்பா. இரண்டு சொற்களுக்குப் பொருள் சொன்னால் போதும். விரகர் எனில் சாமர்த்தியசாலிகள், வல்லவர்கள், *Experts*. அரை எனில் இடுப்பு. தெரியாமல் இருந்தால் சொல்கிறேன். பஞ்சேனும் பட்டேனும் என்றால் பஞ்சாடை அல்லது பட்டாடை.

வல்லவர் இருவர் புகழ்ந்து மதிப்புரை, கட்டுரை எழுத வேண்டும். மேடைகளில் பாராட்டி முழங்க வேண்டும். படைப்பாளியின் செல்வ நிலை அல்லது பிரபலம் வேண்டும். விலை உயர்ந்த வாகனங்கள் வேண்டும். டிசைனர் ஆடைகள் வேண்டும். அவரது படைப்பு நஞ்சாக இருந்தாலும் கசப்பாக இருந்தாலும் அது நல்ல படைப்பு என்பார்கள். நான் சொல்வதல்ல இது. ஔவை சொன்னது. ஔவை சொல்லும் கவிதை எனும் சொல்லை ஒரு குறியீடாகக் கொள்ளலாம். அரசியலோ, சினிமாவோ, ஆயகலைகள் அறுபத்தி நாலுமோ... பொருத்திப் பார்த்துக்கொள்ளலாம்.

இன்று பதவி வகிக்கும் பலரையும் ‘மாண்புமிகு’ என்ற சிறப்புச் சேர்த்து விளிக்கிறார்கள். அமெரிக்க அதிபரை எவரும் ‘மிஸ்டர் பிரசிடென்ட்’ என அழைத்துவிட இயலும். நமது குடியரசுத் தலைவர், உச்ச நீதிமன்ற, உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதிகள், அவைத் தலைவர்கள், ஆளுநர்கள், மத்திய - மாநில அமைச்சர்கள் எவரையும் நாம் ‘மிஸ்டர்’ என்ற முன்னொட்டுடன் அழைத்துவிட இயலாது. மான நஷ்ட வழக்குப் போட்டு நம்மை சிறை புகச் செய்வார்கள். ஆனால், பலரின் மானமோ மௌனஸில் இருக்கிறது.

எனினும் அவர்கள் எல்லோரும் மாண்புமிகு, மாண்புடை, மாண்பமை மனிதர்கள். மனிதருள் மாணிக்கங்கள். இருந்துவிட்டுப் போகட்டும், நமக்கென்ன வழக்கு? ஆனால், இந்த மாண்பு என்பது என்ன? மாண்பு எனும் சொல்லுக்கு மாட்சிமை, அழகு, பெருமை, நன்மை என்பன பொருள். முன்பு ‘மாட்சிமை தங்கிய’ என்று பயன்படுத்தியதைத்தான் இன்று ‘மாண்புமிகு’ என்கிறோம். ஆனால், அந்த அடைமொழியால் விளிக்கப்படுகிறவர்கள் பலருக்கும் நாம்

**தொ**ண்டர்களுக்கும் ரசிக மன்றத்தார்க்கும் சொல்லி ஏற்பாடு செய்து பெற்ற பட்டங்களைச் சுமந்து திரிபவர் காண நமக்கு இரக்கம் ஏற்படுகிறது.

மேற்சொன்ன பொருள் ஏதும் பொருந்துமா என்பதே நமது ஐயம்.

மாண்பு என்பது பதவி அல்ல, தகுதி. முன்னாள் மாண்பு, இந்நாள் மாண்பு என்று இல்லை. ‘இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென் இல்லவள் மாணாக் கடை’ என்பது வாழ்க்கைத்துணை நலம் அதிகாரத்துக் குறள். ‘இல்லத்தலைவி மாண்பு உடையவளாக இருந்தால், அந்த இல்லத்தில் இல்லாதது எதுவும் இல்லை. அவள் பண்பில் குறைவுபட்டவளாக இருந்தால் அவ்வில்லத்தில் எதுவுமே சிறப்பாக இருக்காது’ என்று பொருள் கொள்ளலாம்.

திரு எனும் சொல் ‘சகல செல்வங்களும் பொருந்திய’ என்று பொருள் தரும். அது பொருட்செல்வம் மட்டுமே அல்ல. ‘திருமிகு’ என்றும் சொல்கிறோம். திருமிகு என்பதையும் தாண்டிய சொல் ‘மாண்புமிகு’. அது வெறும் புகழ்ச்சிச் சொல் அல்ல. சமகால இந்திய அரசியலில், இவ்விதம் மாண்புமிகு என அழைக்கப்படும் மனிதர்கள் பலரின் பின்னணியைக் கொஞ்சம் எண்ணிப் பாருங்கள். குற்றப் பின்னணி உடையவர்கள், இரு கை நீட்டியும் தரகர் மூலமும் புன் செல்வம் கூட்டிக் குவிப்பவர்கள், மக்கள் விரோதச் செயல்கள் செய்பவர்கள், வன்முறை தூண்டுபவர்கள், பிறன் மனை வேட்பவர்கள், தம் குடும்பத்துப் பணியே மக்கட்பணி என்று கருதுகிறவர்கள், பிறர் துன்பங்களுக்கு மூல வேராக இருப்பவர்கள்...

‘மாண்புமிகு’க்களில் விதிவிலக்குகள் இருக்கக்கூடும். அந்தச் சிலர் பலராகும்போதுதான், அந்தச் சொல்லுக்குப் பொருள் உண்டாகும்.

**- கற்போம்...**

# கைம்மண் அளவு

**நாஞ்சில் நாடன்**

ஓவியம்: **மருது**

‘சாப்பாட்டு ராமன்’ என்றும் ‘தின்னிப் பண்டாரம்’ என்றும் நம்மிடம் வசவுகள் உண்டு. “வயிறா... வண்ணான் சாலா..?” என்பார்கள். ‘சால்’ எனில் வெள்ளாவிப் பானை. உணவை சற்று அதிக அளவில் தின்பவரையும் விரும்பித் தின்பவரையும் சாப்பாட்டுக்கு ஆலாப் பறக்கிறவரையும் நோக்கிய வசவு அவை.



சரியாகச் சாப்பிடத் தெரியாதவனையும், போதுமான அளவு உண்ணாதவனையும் பார்த்து எமது பக்கத்தில் 'சூறும வயிற்றுவலிக்காரன்' என்பார்கள். அதாவது 'அவன் வயிற்றில் சீரணத் தொடர்பான நோய் உள்ளது, எனவே சரியாகச் சாப்பிட மாட்டான்' என்ற பொருளில். "கோழி மாதிரி கொறிக்காத லே!" என்பார்கள்.

உணவு என்பது உயிர்க்கு அமுது. 'பாரகம் அடங்கலும் பசிப்பிணி அறுக என ஆதிரை இட்டனள் ஆருயிர் மருந்து' என்பது மணிமேகலை. பசி என்பதோர் பிணி. முதலில் பிணி அகற்ற வேண்டும். 'தனியொருவனுக்கு உணவில்லை எனில் ஜகத்தினை அழித்திடுவோம்' என்று இன்று மேடைகளில் முழங்கினாலும் ஆயிரம் கோடி வைத்திருக்கிறான். பாரதியும் ஆங்காரமும். 'இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின் பரந்து கெடுக உலகியற்றியான்' எனும் வள்ளுவரின் ஆவலாதியும் எடுத்துப் பேச எளிதாக இருக்கிறது. 'உலகத்தை உண்டாக்கியவன் நாசமாகப் போகட்டும்' என்ற அவர் சாபம் பலிக்குமானால் நன்றாக இருக்கும். வள்ளலாரோ, 'வீடு தோறும் இரந்து பசி அறாது அயர்ந்த வெற்றரைக் கண்டு உளம் பதைத்தேன்' என்கிறார்.

வெறுமனே உடலை வளர்க்கிறானே என்பதற்கு வள்ளலார் சொல்லும் பதில், 'உடல் வளர்த்தார், உயிர் வளர்த்தாரே!' என்பது. ஔவையோ, 'ஈயென பல்லைக் காட்டி இரந்து தின்பது இழிவானது, ஆனால் அவர்க்கு இல்லை என்று சொல்வது அதனைவிட இழிவானது' என்கிறார்.

உணவை அலட்சியம் செய்கிறவர்கள், புறக்கணிக்கிறவர்கள், பாழ் செய்கிறவர்கள் பெரும் பாவிகள் என்பது நமது கணக்கு. ஆனால் இன்று திருமண விருந்துகளில் பரிமாறப்படுவனவற்றில் முக்கால்வாசி பாழானால் கூடப் பாதகமில்லை, தம் செல்வச் செழிப்பு உணரப்பட வேண்டும் என்று கருதுகிறார்கள். நம்மீது உணவு மூலம் செலுத்தப்படும் அராஜகம் இது. செல்வந்தரைப் பார்த்து நடுத்தர வர்க்கமும் கெட்டுப் போனார்கள். ஏற்கனவே அது பற்றி எல்லாம் நிறைய நான் எழுதியாயிற்று.

உணவை அனுபவிப்பதற்கு பசியே முக்கியமான தேவை. அது செட்டிநாட்டுச் சமையலா, நாஞ்சில் நாட்டுச் சமையலா, கொங்கணமா, கத்தியவாரியா என்பதல்ல. நியூஜெர்ஸியில் போய் நின்றுகொண்டு தயிர் சாதமும் மோர் மிளகாயும்

இன்று திருமண விருந்துகளில் பரிமாறப்படுவனவற்றில் முக்கால்வாசி பாழானால் கூடப் பாதகமில்லை, தம் செல்வச் செழிப்பு உணரப்பட வேண்டும் என்று கருதுகிறார்கள். நம்மீது உணவு மூலம் செலுத்தப்படும் அராஜகம் இது.

தேடுகிறவரை நாம் பொருட்படுத்த வேண்டியதில்லை. பசி, வயிற்றில் இருக்க வேண்டும். அது மூளையிலோ, கால் முட்டியிலோ இருந்தால் உணவை அனுபவிக்க இயலாது. எத்தனை ஐட்டம் என்பதல்ல காரியம். அதை எவ்விதம் சுவைபடச் செய்தார்கள் என்பது முக்கியம். சமைப்பவர்களின் அன்பு மனத்தில் இருந்து விரல் வழியாகப் பதார்த்தத்தில் இறங்கும்போது, அதற்குப் பசும் நெய்யும் வேண்டாம்; பஞ்சாபின் பன்னீரும் வேண்டாம்.

இருபத்தைந்து ஆண்டுகள் இருக்கும். சேலத்துக்கு தம்பி வீட்டுக்குப் போயிருந்த என்னை நண்பர் சிபிச்செல்வன் இரவு விருந்துக்கு அழைத்தார். அவர் ஊரான பெரிய கொல்லப்பட்டி சேலத்தில் இருந்து 25 கி.மீ. ஆட்டையாம்பட்டி, மல்லசமுத்திரம் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? அதன் பக்கம். டி.வி.எஸ் 50 வண்டியின் பின் சீட்டில் உட்கார்ந்து எனக்கு முதுகுவலி வந்துவிட்டது. சிபிச்செல்வனின் அம்மா, வீட்டுக்கு வெளியே, மிகப்பெரிய ஆலமரம் அருகே கூட்டப்பட்டிருந்த அடுப்புகளில் சமைத்துக் கொண்டிருந்தார். கொதிக்கக் கொதிக்க புழுங்கலரிசிச் சோறு. பச்சை மொச்சையும் பிஞ்சுக் கத்தரிக்காயும் போட்ட கூட்டு போன்ற குழம்பு. இன்று அதை நினைவு வைத்துப் பேசுகிறேன் என்றால், சுவை எப்படி இருந்திருக்கும்?

நான்கு வேளை செல்வ உணவை உண்பவருக்கும், பசியற்றவருக்கும், உண்டபின் சீரண மாத்திரை சாப்பிடுகிறவருக்கும், இதய நோய், சர்க்கரை நோய், ரத்த அழுத்த நோய் எனச் செல்லம் கொஞ்சுகிறவருக்கும், சமூகம் விருந்துகள் மூலம் பல வண்ணங்களில் - வடிவங்களில் - வாசனைகளில் உணவை வாரிக் கோரித் திணிக்க முயல்

கிறது. ஏழைகளை, இரப்பாளிகளைக் கடைசி வரை காக்க வைத்து, மிச்சம் மீதியைக் கலந்து போடுகிறது. அதை தர்மம் எனப் பீற்றி கர்வமும் கொள்கிறது. இலைகளில் வீண் செய்யப்பட்டு, பேரல்களில் சேமிக்கப்பட்டு, பன்றிகளுக்குப் போகும் செல்வச் சிறப்புடைய உணவு, பாவி வயிறுகளுக்குப் பசியாறப் பாய்வதில்லை. இதனைச் செய்பவர்கள் பலர் வள்ளல்கள், சமூகக் காவலர்கள், தந்தைகள், அருளாளர்கள் என்று பட்டம் சூட்டப்பட்டவர்கள். அதனை எண்ணும்போது நமக்கு வயிறு காந்துகிறது, பத்து பச்சை மிளகாய் கடித்துத் தின்றவன் போன்று!

ஆடம்பர உணவு விடுதிகளில் தாறுமாறாக ஆர்டர் செய்து, தின்ன முடியாமல் பாதிக்கு மேல் மிச்சம் விட்டுச் செல்கிறவர்கள் உண்டு. மீந்ததைக் கட்டித் தரச் சொல்லி எடுத்துப் போகிறவர்களும் இருக்கிறார்கள். அதை அவர்கள் அடுக்ககத்தின் காவலாளிக்கு, வளர்க்கும் நாய்க்கு, தெரு நாய்க்குத் தரலாம். குளிர்சாதனப் பெட்டியில் வைத்து மறுநாள் சூடு செய்தும் சாப்பிடலாம். எப்படியும் பாழாய்ப் போவது பசுவின் வயிற்றில்.

பெரிய செலவில், அரிய உணவு வகைகளை ஆடம்பரமாகப் பரப்பி விருந்து நடத்துவதைக் கொடை என்றும் கருதுகிறார்கள். ‘வறியோர்க்கு ஒன்று ஈவதே ஈகை மற்றெல்லாம் குறியெதிர்ப்பை நீரது உடைத்து’ என்கிறார் வள்ளுவர். இல்லாப்பட்டவனுக்குக் கொடுப்பதே ஈகை. நண்பருக்கும், சுற்றத்தார்க்கும், அரசியல் - சினிமா பிரபலங்களுக்கும், சமூக அந்தஸ்து மிக்காருக்கும், தொழிலதிபருக்கும் கொடுப்பது ஈகை அல்ல. அவர்களிடம் இருந்து வேறெதுவோ எதிர்காலத்தில் எதிர்பார்த்துக் கொடுப்பதைப் போன்றது. எடுத்துக்காட்டுச் சொன்னால், மாதச்சீட்டு நடத்துகிறவன், சீட்டு வட்ட இறுதி ஆன உடன், சீட்டில் புள்ளிகளாக இருந்தவருக்கும் இருப்பவர்க்கும், இருப்பார்கள் என்று எதிர்பார்ப்பவருக்கும், மட்டன் பிரியாணி போடுவதைப் போன்றது ஈகை ஆகாது. அஃதோர் வணிக உத்தி. வியாபாரிகள் தம் வீட்டுக் கல்யாணங்களுக்கு துழாய்ந்து துழாய்ந்து அழைப்பிதழ் கொடுப்பது போல.

ஒரு மாவட்ட ஆட்சித்தலைவர் பற்றிச் சொல்லக் கேட்டதுண்டு. அவர் கையூட்டுப் பெறாத நல்ல ஆட்சியாளர். ஆனால் தமது மக்களின் பிறந்த நாள் விழா விருந்துக்கு தொழில

**பசியற்றவருக்கும், உண்ட பின் சீரண மாத்திரை சாப்பிடுகிறவருக்கும் சமூகம் பல வண்ணங்களில் – வடிவங்களில் – வாசனைகளில் உணவைத் திணிக்க முயல்கிறது. ஏழைகளைக் கடைசி வரை காக்க வைத்து, மிச்சம் மீதியைக் கலந்து போடுகிறது.**

திபர்கள், சினிமா கொட்டகை உரிமையாளர்கள், உணவு விடுதி உரிமையாளர்கள், ஒப்பந்தக்காரரர்கள் என்று அழைப்புக் கொடுப்பாராம். எப்படியும் இருநூறு பவுன் முத்திரைப் பொன் பரிசாக வந்து விடுமாம். இந்த விருந்து, மொய் விருந்து போன்றதன்றி வேறென்ன?

நல்ல மனசுக்காரரர் சிலர், தம் வீட்டுத் திருமணங்கள், மண நாள், பிறந்த நாளை முன்னிட்டு ஆதரவற்றோர் வாழும் இல்லங்களில் ஒரு பொழுது உணவு தர ஏற்பாடு செய்கிறார்கள். கோயிலில் வழங்கப்பெறும் பிரசாதங்கள் கூட அத்தகையது தான். சிலர், தாம் நேர்ந்த வழிபாடுகளில் வடை, சுண்டல், பஞ்சாமிர்தம், பாயசம் என்று இறைவனுக்குப் படைத்து வணங்கிவிட்டு, எவருக்கும் எள்ளளவும் ஈயாமல் வாளி வாளியாகக் கார் டிக்கியில் ஏற்றி விடுவார்கள். சொந்த பந்தங்களுக்குக் கொண்டு போய் விளம்புவார்கள் போலும். மீந்து ஊசிப் போனால் சாக்கடையில் சரிப்பார்கள் போலும். கோவையில் புகழ்பெற்ற பிள்ளையார் கோயில் ஒன்றில் நானே இதைக் கண்டதுண்டு.

கிராமப்புறங்களில், சிறு தெய்வங்களுக்குக் கொடை கொடுக்கும்போது சாமிகளுக்கு படப்பு போடுவார்கள். நள்ளிரவில் போடப்பட்ட படப்பை, உதயத்தில் பிரித்து வரிகாரரர்களுக்கு, வரி எண்ணிப் பங்கு கொடுத்து அனுப்புவார்கள். பங்கு வைத்து விளம்புவோரில் தமது அண்ணன் தம்பிகள், அக்கா தங்கைகள், தாயாதிகள், சொக்காரரர்கள், மைத்துனர்கள், மாமன்மார் வீடுகளுக்கு நிறைய கறித்துண்டுகளும், அயலவர்க்கு பேருக்கு ஒன்றிரண்டு துண்டுகளும் போட்டுக் கொடுக்கும்

சின்னப்புத்தி உடையவர்கள் உண்டு. அதன் காரணமாகச் சண்டை வருவதுண்டு. வாங்கிப் போன படப்புச் சோற்றை திரும்பக் கொடுப்பார் உண்டு. ஏக்நாத் எழுதிய சமீபத்திய, 'ஆங்காரம்' நாவலில் இன்று அதை வாசிக்க இயலும்.

பந்தியில் சமமாக உட்கார்ந்து உண்ணும்போது, சில பெண்கள் ஆள் பார்த்துப் பரிமாறுவார்கள். குறிப்பாக அசைவப் பந்திகளில். 'கல்யாண வீட்டில் பிள்ளை வளர்க்கா பாரு!' என்பார்கள் நக்கலாய். நான் பம்பாயில் வசித்தபோது, ஆண்டுதோறும் ஊருக்கு வருவேன். உள்ளூர் வெளியூர் என்று அலைந்தபோது, சொந்தக்காரரர் ஒருவர் மத்தியானச் சாப்பாட்டுக்கு வீட்டுக்குக் கூப்பிட்டிருந்தார். அசைவ உணவென்றால் மாய்ந்து மாய்ந்து, பாய்ந்து விழுந்து தின்று கொண்டிருந்த காலம். தரையில் அமர்ந்து, தலை வாழை இலை பரத்தி, சாப்பிட உட்கார்ந்தேன். அருகில் உறவினர்.

இளங்கோவடிகள் சிலப்பதிகார மதுரைக் காண்டத்தின் கொலைக்களக் காதையில், கண்ணகி உணவு சமைத்துக் கோவலனுக்குப் பரிமாறியதைப் பேசுவார். இடைக்குல மடந்தை ஐயை சமையலுக்கு வேண்டிய பொருட்கள் கொடுத்தாள். கோளிப்பாகல், வெள்ளரி, மாதுளங்காய், மாங்கனி, வாழைப் பழம், சாலி அரிசி, பால், தயிர், நெய் எல்லாம். சமைத்த கண்ணகிக்கு மெல் விரல் சிவந்தது. திருமுகம் வியர்த்தது. செங்கண் சேந்தது. தனக்குத் தெரிந்த வகையில் சமைத்து, கோவலனை உணவு கொள்ள அழைத்தாள். ஏசு கிறிஸ்துவின் *Last Supper* போல, விடுதலைப் புலிகளின் தலைவன் மாவீரன் வேலுப்பிள்ளை பிரபாகரன் தனது வீரனுக்கு அளித்த விருந்து போல, கோவலனுக்கும் அது கடைசி உணவு.

இளங்கோவடிகளின் செய்யுளைக் கவனியுங்கள்: 'மண்ணக மடந்தையை மயக்கு ஒளிப்பனள் போல் தண்ணீர் தெளித்துத் தன் கையால் தடவிக் குமரி வாழையின் குருத்தகம் விரித்து' என்று. பூமித்தாயின் மயக்கம் தெளிவிப்பதைப் போன்று, கண்ணகி தரையில் தண்ணீர் தெளித்து, தன் கையால் தரையைத் தடவிச் சீர் செய்து, கன்னி வாழையின் குருத்தோலை விரித்து, கோவலனை உணவு கொள்ள அழைத்தாள்.

என் முன்னால் விரிக்கப் பட்டிருந்த தும்பு இலையில், உறவினர் மனைவி பரிமாறினாள். முதலில் சோறு போட்டாள். 'சோறு' என்ற சொல்

**சோறு’ என்ற சொல் இன்று நகரத் தமிழனுக்குக் கெட்டவார்த்தை ஆகி விட்டது. சொல்ல அவமானமாக, கூச்சமாக இருக்கிறது. சோறு, சங்க காலம் பயன்படுத்திய சொல். இன்று ‘சாதம்’ என்ற சொல் உயர்வு. ‘ரைஸ்’ அதை விட உயர்வு.**

இன்று நகரத் தமிழனுக்குக் கெட்டவார்த்தை ஆகிவிட்டது. சொல்ல அவமானமாக, கூச்சமாக இருக்கிறது. சோறு, சங்க காலம் பயன்படுத்திய சொல். இன்று ‘சாதம்’ என்ற சொல் உயர்வு. ‘ரைஸ்’ அதை விட உயர்வு. சோறு போட்டுக் கறிக்குழம்பு ஊற்றினாள். எங்கள் பக்கம் சில வீடுகளில் கறிக்குழம்பில் உருளைக்கிழங்கு சேர்ப்பார்கள். எனது சோற்றுக் குவியலின் மீது எக்கச்சக்கமாக உருளைக்கிழங்குத் துண்டுகள். இல்லத் தலைவர் இலையில் ஏகப்பட்ட கறித்துண்டுகள். வேண்டுமென்றே செய்தாளோ, அகப்பையில் அவ்விதம்தான் வந்ததோ! ‘பாவி போன இடம் பாதாளம்’ என்று தோன்றியது.

எங்களூரில், செத்த வீட்டில் ஒப்பாரி வைக்கும்போது பெண்கள் பாடுவார்கள். ‘ஏ! என்னைப் பெத்த ராசா... காசு பணம் எங்களுக்கு, கைலாசம் உங்களுக்கு... ஏ! என்னைப் பெத்த அய்யா... தோப்பு வயல் எங்களுக்கு, வைகுந்தம் உங்களுக்கு...’ என்று. அதுபோல சோற்றைப் பிசையும்போது என் காதில் ஒலித்தது, ‘ஏ! அருமாந்த மச்சான்... உருளைக்கிழங்கு உங்களுக்கு, கோழிக்கறி அவ்வோளுக்கு...’ என்று.

எனது சொந்த ராகம் பாடுவதற்காகச் சொல்லவில்லை. விருந்து என்ற சொல்லுக்குப் ‘புதிது’ என்று பொருள். விருந்தினர், அதிதிகள், தினமும் வருகிறவர்கள் அல்ல. ‘மோப்பக் குழையும் அனிச்சம் முகம் திரிந்து நோக்கக் குழையும் விருந்து’ என்கிறார் வள்ளுவர். அனிச்ச மலரை மோந்து பார்த்தாலே வாடிவிடும். அத்தனை மென்மை. முகர்ந்து பார்ப்பது அல்ல, மோந்து பார்ப்பது. முகர்தல் எனில் கோருதல். முகம் திரிந்து பார்த்தாலேயே விருந்

**இலைகளில் வீண் செய்யப்பட்டு, பேரல்க ளில் சேமிக்கப்பட்டு, பன்றிகளுக்குப் போகும் செல்வச் சிறப்புடைய உணவு, பாவி வயிறுகளுக்குப் பசியாறப் பாய்வதில்லை.**

தினர் முகம் வாடிவிடும்.

விழாக்களில் பேச்சாளர்களுக்கு சால்வை போர்த்தும்போது கவனித்திருக்கிறேன். நிறைய நன்கொடை கொடுக்கும் செல்வந்தருக்கு அவரது செல்வாக்குக்கு ஏற்றாற்போல விலையுயர்ந்த சால்வையும், அன்றாடங் காய்ச்சி சிறப்புச் சொற்பொழிவாளனுக்கு மலிவுப் பதிப்பும். இது இன்றைய தமிழ் மரபு. அது கூடப் போகட்டும். உணவில் பாரபட்சம் என்ன பண்பு?

சினிமாக்காரரர்களின் மதிய உணவு இடைவேளையில் இதனைக் கவனிக்கலாம். இயக்குநர், நாயகன், நாயகி, பிரதான நடிக - நடிகையர், ஒளிப்பதிவாளர், கலை இயக்குநர், வசனகர்த்தா, தயாரிப்பாளர் என்பவர் முதல் தரம். உதவி இயக்குநர்கள், சகல துறைகளிலும் உதவியாளர்கள் இரண்டாம் தரம். டெக்னீஷியன்கள் மூன்றாம் தரம். துணை நடிகர்கள் நான்காம் தரம். உடலுழைப்புச் செய்பவர் ஐந்தாம் தரம்.

சம்பளத்தில், வாகன வசதிகளில், தங்குமிடங்களில் பேதங்களைப் புரிந்துகொள்ளலாம். உண்ணும் உணவிலும் எத்தனை பேதங்கள்! கலைகளின் அரசி எங்ஙனம் அருள் பாலிப்பாள்? டாக்டர் பட்டங்களும் கலைமாமணிகளும் பத்ம விருதுகளும் வாங்கி விடலாம். கலைமகள் கசப்புடன் பார்த்திருப்பாள்.

சினிமாக்கள் மூலம், காசு கொடுத்து டிக்கெட் வாங்குபவருக்கு நாம் போதிக்க விழைவது, அறம், சமதர்மம், சகோதரத்துவம், சமூக நீதி! பழைய சந்திர பாபு பாடல் ஒன்று நினைவுக்கு வருகிறது. ‘சிரிப்பு வருது, சிரிப்பு வருது! சிரிக்க சிரிக்க சிரிப்பு வருது!’

**- கற்போம்...**

# கைம்மண் அளவு

வீட்டு வாசலில் வரும் குறு வியாபாரிகளிடம் சில பொருட்கள் வாங்குவோம். பெரும்பாலும் குடியிருக்கும் பகுதிக்கு பக்கத்துத் தோட்டங்களில் விளையும் காய்கறிகள், வாழைப்பூ, வாழைத் தண்டு, காட்டுக்கீரை, பண்ணைக்கீரை, பீர்க்கன் காய், அரசாணிக்காய் என்கிற பரங்கிக்காய் எனப்படுகிற பூசணிக்காய் என ஆங்கு. சில சமயம் கூம்பு போல் உருண்டு திரண்ட மரவள்ளி எனப்படும் மரச்சீனி. பொருள் நல்ல தரத்துடன் புதியதாக இருக்கும். விலை சற்று முன்னே பின்னே இருக்கும். நாள் பூரா நடந்து கூவித் திரிபவரும் சாப்பிட வேண்டாமா?

**நாஞ்சில் நாடன்**

ஓவியம்: மருது



சில நாட்களாக வயோதிகர் ஒருவர், சற்று தலையாட்டத்துடன் சைக்கிளை உருட்டிக் கொண்டு வருகிறார். சைக்கிள் அவருக்கு சுமை தூக்கவும், நடக்க ஆதரவுக்கும்! திருவண்ணாமலைப் பக்கத்து வன்னிய வட்டார வழக்கில் பேசுவார்.

வியாபாரம், பச்சை நிலக்கடலை. சற்றும் பழுதில்லாத, திரட்சியான, நீளமான கடலைக் காய். ஏமாற்றாத பக்காப் படி. வஞ்சகம் இல்லாத அளவு. நூறு ரூபாய்க்கு மூன்று பக்கா. எங்கள் வீட்டில் எல்லோருக்கும் வேக வைத்த நிலக்கடலை பிடிக்கும். நிலக்கடலைக்கு மணிலாப் பயறு, கடலைக் காய், மல்லாட்ட, கப்பலண்டி என்ற மாற்றுப் பெயர்கள் உண்டு. கண்மணி குணசேகரன், 'கொல்லாங்கொட்டை' என்று நாங்கள் சொல்கிற முந்திரிக்கொட்டையை, 'முந்திரிப் பயிறு' என்றுதான் சொல்கிறார்.

இரண்டு நாட்கள் முன்னால் பெரியவரிடம் கடலை வாங்கினேன். கோவையில் மழைக் காலம் முடிந்த கையோடு குளிர்காலம் தொடங்கி விட்டது. அதுவும் நான் வசிக்கும் தூரத்தில் மலைகள் உள்ள மேட்டுப்பகுதியில் கூதல் சற்றுக் குளிர்ந்தே வீசும். கடலைக் காய் வாங்கிக் காசும் கொடுத்த பின், "கொஞ்சம் பொறுங்க" என்று சொல்லி, வீட்டுக்குள் வந்து, எனக்கு விழாக்களில் போர்த்திய சால்வை ஒன்றை எடுத்துக் கொண்டு போய்க் கொடுத்தேன்.

"தலைவருங்களா?" என்றார். அவரது ஐயம் சரிதான். தலைவர்களுக்கு நிறைய சால்வை கிடைக்கும். "இல்லை ஐயா! எழுத்தாளன்" என்றேன். அதற்குள் வாசலில் மாட்டப்பட்டிருந்த பெயர்ப் பலகையை வாசித்து விட்டிருந்தார். கண் பார்வை சற்று மங்கல் போலும். 'என்ஜினியர் நடராஜன்' என்று வாசித்தார். "இல்லீங்க! நாஞ்சில் நாடன்... எழுத்தாளன்." "அஹாங்..." என்றவர், "பத்திரம் எழுதுவீங்களா?" என்றார். எனக்கு அவர் மீது ஒரு வகையான பாசம் தோன்றியது. இப்படித்தான் இருக்கிறார்கள் எம் கிராமத்து மக்கள்.

கிராமத்து அறியா மக்களை விடுங்கள். நகரத்துக் கனவான்கள் சிலர் நம்மை 'என்ன செய்கிறீர்கள்?' என்று கேட்க, 'ரைட்டர்' எனப் பதில் சொன்னால், 'எந்த ஸ்டேஷன்?' என்கிறார்கள். நமக்கு கிறிஸ்தவக் கம்பர் என்று அழைக்கப்பட்ட ஹென்றி ஆல்பிரட் கிருஷ்ண பிள்ளையின் 'இரட்சணிய யாத்திரீக'த்தின் பாடல்தான் நினை

வுக்கு வருகிறது.

'தன்னரிய திருமேனி சதைப் புண்டு தவிப்பெய்தி பன்னரிய பலபாடு படும்போதும் பரிந்து எந்தாய் இன்னதென அறிகிலார் இவர்செய்ததாம் பிழையை மன்னியும் என்று எழிற்கனிவாய் திறந்தார் நம் அருள் வள்ளல்.' தம்மைக் காட்டிக் கொடுத்தவரையும் வதைத்தவர்களையுமே மன்னிக்கச் சொன்னார் கிறிஸ்து.

எழுத்தாளன் என்பவன் தலையில் இரு கொம்பு முளைத்தவன் இல்லை. தலைக்குப் பின்னால் ஒளிவட்டம் சுழலுபவன் இல்லை. கருத்தரங்க மேடைக்கு இருபது அடியாட்கள் சூழ வந்து ஏறுகிறவன் இல்லை. ஆனால், எழுத்துக்கள் மூலம் தனக்குள்ளே மனிதனை மீட்டெடுக்க முயல்பவன். எனினும் ஆசாபாசங்கள் உள்ள எளிய மனிதன்.

தமிழ்ச் சமூகத்தின் கடைசிப் படியில் நிற்பவன் எழுத்தாளன். அவர்களில் பலருக்கும் எந்த அரசியல் கட்சியின் ஆதரவோ, சொந்த சமூகத்தின் சீராட்டோ, சீமான்களின் அரவணைப்போ கிடையாது. ஆனால், எழுத்தாளனை மதிக்காத எந்தச் சமூகமும் கீழ் முண்டித்தான் போய்க் கொண்டிருக்கும் போலும். தேசத்தில் தொழிற்துறையில் இரண்டாம் இடத்தில் இருந்த




நாம், இருபதுக்கும் கீழே போய்க் கொண்டிருக்கும் காரணங்களில் இதுவும் ஒன்றாக இருக்கக்கூடும்.

"ஏன், கலைஞர்களை நாம் மதிக்கிறோமே" என்று எந்த சராசரித் தமிழனும் பேசக்கூடும். அவர்கள் கலைஞர்கள் என்று மதிப்பது சினிமாக்காரர்களை மட்டும்தான். சுமார் 4000 உறுப்பினர்களைக் கொண்ட நடிகர் சங்கத் தேர்தலின்போது காட்சி ஊடகங்களும் அச்சு ஊடகங்களும் தமிழ்நாட்டைப் படுத்திய பாட்டை நாம் அறிவோம். எழுத்தாளனைப் போற்

றுவதால் அவர்களின் டி.ஆர்.பி. ரேட்டிங் உயருமா அல்லது சர்க்குலேஷன் அதிகரிக்குமா?

கலை என்று சொல்லிக் கொண்டு வணிகம் செய்வதும் பொருள் ஈட்டுதலும் கலைச் செயல்பாடுகள் அல்ல. சொல்லப் போனால், கலைக்கு எதிரான செயல்பாடுகள். இன்று பெரும்பான்மையான கல்வி நிறுவன அதிபர்கள் தம்மை 'கல்வித் தந்தையர்' என்று கூறிக்கொள்வதைப் போல ஆபாசமானது.

உடனே கேட்பார்கள், "எழுத்தாளன் பணம் பெறுவதில்லையா" என்று. அவன் வாங்குவது உப்பு, புளி, மிளகாய்க்கும் ஆகாது. யோக்கியமாகப் பிழைக்க வேண்டுமானால் வேறு தொழில் செய்ய வேண்டும். புலியை முறத்தால் விரட்டிய புறநானூற்றுத் தமிழினம், ஒன்றில் டாஸ்மாக் கடையோரங்களில் வீழ்ந்து கிடக்கிறது; அன்றேல் சினிமாவின் பின்னால் அலைகிறது. "இரண்டும் ஒன்றா" என்பீர்கள்! "ஆம்" என்பேன் நான்.

எழுத்தாளனுக்கு மரியாதை தராத சமூகம் நுண்கலைகளை எங்ஙனம் போற்றும்? கலைப் போலிகளைத்தான் கொண்டாடும். அறிவுத்தளத்தில் வெட்டாந்தரையாக, கூழாங்கற்கள் சிதறிக் கிடக்கும் சமூகமாக மாறிப் போகும். 'இல்லானை இல்லாளும் வேண்டாள், ஈன்றெடுத்த தாய் வேண்டாள், செல்லாது அவன் வாய்ச் சொல்' என்பது போல, காசு, பணம் ஈட்டத் தெரியாத எழுத்தாளனை எவர் மதிப்பார்கள்?

அண்மையில் அறிந்தேன், தமிழ்ச் சிறுகதைத் தொகுப்பு ஒன்று ஒரே மாதத்தில் பத்துப் பதிப்புகள் கண்டது என்றும், ஐம்பதினாயிரம் படிகள் விற்றுத் தீர்ந்தன என்றும். தமிழன் என்ற வகையில் எனக்கு மிகுந்த கர்வமாக இருந்தது. அதே சமயத்தில் இணையாகக் கேள்வி ஒன்றும் எழுந்தது. 'திறமைசாலியான பல சிறுகதை எழுத்தாளர்களின் தொகுப்பு ஏன் 250 படிகள் கூட விற்பதில்லை' என! நேர்த்தியாகச் சிறுகதைகள் எழுதுகிற பல முன்னணி எழுத்தாளர்களின் சிறுகதைத் தொகுப்பு, 500 படிகள் கொண்ட ஒரு பதிப்பு விற்க ஏன் ஈராண்டுகள் ஆகின்றன என்று. இது எவர் மீதும் நாம் வைக்கும் விமர்சனம் அல்ல; என் மீது நான் வைக்கும் விமர்சனம். அப்துல் கலாம் புத்தகங்கள் மட்டுமே விற்கும் என்பது ஆரோக்கியமான எழுத்துச் சூழலா?

இந்தத் தொடரில் சில வாரங்கள் முன்பு நான் எழுதினேன்... 'எழுத்தாளன் என்பவன் பட்

டப் பகலில் டார்ச் லைட் அடித்து மனிதத்தைத் தேடுகிறான்’ என்று. அறிவுஜீவி என்று அறியப்பட்ட பேராசிரியர் ஒருவர் சொன்னார், அப்பிடியாப்பட்ட எழுத்தாளரை தான் தேடுவதாக! அறிஞர்கள் நிலை இப்படி என்றால் சாமான்யன் நிலை என்ன? நான் நினைத்துக் கொண்டேன்... ‘மனிதம் தேடும் எழுத்தாளனைக் காண வேண்டுமானால், அவர் அணிந்திருக்கும் வெவ்வேறு வண்ணங்கள் கொண்ட ஐந்து கண்ணாடிகளைக் கழற்ற வேண்டும்’ என. மார்க்சியக் கண்ணாடி, சிறுபான்மைக் கண்ணாடி, பெண்ணியக் கண்ணாடி, தலித்தியக் கண்ணாடி, முற்போக்குக் கண்ணாடி... கழற்றிப் பார்த்தால் மனிதம் தேடும், சத்தியம் தேடும், தமிழைப் பாடும் பலர் கிடைப்பார்கள். நேற்று சாகித்ய அகாதமி விருதைத் தனது 82வது வயதில் பெற்ற - அறுபதாண்டு காலமாக உன்னதக் கதைகள் எழுதிய ஆ.மாதவனின் ஒரு கதை கூட வாசித்திராதவர்கள்... இன்று இறந்து போன சார்வாகனின் பெயர் கூடக் கேட்டிராதவர்கள்... மனிதம் தேடும் எழுத்தாளனைத் தேடுகிறார்களாம்.

லட்சக்கணக்கில் ஊதியம் பெறுகிறவர்களுக்கு, தமிழ் எழுத்தாளனின் மாத வருமானத்தைப் போல மூன்று மடங்கு ஓய்வூதியம் வாங்குகிறவர்களுக்கு பஞ்சப்படியும் பயணப்படியும் வவுச்சர்களும் மட்டுமே கண்ணில் படுமேயன்றி, படைப்பு படாது. கீரனூர் ஜாகிர் ராஜா, அழகிய பெரியவன், சு.வேணுகோபால், கண்மணி குணசேகரன், எம்.கோபால கிருஷ்ணன், க.மோகனரங்கன், குமார செல்வா, மகுடேசுவரன், வெண்ணிலா, என்.ஸ்ரீராம், என்.டி.ராஜ்குமார், மு.ஹரிகிருஷ்ணன், எஸ்.செந்தில்குமார், தமிழ்நதி, ஜே.பி.சாணக்கியா, வா.மு.கோமு, கே.என்.செந்தில், விநா



யக முருகன், சந்திரா, லக்ஷ்மி சரவணக்குமார், போகன் சங்கர், அபிலாஷ்... உடனடியாக, எந்தத் திட்டமும் இன்றி நினைவுக்கு வரும் பெயர்கள் இவை.

பீடமேறி உட்கார்ந்து கொண்டிருப்பவர்களின் அறியாமை நம்மை ஆயாசம் கொள்ளச் செய்கிறது. எழுத்தாளனின் வாசிப்பு என்பது அறிவுத் தேடல், கலைத்தேடல், ஞானத் தேடல். கட்டுரை எழுத அல்ல. பிழைப்புக்கு ஒரு தொழில் செய்துகொண்டு, இம்மொழியை அடுத்த நூற்றாண்டுக்கு நகர்த்தும் தொண்டு செய்கிறவன் எழுத்தாளன். முடியுமானால் அவர்கள் படைப்புகளை ஊன்றி வாசிக்கலாம். குறைந்தபட்சம் குற்றப் பத்திரிகை வாசிக்காதிருக்கலாம்.

எம்மொழியிலும் இலக்கணப் போலிகள் போல, கலைப் போலிகள் போல, எழுத்துப் போலிகளும் இருப்பார்கள். முற்போக்குப் போலிகளும்தான். அவர்களைத் தீவிர எழுத்தாளன் பொருட்படுத்திக்கொண்டிருக்க மாட்டான்.

மலையாளத்தில், கன்னடத்தில், மராத்தியத்தில், வங்காளத்தில் எழுத்தாளன் பேச்சுக்கு ஒரு விலை உண்டு. "பிறகேன் கன்னடத்து கல்புர்கியை, இந்தியின் சப்தர் ஹஸ்மியைக் கொலை செய்தார்கள்?" என்பீர்கள்! அவர்களது குரல்களின் வெம்மையை அரசாங்கங்களால் சகித்துக்கொள்ள முடியாததன் வெளிப்பாடு அது. அரசாங்கங்களே அஞ்சும் குரலாக எழுத்தாளன் குரல் இருக்கிறது என்பதற்கான அடையாளம் அது.

உலகத்தில் எம்மொழியிலும் எழுத்தாளனின் குரல் கவனிக்கப்படும், கருத்தில் கொள்ளப்படும், கடைப்பிடிக்கப்படும். எதிர்க்குரல் எனில் அழித்து ஒழிக்கப்படும் அதிகாரத்தால். காலம் கழுத்தை நெரித்தது போக, கண்ணியமில்லாத அரசுகள் நெரித்த குரல்கள் அதிகம். ஆனால், இங்கோ எழுத்தாளன் குரல் கவனிக்கப்படுவதே இல்லை. 'இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன் கெடுப்பார் இலானும் கெடும்' என்கிறார் வள்ளுவர். பெரியாரைத் துணைக்கோடல் அதிகாரம். இங்கு பெரியார் என்பது வள்ளுவர் காலத்துச் சான்றோர். 'இடித்துரைத்து, நெறிப்படுத்தும் நால்வர் ஆதரவு இல்லாத மன்னரை அழிக்கப் பகைவர் தேவையில்லை. தானே அழிந்து போவார்' என்பது பொருள். அமைச்சர்களே ஆறலைக் கள்வர் போல் அலைந்து திரியும் காலத்து, இடித்துரைக்கும் எழுத்தாளன் குரல் எங்கே எடுபடும்?

சங்க இலக்கியப் பரப்பில் கோவூர் கிழார் எனும் புலவர் ஒருவர். புலவர் மட்டுமல்ல, சான்றோர். கோவூர், செங்கல்பட்டு சார்ந்த ஊர். சங்க இலக்கியத்தினுள் இவர் குறுந்தொகையில் ஒன்று, நற்றிணையில் ஒன்று, புறநானூற்றில் பதினைந்து எனப் பதினேழு பாடல்கள் பாடியவர். அவற்றுள் புறநானூற்றின் 46வது பாடலை எடுத்தாள்கிறேன். சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனைப் பாடியது. அவன் வெற்றி கொண்ட மலையமானின் சிறு மக்களை, யானைக் காலால் இடற உத்தேசித்தபோது, அவர்களைக் காப்பாற்றப் பாடியது.

'நீயே, புறவின் அல்லல் அன்றியும் பிறவும்
இடுக்கண் பலவும் விடுத்தோன் மருகனை;
இவரே, புலன் உழுது உண்மார் புன்கண் அஞ்சி
தமது பகுத்து உண்ணும் தண்ணிழல் வாழ்நர்
களிறு கண்டு அழூஉம் அழாஅல் மறந்த
புன்தலைச் சிறாஅர் மன்று மருண்டு நோக்கி
விருந்தின் புன்கணோ உடையர்
கேட்டனை ஆயின் நீ வேட்டது செய்ம்மே'

என்பது பாடல். பொருள் எழுதாமல் தீராது தானே!




'கிள்ளிவளவனே! நீயோ புறாவின் துன்பம் மட்டுமன்றி, பிற துயரங்களையும் போக்கிய மரபில் வந்தவன். நீ, போரில் வென்று கொன்ற மலையமானோ, சொல்லேர் உழவர்களாகிய புலவரின் வறுமைத் துன்பம் போக்க, தனது பொருளைப் பகுத்து வழங்கி உண்ணும் இரக்க சிந்தனை கொண்ட மரபில் வந்தவன். நீ சிறைப்படுத்தி வந்து, யானைக் காலால் இடறுபடக் காத்திருக்கும் மலையமான் மக்களாகிய இந்தச் சிறுவர்களோ, யானையைக் கண்டு,

அழுகையைக் கூட மறந்து வியப்பால் பார்த்திருக்கும் இளைய தலையை உடையவர்கள். யானைக் காலால் அவர்கள் இடறுபடப் போவதைக் காண வந்திருக்கும் கூட்டத்தாரைப் பார்த்து புதிய துன்பம் கொண்டவர்கள். யான் கூறுவதை நீ பரிவுடன் கேட்டனை என்றால், நீ விருப்பம் போலச் செய்வாயாக!' அதன்பின் சிறுவர்கள் விடுவிக்கப்பட்டனர் என்பது குறிப்பு.

பாடிப் பரிசில் பெற்று வாழும் எளிய மனிதன் ஒருவன், புலவனாக இருந்த காரணத்தால் மன்னனுக்கே அறிவுறுத்த முடிந்திருக்கிறது என்பதன் வரலாறு இந்தப் பாடல். இன்றைய எழுத்தாளனின் இடம், நகை முரணும் பகை முரணும் ஆகும்.

போர்க்களத்தில் திப்பு சுல்தான் போர் புரிந்து மாண்ட பின், ஒன்றுமறியா அவனது இளைய மக்களைச் சுட்டுக் கொன்ற, சூரியன் அஸ்தமிக்காத தேசத்து நீதியின் வரலாறும் நாமறிவோம். அந்த அரசாட்சியை இன்றும் ஆராதிக்கிறவர்களின் சமூக நீதியையும் அறிவோம்!

அத்தனை தூரம் பயணப்படுவானேன்? ஐந்தாண்டுகளுக்கு முன்பு, மேற்சட்டை இன்றி, வெகுளிப் பார்வையுடன் பிஸ்கெட் தின்று கொண்டிருந்தான் ஒரு சிறுவன். விடுதலைப் புலிகளின் தலைவன், தமிழின மாவீரன் பிரபாகரனின் மகன். அது முதல் காட்சி எனில், நெஞ்சில் குண்டடிபட்டு, கருஞ்சிவப்பு ரத்தம் படர்ந்து கொலையுண்டு கிடந்தது அடுத்த காட்சி. அறம் பேசிய நமது அரசும் இத்தகு பாதகங்களுக்குக் கூட்டாகவும் சாட்சியாகவும் நின்றது.

மராத்திய, வங்காள, கன்னட, மலையாள தேசத்தினருக்கு இது நடந்திருந்தால் அவர்களின் எதிர்வினை எப்படி இருந்திருக்கும்? இங்கேன் சில காகங்கள் கூடக் கரையவில்லை? எழுத்தாளனைப் பொருட்படுத்தாத சமூகம் இது. ஒரு மொழியை, மொழி பேசும் சமூகத்தின் பண்பாட்டை, வரலாற்றை, கலையை, மரபுகளை அடுத்த நூற்றாண்டுக்கு எனத் தொடர்ந்து கடத்துபவன் எழுத்தாளன்.

அவன் குரல் நசுக்கப்படுமானால், அலட்சியப்படுத்தப்படுமானால், இளக்காரம் செய்யப்படுமானால் அது அந்தச் சமூகத்தின் இழிவு. அறிவுஜீவிகள் என்று கொண்டாடப்படுவோரே இதனை அறிந்திருக்கவில்லை என்பது எத்தனை அவலம்?

**- கற்போம்...**

# கைம்மண் அளவு

கீரை எளிய, பசிய உணவு. நம்மில் பலருக்கும் அது தொடுகறி. வறுமையில் வாடிய ஒருவருக்கு கீரையே மொத்த உணவும். குப்பையில் வளரும் கீரையைக் கொய்து எடுத்து, உப்புக்கூட இல்லாமல் வேக வைத்துத் தானும் பெண்டு பிள்ளைகளும் பசியாறியதாகப் புலவர் பாடினார். நகத்தினால் கிள்ளி எடுப்பதால் சில கீரைகளைக் கிள்ளுக்கீரை என்றனர். “என்னை என்ன கிள்ளுக் கீரைன்னு நெனச்சியா?” என்றார்கள். ‘அத்தனை தாழ்வான மனிதனா’ என்பது கேள்வியின் பொருள். ‘முளையிலேயே கிள்ளி எறி’ என்றனர் பகைவர்களை.

**நாஞ்சில் நாடன்**

ஓவியம்: மருது



ஆண்டாள் திருப்பாவையின் பதின்மூன்றாவது பாடல், ‘புள்ளின் வாய் கீண்டானை, பொல்லா அரக்கனைக் கிள்ளிக் களைந்தானை’ என்கிறது. ‘பறவை வடிவில் வந்த பகாசூரனின் அலகுகளைக் கிழித்துக் கொன்றவனும், பொல்லாத அரக்கனான ராவணனின் பத்துத் தலைகளையும் கிள்ளிக் களைந்தவனும்’ என்று பொருள்.

கீரையே எளிது. கிள்ளுதல் மிக எளிது. ஆனால் கீரை என்று நினைத்துக் கற்பாறையை நகத்தால் கிள்ள இயலாது. ‘கல் கிள்ளிக் கை இழந்தற்று’ என்கிறது நாலடியார். கீரையை ‘இலைக் கறி’ என்பார்கள். கீரைக்கு ‘அடகு’ என்ற மாற்றுச்சொல் உண்டு. ‘குறு முறி அடகு’ என்கிறது மதுரைக்காஞ்சி. சிறிய இலைகளை உடைய கீரை. ‘அங்குழைக் கீரை அடகு மிசையினும்’ என்று நீள்கிறது மற்றொரு செய்யுள்.

பாரி மகளிரான அங்கவையும் சங்கவையும் சமைத்துப் போட்ட கீரையை அமுது நிகர்த்தது என்கிறார் ஔவையார். ‘வெய்தாய் நறுவிதாய் வேண்டளவும் தின்பதாய் நெய்தான் அளாவி நிறம் பசிந்து - பொய்யா அடகென்று சொல்லி அமுதினை இட்டார் கடகம் செறிந்த கையால்’ என்பது பாடல். ‘சூடாக, நறுமணம் கொண்டதாக, வேண்டிய மட்டும் தின்பதாக, நெய் விட்டு அளாவி, பசிய நிறமுடையதான அதனைப் பொய்யாகக் கீரை என்று சொல்லிப் பரிமாறினாள் கடகம் அணிந்திருந்த கையினால். ஆனால் அது அமுதமாக இருந்தது’ என்பது பொருள். கேழ்வரகுக் களியும், முருங்கைக் கீரையுமாக இருக்கலாம்; அல்லது கொங்கு மண்டலத்துக் களியும் ‘ராக்ரி’ எனப்படும் கீரைக்கறியும் ஆகலாம்.

கம்ப ராமாயணத்தில் சுந்தர காண்டத்தின் காட்சிப் படலம். அசோகவனத்துச் சீதை தன் நிலை எண்ணிப் புழுங்கும் காட்சியில் பாடல். ‘அருந்தும் மெல் அடகு யார்இட அருந்தும்?’ என்று அழுங்கும்; ‘விருந்து கண்டபோது என் உறுமோ?’ என்று விம்மும்; ‘மருந்தும் உண்டுகொல் யான் கொண்ட நோய்க்கு?’ என்று மயங்கும்; இருந்த மாநிலம் செல்லரித்து எழவும் ஆண்டு எழாதாள்.

தான் அமர்ந்துள்ள இடப் பரப்பு கரையான் அரித்துப் புற்றுத் தோன்றினாலும் பெயர்ந்து போகாத சீதை, பல விதமாக எண்ணியெண்ணிச் சோர்ந்து போகிறாள். ‘கீரை சமைத்து விளம்பினால் விரும்பி உண்பானே ராமன். இனி எவர்

பரிமாற உண்பான்? விருந்து வந்துவிட்டால் என்ன நடக்கும்? யானே வலிய வரவழைத்துக்கொண்ட இந்த நோய்க்கு மருந்தும் உண்டோ?' என்றெல்லாம் இரங்கித் துன்புறுவாள்.

எளிய உணவென்று நாம் எண்ணும் கீரைக்கு எத்தனை சிறப்பு பாருங்கள்! தமிழின் 96 வகையான சிற்றிலக்கியங்களில் 'பிள்ளைத்தமிழ்' சிறப்பான வகை. மதுரை மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ், திருநெல்வேலி காந்திமதியம்மன் பிள்ளைத்தமிழ், திருச்செந்தூர் முருகன் பிள்ளைத்தமிழ், முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ், ஆண்டாள் பிள்ளைத்தமிழ் என்பன குறிப்பிடத் தகுந்தவை. குழந்தை பிறந்தது முதல் பத்து பருவங்கள் பேசப்படும். குழந்தை, பிறந்த ஐந்தாம் மாதம் - தன் தலையை நிமிர்த்து இங்குமங்கும் அசைந்தாடுவதைப் பாடும் பருவத்தை 'செங்கீரைப் பருவம்' என்பார்கள்.

குமரகுருபரர், மதுரை மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழில் செங்கீரைப் பருவம் பாடுகிறார்: 'அருள் விழியொடும் வளர் கருணை பொழிந்திட ஆடுக செங்கீரை, அவனி தழைத்திட மவுலி புனைந்தவள் ஆடுக செங்கீரை' என்று.

மலையாள தேசத்தவருக்கு சிவப்புநிறத் தண்டன் கீரை வெகு பிடித்தம். செங்கீரையைச் 'சீரை' என்பார்கள் அவர்கள்.

நான் பிறந்து, 27 வயது வரை வாழ்ந்த நாஞ்சில் நாட்டில் கீரைச் செல்வம் குறைவுபடாதது. வயல் கரைகளில், தோப்புகளில் கீரைப் பாத்தி இருக்கும். முதலில் பிடுங்கினால் முளைக்கீரை. பிறகு பிடுங்கினால் தண்டன் கீரை. தண்டன் கீரையின்



**'சற்றே துவையல்** அரை தம்பி, ஓர் பச்சடி வை, வற்றல் ஏதேனும் வறுத்து வை **- குற்றமில்லை** காயமிட்டு கீரை கடை, கம்மெனவே மிளகு காயரைத்து வைப்பாய கறி'

இலைகளை ஆய்ந்து 'துவரன்' வைப்பார்கள். துவரன் என்பது உங்கள் மொழியில் 'பொரியல்'. அல்லது கடைவார்கள். கீரைக் கடைசலைத்தான் 'மசியல்' என்பார்கள். காயம் இட்டுக் கீரை கடைய வேண்டும்.

தமிழ்ப்பாடல் ஒன்று உண்டு: 'சற்றே துவையல் அரை தம்பி, ஓர் பச்சடி வை, வற்றல் ஏதேனும் வறுத்து வை - குற்றமில்லை

காயமிட்டு கீரை கடை, கம்மெனவே மிளகு காயரைத்து வைப்பாய் கறி' என்று. கடைந்த கீரையில் மோர் மிளகாய் வறுத்துத் தாளிப்பது விசேஷம்.

நாஞ்சில் நாட்டில் செண்பகராமன்புதூர் கீரைத்தண்டு சிறப்பு. தோவாளை பூந்தோட்டங்களில் ஊடுபயிராக வளர்க்கப்பட்ட அரைக்கீரைக்கு சுவை அதிகம். தண்டன் கீரையின் தண்டு போட்டு 'புளிக்கறி' வைப்பார்கள். விரதம் பொங்கும் போது, பச்சரிசிச் சோற்றில் விட்டுப் பிசைய கீரையும் கீரைத்தண்டும் போட்டு வைக்கும் புளிக்கறி பிரசித்தம்.

அரைக்கீரையைக் கடைந்தால் அடுத்த தெருவுக்கும் மணக்கும். அங்கு முருங்கை இல்லாத வீடில்லை, தோட்டம் இல்லை, வயல் மேடு இல்லை. மழை பெய்து தழைந்து நிற்கும் முருங்கைக்கீரை பறித்து வந்து ஆய்ந்து துவரன் வைப்பார்கள். முருங்கைக்கீரையைக் கழுவுவது இல்லை. அன்று காற்றும் மாசற்று இருந்தது. முருங்கைக்கீரைக்கு, சித்துக் கடுப்பு உண்டு. கடுப்பை மாற்ற, துவரனில் கருப்பட்டித் துண்டு சேர்ப்பார்கள். தேங்காய்ப் பூவுக்கு இளம் தேங்காய். முருங்கைக்கீரையில் மோர்க் குழம்பு நன்றாக இருக்கும். பச்சைத் தேங்காய் அரைத்து, புளி ஊற்றாமல் 'சம்சோறு' என்றொரு குழம்பும் உண்டு. வீட்டுப் படிப்புரையில் எவரும் சுளவில் போட்டு முருங்கைக்கீரை ஆய உட்கார்ந்தால், அண்டை அயலார் அடுத்திருந்து நாலு கை ஆய்வார்கள்.

இந்தியிலிருந்து தமிழுக்கு சிறப்பான மொழிபெயர்ப்புகள் செய்தவர் சரஸ்வதி ராமநாதன். தாராபுரத்துக்காரர். கோடைக் காலத்தில் கோவையில் சில மாதங்கள் மூத்த மகள் வீட்டில் தங்கியிருப்பார். அடிக்கடி பார்க்கப் போவேன். மோகன் ராகேஷ் எழுதிய 'ஆதே அதுரே' நாடகத்தை 'அரையும் குறையும்' என தமிழில் பெயர்த்தவர். அந்த நாடகத்தில் நான்கு அங்கங்கள். நான்கு அங்கங்களிலும் வேறுபட்ட பாத்திரங்களில் அம்ரீஷ் பூரி நடிப்பதுண்டு. வேறுபட்ட நான்கு பெண் பாத்திரங்களிலும் சுல்பா தேஷ்பாண்டே நடிப்பார்.

பண்டு ஒரு காலத்தில் பம்பாய் சாபில்தாஸ் அரங்கில் நடைபெறும்.

சரஸ்வதி ராமநாதனிடம் சொன்னேன், "எங்கூர்லே அடை சுடும்போது முருங்கைக் கீரை உருவி மாவில் சேர்ப்போம்" என்று. அடுத்த முறை அவரைப் பார்க்கப் போன போது, முருங்கைக்கீரை அடை காத்திருந்தது.

பெரும்பாலும் வெற்றிலைக் கொடிக் கால்களில் நடப்படும் மரம் அகத்தி. மஞ்சள் வயல்களில் செம்மஞ்செடி நடுவதைப் போன்று. அகத்தியில் சித்தகத்தி, பேரகத்தி என்று இருவகை. 'சித்தகத்திப் பூக்களே...' என்று தொடங்கும் பாடல் கேட்டிருப்பீர்கள்! அகத்திக்கீரையும் துவரன் வைப்போம். கசப்பைச் சகித்துக்கொள்ள வேண்டும். கசப்பு என்பதும் அற்புதமானதோர் சுவைதானே!

தண்ணீர் பாயும் கால்வாய், ஓடை, சிற்றாறு என்பனவற்றின் கரையோரம் செழித்து வளரும் கொடுப்பைக் கீரை. யாரும் விதை போட்டு வளர்ப்பதில்லை. நான் சிறுவனாக இருந்த காலத்தில், முழங்கால் தண்ணீரில் நின்று பறித்து மடியில் போட்டுக்கொண்டு வருவார்கள். பண்ட மாற்று விற்பனை. பாத்திரம் நிறையப் பழைய சோறும், கொதிக்கச் சுட வைத்த பழங்கறியும். கொடுப்பைக் கீரையை அதிகமாகச் சீர் பார்க்க எதுவும் இருக்காது. பெரும்பாலும் குழம்பு தீயல் என்றால், துவரன் கொடுப்பைக்கீரை.

தை மாதம் வயலறுப்பு முடிந்ததும், மண்ணில் ஈரப்பதம் இருக்கும்போது, நெல்லறுத்த தாளுடன் சேர்ந்து, பெரு வெட்டாக ஒருழவு உழுது இடைப்பயிராக உளுந்து, சிறுபயிறு விதைப்பார்கள். சிறுபயிறு என்று நாங்கள் சொல்வது பாசிப்பயிறு. பெரும் பயிறு என்றால் தட்டப்பயிறு. காணம் என்



**முருங்கைக் கீரையில்** மோர்க்குழம்பு நன்றாக இருக்கும். பச்சைத் தேங்காய் அரைத்து, **புளி ஊற்றாமல்** 'சம்சோறு' என்றொரு குழம்பும் உண்டு.

றால் கொள்ளு. இரண்டு மாதத்தில் நெற்றாகிவிடும். உளுந்து நெற்றுப் பறிக்க நான் போயிருக்கிறேன். பறித்த நெற்றில், ஆறில் ஒரு பங்கு கூலி. சிறுபயிற்றஞ் செடியின் கொழுந்து இலைகளைப் பறித்து வந்து இலையைக் கழுவி, கசக்கி, அரிந்து வைக்கப்படும் துவரன்.

பூசணி, மஞ்சள் பூசணி, பரங்கி, அரசாணி, மலையாளிகளால் மத்தன் என்றும் அழைக்கப்படுவது ஒரு படவரை. 'படவரை' எனில் படர்ந்து வளரும் கொடி என்று பொருள். அதன் இளந்தளிர் இலைகளைப் பறித்து வந்து, இலைகளிலும் தண்டிலும் நெருங்கி இருக்கும் பூனை மயிர் போன்ற முட்களைக் கையால் கசக்கி, அரிந்து, துவரன் செய்வார்கள்.

பிரண்டைக் கொடியின் இளம் தளிர், பொடுதலை, வல்லாரை, கையாந்தகரைக் கீரைகளைச் சேர்த்துப் போட்டு, நல்லெண்ணெயில் வதக்கி, கீற்றுத் தேங்காயும் புளியும் தீயில் சுட்டுக் காரமாகத் துவையல் அரைப்பார்கள். நான் துவையல் என்பது சட்னி, துகையல், சம்மந்தி, ஈழத்தில் சம்பல் என்றும் வழங்கப் பெறும். நான் சொன்ன துவையல், காய்ச்சல் வந்துபோன பின் நாக்கு செத்துப்போனவர்களுக்கு கஞ்சிக்குத் தொட்டுக்கொள்ள!

மேற்சொன்னவை தவிர ஆலங்கீரை, பசலைக்கீரை, பொன்னாங்கண்ணிக்கீரைகள் உண்டு. ஐம்பதாண்டுகள் முந்திதான் நாங்கள் கொத்தமல்லிக் கீரைக்கும் புதினாக் கீரைக்கும் அறிமுகம் ஆனோம். எனது இருபதாண்டு மும்பை வாழ்க்கையின்போது அறிமுகமான கீரைகள் பாலக், வெந்தயக்கீரை, முள்ளங்கிக்கீரை. பாலக் என்பது வல்லாரை போல, நேராகத் தரையிலிருந்து ஒற்றைக் காம்புடன் முளைத்தெழுந்து வருவது. இருபத்தைந்து ஆண்டுகள் முன்பு உதகமண்டலத்தில் பால்சன் பள்ளத்தாக்கு புல் பரப்பில் அமர்ந்தவண்ணம் முகாம் உறுப்பினர்களுக்கு உரையாடிக்கொண்டிருந்த இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார், உட்கார்ந்த இடத்திலிருந்து நகராமல், சுற்றிச் சுற்றித் தேடி கை நிறைய வல்லாரை பிடுங்கினார். இப்போதும் கோவை மணிக்கூண்டு பேருந்து நிறுத்தத்தில், வேலந்தாவளத்தில் இருந்து ஆத்தா ஒருத்தி வல்லாரைக்கீரை பறித்து வந்து விற்கிறாள். சாக்கடைத் தண்ணீரில் வளராத சுத்தமான புத்தம் புது பசிய கீரை.

பாலக் பன்னீர் என்றும், ஆலு பாலக் என்றும் பரிமாறப்படும் பஞ்சாபித் தொடுகறிகளில் பயன்படுவது பாலக்

கீரைதான். வெந்தயத்தை 'மேத்தி' என்பர் வடமொழியில். வெந்தயக்கீரையும், பாசிப்பருப்பும் சேர்த்து கூட்டு செய்வார்கள். உருளைக்கிழங்கு தோல் சீவி, பொடிப் பொடியாய் நறுக்கிப் போட்டு வதக்குவார்கள் வெந்தயக்கீரையுடன். அதன் வாசமே தனியானது. இரண்டங்குல நீள முள்ள முளைக்கீரையாகவும் பிடுங்கிக்கொண்டு வருவார்கள். அப்படியே அலசிவிட்டு நறுக்க வேண்டியதுதான். இவை எல்லாம் சப்பாத்திக்குத் தொடுகறிகள். பஞ்சாபிகள், கடுகுக்கீரையில் 'சர்ஸூக்கா சாக்' என்றொரு கூட்டு செய்வார்கள். மக்காச்சோள ரொட்டிக்கு அருமையான சேர்மானம். மேத்தி பரோட்டா என்ற வெந்தயக்கீரை பரோட்டா எங்காவது மெனு அட்டையில் பார்த்தால் தயவுசெய்து விட்டுவிடாதீர்கள்!

கொங்கு நாடு, கீரைகளின் கொண்டாட்ட பூமி. மற்றெங்கும் நான் காணாத கொங்குக்கீரைகள் வள்ளக்கீரை, காட்டுக்கீரை, கோவக்கீரை, பண்ணெக்கீரை, சுக்கட்டிக் கீரை, வெங்காயத்தழைக்கீரை, பூண்டு தழைக்கீரை. மழை பெய்து ஓய்ந்து இரு கிழமைகள் கடந்த பின்பு, சிங்கநல்லூர் உழவர் சந்தைக்குப் போனேன். பத்தாண்டுகளுக்கும் மேலிருக்கும். அப்போது நான் நீலிக்கோனான் பாளையத்தில் குடியிருந்தேன். எனக்கு வழக்கமாக வாழைப்பூ, வாழைத்தண்டு, பப்பாளிப்பழம், சுண்டைக்காய், சுக்கட்டிக்கீரை எனப்படும் மணத்தக்காளிக்கீரை விற்கும் ஆத்தா முன்னால், செழிப்பாக வளர்ந்திருந்த கீரைக்கட்டுகள் கிடந்தன. "இது என்னங்க ஆத்தா?" என்றேன். "காட்டுக்கீரைங்க... சின்ன வெங்காயம் அரிஞ்சு போட்டு, தக்காளி, பச்சை மிளகாய் எல்லாம் சேத்துக்



**வெந்தயக் கீரையும்,** பாசிப்பருப்பும் சேர்த்து கூட்டு செய்வார்கள். உருளைக் கிழங்கு தோல் சீவி, பொடிப் பொடியாய் நறுக்கிப் போட்டு **வதக்கு வார்கள்** வெந்தயக்கீரை யுடன். அதன் வாசமே தனியானது.

கடையச் சொல்லுங்க... தேங்கா எண்ணெய் ஊத்தனுங்க... வாங்கிட்டுப் போங்க... நல்லா இருக்குமுங்க..." என்றார்.

கீரைக்கட்டைக் கையில் எடுத்து திருப்பிப் பார்த்தேன். கட்டினுள் சில வேற்றுத் தாவரங்களும் தெரிந்தன. "இது என்னங்க ஆத்தா... கண்ட செடியெல்லாம் சேர்த்துக் கட்டீருக்கு!" என்றேன். "சாமி! அது களையில்லீங்க... தொய்யக்கீரைங்க... எடுத்து வெளியே போட்றாதீங்கோ... காட்டுக்கீரையோட சேத்து வச்சுக் கடஞ்சா வாசமா இருக்கும்" என்றார். தொய்யக்கீரை வித்தியாசமான மணத்துடன் இருந்தது. பச்சையாக மோந்து பார்க்க. அதை நாற்றம் என்றும் சொல்லலாம். ஆனால், அன்று முதல் காட்டுக்கீரை கடைசலுக்கு நான் அடிமை. நாமென்ன ஆளுங்கட்சி அமைச்சரா, அபகரித்து வைத்திருக்கும் ஆயிரம் ஏக்கர் பூமியில் இரண்டு ஏக்கரை உழவர் சந்தை ஆத்தாள் பேரில் எழுதி வைக்க?

தயிர் கடைவதற்கு தயிர் மத்து இருப்பதுபோல், கீரை கடைவதற்கு கீரை மத்து வேண்டும். 'மத்துறு தயிர்' என்பான் கம்பன். 'மத்துறு தயிர்' என்ற தலைப்பில் ஜெயமோகனின் அற்புதமான சிறுகதை ஒன்றுண்டு, 'அறம்' தொகுப்பில்.

அண்மையில் ஈரோடு சென்று திரும்பியபோது, முன்னாள் மத்திய அமைச்சர் - இந்நாள் தி.மு.க துணைப்பொதுச்செயலாளர் திருமதி. சுப்புலட்சுமி அவர்களின் கணவர் ஜெகதீசன் அண்ணா, அவர் தோட்டத்தில் இருந்து பண்ணைக்கீரை பறித்துக்கொடுத்தார். அதுவும் அடகு எனப்பட்ட அமுது.

இருபத்தைந்து ஆண்டுகள் முன்பு, திருப்பூர் எழுத்தாளர் 'பசலை' கோவிந்தராஜனின் அம்மா, ராத்திரிச் சோற்றுக்கு செலவு ரசம் வைத்துக் கொடுத்தார். பயன்படுத்தப்பட்ட தழைகள் - மொடக்கத்தான், கொழுஞ்சி, அவரை இலை, மொசுமொசுப்பான், தூதுவளை என்று நினைவு. என்னுடன் உணவு உண்டவர்கள், அன்று சிறுவனாக இருந்த கவிஞர் மகுடேசுவரன், குடும்பத்துடன் பெருமாள் முருகன், கவிஞர் சிபிச்செல்வன், நாவலாசிரியர் எம். கோபாலகிருஷ்ணன். யாவரும் இன்று தீவிர இலக்கியவாதிகள்.

என்ன கீரையில் என்ன சத்து, மருந்து என்பதற்கு, 'பதார்த்த குண சிந்தாமணி' பாருங்கள். சுதான் சுகுமார் ஜெயின் எழுதித் தமிழில் மொழிபெயர்ப்பாகி, நேஷனல் புக் டிரஸ்ட் வெளியிட்ட 'மூலிகைகள்' நூலும் பார்க்கலாம்.

**- கற்போம்...**

# கைம்மண் அளவு

விதை நெல் அல்லது விதைத் தானியம் உழவனுக்கு மிகப் புனிதமானது. ஆனால், புனிதம் என்ற சொல்லே இன்று ஆபாசப்பட்டு விட்டது. நாட்டில் அருகிப் போன, மறைந்து கொண்டிருந்த அனைத்துத் தாவரங்களின் விதைச் சேமிப்பு குறித்து மிகுந்த கவலை கொண்டிருந்தார் இயற்கை விஞ்ஞானி நம்மாழ்வார். பண்டுதொட்டு இந்திய விவசாயி பயிர் செய்த ஆயிரக்கணக்கான நெல் இனங்கள் எங்கே? நாம் காக்கத் தவறினோம்.

உழவனுக்கு அடுத்த பருவத்துக்கான சேமிதம், விதை நெல். ஐந்து மரக்கால் விதைப்பாடு நிலமுடையவன் கூட, அன்று தனது அவசியத்துக்கான விதையைச் சேமித்து வைத்திருந்தான். விலைக்கோ, கடனுக்கோ வாங்கியதில்லை. நெல் தேர்ந்து, உலர்த்தி, ஆற வைத்துச் சேமித்து வைத்தான். ஒரு பருவம் விட்டு விதைத்

**நாஞ்சில் நாடன்**

ஓவியம்: மருது



தான்; அல்லது நாற்றுப்பாவினான். எனக்குத் தெரிந்த நெல் விவசாயத்தில், ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு கட்டிச் சம்பா நெல் அறுவடை ஆவணியில் நடக்கும். பிறகு வாசறுமிண்டான் நெல் நடுவார்கள். அது அறுவடையானதும் மறுபடியும் கட்டிச் சம்பா.

சம்பா நெல் ஓடியோடி வளர்ந்து கதிராகி, முற்றி, நூற்றிருபது நாளில் அறுவடைக்கு நிற்கும். 'என் மக்களெல்லாம் பட்டினி கெடக்கே' என்று வேக வேகமாக வளருமாம் சம்பா. வாசறுமிண்டானோ நூற்று எண்பது நாள் பயிர். இந்த நெல்லினங்கள் பயிர் செய்வதற்கும், விளைந்து கதிராவதற்கு வீசும் காற்றுக்கும், பெய்யும் மழைக்கும் உறவு உண்டு. இன்று சம்பா விதை நெல் எங்கே, வாசறுமிண்டான் விதை நெல் எங்கே? ஒறுவினை காலத்தில் - அதாவது பஞ்ச காலத்தில் 'பயிர் கதிராகி அறுத்துத் திரும்பத் தருகிறேன்' என்று சொல்லி கூடுதல் விலை கொடுத்து நெல் கடன் வாங்கி, அறுவடையானதும் குறைந்த விலைக்குத் திரும்பத் தருவான் விவசாயி. அதற்குக் கோட்டைக் கடன் என்று பெயர்.

கடன் தரவும் ஆளில்லாமல், தரித்திரம் பிடுங்கித் தின்னும் போது. பெற்ற பிள்ளைகளின் விலா எலும்பும் நெஞ்சுக்கூடும் துருத்தத் தொடங்கும்போது, வேறு வழியற்று விதை நெல்லையும் அவித்து அரிசியாக்கிப் பொங்கித் தின்பான். அந்த அவலம் அனுபவித்தவர்க்கே தெரியும். அரசு ஊழியர்கள் அறிய மாட்டார்கள்! விதை நெல்லை வேக வைத்து அரிசியாக்கிப் பொங்கித் தின்பது என்பது மிகப்பெரிய கேவலம் விவசாயிக்கு. அண்டை அயலில் பழி தூற்றுவார்கள். "அவனா? அவன் வித்து நெல்லையும் அவிச்சுத் தின்னவனாச்சே!" என்று.

எந்தச் சமூகத்துக்கும் இளைய தலைமுறை, விதை நெல் போன்றவர்கள். அவரை நோய்ப்படுத்தும், கெடுக்கும், அழிக்கும், வளர்ச்சியைத் தடுக்கும் காரியம் ஆரவாரமாக, கொண்டாட்டமாக, கேட்பார் கேள்வியின்றி நடந்து கொண்டிருக்கிறது நாட்டில். உங்கள் குழந்தைகள் உங்கள் விதை நெல். அதைப் பாதுகாத்துக்கொள்வது உம் பொறுப்பு, கடமை, அறம். 'காப்பதற்கும் வழியறியோம், கைவிடவும் மாட்டோம்' என்பது ஆண்மையும் பெண்மையும் அற்ற செயல்.

உலகத்துத்தீமைஎலாம் அளப்பரிய விதத்தில் பல்கிப் பெருகி ஆடிப் பூவெடுக்கும்போது, எந்த இறைவனுக்கும் மறம் கொன்று அறம் காக்க நேரமில்லை. துரோகிகள், கோழைகள், பேராசைக்காரர்கள், பெருந்தீமை வளர்ப்பவர் கொடுக்கும் மண்டகப் படிகளில்

மனம் கிறங்கிக் கிடக்கிறார்கள். அவர்கள் பொழுதும் வாட்ஸ் அப் பார்ப்பதிலும் முகநூல் எழுதுவதிலும் *Like* போடுவதிலும் புலர்கிறது போலும்.

ஆகவே, திருப்பித் திருப்பிச் சொல்ல முனைவது... அவரவர் சிறுவர் சிறுமியரை அவர்தம் நலன்களைப் பேணிக்கொள்ளுங்கள். நலம் என்று நான் குறிப்பிடுவது உடல்நலம் மட்டுமேயல்ல. மனநலம், மனவளம்... மரபின், பண்பாட்டின், கலைகளின் சிரழிவு என்பது எப்பக்கம் இருந்து தொடங்குவது என்றும் எவரால் ஏவப்படுகிறது என்றும் அவற்றின் இலக்கும் நோக்கமும் என்ன என்பது பற்றியும் என்னால் சில குறிப்புகள் மட்டுமே காட்ட இயலும்.

உணவை நோய்ப்படுத்தியாயிற்று. மருத்துவத்தை நோய்ப்படுத்தியாயிற்று. கல்வியை நோய்ப்படுத்தியாயிற்று. மரபை, கலைகளை, பண்பாட்டை, நீதியை, மனிதத்தை நோய்ப்படுத்தியாயிற்று. பாஞ்சாலி சபதத்தின் சபதச் சருக்கத்தில் வீமன் வாயிலாக பாரதி சொல்வான், 'நீள் விட்டப் பொன் மாளிகை கட்டிப் பேயினை நேர்ந்து குடியேற்றல் போல' என்று. இன்றைய நம் அரசியல், சமூக, ஆன்மிகத் தலைமைகளுக்கு அது மெத்தப் பொருந்தும்!

எனவே யாது செய்யப்

**எந்தச் சமூகத்துக்கும் இளைய தலைமுறை, விதை நெல் போன்றவர்கள். அவரை நோய்ப்படுத்தும், கெடுக்கும், அழிக்கும், வளர்ச்சியைத் தடுக்கும் காரியம் கேட்பார் கேள்வியின்றி நடந்து கொண்டிருக்கிறது நாட்டில்.**

போகிறோம்?

கையில் வாள் இல்லாத நீதி, அநீதியைவிட மோசமானது என்கிறார் ஆஸ்கார் வைல்டு. இன்றைய நம் நீதியின் கதியும் அதுதான். 'There is only one thing worse than injustice, and that is justice without her swords in her hands. When right is not might, it is evil' என்பதவர் வாக்கு.

'கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ் களைகட்டதனோடு நேர்' என்பது செங்கோன்மை அதிகாரத்துக் கடைசிக் குறள். 'கொலையை விடக் கொடிய செயல் செய்பவரை அரசு தண்டித்து அழித்தல் என்பது பயிர் நடுவே வளர்ந்திருக்கும் களைகளைப் பிடுங்குவதற்கு

ஒப்பானது' என்பது பொருள். ஆனால் அரசு என்பது நம் காலத்தில் அனைத்து வகை களைகளையும் உரமிட்டு வளர்க்கும் காரியங்கள் செய்கிறது.

ஆகவே நமது விதை நெல்லைப் பாதுகாத்துக் கொள்வோம்.

தீமையைத் திருத்தி எடுப்பது என்பது அத்தனை எளிய காரியம் அன்று. 'சம்பவாமி யுகே யுகே' என்பது கதாகாலட்சேப மேடைகளில் கேட்க நன்றாகவே இருக்கிறது. தீமை திருந்தாது; ஆகவே அழித்து ஒழிக்க முயல்வதன் முன்பான தற்காத்தல்தான் விதை நெல்லைப் பேணுவது. தமிழ் சினிமாவின் கடைசிக் காட்சியில், சற்றைக்கு முன்பு வன்கலவி செய்ய நினைத்த நாயகியை, "தங்கச்சிய்ய்" என்றழைப்பது போன்றதன்று தீமை திருந்துவது! அது நச்சு நகங்களும் விடப் பற்களும் கொலை மூச்சும் கொண்டது.

அச்சு ஊடகங்களும், காட்சி ஊடகங்களும், முகநூல்களும், வாட்ஸ்அப்பும் கிழமைக்கொரு சூடான விவாதத்தை எழுப்புகின்றன. அதற்கு மேல்? அப்புறம்? அடுத்த பிரச்னை! என்ன குறைவுண்டு இந்தத் திருநாட்டில், அனுதினமும் அவலங்களுக்கும் ஆற்றாமைகளுக்கும் வன்கொடுமைகளுக்கும் வழிப்பறி அரசுத் துறைகளுக்கும்?

எவனோ எதையோ பாடினானாம் என்று கொதித்துக் கிடந்தது தமிழ்ச் சமூகம். ஏதோ, தமிழ்த் திரையுலகம் சமூகத்துக்கு எதிரான முதல் குற்றம் புரிந்து விட்டதைப் போல. கலை எப்போது காசுடன் கரங்கோர்த்துக் கொள்கிறதோ, அந்தக் கணத்தில் கலை தனது அறம் நீங்கி மறம் தழுவும். முள்செடி ஒரு இரவில் மரமாகி விடுவதில்லை. பெண்களுக்கு எதிரான இழிவுப் பார்வையை இன்று நேற்றா தமிழ் சினிமா கைக்கொண்டது? ஆடையணிந்த நீலப்படக் காட்சிகளாகவே நாம் காதல் காட்சிகளையும் பாடல்களையும் வடிவமைத்தோம். காசு பறித்துக் கொண்டு தமிழனுக்கு அங்கே சொறிந்து கொடுத்தோம். நள்ளிரவின் மாற்றமல்ல இது. நூறாண்டு கால இழிவு, சரிவு; பாதாளம் வரை இன்னும் போகும்.

நூறு பக்கங்கள் எழுதலாம்... எழுதி என்ன ஆகப்போகிறது? வரவேற்பறை வரை வந்து மலம் கரைத்துத் தெளிக்கிறார்கள். நமக்கோ நறுமணத்துக்கும் துர்நாற்றத்துக்கும் வேறுபாடு தெரியவில்லை. நேற்று நடந்ததுதான் ஆகத் தாழ்வான எல்லையா? ஒருபோதும் இல்லை. எத்தனையோ இன்னும் காத்திருக்கிறது! மாணிக்கவாசகன் பேசு

வான், 'பாதாளம் ஏழினும் கீழ் சொற்கு அழிவு பாதமலர்' என்று. 'ஏழு பாதாளங்களுக்கும் கீழே, சொல் அழிந்துபோகும் இடத்தில் அவன் பாதமலர்கள் இருக்கின்றன' என்று. அந்த இடம் நோக்கித்தான் போய்க்கொண்டிருக்கின்றன தமிழ் சினிமாவின் பாதக மலம். சொல் அழிந்து போனால்தான் என்ன? முக்கல், முனகல் இருக்கவே இருக்கிறது! கலை பெருவணிகமாகும்போது வந்து சேரும் இடம் அது. 'எந்நிலத்து வித்திடினும் காஞ்சிரங் காழ் தெங்கு ஆகா!' என்கிறது நாலடியார். எந்த வளமான நிலத்தில் கொண்டுபோய் காஞ்சிரம் விதையை ஊன்றினாலும் அங்கே தென்னை ஆகிவிடாது.

நமக்கு வழங்கப்படும் விதைகள் கசப்பையும், நஞ்சையும், அநீதியையும், நோயையும் வளர்ப்பவை. 'எத்தனை வகையான வாசனைத் தைலங்களை ஊற்றி வளர்த்தாலும் உள்ளிப்பூண்டு நறுமணம் கமழாது' என்கிறது வேறொரு பாடல். வாய்த்திருக்கிற தொழில்நுட்ப மேன்மைகள் யாவும் ஆபாசம் பெருக்கவே ஆதரவாய் நிற்கின்றன.

"உங்கள் எழுத்துக்களில் ஆபாசம் இல்லவே இல்லையா" என்று கேட்பீர்கள்! இருந்தது, இருக்கிறது, இருக்கும். ஆனால், எங்கள் புத்தகங்களை இளஞ்சிறார்கள்

**உலகத்துத் தீமை எலாம் அளப்பரிய விதத்தில் பல்கிப் பெருகி ஆடிப் பூவெடுக்கும் போது, எந்த இறைவனுக்கும் மறம் கொன்று அறம் காக்க நேரமில்லை.**

வாசிப்பதில்லை. நட்ட நடு முற்றத்தில் அமர்ந்து எவரும் பாராயணம் செய்வதில்லை. தமிழ் சினிமாவின் மொத்த வணிகத்தின் கக்கத்து மயிருக்கும் பெறாது இங்கே புத்தக வணிகம். வாசிக்கும் புத்தகத்தை, வேண்டாம் என்று தோன்றினால் குப்பையில் வீசிவிட்டுப் போய்விடலாம். நூற்றுக்கணக்கான சேனல்கள், அல்லும் பகலும் அறுபது நாழிகையும் வீட்டு வரவேற்பறையில், பேருந்தில், கோயிலில், அரசியல் பொதுக்கூட்டங்களில், விளம்பர ஊர்திகளில் பெருங்குரல் எடுத்து நோய் பரப்புவதில்லை.

எனவே உங்கள் சொந்த விதைகளைக் காத்துக்கொள்ளுங்கள்! உங்கள் விழுமியங்களை வைத்துச் சூதாடுகிறார்கள்.

'போரினில் யானை விழக்

கண்ட - பல பூதங்கள் நாய் நரி காகங்கள் - புலை ஓரி கழுகென்று இவையெல்லாம் - தமது உள்ளம் களிகொண்டு விம்மல் போல்' என்று பாரதி பாடியதைப் போல, மதிப்பீடுகளின் சரிவில் கெக்கலி கொட்டிச் சிரிக்கின்றது, புன்செல்வம் சேர்க்கும் கூட்டம் இங்கு.

ஆகவே கவலையுடனும் பொறுப்புடனும் சொல்கிறேன், 'உங்கள் விதை நெல்லைப் பாதுகாத்துக்கொள்ளுங்கள்' என்று.

எழுத்தினால் என்ன ஆகும் என்று கேட்பார்கள். வாரந்தோறும் லட்சக்கணக்கில் வாசிப்பவர்களில், ஆயிரம் பேருக்கு நாம் சொல்வது சென்று சேர்ந்தால் போதுமானது. மொத்த சமூகத்தின் விதை நெல் அவர்கள். எழுத்து என்பது 'ட்வென்ட்டி 20 விளையாட்டு' அல்ல, அவ்வப்போது முடிவு தெரிந்துகொள்ள! நூறாண்டுத் தீமையை, நோயை, ஓராண்டில் ஒப்புரவு செய்துவிட இயலுமா? என்றாலும் முயலுவோம். முயற்சி, சற்றுத் தாமதமாக வேனும் பயன் தரும்.

முயற்சி, நோக்கம், பெரியதாக, வலியதாக இருத்தல் வேண்டும் என்கிறார் வள்ளுவர். தோற்றுப் போனால்கூட கவலை இல்லை. ஆனால் முயற்சி முக்கியம். 'கான முயலெய்த அம்பினில் யானை பிழைத்த வேல்ஏந்தல் இனிது' என்கிறார். 'கானகத்து முயலை வேட்டையாடிய அம்பைவிட, யானையைக் குறி வைத்து, குறி தப்பி மண்ணில் விழுந்த வேல் மிகவும் சிறப்பானது' என்கிறார்.

எனது நோக்கத்திற்கான வாய்ப்பாக, 'கைம்மண் அளவு' என்ற இந்தத் தொடரைப் பயன்படுத்திக்கொண்டேன். உத்தேசமாக, 250 பக்கங்கள்; 'குங்குமம்' இதழின் 400 பக்கங்கள். நான் வழக்கமான தொடர் எழுதும் எழுத்தாளன் அல்ல. ஏழாண்டுகள் முன்பு ஆனந்த விகடனில் 42 வாரங்கள் 'தீதும் நன்றும்' எழுதினேன். பரபரப்பாக வாசிக்கப் பெற்றது. விகடன் பிரசுரமாக புத்தகமாகி எட்டு பதிப்புகள் கண்டது. அடுத்து நானெழுதிய தொடர் இது. இதுவும் நூலாகும்.

ட்ராட்ஸ்கி மருது நான் மதிக்கும் நவீன ஓவியர். நல்ல மனசுக்காரர். அபூர்வமான ஆளுமை. முன்பு அவர் பற்றி நான் கட்டுரையே எழுதி இருக்கிறேன். விகடனில் வெளியான என் சில சிறுகதைகள் அவர் ஓவியத்துடன் வந்ததுண்டு. எந்த எழுத்தாளனுக்கும் அவர் ஓவியம் இரண்டாம் வயலின் அல்ல. நம்மளவில் அவர் நம் சூழலில் மிக முக்கியமான கலைஞர். 49 வாரங்கள் எனக்காக அவர் வரைந்திருக்கிறார் என்பது எனக்கு சாதாரணமான பெருமை அல்ல. பிற்காலத்தில் எனது விதை நெல்லுக்கு இது

**கலை எப்போது காசுடன் கரங் கோர்த்துக் கொள்கிறதோ, அந்தக் கணத்தில் கலை தனது அறம் நீங்கி மறம் தழுவும். முள்செடி ஒரு இரவில் மரமாகி விடுவதில்லை.**

பெரிய ஆச்சரியமாக இருக்கும்.

‘குங்குமம்’ முதன்மை ஆசிரியர் தி.முருகன், அன்றாடம் தொடர்பில் இருக்கும் பொறுப்பாசிரியர் நா.கதிர்வேலன் எல்லோரும் என் நன்றிக்குரியவர்கள்.

சங்க இலக்கியம் தொடங்கி சமகால இலக்கியம் வரை, கிழமைதோறும் நான் எடுத்தாண்ட பாடல்களைப் பிழையறத் தட்டச்சு செய்தவர்கள் பணி குறிப்பிடத் தகுந்தது. இப்போது கணக்குப் பார்க்கையில், இத்தொடரில் நூற்றுக்கும் அதிகமான திருக்குறள் செய்யுட்களை நான் மேற்கோள் காட்டி இருக்கிறேன். எண்ணற்ற தொல் இலக்கிய வரிகளையும், என்றும் நான் வியந்து நிற்கும் கம்பனையும், எப்போதும் தவிர்க்க இயலாத ஔவையையும். எனக்கு வந்த எதிர்வினைகளில் இருந்து கற்றுக்கொண்டேன், ‘சொல்லும் விதத்தில் சொன்னால், பழந்தமிழ்ப் பாடல் கற்கடலை அல்ல’ என்று.

அடிப்படையில் நானோர் நாவலாசிரியன், சிறுகதை எழுத்தாளன். அதை என்னால் மறக்கவோ, புறக்கணிக்கவோ இயலாது என்றாலும், இத்தொடர் பெற்ற வாசகப் பரப்பு என்னைப் பெருமிதம் கொள்ளச்செய்கிறது. மேலும் ஒன்று... இத்தொடரில் எழுதப் பெற்ற அனைத்துக் கட்டுரைகளிலும் எனது கருத்துச் சுதந்திரம் பேணப்பட்டது. அந்த நயத்தகு நனி நாகரிகத்துக்கும் நன்றி.

‘உவப்பத் தலைக் கூடி உள்ளப் பிரிதல் அனைத்தே புலவர் தொழில்’ என்பது வள்ளுவம். அறிதலை முனைபவர்களின் சந்திப்பு எப்போதும் பேருவகை தரும். அந்த மகிழ்ச்சியை நினைத்து மனம் கசியுமாறு அமையும் அவர்களின் பிரிவும். ஓராண்டு காலம் ‘குங்குமம்’ வாசகர்களுடன் உரையாடிய பின், இப்போது பிரிவதென்பது மனம் கசியச் செய்கிறது. எனக்கும் நிறுத்தி வைத்திருக்கும் வேறு சில வேலைகள் உண்டு. வாய்த்தால் எப்போதாவது மீண்டும் சந்திப்போம்...

**நன்றி!**